# திருக்குறட் பொருளகராதி

## (A Subject Index for Tirukkural)


நூலாசிரியன்:

டாக்டர் **மு. கோவிந்தசாமி,** எம்.ஏ.; எம்.லிட்; பிஎச்.டி.,

தமிழ்த் துணைப் பேராசிரியர்

திருக்குறள் ஆராய்ச்சித்துறை


பொதுப் பதிப்பாசிரியர் :

டாக்டர் **வ. சுப. மாணிக்கம்**


**அண்ணாமலைப் பல்கலைக்கழகம்**

அண்ணாமலை நகர். 608101

முதற் பதிப்பு : 1972
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், தமிழ்த்துறை
திருக்குறள் ஆராய்ச்சி வெளியீடு – 2

விலை ரூ. 8—00

ஜெமினி அச்சகம், கும்பகோணம். 612001
தொலைபேசி : 835

# Foreword

*The appeal of the Kural is timeless, unaffected by social changes, undisturbed by political upheavals and unsullied by narrow prejudices. Its philosophy has become part of the philosophy of life of Tamilnad. At the level of scholarship there has been much comparison, interpretation and investigation of its manifold riches. The time has come to go a step further. Systematization is an important and necessary part of an approach to the classics. The Kural deals with many topics: God, virtue, wisdom, learning, love, wealth, friendship, mind, good–evil and desire, to mention but a few. Though to some extent categorized, ideas, are repeated and reflections on one suject are to be found under many headings. The author has searched diligently the 133 chapters and grouped similar material under 34 sections.*

*Dr. Govindasamy's book is a concordance, a work of reference. One cannot be searching everytime. It is good to be told where to find what one wants. It requires a lot of labour to produce a labour-saving device. One has to work hard to make things easy for others. The author has done this and much more. For we have here no mere work of reference. He comments as he*

*classifies, expounds subtilities, surveys previous interpretations and when deemed necessary puts forth his own point of view which is invariably thought-provoking. In fact we may say that regrouping has led to rediscovery.*

*This is the second book to be released by this University after the establishment of the Tirukkural Research Centre and fully justifies the farsighted wisdom of the Tamilnadu Government in giving generous financial help towards the establishment of the same.* **Tirukkural Porulakarathi** *is a worth successor to* **Tirukkural in Tamil Epics**. *If this pace is kept up one can be sure of good work to be done for a long time to come. Dr. Govindasamy has put into this book patient research and discriminative insight. Under the leadership and over-all guidance of Dr. V. Sp. Manickam, Head of the Department of Tamil, himself a seasoned scholar in the field,the Tirukkural Research Centre has culled out for itself an important place in the sphere of Tamilology.*

ANNAMALAI UNIVERSITY,
ANNAMALAINAGAR, 608001
20—3—1973.

S. P. ADINARAYAN
Vice-Chancellor.

# பதிப்புரை

'**திருக்குறட் பொருளகராதி**' என்ற இந்நூல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்த்துறைத் திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதியின் இரண்டாவது வெளியீடு. ஒரு பொருள் பற்றிய வள்ளுவரின் கருத்து முழுதினையும் தொகுத்து வகுத்து ஒழுங்குசெய்து மலர்ச்சுருள்போல ஓரிடத்துத் தருவது இந் நூலின் மாட்சியாகும்.

திருக்குறள் 133 அதிகாரம் அல்லது தலைப்புக்கொண்ட நூலாயிற்றே, அதிகாரத்தின் பத்துக் குறள்களும் ஒரு பொருளைத்தானே நுதலுகின்றன என்று வினவலாம். தலைப்பு என்பது வேறு பொருள் என்பது வேறு. திருவள்ளுவர் ஒவ்வோர் அதிகாரத்துக்கும் பப்பத்துக் குறள் என்ற வரம்பு கொண்டனர் ஆதலின் எடுத்துக்கொண்ட ஒரு பொருளை ஓர் அதிகாரத்தளவில் சொல்லி முடிக்க இயலாதபோது, கூடுதலாகச் சில அதிகாரங்கள் அப்பொருள்பற்றியே எழுதலானார். கல்வி கல்லாமை; செங்கோன்மை கொடுங்கோன்மை வெருவந்த செய்யாமை; நட்பு நட்பாராய்தல் பழைமை தீநட்பு கூடாநட்பு; நெஞ்சொடு புலத்தல் புலவி புலவிநுணுக்கம் ஊடலுவகை என்ற அதிகாரங்கள், தலைப்புக்கள் வேறுடையனவாயினும் ஒருபொருள் மேல் எழுந்தன. கல்வி என்ற ஓர் அதிகாரம் இருக்கவும் கல்லாமை என மற்று ஓர் அதிகாரம் வேண்டுமா என்ற வினவுக்கு, கல்விச்சிறப்பு மேல் விதிமுகத்தாற் கூறியதுணையான் முற்றுப்பெருமை நோக்கி எதிர்மறைமுகத்தானும் கூறவேண்டிய தாயிற்று என்ற விளக்கம் தருவர் பரிமேலழகர்.

ஒவ்வோர் அதிகாரமும் பெரும்பாலும் ஒவ்வொரு பொருளைச் சிறப்பாகக் கூறுவது என்ற மரபுக் கருத்து தவறில்லை எனினும் சில பொருட் கூறுகள் பல அதிகாரங்களிலும் வேறு வேறு பால்களிலும் உவமைவகையானும் பிறவாற்றானும் விரவிக் கிடக்கின்றன என்பது வெளிப்படை. வள்ளுவப் பெருமானின்

ஊழ் பற்றிய தெள்ளிய கோட்பாட்டை ஊழ் என்ற தலைப்புடைய அறத்துப் பால் முப்பத்தெட்டாவது அதிகாரத்தைப் படித்தளவில் நின்றால் முழுமையாகத் தெரிந்து கொள்ள மாட்டோம். 'தெய்வத்தான் ஆகாது எனினும்' (619) 'ஊழையும் உப்பக்கம் காண்பர்' (620) என்று ஆள்வினையுடைமை என்ற தலைப்பில் பொருட்பால் 62ஆவது அதிகாரக் குறள்களையும் சேர்த்துப் பார்க்கும்போதுதான் ஊழுக்கும் முயற்சிக்கும் உரிய போராட்ட முடிபு புலப்படும். அறிவு பற்றிய கருத்துக்களை எவ்வளவோ பொருட்பாலில் கற்றிருந்தாலும்,

> அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்
> செறிதோறும் சேயிழை மாட்டு (1110)

என்ற காமத்துப்பால் குறளில் வரும் முன்னேற்றமான ஓர் அறிவுக் கருத்தை – இன்னும் அறிய வேண்டியவை எவ்வளவோ உள என்று உணர்ந்து கொள்வதுதான் அறிவு என்ற அறிவுரையை உடன்கொண்டு பாராவிட்டால், வள்ளுவரின் அறிவுக்கோட்பாடு புலப்படுமா? மானம் என்ற உணர்வு பற்றி ஆசிரியரின் முழுவெண்ணம் யாது? மானம் என்ற அதிகாரப் பத்துக்குறளைக் கற்றவர் மானத்தின் பெருமையையும் உயிரை விட்டும் அதனைக் காக்க வேண்டும் என்ற முனைப்பையுமே பெறுவர். இது வள்ளுவரின் முடிவான எண்ணமா?

> குடிசெய்வார்க் கில்லை பருவம் மடிசெய்து
> மானம் கருதக் கெடும் (1028)

என்பது குடிசெயல்வகை அதிகாரத்து ஒரு குறள். ஒரு குடும்பத்தில் கணவன் மனைவி அண்ணன் தம்பி மக்கள் முதலான உறுப்பினர்கள் தன்மானம் பார்க்கக்கூடாது, தன்மானத்தை விட்டும் குடிவளர்ச்சியைப் பேண வேண்டும்: இது மான அதிகாரத்திற் சொல்லப்பட்ட கருத்துக்கு எவ்வளவு முரணானது? ஆனால் வாழ்வுக்கு எவ்வளவு இன்றியமையாதது? ஈண்டுக் காட்டிய மூன்று இடங்களிலிருந்தும் ஊழ், அறிவு, மானம் பற்றிய ஆசிரியரின் கொள்கைகள் உரிய அதிகாரங்களில் தெளிவாகவில்லை என்பதும் அத்தெளிவுகள் வேறு அதிகாரங்களில் கிடக்கின்றன என்பதும் புலனும். ஓரதிகாரத்திற்கு அடிமைப்படாது அனுமன் சோலை தோறும் புகுந்து உலவியதுபோலத் திருக்குறள் நூல் முழுதும் உலவும் போதுதான் வள்ளுவரின் உள்ளமும் துணிவும் முடிவும் ஐயமின்றி விளங்கும்.

**திருக்குறட் பொருளகராதி** திருவள்ளுவரின் முழுக் கருத்தையும் ஒருங்கு வைத்து ஆராய்வதற்கும் நன்முடிபு காண்பதற்கும் வழி வகுக்கின்றது. பரந்தும் சிதறியும் மறைந்தும் கிடந்த பொருட்பாங்குகளை உய்த்தீட்டும் தேனீப்போல அரிதின் முயன்று தொகுத்து எழுதியுள்ளார் தமிழ்த்துணைப் பேராசிரியர் டாக்டர் மு. கோவிந்தசாமி. இவர் வரலாற்றறிவும் திறனாய்வு முறையும் மிக்கவர் என்பதனையும் திருக்குறளுக்கு நயவுரைகண்ட உரையாசிரியர் என்பதனையும் தமிழுலகு அறியும்.

இப்பொருளகராதி அமைச்சர் முதலாக வினையிருக 34 தலைப்புக்கள் கொண்டது. அருமை அழகு முதலான சில தலைப்புக்கள் தலைப்பளவில் புதியன. 133 அதிகாரங்களின் குறட் கருத்துக்கள் இந்த முப்பத்து நான்கு பொருட்கூறுகளாக அடங்கி நிற்கின்றன. பொருளடைவு செய்யுங்காலை டாக்டர். கோவிந்தசாமி வகுத்துக்கொண்ட உட்பாகுபாடுகள் பொருத்தம் உடையவை, மலைப்பற்ற தெளிவு நல்குபவை.

தொகுப்பும் பொருளடைவும் அடைவின் உட்பகுதிகளும் திறம்பட அமைந்த இப்பனுவலில் டாக்டர் கோவிந்தசாமி ஒவ்வொரு தலைப்புக்கும் எழுதியிருக்கும் விளக்கவுரை ஆழமும் சுவையும் உடையது. அரசு அறம் காமம் நட்பு என்றினைய தலைப்புக்களில் காலத்திற்கு ஏற்ற நடைமுறை விளக்கங்களைக் காணலாம். சொல்லாராய்ச்சியும் உரையாசிரியர்களின் உரையாய்வும் வேண்டுமளவு இவ்விளக்கவுரையில் இடம் பெற்றுள. ஆதலின் பல்வனப்பு உடைய இப்பொருளகராதி திருக்குறளுக்கு ஒரு புதிய அகராதி எனவும் மேலாய்வுக்குத் தூண்டும் ஒரு பெருங்கருவி நூல் எனவும் எண்ணி அண்ணாமலைப் பல்கலைக் கழகம் உவப்பொடு வெளியிடுகின்றது.

, திருக்குறளும் இலக்கணவுரையாசிரியர்களும்' என்ற பொருளில் டாக்டர். கோவிந்தசாமி எழுதிவரும் ஆராய்ச்சி நூல் அடுத்து வெளிவரும் என்று எதிர்பார்ப்போமாக.

**வ. சுப. மாணிக்கம்**

# முன்னுரை

என்றுமுள தென்றமிழ் எனக் கம்பன் கூறியது திருக்குறள் அளவில் மிகப் பொருத்தமானதாகும். 'என்றும் புலராது யாணர் நாட்செல்லுகினும் நின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மையது' என இறையனர் திருவள்ளுவமாலையிற் குறிக்கும் வாடாமலரின் திறம் இன்றும் குறளில் இலங்குகின்றது. அதற்கோர் நல்ல எடுத்துகாட்டு இத்திருக்குறள் பொருளகராதியின் மலர்ச்சியாகும்.

இம்மலர் புதியதேனும் பழங்குறளின் மணத்தையும் ஒளியையும் அவ்வாறே கொண்டதாகும். புதிய அமைப்பும் தோற்றமும் உடையது. குறளில் அமைந்த ஒவ்வொரு பொருளின் கருத்துக்களும் ஓரிரு அதிகாரங்களில் மட்டுமன்றி நூல் முழுதுமுள்ள பலவதிகாரங்களிலும் விரவியுள்ளன. அவற்றைத் தொகுத்து அகரவரிசையில் தருவதே இவ்வகராதி. இதுபற்றிப் பேராசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் இந்நூலின் தமது பதிப்புரையில் தெற்றென விளக்கியுள்ளார்கள். மற்றும் இன்று உலகவறிஞர் வினவும் உயிர், உலகம், மனம், உணவு, உடல், மாந்தர், பெண், பண்பு முதலிய பல தலைப்புக்களைப் பற்றிய கருத்துக்களும் கோட்பாடுகளும் குறளில் எங்ஙனம் உடல்மிசை உயிரெனக் கலந்தெங்கும் நிறைந்துள்ளன என்பது பற்றியும் ஆராய்ந்து தொகுக்கப்பெற்றுள்ளன. இவ்வகையில் இந்நூல் திருக்குறளின் இன்றைய புதுப்பிறவி யென்னலாகும். திருக்குறள் வள்ளுவர் உள்ளத்தின் ஓர் ஓவியத் தோற்றமென்றால் இப் பொருளகராதி அதன் சிறப்புத் தோற்றம் போன்றதாகும். அதாவது எப்பக்கமும் தெளிவாகத் தோன்றும் உயிர் வடிவமாகும். இவ்வுருவத்தில் வள்ளுவரை இன்னும் தெளிவாகக் காணலாம்.

படக்கடைகளில் சில படங்கள் கண்ணாடியிட்டுத் தொங்க விடப்பட்டிருக்கும். ஒரே படத்தை நடுவில் நின்று பார்த்தால் திருமகள் உருவமும் ஒரு ஓரத்தில் நின்று பார்த்தால் கலைமகள் உருவமும் மற்றோர் ஓரத்தில் நின்று பார்த்தால் மலைமகள் உருவமும் காணப்படும். சக்தியின் பல வடிவங்கள் ஒரே படத்தில்

தோன்றும். கண்ணுடிக் கீற்றுக்களாக அறுத்து வரிசையாக நிறுத்தியடுக்கியதலை அக்காட்சி அமைகின்றது. அதுபோல இப்பொருளகராதியில் வள்ளுவரின் மற்ருேர் உருவம், பெரியதோர் உலகம் பரந்தவுருவம் காட்சியளிக்கின்றது.

அகராதியெனப் பெயர் கொண்டதாயினும் அகராதி போல அஞ்சத்தக்கதன்று. இலக்கியம் போலப் படித்தற்குரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளே இந்நூலாகும். பொருளடைவு (Subject Index) பொருளகராதி என்ற நூல்வகையுள் இது முழுமையும் விரிவுமுடையதாகும்.

குறித்த தலைப்பில் வள்ளுவர் கருத்துக்களையெல்லாம் விளக்கப்படுத்தும் குறிப்புக்களாகவும் அத்தலைப்புப் பற்றிய மேலோர் கோட்பாடுகளை இணைத்தாய்ந்த தொகுப்புக்களாகவும் ஒவ்வொரு தலைப்பிலும் பொருளடைவு என்பதற்கு முன் அமைந்த விளக்கப்பகுதி காட்சியளிக்கின்றது. அடுத்துப் பொருளடைவில் வள்ளுவர் தம் குறள்கள் எளிய சுருக்கமான உரைநடையில் தொகுக்கப் பெற்றுள்ளன. அந்தந்தத் தலைப்புக் கருத்துக்களின் அமைப்புக்கேற்ப பல உட்பிரிவுகள் வகுக்கப்பெற்றன. உட்பிரிவுகள் முதலிற் குறித்த பெருந்தலைப்பின் பகுதிகள் என்பதற்காக அவற்றை ஓரிரு எழுத்தளவு உள்ளடக்கி வரியமைக்கப் பெற்றுள்ளது.

என் திருக்குறள் ஆராய்ச்சியில் முகிழ்த்ததோர் நன்மலராகும் இந்நூல். இதனைத் தமிழன்னையின் திருவடிகளில் அணிகின்றேன். இம்முயற்சியில் பேருக்கமும் ஆக்கமும் காட்டி இதனை முற்றுவித்த அறிவும் ஆராய்ச்சியும் சான்ற பேராசிரியர் டாக்டர். மாணிக்கம் அவர்கட்கும், இத்தமிழ் முயற்சிகளில் பேரார்வமும் ஆதரவுங் காட்டிவரும் எம் துணைவேந்தர் டாக்டர். ஆதிநாராயணன் அவர்கட்கும், தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் போற்றி வளர்க்கும் பெருமனம் வாய்ந்த இணைவேந்தர் டாக்டர். முத்தைய செட்டியார் அவர்கட்கும், மற்றும் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவினர்க்கும் என் மனஞ்சேர்ந்த நன்றி என்றும் சார்ந்ததாகும்.

**மு. கோவிந்தசாமி**

# உள்ளுறை

## I அறப்பொருள் அகராதி

( எண் – பக்கவெண் )


**அமைச்சர்** *1:* அமைச்சரும் அறிவும் *2*; சொல்லும் செயலும் *3*; மன்னரைச் சேர்ந்தொழுகல் *3*; தூதன்.

**அரசு** *5:* அரசியல்பு *10*; செங்கோன்மை *11*; தண்டஞ் செய்தல்; கொடுங்கோன்மை *12*; அரசனும் குடிகளும் *13*; அரசனது பொருள்; அரசனும் போரும்; அரசனும் அமைச்சரும் பெரியோரும் *14*.

**அருமை** *16:*

**அருள்** *19:* அருளியல்பு *24*; பயன்; அருளும் பொருளும் அருளும் தீ நெறிகளும்; அருளும் அன்பும் *25*.

**அழகு** *26:* அகவழகு *27*; புறவழகு; அகமும் புறமும்; அழகும் சாதலும்.

**அறம்** *28:* அறவியல்பு *34*; வளருமுறை *35*; அறப்பயன் *36*; அறப்பிரிவுகள்.

**அறிவு** *38:* அறிவின் இயல்பு *44*; அறிவு வெளிப்பட்டு நிற்குமிடங்கள்; அறிவு வளர்ச்சி *45*; அறிவின் பயன் *46*; புலனுணர்வு *48*; இயற்கையறிவு; மெய்யுணர்வு *49*; அறிவின்மை புல்லறிவு *50*; பேதைமை *51*.

**அன்பு** *53:* அன்பின் இயல்பும் செயலும் *56*; அன்பும் அறமும்; அன்புயர் வாழ்க்கையும் பயனும்; அன்பும் பொருளீட்டலும் *57*; அன்பும் அரசும்.

**இறைவன்** *58:* இறைவனியல்புகள் *66*; வழிபடுநெறி; வழிபடுதலால் ஆகும் பயன்கள் *67*.

**இன்பம்** *68:* புலனின்பம் *70*; இன்பமும் மனமும் *71*; நகையும் இன்பமும் *72*; பொய்ந்நகையும் கேலிநகையும்; நகைப்புக் காரணம் *73*; நகையும் காமமும்; மகிழ்ச்சியும் களிப்பும்; செருக்கு: எல்லை மீறிய இன்பம்.

**உடல்** 75: உடலின் அமைப்பு 78; உடலின் இயல்பு 79; உடலும் உயிரும்; வெற்றுடம்பு 80; உடம்பின் வளர்ச்சி; உடலின் பயன்; தீமை 81: பிறப்பு; உடலும் உறக்கமும்; உடலும் இறப்பும் 82; உடலும் நோயும் 83.

**உணவு** 84: உணவு 86; உணவுண்டாக்குதல்; உண்ணு முறையும் மருந்தும் 87; மருந்து; அமிர்தம் 88; பகுத்துண்டலும் பயனும்; விருந்தூண்; உணவிழத்தல் 89; பசியும் உணவும்; பொருந்தா உணவு 90; புலால்; கள்; நஞ்சு 91; தேன்.

**உதவி** 92: ஒப்புரவு 93; ஒப்புரவுடையபிற 94; ஒப்புரவும் அரசும்; ஈகை 95; ஈகையும் இரவும்; பயன்; உதவி மறவாமை: நன்றியளவு 96; நன்றி நினைவு.

**உயிர்** 97: உயிரும் உடம்பும் 100; உயிரியல்பு; உயிர் வாழ்தல் 101; உயிரும் உறக்கமும் 102; வீடுபெறுதல்; உயிர் வளர்ச்சி.

**உலகு** 104: நிலவுலகம் 106; உலகக் காப்பு 107; உலகமும் மக்களும் 108; வானுலகம்; கீழுலகம் 109; வீட்டுலகம்; நாடு 110; தேசம் 111.

**கல்வி** 112: கல்விச் சிறப்பு 116; கல்லாமை; கேள்வி 117; அறிவு; கல்வியும் சொல்லுதலும்; கல்வியும் நூலும் 118; கற்குமுறை; கல்விப்பயன்; கல்லாமையின் தீமை 121.

**காமம்** 122; காதல் 128; காமமும் காட்சியும்; காமமும் கள்ளும் 129; காமமும் அலரும்; மடலேறுதல்; காமப் புணர்ச்சி 130; பிரிவுநிலை 131; நினைத்து வருந்துதல் 132; நலனழிவு; நிறையழிவு 133; காமமும் பொழுதும்; காமமும் கனவும் 134; காமமும் ஊடலும்; காரணமின்றியூடல் 135; காமக்குறிப்பு 136; காமமும் கற்பனையும் 137; காமமும் பசப்பும் 138.

**குடிமை** 140: நற்குடிப் பெருமை 142; குடியையுயர்த்தல் 143; குடியழிதல் 144; குடிப்பயன்.

**செல்வம்** 145: செல்வமென்பது 150, பொருள் வகை: பண்புச் செல்வம் 151; செல்வநிலையாமை 152; பொருளீட்டு முறை; பொருளைக் காத்தல் 153; செலவிடல் 154; பொருள் அழியும் வகை 155; பொருட்பயன்; பொருளின்மை; நல்குரவு 156.

**சொல்** *158*: மழலைச் சொல் *162*; இன்சொல்; இன்சொல் அறம்; இன்சொற் பயன் *163*; இன்னுச் சொல்; கடுஞ்சொல்; தீச்சொல் *164*; சொல்லடக்கம்; புறச்சொல்; பயனில் சொல் *165*; பழிச் சொல்; புகழ்ச் சொல் *166*; நடுவுநிலைச் சொல்; சொல்வன்மை; அவைச் சொல் *167*; பெரியோரவை; அவை யஞ்சாமை *168*; தூதுச் சொல்; சொல்முறை; அமைச்சரது சொல் *169*; குறிப்பறிவுரை *170*; ஒற்றுச் சொல்; அரசர்க்குரிய சொல் *171*; கற்றோர் சொல்; சான்றோர் சொல்; குலச் சொல் நட்புச் சொல்; பகைச் சொல் *172*; நல்கூர்ந்தார் சொல்; ஏற்றல் சொல்; காதற் சொல்; வாய்மைச் சொல் *173*.

**தீமை** *174*: தீவினை *176*; தீமை நீக்கம் *177*; தீமை வகை *178*; சூது களவு *179*; அழுக்காறு அவா *180*; வெஃகுதல் வெகுளி *181*; கொலை *182*; குற்றங்கடிதல் வஞ்சனைக் குற்றம் *183*.

**துன்பம்** *184*: மனத்துன்பம் *185*; காமமும் துன்பமும் *186*; கண்ணீர் இடுக்கணழியாமை *187*; துன்பத்தில் சமநிலை *188*; துன்பத்தை நீக்குதல்.

**நட்பு** *189*: நட்புச் சிறப்பு *192*; நட்பாராய்தல் நட்பாக்கல் *193*; தீ நட்பு *195*; பகையும் நட்பும் நட்புரிமை *196*; நட்பின் பயன்.

**நன்மை** *198*: நன்மை *199*; நன்மையாக்கல் நன்மையும் பொறையும் *200*; பொறையின் பயன் ஆக்கம்.

**பகை** *202*: இகல் *203*; பகைமாட்சி பகைத்திறம் *205*; உட்பகை *206*.

**படை** *207*: படை *208*; படை வீரம் *209*; படையும் அரணும் *210*.

**பண்பு** *211*: பண்பு *212*; பண்பு வளர்ச்சி *213*; பண்பின் பிரிவுகள் *214*; பண்பழிவு *215*; பண்பின் பயன் நடுவு நிலையும் பண்பும் *216*; அடக்கம் *217*; பண்பு நெறி *218*.

**புகழ்** *219*: புகழ்த்தன்மை *220*; புகழ்ச்சிக்குரிய வழிகள் புகழ் வளர்ச்சி *221*; பயன் புகழும் பழியும் *222*. பழி

**பெண்** *224:* *வாழ்க்கைத்துணை 225; பெண் 226; காதற் பெண் தாய் 227; தெய்வப்பெண்; பிறன்மனையாள்;* வரைவின் *மகளிர் 228; பெண் வழிச்சேறல் 229.*

**மனம்** *230:* மனத்தின் இயல்பு *232;* மன வளர்ச்சி *235; தீயமனம் 238;* மனத்தின் பயன் மனமும் கொள்கையும் *240;* கொள்கைப்பயன்.

**மாந்தர்** *241:* மக்கள் *243;* அறிவும் மக்களும்; பண்பும் மக்களும் *244;* பெருமக்கள் *245;* தேவர் *246;* மக்கட் பிரிவு *248;* கயவர்; பெருமக்களும் மானமும்.

**வாழ்க்கை** *250:* அறவாழ்க்கை *252;* அன்பு வாழ்க்கை புகழ் வாழ்க்கை வாழ்க்கை விளக்கம் *253;* நிலையாமை இல் வாழ்க்கை *254;* தவவாழ்க்கை *256;* பொருளும் வாழ்க்கையும் *259;* இரந்தூண் வாழ்க்கை; காதல் வாழ்க்கை *260.*

**விழைவு** *262.*

**வினை** *265:* அறவினை *269;* நல்வினை தீவினை *270;* ஊழ்வினை *271;* தவவினை *272;* புகழ்வினை *273;* பொருள் வினை அரசவினை அறிவார்வினை *274;* உழவுத்தொழில் *275;* காதல்வினை; வினைசெய்திறம்: இடனறிதல் *276;* காலமறிதல், மறவியின்மை *277;* மடியின்மை *278;* ஊக்கம் *279;* முயற்சி *280;* இடுக்கணழியாமை; அச்சமின்மை *281;* வினைசெய்திறம் *282;* வலியறிதலும் வினையும் *284;* ஆற்றல்; மனவலிமை; சொல்லாற்றல் செயல் வலிமை *285,* இல்லாண்மை தவவலிமை *286;* அரசாண்மை.

## II பிறபொருள் அகராதி

## அதிகாரப் பெயர்களும் அவை இந்நூலில் அடங்கியுள்ள தலைப்புக்களும்


| அதிகாரம் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| அடக்கமுடைமை | பண்பு | 217 |
| அமைச்சு | அமைச்சர் | 1 |
| அரண் | படை | 210 |
| அருளுடைமை | அருள் | 19 |
| அலரறிவுறுத்தல்<br>அவர்வயின் விதும்பல் | காமம் | 129;133 |
| அவாவறுத்தல் | தீமை | 180 |
| அவையஞ்சாமை<br>அவையறிதல் | சொல் | 168 |
| அழுக்காறாமை | தீமை | 179 |
| அறன் வலியுறுத்தல் | அறம் | 28 |
| அறிவுடைமை | அறிவு | 38 |
| அன்புடைமை | அன்பு | 53 |
| ஆள்வினையுடைமை | வினை | 280 |
| இகல் | பகை, இகல் | 203 |
| இடனறிதல் | வினை, இடனறிதல் | 276 |
| இடுக்கணழியாமை | வினை | 280 |
| இரவச்சம்<br>இரவு | வாழ்க்கை | 259 |
| இல்வாழ்க்கை | வாழ்க்கை | 254 |

| அதிகாரம் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| இறைமாட்சி | அரசு | 10 |
| இனியவைகூறல் | சொல் | 163 |
| இன்னாசெய்யாமை | தீமை | 176 |
| ஈகை | உதவி | 95 |
| உட்பகை | பகை | 206 |
| உழவு | வினை | 275 |
| உறுப்பு நலனழிதல் | காமம் | 133 |
| ஊக்கமுடைமை | வினை | 279 |
| ஊடலுவகை | காமம் | 135 |
| ஊழ் | வினை | 271 |
| ஒப்புரவறிதல் | உதவி | 94 |
| ஒழுக்கமுடைமை | பண்பு | 213 |
| ஒற்றாடல் | சொல் | 170 |
| கடவுள் வாழ்த்து | இறைவன் | 58 |
| கண்ணோட்டம் | அரசு | 11; 13 |
| கண்விதுப்பழிதல் | காமம் | 128 |
| கயமை | மாந்தர் | 248 |
| கல்வி<br>கல்லாமை | கல்வி | 112; 116 |
| கள்ளாமை | தீமை | 179 |
| கள்ளுண்ணாமை | உணவு | 90 |
| கனவு நிலையுரைத்தல்<br>காதற் சிறப்புரைத்தல் | காமம் | 134; 137 |
| காலமறிதல் | வினை | 276 |
| குடிசெயல் வகை<br>குடிமை | குடிமை | 140 |
| குறிப்பறிதல் | அறிவு | 48 |

| அதிகாரம் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| குறிப்பறிதல் <br> குறிப்பறிவுறுத்தல் } | காமம் | 136 |
| குற்றங்கடிதல் | தீமை | 182 |
| கூடாநட்பு | நட்பு | 195 |
| கூடாவொழுக்கம் | வாழ்க்கை | 256 |
| கேள்வி | கல்வி – கேள்வி | 117 |
| கொடுங்கோன்மை | அரசு | 12 |
| கொல்லாமை | தீமை | 182 |
| சான்ருண்மை | மாந்தர் | 245 |
| சிற்றினஞ்சேராமை | நட்பு | 196 |
| சுற்றந்தழால் | நட்பு | 193 |
| சூது | தீமை | 178 |
| செங்கோன்மை | அரசு | 11 |
| செய்ந்நன்றியறிதல் | உதவி | 96 |
| சொல்வன்மை | சொல் | 166 |
| தகையணங்குறுத்தல் | காமம் | 138 |
| தவம் : | வாழ்க்கை | 256 |
| தனிப்படர்மிகுதி : | காமம் | 131 |
| தீ நட்பு : | நட்பு | 195 |
| தீவினையச்சம் : | தீமை | 177 |
| துறவு : | வாழ்க்கை | 256 |
| தூது : | சொல் | 168 |
| தெரிந்துசெயல்வகை : | வினை | 282 |
| தெரிந்து தெளிதல் <br> தெரிந்துவினையாடல் } : | வினை | 282 |
| நடுவு நிலைமை : | பண்பு | 216 |
| நட்பாராய்தல் நட்பு : | நட்பு | 193 |

| அதிகாரம் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| நலம்புனைந்துரைத்தல் : | காமம் | 137 |
| நல்குரவு நன்றியில் செல்வம் : | செல்வம் | 156 ; 154 |
| நாடு : | உலகு | 110 |
| நாணுடைமை : | மாந்தர் | 245 |
| நாணுத்துறவுரைத்தல் : | காமம் | 137 |
| நிலையாமை : | வாழ்க்கை | 256 |
| நிறையழிதல் நினைந்தவர் புலம்பல்: | காமம் | 133 ; 132 |
| நீத்தார் பெருமை : | வாழ்க்கை | 256 |
| நெஞ்சொடு கிளத்தல் } : நெஞ்சொடு புலத்தல் } | காமம் | 128 ; 132 |
| பகைத்திறம் தெரிதல் பகைமாட்சி : | பகை | 205 ; 203 |
| பசப்புறு பருவரல் : | காமம் | 138 |
| படர்மெலிந்திரங்கல் : | காமம் | 131 |
| படைச்செருக்கு படை மாட்சி : | படை | 208 ; 209 |
| பண்புடைமை : | பண்பு | 211 |
| பயனிலசொல்லாமை : | சொல் | 165 |
| பழமை : | நட்பு | 196 |
| பிரிவாற்றுமை : | காமம் | 131 |
| பிறனில் விழையாமை : | பெண் | 227 |
| புகழ் : | புகழ் | 219 |
| புணர்ச்சி மகிழ்தல் } : புணர்ச்சி விதும்பல் } | காமம் | 130 |
| புலவி புலவி நுணுக்கம் : | காமம் | 134 ; 135 |
| புலால் மறுத்தல் : | உணவு | 90 |
| புல்லறிவாண்மை : | அறிவு | 50 |

| அதிகாரம் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| புறங்கூறுமை : | சொல் | 164 |
| பெண்வழிச்சேறல் : | பெண் | 229 |
| பெரியாரைத் துணைக்கோடல் / பெரியாரைப் பிழையாமை : | நட்பு | 192 |
| பெருமை : | மாந்தர் | 245 |
| பேதைமை : | அறிவு | 51 |
| பொச்சாவாமை : | வினை | 277 |
| பொருள் செயல்வகை : | செல்வம் | 156 |
| பொழுதுகண்டிரங்கல் : | காமம் | 133 |
| பொறையுடைமை : | நன்மை | 200 |
| மக்கட்பேறு : | மாந்தர் | 243 |
| மடியின்மை : | வினை | 278 |
| மருந்து : | உணவு | 87 |
| மன்னரைச் சேர்ந்தொழுகல் : | அமைச்சர் | 3 |
| மானம் : | மாந்தர் | 248 |
| மெய்யுணர்தல் : | அறிவு | 49 |
| வரைவின் மகளிர் : | பெண் | 228 |
| வலியறிதல் : | வினை | 284 |
| வாய்மை : | சொல் | 173 |
| வாழ்க்கைத்துணைநலம் : | பெண் | 225 |
| வான்சிறப்பு : | பூதங்கள் | 311 |
| விருந்தோம்பல் : | உணவு | 88 |
| வினைசெயல்வகை / வினைத்திட்பம் / வினைத்தூய்மை : | வினை | 283 |
| வெகுளாமை : | தீமை | 181 |
| வெஃகாமை : | தீமை | 180 |
| வெருவந்த செய்யாமை : | அரசு | 12 ; 14 |

முதற் பகுதி

# அறப்பொருள் அகராதி

# 1. அமைச்சர்

அமைச்சர், குடும்பத்தில் தலைவிபோல அரசியலில் அரசனுக்கு மிக அண்மையும் (அரச வாழ்க்கைத் துணையாகிய) இன்றியமையாமையும் உடையவர். அமாத்தியர் என்பதிலிருந்து அமைச்சர் என்ற பெயர் வந்திருக்கும் என வாதாடுவோர் பலர். அமைதியையுடையவர்; அமைதியை நாட்டில் நாட்டுபவர் என்ற அடிப்படையிலிருந்தே இச்சொல் வந்திருக்க வேண்டும். முழுதாளி (சர்வாதிகாரி) களுக்கும் அமைச்சர் வேண்டும். குடிகட்கு வேண்டுவனவற்றைச் செய்யவும் போர் வினையைச் செய்யவும் நண்பரைக் கூட்டவும் பகைவரைப் பிரிக்கவும், சொல்லாலும் செயலாலும் ஆவன செய்பவன் அமைச்சனேயாவான். இவ்வகையில் வள்ளுவர் கூறும் தூதுவனும் அமைச்சனேயாவான். ஆன்ற மைந்த சொல்லான் என அமைச்சனைப்பற்றி அவர் கூறுகையில் தூதுவன் இலக்கணமே புலப்படுகின்றது. ஒருதலையாச் சொல்லலும் என்பதிலும் அவ்விலக்கண முள்ளது. அமைச்சர் நிறைந்த கல்வியும் நூலறிவுமுடையராக வேண்டும். அத்துடன் உலகியலறிவும் அனுபவமும் வேண்டும். அரசிடத்தும், குடிகளிடத்தும் அன்பும் பற்றுமுடையவராதல் அமைச்சர்க்குரிய முதலிலக்கணமாகும். அமைச்சர், அரசர்க்கு உறவாலும் பிறவற்றாலும் நெருக்கமும் உயர்வுமுடையவராகக்கூட இருக்கலாம். ஆனால் அவன் இறைத்தன்மையுடையனாகலின் அவனது ஒளியோடு (தலைமையோடு) கூடியொழுக வேண்டும்.

அரசன் பெருமையை இகழ்தலாகாது. அமைச்சனே நாட்டு வினைகளையெல்லாம் செய்பவன். அரசன் வெறும் பெயருக்காகக் கூடவிருக்கலாம். ஆதலின் நாட்டில் நிகழும் நன்மை தீமைகட்கும் பழிபாவங்கட்கும் அமைச்சனே பொறுப்பாளனாவான். அமைச்சனாகிய தூதுவன் இறுதிவரினும் அஞ்சாமல் தன் கடமைகளைச் செய்யவேண்டும். அமைச்சர் பண்டு போரிற் கலந்து போரிட்டு வென்றும் இறந்துமுள்ளனர். முற்கூறியபடி அனைத்தும் தன்னைச் சார்தலால் அமைச்சன் உரிய அறிவுரைகளை அறவுரைகளை அரசர்க்குக் காலத்தில் அஞ்சாதுரைத்துவிடவேண்டும்.

சட்டங்களை நிறைவேற்றுவது அவன் கடமையாயினும் அப்போதைய உலகியல், அனுபவம் ஆகியவற்றையும் கொண்டு அவன் வினைசெய்யவேண்டும். அறிவும் திறமையுமிருப்பினும் அமைச்சர்க்குத் தோற்றப் பொலிவும் இன்றியமையாததென்பதை ஆசிரியர் வற்புறுத்தத் தவறவில்லை. மற்றும் பகையரசரிடத் திருப்பினும் அவர் அமைச்சரைத் தன் நட்பாகக் கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் தன் பக்கத்திலுள்ள உண்மைகளை அவ்வரசனை ஏற்றுக்கொள்ளச் செய்யமுடியும். தன்னலத்தை நினைத்து அரசின் நலத்தை அமைச்சன் விட்டுவிடலாகாது. எனவேதான் பெண்களாலும் பொருளாலும் (இலஞ்ச முதலிய வற்ருல்) பகைவர் அமைச்சரைத் தம் வயப்படுத்துமாறிருக்கக் கூடாதென்கிருர். அதேபோல் அரசர்க்குரிய உரிமைகள், பட்டங்கள், விருதுகள் ஆகியவற்றை அவரொடு பழகும் அமைச்சன் தான் விரும்பலாகாது. அஃதவனை அரசர்க்கெதிரி யாக்கிவிடும். அரசர்க்கெதிரே பழகும்பொழுது அவர்க்கையம் ஏதும் உண்டாகும்படி நடத்தலுமாகாது.

## பொருளடைவு

### அமைச்சர் :

அமைச்சன், வினைகளையும் அவற்றைச் செய்தற்காம் கருவி, காலம், செய்யுமுறை ஆகியவற்றையும் எண்ண வல்லவனுவான் (631). வினையின்கண் தளர்ச்சியின்மையும் முயற்சியும் நீதிநூற் கல்வியும் குடிகளைக் காத்தலும் ஆகியவற்றில் மாட்சிமைப்பட்டவனே அமைச்சனுவான் (632). வினைக்கண் ஆராய்ச்சியும் செய்திறனும் துணிவுண்டாகச் சொல்லுதலும் வல்லவராவார் (634). அரசர்க்குரிய அறங்களையறிந்து கல்வியால் நிறைந்த சொற்களையு முடையவராவர் (635).

### அமைச்சரும் அறிவும் :

இயற்கையாகிய நுண்ணறிவும் செயற்கையாகிய நூலறிவும் உடையவர்; நுட்பமான சூழ்ச்சித் திறமுடையவர் ( 636 ). நூல் நெறியறிந்த விடத்தும் அப்போதைய உலகவியற்கையறிந்து செய்பவர் ( 637 ).

### சொல்லும் செயலும்:

பெரியோரது அறிவை யழித்துத் தானும் அறியாதவனாய் அரசனிருப்பினும் பழிக்கஞ்சி அமைச்சன் உறுதிப் பொருள்களைக் கூறக் கடமைப்பட்டவனாவான் (638). திறமையற்ற அமைச்சர் வினைகளை முன் நன்றாக எண்ணிய பின்பும் அவை முடியாமல் ஆகுமாறே செய்வர் (640). பகைவரது துணைவர்களை அவரிடத்திருந்து பிரித்தலும் தம்மவரை விடாது போற்றலும் பிரிந்தவர்களைக் கூட்டிக் கொள்ளுதலும் (சந்தி விக்ரகம் செய்தல்) வல்லவர் (633). அரசர்க்குப் பிழையாயின எண்ணும் அமைச்சர் (வெளிப்பட்டு நிற்கும்) பகைவரினும் கோடி மடங்கு கொடியவராவர் (639).

### மன்னரைச் சேர்ந்தொழுகல்:

அரசரை யகன்றால் பயனின்மையும் அணுகினால் தெறுதலும் உண்டாகலின் அமைச்சர் அரசரிடத்து மிகவகலாமலும் மிகவணுகாமலும் பழகவேண்டும் (691). அரசர் விழையும் ஒப்பனை, மேன்மை, உரிமை முதலியவற்றை அமைச்சர் விழைதலாகாது (692). அரசர்க்கெதிரே பிறருடன் செவிக்கண் பேசுதலும் நகுதலும் அமைச்சர்க்காகாது (694). அரசர் போற்றும் மறைவான கருத்துக்களை அமைச்சர் செவிகொடுத்துக் கேளாமையும் முடுகி வினவாமையும் அரசனே சொல்லியக்கால் கேட்டலும் வேண்டும் (695). அரசனது குறிப்பறிந்து காலத்தையும் நோக்கி அவன் வெறுக்காதவற்றை மனம் விரும்புமாறு சொல்லவேண்டும் (696). அரசர் தமக்கிளையவர் உறவினர் என்றிகழாமல் அவரது கடவுட்கொப்பான பெருமையுணர்ந்து ஒழுகவேண்டும் (698).

### தூதன்:

தூதுரைப்பாரதிலக்கணம் அன்புடைமை, உயர்குடிப் பிறப்பு அரசர் விரும்பும் பண்புடைமை ஆகியவையாம் (681). அவர்க்குரிய இன்றியமையாக் குணங்கள்: அரசன் மாட்டன்பு: அறிவு; ஆராய்ந்து சொல்லுந்திறன் ஆகியவையாம் (682). அவர், நீதிநூலை யுணர்ந்தவரிடையே அந்நூலில் எடுத்துக் கூறத்தக்க மிக்க வல்லமையுடையவ

ராதல் வேண்டும் (683). அவர், இயற்கையறிவும் தோற்றப் பொலிவும் ஆராயப்பட்ட கல்வியும் உடையராகல் வேண்டும் (684). சொல்வனவற்றைத் தொகுத்துரைத்தும், வெய்ய சொற்களை நீக்கி இனிய சொற்களான் மனமகிழச் சொல்லியும் நன்மையைப் பயப்பவராதல் வேண்டும் (685). நீதிநூல்களைக் கற்று, சொல்வனவற்றைப் பிறவரசரிடம் மனம் கொளச் சொல்லி அவர் வெகுண்டபோது அதற்கு அஞ்சாது சொல்பவராவர் (686). தனது கடமையறிந்து உரியகாலம் பார்த்துச் சொல்லுதற்கேற்ற இடமுமறிந்து ஆராய்ந்துரைப்பவராவர் (687). பொருள் காமங்களால் தூய்மையும் பிறநாட்டமைச்சரது துணையும் துணிவுடைமையும் உடையராகல் வேண்டும் (688). தனக்கு வரும் ஏதத்திற்கஞ்சித் தன்னரசற்குத் தாழ்வுவரும் வார்த்தைகளை வாய்சோர்ந்தும் சொல்லாதவராவார் (689). தன்னுயிர்க்கிறுதிவருமாயினும் அதற்கஞ்சியொழியாமல் தன்னரசன் சொல்லியவாறே அவனுக்கு மிகுதியை வேற்றரசரிடைச் சொல்பவராவர் (690).

## 2. அரசு

நாட்டின் வளர்ச்சிக்கின்றியமையாதது அரசு. அரசுக்குத் தலைவன் அரசன். அரசனைத் தமிழர் மன்னனென்றும் அழைத்தனர். 'மன்' என்பதிலிருந்து மனிதர் என்றசொல் வந்திருக்குமேல் மன்னன் மனிதர்க்குத் தலைவனாகிறான். மனிதனும் அவனை ஆளுதற்குரிய மன்னனாகிய தலைவனும் என்றும் தேவைப் பட்டவர் என்பது கருத்தாகலாம். மன்னற்கு மன்னுதல் என்ற விடத்தும் இம்மன்னுதலை மன்னர்க்காக்குகிறார் ஆசிரியர். மன்னியதொரு ஆட்சித் திட்டத்தையே வள்ளுவர் மன்பதைக் களிக்கிறார் எனல் வேண்டும். பண்டிருந்தே நாட்டினை ஆளுதற்கு அறிஞர் பலவகை ஆட்சித்திட்டங்களைப் பற்றிக் கருதியுள்ளனர்:[1] மன்னனாட்சி, மன்னன் அல்லது தலைவனைக் கொண்டு ஆளும் மக்களாட்சி, உயர்குடியினராட்சி, தான்தோன்றியாட்சி என்பன போன்ற ஆட்சிகளை நாட்டின் நிலைக்கும் மக்கள் தொகைக்கும் தகுந்தபடி வகுத்துள்ளனர். மன்னனைக் குறித்தும் உடன்படுத்தியும் கூறினும் வள்ளுவர் மக்களாட்சியின் அடிப்படைகளைக் கருதியே யுள்ளார். 'குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்' என்றவிடத்து மக்களாட்சியையே அவர் குறிக்கிறார் என்று கூடச் சொல்லி விடலாம். இடித்துரைக்கும் அமைச்சரையும் அடுத்து வெல்லும் படைகளையும் கூறுகிறார். "செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடைவேந்தன் என்ற குறளில் ஒரு நல்ல ஜனநாயகத்தையே (குடியரசையே) உருவாக்குகிறார் எனலாம். அரசிற்றான் கருத்துச் செலுத்துகிறாரன்றி அரசனில் அதிகம் கருத்துச் செலுத்துவதாகத் தெரியவில்லை. வேந்தமை வில்லாத நாடு என்ற விடத்தில் இக்கருத்தினையுணரலாம். மற்றபடி நல்லநாட்டினையும், அரசனையும், தூதுவரையும் ஒற்றரையும் பற்றி அவர் பேசுகிறார். செங்கோன்மையைப் பலபடப்பாராட்டுமவர் கொடுங்கோன் மையை மிகவும் கடிந்துரைக்கிறார். தூதுவரையும், அமைச்சரையும் ஒற்றரையும் அரசன் ஏவல் கொள்ளும் திறம் பற்றி நுட்பமாகக் கூறுகிறார். வினைசெயல்வகைமைப் பற்றியும் வினைக்குரியாரைத் தேருதற்றன்மை பற்றியும் கூறுவதுடன் பொருளையும் படைகளையும் ஆக்குதற்குரிய நெறிகளையும் வகுத்துரைக்கிறார். அரசுக்குரிய

பொருளைப்பற்றிப் பேசுகையில் அரசனைப் பொருளுக்குப் பொறுப் பாளனாகவே யாக்குகிறார்; சொந்தக்காரனாக ஆக்கவில்லை. காத்தலும் வகுத்தலும் கடமையாகக் கொண்ட ஒருநல்ல பொது (நல) வுடைமைக்குரிய அரசரையே கருதுகிறார்.

வள்ளுவர் என்றபெயர் அரசியல் உள்படுகருமத்தலைவர் என்பதைக் குறிக்குமென்பர் அறிஞர். கங்கர் வரலாற்றில் வள்ளுவர் பல்லவ இளவரசன் ஒருவனுக்கு ஆசிரியராக இருந்தார் என்ற குறிப்புள்ளது. ஆகவே வள்ளுவர் அரசியலைப்பற்றியும், நன்கு எழுதும் ஆற்றலுடையவர். அரசன் ஆறங்கங்களையும் ஏறனைய தலைமையையும் உடையவனாக வேண்டும். பல சிறிய நாடுகளுக்கும் பெரிய நாடுகளுக்கும் தலைமையாகக் கூடிய நாடே உலகில் நல்ல நாடாகச், சிறந்த நாடாகக் கருதப்படுவது. அணுப்படைகளைப் போன்ற பெரியபடைகளே முதன்மையானவை என்பதற்காக 'படை குடிகூழ்' என முதலில் வைத்தார். குடிகளில்லாத படையும் படைகளில்லாத குடியும் தனித்துப் பயனில்லையாகலின் இரண்டும் அடுத்துரைக்கப்பட்டன. குடியென்பதற்குக் குடிகளும் நாடும் என இருபொருளுரைத்தார் பரிமேலழகர். குடிதழுவிய அரசே குடியரசாதலின் குடியைப் பொதுவாக வள்ளுவர் ஓதியதே சிறப்புடையது. நாடில்லாதகுடியும் குடியில்லாத வெறும் நாடும் பயனில்லையென்பதற்காகக் குடியென்பதற்கு இவ்விரு பொருளையும் செய்தனர் போலும். உணவுப் பெருக்கமும் பொருள் வளமும் இல்லாத நாடு என்றும் நாடாகாதாகலின் "கூழ்" அடுத்துரைக்கப்பட்டது. அமைச்சியலைக் கூறியது 'தானே எல்லாம்' என்னும் (முழுதாளித்துவம்) சர்வாதிகாரம் நல்ல அரசாகாது என்பதனைக் குறிக்கவேயாம். நட்பு என்பது உலகில் பல நாடுகளுடன் நன்கு பழகியாளவேண்டும், ஒரு சிறு நாட்டைப் பகை கொள்ளினும் அது உலக நாடுகளிடையே யெல்லாம் பகையாய் முடியும் என்பதைக் குறிக்கவாகலாம். அரண், இயற்கையமைப்புக்களாக மலையாகக் காடாகக் கடலாக அமைந் தால் நல்லது. படையிருந்தாற்றான் அரண்பயன்படும் என்பதற்காக முதலிற்படையையும் கடைசியில் அரணையும் கூறியிருக்கலாம்.

அரசு குடியிலும் கூத்திலும் இலஞ்சத்திலும் மூழ்கிவிடக் கூடாது. பொருளையும் குடிகளையும் வளர்ப்பதில் விழிப்பாகவும் உழைப்பாகவும் இருக்கவேண்டும். மடியிலா மன்னவன் எய்தும் என்றது தற்காகத்தான். தான் உலகையெல்லாம் கட்டியாளா

விட்டாலும் அவையெல்லாம் தன்னடிக்கீழுறினும் அவற்றைத் தகுதியுடையதாக்கவேண்டும், அல்லது தன் அரசியல் பொருளியல் அமைப்புக்களை அவை விரும்பியேற்பனவாக்கவேண்டும். பசியும் பிணியும் பகையு மறுக நாடென விழாக்களிலெல்லாம் வாழ்த்துவது நாட்டுமரபென்பது சிலப்பதிகாரத்தால் தெரியும். இவை மூன்றுமில்லாத நாடே நாடாவது. குறையுணவும் உணவேயின்மையுமாகிய பஞ்சநிலையும் நாட்டிலாகாது. பசியின்றேல் உலகில் பிணியில்லை. பெருவாரி நோயும் மக்களுடலில் நீண்டகால நோயுமாகா. இவையிரண்டும் இன்றியமையாவாகலின் பகை கடைசியில் கூறப்பட்டது. பகையின்றேல் இவ்விரண்டும் மிகவாகக் குறையும்.

தனக்கும் தன் கட்சிக்கும் நாட்டுப் பொருளைச் செலவிட்டு விடாமல் நல்ல பொதுநலத்திட்டங்களில் செலவிடுதலே ஈகையாகும். சான்றோர் சென்ற நெறியிலும் எதிர்க்கட்சி; பெரியோர் சொற்களிலும் ஈடுபாடும் மரியாதையும் வேண்டும். செவிகைப்பச் சொற்பொறுத்தல் அவர்தம் இடித்துரைச் சொற்களைக் கேட்டலேயாம். கழிகண்ணோட்டம் என்பது தனக்குரியார்க்கே அரசியல் சலுகைகளையெல்லாம் அளித்தல், இதுவுமாகாது. வலியரால் நலிவெய்தியோர்க்கு நீதி விசாரணை வசதிகளை விரைவிலும் செலவுக்குறைவிலும் கிடைக்கும்படிச் செய்யவேண்டும். அரசுத் தலைவரும் உயர்வினைஞரும் மக்களால் எளிதில் காணுமாறும் கண்டு குறைகளைத் தெரிவிக்குமாறும் இருக்கவேண்டும். அல்லதை நீக்கி நல்லதை நாடல் அரசவறிவு. அறமும் மறமும் அரசின் கண்கள். வீரம் (மறம்) அறத்தை நிலைநாட்டற்கு வேண்டும். நீதியும் முகமலர்ந்தினிய கூறுதலும் அதுவேயாகும். தன்னைச் சுற்றியோர்க்கும் மற்ற குடிகட்கும் எதனையும் செய்தல் பிறகாயினும் முதலில் இனிய தண் மொழிகளைக் கூறவேண்டும். ஆண்மையும் வீரமும் படைகளிடமட்டுமின்றி அரசியல் தலைவர்களிடமும் வேண்டும். விரைவுடைமை ஊக்கமென்பன சோம்பலின்றி மக்களின் நலத்தில் (அரசியல் வினைகளில்) விழிப்பும் கருத்துடைமையும் அவற்றின் சோர்வின்மையுமாம். அந்தணர் நூலென்பது அறநூலும் நீதிநூலுமேயாகலாம். உயர்ந்த நூல்களை அழியாமற் காத்து வழங்கச் செய்தலே அரசு. சான்றோர் சென்னெறியில் உயர்கல்வியை நாட்டில் வளர்த்தலும் அதுவாகும். அறம் என்பது இல்லறம் துறவறம் இரண்டுமாகலாம். மற்றும்

நன்னடையு (ஒழுக்கமு) மாகலாம். நல்ல சட்டதிட்டங்களால் வாழ்வு நெறியைக் காத்தலாகும். அத்தகைய அரசன் உலகைக் காத்தலால் இறைவனுடைய பிரதிநிதியாய் இவ்வுலகை ஆளுப வனுவான். அவன் தண்ணருள் தண்ணிய மழைபோல் நாட்டிற் கொப்புரவாகி உலகைக் காக்கும். குற்றத்தை ஆராய்ந்தொறுத் தலும் நீதியின் பாற்படும். தனக்குரியவர்க்கொரு நீதியும் அயலாராகிய குடிகட்கொரு நீதியுமாகாது. மேலும் பிறர்க்குக் குற்றத்தின் மேற்பட்ட தண்டமும்மாகாது. அதற்கெனக் குற்ற வாளிகளை ஒறுத்தலின்றி விடுதலுமாகாது. பின் அது நாட்டிற் பெருகி நலத்தையெல்லாம் அழிக்கும் களையாய்விடும். அதற் கரசன் முதலில் தன்னிடமுள்ள குற்றங்களைப் போக்கிக்கொள்ள வேண்டும். அப்படி ஒறுத்தலிலும் இன்சொல்லுடன் (பெற்ருேர் பிள்ளையை ஒறுத்தலைப் போன்று அன்புடன்) ஒறுத்தல் வேண்டும். அவரிடமுள்ள குற்றத்தை வெறுத்தலன்றி அவர்களை வெறுக்க லாகாது. நம்பிக்கை என்றும் உலகை நடத்துகின்றது. நல்லொழுக்கமுடையவன் பலராலும் மதிக்கப்பட்டு நன்மையடை கிறுன். செங்கோலுடையவனை அவனது கோலே தாங்குகிறது. அவன் நாட்டில் மழையும் குன்ருதென்பதற்கு இதுவே காரணம். இறைவன் நன்மைக்கருள் புரிகிருன் என்பது கருத்து.

கொடுங்கோலுக்கடையாளம் அவன் நாட்டில் குடிகளும் சேரார் பொருளும் சேராது, வேறென்ன இருக்கும். குடிகள் புரட்சி செய்து நாடு பிற நாட்டிற் கடிமையாகி அரசனும் அழிக்கப் படுவான். மக்கள் ஆனந்தக் கண்ணீரன்றித் துன்பக் கண்ணீர் விடச் செயலாகாது. வரிவாங்குவதிலுள்ள தன்மையிலேயே கொடுங்கோலும் செங்கோலும் அளவிடப்படுகின்றன. அளவு மீறி மக்களை வருத்திப் பொருள் வாங்கக்கூடாது. நாட்டிலுள்ள தீமைகளை நாள்தோறும் ஆராயவேண்டும். அதாவது ஒவ்வொரு நாளும் ஊக்கமும் விழிப்பும் உடையவனுக வேண்டும் அரசன். ஆண்டிற்கொருமுறை ஆய்ந்தால் ஆண்டிற்கோர் முறையே ஆளுகிருனென்பதாம், என்றும் ஆள்வதில்லை. அரசன் புகழை விரும்ப வேண்டும் அங்ஙனம் விரும்பும் புகழ் கொடுங் கோன்மையால் குன்றிவிடும். கொடுங்கோன்மையில் குன்ருத அரசநிலைகளே இல்லை. பசுபால்குன்றும் . செல்வங்குன்றும் என்பன போன்ற செய்திகள் முன்புமுரைக்கப் பெற்றன. அவ் வரசன் மனிதனல்லன் மக்களையலைக்கும், தானுமலையும் பேய் போல்வான் என்கிருர் ஆசிரியர்.

அரசனையும் குடிகளையும் பற்றிப் பேசுகையில் நாட்டில் எல்லாவித அமைதிகளிருப்பினும் அரசியலமைதி இல்லாவிடிற் பயனில்லை என்கிறார். இங்குக் குறிப்பது நிலைத்த ஆட்சியையும் அரசியலமைப்பின் வழியே அனைவரும் ஒழுகுதலையுமாகும். அரசியலமைப்பின்றியே ஒரு சர்வாதிகாரி நீண்டகாலம் ஆள்வான்' அன்றித் தலைமையில் வலிமையும் நீதியுமுடைய தலைவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இல்லாதிருப்பர், இந்நிலை மாறவேண்டும். பல் குழுவும் உட்பகையும் குறும்பும் இல்லாதது நாடென்கிறார். சாதி, சமயம், அரசியல் சம்பந்தமான குழுக்கள் இரண்டு மூன்றென்னுமளவில் மிகக் குறுகியிருக்கவேண்டும். உட்பகை இக்குழுக்களுள் அமைச்சரவைக்குள் சிறப்பாக அரசியற் கட்சிகளுள் ஏற்படும் உட்பகையாகும். இதனால் அரசே அடிக்கடி மாறிவிடும், கவிழ்ந்துவிடும். நக்சல்பாரிகள் போன்றவர் குறும்பர்; நெறியின்றி உயிர்களையும் பொருள்களையும் அழிப்பவர்கள்.

அரசனுடைய பொருள்களில் உல்கு பொருளும் ஒன்னார்த் தெறுபொருளும் இப்பொழுது நடுவாட்சிக்கும் நிலவரி போன்றன மாநிலத்திற்கும் வீட்டு வரி போன்றன ஊராட்சிக்கும் பஞ்சாயத்துக்கும் உரியவாய்விட்டன. தெறு பொருள் இப்போதருமை. இயற்றலும் ஈட்டலும் என்ற விதி இப்போதைய உலக நாடுகட்கு மிகமிகப் பொருந்தி வருகின்றது. இயற்றலும் ஈட்டலும் என்பதில் எவ்வித வாணிபத் தொழிலையும், வளர்ச்சியையும் அடக்கிக் கொள்ளலாம். நிலவளத்தைப் பெருக்கலும் பயன் படுத்தலும் இதனுளடங்கும். முற்கால அரசுகட்குப் போர் மிக மிகத்தேவை. இக்கால அரசுகள் பெரிதும் போரை வராமற் றடுக்க முற்படுவன. ஆனால் போரே உலகில் இல்லாதிருக்கும்வரைப் படைகள் வேண்டும்; உயர்ந்த ஆயுதங்களெல்லாம் வேண்டும், அதுவே உறுப்பமைதல். போரெனிற் புகலும் (கூத்தாடும்) மறவர், சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார் இன்றும் வேண்டும், போர்க்காலத்தில் அரசும் படைகளும் குடிகளும் தங்குவதற்குரிய காப்பிடங்கள் அரண் எனப்படலாம்.

மன்னன், சான்றோர் அமைச்சர், தூதர் ஒற்றர் முதலோருடன் பழகித் தன் கடமைகளை நிறைவேற்றுகிறான். இவருள் அமைச்சரும் சான்றோரும் முதல்வராவர். தூதர் முதலியோர் பின்னவராவர், வினை செய்யும் அமைச்சர் முதலியோர் செம்மையாக விருப்பதால் உலகம் நடைபெறுகிறது.

அவரவர் தகுதிக்கேற்ப அவர்களை நடத்த வேண்டும். அவர் அறிவுடையோர்ப் பரம்பரையினராதலால் அவர்களாலேயே அவன் எதையும் அறிகிறான். அவர்களில்லாமல் அரசன் தானே தனித் தெதனையும் நடத்திவிடவியலாது. அவர்கள் தன்னிடத்திருந்து நீங்குவதனையும் மீண்டும் வந்து தன்னுடன் இணைவதையும் விழிப்புடன் கருதவேண்டும். அரசற்குச் செல்வமும் புகழும் வேண்டும்; அவை அமைச்சர் முதலோராலேயாகும்; சான்றோர் என்பவர் 'சான்றோர் பலர் யான் வாழுமூரே' என்ற சான்றோர். எச்சமயத்தையும் கட்சியையும் சாராதவராகலாம் அன்றித் தன் கட்சியிலோ எதிர்க் கட்சியிலோ அவர்கள் இருக்கலாம். அவர்கள் வெகுண்டால் அனைத்தும் அழிந்துவிடுமென்கிறார் ஆசிரியர்.

தன் நாட்டிற்குப் பிறரிடம் உயர்வை உண்டாக்குபவன் தூதன். அவன் உயர்ந்த குடியினனாக இருக்க வேண்டும். அரசுக்குத் தன்னையே அளித்தவனாக வேண்டும். எனவே உயிர்க்கிறுதி பற்றி அவர்கள் கவலைப்படலாகாது. மன்னன் பல நாட்டவரிடமும் நிகழும் நிகழ்ச்சிகளை மறைமுகமாக அறிதல் ஒற்றின் துணையாலாகும். அவ்வாறறிதல் மிகவும் இன்றியமையாததாகும். தமக்கு நட்டார் பகைவர் ஆகியோரிடம் நிகழ்வனவற்றை அறிந்தாலன்றி அவருக்கு ஏதும் நன்மை செய்ய முடியாது. ஆதலின் அரசன் ஒற்றரையாளுதல் பல தீங்குகளையும் தவிர்ப்பதற்குரியதாகும்.

## பொருளடைவு

### அவர்கூறும் அரசியல்பு:

அரசருள் ஏறுபோலத் தலைமையுடையவன் படை, குடி, பொருள், அமைச்சு, நட்பு, அரண் ஆகிய ஆறங்கங்களையும் உடையவன் (381). அரசன் என்பவன் திண்மை, கொடை, அறிவு, ஊக்கமென்னும் நான்கு குணங்களையும் இயல்பாக உடையவனாவான் (382). விரைவுடைமை, கல்வி, ஆண்மையாகிய மூன்றினையும் நீங்காதவனாவான் (383). அறத்தினும் மறத்தினும் (வீரத்தினும்) வழுவாதவனாய் அறனல்லவற்றை நாட்டினின்றும் நீக்கி அவற்றுள்ளே தாழ்வின்றி நிற்பவனாவான் (384). வேந்தர்க்கெல்லாம் விளக்கெனப்படுபவன் கொடை, முகமலர்ந்தினிய கூறும் தலையளி, செங்கோல் குடிகளைப் பேணுதல் ஆகிய நான்கையும் உடையவனாவான்

(390). சோம்பலில்லாத அரசன் திருமாலளந்த உலகங்களை யெல்லாம் முறையானன்றி ஒருங்கேயெய்துவான் (610). வலியாரால் நலிவெய்தி முறை வேண்டினர்க்கும் வறுமை யுற்றுக் குறை வேண்டினர்க்கும் காண்டற் கெளியனைக் கேள்வியிலும் வினையிலும் கடுஞ்சொல் சொல்லாதவனை நின்று நாட்டில் பசி, பிணி, பகை முதலிய வில்லாமலாகும்படி முயலுபவனவன் (386). வேண்டும் வழிப் பொருள் கொடாமையையும் அந்தணர் சான்றோர் முதலியோரை வணங்காமையையும் கழிகண்ணோட்டத்தையும் தனக்குரிய குற்றமாகக் கொள்ளவேண்டும் (432).

**செங்கோன்மை :**

அரசனது செங்கோல் மற்றவர்க்கும் அந்தணர்க்குரிய வேதத்திற்கும் இல்லற முதலிய அறத்திற்கும் காரண மாவதாம் (543). அறநூலும் நீதிநூலும் சொல்லுநெறி தவருமல் முறை செய்யும் அரசன் செயலால் மக்களுக்குக் கடவுளென்று கருதப்படுவான் (388). தவறவந்துழியும் தவருமல் முறைசெய்யுமரசன் அம்முறையினலேயே காக்கப்படுவான் (547). குற்றத்தை நாடி உயிரினும் சிறந்தாரிடத்தும் கண்ணோடாமல் நூலோருடனும் ஆய்ந்து முறை செய்வான் (541). மன்னனது செங்கோல் உலகோர்க்கு மழைபோலக் குடிகளுக்கு நிலைநிறுத்து வதாம் (542). அரசன் குடிகளையும் அணைத்துச் செங் கோலையும் செலுத்துவான், அது உலகோரையெல்லாம் அவனடிக்கீழ்ப் பொருந்தச் செய்யும் (544). செங்கோலால் நாட்டில் பருவமழைக்கும் குன்றுத விளைவுக்கும் காரண மாவான் (545). அவன் வேலினலன்றிச் செங்கோலின லேயே வெற்றியடைவான் (546). எளிய செவ்வி யுடையனைய் ஆராய்ந்து முறை செய்யாத அரசன், பழியும் பாவமு மெய்தித் தாழ்ந்த பதத்தனய்த்தானே கெடு வான் (548).

**தண்டஞ்செய்தல் :**

குடிகளை நலிவின்றிக் காத்தலும் அவரிடம் குற்ற நிகழின் ஒறுப்பானெழித்தலும் வேந்தன் செயலாம் (549). அரசன் முதலில் தன்னிடமுள்ள குற்றங்களை நீக்கிக்கொண்டு பின்

பிறரது குற்றங்களையாய்தலே ஒறுத்தற்குரிய முறையாம் (436). கொடுமை செய்தாரை அரசன் கொலையாலொறுத்தல் குற்றமன்று அது உழவன் பயிர் வளர்தற்குக் களையெடுத்த லோடொக்கும் (550). அரசன் கடிய சொல்லும் குற்றத்தின் மிக்க தண்டமும் உடையனாயின் அவனது பெரிய செல்வம் நீடுதலின்றி விரைவிற் கெட்டுவிடும் (567). அரசன் மெலியார் மேற்சென்றுரை நடுவு நின்றுராய்ந்து பின்னும் அவரது செய்யாமைப்பொருட்டுக் குற்றத்திற்கொப்ப ஒறுப்பா னுவான் (561).

**கொடுங்கோன்மை :**

கொடுங்கோலனாகிய அரசன் பொருளையும் குடிகளையும் ஒருசேர இழப்பான் (554). மனம் நொந்து குடிகள் நம் இறைவன் கடியன் என்றுரைத்தற்குரிய அரசன் ஆயுட் குறைந்து செல்வமுங் கடிதாக இழப்பான் (564). அலைத்தற் றொழிலை எப்பொழுதும் செய்யும் கொடுங்கோலரசன் கொலைத் தொழிலை மேற்கொண்டொழுகுவாரினும் கொடியனாவான் (551). ஒறுத்தற்றொழில் மிக்க கொடுங்கோலன் குடிகளிடம் இறையல்லாத பொருள் வேண்டுதல் ஆறலைக்கும் கள்வன் வழிச்செல்வாரிடம் பொருளைத் தாவென்று கேட்பதுபோல் ஆகும் (552). நாட்டில் தீமைகளை நாளுமாராய்ந்து முறை செய்யாத அரசன் நாள்தோறும் நாட்டினை இழப்பான் (553). கொடுங்கோலரசனது செல்வம், குடிகள் அவனது கொடுமை யால் துன்புற்றுப் பொறுக்காமலழுத கண்ணீரால் தேய்ந்து விடும் (555). செங்கோன்மையால் புகழை நிலைபெறச்செய்து கொள்ளாத அரசன், அப்புகழை இழந்தவனாவான் (556). அரசன் தண்ணளி செய்யாமை, மழையின்மை உயிர்கட்குத் துன்பஞ்செய்தல் போலக் குடிகட்குத் துன்பஞ்செய்யும் (557). கொடுங்கோலரசர் தம் கீழ்வாழும் பொருளுடையோரை (கைந்நோவத்தளை பூணுமளவு) மிகவும் வருத்துவர் (558). மன்னவன் முறைதவறி செய்வானாயின் அவன் நாட்டில் பருவமழை பெய்யாது (559). அரசன் உயிர்களைக் காவா னாயின் பசுக்கள் பால் குன்றும் அந்தணர் நூல்களை மறந்து விடுவார் (560). வெருவுதற்குரிய செயல்களைச் செய்யுமரசன் ஒரு தலையாகக் கடிதிற்கெடுவான் (563). காண்பார்க்குக் காலமரியனாய் இன்னாத முகத்தையுடையானது செல்வம்

பேயாற் காணப்பட்டாற்போலத் தனக்கும் பிறர்க்கும் பயன் படாததாம் (565). கடுஞ்சொல்லும் கண்ணோட்டமின்மையு முடைய அரசன் தனது செல்வத்தை நீடுதலின்றி உடனே கெடுத்துவிடுவான் (566).

**அரசனும் குடிகளும் :**

எல்லா நன்மைகளையுமுடையதாயினும் அந் நாட்டில் மக்கள் அரசனிடத்தன்புடையராகவும் அரசன் அவர்களிடத் தருளுடையவனாகவும், இருக்கவேண்டும் ( 740 ). அரசன் நாட்டில் சமயம் சாதி முதலியவற்றாலாகிய சிறு குழுவின ரையும் (புலி, பன்றி) கள்வர் முதலிய உட் பகையுடை யோரையும் அரசையலைக்கும் கொல் குறும்பரையும் இல்லாமலாக்கவேண்டும் ( 735 ).

**அரசனது பொருள் :**

வைத்தார் இறந்துபோக நிலத்திடைக் கிடந்ததும் தாயத்தார் பெருததும் ஆகிய உறுபொருளும் கலத்தினும் காலினும் வரும் பண்டங்கட்கிறையாய சுங்கப் பொருள்களும் பகைவரை வென்றெய்திய பொருளும் ஆகியவை அரசர்க் குரிய பொருளாம் ( 756 ). கொடுங்கோன்மை பஞ்சமுதலிய காரணங்களால் பிற நாடுகளைத் தாங்கிய பாரமெல்லா வற்றையும் பாராது தன்னாடு அளிக்கும் இறைப்பொருள் முழுவதும் அரசனது பொருளாகும் ( 733 ). பொருள் வரும் வழிகளையாக்கலும் வந்த பொருளைத் தொகுத்தலும் அதனைக் காத்தலும் காத்த பொருளை அறம் பொருளின்ப வழியின் பொருட்டு வகுத்துச் செலவிடுதலும் அரசனது பொருளுக் குரிய நெறியாகும் ( 385 ).

**அரசனும் போரும் :**

அரசர் பகையை வெல்ல வேண்டின் அவர்க்கு உரிய காலம் வேண்டும் ( 481 ). அரசன் போர் வருவதற்கு முன்பே தனக்குப் புகலாவதோர் அரணைச் செய்துகொள்ள வேண்டும் ( 569 ). அரசன் வேண்டாமெனத் தடுத்த போதும் நெடுங் காலம் போர் பெருமையால் தம் தன்மையை விடாமல் மேலும் போர் மேலெழும் மறவரையுடையவ

னுவான் (778). அரசனது வெற்றி போர்க் களத்திலுள்ள மறவரால் விரும்பத்தக்கதாகும். அரசன் வெற்றிபெறவும் அன்றைய மாலையில் தலைவியுடன் விருந்தயரவும் தலைவனால் விழைதற்குரியதாகும் அப் போர் (1268). அரசரது செல்வம் எல்லாவற்றுள்ளும் யானை முத லுறுப்புக்களா லமைந்து இடுக்கண் அஞ்சாத வெற்றியினையுடைய படையே சிறந்ததாம் (761).

**அரசனும் அமைச்சரும் பெரியோரும் :**

அரசன் அறிதற்குரியனவற்றை அறிதற்குரிய கண்ணாக அமைச்சரையே கொண்டு ஒழுகுதலால் அவன் அவர்களை ஆராய்ந்துகொள்ளவேண்டும் (445). அரசன் குற்றங்கண்ட வழித்தன்னைக் கழறியும் இடித்தும் திருத்தவல்ல பெரியோரைத் துணையாகக் கொள்ளாதவிடத்துப் பகைவ ரின்றியும் கெடுவான் (448). அரசன் வினை செய்வாரை, அவர் கோடாதிருக்க உலகம் கோடாதாகலிற் நாள்தோறும் ஆயவேண்டும் (520). அரசன் எல்லோரையும் ஒரு தன்மையாக நோக்காமல் அவரவர் தகுதிக்கேற்ப நோக்க வேண்டும். அரசன் பிறர் குற்றத்தை இனத்துடன் சேர்ந்து ஆராயவேண்டும் (568). அரசர்க்குக் கேடு நினைக்கும் அமைச்சன் அருகிலிருக்கும்பொழுது கோடி பகைவரினும் கொடியவனாவான் (639). எண்ணங்களாற் சிறப்பெய்தி மாட்சிமைப்பட்ட அமைச்சரது வினைத்திட்பத்தால் அரசன் செல்வமும் புகழும் அடைவான் (665). அரசன் அமைச்சரால் மிகவணுகாமலும் அகலாமலும் தீக்காய்வார் போலிருந்து பழகுதற்குரியவனாவான் (691). வேந்தனால் வெறுக்கப்பட்டவர் எவ்விடத்தும் ஆதரிப்பார் இன்மையின் எங்குச் செல்லினும் நில்லாதவராவார் (895). இந்திரன் போலும் அரசரும் உயர்ந்த கோட்பாடுடைய தவத்தோர் வெகுள்வராயின் தன்னரசிழப்பர் (899). அரசன் தன்னிடத்திலிருந்து நீங்கி ஒரு காரணத்தால் மீண்டும் வந்தவனை அதனைச் செய்துவைத்துப் பின் ஆய்ந்து அவனைத் தழுவிக்கொள்ளவேண்டும் (530). மன்னர் தாம் விழையும் மதிப்பு, ஒப்பனை பொருள் முதலியவற்றை அமைச்சர் முதலியோர் விழைதலைப் பொறுக்கமாட்டார் (692).

அரசன் தன்மாட்டன்பும் நற்குடிப் பிறப்பும் விரும்பத்தக்க பண்பும் உடையவனைத் தூதனாகக்கொள்ளவேண்டும் (*681*). அரசர் இறுதிவருமாயினும் தனக்கு நன்மைவருமாறு செய்பவரையே தூதராகக் கொள்வர் (*690*). மன்னன் தேய மிடையிட்ட செய்திகளை யெல்லாம் அறிதற்குரிய ஒற்றரைத் தன் கண்களாக உடையனாவான் (*581*). அரசன் ஒற்றரின் ஒற்றிப் பொருளறியானாயின் அவனுக்கு வெற்றியில்லை (*583*). தனக்குறும் கேட்டிற்கு அஞ்சித் தாழ்வான சொற்களை வேந்தரிடம் சொல்லாதவனை அரசன் தூதனாகக் கொள்வான் (*689*). வினை செய்வார் சுற்றமுதலிய எல்லோரிடமும் நிகழும் நன்மை தீமைகளை அறிந்துரைக்கும் ஒற்றரை யாளுதல் அரசனது செயலாகும் (*582*).

# 3. அருமை

அருமையென்பது பெருமையுடையது. அருமை அருமை யெனப் பலவிடங்களில் வள்ளுவர் பலவற்றைக் குறிக்கிறார். அவற்றை ஆராய்ந்தால் அரும்பயன் கிட்டும்போலும் உள்ளது. செயற்கரிய செய்வார் பெரியார் எனப் பெரியோர்க்குரியதாக அருமையைக் குறிக்கிறார். மற்ற உயிரினங்கள் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஒரே மாதிரியாயிருப்பன. மனிதன் வளருபவன். புதியவற்றைக் காண்பவன். மற்ற மக்களினத்திடத்தில்லாத பொருள்கள் பழக்கங்கள் இவற்றைக் காண்பதையே 'நாகரிகம்' என்கிறான். முன்பெல்லாம் தவம் செய்தல், மனத்தையடக்குதல் முதலியவற்றை அருமையெனக் கருதினான். இன்று 'நிலவைத் தொட்டு' வருதலே அருமை என்கிறான். மின்சக்தி, வானொலி, கம்பி இல்லாத் தந்தி முதலியவற்றை அரிய கண்டுபிடிப்புக்களாகக் கருதுகிறான் மனிதன். அருமையுடையவாகப் பண்டையோர் பலவற்றைக் கருதினர். இன்றும் அவற்றைச் செய்து முடித்தலும் அடைதலும் அருமையாகவே தோன்றுகின்றது. உயர் மனிதனாகச், சான்றோனாக ஆக விழையும் ஒவ்வொருவனும் அருமைகளில் ஒன்றனையாவது செய்து முடித்தல் வேண்டும்.

தவஞ்செய்வார் செய்தற்கரிய சித்துக்களையும் உடைய ராகலின் அத்தவத்தைச் செய்தல், புலன்களையடக்குதல் வெகுளியை அடக்குதல் முதலிய அரியவாகக் கருதப் பெற்றன. வீடுபேறடைதலென்பது ஓர் அருஞ்செயலாகும். ஆசையை அறுத்தல் மனித உடலுடன் இருக்கும்வரை அரிதாகலான் அஃது ஓர் அருமையாகக் கூறப்பட்டது. மனிதன் பேசும் பிராணி. அவன் பேசிக்கொண்டேயிருப்பான். செய்தற்குரியதைத்தான் பேசுவான் என்பதில்லை. பழக்கத்தால் இயலாததையும் பேசுகிறான். எனவேதான் சொல்லியவண்ணம் செயல் அரிது என்கிறார். இதனால் சொல்லுக்கும் செயலுக்கும் ஓர் பொருத்தத்தையுண்டாக்க நினைக்கிறார். மனிதனது செயல் செய்யும் திறன் சிறிதாதலால் அப்போது சொல்லும் சிறிதாக வேண்டுமென்பதாம். முயற்சியும் மறதியின்மையும் சோம்பலின்மையும் துணையாக ஒருவன்

வினைபுரியின் செயற்கரியனவும் எளிதில் முடியும். வாழ்நாளில் ஒருவன் செய்தற்கரியதாக உள்ள செயலே 'புகழை வளர்த்தலும் புகழ் நிலைக்குமாறு இறத்தலும்' என்கிறார். மனிதனுக்குச் சிறந்த 'சொல்லை' அளவு படுத்தலும் பணிவுடையதாக்கலும் ஓர் அருமை. அவையஞ்சாமையும் அருமை; வார்த்தை பதினாயிரத்தொருவர் என்பதும் இங்குப் பொருந்தலாம். உயர்ந்த (மழை போலும்) நூல்களைச் செய்தலும் அவற்றைக் கற்றுத் துறைபோதலும் அருமையே. அருமைகளைச் செய்யும் நாடும் மனிதனும் வறுமை யற்றிருக்க வேண்டும் என்பது நிரப்பினுள் கண்பாடரிது என்பதா லறியப்படும்.

மலரன்ன கண்களையுடைய மங்கையர் அருமையுடையவ ராவர். கற்புடைய மகளிரைப் பெற்றவன் அருமையைக் கைவரப் பெற்றவனாவான்.

### பொருளடைவு

பிறவியாகிய கடலைக் கடத்தல் அருமையாகும். (8) பிறரால் செய்தற்கரிய செயல்கள் (புலன்களை யடக்கல், வெகுளியின்மை முதலிய) பெரியோராலேயே செய்யப்படும்; சிறியோரால் அவை செய்தற்கியலாவாம். (26) வினையை முடித்தற்காம் முறைகளைக் கூறுதல் யாவர்க்குமெளிதாம். ஆனால் அரியதாவது சொல்லியவாறே செய்து முடித்தலாம் (664). அரிய செயல்கள் செய்தற்கரியவென்று தளர்தற் குரியனவாகாவாம்; முயற்சி அவற்றை முடித்துத் தரும் (611). பயன்களுள் அருமையாவன வீடுபேறு முதலியனவாகும். (198) அடைதற்கரியவாவன புகழுக்கு ஆக்கமாகும் கேடும், புகழுடம்புளதாகும் சாக்காடும் என்பனவாம் (235). மாட்சிமையில்லார் பலநூல்களைக் கற்றவிடத்தும் அவர்க்கரி தாவது மனம் நல்லவராகுதல் என்பதாம் (823). அருமையுள் ஒன்று அவையகத்து அஞ்சாமையாகும் (723). அருமையுள் ஒன்று பணிவுடைய சொற்களையுடையராதல் (419). அருமை யுடைய (செயல்) யாவும் மறவாமையென்னும் கருவியாற் போற்றிச் செய்தால் முடிவனவேயாகும் (537). அரும் பொருள் யாவும் உரிய இடத்துடனாராய்ந்து செய்பவர்க் கியல்வனவேயாம் (462). அருவினைகள் யாவும் தக்க கருவிகளால் காலமறிந்து செய்பவர்க்குக் கைகூடும். (483);

அருமையாவன உயர்ந்த மறைப்பொருள்களாகும் (*847*). தடுத்தற்கருமையாவது குணமென்னும் குன்றேறி நின்ற துறவிகளது வெகுளியாகும் (*29*). அருமையாவது வறுமையில் உறக்கமென்பதாம் (*1049*). அருமையென்பது சோம்பலுடையவர் உயர்ந்த பயன்களை யெய்துதலாம் (*606*). அருமையுள் ஒன்று மலரன்ன கண்களையுடைய மகளிரும் அவரது இற்பிறப்புமாகும் (*1142*);

# 4. அருள்

தொடர்பு பற்ருது இயல்பாக எல்லா உயிர்கண் மேலும் செல்வதாகிய கருணையென அருளுக்கு விளக்கம் தருகிருர் பரிமேலழகர். மேலும், இல்லறத்திற்கு அன்புடைமை போல இது துறவறத்திற்குச் சிறந்ததென்கிருர் அவர். இறைவனுடைய எண் குணங்களில் பேரருளுடைமை ஒன்று. உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமையெனத் தவசிகட்கு (மக்களுள் உயர்ந் தோர்க்கு) முதற்குணமாய் வள்ளுவர் உரைப்பது இவ்வருளேயே யாகும். எனவே மக்கட்கும் கடவுட்கும் மேலாய தூயகுணமாய் முதற்குணமாய் சமயங்களால் வற்புறுத்தப் பெறுவது அருள் என்னப் படுகிறது. இறைவன் செயலுக்கு முதற்கருவியாய் எல்லாக் குணங்கட்கும் இருப்பிடமாய் இருப்பது அருள்[2]. அருளே சக்தி என்பது சைவ சிந்தாந்தம். 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்கையில் அவனருளுக்கும் திருவடிக்கும் ஏதோ நெருங்கிய தொடர்பு காட்டப் பெறுகின்றது. வள்ளுவரும் தாளை வணங்குதலைப் பற்றித்தான் திரும்பத் திரும்பப் பேசுகிருர். அருள் என்ற சொல் கடவுள் வாழ்த்தில் இல்லையாயினும் 'யாண்டும் இடும்பை யில' மனக்கவலை மாற்றலரிது என்றவிடங்களிலெல்லாம் அவனதருட் செயல்தான் புலப்படுகின்றது.

அன்பும் அருளும் ஒன்றேதான். அன்பினும் அருள் விரிந்தது; பரந்துபட்டது. அருள் கருதி அன்புடையராதல்; அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம் என்ற விடங்களில்[3] இரண்டினையும் இணைத்தே பேசுகின்ருர். உலக மக்களையெல்லாம் ஒன்றெனத் தழுவும் நிலை அருளாகும். 'அன்புடையார் என்பு முரியர் பிறர்க்கு என்றவிடத்தும் இது வற்புறுத்தப் பெறுகின்றது. அருளென்னும் அன்பீன் குழவியென்றே வள்ளுவர் கூறுகிருர். 'பல்லாற்ருற்றேரினும் அஃதே (அருளே) துணை யென்றவிடத்து' அருள் எல்லாச் சமயங்களினும் பொதுவாக ஒப்புக்கொள்ளப் பெறுவதோர் உயர் குணம் என்பது குறளால் எடுத்துக் காட்டப் பெறுகின்றது.

துறவியலின் முதலதிகாரமாக 'அருள் வைக்கப்பட்டதி லிருந்தே மனத்துக்கண் மாசு தீர்ந்த மேலார் யாவர்க்கு முரிய முதற்குணம் அருள் என்பது பெறப்படும். அருளின் முன், துறவறவியலிற் கூறப்பட்ட எல்லாத் தீய குணங்களும் இயல் பாகவே நீங்கி விடுகின்றன. அங்குக் கூறப்பட்ட நற்குணங்கள் இயல்பாகவே அமைந்து விடுகின்றன. செந்தண்மையை எவ் வுயிரிடத்தும் பூண்டொழுகும் அருளாகிய செவ்விய தண்ணளி யுடையோரே 'அந்தணர்' என வள்ளுவரால் அழைக்கப் பெறுவர். அரசன் குடிகள்மாட்டுச் செய்யும் அளியும் தலைவன் தலைவிமாட்டுச் செய்யும் அளியுங்கூட அருளென்றே கூறப் பெறுகின்றன.

வள்ளுவர் நீத்தார் பெருமையில் ஒரு உண்மையான மனிதனைப் படைக்கிறார். உயர் மனிதன் (Super man) எனப் பிறநாட்டு நல்லறிஞர் கருதுவது இத்தகைய மனிதனைப் பற்றியே யாகலாம். அவனை அந்தணன் எனவும் அறவோன் எனவும் குறளில் குறிக்கிறார். அந்தணர் பிராமண சாதியினரைக் குறிப்பதெனப் பலர் குறுகிய பொருள் செய்கின்றனர். அவர்களைத் தனியே 'பார்ப்பான்' எனக் குறிக்கிறார். ஒவ்வொரு சமயத்திலுமுள்ள (துறந்த) மேலோரையே அவர் அந்தணர் என்றாராகல் வேண்டும். இறைவனையே (அறவாழி) அந்தணன் என அவர் குறித்தலால் இக் கருத்து நிலைப்படுகின்றது. வள்ளுவர் போன்ற பொதுமையற முடையோர் இறைவனை ஒரு சாதிக்குட்பட்டவனாக ஆக்கவே மாட்டார்கள்.

நல்லாற்றானாடி அருளாள்க என்றவிடத்தும் ஆறு என்பது (ஒழுக்க) நெறி போன்று சமயம் அல்லது மதம் என்பதனைக் குறிக்கக் கூடும்.

அந்தணர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண் டொழுகுவோர் என்றவிடத்து ஆசிரியர் மனிதவுயிரிடத்துச் செந்தண்மை பூண்டொழுகுதலையும் கருதியேயிருக்க வேண்டும். பலர் மனிதனைத் தவிர்த்து மற்ற விலங்கு பறவைகளிடத்தில் (உயிரிரக்கம்) சீவகாருண்யம் காட்டுகின்றனர். ஆனால் பிற மனிதனை மிகவும் வருத்துகின்றனர். அதனை இக்குறள் கடிந் துரைக்கின்றது.

அறவோர் எனப் பொதுப்படக் குறித்ததனல் அருள் இல்லறம் துறவறம் ஆகிய இரண்டறங்களுக்குமே உரியதாகும். துறவறத்தின் முதலில் அது வைக்கப்பட்டிருக்கலாம். ஆனல் இல்லறத்திற்குரிய அன்பீன் குழவி என அது பாராட்டுப் பெறுகின்றது. அருள் வெஃகி ஆற்றின்கண் நின்ருன் என்றவழி ஆறு இல்லறம் எனப் பொருள் செய்யப்பெறுகின்றது. 242, 246, 249, 176, ஆகிய குறள்களில் அருள் ஒரு அறம் என்பது தெளிய வற்புறுத்தப் பெறுகின்றது. அருளுக்கடுத்த துறவதிகாரங்களில் புலால்மறுத்தல் தவம் முதலியன வருகின்றன. இதனல் அற வாழ்க்கையாகிய தவத்திற்கு அருள் மிகவும் நெருங்கிய தொடர் புடையது என்பது பெறப்படும்.

பலர் தனி வாழ்க்கையில் கொடியோராகவும் பொது வாழ்க்கையில் அருளுடையோராகவு மிருக்கின்றனர். இன்னும் பலர் தனி வாழ்க்கையில் நல்லோராகவும் பொது வாழ்க்கையில் அருளிலராகவும் இருக்கின்றனர். அருளுடன் அவர் வாழ்க்கை எங்கிலும் நன்னெறி நிலவ வேண்டும் என்பதற்காகத்தான் நல்லாற்ருனடி என்ருர். 'பல்லாற்ருல் தேரினும்' என்றதனல் பல நெறி (மதம்) கட்கும் பொதுவாய அறமே வள்ளுவர்க்குடம்பாடு என்பது புலனகின்றது. பௌத்தம், கிறித்துவம் முதலியன அருளேயே அடிப்படைக்கோட்பாடாகக்கொண்டு வளர்ந்தனவாம். தேரினும் என்றமையால் எதனையும் கண்மூடித்தனமாக வன்றி அறிந்து உணர்ந்து பின்பற்ற வேண்டுமென்பது அவர் கருத்து.

அருளல்லாதவற்றைச் செய்பவர்கள் உண்மைப் பொருளை நீங்கி மறந்தவர்கள் (246) என்பதில் பொருள் அறம் எனப் பரிமேலழகரால் விளக்கப் பெறுகின்றது. பொருள் மெய்ப் பொருள் கடவுட் பொருள் எனக் கொள்ளுதலே சிறந்தது கடவுளை மறந்தவர்களே அருளல்லாத நெறியில் செல்வர் என்பது பொருத்தமாகும். அருள் இல்லறத்தாரால் விரும்புதற்குரியது (176), என்ற கருத்து உணர்தற்குரியது. அதனற்ருன் அன்பும் அருளும் அடிக்கடி இணைத்தே பேசப் பெறுகின்றன. இல்லறத்தில் (வீட்டில்) அன்பு பெருகிப்பெருகி அது (நாட்டில்) விரிந்து உலக முழுவதும் அருளாகப் பரவுகின்றது. அன்பீனும் ஆர்வம், நண்பென்னும் நாடாச் சிறப்பினை ஈனும் என்ற விடத்துப் பரிமேலழகர் இதனை நன்கு தெளிவிக்கிருர். யாவரும் நண்பராதல் என அவர் உரையில் கூறுதல் உலகினர் யாவரும் என்ற

கருத்தினைக் கொண்டிருக்கக் கூடும். அன்பு ஆர்வம், நண்பு, அருள் என்பது அருளின் வளர்ச்சி முறை போலும். எனவே அருளுக்குரிய விதை இல்லறத்தில் இடப்பெறுகின்றது. அன்பினும் அவ்வருள் பொருள் என்னும் செவிலியாற்றான் வளர வேண்டும்.

எனவேதான் அருள் செல்வமெனப் படுகின்றது. அதுவும் அருளே செல்வத்துட்செல்வம் எனப்படுகின்றது. மற்ற எல்லாச் செல்வங்களினும் மனத்துள் எளிதாக வளர்த்துக் கொள்ளக் கூடியது. எம் மனிதனும் தன்னின் இழிந்தோரிலும் உயர்ந்து விளங்கவே விழைகின்றான், அதனைப் பயன் படுத்திக்கொண்டே வள்ளுவர் பூரியார் கண்ணுமுள பொருட் செல்வத்தினும் மேலோரிடமுள்ள அருட் செல்வத்தினைப் பாராட்டிச் சொல்லுகிறார்.

அருள் நெறியிலும் அறநெறியிலும் காலம்பெற இளமையிலேயே செல்லத் தொடங்கவேண்டும். நெறிமாறிவிட்டால் பின்பு எப்பொழுதும் ஒன்றுபடாதது அருள்நெறி, அதனைற்றான் அருளற்றார் அற்றார் மற்றாதலரிது என்கிறார், பொருளற்றவர்க்குக் கடைசி காலத்திலும் ஒரு புதையல் கிடைக்கலாம். அருளற்றார் திடீரென அருள் உணர்ச்சி கைவரப்பெறல் மிக அருமை. இவ்வுலக இன்ப நிலையைக் கண்கூடாகக் கண்டவனுக்கு அவ்வுலக இன்பத்தைக் குறிப்பிட்டுக் காட்டுகிறார். இவ்வுலகம் பொருள் ஒன்றனாற்றான் ஆகும் என வற்புறுத்துகிறார். அவ்வுலக இன்பம் என்பது இவ்வுலகை விட்டுச்சென்று ஏதோ ஓரிடத்தில் காண்பது என்பதைவிட இங்கேயே உலகியல் இன்பத்தினும் வேறாக உயர்ந்ததாக அனுபவிப்பது எனக் கொண்டு விடலாம்.

அருளின் பயன்களாக ஆசிரியர் கூறுவது அருளாளரைத் தீவினைகள் சாரமாட்டா; அவர்கட்கு நரகம் இல்லை என்பனவாம். அவ்வுலக இன்பம் உண்டோ இல்லையோ, நரகம் இல்லாமலானாற் போதும் என மனிதன் வேண்டுகிறான். மற்றும் இவ்வுலகிற் றுன்பம் இல்லாமலாகவேண்டும் என்கிறான். இவற்றை அருள் நல்குகின்றது. தன்னுயிரஞ்சும் வினையென்பதில் தன்னுயிர்க்குத் தீமையைப் பிறர் எண்ணுவதும், தன்னுயிர் இடையில் திடீரெனப் போய்விடுமோ எனத்தான் அஞ்சுவதும் இல்லை என்ற குறிப்பும் உள்ளது. எனவே அவன் இந்நிலமிசை நீடுவாழ்வான். அல்லல் அருளாள்வார்க்கில்லை என்பதில் அவர்க்கு மறுமையிலும் துன்பு

மில்லை எனப் பரிமேலழகர் எழுதுகிறார். வையத்து வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவான். புத்தேளுலகு புலவரைப் போற்றாது இவனைப் போற்றும் என்பது இதன் கருத்தாகலாம்.

அருளொழுக்கத்தைப் பற்றி அவர் மிகவாக வற்புறுத்துவது வலியார் முன் தன்னை நினைக்க என்பதாம். இங்குத் தன்னின் மெலியார் என்பது தனிமனிதன் என்னாமல் தன்னினும் மெலிந்த நாடு, கட்சி எனவும் பொருள் கொள்ளலாம். அரசியலில் சிறு நாடுகளையும் கட்சிகளையும் போரிலும் படையிலும் அழிப்பதும் அடக்குவதும் பலவாக இருக்கும் இன்றைய உலகிற்கு மிகவும் பொருந்தும்.

ஊன் தின்பதிலும் உயிர்க் கொலையிலும், சூது, வரைவின் மகளிர் ஆகிய இடங்களிலும் அருள் ஒழுக்கத்தை எவ்வாறு பயன் படுத்துவதெனக் குறிப்பிட்டுப் பேசுகிறார். எத்தீவினைகளை விடுவது உண்மையான அருளாகுமோ எவற்றான் அருளின் முழுப் பயன் கிடைக்குமோ அவ்விடங்களில் 'அருள்' என்ற சொல்லையே யிட்டுக் கூறுகிறார். ஊன் தின்னாமை எனத் தனியே கூறிவிட்ட தால் கொல்லாமை போரில் மக்களுயிரைக் கொல்லாமை எனக் கூடப் பொருளாகும். அசோகனும் செங்குட்டுவனும் இக்கொலை யிலிருந்தும் தவிர்ந்துள்ளனர். வனவிலங்குகளைக் கொல்லாமல் பாதுகாத்தலும் கொல்லாமையேயாகும். கொல்லலாகாது ஆனால் பிறர் கொன்றதை அல்லது பிறரைக் கொல்லச் செய்து தானுண்ணலாம் என்ற விலக்கு விதிகளெல்லாம் அறத்திற் பேசப் பட்ட காலத்தில் உயிர்க்கொலையை எவ்விதத்திலும் தவிர்த்தது குறள்.

சூதைப் பற்றி அவர் கூறியது இன்று உலக முழுவதற்கும் பொருந்தும். தமிழ் நாட்டிற்கேயன்றி உலகிற்கே யறமுரைத்தார் வள்ளுவர் என்பது இவ்வதிகாரங்களால் புலனாகின்றது.

உலகில் சூதினாலும் வரைவின் மகளிர் தொடர்பாலும் கெடுவார் எண்ணிலர். பண்டும் புராணங்களும் இதிகாசங்களும் இத்தகையோர் கதைகளை எடுத்தியம்பும். அருள் நெறிக்கும் அறிவு நெறிக்கும் இவை முற்றும் (914, 938) புறம்பானவையென வள்ளுவர் கூறுகிறார். இந்நான்கைந்து நெறிகள் அருளுக்கு மிக நெருங்கிய எதிரிகளெனக் குறளில் கருதப்படுகின்றன போலும்.

### பொருளடைவு

இனி வள்ளுவர் அருளைப் பற்றிக் கூறிய குறள்களை அருளும் அறமும்; அருளும் பண்பும்; அருளும் இன்பமும், அருளும் பொருளும்; அருளும் ஊன் தின்னுமை, சூது, வரைவின் மகளிர் முதலிய நிலைகளும் எனப்பிரித்துக் கொள்ளலாம். அருளாளர்களை வள்ளுவர் அந்தணர் எனவும் அறவோர் எனவும் போற்றுகிருர். அவர் எவ்வுயிரிடத்தும் தண்ணிய அருளைப் பூண்டு ஒழுகுவோராவார். (30)

**அருள் இயல்பு :**

பல சமயங்களுக்கும் ஒத்த அறமாகலின் அருள் நன்னெறியில் நின்று கைக்கொள்ளத் தக்கது. (242) அறத்தினை மறந்த ஒருவனே அருள் நீங்குமாறு அறமல்லாதவற்றைச் செய்வான் (246) அருளில்லாதவன் செய்யும் அறம் விளக்கமின்றிக் கெட்டுவிடும். (249) அருளாகிய அறம் இல்லறத்தால் விரும்பத்தக்கதாகும் (176) மெலியாரை ஒருவன் நலியச் செய்கையில் வலியார் முன் தன்னிலையை நினைத்தால் அருள் தோன்றும். (250)

**பயன் :**

அருளுடையவர்க்குத் துன்பமிகுந்த நரகமில்லை (243) இம்மையிலும் மறுமையிலும் துன்பமில்லை (245) அவரைத் தீவினைகள் சாரமாட்டா (244)

**அருளும் பொருளும் :**

அருட் செல்வமே பொருட் செல்வத்தினும் மிக உயர்ந்தது. (241) அருளற்றவர் மீண்டும் ஒரு காலத்திலும் அருளுடையராதலில்லை (248) அருள் வீட்டின்பத்திற்குக் காரணமாகும்.

**அருளும் தீ நெறிகளும் :**

அருள் பிறவுயிர்களின் ஊனைத் தின்பாரிடம் இருத்தவில்லை. (252) அருளென்பது உயிர்களைக் கொல்லாமை (254) சூதாடுவோரிடத்தில் அது நிலைத்ததில்லை (938) அருளை யாய்பவர் வரைவின் மகளிரது நலத்தைத் தோய்தலில்லை (914)

**அருளும் அன்பும் :**

அருள் அன்பின் விரிவாகத் தோன்றுதலால் அன்பின் குழந்தையெனப்படும். (757) அது ஒருவனை யாவரிடத்தும் அன்புடையவனுக்கும். அது பிறர் பொருளை சோர்விடத்துக் கொள்ள நினைவாரிடம் இல்லை. (285) அருளும் அன்பும் சேர்ந்த நெறியில் வாராத செல்வத்தை விட்டுவிடவேண்டும். (755)

# 5. அழகு

விலங்கு நீர்மையினின்றும் வேறுபட்ட மனிதன் அழகினை விழைபவனும் போற்றுபவனும் ஆயினன். அறிவினாலேதான் மனிதத்தன்மை உயரும் எனக் கண்ட பிறகு அறிவுடையோர் பலர் அழகுடையராகவும் இல்லாதது கண்டு அகத் தன்மையை அழகுடையதாகக் கண்டான். உயர்ந்த குணங்களையும் ஒழுக்கங் களையுமே உண்மையான அழகாகக் கருதினன். எனினும் வள்ளுவர் (புறவழகை) உடலழகைப் புறக்கணித்தாரில்லை. அகவழகு புறவழகு இரண்டினையும் அவர் வற்புறுத்துகிறார். இயற்கையிலும் அழகிலும் சுவை மிகக் கண்டது தமிழகம். மனிதப் பெயர்கள் கடவுட் பெயர்கள் எல்லாம் 'அழகினைத்' தம்மிடத்தே கொண்டன. சங்கப் புலவர்கள் இயற்கையழகை எழிலுறப் புனைந்துரைத்தவர்கள். அழகுக் கலைகளிலும் தமிழர்கள் வல்லவர்கள். கட்டிடங்களும் நகரங்களும் காவியமும் ஓவியமும் சிற்பமும் அவரிடத்துக் கண்கொள்ளாக் காட்சியை வழங்கியன. உடலெங்கும் உளமெங்கும் செயலெங்கும் உலகெங்கும் அழகினை அறிவுறுத்துகின்றார் வள்ளுவர்.

அழகு வேண்டும்; ஆனால் அறிவில்லாதவனதழகு மண்பாவை அழகென்கிறார். காடுகளின் நிழலழகைப் பாராட்டுமிடத்து இயற்கையழகு தென்படுகின்றது. நோயின்மை செல்வம் விளைவு இன்பம் பாதுகாப்பென்பன ஒரு நாட்டினை அழகுற வைத்தற் காவன என்பதிற்றடையில்லை. பணிவும் நடுவுநிலைமையும் வள்ளுவர் கூறும் மனித ஒழுக்கங்களுள் அழகுடையவேயாம். கண்ணோட்டத்தை நாகரிகமாகக் குறிக்கும் வள்ளுவர் அதனை அழகுடையதாகக் கூறுதலில் வியப்பில்லை. குறிப்பறியும் திறன் தனி மனிதனையும் கரவாதளிப்பார் முன் ஏற்றல் நாட்டினையும் அழகுற வைக்கும். பெண்ணைக் கண்கொள்ளாக் கவின் உடையவளாக வருணிக்கிறார் வள்ளுவர். அவள்தோளே பரமபத இன்பம்; எனவே அதை அழகுடையதாகக் கண்டதில் வியப்பில்லை, தலைவன் பிரிந்திருக்கையில் அவள் அழகெலாம் வாடிவிடுமென்றலால் அவர்களது ஒன்றிய வாழ்வே அழகினை உலகில் வளர்க்கும்.

## பொருளடைவு

### அகவழகு :

பணிவுடைமையும் இன்சொல்லுடைமையும் ஒருவற்குத் தலைசிறந்த அழகாம் (95) மனத்தில் நடுவுநிலைமை யுடைமையே சான்றோர்க்கழகாம் (115) பிறர் கூறாமலே அவர் உள்ளத்திலுள்ளதையறியும் குறிப்பறிதற்றன்மை உலகிற்கேயழகாம் (701); தீமைக்கு நாணமுடைமை சான்றோர்க்கழகாம் (1014); கண்ணோட்டமென்பது ஒரு சிறந்த அழகாம், அதுவே இவ்வுலகை நிலைத்திருக்கச் செய்வதாகும் (571) கரவாதளிப்பார் முன்னின்றிரத்தலும் அழகுடையதாகும் (1053)

### புறவழகு :

நோயின்மை, செல்வம், விளைச்சல், இன்பம், பாதுகாப்பு ஆகியவைந்தும் நாட்டிற்கழகாம் (738); காடுகளிலுள்ள அடர்ந்த மரங்களின் நிழல் ஒரு அழகுடையதாம். (742)

### அகமும் புறமும் :

உலகைச் சூழ்ந்த புகழை, உயிரைவிட்டும் விரும்பாத வீரர் காலில் கழலையணிதல் வெறும் அலங்காரத் தன்மை யுடையதேயாம். (777) நுட்பமாய் மாட்சிமைப்பட்ட அறிவில்லாதவனது தோற்றவழகு மண்ணாற் புனையப்பட்ட பாவையின் அழகையொக்கும் (407).

### அழகும் காதலும் :

தலைவியின் தோள்கள் தொன்மையான அழகுடைய வாகும்; அவ்வழகு தலைவனது பிரிவின்கண் வாடிவிடும். (1235); பிரிந்த தலைவனைத் தலைவி நினைத்துக்கொண்டி ருக்கையில் அவளது அகக்கவினும் புறக்கவினும் நீங்கிவிடும். (1250); தலைவியிடத்துத் தலைவன் காணும் அழகு கண்ணிறைந்ததாகும் (1272); தலைவர்க்கழகாவது தலைவியிடத்து நிகழும் ஊடலாகும். (1305)

# 6. அறம்

அறம், அறிவு என்பனவெல்லாம் (அறு) வரையறு, அறுதி என்ற பொருளடிப்படையில் அமைந்தனவாக வேண்டும். தமிழர்கள் அறம் அறிவு இவற்றை வரையறுத்து வாழ்பவர்கள் என்பது இதன் கருத்தாகலாம். ஒழுக்காறுக் கொள்க; பொய்தீரொழுக்க நெறி என்றவிடங்களில் குறிக்கப்பெறும் ஆறு நெறி யென்பனவெல்லாம் இவ்வறவாறு அறநெறி என்பவேயாகல் வேண்டும்.

அறம் என்பது பொதுவாக மனிதவொழுக்கம் மனிதச் செயல் என்னலாம். செயலில் மனிதன் விலங்கினின்றும் வேறுபடுகிறான். எனவே அவன் அறமுடையவன். விலங்கு மறம் (மறத்தன்மை) உடையது. உயர் மனிதர்களே சான்றோர்; மனிதர் எனத்தக்கவர். "கடனென்ப நல்லவையெல்லாம் சான்றாண்மை மேற் கொள்பவர்க்கு" என்கிறது குறள். இறைவனும் அறவாழி யந்தணனாகிய மேலோனாகக் காட்சியளிக்கிறான். மனிதனுடைய செயல்களையெல்லாம் ஒழுங்கு படுத்துவது தூய்மைப் படுத்துவது அறம். நன்மை நல்லவை என்ற சொற்களாலும் வள்ளுவர் இவ்வறத்தினைக் குறிக்கிறார் என்பது வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் என்ற குறளாலறியப்படும். மேனாட்டார் 'Goodness' என்ற பெயராலும், வடநாட்டார் தர்மம் என்ற பெயராலும் அறத்தைப் பற்றி ஆராய்கின்றனர். செயலால் மட்டுமன்றி மன வளர்ச்சியாலுமே மனிதன் விலங்கினின்றும் வேறுபடுகின்றான்; மனத்துக்கண் மாசிலனாதல்; ஒல்லும் வகையானறவினை. வாய்மையினல்ல பிற என்றவிடங்களைக் கொண்டு மனம் சொல் செயல் ஆகிய திரிகரண சுத்தியையே அறத்தினுள் வள்ளுவர் வற்புறுத்துகிறார் என்னல் வேண்டும்[4]. பௌத்தரும் ஜைனரு மெல்லாம் நன்மனம், நற்சொல், நற்செயல் என்பவற்றை அடிக்கடி வற்புறுத்துவர். காமத்துப்பால் இல்லறவியல் (அறத்துப்பால்) தொடர்புடையது. பொருட்பாலில் பேசப்பெறும் பண்பு சான்றாண்மை முதலிய அதிகாரங்களால் அறம் பொருட்பாலுக்கு முரிமை யறியப்படும்.[5] எனவே வள்ளுவர் அறம் பொருள் இன்பம்

ஆகிய மூன்றற்குமே அறமுரைக்கிருர். அதனுற்ருன் குறளை ஆன்ருேர் ஓர் அறநூல் என்கின்றனர். எது சரி எது நல்லது என்பது எச்செயலுக்கும் எத்துறைக்கும் உரியதாகும். அரசியலில் எது நன்று, இன்பவியலில் எது நன்று, இல்லறவியலில் துறவியலில் எது நன்று எனவகுப்பதே அறம். வடமொழியாளர் தர்மசாத்திரம் நீதி சாத்திரம் என்ற இரு பிரிவுகளில் இவ் வறத்தைப் பேசுவர் போலும். பரிமேலழகரும் நயன் நன்றி என வருமிடங்களிலெல்லாம் நீதி அறம் எனப் பிரித்தே பொருள் செய்கிருர். அரசியல் அறநூல்களைத் (தர்மசாத்திரங்களை) ஒரு பகுதியாகவும் பிற இல்லறவியல் முதலிய சாத்திரங்களை ஒரு பகுதியாகவும் அவர்கள் கொள்வர் போலும்!

தமிழில் கீழ்க்கணக்கு நூல்களிற் பல அறத்தைக் கூறவே எழுந்தன. அவற்றிற்கு முற்பட்ட சங்க நூல்களிலும், பிற்பட்ட சமயவிலக்கியங்களிலும் வாழ்வறங்கள் இடையிடையே விரவியும் பின்னியும் கிடக்கின்றன.

மனித வாழ்க்கையே அறத்துக்காக என்கிறது குறள்: அறனறிந்து மூத்த அறிவுடையார் என்ற குறளில் அறத்தினை ஆராய்ந்தே மூப்படைவதெனில் அதற்காகவே வாழ்வதென்பதே பொருள். அறத்துப் பயன்களில் அறத்தான் வருவதே இன்பம், புகழ் எனவெல்லாம் விளக்கமாகவுரைக்கின்ருர் வள்ளுவர். அறம் மனிதவினத்துப் பிறந்தவனை மனிதனுக்குகிறது என்பதனை 'அறவோன்' என்ற பெயரால் (30) துறவறவியலில் உயர்ந்தோரை அவர் குறித்தலால் அறியலாம்.

மனிதன் இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் புறத்துறைகளில், புறநல வளர்ச்சிகளில் எவ்வளவோ முன்னேறலாம். ஆனல் அகநல வளர்ச்சிகளில் அதே அளவு மாறுதல்களைக் காணவியலாது. மனிதன் மனதன் (மனத்தையுடையவன்) ஆதலால் அவன் மன நல வளர்ச்சிக்குக் குறள் என்றும் புலராது நின்றலர்ந்து தேன் பிலிற்றிக் கொண்டேயிருக்கும் என்பதில் தடையில்லை. அரசியலிலும் இல்லறவியலிலும் உயர்ந்து துறவற வியலிலும் (பிறர்க்கென வாழும் தனிவாழ்க்கையில்) பல வரை யறைகளை என்றும் தேடி மேற்கொண்டேயாகவேண்டும். அவ் விடங்களில் திருக்குறள்மிகவும் உதவும். அதனில் கூறப்படும்

அறங்கள் பெரிதும் மாறுபடமாட்டா; அன்றிப் பெரும்பான்மை யோரால் ஒப்புக் கொள்ளப்பெறும், பாராட்டப்பெறும்.

மனந்தான் மனிதனுக்கடிப்படையென்பது முன்பும் உரைக்கப் பட்டது. அறஞ்செய விரும்பு என அதனுற்ருன் ஔவை விரும்பு என மனத்தை அடிப்படையாக்கினர். மனத்துக்கண் மாசிலனுதல் என்பதும் அதுவேயாகும். நிலத்தை ஒழுங்கும் தூய்மையும் செய்துகொண்டபின் வீடு கட்டுவதுபோல மனத்தைத் தூய்மை செய்துகொண்டு மனித வாழ்வைக் கட்டவேண்டுமென்கிருர் வள்ளுவர். உயர்மனித நிலையையடைந்து பின் கடவுள்நிலையை யடைவதே உலகின் எம்மக்களுக்கும் உரிய குறிக்கோளாகலின் அறவோரை அந்தணர் எனவும் கடவுளை அறவாழியந்தணன் என்வும் குறள் கூறுகின்றது.

'மாசிலனுதல்' என்பதில் சொல்லிலும் செயலிலும் அறமுடையராகக் காட்டிக் கொண்டு மனத்தில் அறமின்மை ஆரவாரமென்கிருர் ஆசிரியர். பொருளும் இன்பமும் அறத்து வழிப்படூஉம் தோற்றம்போல என்ற புறநானூற்றுக் கருத்திற் கேற்ப அறத்துப்பாலை முதலில் வைக்கிருர் வள்ளுவர். மற்றும் நூல் முழுதும் அறன் வலியுறுத்தல் உள்ளதெனும் கருத்தை வெளிப்படுத்துவதுபோலப் பாயிரம் நான்கதிகாரங்களுள் ஒன்ரு கவே அறன் வலியுறுத்தலை வைத்துள்ளது குறள். நீத்தார் பெருமைக் கடுத்து இவ்வதிகாரமிருத்தலால் நீத்தாராகிய மக்கட் பண்பினுயர்ந்தோர்க்குரியது அறம் என்பது பெறப்படும். கடவுள் வாழ்த்திற்கும் வான்சிறப்பிற்கும் அடுத்து வைத்தது அவைபோல இதுவும் உலகிற்கின்றியமையாததென்பதாம்.

அம்மனத்தூய்மையைக் கெடுப்பன அழுக்காறு அவா வெகுளி இன்ருச்சொல் என நான்காம். அவா முதலிய மூன்றும் மனம் சொல் செயல்களுக்குரியவாம். அழுக்காறு மூலம். உலகில் அனைவரிடமும் ஆதரவாகிய மனப்பான்மை அன்பாவது போல அனைவரிடமும் எதிராய மனப்பான்மை அழுக்காரும். அழுக்காறு காரணமின்றி இயல்பாயெழுவது. மற்றவன் தன்னைப்போல ஒரு மனிதனுயிருப்பதே பிடிக்காமலிருத்தல் அழுக்காறு. அழுக்கு – ஆறு (நெறி) அது. அவ்வழுக்கு நீங்குதலே மாசிலனுதலாம். அவா முதல் மூன்றனுள் அவா மனத்திற்கும் இன்ருச்சொல் சொல்லிற்கும் உரியது. அவாவினல் வெகுளியும் அதன் வழி

இன்னாச்சொல்லும் பிறக்கின்றன. பொய் குறளை கடுஞ்சொல் பயனில்சொல் யாவும் இன்னாச்சொல்லுள் அடங்கும்.

அறத்தினை வளர்க்கு முறையில் அதனை மறத்தலினூங்கில்லை கேடு என்கிறார். மனத்துக்கண் மாசிலனாதல் என்றமையால் மறத்தலின் கேடில்லை எனப்பட்டது. மறத்தலின் என்றமையின் கனவினும் அறம் தவறலாகாதென்பது. மனித நலமெல்லாம் அதனால் வருதலால் அதனை மறத்தல் எல்லாக்கேட்டிற்கும் காரண மென்பது. மறத்தலாகாது என்ற தொடரினாலேயே வீணாள் ஏற்படாமல் அறம் செய்க என்பது. ஒவ்வொரு நாளும் என்பது செய்யும் ஒவ்வொரு செயலும் அறக்கலப்புடையதாக வேண்டு மென வற்புறுத்துகின்றது குறள். அன்றறிவாமென்றதும் அதனையே கூறுகின்றது. இன்றே இன்னே செய்யவேண்டு மென்கின்றது. அன்றிப் பிற்காலத்திலாகட்டும் எனில் அப் பொழுது சோர்வு வந்துவிடும். முதலில் செய்துவந்த பழக்கத் தால் அறமின்மையே தோன்றும். அல்லது புதிதாக அக் காலத்தில் அறஞ்செய்து பழகிக்கொள்ளுதலும் அருமை யாகலாம்.

அறம் வாழ்க்கை முழுவதையுமே அடைத்துக் கொண்டது என்பது 'ஒல்லும் வகையான்' என்ற குறளாலறியலாம். பரிமேலழகர் இதற்குச் செய்தவுரை மிகவும் தெளிவானது. மனம் சொல் செயல்களால் செய்வதெனவும், பொருளளவிற்கும் யாக்கை (வலிமை) யளவிற்கும் ஏற்பச் செய்வதெனவும் அவர் எழுதி யுள்ளார். இவற்றிற்கப்பால் மனிதவாழ்வில்லை. கடனென்ப நல்லவையெல்லாம் செயற்பாலதோருமறனே என்றதெல்லாம் இக்கருத்தினை வற்புறுத்தவேயாகும். நல்லவென உலகில் என்னவெல்லாம் உண்டோ அவற்றையெல்லாம் ஆராய்ந்து செய்தல் அறமாகும்.

அறத்திற்கு அரசாங்கமே ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும். 'அரசர் முறைசெயினல்லது பெரும் பெயர் பெண் டிர்க்குக் கற்பு சிறவாது' என்ற சிலப்பதிகாரக் கருத்து அறத் திற்கும் ஆதியாய் நின்றது மன்னவன் கோல் என்ற குறளில் மிளிர்கின்றது. நல்ல நூலறிவும் கேள்வியறிவும் அறத்தினை வளர்க்குமென்றதனை எனைத்தானும் நல்லவை கேட்க; அளவறிந் தார் நெஞ்சத்தறம் என்ற குறள்கள் வெளிப்படுத்தும்.

வறுமையுள்ளவரை (நாட்டில்) அறம் வளராதென்பதனைக் குறள் அறஞ்சாரா நல்குரவு என்கிறது. எனினும் மனித அறிவிற்கழகாக வறுமையிலும் செம்மையாய் வாழ வேண்டும் என்பதனைக் கூறக் குறள் நூல் தவறவில்லை. நல்லார்கட்பட்ட வறுமை என்ற தொடர் இதனைத்தான் உட்கொண்டுள்ளது. வாழ்க்கைக்குரிய நலன்கள் குறைப்பட்டகாலத்திற்றான் நாட்டில் அறம் கெடுகின்றது. அதற்கோரளவு வசதிகளைச் சமப்படுத்த வேண்டும்.

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம். அறமுடையவனே நாட்டில் வினைகளையெல்லாம் செய்தற்குரியவன். ஒழுக்கமும் அறச்செயல்களும் உலக நடைமுறைக்கே மிகவும் இன்றியமை யாதன வென்பது இதனல் பெறப்படும். அதனுற்றான் நல்லோ ரிடம் அறத்தைப் பற்றிய கவலை (நெஞ்சத் தவலம்) இருந்து கொண்டேயிருக்கும் என்கிறார் ஆசிரியர்.

இன்சொல் வாய்மைச் சொல் ஆயவை அறத்தை உலகில் நிலைநாட்டுவதில் மிக்க துணைபுரிவன. புத்தர், கிறித்து முதலிய அறவோர் வாழ்வில் இத்தகைய இன்சொல் மிகவும் இடங் கொண்டிருந்தமை கதைகளாலறியப்படும். நன்மையும் இனிமையு முடைய சொற்கள் பயனும் பண்புமுடைய சொற்கள். செம் பொருள் கண்டார் வாய்ச்சொற்கள் அடிக்கடி நூலினும் உரை யினும் பேசப்படுகின்றன.

அறப் பயன்களில், உலக இன்பம், துறக்கவின்பம் வீட்டு இன்பம் புகழ் மற்ற பொருளின்பங்கள் யாவும் கிடைக்கின்றன. இதனினும் உலகில் சான்றோர் உலக, உயிர் நலன்களாகக் கருதியன பிறவில்லை. அறம்முதனன்கும் அடைதலே நூற்பயன் வாழ்வின் பயன் எனத் தமிழ்ச் சான்றோர் கருதியுள்ளனர். முற் கூறியாங்கு அறமுடையோர் பொருளின்பங்களையெளிதில் அடை கின்றனர். (8); சிறப்பீனும் செல்வமும் ஈனும் (31); வாழ்நாள் வழியடைக்குங்கல் (38). அறத்தான் வருவதே இன்பம் (39). நன்றி புரிந்த பண்பு பாராட்டுமுலகு (994) முதலிய குறள்கள் மற்ற நலன்களை அறம் அருளுவது பற்றிப் பகர்கின்றன. இல் வாழ்க்கைக்குரிய பயன் அறமெனப்படுகின்றது.

அறத்தைப் பின் பற்ருதவர்கட்குறும் தீமைகளில் நன்றி கொன்றவர்க்குய்தியே யில்லை; நல்லார் (அறவோர்)

தொடர் கைவிடல் பல்லார் பகையினும் தீமை பயக்கும் எனவெல்லாம் இயம்பப்படுகின்றன.

அறப் பிரிவுகளில் நன்றி, ஒப்புரவு, அருள், அன்பு முதலிய அறச்செயல்கள் முதலிடம் பெறுகின்றன. வாய்மையினல்லபிற ஒப்புரவின் நல்லபிற இல்லை யென்கிறார் வள்ளுவர். நன்றியறிவாகிய அறம் என்றும் மறக்கப்படலாகாதெனச் செய்ந்நன்றியறிதல் அதிகாரத்துட் கூறுகிறார். பிறர் செய்த நன்றுகள் எல்லா அறமுமாகலின் அதனை மறத்தல் அறத்தினையே மறந்ததாகும். ஒப்புரவு உலக நன்மை, மிகப்பெரிது. அதனை மறத்தலாகாது. வாய்மை (சத்தியம்) அஹிம்சை (இன்னாசெய்யாமை) நெறிகள் இந்திய வாழ்க்கைக்குரிய வழிகாட்டிகள். ஒன்றாக நல்லது கொல்லாமை என்ற குறளைக் காண்க. வாய்மை சொல்லறம் கொல்லாமை செயலறம். பொருளை ஈட்டு முறையிலும் அறம் வேண்டுமென்பதற்காக அழக்கொண்டவெல்லாம் அழப்போமென்கிறார். பொருள் இவ்வுலகத்திற்குரித்தாகலின் அதனில் அறம் இவ்வுலக வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதது. அருள் வடிவே அறவடிவம். இதனை அந்தணர் என்போர் அறவோர் என்ற குறள் எடுத்துக்கூறும்.

தீமையும் இன்னாசெய்தலும் அறத்திற்கு மறுதலைகள். அவை இம்சை நெறிகள். பிறர் நாணத்தக்கதனைத் தான் நாணவேண்டும் என்கிறார். பிறர்க்கின்னாதவற்றைச் செய்தவனுக்குரிய கேட்டினை அறமே சூழுமாம். காயுமே அன்பிலதனை அறம் என்பதும் அதுவேயாகும்.

அருளாதான் செய்யுமறம் என்றவிடத்தில் அருளும் அறமும் எவ்வாறிணைந்தன பிணைந்தனவென எடுத்துக்காட்டுகின்றார்.

அறங்கூறான் அல்லவை செய்தலினும் ஒருவன் புறங்கூறானென்றலினிது. பொய்யாமை போலப் புறங்கூறாமையும் சொல்லறமாம். பிறன்மனை நயத்தலும் பெண்வழிச் சேறலும் அறத்திற்கெதிரென வரையறுக்கப்படுகின்றன. இவை செய்தக்க இவை செய்தக்கவல்ல என அறுதியிடல் எனவாகும்.

பெண்ணேவல் செய்பவன் தான் நினைக்கும் அறங்களையெல்லாம் செய்யமுடிவதில்லை. பிறன்மனை நயக்குங்கால் இருவரும் அறத்தினின்றும் வழுவுகின்றனர்.

மற்றபடி அறத்துப்பால் 38 அதிகாரங்களில் பாயிரம் நான்கும் ஊழ் ஒன்றும் தவிர்த்த 33 அதிகாரங்களை இல்லறவியல் துறவறவியல் என்றே பகுக்கின்றார். இவை யாவும் பொதுவாக அறத்தைப் பற்றிப் பேசுவனவே. முன்னர் இவ்வாராய்ச்சியில் கண்டனபோக அடக்கமுடைமை முதலிய மற்ற தலைப்புகளும் அறத்தின்பாற்படுவனவாகும்.

வான் சிறப்பு, அறவளர்ச்சிக்கு உலகில் மண் செழுமையும் மழை வளமும் மிகவும் இன்றியமையாவெனக் காட்டும். விருந் தோம்பல் ஓர் அறம். இதனில் விருந்தோம்புவோர் உண்போர் ஆகிய இருவரிடமும் அறவுணர்ச்சி தூண்டப்படுகிறது. வாழ்க் கைத் துணையும் மக்கட்பேறும் அற வளர்ச்சிக்கடிப்படையாவன. இல்லறத்தில் துணையுடன் இருந்தறஞ்செயல் ஒன்று; துணை யின்றித் தனித்துநின்று தவமியற்றும் துறவறம் ஒன்று, இரண்டும் ஒன்றற்கொன்று துணை. துறவறத்திலும் இல்லறம் சிறிது வலிமையும் அருமையுமுடைத்து. பொறையுடைமையும் பயனில சொல்லாமையும், ஈகையும், புகழும் இல்லறத்திற்குரிய அறப் பிரிவுகளுட் பல. புலால் மறுத்தல்; தவம்; கள்ளாமை; நிலையாமை; துறவு; மெய்யுணர்வு; அவாவறுத்தல் முதலியன துறவறத்திற்குரிய அறப் பிரிவுகளுட் பல. இவை இல்லறம் துறவறம் ஆகிய இரு பிரிவுகளுட்பட்ட அறம் வளர்தற்குத் துணையாவன. மெய்யுணர்வு அதிகாரத்தால் அறம் மெய்யுணர்ந்த ஞானிகளால் வரையறுக்கப் படுவதெனத் தெரிகின்றது. நிலையாமை; துறவு; தவம் ஆகியவற்றால் அறம் துறந்த ஞானி களால் உலகில் காக்கப் படுவது ஆக்கப்படுவது எனத் தெரிகின்றது.

அறத்தைப் பற்றிய கருத்துக்களை வள்ளுவர் கீழ்க்கண்டவாறு தொகுக்கிறார்:

## பொருளடைவு

### அறவியல்பு:

அறமாவது ஒருவன் தன் மனத்தின் கண் தீயன சிந்திக்கும் குற்றமில்லாதவனா யிருத்தலே யாகும் (34). பொறாமை, ஆசை, வெகுளி, இன்னாச் சொல் ஆகிய நான்கினையும் கடிந்து இடையறாமல் நடப்பதாகும் (35). அறம் இறைவனது வடிவமாகக் கூறப்படும் (8).

**வளருமுறை :**

அறம் எப்பொழுதும் நினைவிலிருக்கத் தக்கதாகும்; மறந்தால் மிக்க கேட்டினைத்தருவது (32). பொருளளவிற்கும் யாக்கையளவிற்கு மேற்ப இடைவிடாமல் மனம் சொல் செயல் என்ற எல்லாவகையாலும் செய்யத் தக்கதாம் (33). இறக்கும்போது செய்வோமெனக் கருதாமல் நாடோறும் செய்தற்குரியதாகும் (36). செய்யாது கழியும் நாள் ஏற்படாமல் எல்லா நாட்களிலும் செய்யத்தக்கது (38). அறமே ஒருவற்குச் செய்தற்குரியதாம் (40). இணையற்ற தாகிய அறமாவது கொல்லாமை அதற்கடுத்ததாக நல்லது பொய்யாமை (323). வறுமையின் கொடுமையை அது குறைத்துவிடும் (408). நல்ல அறநூல்கள் கேட்டற்குரியன வாகும், அறக்கருத்துக்கள் சிலவாயினும் மழைத்துளி போல வந்து நிறையும் (416). அறம் அறமல்லன ஆகியவற்றுள் அறத்தின் கண் பொருந்தியவன் வினைக்குரியனாகத் தேறப் படுவான் (511). அறமாகிய குணங்களெல்லாம் சான்றாண்மை மேற்கொண்டொழுகுவாரிடம் இயல்பாக இருப்பனவாம் (981). அறம் நல்லொழுக்கத்தினால் வளரும் இயல்புடையது (138). அறவினைகள், ஒருவன் நாவடங்கி விக்குள் எழுந்திறப் பதற்கு முன்னே செய்யத் தக்கனவாம் (335). பிறர் செய்த (நன்றி) அறமாகிய நன்மைகள் மறக்கத்தகாதனவாம். அறமல்லாதன அப்பொழுதே மறக்கத்தக்கனவாம் (108). அறம், பயனும் பண்பு மற்ற சொற்களைச் சொல்வானிடம் நில்லாது நீங்கிவிடும் (94). அறிவானது மனத்தைச் சென்ற படியெல்லாம் விடாமல் தீயதினீக்கிக், கொண்டு செலுத்து மிடம் அறமாகும் (422). அறம் செய்தலைப் பற்றிய கவலை நல்லோரிடம் எப்போதும் இருந்து கொண்டேயிருக்கும், கயவரிடம் அஃதில்லை (1072). அறம்பயவாத வினைகள் செய்யப்படலாகாவாம் (439). அறம் நன்மையுமினிமையு முடைய சொற்களால் உண்டாகும் (97). இன்சொல்லுடை யாரிடம் தங்கியிருக்கும், அது அச் சொற்களை அன்புடன் கலந்து வஞ்சனையற்றவாக்கிவிடும் (91). அரசனிடத்தில் வளரும் அறம் இன்சொற்களையுடைய தூதனால் ஆவதாம் (685). அஃதரசன் செங்கோலை முதலாகக் கொண்டு வளர்வது (543). அரசனால் தவறாமல் கைகொண்டொழுகத் தக்கதோர் குணமாகும் (384). அறம் நீதி நூல்களையும் அளவை நூல்களையும் அறிந்தோர் மனத்தில் என்றும் நிலைப்பதாகும் (288).

**அறப்பயன் :**

அறம் வீடுபேற்றையும் துறக்க முதலிய எல்லாச் செல்வங்களையும் தரும் (31). ஒருவன் இறக்கும் காலத்தும் அவற்கு அழிவில்லாத துணை (36). யாக்கையோடு ஒருவன் கூடுவதாகிய பிறவி வரும் வழியை அடைக்குங் கல்லாம் (38). அறச்செயல்களாலேயே இன்பமும் புகழு முண்டாகும் (39). அறம், தன்னை விரும்பியவரது பண்பினை உலகம் கொண்டாடச்செய்யும் (994). கருச் சிதைத்தல் ஆன்முலையறுத்தல் என அறங்கள் சிதைக்கப் பட்டாலும் ஒருகாற் பிழையுண்டு, நன்றி சிதைத்தவர்க்குப் பிழைப்பில்லை (110). அறம் உடையானது வறுமையினை உலகம் தாழ்வாகக் கொள்ளாது (117). அழக்கொண்ட வெல்லாம் தாமும் அழப்போகும், அறத்தால் வந்த நல்லவை இழப்பினும் பின்பு வந்து பயன்கொடுக்கும் (659). மேலோர் மெய்யாகக் கண்டவற்றுள் வாய்மையிலும் சிறந்த பிற அறமில்லை (300). ஒப்புரவினும் சிறந்த அறம் தேவ ருலகத்தும் இவ்வுலகத்தும் இல்லை (213). அறம் உடையாரது தொடர்பினைக் கைவிட்டால் அது பலரோடு பகை கொள்ளுதலினும் தீங்கு பயக்கும் (450). அறம்; மற்ற பொருளின் பங்களையடையச் செய்யும் (8). அறமென்பது, பிறவுயிர்களிடத்தெல்லாம் அருள் பூண்டொழுகுதலாகும் (30). அறம் இல்வாழ்க்கைக்குரிய பயனாகும் (45). அறத்தினையுணர்ந்தவர் பிறன் மனையாளை நயத்தலில்லை (141). மனையாளுக்கேவல் செய்பவன் அறவினை செய்தல் என்பதில்லை (909).

**அறப் பிரிவுகள் :**

எல்லா அறங்களும் பொய்யாமை யொன்றினாலே யுண்டாகும் (296). தீமைக்கு நாணுதவனிடத்தில் அறம் வளர்தலின்றி நீங்கிவிடும் (1018). அறம் அன்பினையே தனக்குச் சார்பாகக்கொண்டு வளரும் (76). அறம் ஒரு தெய்வமாகக் கருதப்படும், அது அன்பில்லாத உயிர்களை வருத்தும் (77). சொல்லளவிலாவது ஒருவன் அறத்தைப் பற்றிக் கூறுதலும் நன்றாகும். ஒருவரைப் புறங்கூறாமை உயர்ந்த அறமாகும் (181). அறம் அமைச்சரால் அறிந்து

வளர்க்கப்படவேண்டியதாகும் (635). பிறர்க்கின்னுத வற்றைச் செய்தவர்க்கு அறமே ஒறுக்கும் கேட்டினைச் செய்யும் (204). அருளில்லாதவன் செய்யும் அறம் தானே யழிந்துவிடும் (249). அறம் வறுமையுள்ளவிடத்தே சார்தலில்லை (1047). அது, நூலாலும் உய்த்துணர்வாலும் அறியத்தக்கதாகும். அவ்வாறறிந்தாரது நட்பு அறத்தினை வளர்க்கும் (441). அறம், இல்லறம், துறவறம் என இருபாற்பட்டதாகும். அவற்றுள் சிறப்பித்துச் சொல்லப் படுவது இல்லறம், துறவறமும் பிறராற் பழிக்கப்படாதாயின் நல்லதாகும் (49). இல்லறம் துறவறத்திலும் வலிமை யுடையதாகும், தம்மையும் தாங்கிக்கொள்வதுடன் துறவறத்தினர்க்கும் உண்டியும் மருந்தும் உரையுளும் தருவோ ராகலின் அது வலிமையுற்றதென்பதாம் (48).

# 7. அறிவு

மனவளர்ச்சியைப்போலவே அறிவு வளர்ச்சியும் மனிதனுக்கே யுரிய தனிச் சிறப்பாகும். விலங்கொடு மக்களனையர் எனக் கல்விக்கு வள்ளுவர் கூறியதனையே அறிவுக்கும் பொருத்தலாம். 'அறம்' பற்றிய தலைப்பில் அறிவு பற்றியும் (வரையறை யுடையதென) கூறப்பட்டது. வள்ளுவர் அறிவினை உணர்வு அறிவு என்ற இரண்டு பெயர்களால் விவரிக்கிறார். அறிவுடைமை கல்விக்கடுத்துப் பொருட்பாலில் பேசப்படுகிறது. மெய்யுணர்வு அறத்துப்பாலில் பேசப்படுகின்றது. இதனால் கல்வியின் வழியாக வளர்வது அறிவு; உள்நினைவின் வழியாக வளர்வது மெய்யுணர்வு என்பது புலப்படும். அறிவு (புலன்களின் வழியாக) வெளியிலிருந்து உள்ளே வருவது. மெய்யுணர்வு உள்ளிருந்து வளர்வது. நிலையாமையுணர்ந்து யோக முயற்சிக்குப்பின் தோன்றுவது மெய்யுணர்வு எனப் பரிமேலழகர் பலவிடங்களில் விவரிக்கிறார். புலம் என்பதே அறிவெனப் பொருள்படும். புலன்களால் அடைந்த அறிவினை எழுதிவைத்த 'நூலறிவினை' அறிவு எனவும் உள்ளறிவினை மெய்யுணர்வு எனவுங்கூடப் பிரிக்கலாம். இஃதொரு பொதுவான விளக்கம். மெய்யுணர்வினைத் தத்துவ நெறியில் நிற்போர்க்குரிய அறிவு மெய்ப்பொருளைப் பற்றிய (சமய) அறிவு எனவும் அறிவினை அரசியல் அறவியலுக்குரிய உலகிய லறிவு எனவும் கொள்ளலாம். இயற்கையறிவு மதிநுட்பம் என்பது நூலறிவின்றியே ஒருவர்க்கியல்பாயமைவது. மதிநுட்பம் நூலோடுடையார்க்கென இதனற்ருன் கூறுகிருர். உண்மை யறிவுக் கெதிரானதைப் புல்லறிவு எனவும் வேருனதும் தரங் குறைந்ததும் மயக்கமுடையதுமாகிய அறிவினைப் பேதைமை எனவும் குறள் குறிப்பிடுகின்றது.

அறிவினை 'அற்றம் காக்கும் கருவி' என்கின்ருர் ஆசிரியர். அதாவது இறுதி வாராமல் நீண்டகாலம் வாழவும் நீண்டபுகழைச் செய்யவும் வல்லது என்பது பொருள். உலகில் வாழ்வாங்கு வாழ வழிவகுப்பது உலகத்தோடொட்ட வொழுகல் என்ற

குறளால் அறிவிக்கப்படும். தக்க இன்ன தகாத இன்ன என ஒக்கவுணரும் உணர்வு எனக் கம்பர் அறிவினைப்பற்றி விளக்குகிறார். நல்லதும் தீயதும் நாடி நலம்புரிதலே அறிவு. மக்கள் உடலிற்பிறந்தோர் சிறப்பென்னும் செம்பொருள் காட்சியை யுணரவேண்டும். உலகத்தில் சான்றோர் சென்ற நெறியிற் செல்வதே அறிவு. தீமைக்கு அஞ்சி எதிரில்வரும் இடை யூறுகளையும் நலன்களையும் முன்னறிந்து வாழும் வாழ்க்கை அறிவுடை வாழ்க்கை, திரிகரணத் தூய்மையுடையராய் ஆக்க முடைய செயல்களையே செய்து உலகில் வாழும் மற்று மனித இனத்திற்கு நலனே நினைந்து வாழ்தலே அறிவென்பதனை 'அறிவிலார் குறைகுவ துண்டோ' என்ற தொடரே எடுத்தியம்பும்.

அறிவின் இயல்புகளாக வள்ளுவர் கூறியனவற்றுள் அது இறுதிவராமற் காப்பது; நன்மையின் கண்ணே செலுத்துவது; ஒழுக்கத்தை உயர்த்துவது என்பன முதன்மையாவன. உயிருடை யார் எய்தாவினை யில்லையாகலின் மனிதனுக்கு எதிர்பாராமலும் இடையிலும் இறுதி வாராமற் காத்தலென்பது ஒரு தனித்திறன். அத்திறன் விலங்கிற்குக் குறைவு. மனிதற்கறிவொன்றிலேயே அஃதாகும். பாதுகாப்பு மருத்துவம் ஆகியவற்றின் வளர்ச்சியால் அஃதாவதெனில் அவ்வளர்ச்சிக்கும் அறிவே துணை. இறுதி வாராமற் காத்தலினும் வாழ்தல் மிகமிக இன்றியமையாததாம். வாழ்க்கை முழுவதும் நன்மை தீமைகளின் நிறைவு. நல்லொழுக்கத் திலாவது வாழ்க்கை. இவற்றாற்றான் நாம் எண்ணியது முடிதலும் மனவின்பமும் உள்ளன. ஆகவே நன்னெறியையும் நல்லொழுக்கத்தையும் தரும் அறிவு விரும்பத்தக்காதாம். திருக்குறள் எங்கும் வாய்மை முதலிய நன்மைகளையாக்குதல் அழுக்காறு முதலிய தீமைகளைப்(போக்குதல்) பற்றியே பேசுகிறது. இல்லறத்தில் ஆண், பெண், துறவிகள், அரசன் ஆகியோர் ஒழுக்கங்களைப் பற்றியே மிகுதியும் ஆசிரியர் பேசுகிறார். முக்காலமும் எண்ணிச் செயல்புரியும் அறிவு மனிதர்க்குரியது. 'அறிவுடையாராவதறிவார்' என்கையில் பின்வரக்கடவனவற்றை முன்னறிந்து வாழ்தற்கும் இறுதி வாராமற்காத்தற்கும் அறிவுரிய தென்பதனை ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார். இந்நிலையில் 'அஞ்சப்படும் பழிபாவங்கட்கு அஞ்சுதல் ஒழுக்கமேம்பாட்டிற்கும் வாழ்வுமேம்பாட்டிற்கும் இன்றியமையாததாம்.

உலகத்தை நட்பாக்குவது அறிவு; பிறவுயிர்களின் துன்பத்தைத் தன்னதாகக்கருதுவது அறிவு என்ற இருகோட்பாடுகளும் அறிவைப்பற்றியவற்றுள் மிகவுயர்ந்தன. மனிதவின முழுவதும் ஒன்ருக வாழ்வதற்கன்பும் அவ்வழியில் வரும் துன்பங்களைத் தாங்குதலில் அந்நட்பின் நிலைமையும் காணப்படும். மலர்தலும் கூம்பலும் இல்லது என்பதில் நட்பின் கூம்பலும் மலர்தலும் என்ற உரையாசிரியர்களின் விளக்கத்துடன் அவருள் வேண்டியோர் வேண்டாதோர் எனவும் அவர் இன்பமும் துன்பமும் கண்டுமுறையே கூம்பலும் மலர்தலும் எனவுங்கூடக் கொள்ளலாம். பிறர் துன்பங்கண்டு உலகில் பலர் மகிழ்வர் (மலர்வர்) அஃதறிவுக்கு முரணனது. மேலும் தீமை செய்தார்க்கும் நன்மை செய்தலே வாலறிவெனப்படும்.

செயற்கையறிந்தக்கடைத்தும் என்பதில் நூல்களைக் கற்றலால் (படித்தலால்) அறிவுவளர்கிறதென்பது தெரியும். கற்றனைத்தூறும் அறிவு, பலகாலங்களிலும் ஆன்ருேர்கண்ட அனுபவங்களையும் உணர்ந்தவற்றையும் எழுதியனவே நூல்கள். இந்தக்காலத்துக்காணும் புதியனவற்றையும் நாம் உணர்ந்தன வற்றையும் எழுதிவைக்கும் நூல்களும் பெருகவேண்டும்; முன்னர் படித்த படிக்காத உலகத்துமக்கள் இயல்பையறியும் அறிவு வேண்டும். நாம் கூறுவனவற்றை மிக்க எளியவாயும் பிறர்கூறுவன எவ்வளவு அரியவாயினும் அவற்றைநாம் அறிதல் மிக்க எளிய வாயும் இருக்கவேண்டும்.

பகைவரிடத்திருந்து அன்பு மொழிகள்வரும். உயர்ந்தோரிடம் தாழ்ந்த சொற்கள் வரும். இடத்தைப்பாராது பொருளைப்பார்த்து உண்மையை அறியும் அறிவு வேண்டும். அறிவுடையோர் செய்யும் ஒவ்வோர்செயலிலும் மிக்க இன்பத்தைக் கருதி (இருக்கிற இன்பத்தையும்) ஆக்கங்கருதி முதலையும் இழக்கும் செயல்களைச் செய்யாமை வேண்டுமென்கிருர்.

உலகமக்களுள் அறிவு வெளிப்பட்டு நிற்குமிடங்களாகச் சிலவற்றைக் குறிக்கலாம். அங்கெல்லாம் அறிவில்லாவிடில் உலகம் இயங்காது என்பதுகருத்து. ஒவ்வொருநாளும் உலக நடைமுறைக்கு அவர்களுடைய அறிவின்றியமையாது. உலகை யெல்லாம் படைத்து நடத்தும் இறைவனறிவு 'மெய்யுணர்வு' எனப்படுகின்றது. பொய்தீரொழுக்க நெறியினையுடைய

மக்கட்கும் மெய்யுணர்வு வேண்டும். அறிவதையறியுமறிவு மக்கட்கு வேண்டும். அறியவேண்டாததையறிவோர் பலராகலின் இவ்வாறு கூறினர். அறிவதை அறியாவிடில் 'மக்கள்' ஆகார் என்பதும் இதன் கருத்து. ஈகை முதலியவற்றுடன் கூடிய அறிவு அரசர்க்கு வேண்டும். அறிவுடைய மக்கட்கூட்டத்தை யாள்பவனுக்கு அறிவின்றியமையாதது. அரசனிடம் வினைசெய்வார்க் கறிவு பலவாறாக வற்புறுத்தப் பெறுகின்றது. வினைசெய்வார் கண்ணது உலகு. அவரிடம் அறிவில்லையானால் உலகில் அநீதியும் குழப்பமுமேயாகும். எடுத்ததை முடிக்கும் அறிவு அவர்க்கு வேண்டும். தூதரும் அரசனைச் சார்ந்தவர். அவர்க்குச் சொல் வன்மையுடன்கூடிய அறிவுவேண்டும். இவர்கட்கு நண்பரே நாட்டில் அனைவரும் எனவே நண்பரிடம் நீதியும் உலகியலறிவும் வேண்டுமென்கிறார்.

அறிவு வளர்ச்சிக்குக் கல்வி வேண்டும், மணற்கேணிபோல அஃதூறும் என்கிறார், எண்ணத்தின் தூய்மையும் முடிவுமே அறிவு, நினைக்க நினைக்க எண்ணமூறுவதுபோல அறிவும் கற்க ஊறும். இயற்கையறிவு கல்வியின்றியும் எண்ணத்தினால் ஊறும். ஆனால் கற்றோரிடம் கேட்டலும் நூல்களைக் கற்றலும் அதனை மேலும் வளர்த்து முழுமையடையச் செய்யும். உலகவறிஞர் அனுபவங்களை யெல்லாம் ஒருவரே நினைத்தடைவது இயலாது. அவர்தம் நூல்களும் உரைகளுமே அவ்வறிவினைத் தருவன. அவ்வறிவே நிலையானது அறிவிற்கும் ஊழுக்கும் அறிஞர்கள் தொடர்பு காட்டுகின்றனர். பிறக்கும்போதே அமைந்துகிடக்கும் இயல்பாய இயற்கையும் திறமையுமே ஊழ். அஃது ஒவ்வொருவரிடமும் வேறுபடுகின்றது. ஒரு மாணவன் சிறிது படித்தும் நல்ல தேர்ச்சியுடையனாகிறான். மற்றவன் எவ்வளவு கற்றாலும் தேர்ச்சி குறைவாகவே என்றுமிருக்கிறான். பணமுதலியவற்றாலும் அதனை மாற்ற முடிவதில்லை. அதனையே ஊழ் என்கின்றனர் உயர்ந்தோர். கற்பதிலும் பட்டுணரும் அனுபவம் அறிவை மிகவும் வளர்க்கின்றது. மனத்தில் தைக்கச் செய்வது பட்டுணர்வு. வறுமையுறின் நாட்டில் கல்வி வளர்வதில்லை. அறிவுக்கும் ஒழுக்கத்திற்கும் தொடர்புண்டு. ஒழுகல் கல்லாதார் அறிவிலாதார். கள் முதலிய தீயொழுக்கங்கள் அறிவினை மயக்கிவிடும். தான் கற்றதைப் பிறர்க்கு எடுத்துச் சொல்லுதலினால் (நூலெழுதலால்) அறிவு வளரும். அருள், வீடுபேறு

முதலிய உயர்ந்த பொருள்களைப்பற்றி ஆராயும்போது அறிவு மிகுதியாக வளர்கின்றது. அதுவே மெய்யுணர்வு எனப்படுவது.

அறிவு, தன்னைவிட உலக வுயிர்களெல்லாம் இன்பமடைய உலகம் வாழ வளர்வதாகும். அதனுற்ருன் பிறவுயிர்கட் குற்ற துன்பத்தைத் தனக்குற்றதாகக் கருதுவதனை அறிவென்கிருர் ஆசிரியர். உயிர்கட்கெல்லாம் அன்பு செய்தலும் ஒப்புரவு செய்தலும் அறிவு. பிறர்க்கின்ஞதவற்றையுணர்வதுடன் பகைவர்க்கும் தீங்கு நினையாதது. வெள்ளம்போல் துன்பமுறினும் அதனைத் தாங்குவதுடன் தன்னலத்திற்காக இழிவான செயல்களைச் செய்யமாட்டார். தன்னைப்பொறுத்தவரையில் அறிவுடையார் எவ்வளவு ஏழையாயினும் எல்லாமுடையராகக் கருதப்படுவார். பின்வருவதனை உணர்ந்துவாழ்வார். பொய், வரைவின்மகளிர் உறவு, புலாலுணவு பயனில்சொல் முதலிய கொடுவினைகளை என்றும் செய்யாமல் உயர்ந்த உயிரினை என்றும் தூய்மையுடையதாகவே வைத்திருக்கும். உலகில் மனிதரால் அறியப்படாதது செய்யப்படாதது ஒன்றுமில்லை என்னும்படி எதனையும் அறிந்துணரவல்லது அறிவாகும். வாழ்வினை நன்கு நடத்தற்குதவுவதாகலின் வினை செய்தலில் (ஒவ்வொரு நாட் செயலிலும்) மிகவும் துணை புரிவதாகும். உரனென்னும் தோட்டியான் ஓரைந்துங்காப்பதே துறவு, வீட்டு நெறி. கேள்வியறிவு, வீர முதலிய ஒன்பான் சுவைகளை யுணரவல்ல தென்பதனுல் அறிவு கலைகட்குரியது; ஆயகலைகளையெல்லாம் கரைகாண்டலும் வளர்த்தலும் அறிவாகும். அறிவு அறவியலுக்கு மட்டுந்தானென்பதில்லை, அரசியலுக்கும் உரியது. அரசியலில் நம்பிக்கையுடன் 'கொள்ளப்படுபவர்' அறிவுடையாரவர்.

புலன்களின் வழியாக வளர்வது புலம் (அறிவு). புலமுடையோர் புலவர். பெரிதும் கண், காது, முகம் முதலியவற்றிலிருந்து வரும் குறிப்புக்களைக் கொண்டு அறிந்துயர்வது அறிவு. குறிப்புணர்வு குறிப்பறிவு என்பனையே குறிப்பறிதலில் வள்ளுவர் விவரிக்கிருர். புலனுணர்வு மனநலத்தினுலும் இனநலத்தினுலும் உண்டாகும். சிற்றினஞ்சேராமையில் இதனை நன்கு விளக்குகிருர் ஆசிரியர். பெரும்பாலும் உலகியலறிவு முழுவதும் குறிப்புணர்வால் ஏற்படுவதாம். பிறர் உணர்ச்சிகளை விரைவாக அறிவது குறிப்புணர்வு. அறிவு விரைவாக வளர்வதற்குக் குறிப்பறிவுதவும். சிறப்பாகப் பிறர் பேசும் சொற்களிலுள்ள உள்ளுணர்ச்சிகளை அறியவேண்டுவது அறிவு.

மெய்யுணர்வென்பது உண்மைப் பொருளாகிய செம்பொருளை (கடவுட்பொருளை) உணர்த்துவதாகும்; நிலையாமையுணர்ச்சி அதற்கு முதலாகும். உலகில் எல்லாம் செம்பொருளின் வடிவ மெனவும் எவ்வடிவாய பொருளிலும் இறுதியாக நிற்பது செம்பொருளெனவும் உணர்வது மெய்யுணர்வாகும்.

அவ்வுணர்வு புலனுணர்வினின்றும் வேறனது. காமவெகுளி மயக்கம் ஆகிய மூன்றும் மெய்யுணர்வுக்கு மிகவும் தடையாகும். அவற்றுள் அவிச்சையாகிய மயக்கம் மிகமிகக் கடியத்தக்க தாகும். குருவின்வழி உண்மைப் பொருளைக் காண்டலும் மெய் யுணர்வினை அடைதலும் என்பது ஒரு நன்னெறி. ஐயவுணர்வி லிருந்து (கடவுளும், மறுபிறப்பும் உண்டோ என்பது) நீங்குவ தென்றமையால் உலகில் உயர்ந்த தூய கோட்பாடுகட்கெல்லாம் இருப்பிடம் மெய்யுணர்வெனலாகும். நிலையாமையுணர்வென்பது இளமை, யாக்கை, செல்வநிலையாமையுணர்வுகள். ஐயம், திரிபு, அறியாமை நீங்கி வெளிப்படுவது மெய்யுணர்வாகும். இதனை 'விபரீதவுணர்வு' நீங்கிய உணர்வு நிலையென்பர் (பரிமேலழகர்).

அறிவென்பது மனித அறிவுதான். அதற்கெதிரானதை அல்லது அஃதின்மையைப் புல்லறிவெனவும் பேதைமையெனவும் இரண்டாகப் பிரிப்பர் வள்ளுவர். அறிவுக்கெதிரானவையெல்லாம் புல்லறிவாம். அறிவு கனமுடையதாகலின் அஃதிருக்குமிடத்தில் அடக்கமிருக்கும். அறிவிலி தான் எல்லாமறிந்தவனாக மயங்கியும் செருக்கியும் திரிவான். மேற்கூறியபடி உலகத்தாருண்டென்பதில் லென்பான் அறிவு அலகையின் கைச் செல்வம். அறிவின்மை வறுமையுள் வறுமை, புல்லறிவு கலக்கமுடையதெனவே நீதிப் பொருளையும் உண்மைப் பொருளையும் அறியாது. அறிவில்லார் உலகையெல்லாம் பகையாக்கிக்கொள்ளுதலால் பகைவரும் செய்யவியலாத் தீமைகளைத் தாமே செய்துகொள்வர். தானு முணரான் சொல்லியும் கேளான் என்பவன் புல்லறிவாளனே யாவான்.

மயக்கத்தை இருவகைப் படுத்தி இரண்டதிகாரமாக்கினர் ஆசிரியர் என்கிறார் பரிமேலழகர். அவற்றுள் பேதைமை யென்பது யாதுமறியாமை புல்லறிவு (Ignorance). அறியாதிருந்தும் எல்லாம் அறிந்ததாகத் தருக்குதல். பேதமை (Folly). மனிதர்க்குரிய குறைகள் எல்லாவற்றினும் பெரியது. குடிப்பிறப்பு கல்வி, ஒழுக்க

முதலியவற்றைப் பேணுமையாம். ஒழுக்கமல்லாமையுடன் பாவங்களைத் தேடுதலே அவன் பேரொழுக்கமாய்விடும். குடிகாரனைப்போல நடந்து கொள்வான் பேதை. எடுத்தவினை களைக் கெடுப்பான். அவன் தூய்மையற்றவன் எனச் சுருக்கமாகக் கூறுகிருர் வள்ளுவர் (840). வினையில் சோம்பலுடையவன்; நட்பிற்குரிமையில்லாதவன். பிறன்மனையாளை விரும்புவான்; பெண்வழிச் சேர்ந்தொழுகுவான் பேதையென்கிருர் ஆசிரியர்.

**இனி அறிவுபற்றிய பொருளடைவு :**

**அறிவின் இயல்பு :**

அறிவு ஒருவற்கு இறுதி வாராமல் காக்கும் கருவி; பகைவரால் அழிக்கலாகாத அரண் (421). மனத்தைப் புலத்தின் வழிச் சென்றபடியே செல்ல விடாமல் தீமையினின்றும் நீக்கி நல்லதன்கண் செலுத்துவது (422). நண்பர் பகைவர் உயர்ந்தோர் தாழ்ந்தோர் முதலிய பலர் வாயிலிருந்தும் வெளிப்படும் பல வகைப்பட்ட பொருள்களிலும் மெய்யாலே பயனைக் காணவல்லது (423). அரிய பொருள்களையும் எளிய வாகப் பிறர் மனங் கொளச் சொல்லி பிறர் சொல்வன அறிதற்கரியவாயினும் அவற்றை நன்குணரவல்லது (424). உலகத்தை நட்பாக்குவது, அது நீர்ப் பூப்போல முன் மலர் தலும் பின் கூம்புதலுமின்றி நிலத்தில் மரப் பூப்போல ஒரு நிலையாக இருப்பது (425). உலகில் உயர்ந்தோர் ஒழுகிய நெறியில் ஒழுகுவது (426) ஒருவற்கு வரக்கடவன வற்றை முன்னெண்ணி அறியவல்லதாம் (427). அஞ்சப்படும் பழிபாவம் கேடு முதலியவற்றிற்கஞ்சுதலாம் (428) அறிவிற்குப் பயன் ஒழுக்கமாகும் (140). நூலறிவு உலகத்தியற்கை என்னுமிரண்டனுள் நூலறிவிருந்த போதிலும் உலகியற்கை யறிதலே அறிவு (63). அறிவு, பயனற்ற சொற்களைச் சொல்ல இடந்தராது (198); தமக்குத் தீமை செய்தார்க்கும் திரும்பத் தீமை செய்யாதது (203). பின்வரும் பெரும் பயனைக் கருதி முதலையே இழக்கவரும் வினைகளைச் செய்யார் அறிவு டையார் (463).

**அறிவு வெளிப்பட்டு நிற்குமிடங்கள் :**

வாலறிவன் இறைவன். மெய்யறிவென்பது இறைவனுக்குரிய இயல்பாய குணமாகும் (2). அறிய

வேண்டுமவற்றை அறியும் அறிவு மக்களிடத்தில் இருப்ப தாகும் (*61*). ஈகைமுதலியவற்றுடன் கூடிய அறிவும் அரசனிடத்தில் இடையறுமல் இருக்கத்தக்கதாகும் (*382*); அன்பு சொல்வன்மை யாகியவற்றுடன் கூடிய அறிவு தூதரிடத்தில் இருக்கத்தக்க வியல்பாகும் (*682*). நீதியையும் உலகியலையும் அறியும் அறிவு நட்பு கொள்வோரிடம் இருக்கத்தக்கதாகும் (*441*). அரசனல் வினை செய்தற்கெனத் தெளியப்பட்டானிடம் அறிவு நிலைபெற இருக்கவேண்டிய தொன்ருகும் (*513*). களவாகிய கார றிவாண்மை உயிர்களை அளத்தலென்னும் பெருமை யுடையாரிடம் இல்லை (*287*). அறிவு எடுத்த வினையை முடித்தற்குரியதாகும். அது வினைசெய்வாரிடம் வேண்டும் (*515*). வினையையும் அதற்குரியவலியையும் அறியும் அறிவு அரசர்க்கு வேண்டும் (*472*). பிரியேனென்ற தஞ் சொல்லையும் தலைவியின் பிரிவாற்ருமையையும் அறியும் அறிவு தலைவனிடத்துள்ளதாம் (*1153*).

**அறிவு வளர்ச்சி**

அறிவு மணற்கேணிபோலக் கற்குந்தொறும் உயர்வதாகும் (*396*). ஒருவன் சேரும் இனத்தின் இயல்புக் கேற்ப அமையும் (*452*). நூல்களானும் நுண்ணுணர் வானும் அறியவறிய, அறிவு முன்னிருந்த அறியாமையைக் காணவல்லதாகும் (*1110*). கல்லாதவனது அறிவு நிலை யுடையதன்மையின் அது அறிவுடையாரால் மதிக்கப் படாததாகும் (*404*). நுண்ணிய நூல்கள் பலவற்றை ஒருவன் கற்பினும் பேதைமைக்குரிய ஊழுள்ளவழி அந் நூலறிவு மிகாமல் பேதைமையுணர்வே மேற்படும் (*373*). உலகில் அறிவுயர்தற்காம் ஊழியல்பு செல்வமுயர்தற்காம் ஊழினும் வேருகும் எனவே அறிவு செல்வத்திற்குத் துணை யென்பதில்லை (*374*). அறிவு ஓதியுணரும் கல்வியினல் வளர்வதாகும்; அது செயற்கையறிவெனப்படும் (*834*). அறிவு கைப்பொருளாதற்கேற்ற ஊழ் வந்தவிடத்து விளக்கத்தையும் அப்பொருளிழத்தற்குரிய ஊழ் வந்த விடத்துப் பேதைமையையும் அடையும் (*372*). அறிவு ஒருவனிடம் பொருள் வறுமையுற்றவழி அழிந்துவிடும் (*532*). அறிவு தான் ஒவ்வொன்றையும் பட்டு உணரும் போதே வளர்வதாம் (*1140*).

கள்ளுண்டல் முதலிய தீமைகளால் அறிவு மயங்கி விடுகின்றது (925). அறிவுடையோர் சொல்வதனை யிகழாமல் அறிதலாலும் தானே நினைத்தலாலும் அறிவு வளரும் (638). இயற்கைப் புலனுணர்வு மாத்திரமாய அறிவு மாந்தர்க்குத் தம் மனங் காரணமாக உண்டாகும் (453). ஒருவரதறிவு பிறருக்கு விரித்துரைக்கப்படும் போது இருவரதறிவையும் விளங்கச் செய்யும் (650). அறிவு, பொருள்களை உணரும் வழிப் பிறழ உணர்ந்து விடுதலுமுண்டு, நுண்ணிதாக ஆராய்வதால் வளரும் அறிவு அதனை மாற்றிவிடும் (417). மாலைக் காலத்தில் பிரிந்து வருத்த முற்ற காதலரது மதி மருட்சியடைதல் கூடும் (1229). அறிவு வீடு பேறு முதலிய அரிய பயன்களைப் பற்றி ஆராயக் கூடியதாகும் (198). அஃது அருளாகிய மெய்ப் பொருளைப் பற்றியும் ஆராயவல்லது (414).

**அறிவின் பயன் :**

மக்களது இயல்பாகிய அறிவோடு கூடிய கல்வியறிவு உலகவுயிர்கட் கெல்லாம் இன்பத்தைத் தரும் (68). வீடு பேற்றிற்குக் காரணமாகிய செம்பொருளைக் காண வல்லது (358). அருளோடு கூடிய பொருள்களையே ஆராயுமது பொருளையே விரும்பும் வரைவின் மகளிர் போல்வாரது புல்லிய நலத்தை விரும்பாது (914). அறிவுடையார் அன்பு அறத்திற்கு மட்டுமின்றி மறத்திற்கும் துணையென அறியக் கூடியராவர் (76). அறிவுடையார் எல்லா வற்றையும் படைக்கவுங் காக்கவும் கூடிய அறிவினை யுடையராகலின் தாம் ஒன்றுமில ரேனும் எல்லா வற்றையும் உடையரே யாவர்; அறிவில்லாதவர் எல்லா முடையரேனும் அவ்வறி வின்மையின் ஒன்றுமில்லாதவரே யாவர் (430). வரக் கடவனவாகிய நடுங்கத் தக்க நோய்களை முன்னறிந்து காக்க வல்லது அறிவாகும் (429). அறிவு நுண்ணிதாக எல்லா நூல்களிலும் செய்வதாகும், அது பொருளை விரும்பிப் பிறரிடம் அறிவொடு படாத செயல்களைச் செய்யாது (175). அறிவு பெரிதென்னும்படி வளர்வதாகும். அஃது ஒப்புரவாளனது செல்வத்தைப் பாழ் போகாமல் நெடிது நின்று எல்லார்க்கும் வேண்டுவன தப்பாதுதவச் செய்யும் (215).

அறிவு பிறவுயிர்க்கு வருந் துன்பத்தைத் தனக்குற்ற தாகக் கருதிக் குறிக்கொண்டு காத்தலாகும் (315). வினை செய்தற்கு முன்பு அதற்குரிய வலி, இடம், காலம் முதலியவற்றை அறியுமறிவு வேண்டும் (618). அறிவு, இடும்பை வெள்ளம்போல் கரையின்றி வரினும் அஃதொரு கோட்பாடேயன்றி உண்மையன்று எனவுணர்தலால் அதனைக் கெடுத்துவிடும் (622). நிரம்பிய அறிவானது இடையறாத கருமச் செயலையும் அதனால் குடியையும் உயர்த்தும் (1022). அறிவு பகைமையுற்ற காலத்தும் எதிரிக்கொரு தீங்கினையும் உண்டாக்காது (816). அன்புடைமையன்றி அறிவுடைமையே வினைக்குரிய பண்பாக அரசனாற்றேரப்படும் (507). இன்பம், ஈதலினால் உண்டாகுமென்றதறியும் அறிவாகும் (228). அது பொய்மைக்கு மாறானதாகும். எனவே அது பொய்மையை விலக்குவதாம் (293). ஒரு பொருளைச் சொல்லுமுன் அது பற்றி நன்கறியு மறிவு வேண்டும், அவ்வறிவும் வறியோரிட மிருப்பின் மதிக்கற்பாட்டினைத் தரும் (1046). பிறர்க் கின்னாதன இவையென்றுணரும் அறிவுஅவர்க்குத்தீமையை யெண்ணாது (316). அறிவு அகன்ற நூற் பொருள்களை யுட்கொண்டு அவற்றின் மெய்மையை உணரவல்லதாம் (716). கேள்வியினால் வரும் வீரம் அச்சமுதலிய ஒன்பது வகைச் சுவைகளை யுணரவல்லது அறிவாகும். அது வாழ்விற் கின்றியமையாத உயிர்போன்றதாம் (420). அவையின் முன் ஒன்று சொல்லுமுன் அதுபற்றி நன்குணர்ந்தறியு மறிவு வேண்டும் (712). அறிவு, புலாலைப் பிறிதோருயிரின் புண்ணென உணரவல்லதாகும் அவ்வறிவு அதனை யுண்ணமல் ஒருவனைத் தடுக்கும் (257) உலகில் நிலைத்த பொருள்கள் இன்னவென அறியவல்லதாகும்; மழை உலகவுயிர்களை இடையறாமல் நிறுத்தி வருதலால் அதனை அமிழ்தமென்றுணர்தல் அறிவாகும் (11). அறிவு பொறிகளாகிய யானைகள் புலன்களின்மேற் செல்லாமல் காக்கும் அங்குசமாகும். அவ்வறிவு வீட்டு நிலத்திற்கோர் காரணமாகும் (24). அறிவுடையார் ஒழுக்கத்தினின்றும் தவறமாட்டார் (136). அறிவென்பது ஊக்கமுடைமை யாகும். அவ்வறிவிலார் உணர்ச்சியற்ற மரமெனப்படுவர் (600). ஐம்புலன்களையும் வென்ற குற்றமற்ற அறிவினை

யுடையவர் தமது வறுமையைப் போக்கிக் கொள்ளுதற் காகப் பிறர் பொருளை விரும்பமாட்டார். மயக்கந்தீர்ந்த அறிவினை யுடையவர் அறம் பொருளின்ப முதலியவற்றி னீங்கிய பயனற்ற சொற்களை மறந்தும் சொல்லார் (*199*). செய்யத்தக்க வற்றை யறியும் அறிவுடையார் செல்வம் சுருங்கிய காலத்தும் தமது ஒப்புரவினின்றும் தளர மாட்டார் (*218*). துளக்கமற்ற அறிவினை யுடையார் துன்பம்வரினும் இழிவான செயல்களைச் செய்யமாட்டார் (*654*). அறிவுடையார் அரசனாற் கொள்ளப்பட்ட காரணத்தால் அவன் நெஞ்சிற் கொள்ளாதனவற்றைச் செய்யமாட்டார் (*699*).

**புலனுணர்வு**

மாந்தர்க்கு இயற்கையாய புலனுணர்வு மன நலத்தினால் உண்டாகும் (*453*). குறிப்பறிவென்பது பிறர் மனதிலுள்ளதை நிகழும் குறிப்புகளைக் கொண்டு ஐயமின்றித் துணிந்தறிதலாம். அவ்வறிவு ஒருவனை அவ் வாற்றலுடைய தெய்வங்களோ டொப்பாகும் (*712*). குறிப்பறிவு பொருள் நாடு (அல்லது கண்) முதலிய எவ்வுறுப்பினையுங் கொடுத்தும் கொள்ளத்தக்கதாகும் (*703*). குறிப்புணர்வு ஒருவற்குக் கண்ணே கருவியாகக் கொண்டு வளர்வதாம் (*705*). குறிப்புணர்வென்பது கண்ணினது வெறுத்தநோக்கம், உவந்தநோக்கம் முதலிய நோக்க வேறுபாடுகளை யறிதலாகும்; அது பிறரிடத்தில் நிகழும் பகையையும் கேண்மையையும் இவ்வாறு அறிந்துவிடும் (*709*).

அடிக்கடி கலந்து பழகும் பழக்கமன்று; ஆனால் ஒத்த உணர்ச்சியே இருவரிடை நட்பை வளர்க்கும் (*785*). தான் நோகத்தக்கவற்றை நட்பினர் தன்னிடம் செய்யின் அது பேதமை யெனவோ அன்றி உரிமையெனவோ உணரும் உணர்வு வேண்டப்படுவதாம் (*805*). கண்ணோட்ட மில்லாவிடில் கண்கள் புண்ணெமென உணரும் உணர்வு வேண்டப்படுவதாம் (*575*). வினையையும் அதனைச் செய்வானையும் ஆராய்கையில் அதற்குரிய காலத்தை யறியும் உணர்வு இன்றியமையாததாம் (*516*). நட்டார்

போன்று நல்லனவற்றைச் சொல்லினும் பகைவருடைய சொற்கள் நன்மை பயவா என்ற உணர்வு ஒருவர்க்கு வேண்டுவதாகும் (826). அகத்துறையில் உணர்தல் என்பது ஊடலுக்கும் புணர்தலுக்குமிடையே நிகழ்வ தாகும்; அது தலைவன் பிரிந்தமை காரணமாகத் தலைவி ஊடுகையில் தான் தவறிலன் என்பதனை அவட்கு உணர்த்துதலாம் (1109). பின் நிகழப்போவதனை உணர்வது அறிவாகும் பின்னால் தலைவன் பிரிதலை யுணராமல் முன்பு கண்கள் அவனை நோக்கிக் காமுற்றது அறியாமை என்பது தலைவி கருத்து (1172). எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அதன் மெய்ப்பொருள் காண்பதறிவு. காதலர் சிலபோது கூறுஞ் சொற்கள் கடியவாயினும் அவை யினியவே என்னும் உணர்வு வேண்டத்தக்கதாகும் (1096). தலைவனது பிரிவைத் தலைவி முன்னரே உணர்ந்த உணர்வு கழலும் வளைகளிடம் முன்னரே காணப்படுவதாம் (1277).

### இயற்கையறிவு :

இயற்கையாகிய மதி நன்மையான் மாட்சிமைப்பட்ட செயற்கையறிவுடையார் எல்லார்க்கும் பொதுவாகிய நலத்தினையுடைய விலைமகளிரது புல்லிய நலத்தைச் சேரமாட்டார் (915). இயற்கையாகிய நுண்ணறிவும் செயற்கையாகிய நூலறிவுமுடையவர் மாற்றாரால் எண்ணப்படும் எதிர்வினையெதனையும் அறிந்து வென்று விடுவார் (636).

### மெய்யுணர்வு :

மெய்ப்பொருளை மெய்ப்பொருளாகவும் அவையல்லாத வற்றைப் பொய்ப்பொருளெனவும் உணர்தலே மெய்யுணர்வு; மெய்யல்லாதவற்றை மெய்யாகவுணர்தல் விபரீதவுணர்வு (351). ஐம்புலனுணர்வுண்டாய வழியும் மெய்யுணர்வு இல்லாவழிப் பயனில்லை; மெய்யுணர்வு ஐம்புலனுணர்வுக் கப்பாற்பட்டது (354). எப்பொருள் எவ்வியல்பிற்றாய்த் தோன்றினும் அத் தோற்றத்தைக் காணமல் அதனிலுள்ள மெய்யாகிய பொருளைக் காண்பதே மெய்யுணர்வாம் (355). அவிச்சையினீங்கிய மெய்யுணர்வு பிறப்பினை நீக்கி

வீட்டினைத் தரும் (352). மறுபிறப்பும் கடவுளு முதலிய வுண்டோ இல்லையோ வென்னும் ஐயத்தினின்று நீங்கியது மெய்யுணர்வு; அது நிலவுலகத்திலும் வீட்டினை அண்மையிற் கொண்டுவரும் (353). மக்கட் பிறப்பில் உபதேச மொழிகளைத் தேசிகர்பாற் கேட்டபின் அடைதல் மெய் யுணர்வாம் (356). கேட்ட உபதேச மொழிப் பொருளை உள்ளம் அளவையானும் பொருந்து மாற்றானும் தெளிய வாராய்ந்து முதற் பொருளை யுணர்தலே மெய்யுணர்வாம் (357). பிறப்பிற்குக் காரணமாய அவிச்சை கெட வீட்டிற்கு நிமித்தமாய செம்பொருளைக் காண்பதே மெய்யுணர்வாம் (358). எல்லாவற்றிற்கும் சார்பாவது செம்பொருளேயென வுணர்தல் மெய்யுணர்வாம்; அதனால் பிறவிக்குரிய வினைப் பயன்கள் இல்லாமற்போகும் (359). விழைவு, வெறுப்பு, அவிச்சையாகிய குற்ற மூன்றனுடைய பெயருங்கூடக் கெடுதலே மெய்யுணர்வாம் (360). மெய்யுணர்வில்லாதவன் மெய்ப்பொருளைக் காண்டலில்லை (249). ஒரு பொழுதளவும் உடம்பு உயிரோடியைந்திருத்தலை அறியாமை மெய்யுணர்வின் மையாகும். அதன்மேலும் கோடிக்கும் பலவாய நினைவுகளை நினைத்தல் பெரியதோர் அறியாமையாம் (337). இளமை யாக்கை செல்வ முதலிய நிலையில்லாதவற்றை நிலையுடை யனவாக அறிதல் மெய்யுணர்வன்றாம் (331).

**அறிவின்மை: புல்லறிவு:**

அறிவின்மையே வறுமையுள் எல்லாம் கொடிய வறுமை யாகும் (841). இன்னாத அறிவுடையோர் உட்பகையை விரும்புவர், அவரறிவு கலக்க முடையதாதலின் அது நீதி நூற் பொருளை யறியமாட்டாது (857). அறிவில்லாதவன் மனமுவந்து பிறர்க்கொன்றைக் கொடுத்தலென்பதில்லை (842). அறிவில்லார் பகைவரும் தமக்குச் செய்யவியலாத் தீமைகளைத் தாமே செய்து கொள்வர் (843). அறிவில் லாதவன் அரியமறைப் பொருள்களை (உபதேசப் பொருளை) யெல்லாம் உட்கொள்ளாமையால் போக்கிவிடுவான் (847). அறியாமை சிறிதுமில்லாதவிடத்துப் பிறவி நோய் இல்லை யாம் (360). நீதியையறியும் அறிவின்மை ஒருவனை அச்சமும், பகைவர்க்கு எளிமையும் உடையனாக்கிவிடும் (869). ஆராய்ந் தறியும் அறிவின்மை ஒருவனை மாயம் பொருந்திய வரைவின்

மகளிரிடம் சேர்த்துப் பல துன்பத்தையும் உண்டாக்கும் (918). புல்லறிவென்பது தம்மைத் தாமே நல்லறிவுடைய மென மதிக்கும் மயக்கமாம் (844). புல்லறிவாளர் தாம் கல்லாதவற்றையும் கற்றதாக மேற்கொண்டொழுகுவர் (845). தங்கணிகழும் குற்றங்களை யறிந்து கடியாமையே புல்லறி வாம் (846). புல்லறிவாளன் தனக்குறுதியாயவற்றை அறி வுடையார் சொல்லவும் செய்யான்; தானுகவுமறியான்; அவன் இறக்குமளவும் இவ்வுலகிற்கொரு நோயாவான்(848). புல்லறிவாளன் தான் எல்லாம் அறிந்தவனுக மதிப்பவன்; தனக்கறிவிக்கவருபவரையெலாம் அறியாதவர்களாக்குபவன்; அவன் தானறிந்ததையே அறிவாகக் கொள்பவன் (849). அவன் உயர்ந்தோர் ஒப்பும் கடவுள், பிறப்பு, வினை முதலிய வற்றை இல்லையென மறுப்பவன்; அவன் உலகில் ஓர் அலகையெனக் கருதத் தக்கவன் (850).

**பேதைமை :**

பேதைமை குற்றங்கள் எல்லாவற்றிலும் மிக்கது; அஃது ஒருவற்குக் கேடு பயக்கும் (831). தனக்காகாத ஒழுக்கத்தின்கண் விருப்பஞ் செலுத்துதலாம் (832). பேதையின் தொழில்கள்: பழி பாவங்கட்கு நாணுமையும், செய்வன தவிர்வன பற்றி நாடாமையும், முறிந்த சொற் செயலுடைமையும் குடிப்பிறப்பு கல்வி ஒழுக்க முதலிய வற்றைப் பேணுமையுமாம் (833). பேதை, நூல்களை யோதியும் அதன் பயனையுணர்ந்தும் பிறர்க்கதனை யுணர்த் தியும் தானடங்கியொழுகாதவன் ஆவான் (834). அவன், பிறவிகளெல்லாம் தான் சென்றழுந்தும் நரகத்திற்குரிய வினைகளை ஒரு பிறப்பிலேயே செய்து கொள்வான் (835). அவன், ஒரு கருமத்தை மேற்கொள்ளின் அவ்வினையையுங் கெடுத்துத் தானும் தளை பூணும் (836). பேதைகள் பெருஞ் செல்வம் பெற்றுல் அயலாரை அதனுல் எல்லா நலன்களையும் பெறச்செய்து தமராயினர் உணவும் பெருமற் செய்து விடுவர் (837). தன் கையில் ஓர் உடைமை பெற்ற பேதை மதுவுண்டு மயங்கிய பித்தனைப் போல்வானுவன்; அதனுல் அவன் தலை தடுமாறுவான் (838). பிரிவு வந்தவழி இரு வர்க்குந் துன்பமில்லையாகலின் பேதையர் நட்பிற்கினிய ராவர் (839). சான்றோரவையின்கண் புகுந்த பேதை

அமளியில் வைத்த தூய்மையற்ற காலைப் போல, அவ் வவைக்கே இழிவினை உண்டாக்குவான் (840).

விருந்தோம்பலை யிகழ்தல் மடைமையாகும், அம் மடமையே செல்வத்தின்மையாகக் கருதப்படும், அது மடமை யுடையாரிடையே யுண்டாம் (89). பேதைகள் எப்போதும் சோம்பலைத் தம்மகத்தே உடையராவர் (603). பேதைமை நட்பினைச் சிறிது சிறிதாகத் தேய்பிறை போலக் குறையச் செய்துவிடும் (782). அது சொற்கள் நிறைந்த கேள்வி யில்லாதாரிடம் உண்டாகும் (417). மனிதப் பிறப்பு பேதமையில் (அவிச்சையினல்) உண்டாவதாகும் (358). பிறன் மனையாளை விரும்பியொழுகுதல் பேதைமையாகும் (141). நட்பினர் உரிமையால் கெடும் வகைச் செய்தவற்றைப் பேதைமையெனக் கொண்டு விடவேண்டும் (805). பேதைமையுள் ஒன்று மனையாள் வழிச் சேர்ந்தொழுகு தலாகும் (910). காதலருள் ஒருவர்க்கு ஆர்வம் இல்லா திருக்க மற்றவர் மட்டும் ஆர்வமுடையராதல் பேதைமை போல்வதாம் (1242).

# 8. அன்பு

அன்பும் அருளும் நெருங்கிய தொடர்புடையனவாகவே முன்பும் பேசப்பெற்றன. அருளென்னும், அன்பீன்குழவி என்கிறார் வள்ளுவர். யாதானும் ஒருயிர் இடர்ப்படின் அதற்குத் தன்னுயிர்க்கு உற்ற துன்பத்தினால் வருந்துமாறு போல வருந்தும் ஈரமுடைமை அருள் என்கிறார் மணக்குடவர். இல்லறத்திற்கு அன்புடைமை சிறந்ததென்பது பரிமேலழகர் கருத்து. அன்புடைமை இல்வாழ்க்கைப் பண்பு (45) என வள்ளுவர் கூறுதலால் இஃது ஒப்புக்கொள்ளத் தக்கதாகலாம். அன்பு மனிதப் பண்பு எனப் பிறிதோரிடத்தில் (992) வள்ளுவர் வற்புறுத்துகின்றார். அன்பு என்பது குடும்பம் என்ற குறிப்பிட்ட அளவிலும் அருள் என்பது உலகமென்ற விரிந்த அளவிலும் செலுத்தப்படும் பற்றுள்ளங்கள் எனக்கூறலாம். பொதுவாக மனிதரிடத்துச் செல்வது அன்பானால் மற்ற உயிர்களிடத்தும் செல்வது அருளெனப்படலாம். ஆர்வலர் புன்கணீர் பூசல்தரும் (71) அன்புற்றமர்ந்த வழக்கென்ப வையகத்தின்புற்றார் எய்துஞ்சிறப்பு (75) அன்பு நன்குடையான் கட்டே தெளிவு (573) அன்பிலன் என்பரியும் ஏதிலான் துப்பு (862) என்ற குறள்கள் அன்பு இல்லறத்தார்க்கும் நெருங்கிய தொடர்புடையார்க்கும் உரியதோர் இயல்பு என்பதனை எடுத்துக் காட்டும். மக்கட்பேறு என்ற அதிகாரத்தையடுத்து அன்புடைமை அமைந்திருத்தலால் புதல்வரிடத்துக் கொள்ளும் அன்பு எனப் பல உரையாசிரியர் கொள்வர். வாழ்க்கைத் துணைக்கடுத்தும் அஃதமைந்திருத்தலால் மனைவி மக்களிடத்துக் கொள்ளும் அன்பெனக்கூட அதனை விளக்கலாம். விருந்தோம்பலுக்கு முன்பாகவும் அவ்வதிகாரமுள்ளது. அது பண்டறிவுண்மையிற் குறித்துவந்த (தொடர்புடைய) விருந்தாகலாம். அன்புடைமை அதிகாரத்தினால் அன்புக்கும் மனிதப் பிறவிக்கும், அன்புக்கும் இன்பத்திற்கும் அன்புக்கும் மறுமையின்பத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பு புலனாகின்றது. சான்றாண்மை, தூது குடிமை முதலிய பொருள்களைப் பற்றிப் பேசும் குறள் அன்பினை அங்கெல்லாம் அடிக்கடி இணைக்கப் பேசுகின்றது.

மனைவியிடத்துத் தொடர்புறுத்தியும் அரசியலில் வினை செய்வாரிடத்துத் தொடர்புறுத்தியும் அன்பு குறளின் கண் பேசப் பெற்றிருத்தலால் 'தொடர்புடையாரிடம் செலுத்துவது' என்ற விளக்கமே பொருத்தமாகலாம். மனிதனை உலகில் தனியான ஒரு உயிராக ஆக்காமல் மனித சமூகத்தில் ஒருவனாக உலக உயிர்களில் ஒன்றாக ஆக்குவதே அன்பு. விலங்குகட்கும், பறவைகளுக்குங்கூட இவ்வன்பு உண்டு. ஆனால் மனித அன்பு பகைவனையும் அன்புடன் கருதுவதனாலும் பகைமை போன்ற செயல்களைச் செய்யும் போதும் அன்பு காரணமாக அவற்றைச் செய்வதனாலும் சிறந்ததாகின்றது. 'மறத்திற்கும் அஃதே துணை' என்ற குறளில் வள்ளுவர் இதனைக் கருதுகிறார். தலைவன் தலைவியைப் பிரிகிறான். இது பகைமை போன்ற அன்பாகும் (1276).[6] மருத்துவன் நோயாளியின் உறுப்பினை அறுத்து மருந்திடு கிறான். பகைவனுக் கெதிரே அறமுடையோன் அன்பு காட்டு கிறான். இவையெல்லாம் மறநெறிப்பட்ட அன்பாகும். ஆக அன்பு உலகினைப் பிரிவுபடாமல் பிணித்து வைக்க வேண்டும்; ஒற்றுமைப் படுத்தவேண்டும்.

மனிதன் மக்கட் சமூகத்தில் பழகுவதனாலே மக்கட் பண்புடையனாகிறான் (992) பழக்கமாகிய அவ்வன்பிலிருந்து அருள் முதலிய உயர் குணங்கள் (பண்புகள்) தோன்றுகின்றன. தனி மனிதனாக இருக்கும் வரை அப்பண்பு வளர்தலில்லை. எனவே பிறவியின் நோக்கம், வாழ்வின் நோக்கம், அன்பெனப்படுகின்றது. மனித இன்பத்திற்கு அன்பு காரணமெனப்படுகின்றது (73, 75) அன்பு உடலுக்கு உயிர்; (அகத்துறுப்பு) அன்பில்லாத உள்ளம் பாலைவனம் போன்றது (80, 78) எனக் குறள் கூறுவதெல்லாம் இக் கருத்தினை வலியுறுத்தவேயாகும். மனிதன் ஒன்றுபட்டு (நட்புடன்) இருப்பதனால் இவ்வுலகில் எல்லாவற்றையும் அடைகிறான். அன்பு ஈனும் ஆர்வமுடைமை, நண்பு என்றது காண்க. எனவே அவ்வன்பிற்காகவே வாழ்க்கை, அவ்வன்பினைக் காக்க உலகில் எதனையும் தன் உடலையும் (என்பினையும்-72) அவன் அளிக்க முன் வருகிறான். அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாழ் என அதனையொரு உயிர்க்குணமாக கூறுவததற்கேயாகும்.

இத்தகையன்புடையவன் மக்களுள் சான்றோனாகின்றான்(983); அவன் உலகில் அனைவர்க்கும் சான்று (வழிகாட்டி); அவன் செய்வனவெல்லாம் மட்டுமன்றி நினைப்பனவும் சொல்வனவும்

இனிமையுடையவாகின்றன. இன்சொலால் ஈரமளை இச் செம் பொருள் கண்டார் வாய்ச்சொல் (91). அவன் பிறந்த குடி நற்குடி யாகின்றது. மனித அறிவில்லாத பேதைகளும் பிறரோடு மனமார ஒன்றுபடாத கள்வரும் வரைவின் மகளிரும் அன்பில் லாதவர் எனப் பெறுகின்றனர் (833; 285; 911)

உலகில் அறங்களுக் கெல்லாம் அன்புசார்பு; அன்பில்லாத உயிர்களை அறக்கடவுள் காயும் என்றமையால் உலக அறங்களுக் கெல்லாம் அன்பே முதல் அதுவே காரணமெனப்படலாம். இல்லறதுறவறங்கட்குரிய குணங்களில் அன்பே முதலாகப் பேசப் பெற்றுள்ளது. அறம் மனிதவாழ்வின் மூச்சு, அவ்வறத்திற்கு அன்பு மூச்சு எனக் கொள்ளலாம்.

இல்லறம், இவ்வுலகு என்பனவெல்லாம் தொடர்புடை யாரைக் கொண்டு அமைந்தன. இவ்வுலகிற்கு பொருள் இன்றி யமையாதது. அப்பொருளுக்கும் அன்புக்குமுள்ள தொடர்பையும் குறள் கூறுகின்றது. பொருள் அன்புநெறியில் ஈட்டப்பெற வேண்டும்; அந்நெறியில் வாராததனைப் பிறர் கொள்வர். எனவே மக்களொற்றுமையைக் குலைத்து வரும்பொருள் ஆகாதென்பதாம்; அதனல் மனித இன்பமில்லையாதலால், அப்பொருளையாக்கும் வகையில் முதல்வனை அரசனும் அரசியலும் அன்புக் களங்களாக வேண்டும்; அரசன் பகையை வெல்லவேண்டும்; பொருளைத் தேட வேண்டும்; ஆட்சியை நடத்த வேண்டும். அதற்கவன் தனியேயிருந்து செய்யவியலாது. எனவேதான் அரசன் வினை செய்வார் சுற்றத்தார் ஆகியோரிடத்தெல்லாம் அன்புடையனுக வேண்டுமென்கிருர் வள்ளுவர்.

முன்பு அறிவற்ற பேதைகள் அன்பில்லாதவர் என்ருர். வினைக்குரிய அறிவில்லாதாரிடம் அரசன் வைக்கும் அன்பு பொய்யன்பாகும். அது நடுநிலைமை தவறிய (Favouritism; Nepotism) ஒரு தலைப்பக்கச் செயலாகும். அதனைக் குறள் மிகவும் கடிகின்றது.

## அன்புபற்றிய பொருளடைவு

### அன்பின் இயல்பும் செயலும் :

அன்பு என்பது இல்வாழ்க்கைக்குரிய பண்பாகும் (45). அன்பு தாழிட்டு மறைக்கவியலாததோர் உயிர்க்குணமாகும்; தன்னைச் சார்ந்தவரது துன்பங்கண்டதும் அன்பு உடையார் விடும் கண்ணீரே அதனை வெளிப்படுத்தும் (71). அன்புடையார் தன்னலம் சிறிதுமின்றித் தமக்கென உள்ள வற்றை யெல்லாம், தம் உடலையுங்கூடப் பிறர்க்களிப்பர் (72). அன்பு பண்புடைமை யென்னும் நன்னெறிக்குரியதாகும் (992). சான்றாண்மை யென்னும் பண்பினை வீழாமல் தாங்கும் தூண் போன்றதாம் (983). அருளென்னும் குழவிக்குத் தாய் போல்வதாம் (757). செம்பொருள் கண்டார் வாயிலிருந்து வரும் இன்சொற்களில் அன்பு கலந்திருக்கும் (91).

அன்பின்மை பேதையர் தொழிலாகும் (833). அன்பு இன்மை ஒருவன் குடியின்கண் தோன்றுமாயின் அஃதவனது குலத்தின்கண் ஐயத்தை உண்டாக்கும் (958).

### அன்பும் அறமும் :

அன்பு அறத்திற்குச் சார்பாகும். மறத்திற்கும் அதுவே துணை (76). அன்பில்லாத உயிர்களை அறக்கடவுள் காயும் (77).

### அன்புயர் வாழ்க்கையும் பயனும் :

அன்பு யாவர்மாட்டும் விருப்பத்தையும் அதன்வழி எல்லா நன்மைக்குரிய நட்பையும் தரவல்லதாம் (74). அன்பினை இவ்வுலகினில் செய்தொழுகுதற்காகவே மனிதப் பிறவி கிடைத்தது (73). ஒருவன் முற்பிறப்பிலும், இப் பிறப்பிலும் அன்பு செய்தொழுகிய நெறியின் பயனே அவன் இவ்வுலகத்தும் துறக்கத்தும் அடையும் இன்பங்கள் என்பர் (75). அன்பு உடலுக்கு உயிர் போன்றது (80). அன்பு இல்லாரது உள்ளம் பாலைவனம் போன்றது (78). அன்பு என்பது அகத்துறுப்பாகும்; அஃதில்லாதவர்க்கு ஏனைய இடம் பொருள் ஏவல் (கை, கால்-?) முதலிய புறத்துறுப்புக்க ளெல்லாம் இருந்தும் பயனில்லை (79).

**அன்பும் பொருளீட்டலும்:**

பொருள் அன்புநெறியில் ஈட்டப்பட வேண்டும்; இன்றேல் அப்பொருளை விட்டுவிடல் வேண்டும் (755). அன்பு நெறியில் வாராத பொருளாக்கம் பிறரால் கொள்ளப் படும் (1009).

**அன்பும் அரசும்:**

அன்பு, அரசனிடத்தில் வினை செய்வார்க்கிருக்க வேண்டிய முதற்குணமாகும் (513). பகையை வெல்ல விரும்பும் அரசன் தன் சுற்றத்தாரிடம் கொள்ளத் தக்கதாம் (862). அன்புகாரணமாக அரசன் அறிவில்லாதாரை வினைக்குரியராகத் தேறுதலாகாது (507). தூதுவர்க்குரிய பண்புகளுள் ஒன்று ஆகும் (681). கள்வர்களிடம் இல்லாததோர் குணமாகும் (285). வரைவின் மகளிரது புணர்ச்சியில் அன்பில்லை (911). பிரிவுக்காலத்தில் தலைவன் ஒழுகுவது தலைவிக்கு அன்பின்மைபோலத் தோன்றும் (1276).

# 9. இறைவன்

திருவள்ளுவர் இறைவனைப் பல பெயர்களால் அழைக்கிறார்.[7] 'ஓருருவம் ஒரு நாமம் இல்லார்க்கு ஆயிரம் திருநாமம் சொல்லி' என மணிவாசகப் பெருமான் கூறியதற்கு இது பொருத்தமாக இருக்கின்றது.

ஆதிபகவன்; வாலறிவன்; மலர்மிசையேகினான்; தனக்குவமை யில்லாதான்; வேண்டுதல் வேண்டாமையிலான்; அறவாழி யந்தணன்; எண்குணத்தான்; இறைவன்; உள்ளது; செம்பொருள்; சார்பு; பற்றற்றான்; தெய்வம்; தாமரைக்கண்ணன்; அடியளந்தான்; அறம் வகுத்தான் என அவர் பலவிடங்களிலும் குறிப்பன அவர் கருதும் இறைவனின் பல்வேறு பெயர்களாகும்.

திருமாலையும் அறக்கடவுளையும் ஊழிற்கு முதலாக அதனை உயிர்கட்கு வகுத்தளிக்கும் வகுத்தானையும் நித்தமாய்த் தூய்மை யாயிருக்கும் செம்பொருளையும் அவர் வெளிப்படையாகக் குறிக்கிறார். அவர் கடவுளைப்பற்றிக் கூறிய குறள்களை இறைவ னியல்புகளும் குணங்களும்; இறைவனை வழிபடும் நெறி; அவ் வழிபாட்டாலாகும் பயன்; இறைவனின் பல்வேறு உலகங்கள் என்னும் தலைப்புக்களில் கொண்டு ஆராயலாம்.

இனி இறைவன் என்பது பற்றிய வள்ளுவர் கருத்துக்களை ஆராய்கையில் இறைவனியல்புகளில் முதலில் 'அகரமுதல' என்ற குறளை வைத்தது நுட்பமுடையதாகும்.

அகரம், தமிழ்மொழியிலுள்ள மெய், உயிர் ஆகிய எழுத்துக் களுக்கும் பரிமேலழகர் கூறுகிறபடி வடமொழி எழுத்துக் களுக்கும் முதலாக இருக்கின்றது. ஆங்கிலம் முதலிய மேனாட்டு மொழிகளுக்குங்கூட அகரம் முதலாகவுள்ளது. இதனால் உலகி லுள்ள ஒவ்வொரு மொழிக்கும் (அதனையுடைய மக்கட்கும் பல்வேறு சமயத்தினர்க்கும்) அகரம்போல இறைவன் முதலா கின்றான். மக்கள் இனமுழுவதற்குமே, உயிர் உயிரில் பொருள் களுக்கும் 'ஒருவனே தேவனும்' என்கிறார் வள்ளுவர்.

அகரத்திற்குத் தலைமை, விகாரத்தானன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலால் ஆவதுபோல இறைவற்குத் தலைமை செயற்கை உணர்வானன்றி இயற்கையுணர்வான் முற்றுமுணர்தலால் ஏற்படுகிறதென்கிறார் பரிமேலழகர்.[8] அகரத்தின் நிற்கும் நிலையைப்பற்றி நச்சினார்க்கினியர் கருத்தும் இங்கு நோக்கத்தக்கது.

தொல்காப்பிய எழுத்ததிகாரம் 'ஔகார இறுவாய்' என்னும் சூத்திரத்தில் 'இறைவன் ஒன்றேயாய் நிற்கும் தன்மையும் பல்லுயிர்க்குத் தானேயாய் அவற்றின் அளவாய் நிற்கும் தன்மையும் போல' என அவர் இணைத்துக் காட்டுகிறார்.

பகவன் என்பதற்கு ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்னும் ஆறு குணங்களையுடையவன் எனப் பலர் பொருள் கொள்ளுகின்றனர். எண்குணத்தான் என்றவிடத்தே இவ்வறுவகைக் குணங்களும் அடங்கியிருப்பவாக உணரலாம். பகவன் என்பதற்கு அரன், அரி, பிரமன், அருகன், புத்தன் எனவெல்லாம் அகராதிகள் விளக்கம் தருகின்றன. இதனாலும் பல மக்கட்கும் பொதுவாய கடவுளை வள்ளுவர் வாழ்த்தினரென்பது பொருந்துவதாகின்றது.

இறைவன் மெய்யுணர்வினன், பேரறிவினன். மனிதன் சிற்றறிவினன். இறைவனை வணங்குவோர் இறைவனியல்பினைப் பெறுகின்றனர்; அவ்வியல்பாக ஆகின்றனர். பொருளுக்காகவும் போகத்திற்காகவுமன்றி இறைவனை அறிவிற்காக வணங்கவேண்டுமென்கிறார். அதுவே மனிதத்தன்மை வளரும் வழி. தன்னறிவை வளர்த்துக்கொள்ளவும் தூய்மைப்படுத்திக் கொள்ளவும் மனிதன் கல்வி கற்கிறான். அத்தூயவறிவு இருக்குமிடம் இறைவனாதலால் அவனை வணங்குதலே கல்வியின் பயனாம். அவ்விறைவனே கற்றற்குரிய மேலான குருவாம். கற்றோரினம் கல்லாதோரினம் என மக்களை இருவகையாகப் பிரிக்கிறார் வள்ளுவர். கற்றோர் மக்கட்கும் கல்லாதோர் விலங்கிற்கும் ஒப்பாவர். அக்கற்றோரை உண்மையாகக் கற்றோராக, மக்களாக ஆக்குவது இறை வழிபாடென்பது வள்ளுவம். புராண இதிகாச அடிப்படையிலானதோர் குணத்தையுடையவன் என்னாமல் வாலறிவன் என்பது வள்ளுவரின் சமயப் பொதுநோக்கைக் குறிப்பதாகும்; எல்லாச் சமயத்தவர்க்கும் ஞானம் எனும் அறிவு பொதுவாகலான்.

நான்முகனும் கலைமகளும் திருமகளும் அருகதேவனும் பூமேல் நடந்தோராகக் கற்பனை செய்யப்பெறுகின்றனர். மலர் தூய்மைக்கும் அழகுக்கும் இனிமைக்கும் இருப்பிடமாகும். அதனை நெஞ்சமாகிய தாமரைமீது இருப்பவன் இறைவன் எனக் கற்பனை செய்வதும் உண்டு. மெல்லிய அழகிய தூயநெஞ்சம் ஒன்றனைப் பெற்றிருப்பதாலேயே மக்கள் சிறக்கின்றனர். நெஞ்சம் இடைவிடாது நினைக்கும் தொழிலதாதலால் 'சேர்தல்' என்பதற்கு இடைவிடாது நினைத்தல் எனப்பொருளெழுதுகிறார் பரிமேலழகர். நினைப்பதன் வண்ணமாக ஆகும் மனிதன் அந்நினைவை உயர்ந்த இறைவன் நினைவாகவே ஆக்குகிறான்.

இறைவன் சத்து சித்து ஆனந்தத்தில் சத்தாகிய வடிவாயவன். சத்து என்பது உண்மை. அவன் உள்ளவன், நிலைத்தவன். எனவே அவன் புகழும் உண்மை (மெய்ம்மை) சேர்ந்த புகழாக வேண்டும். நிலையாத மனிதனின் (சீவனின்) புகழ் பொய்ப் புகழாகும். அழிவற்ற நிலைத்த தன்மையை விழையும் மனிதன் இறைவன் மெய்ப்புகழைப் புரிதல்வேண்டும். அவனை இருளுடைய இரு வினைகளும் சேராவாம். இருள் மயக்கமாம்! காம வெகுளி மயக்கத்துள் கடையாயது இம் மயக்கம். தீவினைமட்டுமன்றி நல்வினையும் மயக்கத்திற்கும் பிறவிக்கு முரியதாம். நல்வினை பொன்விலங்கென்பர். ஞானி இரண்டிலிருந்தும் விடுபட்டாக வேண்டும். இக் குறளும் வேண்டுதல் வேண்டாமை எனும் குறளும் ஒரு கருத்தினவாகும். அதாவது பற்றற்று வினை புரிதல் (வாழ்தல்) என்பதாம்.[9] பகவத்கீதை முதலாம் நூல்கள் வற்புறுத்தும் கருத்தும் இதுவேயாகும். நடுவுநிலை என்ற அதிகாரத்தில் வள்ளுவர் இக் குணத்தையே விளக்குகிறார் என்னலாம். இறைவனுக்கு ஒரு பொருளும் வேண்டாம். ஆனால் இவ்வுலகமும் உயிர்களும் வாழ உலகப் பொருள்களைப் படைத்தளிக்கிறான். ஆனால் அதனிலேயே அவன் அகப்படுவதோ ஈடுபடுவதோ இல்லை. அவ்வகையில் வேண்டாமை உடையவன். கண்ணன் கீதையில் இவ்வுலகத்தை வழி நடத்துதற்காகத் தான் உடலெடுப்பதாகக் கூறுகிறான்.

அத்தகைய இறைவன் அடி சேர்ந்தவர்களுக்கு எப்பொழுதும் இடும்பைகள் இல்லை. இடும்பைகள் பிறவித் துன்பங்கள். பிறவிப் பெருங்கடல் என்ற குறளிலும் இவ்விடும்பைகளையே

மனத்துட் கொள்ளுகிறார். பிறவித் துன்பமில்லாதவர் நிலமிசை நீடு வாழ்வார். இவ்வுலகிலும் நீண்ட ஆயுளுடன் வாழ்வர்; வீடு பேற்றின் கண்ணும் நீங்காமல் வாழ்வர். மனிதன் துன்பம் என்பதேயின்றி எப்பொழுதும் இன்பமாகவே வாழ விழைகிறான். வீடு பேறென்பது பேரின்பம். இவ்வுடலே துன்பத்திற்கு இலக்கம் என்கிறார் வள்ளுவர். எனவே துன்பத்தையும் அதற்கிலக்காகிய உடலையும் விட்டு வீட்டு நெறியடைதலே இறைநிலை என்னும் பல மதங்கள்.

வேண்டுதல் வேண்டாமை இல்லாததாகிய சமநிலைக்குப் பொறிவாயிலைந்தவித்தல் அடிப்படையாகும். இறைவன் ஐந்தனை அவிக்கிறான். உரவோர் (ஞானிகள்) ஐந்தனைக் காக்கின்றனர். அதற் கவர்கட்குத் துணையாயிருப்பது உரனென்னும் தோட்டி. ஐந்தன்வகை தெரிவோரும் அவரே. உலகியலில் இருக்கும்வரை ஐந்தும் ஓரளவு வேண்டியுள்ளன. ஆகவே அவற்றை அடக்கியாண்டுப் பயன்படுத்த வேண்டியுள்ளது. இறைவனுக்குத் தூலவுடம்பின்மையால் அவன் ஐந்தனை அவித்தவன் ஆகிறான். கடந்தநிலையில் ஞானி (மெய்யறிவர்) களும் ஐந்தவித்தவர்களாக ஆகவேண்டும் நிலையுறுகின்றது.

அவனையடையும் நெறியையே வள்ளுவர் பொய்தீர் ஒழுக்க நெறி என்கின்றார். சமயம் அல்லது மதத்தையே குறள் "நெறி" என்கின்றது. உண்மையான என்பதனை விட்டுக் குறள் பொய்தீர் எனக் கூறுவது உலகியலுக்குப் பொருத்தமாக இருக்கின்றது. காலப்போக்கில் சமயங்களில் பொய்மைகள் கலக்கக்கூடும் அவற்றை அடிக்கடி நீக்கித் தூய்மை செய்து மதத்தைக் காக்கவேண்டுமென்பது அதிலடங்கியிருக்கின்றது. இன்ன வொழுக்க நெறி என வள்ளுவர் குறிப்பிடாதது அவர்தம் பொது நெறியைத் தெரிவிப்பதாகும். எல்லாச் சமயங்களுக்கும் தூய்மையான ஒழுக்கம் (அறம்) பொதுவும் இன்றியமையாதது மாகும். அம் மனித ஒழுக்கத்தையே (உலக சமூக வொழுக்கத்தையே) வள்ளுவர் வற்புறுத்துகிறார். புராணங்கள், சமயச் சடங்குகள், கடவுள் உருவங்கள் முதலியவற்றை ஒவ்வொரு சமயமும் வேறுவேறாகவே கொண்டிருப்பினும் நல்லொழுக்கங்களையும் மெய்யொழுக்கங்களையும் பொதுவாகவே கொண்டுள்ளன.

இறைவற்குப் பொருள் வேண்டாம்; காம இன்பம் வேண்டாம். எனவே அவன் அறவடிவானவன்; அறக்கடலாயவன். அவனை வழிபடும் மக்கள் அறத்தின் வழியாக மற்ற பொருள் இன்பங்களை யடைவர். 'பொருளும் இன்பமும் அறத்து வழிப்படூஉந் தோற்றம் போல' என்ற புறநானூற்றுக் கருத்தும் இங்கு எண்ணத் தக்கது. பொய்தீர் ஒழுக்கநெறி யதுவே யாகும். பொய்ந்நெறியினில் மக்கள் பொருளின்பங்களையடைய முயல்கின்றனர். அஃதாகாது அறநெறியே அதற்குத் துணையென்பதுடன் அறத்தை அறத் தாலேயே ஈட்ட வேண்டும் என்பதற்காகவே 'அறவோன் தாள் சேர்ந்தார்க் கல்லால்' என்கிறார்.

இறைவன் ஆதி பகவன், அவன் தன்னிகரற்றவன். மனிதன் தன்னிகரற்றவனாக வாழவும் விளங்கவும் விழைகிறான். அந்நெறியில் அந்நிலையை யடையாத போதும் அடையும் நெறியிலும் அளப் பற்ற இடையூறுகளையும் மனக் கவலைகளையும் அடைகிறான். ஒப்பற்ற உயர்நிலையை யடையவும் நெறியிலுறும் மனக் கவலைகளை மாற்றவும் ஒப்பற்றதோர் தனக்குவமையில்லாத பொருளையே பற்ற வேண்டும். அந்நிலைக்கு எண் குணங்களை வள்ளுவர் வகுக்கிறார். அவற்றை யடைதற்குத் தன் உடல் முழுவதையும் ஈடுபடுத்த வேண்டுமென்கிறார். அவ்வெண் குணங்களில் நிகரற்ற அறிவு, பாசங்களினீங்கிய தூய்மை நிகரற்ற ஆற்றல், அருள், இன்பம் என்பன அடங்கியுள்ளன. உலகச் சமயங்களில் கருதப்படும் கடவுளர்க்கெல்லாம் கூறப்படும் தனிச்சிறப்பாய இயல்புகளும் இவையாகவே இருக்கும். இக் குணங்களை மனித னடைதலையே சாலோக, சாரூப முதலிய பதங்களாகத் தத்துவ (உண்மையியல்) நூல்கள் கூறும். அதற்கு மனிதன் தன் உடலின் ஒவ்வோரங்கத்தினையும் பயன்படுத்துகிறான். தாளை வணங்காத் தலை என்றதன் கருத்ததுவே யாகும். உடலின் எவ்வுறுப்பாற் செய்யும் எச் செயலாலும் இவ்வெண்குணங்களும் வளரவேண்டும். தலையே நீ வணங்காயென அப்பரடிகள் பாடியதும் இக் குறிப்பிற் காகவேயாம்.

இறைவனை வள்ளுவர் பற்றற்றான், உள்ளது, செம்பொருள், மெய்ப்பொருள், தெய்வம் என்ற பெயர்களால் குறிக்கிறார்.

ஐம்புலன்களின் வழியாக வரும் பற்றுக்களும் யான் எனது என்னும் அகப்பற்றுப் புறப்பற்றுக்களும் பற்று எனப்படும்.

அப்பற்றுக்கள் இல்லாதவன் இறைவன். அவனையடையும் நெறியினரும் பற்றுக்களை விடவேண்டும். மக்கள் பற்றுடையவர்; இறைவன் அவையற்றவன். துறவு நெறியில் (துறவியலில்) மிகவாக வற்புறுத்தப்பெறுவதும் இதுவேயாகும். அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு என இல்லறத்திலும் இது வற்புறுத்தப் பெறுகின்றது. ஆழ்வார் நாயன்மார் நெறி இவ்வில்லறத்துறவு பற்றியதேயாகும். பற்றறுதலாகிய துறவு, மனத்தில் இருக்க வேண்டுமன்றி வேடத்தில் இருக்கவேண்டும் என்பதில்லை. உலகப் பற்றுக்கள் விடுவதற்காகப் பற்றற்ருன் பற்றினைப் பற்றுக வென்கிருர்.

பற்று என இறைவனைக் குறிப்பதுபோலவே "சார்பு" என்றும் குறிக்கிருர். இரண்டும் ஒரு பொருளனவேயாகும். [10] தோன்ருத் துணை (துணை) என்றதுமதுவே. உலகம் நிலைத்து நிற்கவும் உயிர்கள் தோன்றவும் விளக்கமுற்று வீடுபேறு அடையவும் சார்பாயிருப்பவன் அவனேயாவான்.

சார்புணர்தலும் ஓர்த்துள்ளம் உள்ளது உணர்தலும் மெய் யுணர்தலாகும். இங்கு உள்ளது என இறைவனைக் குறிக்கிருர். உள்ளம் உணர்தலும் சார்புணர்தலும் யோக ஞான நெறிகளைக் குறிப்பன. கடவுள் வாழ்த்தில் சரியை, கிரியை நெறிகளை முதன்மையாக வற்புறுத்திஞரெனில் துறவு மெய்யுணர்தல் முதலிய அதிகாரங்களில் யோக ஞான நெறிகளை ஆசிரியர் முதன்மையாக வற்புறுத்துகிருர். இவ்விடங்களிற்ருன் இறைவனை அவர் செம்பொருள், மெய்ப்பொருள் என்றெல்லாம் குறிக்கிருர். எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அதனிலெல்லாம் (உலக முழுவதும்) அவனிருப்பினை உணர்தலே ஞானம் (மெய்யுணர்தல்).

செம்பொருளை வீட்டிற்கு நிமித்த காரணமாய செவ்விய பொருளென்கிருர் பரிமேலழகர். நித்தமாய், துய்தாய் எல்லா வற்றையுங் கலந்து நிற்பதாய் விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மைத்தாதல் பற்றிச் செம்பொருள் என அவர் எழுதுகிருர். மெய்ப்பொருளெனவும் உள்ளதெனவும் கூறியதிதுபற்றியேயாம் அப்பொருளைக் காண்கையாவது உயிர்தன் அவிச்சைகெட்டு அதனேடொற்றுமையுற இடைவிடாது பாவித்தல். இதனைச் சமாதியெனவும் சுக்கிலத் தியானமெனவும் கூறுப. யோக ஞானங்களாலறியப் பெறும் ஆதிப்பரம்பொருள் இயல்பினை

வள்ளுவர் இவ்வாறு குறிக்கிறார். பிரம்மம் எனப் பலர் குறிப்பதும் இவ்வாதிப் பொருளையே யாகலாம். பல சமயக் கடவுளரையும் குறளில் ஆசிரியர் குறிப்பதாகப் பலர் கூறுவர்.

மலர்மிசையேகினான் என்பது பூமேனடந்தானாகிய அருகதேவர் முதலியோரையும் எண்குணத்தான் என்பது சிவபெருமானையும் அறவாழி யந்தணன் என்பது திருமாலையும் குறிக்குமென்பர் ஆசிரியர் பலர்.

உருவமுடைய தெய்வங்களைத் தெளிவாகக் குறிக்கும் பொழுது 'அடியளந்தான்' என மூவுலகும் ஈரடியால் அளந்த திருமாலைக் குறிக்கிறார். தாமரையினாள் எனத் திருமகளை மடியிலா முயற்சியுடையானிடம் இருப்பவளாகக் கூறுகிறார். சோம்பலுக் கிருப்பிடமாய மூதேவியைத் திருமகளுக்குத் தமக்கை என்கிறார். கூற்றுவனை வலிமைக்கிருப்பிடமாகவும் இறப்பிற்குக் காரண மானவனெனவும் கூறுகிறார். அணங்கு எனும் தெய்வமகளைப் பற்றிக் காமத்துப்பாலில் குறிக்கிறார் (1081). பொழில் முதலிய விடங்களிலே வதிந்துகொண்டு எழுதலாகாவுருவும் தானே (கண்டாரைத் தாக்கி) காமத்தால் தாக்கி வருத்தும் தன்மையு முடையன அத்தெய்வங்கள் எனப் பரிமேலழகர் விளக்கத்தால் அறிகிறோம். இவர்கள் சூரரமகளிர், வரையரமகளிர், நீரரமகளிர் என வழங்கப்படுவோராகலாம்.

தென்புலத்தார் தெய்வம் என அவர் சொல்வது, இல்லறத்தார் தென்புலத்தார்க்கடுத்து வழிபடும் இல்லுறை கடவுளாகலாம். அன்றிப் பொதுக் கடவுளையும் அவர் குறித்ததாகக் கொள்ளலாம். மற்றும் மக்களுள் தெய்வங்களாக (தெய்வத்தன்மை படைத்தோராக) வள்ளுவர் கற்புடைப் பெண்டிரையும் முறையுடையரசரையும் வைத்துப் பாராட்டுகிறார். "தவத்திற் சிறந்தவர்கள் கூற்றுவனையும் வெல்வர்" அதாவது சாவினை வெல்வர் எனக் கூற்றுவனாகிய தெய்வத்தின் இயல்பும் குறளில் கூறப்படுகின்றது.

மற்றும் காதலுக்குரிய தெய்வமாகக் காமனைக் குறிப்பிடுகின்றது (1197). கடவுள் உலகங்களாகச் சிலவற்றை வள்ளுவர் குறிப்பிடுகிறார். தாமரைக் கண்ணான் உலகு (1103). எனக் காமத்துப்பாலில் அவர் குறிப்பதனைப் பரமபதம், இந்திரலோகம், பிரமலோகம் எனப் பலவாறாக உரையாசிரியர் விளக்குவர்.

காதலர் ஒருவர்க்கொருவர் அளிக்கும் இன்பம் தாமரைக் கண்ணன் உலகின்பமாம்.

திருமால் தம் ஈரடிகளால் அளந்த மூவுலகங்களும் (610) மடியாகிய சோம்பலில்லாத மன்னவன் பெறும் உலகங்களாக வள்ளுவர் கூறுகின்றார்.

தெய்வத்தான் ஆகாதெனினும் என்கையில் ஊழை வகுத்தளிக்கும் தெய்வத்தையும் தெய்வமடிதற்றுத் தான் முந்துறும் என்கையில் முயற்சிக்குத் துணைசெய்யும் வழிபடு தெய்வத்தையும் குறிக்கலாம்.

அறத்தைக் கடவுளாகக் கருதி அவர் பல விடங்களில் பேசுகிறார். அறக்கடவுள் அன்பில்லாத உயிர்களைக் காயும் (77). வெகுளியில்லாதவனிடம் அறக்கடவுள் தங்கும் (130). பிறர்க்குக் கேடு சூழ்ந்தவனை அறக்கடவுள் அழிக்கும் (204) என்னும் இடங்களில் அறக்கடவுள் என்ற ஒன்றனை ஆசிரியர் கற்பனை செய்வதாகத் தெரிகின்றது. தர்மதேவதை என மக்கள் பேசும் தெய்வமே அதுவாகலாம்.

மற்றும் மக்களுள்ளாரையே தெய்வம் போலக் கருதும் வழக்கினைச் சில குறள்களில் உரைக்கிறார். முறை செய்து உயிர்களைக் காக்கும் அரசன் இறைவனுக்குச் சமமானவன் (388). வான் தரும் கற்பினராய கற்புடை மகளிர்க்குக் கணவன் தெய்வமாகிறான் (55). இந்திரன் தேவர்கட்குத் தலைவன். தேவர்கள் மக்களுட் சிறந்தோர். இந்திரலோகமே சுவர்க்கம். மக்களுள் மேம்பட்டோர், புகழுடைச் செயல் செய்தோர் சுவர்க்க இன்பம் அடைகின்றனர் ; வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படுவர். புத்தேளுட்டுய்யாதால் என்கையில் எல்லாம் சுவர்க்க இன்பமே குறிக்கப்படுவது. காமத்துப்பால் தாமரைக் கண்ணனுலகினை இந்திரலோகம் என விளக்குவாருமுளர். இந்திரனே சாலுங்கரி என்றவிடத்தில் ஐம்புலவாசைகளையும் அவித்த இந்திர நிலையை யடைந்தவன் இந்திரன் எனக் குறிக்கப்படுகின்றது.

இங்ஙனம் வள்ளுவர் புராணக் கடவுளர்களையும் சிறு தெய்வங்கள் சிலவற்றையும் குறிப்பிட்டபோதிலும் அவைகளை வழிபடுமாறு வற்புறுத்துவதாகத் தெரியவில்லை. வழிபடுமாறும்

காணுமாறும் அறியுமாறும் அவர் கூறும் பரம்பொருள் கடவுள் வாழ்த்து, துறவறவியல் மெய்யுணர்வு முதலியவிடங்களில் காணப் படுகின்றது. அதனை ஆசிரியர் வாழ்த்துகிறார்; வழிபடுகிறார். அது சமயப்பொதுமையும் மெய்ந்நிலையும் உடையதாகக் காணப் படுகிறது.

### பொருளடைவு

#### இறைவனியல்புகள் :

இறைவனாகிய ஆதிபகவன் உலகிற்கு முதல்வன் (1). அவன் மெய்யுணர்வுடையவன் (2). அன்பரது நெஞ்சமாகிய மலரின் கண்ணே விரைந்து செல்பவன் (3). ஒரு பொருளையும் விழைதலும் வெறுத்தலும் இல்லாதவன் (4). மெய்ம்மை சேர்ந்த புகழையுடையவன் (5). மெய்வாய் முதலாம் ஐம் பொறிகளின் வழியாகிய ஐந்தவாவினையும் அவித்தவன் (6). ஒருவாற்றானும் தனக்கு நிகரில்லாதவன் (7). அறக்கடல் எனப் போற்றப்படுபவன் (8). தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருள் உடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பில் இன்பமுடைமை என்னும் எண்வகைப்பட்ட குணங்களையுடையவன் (9). என்றும் உள்ளதாகிய முதற்பொருள் (357). நித்தமாய் தூய்மையாய் எல்லாவற்றையும் கலந்து எஞ்ஞான்றும் ஒரு தன்மையாகிய செம்பொருள் (358). மெய்ப்பொருள் (356). எல்லாப் பொருள்கட்கும் சார்பாயவன் (359). எல்லாப் பொருளையும் பற்றி நின்றே பற்றற்றவன் (350). முறைசெய்து உயிர்களைக் காப்பாற்றுபவன் (388). இன்ப துன்ப நுகர்ச்சிகளை உயிர் கட்கு வகுத்தளிப்பவன் (377).

#### இறைவனை வழிபடும் நெறிகளாக அவர் கூறுவன :

எல்லா நூல்களையும் ஒருவன் கற்றதன் பயனாகப் பிறவிப் பிணிக்கு மருந்தாகிய அவன் நற்றாள்களை இடை விடாது நினைத்தல் (தொழுதல்) (2). அவனது மெய்ம்மை சேர்ந்த புகழை விரும்புதல் (5). மனிதன் தன் தலை முதலாகிய எல்லா உறுப்புக்களாலும் அவனை வணங்குதல் (9). இல்லறத்தார் போற்றும் ஐவருள் ஒருவனை தென்புலத்

தாருக்கடுத்துத் தெய்வத்தைப் போற்றுதல் (43). யான் எனது என்னும் அகப்புறப் பற்றுக்களை விடுத்தொழுகுதல் (359). கேட்ட உபதேசப் பொருளையாராய்ந்து உள்ள மானது முதற்பொருளை உணர்தல் (357). செம்பொருளாகிய இறைவனைக் காண்டல் (91). ஐந்தவாவினையும் அறுத்த மெய்யான ஒழுக்க நெறியில் நிற்றல் (6) என்பனவாகும்.

**இறைவனை வழிபடுதலால் ஆகும்பயன்களாக வள்ளுவர் கூறுவன :**

இறைவனடிகளை இடையருமல் நினைப்பவர்கள் வீட்டுலகின்கண் அழிவின்றி வாழ்வர் (3). அவர்களைப் பிறவித் துன்பங்கள் எக்காலத்தும் அடையமாட்டா (4). நல்வினை தீவினையென்னும் இருவினைகளும் அடையாவாம் (5). பிறப்பின்றி எக்காலத்தும் ஒரு தன்மையராய் வாழ்வர் (6). காமவெகுளி மயக்கங்களாலாகும் கவலைகளை யடையார் (7). பொருள் இன்பமென்னும் இருகடல்களையும் நீந்துவர் (8). பிறவியாகிய பெருங்கடலை நீந்துவர் (10). வினைப்பயன்களுள் முன்சாரக் கடவதுன்பங்கள் அவர்களையடையா (359). பிறப்பிற்கு முதற்காரணமாய அவிச்சையைக் கெடுப்பர் (358). பிறவிக்குரிய பற்றுக்களை அறுப்பர் (350). தெய்வம் அவர்கள் முயற்சிகளில் முன்நின்று உதவும் (123).

# 10. இன்பம்

இன்பம் உள்ளத்திற்கும் உயிருக்குமுரியது. உள்ளத்திற் குரியதைச் சிற்றின்பமெனவும் உயிருக்குரியதைப் பேரின்ப மெனவும் சாதாரணமாகச் சொல்லலாம். உள்ளம், சொல், செயல் ஆகிய மூவிடங்களிலும் இன்பம் வெளிப்படுகின்றது. உள்ளத்தில் முகிழ்ப்பதனை உவகை (உள்ளூர உவப்பது) மகிழ்ச்சி யெனவும் உடலில் (செயலில்) வெளிப்படுவதனைப் பூரிப்பு, களிப்பு என்றும் கூறலாம். இறைவன் இன்பவடிவானவன்.[11] இன்பமே என்னுடைய அன்பே எனப் பெரியவர்கள் அவனைப் பாராட்டு கின்றனர். உலகில் உயிர்களும் மக்களும் இன்பத்தையே நாடி அதற்கெனவே வாழ்கின்றனர். இவ்வுலகிற்குரிய காமவின்பத் தினைச் சிற்றின்பமெனவும் இறைவனுலகிற்குரிய வீடு பேற்றினைப் பேரின்பமெனவும் அறிஞர் பகுத்தனர். துன்பத்தினைச் சிறிதும் மக்கள் விரும்புவதில்லை. யாண்டும் இடும்பையில்லாதிருக்கவும் மனக்கவலையை மாற்றவுமே மக்களிடை இறை வழிபாடு நிகழ்கின்றது.[12] 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' இதுவே மக்களுடைய வாழ்வின் குறிக்கோள். நாளில் ஒரு சிறுகணமும் துன்பம் வருமெனக் கற்பனையிற்பட்டாலும் அதுகண்டு சுருங்கு கின்றனர் மக்கள். உலகில் உயர்ந்த தத்துவங்களும் மனித வொழுக்கங்களும் எவ்வாறு மனிதத் துன்பத்தினைக் குறைப்ப தெனவே முயன்றுள்ளன. இன்பம் புலன்களால் வெளிப்பட நுகரப்படுவனவும் மனத்தால் ஓரளவு தனித்து அனுபவிக்கப் படுவனவுமென இங்குப் பிரிக்கப்பட்டுள்ளது. நகைப்பு அல்லது சிரிப்பாகிய இன்ப வெளிப்பாட்டினைப்பற்றி ஆசிரியர் பல விடங்களில் கூறுகின்றூர். அளவுமீறிய இன்பம் செருக்கெனப் படுகின்றது. அது கடியத்தக்கது. அதுபற்றியும் பலவிடங்களில் பேசப்பெற்றுள்ளது. உணவும், உடையும், உறையுளும், மருந்தும், போதுபோக்குச் செயல்களும் எல்லாம் இன்பத்தை வளர்ப்பதற் கெனவே இக்கால நாகரிகத்தும் திட்டமிடப்படுகின்றது.

உயிர்கட்கின்பம் புலன்களால் வருவதாயினும் மனித வின்பம் அறிவோடு கூடிய புலனின்பமாகும். அறிவு வளர்ச்சியில்

மிகுதியும் துணை புரிவது கண்ணும் காதுமாகும். வள்ளுவர் கூறிய புலனின்பங்களுள் இவை யிரண்டுமே பெரிதும் இடம் பெறுகின்றன. மற்றபடிப் பொதுவாகத் தூய்மையும் அறமும் உடைய புலன்களால் இன்பமுண்டென்பதை விவரிக்கிறார். குழந்தைகளையும் காதலர் ஒருவர்க்கொருவரையும் தொடுதலாலும் குழந்தைகளின் மழலையைக் கேட்டலாலும் காதலரைக் (கனவிலேனும்) காண்டலாலும் இன்பமுண்டென்கிறார். இச் சிற்றின்பங்களிலேயே வைகுந்தபதத்தின் இன்பத்தை (பேரின்பத்தை)க் காட்டுகிறார். இனிய சொற்களாலும் அவையில் கூறும் ஆற்றலுடைய சொற்களாலும் இன்பமுண்டென்கிறார். பொதுவாக மனிதர் கள்ளை இனிதெனக் கொண்டு மகிழ்கின்றனர். (அதனை ஒழிக்கவோ) அதனினும் இனிதெனக் காமத்தைக் காட்டுகிறார் ஆசிரியர். காமத்தில் ஊடலின்பம் அதன்பின் கூடலின்பம் மிகச் சிறந்ததென்கிறார். உண்பதில் அளவறிந்து நல்லுணவை முன் உண்டது செறித்தமையறிந்து உண்டலின்பமாம். மனவின்பம் மனிதவின்பமாம். அஃதறத்தான் வருவது. முக மலர்ச்சியாக வெளிப்படுவது. துறக்கம் வீடுபேறு முதலிய வற்றிலும் இவ்வுலகிலும் அடைவது. இவ்வுலகில் அடைவது பல காரணங்களால் ஆகும். அறத்தான் வருவது பேரின்பம். இவ்வுலகில் துன்பத்தையும் இன்பமாகக்கொண்டு வினை புரிவார்க்கே இன்பமும் புகழுமுண்டாம். அவா முதலிய வின்மையால் இன்பமாம். கல்வியினாலாகும் மனிதவின்பம் உலக முழுவதையும் இன்பமாக்கவல்லது. அறத்தால் மட்டுமன்றி அற வழியில் வந்த பொருளாலும் காமத்தாலும் இன்பமுண்டாம். பிறர்க்கு முதலில் இன்பமேற்படுத்தினால் தனக்கின்பம் தானே வரும். பிறர் தீமையைப் பொறுத்தலினாலும் இன்பம் வரும். மெய்யுணர்வினாலாவது பேரின்பம். தன்னைச் சார்ந்தாரது பெருங்குணங்களும் நண்பரது ஒற்றுமையும் இன்பந் தருமாம். விரும்பியது நிறைவேறியபோதும் உலகில் மக்களுக்கிடையே நெருங்கிய நேயப்பான்மை யிருக்கும்போது இன்பம் வளருகிறது. நாடு எல்லாப் பொருளுமுடைத்தாகிய காலத்திது நிகழ்கின்றது.

நகை, உயர் குலத்தார்க்குரியதெனில் உயர்ந்த பண்புடை மக்கட்குரியதென்பதாம். நகை நட்புக்குக் காரணமாகலாமன்றிப் பகைக்கும் புறஞ்சொல்லற்கும் காரணமாகக் கூடாது. தீய ஒழுக்கம் கேலி நகைக்குக் காரணம். கள்ளுண்போர், கூடா

வொழுக்கமுடைய துறவிகள், சோம்பேறிகள் ஆகியோர் நகைப்புக்குரியவர்கள் கலந்து சிரித்து மகிழ்தலே மனிதப் பண்பு என்கிறார் ஆசிரியர். தலைவி தலைவனின் அருகிருப்பும் நகைப்பும் இருவர்க்கும் இன்பமுண்டாக்குவன. ஆனால் இன்பத்தில் அளவு மீறிய ஈடுபாடும் இன்பம் கடந்த செருக்கும் மனித வளர்ச்சிக்குத் தடையாவனவாம். எறும்பு நெய்யைச் சுவைக்கிறது. அளவு கடந்து அதனில் ஈடுபட்டால் அதிலேயே வீழ்ந்திறக்கிறது. இன்பமும் அப்படித்தான். அளவு மீறிய இன்பம் செருக்கு எனப்படும். அது கடியத்தக்கது. செருக்கு சான்றோர்க்குரியதன்று. பணிவே அவர்க்குரியது. செருக்கு சோர்வையும் நாணத்தையும் கேட்டினையும் தரும். ஆடல் பாடல் அழகு முதலிய கலைகளிலும் பிறர்க்குக் கொடுக்கும் வண்மையிலும் ஒருவர்க்குச் செருக்கேற்படும். பகைமையில் செருக்கேற்படுவதால் பகைமையினின்று விடுபடவேண்டும். மதம், வெகுளி, காமம் முதலியவற்றினீங்கும்போதும் ஒருவர்க்குச் செருக்கறும்.

## பொருளடைவு

### புலனின்பம் :

அமிழ்தத்தைவிட மிக்க இன்பம் தருவது தம் மக்கள் கைகளால் அளாவப்பட்ட கூழாகும் (*64*). உடலுக்கின்பமாவது மக்கள் தம் மெய்யைத் தீண்டுதலாம் (*65*). குழல் யாழ் ஆகியவற்றின் ஓசையினும் தம் மக்களது மழலைச் சொற்களால் இன்பமிகவிளையும் (*66*). இன்பம் இனிய சொற்களினால் உண்டாகும். அது கனியினது இன்பம் போல்வதாகும் (*100*). இன்பம், அவையின்கண் சொல்வதை நிரல்பட இனிதாகச் சொல்லுதலால் உண்டாகும் (*648*). இன்பந் தருவது, தன் முயற்சியால் வந்தது தெளிந்த நீர்போலும் கஞ்சியாயினும் அதுவேயாம் (*1065*). வைகுந்தத்திலும் சிறந்த இன்பமாவது தம்மால் விரும்பப்படுவாரது மெல்லிய தோளின்கண் துயில்வதாம் (*1103*). காதலர்க்கின்பமாவது காமுற்றாரைப் பற்றியெழும் அலராகும் (*1145*). காதலர் செவிக்கின்பமாவது பிரிந்த காலத்துக் காதலரைப்பற்றிவரும் சொல் எதுவாயினும் அதுவாகும் (*1199*). கள்ளினும் இன்பமாவது நினைக்கவும் காணவும் இன்பந்தரும் காதலாம் (*1201*). நினைத்தவளவிலும் இன்பந்தருவது காமமாகும் (*1202*).

காதலர்க்கின்பமாவது ஒருவர் மற்றவரைக் காண்டற்குரிய கனவாம் (1215). காமத்திற்கின்பமாவது ஊடலாகும் (1330).

**இன்பமும் மனமும் :**

இன்பமாவது நாட்டிற்குரியவாகக் கூறப்படும், செல்வம் ஏமமுதலிய அணிகள் ஐந்தனுள் ஒன்றாகும் (738). இன்பம் உட்பகையினால் ஒருவர்க்கியல்வதன்றாம் (854). இன்பம் அறத்தான் வருவதாகிச் சிறந்ததாம்(39). இன்பம், துன்பத்தை இயல்பெனக்கொண்டு இன்பத்தை விழையாதவர்க்கே யுண்டாகும் (628). இன்பம் துன்பத்தையே இன்பமாகக் கருதலாலும் உண்டாகும், அது பகைவரும் விரும்பும் சிறப்பைத்தரும் (630). இன்பம், உரிய வினைகளாலும் உண்டாகும் (669). இன்பம் துறக்கத்திலும் உண்டாகும், இவ்வுலகிலும் துறக்கத்திலும் அடையுமின்பம் முற்பிறப்பில் அன்பு செய்ததன் பயனாலுண்டாகும் (75). இன்பம் சிற்றின்பம் பேரின்பமென வகைப்படுத்தப்படுவதாம், சிற்றின்பம் பொருளால் வரும்; அறமல்லாதவற்றைச் செய்ப வர்க்குப் பேரின்பமில்லை (173). இன்பம், அவாவென்னும் மிக்க துன்பம் கெட்டால் இடையறுதெய்துதலாகும் (369). வீடுபேறும் இன்பமெனப்படும், அது மயக்கத்தினின்று நீங்கிக் குற்றமற்ற அறிவுடையார்க்குண்டாகும் (352). இன்பம் கல்வியறிவினாலுண்டாகும், அவ்வின்பம் கற்றவரிடத் திருந்து உலகமுழுவதும் பரவும் (399). தீமை செய்தவரை ஒறுத்தவர்க்குண்டாவது ஒரு நாளை இன்பமே, அது நிலை யாததாகும். பொறுத்தவர்க்குள்ள இன்பம் உலகமழியு மளவுமாம் (156). இன்பம் வறியார்க் கொன்றீதலினும் உண்டாகும் (228). தனக்கின்பத்தை விழையாதவனால் பிறர்க்கின்பம் உண்டாகும், வினையிலேயே ஊக்கமுடைய வர்கள் இன்பத்தைப் பொருட்படுத்தமாட்டார்கள் (615). உயர்ந்த இன்பம் அறிவில்லாதவரும் அஞ்சுபவருமாகிய பகைவரையழித்தலால் ஆகும் (869). திறமறிந்து பிறர்க்குத் தீமையின்றி வந்த பொருளால் இன்பமுண்டாம் (754). இன்பம், முன்னுண்டது அற்றஅளவறிந்துண்பானிடம் இருப்பதாம் (946). இன்பம், கேட்டது துன்பமில்லாத வகையில் கிடைத்தலினால் உண்டாகும் (1052). இன்பக் கடல் போல்வது காமமாகும் (1166). இன்பம், மகவைப்

பெற்றபோது அதனைக் கண்டதும் தாய்க்குண்டாகும், அதனினும் இன்பம் அவட்கு அவனைச் சான்றோனெனப் பலரும் சொல்லக்கேட்கும்போதுண்டாகும் (69). இன்பம், முகத்தின் வழியே மலர்ச்சியாக வெளிப்பட்டுத் தோன்றும் (707). இன்பம் நட்டோராலும் ஆவதாம் (264). அளவிறந்த உவகை அரசர்க்குக் குற்றந்தருவதாகும் (432). மிக்க உவகையாகிய களிப்பு மறவிக்கிடமாகும் (531). மகிழ்ச்சி சினத்தினல் அழியக்கூடியதாம் (304). காதலர்க்கின்பம், ஊடியபின் அவர்களது கூட்டத்தில் ஏற்படுவதாம் (1328). நட்டார்க்குறும் இன்பம் ஒருவர் உரிமையாற் செய்தனவற்றை மற்றவர் ஏற்றுக்கொள்ளும் போதேற்படும் (802).

**நகையும் இன்பமும்:**

முகமலர்ச்சியென்பது மெய்ம்மையுடைய குலத்திலுள் ளார்க்கு அங்கமெனப்படும் (953). நகுதல், நயமாகிய உள்ளக் களிப்பிற்குக் காரணமாகும் (860). சிரித்து மகிழ் தலும் (பேசுதலும்) நட்பாடலுக்குக் காரணமாம் (187). மகிழச் சொல்லுதலென்பது தூதுவர்க்குரியதோர் இயல் பாகும் (685).

**பொய்ந்நகையும் கேலிநகையும்:**

நகை விளையாட்டின்கண்ணும் தோன்றும், நகை இகழ்ச் சிக்குத் துணையாகலாகாது (995). புறங்கூறுதலோடு கூடிய பொய்ந்நகை அறமல்லாததாம் (182). வெறும் நகை மட்டுமே நட்பிற்குக் காரணமும் பயனுமாதலாகாது (694). மகிழுமாறு பேசுதல் புறத்துமட்டும் நட்பு செய்யும் பகைவரை மனத்தில் மறக்கும்போது செய்யத்தக்கதாம் (829). நகைத் தற்பொருட்டும் பகை செய்தலாகாது (871). உடம்பாய்க் கலந்துள்ள ஐம்பூதங்களும் நகுதல் வஞ்ச மனத்தையுடைய துறவியின் மறைவொழுக்கத்தைக் காணும்போதேற்படும் (271). அவையில் ஒருவர் மற்றவர் முகம் பார்த்து நகுதலாகிய செயல் ஆகாது (694). உள்ளூரார்க்கு நகை, ஒருவன் கள்ளுண்டு தன்னறிவு தளர்ந்திருத்தலைக் காணும் போதுண்டாகும் (927). வறியேமெனச் சோம்பியிருப்பாரைக் காண்கையில் நிலமகளுக்கு நகைப்புண்டாகும் (1040).

**நகைப்புக் காரணம் :**

கலந்து உள்மகிழ மாட்டாமை பெரிய உலகை பகற் பொழுதினும் இருளின்கட் கிடந்தது போலாக்கிவிடும் (*999*). துன்பம் வருங்கால் நகுதலே அத்துன்பத்தை வெல்லும் வழியாம் (*621*). நெடிதாக விரும்பிய பொருள் திடுமெனக் கிடைத்தபோதும் மகிழ்ச்சியுண்டாகும் (*774*).

**நகையும் காமமும் :**

தலைவிக்குத் தோன்றும் மெல்லிய நகை அவன் அவளைப் பார்க்காதபோதுண்டாகும் (*1094*). தலைவியது நகை முகிழ்ப்பின் கண்ணே தலைவற்கின்பக் குறிப்புண்டாகும் (*1274*). தானே ஆக்கிக்கொண்ட துன்பத்திற்கு ஒருவன் வருந்தும்போதும் நகையுண்டாகும் (*1173*).

**மகிழ்ச்சியும் களிப்பும் :**

மகிழ்ச்சியும் களிப்பும் கள்ளுண்டலால் ஏற்படும் மன வின்பமாகும். காமத்திற்குள்ள நினைத்து மகிழ்தலும் காணக்களித்தலுமாகிய இன்பங்கள் கள்ளினுல் ஆதலில்லை (*1281*). இன்ப மிகுதியால் வரும் செருக்கு சோர்வையும் கேட்டினையும் தருவதாம் (*539*). களிப்பாகிய இன்பம் நுகர நுகர மேலும் விழைதற்குரியதாம் (*1145*). இன்பத்தில் ஒருவன் மிகுதியாக ஈடுபட்டுத் தன்னை மறந்தால் அது அறிவு மயக்கத்திற்கிடமாம் (*838*). இன்பத்தில் மிகுதியாக ஈடுபடுதல் சான்ருேர் முன்பு தான் நாணுதற்கிடமாம் (*923*).

**செருக்கு : எல்லைமீறிய இன்பம் :**

வண்மையுடையேம் என்னும் களிப்பு ஒருவற்கு ஊக்க மில்லாதவிடத்துக் கிடைத்தலில்லை (*598*). யாம்அறிவுடையே மெனத் தம்மைத் தாமே மதிக்கும் களிப்பு புல்லறிவின்பாற் படும் (*844*). உலகில் வாழ்வோம் என்னும் மனவின்பம் காதலித்தாரால் காதலிக்கப்படுவார்க்கமைவதாம் (*1193*). ஒருவர்க்கு மிகுதியின்கண் ஏற்படும் மனக்களிப்பு ஆடல் பாடல் அழகு முதலிய திறமைகளினுல் ஏற்படுமென்பதாம் (*916*). - பகைவரிடத்துண்டாய களிப்புதான்வினைசெய்

திறமறிந்து தன்னைப் பெருக்கி மறவி புகாமற் காத்துக் கொள்ளுதலால் கெடுமென்பதாம் (*878*). பரைவரது தருக்கு அழிக்கப்படவேண்டும், இன்றேலது தன்னை யழித்துவிடும் (*880*). செருக்கின்மையே பெருமையாகும். சிறுமை அச் செருக்கினைமேற்கொண்டொழுகும் (*979*). செல்வம் இன்பத்துக்குரியதாவது மதமும் வெகுளியும் காமமும் ஆகிய குற்றங்களில்லாதபோதில் ஆகும் (*431*). மனக்களிப்பு மிகுதி அறத்தினீங்கிய செயல்களைச் செய்யத் தூண்டக் கூடும் (*158*).

# 11. உடல்

உடல் என்பது இங்கு மனித உடலைக் குறிக்கின்றது. ஐம் பூதங்களாலாய உடல் விலங்கிற்கும் மனிதற்கும் பொதுவானது. மனம், புத்தி முதலிய அந்தக்கரண வளர்ச்சியால் மனிதன் வேறு படுகின்ருன்; உயர்கின்ருன். உயிர் இரண்டிற்கும் பொதுவா யினும் மனிதவுயிர் இவ்வந்தக் கரண வளர்ச்சி வேறுபாட்டால் தானும் வேறுபடுகின்றது. உடலுதல் என்ருல் போரிடுதல். போரிடுதற்குரிய வன்மையுடையது உடல். முதலில் மனிதன் தனக்கு வேண்டிய உணவிற்கும் மற்ற தேவைகட்கும் உடல் வலிமையைப் பெரிதும் பயன்படுத்தவேண்டியவனுனன். பின் அறிவு வலிமை வளர வளர உடல் வலிமை அதிகம் தேவைப்படவில்லை. ஆனல், அறிவு, மனம், உயிர் இவை வளர்வதற்கு உடல் மிகவும் இன்றியமையாததானது. [13] உடம்பாரழியில் உயிராரழிவர், திடம்படு மெய்ஞ்ஞானம் சேரவுமாட்டார் என்பர் திருமூலர். சொர்க்க நலனையும், வீடு பேருகிய பெருநலனையு முறுவதற்கும் இவ்வுடல் காரணமாகின்றது. மற்றும் இவ்வுலகில் மனித வின்பத்திற்கெல்லாம் இதுவே துணையாகின்றது. உடலின் வன்மை, மென்மை, உயரம், பயன்பற்றியெல்லாம் வள்ளுவர் பலவாருக விவரிக்கிருர். பயனற்ற உடல்களைப்பற்றி பலவாறு அவர் பேசுதலால் உடலின் பயனை மிகவும் வலியுறுத்துகிருர் என்ருகிறது. மனிதன் மட்டும் இறந்தபின் உயிர் வேறுடல் எடுப்பது பற்றிப் பேசுகிருர். அவ்வுடலும் ஒன்றினென்று வளர்ச்சியுடையதாகின்றதென்கிருர். இவ்வுடல் வளர்ச்சி நெறி பற்றி [14] டார்வின் முதலிய அறிவியலாரே மிகுதியாகக் கூறி யுள்ளனர். உடம்போடுயிரிடை நட்பு பற்றியும் தத்துவ நூல்கள் வெகுவாகக் கூறுகின்றன. உடலின் உறக்கத்தைப் பற்றியும் சாதலைப் பற்றியும் பலவிடங்களில் குறிப்பிடுகின்ருர். சுவரை வைத்துத்தான் சித்திரம். இவ்வரிய மனித உடலை வைத்துத்தான் எல்லாமும் ஆகவேண்டும். வள்ளுவரும் முன்பு அன்பு செய்ததன் பயனுக, அன்பு செய்தற்காம் பயனுக இவ்வுடல் அளிக்கப்பட்ட

தென்கிறுர். அது நோயின்றி நீடு வாழ வளர வேண்டும். அதற்கு மருந்தென ஓரதிகாரம் அமைக்கிறுர் ஆசிரியர். உணவுகொள்ளு முறையில் பெரியதோர் மருத்துவ முறையைக் காண்கிறுர் வள்ளுவர். உடலுக்குப் பொருந்திய உணவை அளவறிந்து முன்னுண்டது செரித்ததறிந்துண்டால் நோயே யில்லை என்கிறுர்.

உடல் ஐம்பூதங்களாலும் எலும்பு, தோல் முதலியவற்ருலும் ஆனது. [15] தத்துவ நூலார் உடலைத் தூலம், சூக்குமம் எனப் பிரிப்பர். வள்ளுவர்க்கும் அஃதுடன்பாடே. காரணம் என்பதுயிர். சூக்குமம் (நுண்மை) மன முதற் கரணங்கள். தூலம் பூத (பரு) வுடல். அன்பினை அகத்துறுப்பாகக் கொள்ளுவதிலிருந்து சூக்கும (நுண்) உடலை வள்ளுவர் ஏற்றுக்கொள்கிறுர். உலகில் எல்லா வகையான உடல்களும் சுவையுடையனவே. சிறியனவற்றைப் பெரியன தின்றன. ஒரு காலத்தில் மனிதனை மனிதன் தின்ருன். இன்றும் விலங்குகள் மனிதவுடலைத் தின்கின்றன. மனிதவுடல் மென்மையும், வன்மையும், உயரமும், குள்ளமும் ஆனது. பொதுவாகப் பெண்ணுடல் மென்மையும் ஆணுடல் வன்மையு முடையதாக இருத்தல் நல்லதெனக் குறளால் தெரிகின்றது. உடலைப் புகழ் உள்ளதாக ஆக்கிக்கொள்ளுதல் சிறந்தது. பெண்களுடல் கவர்ச்சியும் பெரியோரதுடல் தோற்றமும் உடைய வாகக் கூறப்படுகின்றன.

முட்டை அல்லது கூட்டிற்கும் பறவைக்குமுள்ள தொடர்பு உடல் உயிர்த் தொடர்பு எனவும் வாழ்வில் தலைவன் தலைவிக்கு இடையுள்ளது உயிரோடுடம்பிடைத் தொடர்பெனவும் ஆசிரியர் கூறுகின்ருர். உயிர் என்பது தனித்ததொரு பொருளன்று. [16] மஞ்சளும் சுண்ணும்பும் கலந்தால் சிவப்புத் தோன்றுதல் போலப் பூதச் சேர்க்கையால் உயிர்ப்பு (உணர்வு) தெரிகின்ற தெனக் கொள்வாருமுளர். வள்ளுவர் உயிர் தனித்ததெனவும் (துச்சிலிருந்த உயிர் என்பதில்) அணுவனைய ஒரு பொருள் எனவும் கருதுவர் எனத் தெரிகிறது. உடல் ஒரு குறிக்கோளை நிறைவேற்றுதற்காக அருளப் பெற்றதென்பர். அன்பினை வளர்க்கவே அஃதருளப் பெற்றது. உடல் மனம் உயிர் யாவும் ஒரே நோக்கத்திற்காக இயங்க வேண்டுமென்பது. உயர்ந்த குணங்களும் அறிவும் இல்லாதவர் உடல் மரப்பாவை போல்வ தென்பதால் மனித உடலில் அறிவு வளர்தலாகிய சிறப்பியல்பு உண்டென்பது.

உடலின் வளர்ச்சி நல்லின்ப உணர்ச்சிகளைப் பெறுதலினால் ஆகும். மக்களுடலையும் காதலியதுடலையும் தொடும் இன்பம் உடலை வளர்க்கும். தலைவன் தலைவி இருவர்ப் பிரிவும் அவ் வுணர்ச்சி முதலியன குன்றுதலால் உடல் வளர்ச்சியைக் குறைக்கும். உடலைத் துறவினால் அழகற்றதாக்கிக்கொள்ள வேண்டுமென்பது வள்ளுவர் கருத்தன்று. அறிவுடன் தோற்றப் பொலிவும் மனித உடலுக்கு வேண்டுமென்பர். நல்லுணவினால் உடலை வளர்க்குமாறு மருந்ததிகாரம் கூறும். கள் முதலியவற்றால் உடலை மயக்கிக்கொள்ளாமல் உடலைப் பயன்கொள்ள வேண்டு மென்பது ஆசிரியர் கருத்து.

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனுக்குதற்கே உடல் வேண்டுமென்பது வள்ளுவர் கருத்து. உடலை இயன்றவரை துன்பங்களைத் தாங்கக்கூடியதாக பழக்கவேண்டும். தீயன செய்யும் உடம்பு மறுபிறப்பில் தீய பிறப்பையுறும் என்ற நம்பிக்கை வள்ளுவர்க்குமுண்டு. தவநெறியில் நிற்பவர்கள் உடலைப்பற்றிய பற்றினைக் குறைக்கவும் அறுக்கவும் வேண்டும்.[17] ஊனினையுருக்கியுள்ளொளி பெருக்கும் நெறியதுவாகும்.

பொதுவாக உடலின் இயல்பு துன்பம் நிறைந்தது. ஆகவே மெய்யறிவினை வளர்த்து அதனை அருமையுடையதாக ஆக்கிக்கொள்ள வேண்டும். உடல், ஊர்வன, மக்கள் முதலிய எழுவகைப் பிறப்புக்களை எடுத்துவரும். ஏழாவது மனிதப்பிறப்பென்பர். இவ் வேழு பிறப்புக்களில் உயிர் எண்ணற்ற தடவைகளும் மாறி உடலெடுத்துவரும். அப் பிறவி அறுதலே வீடு என்பர். பிறவிப் பெருங்கடல் நீந்துத லதுவேயாகும்.

உறக்கம் இன்றியமையாதது. ஆனால் அது அளவாக இருக்க வேண்டுமென்பது வள்ளுவர்க்கும் உடன்பாடே. வறுமையுள் உறக்கமில்லையென்பதால் வறுமை உடல் வளர்ச்சிக்குத் தடை என்பது கருத்து. உயர்ந்த செயல்களைச் செய்கையில் ஓரளவு தூக்கத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டிவரும். காமம் முதலியவற்றில் தூக்கம் கெடுகின்றது.

உடல் இறப்பைப்பற்றி பல நுட்பமான குறிப்புக்களை ஆசிரியர் தருகிறார். அருகிலிருப்போர் உட்பகைவரானால் சாவு

உண்டாகுமென்பது அனுபவமான குறிப்பு. தூக்கமும் சாவும் ஒன்று போல்வதென்பதால் அளவு கடந்த தூக்கம் ஆகாத தென்பது. இன்று தூக்க மருந்திலேயே மனிதன் இறக்கின்ருன். உணர்ச்சிப் பெருக்கினுல் சாவுண்டாகும் என்பதினுல் சினத்தினுலும் சாவுண்டு என்று விளக்குகிருர். தீநட்பினுலும் சாவுண்டாம். எதிலும் அளவிறந்து செல்வதால் சாவுண்டாம். உயர்ந்த குறிக்கோள்களுக்காக வாழமுடியாத விடத்து இறத்தல் நல்லதெனப் பலவகைகளில் கூறுகின்ருர். மனிதன் நல்லவனுக வாழவேண்டும். இன்றேல் இறத்தல் நல்லதென்பது ஆசிரியர் கருத்து. உடல் இறப்பினும் எண்ணங்களும் குணங்களும் அடுத்த உடலில் செல்லுமென்பது ஆசிரியர்க்குடன்பாடு. உலகோர் கதறும்படி இறத்தலே உண்மையான புகழ்ச்சாவு. வாழத் தெரிவது போல் மனிதன் சாகவும் தெரிந்துகொள்ள வேண்டும். சாவாமல் நீண்டகாலம் வாழ்வதெப்படியென மனிதன் என்றும் முயன்றுள்ளான். யோகம் அதற்கொரு வழி. அமிழ்தமும் சாகா நிலைதரும். அமிழ்தனைய மருந்துகளை உடலிற்கொள்வதன் மூலம் இன்று சாகாமைகாண முயல்கின்றனர்.

பசியென்பதொரு கொடிய நோய். பசியும் பிணியும் நாட்டில் இருத்தலாகாதென்கிருர் வள்ளுவர். நோய்க்கு மருந்தளிப்பதன்முன் காரணத்தை அறிந்து விலக்கவேண்டும். காதலில் (பிரிவில்) ஒரு நோயுண்டாகும். காதல்நோய் உற்றவொருவர் மற்றவராலேயே அதைத் தீர்த்துக்கொள்ள முடியும். இது மனநோய் வகையினதாகும். இப்போது எங்நோய்க்கும் மனநோய் – மருத்துவ (Psycho - analysis) முறையைக் கையாண்டு பார்க்கின்றனர்.

## பொருளடைவு

### உடலின் அமைப்பு:

உடம்பானது வெறும் எலும்பும் தோலும் முதலியன போர்த்து ஆக்கப்பட்டதாகும் (80). பெண்களுடைய (தலைவி) மேனி தளிர் போன்ற மென்மைத் தன்மையுடையதாம் (1113). மண், நீர், தீ, வளி, வான் என்ற

ஐம்பூதங்கள் கலந்தது உடம்பாகும் (271). உடலானது கண் கால் முதலியவற்றைத் தனக்குப் புறத்துறுப்புக்களாகக் கொண்டதுபோல் அன்பு முதலியவற்றை அகத்துறுப்புக்களாகக் கொண்டது (79). ஆடு, கோழி முதலிய உண்ணப்படும் உயிர்களின் உடல்கள் அவற்றையுண்பார்க்குச் சுவை பயப்பனவாகும் (253). சாயல் என்பது மேனியழகு, பிரிவுக் காலத்தில் பசலை முதலிய வற்றால் கெடுவதாகும் (1183).

**உடலின் இயல்பு :**

புலி முதலியவற்றைப் போன்றாரது உடல் வலிமையுடையதாகும் (273). பலரது வடிவம் சிறிய அளவிற்றாக இருக்கும். அது பெருந்தேர்க்குச் சிறிய அச்சாணி போலுமாம் (667). பலரதுடல் மிகவுயரமும் பருமனுமுடையதாகவிருக்கும்; புராணங்களில் திருமால் மூவுலகையுமளக்க எடுத்தவுடல் மிக அரியதும் பெரியதுமாகும் (610). பிரிந்திருக்கையில் அன்புடையாரது (காதலியது) உடல் தன்மீது பசப்பெனப் படும் ஒரு நிறவேறுபாட்டைக் கொள்ளவல்லதாகும் (1185). தாங்குதற்கரிய பருவுடல்களும் உள்ளன. புகழில்லா உடம்பு பூமிக்குப் பாரமெனக் கருதப்படும் (239). ஐம்புலங்களையும் சொல்லையும் செயலையும் அடக்கியவரது உருவம் மலையினும் சிறந்த தோற்றப் பொலிவுடையதாகக் கருதப்படும் (272). தலைவியது (கண்களின்) வடிவம் தம்மைக் கண்டாரது உயிரை உண்ணும் தன்மையதாகக் கூறப்படும் (1084).

**உடலும் உயிரும் :**

உடம்பு உயிரோடு கொண்டுள்ள தொடர்பு முட்டைக்கும் அதனுள் வளரும் பறவைக்குமுள்ள தொடர்பு போன்றதாகும் (338). உடம்பானது உயிரைத் தன்னுள்ளேயொரு ஒதுக்குக் குடியாகக் கொண்டுள்ளது (340). உடம்புக்கும் உயிருக்குமுள்ள தொடர்பு, தலைவிக்கும், தலைவற்குமுள்ள தொடர்பைப் போன்றதாகும் (1212). உடம்பும் உயிரும் பல போதுகளில் ஒரே குறிக்கோளுடையவாதலுமுண்டு. ஆற்றாமை மீதூர்ந்த தலைவன் உயிரும் உடம்பும் சேர்ந்து மடலேறுவா னென்பதாகும் (1132). மக்களுடம்பு, உயிரோடு கொண்ட தொடர்பு அன்போடு பொருந்துதற்கு வந்த நெறியின் பயனென்பர் (73).

**வெற்றுடம்பு :**

உடலினது சாயையே நிழலாகும்; ஒருவனது நிழல் எவ்வளவு தொலைவோடினாலும் நிலைப்பது அவனது அடியிலே யாகும் (208). வடிவமென்பது ஒருவன் மேற்கொள்ளும் வேடமாகும்; ஒற்றர், துறவிகளின் வேடங்கொண்டு செல்வ ரென்பதாம் (586). பாவை என்பது உருவம். அவை மண், சுதை முதலியவற்றால் வனையப்படுவனவாகும். அவை நுட்பமாகிய மனித அறிவில்லாதவர்க்குவமையாம் (407). மரப்பாவைகள் (போன்ற மனித உருவங்கள்) கயிறுகளால் உயிருள்ளனபோலப் பிறரால் இயக்கப்பெறும் (1020). கூலிக்குப் பிணமெடுப்போர் அது யாருடையதாயினும் அகத்தில் அருவருப்புண்டாயினும் பொருளுக்காகச் சுமந்து செல்வர் (913).

**உடம்பின் வளர்ச்சி :**

உடற்கின்பமாவது மக்களது மெய்யைத் தீண்டுதலாம் (65). விதி வகையில் ஒரு செயலில் பயனின்றாயினும் உடல்தான் வருந்திய வருத்தத்தின் அளவாய பயனை முயற்சியினால் அடையும் (619). பிரிவில் தலைவியின் உடல் வருத்தத்தைத் தாங்காததாகும். அப்போதவளது நாணத் தையும் வேட்கையையும் தாங்கிக்கொண்டிருக்கும் உயிரா லேயே உடல் தாங்கப்படுவதாகும் (1163). தறுகண்மையும், ஆற்றலும் இல்லையாயினும் படைவீரரின் உடல் தோற்றம் பெருமையைத் தருவதாகும் (768). உடல் தன்னை மறக்கும் நிலையைப் பொருள் கொடுத்துக் கள்ளினால் கொள்ளுதல் அறியாமையாம் (925). போர் வீரனதுடல் எதிரிவிட்ட வேல்களைத் தன்மீதேற்றுக்கொண்டு வருந்தாமல்மகிழும்(774). குற்றமற முன்பருந்திய உணவு அற்றமையறிந்து பாதுகாத் துண்பானுயின் உடல் மருந்தென ஒன்றை விரும்பாது (942). புகழில்லாத உடம்பானது பூமிக்குப் பாரமாய் நிலவளம் குன்றுதற்குக் காரணமாம் (239).

**உடலின் பயன் :**

தூதுவினைக்குச் செல்பவனுக்கு உடல் தோற்றம் வேண்டும் (684). ஒற்றறிபவனுக்குப் பிறர் ஐயுறாத (துறவி, அந்தணர், வணிகர்) வடிவம் இன்றியமையாததாகும் (585).

தவத்திற்கு வடிவமாவது தமக்குற்ற நோயைப் பொறுத்தலும் பிறவுயிர்க்கு நோய் செய்யாமையுமாகும் (261). எலும்பில்லாத புழு முதலியவற்றின் உடலானது வெய்யிலில் காய்ந்து வருந்துமியல்பினதாம் (77). அன்புடையாரதுடம்பும் (சிபியின் உடல்போல) தனக்கின்றிப் பிறர்க்கேயுரித்தாம் (72).

**தீமை :**

பிறப்பறுத்தலை விரும்புபவர்க்கு அருவுடம்பும் உருவுடம்புமாகிய இருவகையுடம்பும் விடத்தக்க மிகையாகும் (345). உடம்பானது உலகின் துன்பங்களுக்கே இலக்காயதாம் (627). குடியின் கண்ணுள்ளதாய குற்றத்தை மறைக்கக் கருதுபவனுடம்பு துன்பத்திற்கே கொள்கலமாகும் (1029). நோக்கலாகாத பெருநோய் முதலிய கொண்ட உடம்பு, ஒருவற்கு முற்பிறப்பில் உயிர்க்கொலைசெய்து ஊனையுண்டதனல் ஏற்படுவதாம் (330).

**பிறப்பு :**

உடல், உலகின்கண் அன்பு செய்தற்காக அளிக்கப் பெற்றதென்பதாம் (73). இம்மை மறுமையென்பன உயிரெடுக்கும் இப்பிறப்பும் மறுபிறப்புமாம். இன்பமுதலிய நுகர்ச்சிகள் பல பிறப்புகளிலும் தொடருமென்பதாம் (98). ஊர்வன, மக்கள், நீர்வாழ்வன, பறப்பன, விலங்கு, தேவர், தாவரம் எனப்பிறப்பு ஏழுவகையினதாகும் (107). பிறந்த உடல்களுக்கிடும் குறியீடே பெயர் அல்லது நாமமெனப்படும். (360). பிறப்பு அறியாமையும், துன்பமும் உடையது. அது மெய்ப்பொருளைக்கண்டு வீடுபேறு அடைதற்குரியதாகும் (358).

**உடலும் உறக்கமும் :**

சோம்பலோடு கூடிய அளவுகடந்தவுறக்கம் கேட்டைத் தரும் (605). உறக்கத்திற்கு ஓரளவு குளிர்ச்சி வேண்டும், உறக்கம் நெருப்பினிடத்திருக்கையில் உண்டாகாது. சித்துக்களில் உறக்கம் நெருப்புனிடையிலும் ஒருவற்குண்டாகக் கூடும். ஆனல் அது வறுமையில் ஒருநாளும் உண்டாகாது (1049). உறங்கினவர் அந்நேரத்தில் அறிவும் உணர்ச்சியுமிழத்தலின் இறந்தவரோடொப்பாவர் (926)

காமமுதலிய குணங்கள் விஞ்சியவிடத்துத் தூக்கம் வருவதில்லை. பிரிந்தவிடத்துப் புணர்ச்சியை நினைந்தும் கூடியவிடத்துப் பிரிவை நினைத்தும் உறக்கம் வருவதில்லை. ஒன்றினைப்பற்றி ஓயாது நினைத்தலால் உறக்கம் கெடுகின்றது (*1179*). உறங்குகையில் கண்களும் அயர்ந்து மூடியிருப்பனவாகும், ஒருவரது தூக்கம் பெரிதும் அவர் விரும்புதலால் வருவதாகும் (*1212*). தூக்கம் இடையே கனவுகளை உடையதாகும், இன்பக் கனவுகள் தூக்கத்திற் கதிக இடையூறுதலில்லை (*1218*). ஆராய்ந்து கண்ட வினைகளைச் செய்கையில் உறக்கம் கடியத்தக்கதாகும் (*668*).

**உடலும் இறப்பும் :**

உடனுறைவோரிடம் தோன்றும் உட்பகையால் சாவுண்டாகும் (*886*). உயிர்கட்கு உறக்கம் சாக்காடு போல்வதாகும் உறக்கமும் பிறப்பும் அடிக்கடி மாறிமாறி வருதலின் அவ்வாறுகுமென்பதாம் (*339*). சாவு மிகத் துன்பமுடையதாகும். அதுவும் பிறர்க்கொன்றினைக் கொடுக்க முடியாதவிடத்தினியதாகும் (*230*). ஒருவனதுடல் இருப்பது போன்ற புகழை நிறுத்தியவனது சாவு அரியன செய்யும் திறம் உடையவர்க்கன்றி இல்லை (*235*). சாவு பகைவரால் போரில் ஏற்படுவதுண்டாம், அது மிகவும் எளிய சாவெனக் கருதப்படும் (*723*). உடல் இறக்கையில், இறவாமல் புகழென்ற ஒன்றனை நிறுத்திச் செல்லுதற் குரியதாம் (*233*). வேற்று வேந்தால் சாவு நேரினும் அதனைத் தூதுவர் ஏற்க வேண்டும், அன்றி அஞ்சுதலாகாது (*690*). மரத்தின் நுனி வரை யேறியவன் மேலும் சென்றால் சாவுண்டாம். போர் வினையில் செல்லலாமளவிற்கு மேலும் சென்றாலும் சாவுண்டாம் (*476*). சாவில் உடலே இறக்கின்றது. அற முதலியன இறத்தலில்லை, உயிரோடு தொடர்ந்து செல்வன வாகும் (*36*). வஞ்சினங் கூறுவோர் அதனை முடித்தற்குரிய தோர் எல்லை சாகுமளவாகும் (*779*). ஒருவனது சாவு அன்புடையாரிடம் கண்ணீர்விடச்செய்யும். தமக்குரியார் உருகிக் கண்ணீர்விடுமாறு இறத்தல் விரும்பத்தக்கதாகும் (*780*); குற்றங் குறைகளை ஆராய்ந்துகொள்ளாத நட்பினால் சாதலுண்டாம் (*792*). சாதல்வரையில் ஒருவன் கல்வி கற்க வேண்டும் (*392*). புறங்கூறுதல் முதலிய தீமைகளை ஒருவன்

செய்து வாழ்தலினும் சாதல் (அப் பாவத்தை மேலும் மிகுவித்தலின்மையின்) அற நூல் கூறும் ஆக்கத்தைக் கொடுக்கும் (*183*). சாவாமை அமிழ்தத்தினால் கிடைப்ப தென்பர் (*82*). காதலர் ஒருவரையொருவர் பிரிந்திருக்கையில் அதனைச் சாதலைப் போன்றுணர்வரென்பதாம் (*1124*). உலகில் இதுவரை இறந்தார் தொகை எண்ணற்குரியதன்று (*22*). அனாதையாக வந்திறந்தவர்களை இல்லறத்தார் போற்றி அடக்கமுதலியன செய்தல் கடனாகும் (*42*). சாவு சின மிகுதியால் உண்டாதலுமாம் (*310*).

## உடலும் நோயும்:

விக்குள் இறக்குந் தருவாயிலும் தோன்றுவதுண்டென்ப தாம் (*335*). பசி உடலுக்கு வரும் ஒரு கொடிய நோயாகும் (*227*). பிணியென்பதே ஒரு சிறந்த நாட்டில் இருத்தலாகாது (*734*). நோயினது சாத்தியா சாத்தியம், தோற்றம், நடுவீறு முதலியன ஆராயப்படவேண்டும் (*949*). பிணி உடலைக் கெடுப்பதும் பற்றிக்கொண்டு விடாததுமாகும் (*1014*). காதலரது கண்களுள் ஒன்று காம நோய்க்குக் காரணமாகும், மற்றதற்கு மருந்துமாகும் (*1091*). நோய்களெல்லாம் மருந்தினைத் தாம் தோன்றிய உடலிலன்றி வேறிடத்திலிருந்துபெறும்; காம நோய்மட்டும் தோன்றிய உடலிலேயே மருந்தினையுடையதாகும் (*1102*).

# 12. உணவு

உடல் நீண்டகாலம் நிற்பதற்கும் வளர்வதற்கும் தேவை யானது உணவு. நாளும் உறும் அழிபசியையும் (உறுபசியையும்) நீக்குவதுமதுவாகும். மருந்து என்ற அதிகாரத்தில் வள்ளுவர் உணவைப் பற்றிச் சொல்லுகிறார். 'மாறல்லதுய்க்க' என்ற விடத்தேயே ஆசிரியர் நல்ல சத்துணவுகளைப் பற்றியெல்லாம் கருதியிருக்கக்கூடும். புலாலுண்ணுமை, கள்ளுண்ணுமை முதலிய அதிகாரங்களில் மக்களுணவு பற்றிய குறிப்புக்கள் வருகின்றன. அமிழ்தத்தைப் பற்றியும் நஞ்சுபற்றியும் பேசும்போதும் நல்லுணவு தீயுணவு பற்றிய கருத்துக்கள் கிடைக்கின்றன. தேன், பால், நெய், பழமரம், பெரிதுண்ணல் முதலிய பொருள்களைப் பற்றிப் பேசுகையில் ஒரு நல்ல வளர்ச்சியடைந்த நாட்டில் உணவுக் கொள்கையைப்பற்றிப் பேசுவோராகவே வள்ளுவர் தென்படுகிறார்.

உணவு உயிர்கட்கின்றியமையாதது. அது மழையினுல் வளர்கிறதென்கையில் நெல் முதலிய தானிய உணவுகளையே ஆசிரியர் பெரிதும் கருதியிருக்கிறார். அரசாங்கத்தின் ஒரு சிறந்த உறுப்பே உணவாகிறது. 'உழவு' அதிகாரத்தில் உணவை விளைக்குமுறைகளையெல்லாம் ஆராய்கிறார். உண்ணும் பொழுது மகிழ்ச்சியோடுண்டாற்ருன் உணவு உடலிற் பொருந்து மெனவே உண்ணு முறைகளைப்பற்றிக் கூறுகிறார். 'அற்றது போற்றியுணல்' என்பதில் 'அறல் செரித்தல்' என்ற பொருளில் உரையாசிரியர்களெல்லாம் எழுதுவர். சிக்கலறுதல் என்ற பொருளும் அங்குப் பொருந்தும். மலச்சிக்கல் அற்ருல் பெரிதும் நோயே யில்லையெனலாம், நோய்கட்கெல்லாம் சிக்கலே ஒரு பெருங் காரணமென இன்றளவும் வளர்ந்துள்ள மருத்துவ அறிஞரெல்லாம் கூறுவர்.

பகுத்துண்டலும் விருந்தோடுண்டலும் இன்பமாக உண்ணுதற்குரிய வழியாகும். அதுவே தன் உணவினையும் செல்வத்தினையும் பெருக்கும் வழியெனவும் ஆன்ருேர் கூறுவர்.

அறம் பிழைத்தவனுக்கு அன்னமும் பிழைக்குமென்பதை ஆசிரியர் பலவிடங்களிற் சுட்டுகிறார். கள்ளையும் புலாலையும் பொருந்தா (ஆகா) உணவுகளிற் சேர்க்கிறார் ஆசிரியர். அவை உடம்புக்குமட்டுமன்றி உயிருக்கும் (ஆன்மவியலுக்கும்) பொருந்தாதன.

செவிக்குணவு முதலிய உண்ணுவுணவுகளைப்பற்றியும் குறளிற் கூறுகிறார்.

அரசனின் ஆறங்கங்களுள் உணவு ஒன்று என்றமையான் நாட்டிற்கெல்லாம் நல்லுணவை வழங்கல் அரசின் கடனென்பதாம். இன்று எவ்வளவோ பொதுவுடமை பேசப்படுகிறது. தன்னுழைப்பினல் வந்த உணவைத் தம் வீட்டிலிருந்துகொண் டுண்பதே இன்பமென்கிறார். ஒவ்வொருவரும் தாமுண்பது தம் உழைப்பால் வந்ததாகவேண்டும். தாம் நேரில் பார்த்துப் பயிரிடக்கூடியவைகளையே தனக்குக் கிழமைப் பொருளாகக் கொள்ளலாமெனில் மற்றவற்றை அரசிடம் ஒப்படைத்துவிட வேண்டுமென்பதாம். தொழுதுண்டு வாழும் அடிமை வாழ்வும் வேண்டாமெனில் உரிமையுள்ள நாட்டுணவே சிறந்த தென்பதாம்.

செரிக்கவேண்டும்; சிக்கலிருத்தலாகாது; குறைவாகவும் உண்ணலாகாது; மிகுதியாகவும் உண்ணலாகாது; சத்துள்ள உணவையே உண்ணவேண்டும். இத்தனையும் வள்ளுவரது உணவுக் கொள்கைகளாக இருக்கின்றன. நோய்க்கு மருந்து கொடுக்குமுன் நோய்க்காரணத்தை அறியவேண்டும்; நோயாளி கட்குக் காரணங்களை முதலில் விளக்கிச் சொல்லி நோய்வாராமல் தடுக்கவேண்டும். அமிழ்தம் நீண்டகாலம் உயிர்வாழவைப்பது. எனவே உணவு மனிதனை நீண்டகாலம் வாழவைப்பதாக வேண்டும்.

பிறரோடு பகிர்ந்துண்ணுதலே தன் பசி நீங்குவதற்குரிய வழி; நல்வாழ்க்கை நெறியும் அதனால் நெறிப்படும். ஈகை, விருந்துபசரித்தல், ஒப்புரவு முதலிய அதிகாரங்களில் வள்ளுவர் இருப்போரை அறத்தின் காரணமாகப் பலர்க்கும் பகுத் துண்ணுமாறு செய்கிறார். அரசியல் சட்டங்களும் சமூகப் புரட்சியும் இல்லாத பங்கீடு இதுவாகும்.

அழுக்காறு, அநீதி, சூது, முதலிய காரணங்களால் ஒருவற் குணவு கிடைக்காமற்போகிறது. எனவே அறநெறியே ஒருவனைப் பசித்துன்பத்தினின்று நீக்கும்.

பசியை நீக்குதல் போன்ற ஆற்றல் ஒருவற்கு வேறில்லை. நாடென்பது பசியில்லாததாக வேண்டும். எனவே சிறந்த நாடென்பது பசியை நாட்டிலிருந்து விரட்டியதாக வேண்டும், பசி நாட்டிலுள்ள பண்பையும் குணங்களையும், அழிக்கக் கூடியதாகலின்.

மிகவுயர்ந்த உயிருணர்ச்சியுள்ளவன் புலாலுண்ணுமையும் மிகவுயர்ந்த மனிதவுணர்ச்சியுள்ளவன் கள்ளுண்ணுமையும் வேண்டும். கள்ளும் நஞ்சும் மனிதவுணர்வை யழித்தலில் ஒரு தன்மையன.

உணவுப்பொருள்களில் தேனெடு கலந்த பாலுணவு மிக வுயர்ந்ததாகக் கூறப்படுகிறது.

## பொருளடைவு

### உணவு :

உணவு மற்ற உயிர்கட்கும் மக்கட்கும் இன்றியமையாத தாம் (1012). ஒரு நாட்டின் உணவுப்பொருள்கள் படைகுடி முதலிய அரசற்குரிய பொருள்கள் ஆறனுள் ஒன்ருகும் (381) பல்வகை உணவுப்பொருள்களும் அரணில் இருத்தல் இன்றி யமையாததாம் (745). உணவுகள் மழையினுல் உண்டா கின்றன ; நீருணவும் மழையினுல் கிடைப்பதாம் (12).

### உணவுண்டாக்குதல் :

களையை எடுப்பதனுல் உணவிற்குரிய பயிர் நன்ருக வளரும் (550). உணவு தன்கையால் உழுதுண்ணும் உழைப் பினுல் ஒருவற்கு வரவேண்டும். அவ்வுண் பிறரிடம் சென்றி ரத்தலைத் தூண்டாது, இரப்பவர்க்கும் கொடுக்கச் செய்யும் (1035). உழுதலைச் செய்க. அதனுல் வரும் உணவே வாழ்க்கைக்குரியதாகும்; பிறரைத்தொழுது அதனுல் வரும் உணவு நல்வாழ்க்கைக் குரியதாகாது (1033). நீர்க்கஞ்சி யுணவாயினும் தன்முயற்சியால் வந்ததே இனியதாம் (1065).

தமது முயற்சியால் வந்தபொருளைத் தம்மிடத்தில் இருந்து கொண்டு உண்டல் இனியதாம் (1107).

**உண்ணுமுறையும் மருந்தும்:**

தம்மக்கள் சிறுகைகளால் அளையப்பட்ட உணவு உண்ணுதற்கு அமிழ்தத்தினுமினியதாம் (64). மேலும் உண்பதினும் முன்னுண்டது அறுதல் இன்பந்தருவதாம் (1326). உணவும் (செயல்களும்) ஒருவன் பகுதிக்கொத்தன வன்றி மிகுமாயினும் குறையுமாயினும் வாதமுதலிய மூன்றினுலும் நோயுண்டாம் (941). முன்னுண்டது செரித்த படியை யறிந்துண்டால் மருந்தெனவொன்று உடலுக்கு வேண்டாம் (942). அற்ற அளவறிந்துண்டால் உடம்பு நெடிது காலம் நிற்கும் (943). மிகப் பசித்தபின் உண்பான் பகுதி, காலவியல்பு, சுவைவீரிய முதலியவற்ருேடு மாறுபடாத உணவுகளைக் குறிக்கொண்டு உண்ணவேண்டும் (944). மாறுபாடில்லாத உணவுகளை மனம் வேண்டிய அளவினுல் உண்ணுமை வேண்டும்; பிணிவாரா அளவினுல் உண்ண வேண்டும் (945). மிகப்பெரிதாகவன்றி அளவுக்குச் சிறிது குறைத்துண்டலே இன்பமாகும். பேரிறை நோயையே உண்டாக்கும் (946). வயிற்றுப் பசித் தீயின் அளவறிந்து உண்ணவேண்டும் (967).

**மருந்து:**

நோயைக் குறிகளானறிந்து அதன் காரணத்தையும் தீர்க்கு முறையையுமறிந்து மருந்துண்ணவேண்டும் (948). நோயுற்றவன் பிணி, தீர்த்தற்கேற்ற காலம் ஆகியவற்றின் நிலைகளையறிந்து மருந்துண்ணவேண்டும் (949). மருந்து, நோயுற்றவன், அதனைத் தீர்ப்பவன், மருந்து, அதனைப் பிழையாதியற்றுவானென்ற நாற்பகுதிகளையுடையதாம் (950). மருந்து மரம் தன் குறைநோக்காமல் யாவருடைய நோயையும் தீர்ப்பது, கோடற்குரியதாகவும் மறையாது வெளிப்பட்டு நின்றும் காலத்தால் வேறுபடாமலும் மருந்து பயன்படவேண்டும் (217). மருந்து உடம்பினைச் சாவாமற் காப்பதாம் (968). நோய்கட்கெல்லாம் மருந்து பிறவாகும்; காம நோய்க்கு அதனைத் தூண்டியவர்களே மருந்தாவர் (1102). தலைவியது நோக்கு இரண்டனுள் ஒன்று

நோயையுண்டாக்கும்; மற்றது அதற்கு மருந்தாகும் (*1091*).

**அமிழ்தம் :**

அமிழ்தம் சாவாமைக்குணவாகும்; விருந்து புறத்திருக்கத் தானேயுண்ணுதல் அமிழ்தமாயினும் ஆகாதென்பதாம் (82). அமிழ்தமெனத் தக்கது உயிர்களைச் சாகாமல் நிலைபெறச் செய்யுமழையாகும் (11). தலைவற்குத் தலைவியது தோள்கள் அமிழ்தமனைய அருமையும் இன்பமுமாம் (1106). அமிழ்தமெனத் தக்கது தம்மக்கள் சிறுகைகளால் அளாவப்பட்ட உணவென்பதாம் (64). அமிழ்தம் சாக்கடையின்கண் கொட்டப்பட்டால் அது கெட்டுப்போகும் (720).

**பகுத்துண்டலும் பயனும் :**

பிறர்க்குப் பகுத்துத்தானுண்டல் தனதுவழி எப்போதும் நிலைத்திருப்பதற்குரிய வழியாகும் (44). பகுத்துண்டல் ஒருவனுக்குப் பசியென்னும் தீப்பிணியைத் தீண்டவிடாது (227). பிறர்க்கீயாது தாமே தனித்துண்டல் பிறர்பாற் சென்றிரத்தலினும் இன்னாததாம் (229), ஊருணியிலுள்ள நீர் பாழ்போகாது நெடிதுநின்று எல்லோர்க்கும் தப்பாதுதவும் (215). பயன்படுமரம் பழுத்தால் அதன் பழங்கள் எல்லோர்க்கும் எளிதிற் பயன்தரும் (216). பெரும்பொருளுடையவன் தானும் உண்ணவேண்டும்; பிறர்க்கும் உண்ணுதற்குதவவேண்டும். இன்றேலவன் செத்தவனாவான் (1001). வேள்வியிலிடப்படும் அவியுணவு தேவரால் உண்ணப்படுவதாம் (413).

**விருந்தூண் :**

இல்லின் கண்ணிருந்து பொருளைப் போற்றுதலின் பயன் விருந்தினரை உண்பித்தலேயாம் (81). விருந்தினர் இல்லின் புறத்தாராக ஒருவன் உண்டலாகாது (82). விருந்தினரை நாளும் உண்பித்தல் நல்குரவினின்றும் ஒருவனை நீக்கிவிடும் (83). முகமலர்ந்து விருந்தினரை உண்பித்தல் ஒருவனது வீட்டில் திருமகளை உறையச்செய்யும் (84). விருந்தினரை உண்பித்தபின் மிகுந்ததை ஒருவன் உண்ணவேண்டும் (85). சென்ற விருந்தை ஓம்பிப்பின் செல்லக்கடவதனைப் பார்த்

திருப்பவன் தேவர்க்கு விருந்தாவான் (86). விருந்துண்பித்தலின்பயன் இவ்வளவென்றில்லை. வந்த விருந்தினரின் தகுதியளவேயாம் (87). விருந்தூட்டுதலை இகழ்தலே உடமையுள் வறுமையாகும்; அது பேதைமையுமாகும் (89). விருந்தினர் முகம் வேறுபட்டுநோக்கவாட்டமுறுவர் (90).

**உணவிழத்தல் :**

பொருளைக் காத்துப்பின் உணவின்றியும் இருப்பவர் பொருளிருந்த ஞான்று விருந்தினரை உண்பியாதவராவர் (88). பிறர்க்குக் கொடுப்பதன்கண் அழுக்காற்றைச்செய்யும் ஒருவன் சுற்றத்துடன் தானும் உண்பதனையும் (உடுப்பதனையும்) இழப்பான் (166). ஒருவன் நன்றாக உண்டல் கயவரது பொருமையை உண்டாக்கும் (1079). சூது ஒருவற்கு உணவு கிடைக்காமற் செய்துவிடும் (939). முறைகோடி ஆராயாது செய்யுமரசர் நாட்டில் உணவு கிடைக்காது (554). துறவிகளுக்கு உணவளித்தற்காக மற்ற இல்லறத்தார் தவத்தை மேற்கொள்ளவில்லையென்பதாம் (263). உண்பதற்கில்லாதவர் துறக்கத்தக்கவராவர்; இன்றேல் பிறருணவிற்குக் கூற்றுவர் (1050).

**பசியும் உணவும் :**

மழை, காலத்திற் பெய்யாது பொய்க்குமாயின் உலகில் பசி நிலைத்துநின்றுயிர்களை வருத்தும் (13). பசியென்பது ஒரு கொடிய நோயாகும். பகுத்துண்டலைப் பயின்றவர்களை அது தீண்டுவதில்லை (227). பசியென்பது சேராமல் இயல்வதே ஒரு சிறந்த நாடாகும் (736). பசியில்லாமலாக்குதலென்பது ஒரு ஆற்றலாகும். பசி முதலியவற்றைப் பொறுத்து அதனை மாற்றுவது தவ வலிமை. பசிக்குணவீந்துமாற்றும் இல்லரத்தாரது வலிமை தவ வலிமையினும் சிறந்ததாம் (225). பசி பெரிதும் வறியரிடத்திருக்கும்; அது குணங்களை அழிக்கக்கூடியதாகும். அப்பசியைத் தீர்த்தலே ஒருவன் பொருளை வைக்குமிடமாகும் (226). தாயது பசியாயின் அது விரைந்து நீக்கத்தக்கதாம். ஆயினுமது சான்றோர் பழிக்கும் வினைகளைச் செய்து தீர்க்கத்தக்கதன்றாம் (656). பேதையொருவன் பெரிய செல்வத்தை அடைந்தவழி அதனால் அயலார் பசிநீங்க, உற்றார் பசிநீங்காதிருக்கு

மென்பது (837). உண்பதற்குமுன் நல்லபசி இருக்க வேண்டும் (944). பசி ஒரு தீயெனப்படும். அதனளவறிந்து உணவுகொள்ளவேண்டும்; இன்றேல் நோயும் அளவின்றி யுண்டாகும் (947).

**கலம்:**

பாத்திரம் தூய்மையாக இல்லாவிடில் அது பால் முதலியவற்றைக் கெடுத்துவிடும் (1000).

**பொருந்தா உணவு; புலால்:**

புலாலுணவு, ஒருவன் தனதூனைப் பெருக்குவதற்காக உண்பதாகும். அவ்வுணவு அருளுக்கு மாறுனதாகும் (251). புலால் சுவைக்காக உண்ணப்படும். புலாலுண்பவர் மனம் அறத்தினை நோக்காது (253). புலால் உணவுண்ணல் பாவமாகும் (254). ஊனுண்பவன் நரகத்திற்குச் சென்று துன்புறுவான் (255). தின்னுதற்காகப் பிறவுயிர்களின் உடலைக் கொல்லலாகாது (256). புலால் பிறிதோருடம்பின் புண்ணெனவறிந்து அதனையுண்ணுமை வேண்டும் (257). ஊனுண்ணுதல் மயக்கமாகிய குற்றத்தினீங்கிய அறிவுடைமையாகாது (258). ஓருயிரின் உடலையுண்ணுமை ஆயிரம் வேள்வி செய்தலினும் நன்ருகும் (259). புலாலை மறுத்தவனை உலகில் எவ்வுயிரும் தொழும் (260).

**கள்:**

காமம் போலக் கள் நினைக்கையிலும் காண்கையிலும் களிப்புறுத்தலில்லை (1281). கள்ளின்மேல் காதல் கொண்டுண்டவர் தம் ஒளியினை இழப்பதுடன் பகை வராலும் அஞ்சப்படார் (921). கள்ளுண்டல் தாய் முன்பும் இன்னுததாம்; சான்ருேர் அவனை ஒரு பொருளாக எண்ண மாட்டார் (923). கள்ளுண்டல் ஒருவனிடத்து நாணத்தை இழக்கச் செய்துவிடும் (924). கள்ளுண்டல் பொருளை யழிப்பதுடன் செய்வதறியாமையைத் தருவதாம் (925). கள்ளுண்டார் நஞ்சுண்டார் போல எக்காலத்தும் அறிவில் லாதவர் (926). கள் திருமகளை ஒருவனிடத்தினின்றும் நீங்கச் செய்துவிடும் (920). குற்றமிருந்தும் கள் உண்ணும் வேட்கையை மிகுவிப்பதாம் (1288). கள் ஒருவனைத்

தடுமாறு செயல்களைச் செய்யத் தூண்டும் (838). களிக்குந் தோறும் கள் மேலுமுண்ணுமாறு விருப்பத்தையும் இன்பத்தையும் தரும் (1145). கள்ளுண்டல் உள்ளூரா லெல்லாம் அறியப்பட்டு எள்ளி நகையாடுதற்கிடமாம் (927). கள்ளுண்டதனை மறைத்தலியலாது, அது மனதில் கிடந்த மறைபொருளையெல்லாம் வெளிப்படுத்திவிடும் (928). கள் உண்டானைக் காரணங்காட்டித் தெளிவித் தலியலாது (929). காமம் போல நினைத்த அளவிலும் கண்ட அளவிலும் இன்பந்தருதல் கள்ளுக்கில்லை (1281). கள் காய்ச்சப்படுவதுண்டு (1090).

**நஞ்சு :**

நஞ்சு உண்ணத்தகாததாம்; அதனையுண்ணுமாறழைப் பவர் யாருமில்லை, கண்ணோட்டமுடையவர் உரிமையுடையா ரளிப்பின் அதனையுமுண்பரென்பதாம் (580). ஊர் நடுவே நஞ்சுமரம் பழுத்தாலும் அதனை யாரும் உண்பாரில்லை (1008). நஞ்சு ஒருவனை என்றுமுணர்வில்லாத பிணமாக்கிவிடும். நஞ்சும் கள்ளும் இவ்வகையில் ஒரு தன்மையன (926).

**தேன் :**

பாலொடு கலந்த தேன் பணிந்த மொழிகளையுடைய தலைவியது எயிறூறிய நீருக்குவமையாம் (1121).

# 13. உதவி

ஈகை, ஒப்புரவு, செய்ந்நன்றியறிதல் போன்ற அதிகாரங்களின் கருத்துக்கள் இங்காராயப் பெறுகின்றன. உலகில் பொருள் உள்ளோரும் இல்லோரும் என இருவகையினர் மக்கள். ஆனால் என்றும் உலகில் அறிஞர் இன்மையை விரும்பியதேயில்லை. அதனை எதிர்த்தே வந்துள்ளனர். இன்று நாட்டில் இன்மையைப் போக்கப் பொதுவுடைமை வேண்டுமென்கின்றனர்; அரசியல் சட்டம் செய்கின்றனர். இதுவரை, உள்ளோர்க்கறங் கூறி அவர் செய்யும் ஒப்புரவு, ஈகை மூலம் இன்மையைப் போக்கி வந்தனர். ஈகை யென்பது பிறர்கேட்டீயும் உணவும், சிறு பொருளும் பற்றிய உதவியாகலாம். ஒப்புரவென்பது அளவில்லாது, கேளாது கொடுக்கும் கொடையாகலாம். அது வாழ்க்கையில் எவ்விதமான தேவையும் ஆகலாம். ஈகை சிறு செல்வர்க்கும் பொதுவாக எல்லார்க்கும் உரியதாகலாம். ஒப்புரவு பெரும் பொருளாளர்க்கும், சிலபோதுகளில் சிறுசெல்வரும் தன்னை மறந்து செய்யும் கொடைக்கும் உரியதாகலாம். ஒப்புரவு பெரிதும் உள்ளத்தைப் பொறுத்தது. பிற செல்வர்க்கும் தேவையான உதவிகளைச் செய்வதும் அதுவென்னலாம்.

உலக நடமாட்டமே இவ்வறங்களாலாவது எனக் கண்டனர் உயர்ந்தோர். இரப்பாரையில்லாத ஞாலம் மரப்பாவை சென்று வந்தற்று என்றனர். ஊருணியும், பழமரமும், மருந்து மரமும் ஒப்புரவுக்குவமைகளாகக் கொள்ளப்பட்டன. தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு வேளாண்மை செய்தற்பொருட் டென்றனர். பெரிதும் ஒப்புரவு கைம்மாறு கருதாததெனக் கருதப்பட்டது. ஈகையுள் சில கைம்மாறு கருதியும் ஆகும் போலும்! குடிகட்குக் 'கொடுத்தல்' என்பது சிறந்த அரசவியல்புகளுள் ஒன்றாகக் கொள்ளப்பெற்றது. ஒப்புரவு பற்றிய வரலாறுகள் புறநானூறு முதலிய விலக்கியங்களுள் மிகவாகக் காணப்பெறுகின்றன.

ஒப்புரவு வாழ்க்கையே உயிர்வாழ்க்கை. மற்றது செத்ததோடொக்குமென்பதால் இதன் அருமையும் பெருமையும் புலப்படும். தேவருலகில் கொடுப்போரும் கொள்வோருமின்மையால் அதனினும் ஒப்புரவுடைய இவ்வுலக வாழ்க்கை சிறந்ததென்கிருர்.

பரிமேலழகர் விளக்கத்தின்படி ஒப்புரவு என்பது பாழ் போகாது நெடிதுநின்று, எல்லார்க்கும் வேண்டுவன, தப்பாது, எளிதில், தன்குறை நோக்காது உலகிற்குதவுதல் என்பதாம். தமிழில் 'ஒப்புரவு' என்பது ஓர் உயர்தனிச் செம்மையறமாகும். பாரதி கூறிய இன்னறுங்கனிச்சோலைகள் செய்தல் முதலிய கல்வி, மருத்துவ அறங்களெல்லாம் ஒப்புரவின் பாற்படும்.

ஒப்புரவு ஆண்மையுடையது. அது பகைவரிடத்தும் தளர்ச்சி வந்துழி யுதவுவதாம். பெரும் ஒப்புரவுகளையெல்லாம் ஆற்றவுங் காக்கவுங் கூடிய தன்மை அரசிற்குரியது.

ஈகை ஒரு நாடு பிற நாட்டிற்கும் அளிப்பதாம். அதனல் மேலுலகம் இல்லையாளுலும் கொடுத்தல் சிறந்தது. வந்து கேட்டவர் வேண்டுவன வெல்லாம் கொடுக்கவேண்டும். அவர் 'இல்லை' யென்னும் குறையினைப் பிறரிடம் சொல்லாமல் கொடுக்கவேண்டும். அவர் இனி வறுமையே யில்லை (அடியோடொழிந்தது) என்னுமாறும், தான் கேட்பவரிடம் இல்லை யென்னுமலும், தானும் அவனைப்போல் இல்லாதவனே என்னுமலும் என்றெல்லாம் இதற்கு விளக்கங் கூறுவர். ஈகையுடையவன் குலமே அவனல் பெயர் பெறுகின்றது.

பொருளைப் பகுத்துண்டலுக்காகவே இவ்வீகையும் ஒப்புரவும் அறங்களாக வகுக்கப்பெற்றன. ஈயவியலாத இடத்துச் சாதலும் நன்றென்ற கோட்பாட்டினை ஆழ நினைக்கவேண்டும்.

நன்றியறிவென்பது உலகில் ஒப்புரவுக்கு ஊக்கமளிக்கவும் அதனை நிலைக்க வைக்கவுமாம். ஒப்புரவினைப் பாராட்டுகையில் அவர் மேலும் மேலும் ஒப்புரவாளராகிருர். அனைத்தையும் உலகிற்கு அளிக்கிருர். நன்றி செய்தவனை என்றும் ஏழ்பிறப்பும் நினைத்து அவர் எத்தனைதான் தீமை செய்யினும் அதனை மறந்தும் வாழ்தலிற்ருன் உலகில் ஒப்புரவு நிலைக்கிறது. பெற்ருேர்க்கு மக்களும், இறைவனுக் குயிர்களும், அரசர்க்குக் குடிகளும், ஆசானுக்கு மாணவரும் காட்டும் நன்றியுணர்வு இங்குக்குறிக்கப் பெறுகின்றது.

**பொருளடைவு**

**ஒப்புரவு**

உலக நடையினையறிந்து செய்யும் ஒப்புரவுகள்கைம்மாறு கருதத்தக்கனவல்லவாம். அவ்வகையில் அது மாரிபோல் வதாம் (211). ஒப்புரவென்பது, முயிற்சியினலும், அதன்வழி யுண்டாய பொருளினலும் ஆகக்கூடியது. அது தக்கார்க்கும் தக்க நெறியிலும் உதவுதற் பொருட்டேயாகும் (212). அது, தேவருலகத்திலும், இவ்வுலகத்திலும் சிறந்ததொரு செயலாகும். தேவருலகத்தில் ஒப்புரவுக் கிடமின்மையின் அது இவ்வுலகத்துக்குரியதோர் பெருநன்மையாம் (213). ஒப்புரவுடையவனே உயிர்வாழ்பவனவான். மற்றவன் உயிரினறிவும் செயலுமின்மையின் செத்தாரோடெப்பான் (214).

**ஒப்புரவுடைய பிற :**

அறிவுடையானது செல்வம் ஊருணி நிறைந்தாற் போலப் பாழ் போகாது நெடிதுநின்று எல்லார்க்கும் வேண்டுவன தப்பாது உதவுமென்பதாம் (215). ஒப்புரவாளனது செல்வம் பயன்மரம் ஊர்நடுவே பழுத்தாற்போல எல்லார்க்கும் எளிதில் உதவுமென்பதாம் (216). பெருந்தன்மையாளனிடம் சேர்ந்த செல்வம் மருந்துக்குதவும் மரம்போன்று தன்குறைநோக்காது எல்லார் வருத்தத்தையும் தீர்க்கும் (217). ஒப்புரவு செல்வஞ் சுருங்கிய காலத்திலும் செய்யத்தக்கதாம் (218). ஒப்புர வாளன் வறுமையுற்றுல் தன்னுகர்ச்சிக்காக வருந்தாமல் ஒப்புரவு செய்ய முடியாமைக்காக வருந்துவான் (219). ஒப்புரவினல் கேடுவருமாயின் ஒருவன் தன்னைவிற்றுயினும் அவ்வொப்புரவினைச் செய்து அக்கேட்டினை ஏற்றுக்கொள்ள வேண்டும் (220).

**ஒப்புரவும் அரசும் :**

உபகாரம் ஆண்மையின் பயனும் சிறப்புமாகும். அது பகைவனிடத்தும் அவர்க்குத் தளர்ச்சியுற்ற காலத்துச் செய்யத்தக்கதாம் (773). வேளாண்மை விருந்தோம் புதலைக் குறியாக உடையதாகும். அது இல்வாழ்க்கையின் பயனகும் (81). கொடை, ஒரு அரசனை அரசர்க்கெல்லாம்

ஒளியுடையனாக ஆக்குவதாம் (390). பெருங்கொடையுடையவன் உலகில் யாவர்க்கும் சிறந்த துணைவனாவான் (526); பிறர்க்குச் செய்யும் தானமானது மழையின்றி வளராததாகும் (19).

**ஈகை :**

ஈகையாகிய உதவி அரசர்க்குமுரியதோர் இயல்பாகும் (382). கொடை மெய்ம்மையுடைய குலத்தினர்க்குரியதோர் இயல்பாம் (953). ஈயு நெறியானே தம் பொருளின் எல்லையையறிந்து அதற்கேற்ப கொடுக்க வேண்டும் (477). ஈயாமை பகைவர்க் கொருவனை எளிமையாக்கிவிடும் (863). ஈயாது பொருளில் பற்றுள்ளஞ் செய்தல் நிறைதலில்லாப் பேய்ப்பிறப்பை யுண்டாக்கும் (1002). ஈகை, உழவுத் தொழில் முதலியவற்றால் வளர்வதாம் (1035).

**ஈகையும் இரவும் :**

பொருளில்லார்க் கொன்றனைக் கொடுப்பதே ஈகையாகும்; மற்றவை எதிர்ப்பயனைக் குறிப்பனவாம் (221). ஈதலால் வீட்டுலகம் எய்தலில்லை யெனினும் ஈதலே நன்றாகும் (222). யான் இலனெனப் பிறனிடம் கூறாமல் ஏற்றவர்க்கீதல் குடிப்பிறப்பியல்பாம் (223). கேட்டவர் மகிழுமாறு அவர் வேண்டியவற்றை யெல்லாம் கொடுக்க வேண்டும் (224). பிறரது பசியை யொழிப்பதே ஈகையாகும். அது பசியைப் பொறுக்கும் தவவலிமையினும் சிறந்ததாம் (225). வறியாரது பசியைத் தீர்த்தலே பொருளின் பயனாகும், பசி தீர்த்த பொருள் பின்பு அவர்க்கே வந்துதவும் (226).

**பயன் :**

பகுத்துண்பவன் பசியினால் வருந்துதலென்பது எக்காலத்துமில்லை (227). ஈதலே இன்பமாகும், ஈயாமற் பொருளை வைத்திழத்தல் வன்கண்மையின்பாற்படும் (228). பொருளை நிரப்புதலே நோக்கமாகத் தானே தனித்துண்டல் ஒருவற்கிரத்தலினும் தீமை பயப்பதாம் (229). வறியார்க்கீதல் இயலாத விடத்து ஒருவற்கு மிக்க இன்னாதாகிய சாதலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாம் (230).

**உதவி மறவாமை : நன்றியளவு :**

தனக்குதவி செய்யாதவர்க்கும் ஒருவன் செய்த உதவிக்கு மண்ணுலகும் விண்ணுலகுங்கூட ஈடாகாவாம் (*101*). இறுதி வந்த காலத்தொருவன் செய்த உதவி அளவிற் சிறிதாயினும் நிலவுலகத்தினும் பெரியதாம் (*102*). எதிர்ப்பயனேக்கா தாற்றிய உதவி நன்மையாற் கடலினும் பெரியதாம் (*103*). தினைத்துணையாகிய நன்றியும் பனையளவாகக் கருதத் தக்கதாம் (*104*). கைம்மாருய உதவி, காரணம் பொருள் காலம் ஆகியவற்ருல் முன்செய்த உதவியின் அளவினதன்ரும்; முன்னுதவியை ஏற்றுக்கொண்டவர்தம் சால்பின் அளவின தாம் (*105*). துன்ப காலத்துதவியவர் நட்பு கொள்ளத் தக்கவரென்பதாம் (*106*).

**நன்றி நினைவு :**

துன்பத்திற்செய்த உதவி ஒருவனது எழுமை எழு பிறப்பிலும் மறக்கத்தக்கதன்ரும் (*107*). ஒருவர் செய்த உதவி மறக்கத்தகாததாம் அவர் செய்ததீமை அப்போதே மறக்கத்தக்கதாம் (*108*). ஒரு நன்மை செய்தவன் பின்னர் கொன்ருலொத்த தீமைகளைச் செய்யினும் அவ் வொரு நன்மையே நினைக்கத்தக்கதாம்; பின்செய்த தீமை மறக்கதக்கதாம் (*109*). எவ்வறத்தினைச் சிதைத்தவர்க்கும் பரிகாரமுண்டு, செய்ந்நன்றியை மறந்தவர்க்கு உய்தியே யில்லை (*110*). தந்தைக்கு மகன் செய்யுமுதவி அவனறி வொழுக்கத்தைக் கண்டவர் இவனைப் பெறுதற்கிவன் தந்தை என்ன தவஞ்செய்தானே எனக் கூறுமாறெழுகு தலாம் (*70*).

# 14. உயிர்

உடல் உய்தற்குக் காரணமாயது அல்லது உடலை உய்ப்பது உயிர். 'உடல்' என்ற தலைப்பில் கூறியதுபோல உயிர் ஒரு தனித்த பொருள் என்பாரும், மஞ்சளும் சுண்ணும்பும் கலக்கையில் சிவப்பு ஏற்படுவதுபோல ஐம்பூதக் கலப்பில் ஏற்படும் உணர்வு – உயிர் என்பாரும் இருசாரார் உயிர் பற்றிய தத்துவக் கருத்துடைய வர்கள். உடலுக்கும் உயிருக்கும் பல பொதுவான இயல்புகளும் செயல்களும் உண்டு. பொதுவாக உடலை வளர்ப்பது உணவு என்பதுபோல உயிரை வளர்ப்பது உணர்வு அல்லது நல்லுணர்ச்சி களாகும். [18] உடம்பாரழியில் உயிரார் அழிவர் என்றதனல் உடலும் உயிரும் வளர்ச்சியில் தொடர்புடையவை என்பது பெறப்படும். உயிர் வளர்ச்சியுற்று வீடுபேறடைதற்கு உடல் காரணமாகும். உடல் – பூதச் (புலன்) சேர்க்கையின் காரணமாய மனத்தினுலேயே உயிர் விளக்கம் பெறுகின்றது. குறிப்பிட்ட உடலிலுள்ள உயிர் ஒரு தனித்தன்மையையும் உருவையும் பெறு கின்றது. அடுத்த பிறவியில் அதன் முன்னைய குறிப்பிட்ட நிலை யிலிருந்தே மாறுதலடைகின்றது. பெரிதும் விலங்குவரைப்பட்ட உயிர்களின் வளர்ச்சி உடலாலாகின்றது. ஆனல் மனிதனின் வளர்ச்சி உயிர் அல்லது அறிவால் (ஞானத்தால்) ஆகின்றது. அதனுற்றுன் அறிவு (ஞானம்) உயிர்க்குணம் எனப்படும். இறை வனுறைவது உயிரிற்றுன். [19] அவன் வினைகட்கேற்ப உயிர்கட்குப் பிறவியளித்து ஞானம் வளரச் செய்து வீடுபேற்றையும் அருளு கிருன். அதுவே 'தன்னடிச் சேர்த்தல்' எனப்படுவது. அதுவே உயிரின் உயர்ந்த குறிக்கோளெனப்படுவது. பொதுவாக மனம் உள்ளவரை உயிர் உண்டு. மனமே உயிர் என்பார் ஒரு சாரார் உளர். உடலுக்கும் மனத்துக்கும் குணங்களும் குறிக்கோள்களும் இருப்பதுபோல உயிர்க்கும் உயர்ந்த குணங்களும் குறிகளும் உண்டு. அவற்ருல் உயிர் வளருகின்றது. இன்றேல் இறந்து விடுகின்றது. காதல், அன்பு, இறைஞானம் முதலியன உயிர்க் குணங்கள்.

**தி. 13–14**

உயிர் என்பது இங்கு மனித உயிர். எனவே உயிர் வளர்ச்சி என்பது மனித வளர்ச்சி. உயிர் முடிவில் உடலைத் துறக்க வேண்டினும் முதலில் உடலாலேயே விளக்கமும் வளர்ச்சியும் பெறுகின்றது. உடலுக்கும் உயிருக்குமுள்ள தொடர்பினைத் தலைவனுக்கும் தலைவிக்குமுள்ள தொடர்புக்கும், முட்டைக்கும் அதனுள் வளரும் பறவைக்கும் உள்ள தொடர்புக்கும் உவமை யாகக் கூறுவர். கூட்டுக்கும் உள்வாழும் பறவைக்கும் உள்ள தொடர்பாகவும் விளக்கம் கூறுவர். உடலைப்பிரிந்த உயிர் திரும்ப வந்து அதனுட் புகுதலின்மையால் முட்டை – பறவைத் தொடர்பே பொருத்தமென்பர். பலகூடுகளிலும் புகுந்துவாழும் பறவைபோலப் பல பிறவிகளிலும், உயிர்புகுமியல்பிற்ருகலின்கூடு – பறவைத் தொடர்பே மிகப்பொருத்தமென்பர் மற்றவர். உயிர், உடலில் ஏதோ வோரிடத்தில் குறித்த வடிவுடன் இருப்பதென்பாரும். உடலில் எங்கும் பரவி உணர்ச்சி வடிவாக இருப்பதென்பாரும், காற்ருக (உயிர்க்காற்று – பிராணவாயு) இருப்பதென்பாரும் பலவகைக் கருத்தினர், அறிஞர்கள். துச்சிலிருந்த உயிர்க்கு என் கையில் வள்ளுவர் உயிர்க்கு உடலில் ஒரு குறித்தவிடத்தைக் கருதுகிருர். உயிர் உடலில் நிலையாகத் தங்குதலில்லை. வீடு பெறும்போது அது நிலையாக இறைவன் திருவடியில் தங்கு கின்றது. அப்போது நல்வினைகளை நாடோறும் செய்தலினல் அந்நிலை (ஞானமுற்று) கிடைக்கின்றது. ஆசையினல் பிறவியும் ஆசை (பற்று) யறுதலினல் வீடுபேறும் ஏற்படுகின்றன. உடலில், இறக்கும்வரை இணைபிரியாமலிருந்து இன்பதுன்பங்களை அனுப விப்பதனல் பழவினை நீக்கமும் உயிர் விளக்கமும் பெறுகின்றது.

உயிரியல்பில் அது கூற்றுவனல் உண்ணப்படுவதென்பது அழிவதன்று. இவ்வுடலிலிருந்து பிரிந்து அடுத்தவுடலில் சேர்தற் கிடமாக்குவதென்பதாம். அறியாமையாலே உயிர் துன்பமுறுந் தோறும் மேலும் வாழ்க்கையில் விருப்பமுடையதாகின்றது. உயிர் மனத்தினல் (எண்ணங்களால்) வளர்வது. அருள், ஞானம் முதலிய குணங்களால் ஆக்கம் பெறுவது. உண்மைக் காதலினல் அது மெலிதலும் வளர்தலுமாகிய தன்மையுடையது.

உயிர் தான் பரவியிருக்கும் உடல்கள் எல்லாவற்றிலும் ஒரு ஒற்றுமை (அன்பு) இருக்கும்வரை வாழவல்லது. காதலர் அன்பு மாறினல் இறப்பதென்பது இதனலேயாம். அன்பில்லாத உயிர்

பாலையில் இருப்பது போலாம். உலக வளமும் நன்மையும் ஒப்புரவுங்கூட உயிர் வாழ்க்கைக்கின்றியமையாதது. உயர்ந்த நெறியில் உயிரை ஓம்பவேண்டும். இரத்தல் முதலிய இழிதொழில் களால் அது வளரலாகாது.

உயிருடையார் எய்தாவினையின்மையின் உயிர் போற்றிக் காத்தற்குரியதோர் அரும்பொருளாம். சிறியதன் உடலைப் பெரியது தின்னுதலால் உயிர் வளர்ச்சி குன்றுகிறது. மேலும் பிறவுயிர்களைக் காக்கும் அறமும் மனிதர்க்கு வேண்டும். உயர் அரச வினைக்குரியவர்கள் உயிர்களைக் (மக்களைக்) கொல்லுதற் கஞ்சுபவராக வேண்டும். நற்குணங்களால் வளர்வது போலவே உயிர் தீக்குணங்களால் தேய்ந்து விடுகின்றது. நல்லரசு, நற்கல்வி, நல்லுணவு ஆகியவற்றால் உயிர் வளர்தற்குரியது. பகையினால் உயிர் அழிந்துவிடுகின்றது. உயர்ந்த நோக்கங்களுக்காக (வீரர்கள்) உயிரைத் தியாகம் செய்தல் புகழ் எனப்படும். அது மற்ற (வருங்கால) உயிர்கட்காக்கந்தருதலின் பெரியோர் வெறுப்புக்காட்பட்டோரும் வளர்தலில்லை. தவமுடையோர் பிற வுயிர்கட்குத் துன்பம் தருதலில்லை; பிறவுயிர்களாலுறும் துன்பத் தையும் பொறுப்பர். உலக உயிர் வளர்ச்சிக்கதுவே நல்வழி போலும்!

உயிர் வாழ்க்கையை ஒவ்வொரு (நாள்) என்ற வாளானது குறைத்துக் கொண்டே வருகின்றது. அதனை உணர்ந்து அறிஞர் வாழ்வை நடத்துவர். எச்செயலையும் உயிர் போம் அளவு மீறிச் சென்று செய்யமாட்டார். பெரியோர் சொல்லைக் கேளாதபோது (உயர்ந்த உண்மைகளைப் புறக்கணிக்கும்போது) உயிர் போய் விடுதல் கூடும்.

உயிர்க்கு விழிப்புநிலை, கனவுநிலை என்ற நிலைகள் உண்டு. வீட்டினைப் பெறத்தக்கவுயிர் 'யான், எனது' என்ற இருவகைப் பற்றுக்களினின்றும் நீங்கியதாம். மெய்யுணர்வெய்தி, உலக ஆசைகளையும் உடலையுங்கூட முற்றத்துறந்த உயிர் வீடுபேறு அடைதற்குரியது. இறைவனது திருவடிகளில் இடையறு திருக்கும் உயிர் வீடுபேறு உற்றதாகும்.

## பொருளடைவு

### உயிரும் உடம்பும் :

உயிர் உடம்போடு தொடர்புற்றிருக்கும் இயல்பின தாகும் (73). உயிர், இறக்கும்வரையில் உடலில் தங்கி யிருப்பதாகும் (80). அது உடம்போடு கொண்ட தொடர்பு முட்டைக்கும் அதனுள் வளரும் பறவைக்குமுள்ள தொடர் பாகும். ஒரு காலத்தில் அது முட்டையைவிட்டோடிப் போகும் (338). உயிர் உடம்பினுள் ஒதுக்குக்குடியாய் ஏதோ வோரிடத்தில் இருப்பதாகும் (340). உயிர்கள் உடம்பினைத் தமக்கு நிலைக்களனாகக் கொண்டுவிடாமல் பயனெய்துவன வாகும் (1013). புலாலுணவில் உயிரானது உடம்பைவிட்டு நீக்கப்படுகின்றது (258). உயிரானது ஆசையின் காரணத் தால் உடலினை (பிறப்பினை) அடைகின்றது (361). உயிர் உடம்போடு கொண்ட நட்பு தலைவனும் தலைவியும் கொண்ட நட்பு போல்வதாகும் (1122). இறக்கும் வரையில் உயிரும் உடலும் பிரிக்கமுடியாத தொடர்புள்ளவை. இன்பதுன்பங் களை இரண்டும் இணைந்து அனுபவிப்பனவாகும். ஒன்றன் இன்பதுன்பங்கள் மற்றதைத்தாக்கும் (1132). உயிர் உடலைப் பெறுமல் வீடுபெறும்நிலை ஒன்றுண்டு. அது வீணாள் உண்டா காமல் அறஞ்செய்பவர்க்குக் கிடைப்பதாகும் (38). உயிர் உடலோடு கூடியிருத்தலென்பது உலகில் நிலையற்றதாகும். அது எப்பொழுது உடலைவிட்டுப் பிரியுமென அறிதல் இயலாததாகும் (337).

### உயிரியல்பு :

உயிர் துன்புறுதலும் இன்புறுதலுமாகிய இயல்பின தாகும் (318). உயிர் கூற்றுவனால் உண்ணப்படும் (பிரிக்கப் படும்) தன்மையதாகும் (326). உயிர் உடம்பால் துன்பங்களை யனுபவிக்குந்தோறும் உடலின் மேற் காதலை யுடையதாகும் (940). உயிர் தலைவியது காமத்தையும் நாணத்தையும் (நடுநின்று) தாங்குவதாகும். அது குணங்கள் வளருதற் கிடமாகும் (1163). அது, அன்புடையாரது அருளினால் நிலைத் திருப்பதாகும் (1209). உயிர் அழியாததும் நிலை பேறுடையது மாகும் (1168). உயிர், அன்புடையாரது பிரிவு முதலிய துன்பங்களால் மாய்ந்துவிடும் தன்மையது (1230). அது

எல்லா வகைப் பிறப்புக்களிலும் ஒரே தன்மையுடையதாகும் (972). அது நெஞ்சினுல் விரும்பிக் காக்கப்படுவதாகும் (1298). (தலைவனது) உயிர் காதலித்தவரது (தலைவி) கண் முதலியவற்றின் தோற்றத்தினுலேயே உண்ணப்படும் தன்மையதாகும் (1084).

### உயிர்வாழ்தல்

உயிர் அன்பென்பதின்றி வாழ்க்கை நடத்துதல், வலிய பார் நிலத்தில் வாடிய மரம் தளிர்த்தது போலாகும் (78). அது மழையினை இன்றியமையாததாகக் கொண்டது (557). எவ்வுயிர்களும் மக்களால் அருள் செய்தொழுகுதற்குரிய தாகும். அருளினுல் உயிர்கள்வாழும் (30). உயிர் வாழ்த லாவது உலக நடையினையறிந்து ஒப்புரவு செய்தலாகும். அவ்வாறு செய்யாமை உயிர்க்குச் சாதலாகும் (214). இரத்தல் முதலிய இழிதொழில்களால் உயிர் வாழ்வித்தற் காகாததாம் (1062). தலைவன் தலைவியோடு கூடியிருப்பது உயிர், வாழ்வது போலாம். அவளைப் பிரிவது உயிர் சாதலைப் போல்வதாம் (1124). அலர் எழுதலாலே தலைவியதுயிர் இறந்துபடாமல் (வாழ்ந்து) நிற்பதாகும் (1141). காதலிக்கப் பட்டார் இருவருள் ஒருவர் ஒருவரை விரும்பும்வரை உயிர் வாழவல்லதாகும், இன்றேல் சாகும் (1193).

### இறத்தல்

புறங்கூறி வாழ்பவனதுயிர் இறந்து படுவதே நல்லது. அப்போதாவது மேலும் வளரும் பாவங்கள் இல்லாமலாகும் (183). அவியினைச் சொரிந்து ஆயிரம் வேள்விகளைச் செய்தலினும் ஒன்றன் உயிரதன் உடம்பினின்றும் நீக்கப்பட லாகாது அது நன்ருகும் (259). தன்னுயிர் நீங்குமாயினும் பிறிதொன்றனுயிர் போக்கப்படலாகாது (327). முதலில் இன்பம் தருவதுபோலக் காட்டிப் பின் உயிரை நாடோறும் அறுப்பதொரு, வாளாகிய நாளால் உயிர் அறுக்கப்படுவ தாகும் (334). மரத்தின் நுனிக்கொம்பில் ஏறியவன் அதன் மேலும் ஏறின் அவனதுயிர் இறுதியுற்றுவிடும் (476). இரப்பவர்தம் உயிர் 'இல்லை' என்ற சொல்லைக் கேட்டதும் இறந்து படுவதாகும் (1070). அறிவர் சொல்லவும் கேளாமல் தானுமுணராமல் வாழ்பவனதுயிர் போமளவும் உலகிற்கோர்

நோயாகும் (848). உலகிற் பரந்த புகழைவேண்டி உயிர் வேண்டப்படாமை வீரர்களுக்குரியதாகும் (777). ஒருமயிர் நீங்கினும் உயிர் வாழாத கவரிமானைப் போன்றவரதுயிர் மானத்திற்காக நீங்கிவிடும் (969). நாணத்தை வேண்டு பவரதுயிர் நாண்பொருட்டால் நீங்குவதாகும் (1017). தன் பெருந்தகைமை அழியவந்தவிடத்துச் சாவாமல் இருத்தல் பின்னும் சாவாமைக்கு மருந்தாகாது (968). மாலைக்காலம் பிரிந்த காதலரது காமத்தை வளர்க்க அவரதுயிர் அதனல் நீங்கும் (அத்தனை துன்பம்தரும்) (1221).

**உயிரும் உறக்கமும்:**

உயிர்கள் இரவில் உறக்கத்தில் மங்கிக் கிடப்பனவாகும் (1168). உயிர் (விழித்திருக்கையில் நனவிலும்) உறங்கு கையில் கனவிலும் பொருள்களைக் காணவல்லதாகும் (1213).

**வீடுபெறுதல்**

களவினைச் செய்யாதவருயிர் என்றும் வீட்டினைத் தப்பாமல் பெறுவதாகும் (290). யானெனதென்ற மயக்க மாகிய இருவகைப்பற்றையுமறுத்த உயிர் வீட்டினைத் தவருமல்பெறும் (346). மெய்ப்பொருளை ஐயத்தினின்றும் நீங்கித் துணிந்த உயிர் வீட்டுலகினை நெருங்கியதாகும் (353). பொருள்களையும் இருவகை யுடம்புகளையும் முற்றத் துறந்த உயிர் வீட்டுலகிற்குரியதாகும் (348). மலர்மிசை யேகிய வனது மாணடிகளைச் சேர்ந்த உயிர் வீட்டுலகின்கண் அழி வின்றி வாழும் (3).

**உயிர்வளர்ச்சி:**

அன்பு செய்தலால் உயிர் உடலில் நிலைப்பதாகும் (80). உயிர்காத்தற்குரியதோர் அரும்பொருளாகும் (131). நிலை பேறுடைய உயிர்கள் ஒருவன் அருளையாளுதலினல் போற்றப்பட வேண்டும். அப்போது அவனுயிர் அஞ்சவரும் வினையுமில்லை (244). உயிர்கள் நிலைத்தற்குரிய உடலூனைத் (புலாலைத்) தின்னமையால் உயிர்கள் நிலைபெறுவனவாகும் (255). ஒன்றன் உடம்பை உண்ணுதற்காக அதனுயிர் உடம்பினின்றும் பிரிக்கப்படலாகாது (259). மனத்தது நன்மையால் மன்னுயிர்கள் ஆக்கமுறுவனவாகும் (457). பிற

வுயிரைக் கொல்லுதற்கஞ்சும் அச்சம் இருப்பதனைக் கொண்டே அரசனால் ஒருவன் வினைக்குரியவனைத் தேறப்பட வேண்டும் (501).

சுவை வீரியங்கள் மாறுபடாத உணவை உண்பதனால் உயிர் கேடுறுதலில்லை (945). நாணமென்னும் பண்பு இல்லாத உயிர் வளர்ச்சி குன்றிவிடுகின்றது. அதனியக்கம் வெறும் மரப்பாவை கயிற்றால் இயங்கும் இயக்கமேயாகும் (1020). போர் பெற்று மகிழ்ந்த மறவர் உயிருக்கும் அஞ்சுவதில்லை. அப்போதவ்வுயிர் ஆக்கமுடையதாகும் (778). மக்களுயிர் வீடு பேற்றைத்தரும் அறத்தினையே தனக்காக்கமாகக் கொள்வதாகும் (31). இகலென்னும் பண்பின்மையால் உயிர்கள் வளர்ச்சிகுன்றி நோயுற்றநிலையை அடைவனவாகும் (851). அடக்கமென்னும் குணத்தினால் உயிர் ஆக்கம் பெற்று விளங்கும் (122). ஈதலாலும் அதன் வழி இசைபெற வாழ்தலாலும் உயிர்பெரும் பயனையடைவதாகும் (231). உலகில் (மக்கள்) உயிர்கள் எண், எழுத்து ஆகிய இரண்டினாலும் ( கண்களைப்பெற்று ) மெய்யறிவிற்கு வழி கோலிக்கொள்வனவாகும் (392). அரசனதருளாலும் உயிர்கள் வாழவும் விளங்கவும் பெறுவனவாகும் (557). உயிர்கட்குத் துன்பம் செய்யாமையே தவத்திற்கிலக்கணமாகும் (261). உயிர்தன்னை நோக்கித் திருத்தமுறுமாயின் குற்றமற்றதாகி விளங்கும் (190). உணவு உடை முதலியவற்றால் உடம்பும் அதன்வழி உயிரும் வளர்ச்சி பெறுவனவாகும் (1012). பகைவரது தருக்கினையடக்காதவரதுயிர் நில்லாததாகும் (880). மிக்க தவத்தினையுடையவரால் வெகுளப்பட்டவன துயிர் உய்யமாட்டாததாகும் (900). காதலர் பிரிந்திருந் தாற்றாதபோது அவரதுயிர் வளர்ச்சிகுன்றிவிடும். மீண்டும் அன்புடையாரைக்காணும் அவாவினால் அஃதுயிர்த்திருக்கும் (1212).

# 15. உலகு

மக்கள் வசிக்கும் பூவுலகமே இங்கு உலகம் எனப் பேசப் படுகின்றது. சந்திரன் முதலிய கிரகங்களும் (உலகங்களும்) குறளில் குறிக்கப்படுகின்றன. இன்று அறிவியலார் சந்திரனில் இறங்கி மனிதர் அங்கு வாழமுடியுமா என்றெல்லாம் ஆய்கின்றனர். செவ்வாய் முதலிய கிரகங்களுக்கும் செல்வதுபற்றித் திட்ட மிடுகின்றனர். இவ்வுலகங்களினும் பெரிய நட்சத்திரங்கள் எண்ணிறந்தன வானில் உள்ளன. கிரகங்களும் (உலகங்களும்) பலவுள்ளன. ஆனால் மனிதன் வாழ்வது இப்பூவுலகிற்ருன். மனித வாழ்க்கையுடன் தொடர்புறுத்தியே இங்கு உலகம்பற்றி ஆராயப்படுகின்றது.[20] வடலூர் இராமலிங்கசுவாமிகள், ஆயிரக் கணக்கான உலகங்களைக் குறிப்பிடுகிருர். தாம் கருதும் ஒவ்வொரு சிறு (உண்மைக்கும்) தத்துவத்திற்கும் ஒரு உலகத்தை அவர் படைக்கிருர் போலும். வள்ளுவர் குறிக்கும் உலகம் மனிதர்கட் குரியது. மாரியினுல் வளம் பெறுத்தப்பெறுவது, பண்புடையாளர் தம் பண்பினுல் பாது காக்கப்பெறுவது. ஐம்பூதச் சேர்க்கையா லாயது. தன்னிடத்துள்ள உயிர்களையும் பொருள்களையும் நிலையற்றவனவாகக் கொண்டது. பரந்த கடலால் சூழப்பெற்றது. மண்ணுல் ஆக்கப்பெற்றது, ஆதிபகவனைமுதலாகக் கொண்டது. காற்றியக்கத்தைத் தன்னகத்தேயுடையது. முடியுடை மன்னரால் காக்கப்பெறுவது, நல்லோரால் வளர்வது, தீயோரைச் சுமை யாகக்கருதுவது, அவராலழிவதுமாகும். மெய்யுணர்வுடை யோரால் அறியப்படுவது, நரகம், பூலோகம், வானுலகம் என ஒரு வகையாகப் பிரிக்கப்பட்டது. மக்களுள் இழிந்தோர் வாழ்வது நரகம். மக்கட்டன்மையினர்க்குரியது பூலோகம். வானவர்க்கு (மக்களுள் உயர்ந்தோர்க்கு) உரியது வானுலகமும் அதனினும் உயர்ந்த வீட்டுலகமும். இறைவன் தாள்களை வணங்குவோரும் எவ்வுயிரிடத்தும் அருளுடையோரும் அறஞ்செய்வோரும் மெய் யுணர்வுடையோரும் எய்துவது வீட்டுலகம்.

நிலவுலகத்தைப்பற்றி அது பண்புடையோராலும் நல்லர சாலும் தாங்கப் பெறுவது என்ற கருத்துக்கள் மிகச் சிறப்

புடையவை. அங்கு வாழ்வோர் இரந்தே வாழவேண்டும் என்ற எண்ணம் படைத்தோனுக்குரியதன்று என்ற ஏற்றமுள்ள கோட்பாடு எப்படியோ இங்கு இடம் பெற்றுவிட்டது.

உலகில் வாழும் உயிர்கள் இன்புற்று வாழ்தற்குரியன என்ற குறிப்புடையவை. எனவே துன்பம் உலகின் செயற்கையாகும். மண்ணின் இயல்பில் பொறையுடைமையைக் குறிப்பிட்டுக் கூறுகிருர். நற்பண்புடையோரால் உலகம் வளம் பெறுதலும் இன்புறுதலும், தீப்பண்புடையோரைச் சுமையாகக் கொள்ளுதலும் உலகியற்கை. உலகம் அரசராலும் தனி மனிதராலும் பிரித்து எல்லே கோலப்பட்டது. மக்கள் (உயர்ந்தோர்) இவ்வுலகத்து வாழும்போதே (துறவுள்ளங்கொண்டு) இவ்வுலகினைக் கடக்கும் முயற்சியுடையராவர். தன்னிடத்து வாழும் மக்களே அது இல்லறத்தோடு கூடி வாழ்பவராக உடையது என்ற குறிப்பு மிகவும் போற்றத் தக்கதாகும். இவ்வுலகவின்பம் பொருளுடையோர்க்குக் கிட்டுவதாகும். அறிவுடையோர் செல்வமுடையோர் என உலகில் மக்கள் இருவகையினர்.

மேலுலகம், பூவுலகம், கீழுலகம் என்பன மேலும் நடுவிலும் பாதாளத்திலும் இருப்பன என்பதைவிட முற்கூறியாங்கு மக்களும் மேலோரும், மக்களும் மக்களுள் கீழோரும் வாழ்வது என்பது பொருந்தும். [21] இமயமலைப் பக்கத்து வாழ்ந்தோர், இந்தியாவின் மற்ற பகுதியில் வாழ்ந்த மக்கள், இலங்கை முதலிய விடங்களில் வாழ்ந்த நாகர் முதலோர் என இம் முப்பிரிவுகளைப் பிரித்தலும் ஒன்று. தேவர் எண்ணியதை முடிப்பவரும் அறிவாநிறைந்தவரும், இன்புற்றிருப்பவருமாவர் என்ற குறள்கள் மேற்குறித்த முதற்கருத்தினையே வலியுறுத்துவனவாகும். மேலுலகம் உயரமும் பெருமையுமுடையது. தேவர்கள் மக்களால் வணங்கப்படும் தன்மையினர். மக்களுள் பலவகையாலும் உயர்ந்தோரைத் தேவர் வரவேற்றுபசரிப்பர். தேவருலக வின்பம் மிகச் சிறந்தது. அவ்வின்பத்திற்கீடான இன்பத்தை இவ்வுலகிலும் (காதலின்பத்தில்) அடையலாம் எனக் கண்டனர். புகழுடையோர், கற்புடையோர், ஒப்புரவாளர், அடக்கமுடையோர், வீரமுடையோர் ஆகியோர் தேவரால் பாராட்டுதற்குரியோரெனக் கருதப்படுவர்.

நரகம் இருளுடையது. அடக்கமில்லாதாரும் புலாலுண்போரும் அதனை அடைகின்றனர். வீட்டுலகம் இம் மூவுலகங்

களுக்கும் மேலானது. இருவகைப் பற்றற்று மெய்யுணர்ந்தோர் அடைவது. அஃதொரு தனியுலகமன்று. [22] பற்றற்ற இவ்வுலகமே (இவ்வுடல்) வாழ்வே வீடெனும் முக்தியென்பர். அதனைச் சீவன் முக்தியெனவுங் கூறுவர். அது பிறப்பிறப்பில்லாதது. இறைவனது திருவடிகளை இடையறாது எண்ணுவோர்க்குரியது. இப்பூவுலகம் நாடுகளாலானது. நாடென்பது அரசினால் ஆளப் பெறுவது. நாடு என்பதற்குத் தனியதிகாரமே கொடுத்திருக்கிறார் ஆசிரியர். நாட்டு மக்கட்குரைக்கும் நல்லறமே குறள். அவ் வதிகாரத்தில் ஒரு நல்ல நாட்டைப் படைத்திருக்கிறார். (கொடுக்கக்) குன்றாத விளையுளும் செல்வரும் நல்லோரும் (அறிஞரும் சான்றோரும்) உள்ளது நாடு. பசியும் பிணியும் பகையுமற்றது. தன்னிறைவுடையதாய்ப் பிறர்க்கும் அளித்துக் காக்கத்தக்க தகுதி வாய்ந்தது. பாதுகாவலையும் அமைதியுடைய அரசினையும் உடையது. சாதி சமயப் பிரிவுகளும் உட்பகையும் கொலைகளும் இல்லாதது. அரசன் நாள்தோறும் ஆராய்ந்து நாட்டைப் புரப்பவன். இதனினும் சிறந்ததோர் நாடு வேறெங் கிருக்க வியலும்!

## பொருளடைவு

### நிலவுலகம்:

உலகம் விரிந்த கடலாற் சூழப்பட்டு அகன்ற இடத்தினை யுடையது (13). நிலையாத இயல்பினையுடையது (233). ஆதிபகவனைத் தனக்குத் தோற்ற முதலாக வுடையது (1). சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து தன் மாத்திரைகளையும் தமக்கு முதலாக வுடைய மண், நீர், தீ, வளி, வான் என்ற ஐம்பூதங்களாலாகியது இவ்வுலகம். அவற்றின் கூறுபாடுகளை ஆராய்வானறிவின் கண்ணதே உலகம் (27). நேற்றிருந்தானொருவன் இன்றில்லை யென்னும் நிலையாமையையே தனக்கு மிகுதியாக வுடையது (336). இறைவனால் படைக்கப்பட்டது. அது தன்னிடம் தோன்றி யோர் இரந்தே உயிர் வாழ வேண்டியவர்கள் என்ற கருத்துடன் படைக்கப்பட்டதன்று (1062). மழையினை இன்றியமையாததாக வுடையது (542). மழை இடையறாது நிற்றலால் தானும் நிலைபெற்று வருவதாகும் (11). மழையில் உலகம் தனக்குரிய பொருளின்பங்களாகிய உலகியலை

யமைத்துக்கொள்கின்றது (20). தனக்கு நீரை யுதவும் மேகங்களுக்கு ஒரு கைம்மாறும் செய்தலில்லை (211). அது பண்புடையார் கண்ணே படுதலால் எஞ்ஞான்றும் உண்டாகி வருகின்றது. இன்றேலது மண்ணுகி மாய்ந்து விடும் (996). அச்சந்தரும் கடலால் சூழப்பட்டது (149). தம் தொழில் கெடாமல் கண்ணோட்டஞ் செய்ய வல்லார்க்குரியதாகும் (578). இன்சொல்லுடனே ஈதலைச் செய்தளிக்கவல்ல அரசர்க்குத் தன் புகழோடு மேவித் தான் கருதிய அளவிற்கும் (387). இடிக்குந்தகைமையுடைய பெரியோரது சொற்களை விளைவு நோக்கிப் பொறுக்கும் பண்புடையரசனது குடை நிழற்கண்ணே தங்கும் (389). உலகம் மிகப் பெரியது (102). அது காற்றியங்குவதும் வளப்பமுடையதுமாகும் (245).

**உலகக் காப்பு :**

உலகம் பகற்காலத்தில் ஒளியுடையதாயும் இரவில் இருளுடையதாயும் காணப்படும். பண்பில்லாதவர்க்கு அது பகற்காலத்திலும் இருளுடையதுபோலத் தோன்றுவதுண்டு (999). மழையில்லாமையால் மிக்க துன்பநிலையையடையும் (557). உலகம் தன்னிடத்து வாழ்வனவும் இன்புற்றிருப்பன வுமாய உயிர்களையுடையதாகும் (68). உலகம் தனக்குள்ளே பலவகையான எல்லைகளையுடையதாகும் (234). அஃது அரசர்களால் ஆளப்படுவதாகும் (383). உலகம் தன்னை யிகழ்ந்து துன்புறுத்துபவரையும் தான் துன்புறுத்தாது தாங்கும் பொறுமையுடையது (151). அது புகழில்லாத உடம்பைப் பொறுத்ததாயின் தன்னிடம் பழியற்ற நல்விளைவு குன்றிப்போகும் (239). அறிவில்லாரை அமைச்சராகக் கொள்ளும், கொடுங்கோலரசை உலகம் சுமையாகக் கருதித் தாங்கி வருந்தும் (570). உலக முழுவதையும் தனக்குரித் தாக்கிக் கொள்வதென்பது ஒரு பெரும் பேருகும். அது காலங்கருதி வினை செய்வார்க்கியல்வதாகும் (485). அது குணங்களால் நிறைந்தோர் தம் தன்மை குன்றின் தன் பொறையைத் தாங்காது (990). பொருளீட்டுதலையே விரும்பி அதன் பயனை புகழை விரும்பாரது தோற்றத்தை உலகம் பாரமாகக் கருதும் (1003). அதனையாளும் அரசர்க் குரிமையுடையது (606). மண்ணுலகம், முன் தனக்கோர் உதவி செய்யாதிருக்கத்தான் செய்த உதவிக்கு ஈடாகா

தெனக் கருதப்படும் (*101*). உலகம், பிறனில்லாதவிடத்துப் புறஞ்சொல்வானது உடற்சுமையை இது சுமத்தல் அறமெனக்கருதிச் சுமப்பதுபோலும் (*189*).

**உலகமும் மக்களும் :**

உலகம் மக்களைத் தன்னிடம் வாழ்வோராகக்கொண்டு விளங்குவதாகும் (*238*). மெய்ப்பொருளை ஐயப்படுதலினின்றும் நீங்கித்துணிந்தவர்க்கு இவ்வுலகம் (உலகியலுணர்வு சார்ந்து வருதலால்) சேய்த்தாகவிடுபட்ட தன்மையுடையதாகும் (*353*). அரசன், மனத்தில் இருப்பதனைக் கூறுமுன், குறிப்பாலறிபவனை உலகம் தனக்கணியாகக் கொள்ளும் (*701*). உலகத்து மக்களும் (உயிர்களும்) இறத்தலும் பிறத்தலும் ஆகிய இயல்பினையுடையவராவர் (*22*). உலகம் தன்னிடத்து வாழ்வோரை இல்லறத்தோடு கூடிவாழும் இயல்பினராகவுடையது (*50*). உலகத்தின்பம் ஒருவற்கு அன்புடையனுய் இல்லறத்தோடு பொருந்திய நெறியின்பயனுகும் (*75*). அது மனம் போனவாறு திரியும் அலகைகட்கும் இடமாகவிருக்கும் (*850*). அது ஒருநாட்டார்க்கும், ஒரு தனி மனிதர்க்கும் உரிய எல்லைகளை (வரையறைப் பகுதி) உடையதாகும் (*1016*). இவ்வுலகத்தின்பம் பொருள் இல்லாதவர்க்கில்லை (*247*). அது செல்வரையுடையதாதல் அறிவரையுடையதாதல் என இரு வேறியல்புகளையுடையதாகும் (*374*).

**வானுலகம் :**

(திருமாலுலகமும்) இந்திரனது சொர்க்கலோகமும் தம்மால் விரும்பப்படுவாரது மெல்லிய தோளின்கண் துயிலினும் இனிதாவதில்லை (*1103*). உலகின்கண்நெடிய புகழை ஒருவன் செய்வானுயின் தேவருலகம் தேவரைப் போற்றுமல் இவனையே போற்றும் (*234*). தேவர்வாழும் உலகம் கணவனை வழிபடும் கற்புடை மகளிர்க்குப் பெருஞ்சிறப்புச்செய்யும் (*58*). நெடுஞ்சேணதாகிய புத்தேளுலகம் களவினைப் பயிலாதாருக்குத் தவருமற்கிட்டும் (*290*). தேவருலகம் (இவ்வுலகும்) ஒப்புரவு போன்ற வேறென்றனை நல்லதாகப் பெற்றதில்லை (*213*). முன்தனக்கோர் உதவி செய்யாதிருக்கத் தான் அவர்க்குச் செய்த உதவிக்கு

விண்ணுலகமும் ஈடாகாது (101). தேவருலகம் அடக்க முடையாரால் அடைதற்குரியதாகும் (121). தேவருலக வின்பம் தன்னையிகழ்வார்பின் சென்று நிற்கும் ஒருவற்குக் கிட்டுதலில்லை (966). புத்தேளுலகம் மிக்க இன்பம் தருவது ; அவ்வின்பமும் காதலர் தம்முள் ஊடும் ஊடலின் பத்திற்கீடாகாது (1323). இமையவர் உலகோரால் நன்கு மதிக்கப்பட்டு வாழ்பவராவர் (பகை வீரரையெல்லாம் வென்று வாகைசூடிய வீரர் அடைவது அமரருலகம்) (906). தேவர்தாம் வேண்டியதையெல்லாம் செய்யும் ஆற்றல் உடையவர் (1073). அவியுணவினையுடைய தேவரும் செவியுணவினையுடைய மக்களும் (அறிஞரும்) ஒன்றுவார் (413). அமரராகிய தெய்வங்கள் வானிலுறையும், அவை இயல்புடன் இல்லறம் நடத்துவோனுக்கு உவமையாகக் கூறப்படும் (50). தேவர் பிறர் மனத்தில் உள்ளதை ஐயமின்றித் துணியும் ஆற்றலுடையவர்கள் (702). வானம் உயரத்திற்கும் பெருமைக்கும் இடமாகக் கூறப்படும் (272). உலகினரால் செய்யப்படும் சிறப்பிற்கும் பூசனைக்கும் வானோர் உரியவர்கள் (18). வந்த விருந்தினரைப்போற்றி வரவிருக்கும் விருந்தையுபசரிப்பவனைத் தேவர்கள் தாம் விருந்திட்டுபசரிப்பர் (86). தேவருலகம் இந்திரனைத் தனக்குத் தலைவனைக் கொண்டது (25). தேவர் உலகத்தார் வேள்வியில் அளிக்கும் அவியுணவினை யுண்பவர்கள், அவர் அறிவானிறைந்தவரும் துன்பமறியாதவருமாவார் (413).

**கீழுலகம் :**

இருள் நிறைந்த நரகவுலகம் அருள் சேர்ந்த நெஞ்சினை யுடையவர்க்கில்லை (243). அடர்ந்த இருளாகிய நரகம் அடங்காமையாகிய பாவத்தினல் அடையக்கூடிய இடமாகும் (121). நரகம் புலாலுண்பவரைவிடாது தன்னிடத் திருத்தி வருத்தும் (255).

**வீட்டுலகம் :**

அரிய வீட்டுலகம் ஒருவர்க்கீதலால் கிடைக்காதெனினும் ஈதலே நன்றாகும் (222). தேவருலகிற்கு மேலாகிய வீட்டுலகம் யானெனதென்ற மயக்கத்தை யறுப்

பவர்க்கு உரியதாகும் (346). வீட்டின்பம் அருளில்லாத வர்க் கில்லையாம் (247). மெய்ப்பொருளை ஐயத்தினீங்கித் தெளிந்தவர்க்கு வீட்டுலகம் அணித்தாந் தன்மையுடையது (353). மலர்மிசை யேகினவனது மாண்புள்ள அடிகளைச் சேர்ந்தவர்க்கு அழிவின்றி வாழ்வளிக்கும் (3). அஃதொரு வர்க்கு அறத்தினல் கிடைக்கக் கூடியதாகும் (31). பொருள்களையும் இருவகையுடம்புகளையும் முற்றத் துறந்த வர்க்குரியதாகும் (348). செவ்விய பொருளாகிய செம் பொருளை (கடவுட்பொருளை) வீட்டுலகமானது தனக்கு நிமித்த காரணமாக வுடையது (358). பிறப்பின்றி எக் காலத்தும் ஒரு தன்மைத்தாய வீட்டுலகம் பொறிகளை வழிகளாகவுடைய ஐந்தவாவினையும் (துறந்தவர்க்கு) அறுத்தவர்க்குரியதாகும் (6). பிறவிப் பெருங்கடலை நீந்திய வீட்டுலகம் இறைவனடிகளைச் சேர்ந்தவர்க்குக் கிட்டுவதாகும் (10).

**நாடு :**

நாடு, குன்றுத விளையுளைச் செய்யும் உழவரையும் அறவோரையும் கொடுக்கக் குறையாத வளமுடைய செல்வரையும் உடையதாக வேண்டும் (731). பிறதேசத்தாரும் விரும்பும் பொருள்களை யுடையதாய்க் கேடின்மையோடு கூடி மிக்க விளைவுடையதாகும் (732). பகைவராற் கெடாத தாய்க் கெட்டவிடத்தும் வளமைகுன்றுததாய் உள்ளதாகும் (736). தன்னிடத்துள்ளவர் தேடிவருந்தாமல் பொருள் தருவதாகும், தேடிவருந்தச் செய்வது நாடாகாது (739). மேனீர் கீழ்நீரெனு இருநீரையும் வாய்ப்புடைய மலையையும் அழியாத அரணையும் உறுப்புக்களாக உடையதாம் (737).

**கேடற்ற நாடு :**

பிறநாட்டினரையும் வாய்க்கும்போது தாங்கி அதேபோது இறைவரிமுழுவதையும் கொடுக்கக்கூடியதாக வேண்டும் (733). மிக்கபசியும் நீங்காநோயும் புறப்பகையும் இல்லாத தாயிருக்கவேண்டும் (734). நோயின்மை செல்வம் விளைவு இன்பம் காவல் என்ற வைந்தினையும் உடையதாக வேண்டும் (738). சாதிசமய வேறுபாடுடைய பலகூட்டமும் உட் பகையும் வேந்தலைக்கும் குறும்பரும் இல்லாததே நாடாகும்

(735). மேற்கூறிய குணங்களெல்லாமிருப்பினும் அரசோடு பொருந்தலில்லாத நாடு நாடாகாது (740). நூலியல்பாற் செங்கோல் செய்யும் அரசனது நாடு நல்லமழையும் விளைவு முடையதாகும் (545). நாடோறும் தீமைகளையாராய்ந்து முறைசெய்யா மன்னவனது நாடு நடோறும் அழிந்துவிடும் (553).

**நாடும் ஊரும்**

சாந்துணையும் கற்பவனுக்குச் செல்லும் எந்த நாடும் எந்த ஊரும் சொந்த நாடும் ஊருமாகும் ( 397 ).

**தேசம் :**

எத்தேசத்தும் சென்று பொருளென்னும் நந்தா விளக்கு தனக்கு வரும் பகையிருளைக் கடியும் (753).

# 16. கல்வி

ஆசிரியரிடமும் ஆன்ஞேரிடமும் கேள்வி வாயிலாக அறிதலைக் கேள்வியெனவும், நூல் வாயிலாகக் கற்றலைக் கல்வியெனவும் கூறலாம். உள்ளத்தில் மறைந்து கிடக்கும் அறிவினை வெளிக் கொணர்தலே கல்வி: கல்லுதல் என்பது பொருத்தமாகலாம். தொட்டனைத்தூறு மணற்கேணி என்ற குறள் இதற்குரிய ஆதார மாகலாம். கல்வியையும் அறிவையுங் கொண்டு வள்ளுவர் விலங்கினின்றும் மனிதனைப் பிரிக்கின்ருர். கல்வி (அறிவு) யுடையவனே மனிதன். அத்தகு மனிதவினத்தைப் படைத்தலே உலகில் அறிஞர் குறிக்கோளாக இருக்கின்றது. இன்று உலகில் கல்வியைப் பற்றி வற்புறுத்தாத வலியோர் (உடல்வலியுடைய) இராணுவத்தினர் (படையினர்) தொழிலாளர் ஆட்சிகள் மலிந்து வருகின்றன. கல்வியும் அறிவுமுடையோர் ஆட்சியிலே நிலைக்க வேண்டு மென்பதற்காகத்தான், அரசியல் முதலதிகாரங்களில் கல்வியையும் அறிவையும் அரசனுக்குரிய தகுதிகளாக வற்புறுத்து கிருர்.

கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமையாகிய அதிகாரங்கள் இங்காராயப் பெறுகின்றன. கல்வி அழிவில் செல்வம், மக்கட்குக்கண்களைப் போன்றது என்ற குறிப்புக்க ளெல்லாம் நன்குணரத்தக்கன. கல்வி பல பிறப்புகளிலும் ஒருவற் குற்றதுணை; அதுமனிதனைத் தேவனுக ஆக்கக்கூடியது. உலகை யெல்லாம் ஒன்றென உணரவைப்பது மனிதவின்பத்தை ஒன்ருக் குவது. யாதானும் நாடாமால் ஊராமல் என்ற குறளே இதற்குச் சான்று. கீழோனுகிய இனத்தையும் மேம்படுத்தி மனித வினத்துள் மதிப்புறச் செய்யவல்லது கல்வி. ஒருவனுக்கு உண்மையழகினைத்தருவது கல்வியேயாம். விலங்குகள் வாயிற் சுவையுணர்வின. மக்கள் செவியிற் சுவையுணர்வினர். கல்வி பிறர்க்குச் சொல்வதால் வளர்வது. நூல் எழுதுவதும் சொல்வதில் அடங்கும். கல்வி, நூல் என்கையில் பெரிதும் ஆசிரியர் மெய் யறிவுக்கல்வி, மெய்யறிவு நூல்களையே குறிக்கிருர். இயற்கை யறிவுடன் கல்வி (நூல்) அறிவிருப்பதே சிறப்பென்கிருர்.

கற்குமுறையில், கசடறக் கற்றலையும், நுட்பமாகக் கற்றலையும் ஆசிரியர் வற்புறுத்துகிறார். எவ்வளவு கற்றாலும் அறிவு மேலும் தெளிவுபட்டுக் கொண்டே போகுமாதலால் சாந்துணையும் கற்க வேண்டும்.

கல்வியின் பயன் தானடங்குதலும், தாமின்புறுவதனை உலகின்புறக் காண்டலுமாம். கல்வி என்ற அதிகாரத்தை அரசியலில் வைத்திருக்கும் ஆசிரியர்க்குக் கல்வி நாட்டில் பரவுவது அரசாங்கத்தின் பொறுப்பு என்ற கருத்துப்போலும்.

மனிதன் உலகில் உயர்ந்த செல்வமுடையவனாய் வாழ வேண்டும்; பொன், மணி முதலிய செல்வங்களுளெல்லாம் கல்வி உயர்ந்தது. அழியாதது. மக்கள் வாழும் எவ்விடத்தையும் தன்ன தாக்குவது. இன்று ஆங்கிலக் கல்வியுடையவன் உலக நாடு களுடனெல்லாம் பழகுகிறான். உலக அறிஞரையெல்லாம் இன்புறுத்துகிறான். மனித அறிவு மற்றைய உலகங்கள் பற்றியும் அறிகின்றது. ஆயிரமாயிரம் ஆண்டுகட்கு முன்னும் பின்னும் உள்ள உலகநிலைகளை ஆராய்கின்றது. திட்டமாகக் கணிக் கின்றது. இதற்குக் கல்வி (அறிவியல்) அறிவு மிகவும் இன்றியமையாதது. உலகில் என்றும் ஒவ்வொருவகையான ஏற்றத்தாழ்வு இருந்துகொண்டேயிருக்கின்றது. அதனைப் போக்கக் கல்விக்கிருக்கும் சிறப்பு வேறெதற்கும் அவ்வளவில்லை. கல்லாதவரது ஆட்சி அல்லது அறிவு உலகில் பலபல சமயங்களில் சிறந்திருப்பினும் பொதுவாகப் பெரும்பான்மை நிலைகளைப் பற்றித்தான் பேச வேண்டும். அவ்வகையில் கல்வியுடையோரே சிறந்தோராகின்றனர். முற்கூறிய கல்லாதார்க்கும் துணைநின்று வழிநடத்துவது கற்றோர்தாம். அழகை வள்ளுவர் விரும்பாமலில்லை. ஆனால் அது அறிவுடன் கலந்திருக்கும்போது உயிருள்ளதாகிறது. பொதுவாகக் கற்றோர் உலகில் கல்லாதாரினும் வறுமையுடையர் போலத்தான் தெரிகின்றனர். எனினும் அவ்வறுமை உலகிற்குத் தீமை செய்யாமையுடன் நன்மையும் செய்தலால் வரவேற்கத் தக்கதென்கிறார்.

கேள்வி யென்பது அறிஞரிடத்தில் வாய்மொழியாகக் கேட்டல். ஆசிரியனிடம் மந்திரப்பொருளைக் கேட்டல் முதலி யவுமாம். சாந்துணையும் கற்கும் கல்விக்கு இஃதொன்றே நீடித் துதவுவது. அறுசுவையுண்டியினும் சொற்பொருட்சுவைகளை

யுடைய கேள்வியே சீரிதென்கிறுர், நினைத்தின்புறுந்தன்மையும் இதற்கிருத்தலான்.

அறிவு வளர்தற்கொரேவழி சொல்வதனை எளிதாகப் பிறர் கொள்ளுமாறு சொல்லுதலும், அதே சமயம் கேட்பது எத்தனை அருமையாயினும் அதனை எளிதில் உணரவல்லாராயிருத்தலுமாம். உலகில் உண்மை பலவடிவங்களாகவிருக்கும். பலவிடங்களில் மறைந்திருக்கும். அதனுற்றுன் எத்தன்மைத்தாயினும் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவென்கிறுர். கல்வியெடுப்பது ஆகலான் கல்வியெடுக்கும் பொருள் எளிதாக வெளிப்பட்டு விடுவதில்லை. கற்றுரவையில் ஒன்றைச் சொல்லுதலென்பது தன் அறிவு வளர்ச்சிக்கும் உலக வளர்ச்சிக்கும் உகந்ததாகும். கொத்தில் மலர்ந்து மணமும் பெற்ற மலர்போல்வதது என்கிறுர் ஆசிரியர். தான் கற்றதைக் கொண்டு நூல் எழுதுதலும் இதனுள் அடங்கலாம். வருங்கால உலகமும் வாழத் தானறிந்ததை எழுதிவைக்கவேண்டும். போர்க்களத்தில் வாட்பிடித்துப் போரிட்டு வெல்வதுதான் வீரமென்பதில்லை, நல்லோரவையில் சொற்பிடித்து வாதிட்டு வெல்வதும் வீரமென்கிறுர் ஆசிரியர்.

கல்வி வளர்ச்சிக்கும் நாட்டில் நூற்பெருக்கத்திற்கும் நல்லரசுகளின் துணைவேண்டும். அந்தணர் (மேலோர்) நூல்கள் அப்போதுதான் தோன்றிப்பரவும். படிக்குந்தொறும் நூல்நயமிகப் பெருகிச் செல்லுதலால் மாருத இன்பம் வேண்டுபவர்கள் நன்னூல்களைப் படித்துக்கொண்டேயிருக்கவேண்டும். நிரம்பிய நூலறிவினை ஆசிரியர் வற்புறுத்துகிறுர். ஏதோ ஒன்றைப் படித்துவிட்டுக் கடைசிவரைக் காலட்சேபம் செய்து கொண்டிருத்தலாகாது. அறம், மருத்துவம், போர் முறை முதலியவற்றைப் பற்றிய நூல்களை ஆசிரியர் தம் குறளில் குறிக்கிறுர். நூற்பொருளைப் பல்காலும் நினைத்தலால் அது வளர்வதாகும். நூலோர் மறைமொழிகளாகிய உண்மைகளை யெடுத்துரைப்பதன்மூலம் நிறைமொழி மாந்தரென நிலைத்தபெயர் பெறுகின்றனர். இன்பத்திற்குரிய பெண்ணிடம் கொங்கைகளைப் போல்வது எடுத்துச் சொல்லுந்திறனுடைமையென்கிறுர் மற்ருேரிடத்தில்.

எண்ணும், எழுத்தும் கலையியலும் (Arts) அறிவியலும் (Science) என்னலாம். பண்டு தொட்டே தமிழர் கணிதம்,

வானநூல், சோதிடம் முதலியவற்றில் நல்லறிவு கொண்டு வந்துள்ளனர். கற்றல் ஒழுக்கத்திற்கே என்பது வள்ளுவரின் உறுதியான கொள்கை. எவ்வளவு எளிமையாகப் பழகியும் ஆசிரியடம் நற்கல்வியைக் கற்கவேண்டும். ஆசிரியர்கள் பெரிதும் ஏழைகளாக (கற்போரிலும் எளியராக) இருப்பதனுல் கல்வியைத் தம் மேன்மை கருதி இழந்துவிடலாகாது. கேட்பது மிகுதி யாகவும் உண்பது குறைவாகவும் இருக்கவேண்டும். அதனுற்ருன் காது இரண்டும் வாய் ஒன்றும் இறைவனுல் அளிக்கப்பட்டதென வேடிக்கையாகக் கூறுவர் பலர். சிறிதளவாயினும் கண்டது கற்கப் பண்டிதனுவன். கற்பனவற்றை நுண்ணிதாகக் கற்கவேண்டும். எல்லோரிடத்தும் குறையிருப்பதுண்டு. எனவே ஆசிரியரிடத்தும் நூலிடத்தும் இருக்கும் குறைகளைக் கருதாமல் நிறைகளைக் கற்றுப் பயன்பெற வேண்டும்.

உண்மைப் பொருள் இன்னதென்பதை ஓரளவு கருத்திற் கொண்டு மெய்ப்பொருள் நூல்களைக் கற்கவேண்டும். ஐயம் இன்றிக் (கசடற) கற்றலே உண்மைக்கல்வி. உண்மை மிக வாழத்தில் இருப்பது. அதனையுணரும் வரைக் கற்கவேண்டும். படிக்குந்தோறும் அறியாமை வெளிப்படும். அவ்வறியாமை வெளிப்பட்டு நிற்கும்வரைக் கற்கவேண்டுமென்பது.

கல்வி ஒருவற்குறும் இடையூறுகளையும், இறுதியையும் வாராமற்றடுக்கக் கூடியதாகும். அறிவோர் அறவோர் உலகுடன் பொருந்தக் கற்றலே கல்வி. கல்வி அடக்கத்தையும் உயர்ந்த குணங்களையும் வளர்ப்பதாக வேண்டும். இறைவனைப் பற்றிய உணர்ச்சிகளைத் தூண்டுங்கல்வியே உண்மைக் கல்வியென்பது உலகில் பல நாடுகளிலும் மதத்தினரிடத்தும் காணும் கொள்கை. சொற்சோர்வின்றிப் பேசுதல் கல்விக் கழகாம். கல்வி சொற்களா லாகியது, அச்சொற்களை நெறிப்படுத்துவது.

கல்லாதவர் எதனையும் இடையில் விட்டோடுவர் தீமைக் குட்படுத்தி விடுவராகலின் அவர் நட்பும் செயலும் ஆகாவென்பது கல்லாமை முதலிய தனியதிகாரங்களில் வற்புறுத்தப் பெறு கின்றது.

**பொருளடைவு**

**கல்விச் சிறப்பு :**

கல்வி ஒருவற்கு அழிவில்லாத சீரிய செல்வமாகும். மற்ற மணியும் பொன்னும் முதலாயின தாயத்தார், கள்வர், அரசர் முதலியோரால் கொள்ளப்படும் (400). கற்றவரென்பவரே கண்ணுடையரெனப்படுவர். கல்லாதவர் கண்கள் நோய் முதலிய துன்பஞ் செய்தலால் அவை புண்ணெனப்படும், தேயமும் காலமும் இடையிட்டவற்றை யுணரவல்லதாகலின் கல்வி கண்ணெனப்படும் (393). ஒரு பிறப்பிலே ஒருவர் கற்ற கல்வி உயிரோடு செல்வுழிச் சென்று அவற்கெழுபிறப்பினுந் துணையாதலையுடைத்தாம் (398). இழிகுலத்துப் பிறந்தாராயினும் கற்றோர் மேற்குலத்துப் பிறந்த கல்லாதாரினும் பெருமையுடையவராவர் (409). கேள்வியாலாகிய கல்வியினையுடையார் நிலத்திருப்பினும் அவியுணவினையுடைய தேவரோடு (அறிவானிறைதலாலும் துன்பம் அறியாமையாலும்) ஒப்பாவர் (413). கேள்விச் செல்வத்தாலாய கல்வியே பிற செல்வங்களுளெல்லாம் தலையாயதாம் (411). விளங்கிய நூல்களைக் கற்றவர் உணர்வு மிகுதியுடைய மக்களாகக் கருதப்பெறுவர், கல்லாதவர் அவ்வுணர்வில்லாத விலங்குகளோடொப்பாவர் (410). சாந்துணையும் கற்கும் ஒருவனது கல்வி பொருட்கொடையும் பூசையும் பெறுதலால் அது எந்நாட்டையும் தந்நாடாக்கும், எவ்வூரையும் தன்னூராக்கும் (397).

**கல்லாமை :**

கல்லாதவனது அறிவு சிலசில சமயங்களில் மிக நன்றாயிருப்பினும் அஃதறிவுடையாரால் கொள்ளப்படமாட்டாது (404). கல்லாதவர் மதிப்பும் பயனுமில்லாத களர் நிலத்திற்கு (இருக்கிறார் என்னுமளவின்றி மதிப்பும் அறிவும் இல்லாமையின்) ஒப்பாவர் (406). நுண்ணிதாக மாட்சிமைப்பட்டுப் பல நூல்களிலும் சென்ற அறிவில்லாதவனது அழகும் எழுச்சியும் சுண்ணத்தாற் செய்த பாவையது எழுச்சியும் அழகும் போலுமாம் (407). கல்லாதாரிடத்து நின்ற செல்வம் கெடுதலைச் செய்தலால் அது கற்றாரிடத்து நின்ற கெடுதலைச் செய்யாத வறுமையினும் தீயதாம் (408).

### கேள்வி :

கேள்வியால் துளைக்கப்படாத செவிகள் பிற ஓசை மாத்திரத்தைக் கேட்பினும் செவிடாந்தன்மையவேயாம் (*418*). செவியால் நுகரப்படும் சொற்சுவை பொருட்சுவை யாகியவற்றை யுணராத மாந்தர் சாவினும் வாழினும் உலகிற்கொன்றேயாம் (*420*).

### அறிவு :

யாதொருபொருளை யாவர்யாவர் சொல்லக் கேட்பினும் அப்பொருளின் மெய்ப்பொருளைக் காணவல்லது (கேள்வி) அறிவாம் (*423*). தான் சொல்வதனை, அரியவாயினும் கேட்பார்க் கெளியவாகுமாறு மனங்கொளச் சொல்லி பிறர் வாய்க்கேட்பன காணவரிய நுண்ணியவாயினும் அதனைக் காண்பதே அறிவாம் (*424*). அறிவுடையார் பிறிதொன்று மிலராயினும் எல்லாமுடையராவர்; அறிவிலாதார் எல்லாமுடையராயினும் காக்கவும் படைக்கவும் திற மின்மையின் ஒன்றுமிலராவர் (*430*). அறிவின்மையே ஒருவற்கு வறுமையுள் மிக்க வறுமையாகும். மற்றவற்றை யில்லாதவர் வறியராகக் கருதப்படமாட்டார் (*841*).

#### கல்வியும் சொல்லுதலும் :

கற்றவர் முன்பு வாய்திறவாமல் அடங்கியிருப்பா ராகில் கல்லாதவரும் மிக நல்லவராவர் (*403*). கல்லாதவன் தன்னை அறிவுடையனுக மதிக்கும் மதிப்பு கற்றவன் அவனிடத்திற் சிறிதுநேரம் உரையாடிய அளவிற் கெட்டு விடும் (*405*). ஒருவனது கல்வி வழுப்படாமல் சொற்களை ஆராய்வாரவைக்கண் அதனைச் சொல்லும்போது விளங்கித் தோன்றும் (*717*). நூல்கற்றும் நல்லாரதவையினை யஞ்சுபவர் கல்லாதவரினும் கடையாவர் (*729*). இலக்கண நெறியானே அளவை நூல்களைக் கற்றூரதவைக்கண் அஞ்சாது சொல்லுதற்பொருட்டு கற்றல்வேண்டும் (*725*). அவையினை அஞ்சுபவன் கற்ற நூல் பகைநடுவண் பேடி பிடித்த கூர்வாளையொக்கும் (*727*). கற்றவற்றை அவை யஞ்சிச் சொல்லமாட்டாதவர் உயிர்வாழினும் இறந்தாரோ டொப்பர் (*730*). கற்றநூலைப் பிறருணர விரித்துரையாதவர் கொத்தில் மலர்ந்தும் மணமில்லாத பூவை யொப்பர் (*650.*)

**கல்வியும் நூலும் :**

அவையிலொன்றைச் சொல்லுதற்கு நிரம்பிய நூலறிவு வேண்டும், இன்றேலது அரங்கு அமையாமல் வட்டாடியது போலாம் (401). நூல் படிக்குந்தோறும் நயமிகுவதாகும் (783). நுண்பொருள்களை யுணர்த்தும் நூல் பலவற்றைக் கற்பினும் நல்லூழில்லாதவர்க்குப் பேதைமையுணர்வே மேம்படும் (373). அறவோரது (கல்வி) நூல்கள் அரசனது முறைமையை முதலாகக் கொண்டு வளர்வனவாம் (543). அரசன் முறைசெய்து காவானுயின் அந்தணர் நூலையோதமாட்டார் (560). புகழமைந்த நீதி நூல்கள் அரசனது கண்ணெனப்படும் (581). இயற்கையறிவுடன் கூடிய நூலறிவு எதிரிசெய்யும் எத்தகைய சூழ்ச்சியியையும் அறிந்து வென்றுவிடும் (636). நூற்கல்வி தூதுரைப்பவர்க்கு மிக இன்றியமையாததாம் (683). மறவியுடையார்க்குப் புகழில்லையென்பது எவ்வகைப்பட்ட நூல் (கல்வி) உடையோர்க்கும் ஒப்ப முடிந்ததாம் (533). நூல்கள் அறங்களைத் தொகுத்துரைப் பனவாகும் (322). போரைப்பற்றியும் பொருளியலைப் பற்றியும் கூறுவன ஒருவகை நூல்களாம் (440). மருத்துவத்தைப்பற்றிக் கூறுவது ஒருவகை நூற்கல்வியாம் (941). போர்முறை படைக்கலம்பற்றி கூறும் நூல்கள் அரணின் இலக்கணம்பற்றிக் கூறுவனவாம் (743). நூற் கல்வி பல்வகைக் கோட்பாடுகளையும் ஆராய்ந்தபின் ஒரு முடிவினைக் கூறுவதாகும். (அது துறந்தார் பெருமையை விழுமியவற்றுள் விழுமியதாகக்கொள்ளும்) (21). மறை மொழிகள் (உயர்ந்த உண்மைகள்) உலகில் நிறை மொழியினை உடையவரும் துறவிகளுமாகிய ஆசிரியரது பெருமையைக் காட்டுவனவாம் (28). நூற்கல்வி மறக்கக் கூடியதும் பின்பு நினைவூட்டிக் கற்கக்கூடியதுமாகும் (134). அளவு நூலென்பது தருக்கமாகும், அவை அறிந்து சொல்வதற்கு அது முறையாகக் கற்கப்படவேண்டும் (725).

**கற்கும் முறை :**

கற்கப்படும் நூல்களில் விபரீத ஐயங்களை நீக்கி மெய்ப்பொருளை உணர்ந்து கற்க வேண்டும். கல்வியின் பயன் கற்றவாறு ஒழுகுதலாம் (391). கணிதமாகிய

எண்ணும் எழுத்தாகிய மொழியும் கல்வியின் இரு பெரும் பிரிவுகளாம் (392). செல்வர் முன் வறியர் நிற்பது போல ஆசையாற்ருழ்ந்து ஆசிரியர் முன்னின்று பொய்யாய மானத்தை நோக்காது மெய்யாய கல்வியைக் கற்க வேண்டும் (395). மணற்கேணி தோண்டியவளவில் ஊறுவதுபோல அறிவு கற்றவளவாக ஊறும் (396). கல்வியில்லாதவன் அவையில் ஒன்றைச் சொல்ல விரும்புதல் முலேயிரண்டும் இல்லாதவள் பெண்மையை விரும்பிறற்போலாம் (402). செவிக்குணவாகிய கேள்வி யில்லாதபோது வயிற்றுக்கும் (பின்னிருந்து கேட்டற் பொருட்டு) சிறிது உணவு இடப்படும். சிறிதாக உண்டு பெரிதாகக் கேட்டல் வேண்டும் (412). உறுதி நூல்களேத் தான் கல்லாதவனுயினும் அவற்றைக் கற்றறிந்தார் சொல்லக் கேட்கவேண்டும் (414). ஒழுக்கம் உடையவர்களே ஆசிரியராகக்கொண்டு கேட்டல் வேண்டும் (415). உறுதிப் பொருளாகிய கல்வி சிறிதாயினும் அதனேக் கேட்டல் மழைத்துளிபோல் நிறைந்து பெருமை தரும் (416). கேள்விப் பொருள்கள் நுண்ணிதாக ஆராய்ந் தறிந்து அதன்மேலும் ஈண்டியதாக வேண்டும் (417). கேள்வி பொருள்களின் நுட்பத்தை அறிவிப்பதாக வேண்டும் (419). பகை முதலிய தீக்குணங்கள் கற்ற கல்வியைப் பயன்படுமாருக்க மாட்டா. (நல்ல பல நூல்களேக் கற்றவிடத்தும் பகைவர் மனந்திருந்தலில்லே) (823). அரிய நூல்களேக் கற்றுக் குற்றமற்ருரிடமும் ஆராயுமிடத்து வெண்மைத் தன்மை (அறியாமை) இல்லாமையரிதாகும் (503). கல்லாதவற்றைக் கற்ருராகக் கொண்டொழுகுதல் குற்றம் தீரக் கற்றதனேயும் ஐய மாக்கும் (845). கல்வி, சூதினேக் கொள்வாரிடம் சார மாட்டாது (939).

குற்றமறக் கற்றல் :

கற்றறிந்ததைப் பிறர்க்குச் சொல்கையில் அச்சொல்லில் கசடு இல்லாததாக வேண்டும் (717). மெய்ப்பொருளே உணர்தலில் ஏற்படும் தெளிவு ஐயம் சிறிதுமில்லாத தாக வேண்டும். (அப்போதே வீடுபேறுண்டாகுமென்பது) (353). பிறர் மனத்திலுள்ளதனேக் குறிப்பாலறிபவர்க்கு

அவ்வறிதலில் ஐயமென்பது சிறிதுமிருத்தலாகாது (702). மேலும் மேலும் அறியும்பொழுது (முன்பு அப்பொருளைப் பற்றியிருந்த தனதறிவு அறியாமையாய் முடியும்) முன்னிருந்த அறியாமைகள் நீங்கிக்கொண்டே யிருக்கும். அறியாமை முழுதும் விலக மேலும்மேலும் கற்கவேண்டு மென்பது (1110). குற்றமற்ற அறிவொளிர வேண்டுமாயின் அதற்கு அவிச்சையாகிய அறியாமை மயக்கம் நீங்க வேண்டும் (352). மெய்ப்பொருளில்லாதவற்றை மெய்ப்பொருளாகக் காண்டலே மருளென்பதாம். (351).

**கல்விப்பயன் :**

அறிவோர் உலகத்துடன் பொருந்த ஒழுகக் கல்லாதவர் பலநூல்களைக் கற்றும் அறிவில்லாதவராவர் (140) எல்லா நூல்களையும் கற்றதனாலாகிய பயன் மெய்யுணர்வினையுடைய இறைவனது வீடுபேற்றிற்குரிய நல்ல திருவடிகளைத் தொழுதலாம் (2). ஆசிரியரிடத்து உபதேச மொழிகளைக் கற்று உண்மைப்பொருளைக் காண்டல் வேண்டும். அப்போது மீண்டும் பிறத்தல் என்பதில்லை (356). கல்வியைத் தாமகிழ்ந்ததுபோல உலகம் மகிழ்வது கண்டு அதனையே மேலும் கற்பார் கல்வியின் மிக்கார் (399). கற்கமாட்டானாயினும் ஒருவன் கேட்டல் அவனது தளர்ச்சிக்கண் தாங்குவதொருதூணும் (414). கல்வி, வெகுளி தோன்றாமல் ஒருவனைக் காத்தடக்க வேண்டும் (130). கற்றறிதலென்பது அமைச்சர்க்கிருக்க வேண்டிய மாட்சிமைப்பட்ட தன்மைகளுள் ஒன்றாகும் (632). நீதி நூல்களைக் கற்றல் மாற்றுவேந்தரிடம் தூதுரைப்பவர்க்கிருக்க வேண்டியதொரு இயல்பாகும் (686). கேள்வியறிவினையுடையவர் பிறழவுணர்ந்தவழியும் பேதைமை பயக்கும் சொற்களைச் சொல்லமாட்டார் (417). கல்வியறிவு இறுதி வாராமற்காக்கும், பகைவரால் அழிக்கவியலாத அரணாகும் (421). நுட்பமான கேள்வியுடையோரே பணிவுடைய மொழியினராதல் கூடும், மற்றையோர் தம்மை வியந்து நிற்பர் (419). கல்வி அரசரிடம் நீங்காமலிருக்க வேண்டியதொரு இயல்பாகும் (383).

### கல்லாமையின் தீமை

கல்லாதவனிடத்திருக்கும் பொருள் சிறிதாயினும் அது நற்பயன் தருதலில்லை. எனவே அது வலிமையுள்ள அரசரால் விரும்பி, கொள்ளத்தக்கதாம் (*870*). கல்லாக் குதிரை போல்வாரது நட்பு கொள்ளத்தக்கதன்று, அக் குதிரை போரின்கண் மேலிருந்தவனை வீழ்த்தியோடுதல் போலக் கல்லாத நட்பினரும் கேட்டின்கண் விட்டுநீங்குவர் (*814*). கல்லாதார் அமைச்சராகக் கொள்ளப்படத் தக்கவரல்லர். அவர் சேர்ந்த அரசினைக் கொடுங்கோலுக் குள்ளாக்கிவிடுவர் (*570*).

# 17. காமம்

இத்தலைப்பில் காமத்துப்பால் (25 அதிகாரங்கள்) முழுவதும் ஆராயப்பெறுகின்றன. கமம் நிறைந்தியலும் என்பதிலிருந்து உள்ளம் நிறைந்தது என்ற கருத்தால் காமம் என்ருயிற்றென்பர். காமத்துப்பாலா இன்பத்துபாலா என்ற விவாதங்கள் இப்பகுதியைப்பற்றி எழுவதுண்டு. அறம் பொருள் இன்பம் வீடென்ற நான்கின் எனத் திருவள்ளுவமாலைப் பாடல் இருத்தலால் இன்பத்துப்பால் எனப் பண்டையோர் கருதினர் என்றும் தெரிகிறது. இன்பக்கடல் மற்றும் காமம் என்ற குறளால் காமம் ஒழுக்கமெனவும் இன்பம் அதன் பயனெனவும் ஆகிறது. காமம் ஒன்றனுலேயே மக்களுடலால் அடையும் முற்றின்பம் கிடைக்கின்றது என்ற கருத்தாற்போலும் இதனை 'இன்ப'மென்றே கருதினர். தாம் வீழ்வார் மென்ருேள் துயிலின் இனிதுகொல் என்ற குறள் குறிப்பிடுவதும் இதனையேயாம்.

காமத்துப்பால் தொடக்கத்தில் பரிமேலழகர் கூறும் முன்னுரை ஒருவகையில் பொருள் நிறைவுடையதாயிருக்கிறது. காமத்தினை அவர் , இம்மையே பயப்பதாய் ஐம்புலனும் நுகர்தற் சிறப்புடைத்தாயதொரு ஒழுக்கமாகக் கூறுகிருர். மேம்போக்காகக் காண்பதில் அவ்வாறு புலப்பட்டாலும் ' தாமரைக் கண்ணுனுலகு ' என்றவிடத்து வீட்டின்பத்திற்கும் இஃது (இல்லறம்) துணையாகு மென்பது போதரும். வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்பதில் இவ்வுலகிற்கு மேலானதொரு இன்பத்தினை அது குறிக்கவே செய்கின்றது. காமம் என்பது இல்லறத்தின் முடிந்த இன்பமேயாகும். அறத்துப்பாலில் இல்லறம் துறவறம் என்றவிடத்து அஃது அடங்குமாயினும் தமிழ்க் காமவொழுக்கத்தின் தனிச்சிறப்புக் கருதி அதனைத் தனியே ஒரு பகுதியாக்கி யுரைத்தார். ஆழ்வாரும் நாயன்மாரும் மனை மக்களோடில்லத்திருந்தே வீட்டின்பத்தையடைந்துள்ளனர். களவாவது பிணிமுப்பிறப்புக்களின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மை

யராய தலைமகனும் தலைமகளும் பால்வகையாற்றுமே யெதிர்ப் பட்டுப் புணர்ந்து வருவது என்ற பரிமேலழகர் தம் முன்னுரை இவ்விடத்தில் மிகவும் நினைக்கத்தக்கதாகும்.

உடலழகினும் உடலின்பத்தாலும் ஒருவரையொருவர் கவர்ந் தாலும் 'ஒள்ளமர்க் கண்ணாள் குணம் மறப்பறியேன் என்பது போலக் காமத்தில் இருவரது பண்பும் வளர்கின்றது' என்பதில் ஐயமில்லை. ஒருவர் கொடுக்கக் கொள்ளாது தாமே யெதிர்ப்பட் டுணர்ந்து மணந்தடையும் இன்பம் உலகில் மிகப்பழமையான தெனினும் அது தமிழ் மக்களிடத்தில் உருப்பெற்றுயர்ந்ததோர் நல்லொழுக்கமாகும்.

வீழுமிருவர்க்கினிதே யென்பதில் இருவரும் ஒருவரை யொருவர் விரும்பினால் அன்றி அங்குக் காமம் நிறைவுறலில்லை யென்பது தெளியும். உடம்போடுயிரிடையன்ன என்பதில் இருவ ரதுறவும் பிரிக்கமுடியாதது என்பது வற்புறுத்தப்பெற்றது. எனவே வள்ளுவர் குறிக்கும் காமத்தில் உலகில் ஆணும் பெண்ணும் கலந்தடையும் ஓர் உயர்ந்த பண்பினையும் வாழ் வினையும் காண்கிறோம். மனித வாழ்வின் முற்றிய பயனும் அதுவாகவே காணமுடியும்.

களவு கற்பு என்ற வொழுக்கங்கள் மணத்திற்கு முற்பட்ட தையும் பிற்பட்டதையும் குறிக்கும். முற்பட்ட களவில் பெரிதும் ஒருவரையொருவர் உடலழகினால் கவர்கின்றனர். கற்பில் அவர் களே பண்பினால் கவர்கின்றனர். அணையிட்டுச் செலுத்தும் நீர் போல ஊடலும் பிரிவும் காமத்தை அணையிட்டுப் பாய்ச்சி வளர்க்கும் ஒழுக்கங்களாகின்றன.

பிரிவென்பது தமிழில் ஒரு தனித்தன்மையுடையதாகும். அஃதெக்காலத்திற்கும் பொருந்துவதாகும்; பொருந்துமா என்பது புரியவில்லை. எனினும் அதன் உள்ளுறைக்கருத்து வரவேற்கத் தக்கதும் பயனுறத்தக்கதுமாகும். ஆண் பெண் இருவரும் அருகிருந்து அடையும் உணர்ச்சிகளிலும் புணர்ச்சிகளிலும்தான் இன்பமுண்டென்பது. ஊடல் உணர்தல் புணர்தல் எனக் காம வொழுக்கங்களை மூவகையாகப் பிரித்தனர். ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம் கூடி முயங்கப்பெறின் என்பதில் இரண்டும் மாறிமாறி வரல் இன்பமென்பது.

காமத்திற்குக் கண் இல்லை என்பார்கள், அது பொருந்தாக் காமத்திற்குப் பொருந்தும். காமத்திற்கு இரண்டு கண்களும் உள்ளன. தலைவனைக் கவரும் தலைவி உறுப்புக்களுள் கண்களே முதலிடம் பெறுகின்றன. அவையே அவனை மகிழ்விப்பன, மயக்குவன, கொல்வன போல்வன, தகையணங்குறுத்தல் முழுவதும் பெரிதும் கண்களைப்பற்றியேயாம். அடுத்து நுதலும், முலைகளும் அவனை மயக்குகின்றன. குறிப்பறிதலும் அப்படியே. சொல்லும் முகமுங்கூட அவனை இன்புறுத்துவன வென்பதை அடுத்த அதிகாரங்களிற் காண்கிறோம். எவற்றினும் அவளது மென்மை அவனை வருத்துவது பற்றிக் குறிக்கும் குறள்கள் மிகவும் நயமுடையன. களவில் தலைவியை அடையும் நெறியில் தலைவன் மடலேறலைப்பற்றியும் குறிக்கப்பெறுகின்றது.

பிரிவிலும் ஒருவரையொருவர் உள்ளத்தால் பிரியாதிருப்பதனையே கற்பியல் அதிகாரங்கள் பேசுகின்றன. யாமத்தும் யானேவுளன் என்கையில் இரவிலும் உள்ளுதலைக் குறிக்கிறார். அறத்துப்பாலில் கொழுநற்றொழுதெழுவாள் என்கையில் விடியலிலும் பகலிலும் அவளது மறவாமையை மெய்ப்பிக்கிறார். இப்படி ஒருவர் நினைவால் மற்றவர் வளர்தலே காமம்போலும்! கனவிலும் காமம், தூக்கத்தில்! மலரினும் மெல்லியது காமம், மலரினும் மெல்லிய நெஞ்சத்திற்குரியது. காமவின்பம் கலந்துதான் காணத் தக்க தென்பதில்லை. உள்ளினும் தீராப்பெரிமகிழ் செய்வதது. எனவே நினைத்தின்புறும் நெறியால் அதனைத் தலைப்படலுமாம். புலவியும், புலவி நுணுக்கமும் கணமும் ஒருவரையொருவர் மறத்தலும் பிரிதலுமாகாதென்பதனை வற்புறுத்துவதுமாகும்.

காமம் ஒருவர் பக்கத்தில் இருக்கையில் அது முற்றுப் பெறுதலில்லை. ஒருதலைக்காமமெனப்படும். காழில்கனி காமம் எனப்படும். காயும் கனியும் ஏற்படுவதே இரண்டு பூக்களிலுள்ள மகரந்தத் தன்மையால், அதேபோல ஆண்பெண் ஆகிய இருவரின் இன்பநீரும் கலக்கும்போதே உண்மையின்பமும் பயனும் உண்டாகின்றன. இருமின்னோட்டங்கள் இணையும்போதே மின்(சார) ஒளியும் இரண்டு சக்திகள் (அணுக்கள்) மோதும்போதே அணுசக்தியும் (ஆற்றலும்) உண்டாகின்றன. உலகில் பெரிதும் ஒன்றேற்பட இருபொருள்களின் துணைவேண்டும் போலும்.

கண்களைப்போலக் காமத்தை வெளிப்படுத்துவன வேறில்லை. எப்போதும் காதலர்க்கு ஒருவரைப்பற்றி மற்றவர்க்கு நினைவு.

கூடியிருக்கையில் பிரிவுவருமோ எனவும் பிரிந்திருக்கையில் எப்பொழுது காண்போமெனவும் எப்பொழுதும் கண் விழிப்பே தான். கண்டு கேட்டு என்பதால் கண்வழித் (காணும்வழி) தோன்றும் இன்பமே காமத்தில் பெரிது. இஃதில்லாவழிப்படு மின்பம் குருடர்க்குரிய காமவின்பமே. மற்ற நால்வகைப்புலன் களாலுறுவது இதனினும் சிறிதே.

காமக்குறிப்பறிதலிலும் கண்கள் பெரும் பங்குடையன. கண்குறிப்பே இருவரது உணர்வையும் ஒன்றுபடுத்துவது. இருவர் நோக்கும் இணையும்போதே காமம் அரும்பவும் கனியவும் செய்கின்றது. நோயும் மருந்தும் நோக்கமேயென்கிறார் ஆசிரியர். பொதுநோக்கும் வெகுளி நோக்குங்கூடக் காமநோக்காய் விடுகின்றன. மண்நோக்காதபோதும் மழை பெய்தலால் மண் நனைந்தேவிடுதல் போலக் காதலர் ஒருவர் நோக்காதபோது மற்றவர் நோக்கலிலும் விளைவது இன்பமேயாகும்.

கண்டு மகிழ்தலும் நினைத்து மகிழ்தலும் கள்ளுக்கில்லை, காமத்திற்குண்டென்கிறார். இயற்கைக்கள் வண்டுக்கின்பமும் நன்மையுமாம்.

அலரும் பின் தலைவனூரும் மடலும் ஒருவர்க்கொருவரை உரிமையாக்கிவிடுகின்றன. கண்டு கூடியவரை மணந்தேயாக வேண்டுமென்ற நிலையுற்றுவிடுகின்றது. வேற்றுவரைவெல்லாம் ஆகாததாய்விடுகின்றது. அலரில் ஊர் இருவரது காதலையும் உணர் கின்றது. மடல் என்பது தலைவன் உடல் முழுவதும் – மனமட்டு மின்றி – காமம் பரவி வெளிப்படுநிலை. பனைமடலால் செய்த குதிரையில் அவன் ஊரும்பொழுது அவன் உடல்முழுவதும் காமம் வெளிப்படுவதுணரப்படும்; அப்பொழுதூரார் பெற்றோர்க்குச் சொல்லி எப்படியும் மணத்தை உடன்படுத்திவிடுவர். இஃதொரு வகை வற்புறுத்தலானாலும் இருவர் மனமும் ஒன்றுபட்டபிறகு நிகழத்தக்கதேயாம்.

அழல்போலும் மாலையும் ஆயன் குழலும் காமத்தைத் தூண்டுவன என்பதால் மாலையிலும் முன்னிரவிலும் காதலர் கலையின்பத்தில் திளைத்துப் பின்னிரவில் தனியின்பத்தில் திளைப்ப ரென்பதாம். இப்புணர்ச்சியின்பமே மெய்புகுவன்ன கைகவர் முயக்கவின்பமாம். தாமரைக்கண்ணனுலகு, தம்மிலிருந்து தமது

பாத்துண்டல், அமிழ்தினியன்றனதோள் என்ற அரிய உவமைகள் இதற்காக ஆசிரியரால் ஆளப்பெறுகின்றன. அமிழ்தென்பதால் சுவர்க்க இன்பமே இம்மையின்பத்தின் முதிர்ச்சியாகக் கனிவாகக் காமத்தில் காணப்படுமென்பதாம். ஒவ்வோர் முறையும் காதலர் அடைவது பழையது போன்றதன்று, புதிது, காதலித்த புதுப்பொருள் ஒவ்வொன்றும் தரும் மனவின்பம்போல என்ற உவமை மிகவும் சிறந்ததாகும்.

புலி பின்னே செல்லுதல் முன்னே பாய்வதற்காவதுபோல காதலர் ஊடுவது புணர்வதற்கேயென்பதாம். ஊடலும் கூடலும் மாறிமாறி வரும். அதுவே இன்பமாம்; புளிங்காடியும் இனிப்புப் பண்டமும்போல. ஆதலாற்றான் ஊடலிற்றோற்றவரே வென்றவர் என்பர், தோற்றவரே பேரின்பமுறுவர் ஆகலின்.

மலரினும் மெல்லியது காமம் எனக் கூறியது எண்ணற்ற பொருள்களை யுட்கொண்டதெனலாம். மலர் என்பது பருவமும் பக்குவமாம். இளமை நலம் கனிந்த நிலை; அதுவும் காதலர் உடல் நிலை மென்மையுற்றுப் பக்குவமுற்ற நேரம்; பிரிந்த காலத்தின் அளவு முதலிய பல பொருள்கள் அதனில் அடங்கி யுள்ளன. பிரிவு காமத்திற்கின்றியமையாதது. ஆனால் தமிழ் இலக்கியங்களில் கூறப்படுவதற்கும் இன்றைய பிரிவுகட்கும் வேற்றுமையுண்டு. அன்று பிரிவு ஆபத்து நிறைந்தது. ஆண்டுகள் பல சிலவற்றைக்கொண்டது. எனவே பிரிவதிகாரங்களை ஆராய்ச்சியுடன் நோக்கவேண்டும். இன்று பல மணிகளும், நாட்களும் சில போதுகளில் பல மாதங்களும் பிரிவு நிகழ்கின்றது. இங்கும் பிரிவுக்குப்பின் புணர்ச்சி ஆர்வமும் இன்பமும் உடையதாகவே ஆகின்றது. பிரிவு துன்பக்கடல் அதனைப் புணர்ச்சியின்றி வேறெவ்வகையிலும் கடத்தலரிதாம். அன்றைய பிரிவு இறந்துபாட்டையன்றி வேறெதனாலும் நீக்க முடியாத நிலையிலும் இருந்துள்ளது. தலைவனிடத்திலிருந்து வரும் ஏதாயினும் ஒரு சொல்லும், (அவன் உயிரோடு இருக்கிறான் போலும்) என்ற நிலையை ஏற்படுத்துவதால் தலைவியால் விழையப்படுகிறது. ஆற்றாமையால் தலைவி தூதுவிடவும் தானே நேரிற் சென்று தலைவனையடையவும் நினைத்ததுண்டு. பிரிவில் நினைந்து வருந்தினாலும் தலைவன் நினைவங்கிருத்தலால் அஃதின்பமேயாம். அவன் மனத்திருப்பதால் அவன் பிரிவுணர்ச்சியே இருத்தலில்லை. தலைவனைப் பழித்தல் தலைவிக் கழகின்மையின்

தலைவி அவனைப் பழித்தலில்லை. அவனுடன் கூடியிருந்த நாட்களின் இன்பத்தை நினைத்துக்கொண்டே யிருக்கிறாள். பிரிவில் அவளுடைய தோள்களும் கண்களும் நிலைகெடுகின்றன.

தலைவி வீட்டுப் பணிகளில் ஈடுபட்டிருக்குங் காலம் பகல் முழுவதுமாதலால் மாலை மலரும் காம நோய் என்கிறார். யாமம் புணர்ச்சிக்குரிய அமைதியான காலம். இரவில் கடல் முதலியவை காதலர்தம் அமைதியைக் கெடுப்பனவாம்.

கனவில் காதலர் ஒருவரையொருவர் காணவும், தம்முள் பேசவும் கூடவுங்கூட முடிகின்றதாதலால் கனவு தலைவியால் பாராட்டப்பெறுகின்றது. நனவைவிடக் கனவு உண்மையுடைய தாகத் தெரிகின்றது. நனவில் நெஞ்சத்திருப்பது கனவில் செயலில் காட்டலால் காமத்திற்கு ஊடல் உப்புப் போல்வது: உண்டது செரித்தது போல்வது என்கிறார். ஆனால் ஊடியவர்களை உணர்த்தாமை மிக்க துன்பந்தருவது காக்கவைத்து உணவிடாமை போன்றது. நிலத்தொடு நீரியைந்தன்ன உள்ளமுடையாரிடமே ஊடல் சிறந்ததாம். புலவி நுணுக்கம் என்பதோர் அதிகாரம்; அவ்வாறழைப்பதிலும் வள்ளுவர்தம் அறிவுநுணுக்கம் எனலாம். மனவியலை நன்காய்ந்தெழுதிய அதிகாரமது.

நலம் புனைந்துரைத்தல் என்பதோர் அதிகாரம். அது காம நலம் புனைந்துரைத்தலேயாம். காதற் சிறப்புரைத்தலும் அவ்வாறே. தலைவியும் அவள் காமமும் பூவினும் மெல்லியன. மதியனைய குளிர்ச்சியுடையது அவள் முகம். அவள் எயிறூறிய நீர் பாலும் தேனும் கலந்த கலவையனையது. நெஞ்சத்துவைத்தும் கண் மணியுள் வைத்தும் காதல் காக்கப்படுவது. அவளது நுதலொளி யொன்றுமே தலைமையான அவனது வீரத்தையும் வென்று விடுகின்றது.

மாமையென்பது அழகு. பசப்பு என்பது மேனியழகு வெளிறின தன்மை. அழகு மாறிய வெளிறிய மஞ்சள் நிறமாகும். பிரிவில் உடல் அழகு (மேனி) குன்றிவிடுகின்றது. தலைவன் பிரிந்த கணத்தில் பசலை உடலில் பாயும், கூடிய கணத்தில் மறையும். நெற்றியும் கண்ணும் பசலைக்குரிய சிறப்பிடங்கள்.

தலைவனைக் கண்ணுரக் காண்டலானும் உடலாரத் தழுவத லாலுமே பசலை நீங்கும். தலைவனோடிருக்கையிலுங்கூட (ஊடலில்)

பசலை தோன்றுதலுண்டு. அது தலைவன் நீங்குவான் என்ற நினைவு தலைவியதுள்ளத்தில் தோன்றும்போதாகும்.

**பொருளடைவு**

**காதல் :**

தலைவியால் காதல் செய்யப்பட்ட தலைவனிடமும் காதலில்லாவழி இன்பமில்லையென்பதாம் (*1195*). தலைவன் தலைவியிடத்துக் காதல் இலனாகப் பிரிந்திருக்கையில் தலைவி மட்டும் வருந்துவது பேதமையாம் (*1242*). தாம் காதலித்தாரால் காதலிக்கப்பெற்ற மகளிர் பரலற்ற பழம்போன்ற காம நுகர்ச்சியைப் பெற்றவராவார் (*1191*). காமம் ஒருதலையன்பினால் உண்டாயதாயின் அஃதின்னாதது; காவடியினது பாரம்போல இருதலையும் ஒத்ததாயின் இனியதாம் (*1196*). காமன் ஒருவர் பக்கத்தில் நின்றொழுகுவானாயின் அதனால் தடுமாற்றமும் துன்பமுமேயாம் (*1197*).

**காமமும் காட்சியும் :**

அயலார்போலப் பொதுநோக்கு நோக்குதல் காதலின் குறிப்பாகும் (*1099*). காதலன் தலைவி கண்ணினின்றும் போகான், இமைப்பினும் அதற்கு வருந்தானெனவே காணப்படா நுட்பமுடையனென்பதாம் (*1126*). கண்களைக் களவினால் நோக்கும் சிறிய நோக்கம் காமத்திற் பாதியன்று, அதனினும் பெரியதாம் (*1092*). கடலினுமிக்க காமநோயைக் காதலரிடம் நிறுத்தலான் கண்கள் உறக்கமின்றித் துன்புறுவனவாம் (*1175*). தனது காமத்தைக் கண்ணினால் தலைவி சொல்லியிரத்தல் பெண்மையின் மேலும் ஓர் பெண்மையுடையதென்பதாம் (*1280*). தலைவனை விழைந்து உள் நெகிழ்ந்து, விடாதே தலைவனைக் காதலியது கண்கள் இயற்கைப் புணர்ச்சிக் கண் காண்பனவாம் (*1177*). காதலர் அருகிருப்பினும் அவர் விரும்பாராயினும் காதலியது கண்கள் அவரைக் காணாதமைவனவல்லவாம் (*1178*). வாராதபோது அவன் வரவு பார்த்தும் வரின் பிரிவஞ்சியும் கண்கள் துயிலுவதில்லை (*1179*). உள்ளே மறைந்துகிடக்கும் காமத்தைக் கண்கள் பறைகளைப்போல (யாவருமறியும்படி) வெளிப்படுத்திவிடுவனவாம் (*1180*).

**காமமும் கள்ளும் :**

கண்டவுடன் மகிழ்தலும், நினைத்துக்களித்தலும் கள்ளுக்கில்லாமல் ஆனால் காமத்திற்குள்ள தன்மையாம் (*1281*).அட்டநறவு உண்டவர்க்குத்தான் களிப்பினைத் தரும், காமம் கண்டவர்க்கும் இன்பஞ் செய்வதாம் (*1090*).

**காமமும் அலரும் :**

காதலரால் விரும்பப்படுவது கௌவை; அஃதூராரால் இருவரதுறவும் அறியப்படுவதேயாகும். அலரெடுக்கும் ஊராரே தலைவியைத் தலைவற்களித்துவிடுவர் (*1150*). காமம் அலரினாலே அலர்தலையுடையது. அவ்வலரில்லை யாயின் அது தன் தன்மையிழந்து பொலிவழியும் (*1144*). களிக்குந்தோறும் கள்ளுண்டல் விரும்பப்படுதல் போலக் காமம் அலராகுந்தோறும் இனிமை தருவதாம் (*1145*). காமத்தை அலரால் அவிக்க நினைத்தல் நெருப்பை நெய்யினால் அவிக்க நினைத்தாற்போலாம் (*1148*). தலைவி அடைதற் கரியளாம்போது அலருண்டாகும், அவ்வலரினால் அவள் அடைதற்குரியளாவாள் (*1142*). அலரினாலே காமுற்றாரதுயிர் ஒருவரையொருவர் அடைவோமென்ற உறுதியுடன் நிற்ப தாகும் (*1141*). தலைவியது கூட்டத்தைத் தலைவன் பெரு திருக்கையிலும், அலரினால் தலைவன் அதனைப் பெறுதல் உறுதி யாகலின் அக்கூட்டத்தைப் பெற்றவனேயாவான் (*1143*). தலைவி தலைவனை ஒருநாளே கண்டாளாக அலர் திங்களைப் பாம்பு மறைத்ததுபற்றிய அலர்போல உலகெங்கும் பரவுவ தாம் (*1146*). காமநோயாகிய பயிர் அலரையே எருவாகக் கொண்டுவளரும் (*1147*). தலைவன் வரையாது பிரிந்திருக்கும் வரை அலர் விழையத்தக்கதாம் (*1149*).

**மடலேறுதல் :**

காமத்தால் வருந்தியவர்க்கு மடலேறுதலைத் தவிர வேறுவழியில்லை. மடலேறுதலால் ஊரார் இருவரிடையேயு முள்ள காதலையறிந்து தலைவியைத் தலைவற்களிப்பரென் பதாம் (*1133*). கடலன்ன காமத்தால் வருந்தியும் பெண் மடலேறுதல் என்பதில்லை, அதுவே பெண்மைக்குயர் வாம் (*1137*).

**காமப் புணர்ச்சி :**

காமுற்ற காதலரிருவர்க்கும் காற்றிடையறுதலில்லா முயக்கம் இனியதாகும் (*1108*). தலைவி புலக்கின்றபோது அதனைத் தலைவன் கலவியினாலே நீக்குபவனாவான் (*1246*). ஊடலும் அது தீர்தலும் பின் புணர்தலும் காமத்தால் கூடியவர்கள் பெற்ற பயன்களாம் (*1109*). ஒன்றையறியுந் தோறும் அறியாமை தோன்றுதல்போலக் காதலர் புணருந் தோறும் இன்பம் அமையாததாம் (*1110*) ஊடுதல் காமத்திற்கின்பம், அதன்பின் கூடிக்களித்தல் அதற் கின்பமாம் (*1330*). காமவின்பம் மலரினு மெல்லியதாகும். அதன் செவ்வியறிந்து கூடி யதன் நன்மையைப்பெறுவார் உலகில் அரியராவர் (*1289*). நுதல்வியர்க்குமாறுண்டாகும் இன்பத்தைக் கூட்டம்தரும் (*1328*). ஊடலுக்குப் பின்னிகழ்வது கூடல், சிலபோதுகளில் ஊடலைக் கடந்தும் கூடல் ஏற்படுவதாம் (*1284*). ஊடலின்கண்ணே எதிர்த லாற்றுமல் தோற்றவர் புணர்ச்சிக்கண் பேரின்பமெய்துவர் (*1327*). பிரிந்த தலைவன் மீண்டு வருகையில் இருவரும் முன்பு கூடிய கூட்டத்தின்பம்பற்றி மேலுமேலும் மிகுதியாக நினைத்திருப்பர் (*1264*). காதலரைப் புணர்ந்திருக்கும் இருப்பும் அவர் பிரிவாரோ புணர்ச்சியின்பம் நீங்குமோ என்ற துன்பத்தையுடையதாம் (*1152*). தலைவன் பிரிந்தால் புணர்ச்சியின்பம் அரிதாகலின் அப் பிரிவேற்படாமற் காத்தலே அதற்கு வேண்டுவதாம் (*1155*). புணர்ச்சியின்பம் நீட்டித்தலையே காதலர் விரும்புவர். எனவே ஊடலை நீட்டியாதிருக்க விழைவர் (*1307*). தம் இல்லின் கண்ணிருந்து தமது முயற்சியால் வந்த பொருளைத் தென்புலத்தார் முதலியோர்க்கும் பகுத்தபின் தன்பகுதி யுண்ணும் இன்பம் போல்வது தலைவியிடத்துத் தலைவ னடையும் புணர்ச்சியின்பம் என்பதாம் (*1107*). புணர்ச்சி நீங்கினுல் பசப்பு வந்து படருமாகலின் எப்போதும் இடையருத புணர்ச்சியைக் காதலர் விரும்புபவராவர் (*1186*). தலைவியது தோள்கள் அமிழ்தத்தின் இயன்றமையின் அவற்றைத் தழுவுந்தோறும் தலைவனதுயிர் தழைக்குமென்ப தாம் (*1106*). காதலர் புணரும் புணர்ச்சி அவரது தோள்களைப் பூரிக்கச் செய்வதாம் (*1103*). விரும்பப்படு வாரது மெல்லிய தோளின்கண் துயிலும் (புணர்ச்சி) யின்பம்

திருமாலின் வைகுந்தவின்பத்திலும் சிறந்ததாம் (*1103*). காதலித்தபோது காதலிக்கப்பட்ட அவ்வப்பொருள்களைப் போலும் இன்பந் தருவது காதலர்தம் தோள்களைப் புணருமின்பமென்பதாம் (*1105*). புணர்ச்சி நீங்கிய காலத்தே மாலைக் காலம் காதலரை வருத்துவதாம் (*1226*).

**பிரிவு நிலை :**

தீ நெருங்கினகாலத்திலன்றி நீங்கிய காலத்துச் சுடுதலில்லை, காமம்நீங்கிய பிரிவுக்காலத்து வருத்தும்(*1159*). பிரிவுக் காலத்தே காமம் கடல்போன்றதென்ற உண்மை புலப்படுவதாகும், அக்காலத்ததனை எப்புணைகொண்டும் கடத்தலரிதாம் (*1164*). காமம் இன்பக்கடல் எனப்படும். ஆனல் பிரிவுக் காலத்தில் அஃது அத்தனையும் துன்பக்கடலாக மாறிவிடும் (*1166*). வறண்ட நிலத்தில் பெய்த மழைபோலப் பிரிவுற்று வருந்தும் தலைவிக்குத் தலைவன் செய்யும் அளி இன்பந் தருவதாம் (*1192*). பிரிவுற்று வருந்துவோர்க்குரியது இறந்துபாடேயன்றி வாழ்வோமென்னும் தருக்கன்ருமென்பது (*1193*). பிரிவுக்காலத்தில் தலைவனிடத்திருந்துவரும் யாதானுமோர் சொல்லும் தலைவிக்கின்பம் பயக்கும் (*1198*). கூடியிருக்கும் காலத்து இன்பமடையச் செய்யும் தலைவனது நோக்குமாத்திரமும் பிரிவுக்காலத்தின்மையால் அது மிகத் துன்பஞ் செய்வதாம் (*1152*). நின்னிற் பிரியேன் பிரியினுற்றேன் என்று கூறித் தலைவன் பிரிவான், அச் சொல்லே துணையாகக்கொண்டு தலைவி பிரிவில் ஆற்றியிருப்பாளென்பதாம் (*1154*). இன்பமுடையவரில்லாத ஊரில் வாழ்தலைப்போலத் தலைவனைப் பிரிந்து வாழ்தல் தலைவிக்கின்னுததாம் (*1158*). தலைவன் பிரிந்தமையைக் கைகளினின்றும் கழன்ற வளைகளே முன்னருணர்த்துமென்பதாம் (*1157*). பிரிவுக்காலத்துத் தலைவன் இருக்குமிடத்தைத் தலைவியது நெஞ்சம் நினைப்பால் சென்றடைதல்போலத் தலைவி உடலால்தானே சென்றடைய விழைதலுண்டாம் (*1170*). பிரிவில் காம நோயைப் பிறரறியாமல் மறைத்தலியலாது, அது இறைக்கவிறைக்க ஊற்றுநீர்போல மிகுந்துகொண்டேயிருக்கும் (*1161*). பிரிவில் காமத்தை மறைக்கவுமியலாது, அஞ்ஞான்று தலைவி தலைவற்குத் தூதுவிட நினைத்தலுண்டு, அதுவும் நாணமாகக் கருதுவளென்பதாம் (*1162*).

**நினைத்து வருந்துதல் :**

பிரிவில் தலைவி எப்பொழுதும் எத்துணையும் தலைவனை நினைந்துகொண்டிருப்பதிலேயே இன்புறுவாள் (1208). (தலைவனை எப்பொழுதும் நினைத்துக்கொண்டேயிருத்தலால் அவன் பிரிந்து அயலில் இருக்கிறனென்ற உணர்வே தலைவிக்குப் புலப்படுவதில்லை (1249). பிரிந்த துன்பத்தில் சிலபோது தலைவனைத் தலைவி பழிக்கக் கருதுவதுண்டு. அப்போதது இழிவாமெனக் கருதி அவனையே நினைந் திருப்பாள் (1298). இகழ்ந்தார்பின் செல்லாத பெருந் தகைமை இகழ்ந்து பிரிந்த தலைவனை நினைந்திருப்பவரிடம் இல்லை, அவனையே நினைந்திருப்பரென்பதாம் (1255). கள் நினைத்ததும் மகிழ்ச்சியைத் தராது, காமம் நினைத்தலிலேயே இன்பந்தரும் (1201). தும்மல் தோன்றுவது போலாகி யடங்குதனின் தலைவன் தலைவியை நினைப்பதுபோன்று நினையாஞகிறனென்பதாம். அன்புடையார் நினைக்க மற்றவர்க்குத் தும்மல் வருவதுண்டு (1203). பிரிவில் தலைவி தலைவனுடன் முன்பு புணர்ந்த நாட்களை நினைத்தலால் உயிர் வாழ்பவளாவாள் (1206).

மறப்பு (நினைப்பு) என்பதனையே அறியாமல் தலைவி தலைவனை நினைந்துகொண்டிருப்பாளென்பதாம் (1207). பிரிந்த தலைவனை வெறுத்தல் தலைவிக்கழகன்மையின் அவனையே எப்போதும் நினைந்திருப்பாளென்பதாம் (1245) புணர்ச்சியில் பிரிவையும் பிரிவில் புணர்ச்சியையும் என ஏதோவொன்றை நினைத்தேங்குவதே காதலர் நெஞ்சத் தொழிலாகும் (1295). பிரிவில் நெஞ்சம் நாணத்தை மறக்குமளவு தலைவனை நினைத்துக்கொண்டே யிருக்கு மென்பதாம் (1297). தனித்திருந்து நினைத்தபோது நெஞ்சம் தலைவியைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தின்னுவதுபோல் இருப்பது என்பதாம் (1296). தலைவனில்லாதபோது பிரிவில் தலைவிக்கு அவனையே நினைத்திருக்கும் நெஞ்சமே துணையென்பதாம் (1299). பிரிவுற்ற காலத்துத் தலைவியது நெஞ்சம் நிணத்தைத் தீயிலிட்டாற்போன்றுருகும் நிலையை யடையும் (1260).

**நலனழிவு :**

பிரிவில் தலைவனையே நினைந்திருக்கும் தலைவியது கண்கள் ஒளியிழப்பன. அதனாலவை குவளைமலர்க்கு ஒப்பாதலில், கெட்டு அவற்றிற்கு நாணும் நிலையடையும் (1231). காதலர் மணந்த ஞான்று பூரித்த தோள்கள் பிரிவில் மெலிவனவாகும் (1233). பிரிவில் தலைவியது தோள்கள் அழகு பெருமையாகியவற்றுடன் வளைகளையும் கழலவிட்டுவிடும் (1234). பிரிவில் தலைவியது கண்கள் ஒளியிழந்து புல்லியவாகும், கைவிரல்கள் தலைவன் சென்ற நாட்களைக் குறிக்கும், சுவரடையாளங்களைத் தொட்டு எண்ணித்தேய்வனவாகும் (1261).

**நிறையழிவு :**

நாணுகிய தாழிட்ட நிறையென்னும் கதவு காமமாகிய கணிச்சியால் உடைக்கப்படும் (1251). பிரிந்துவந்த தலைவன் தலைவி கருதிய பல்வகைக் கலவிகளைச் செய்யும்போது நாணம் மறைந்துவிடுகின்றது (1257). தலைவனது தாழ்ந்த மொழிகள் தலைவியது நிறையாகும் அரணையழித்துவிடும் (1258).

**காமமும் பொழுதும் :**

காதலரில்லாதபொழுது மாலைக்காலம் கொலைக்களத்துப் பகைவரைப்போல வருவதாம் (1224) பிரிந்த ஞான்று மாலைக் காலம் ஒரு காலைக்கொருகால் துன்பமிகுமாறு வருவதாம் (1223). பிரிந்தவர்க்கு மாலைக்காலம் பகையாக மாறிவிடும் (1225). காமநோய் காலையில் அரும்பாகிப் பகலில் போதாகி மாலைக்காலத்தில் மலர்வதாம் (1227). பிரிந்த காதலர்க்கு மாலைக்காலத்தில் குழல் முதலிய இசைக்கருவிகள் வருத்த மூட்டுவனவாம் (1228). மாலைக்காலம் பிரிந்தார் மதிமருளும் வகை வருவதாம் (1229). பிரிந்த தலைவி இரவுமுழுவதும் உறங்காமையின் இரவு உலகவுயிர்களையெல்லாம் துயிலச் செய்து இவளையே துணையாகக் கொண்டதென்பதாம் (1168). பிரிந்தவர்க்கு இரவுக்காலம் நெடிதாகக்கழிவது போலாகும். அது பிரிந்த தலைவனைவிடக்கொடுமை செய்யக்கூடியதாகக் கூறப்படும் (1169). தலைவியூடற்கும் தலைவன் அவளை யுணர்த்தற்கும் இரவு நெடிதாக வேண்டுமெனக் காதலரால்

விழையப்படும் (*1329*). காமக்கடலை நீந்தியும் கரைகாணமல் தலைவி நள்ளியாமத்தும் உறக்கமின்றி இருப்பவளாவாள் (*1167*). யாமம் பிரிந்த தலைவியை உறங்கவிடாது இருத்தலால் கண்ணோட்டமற்றதாகக் கருதப்படும் (*1252*). தலைவன் யாமத்தும் உறங்காமையின் அப்போதும் மடலூர் தலைக் கருதுபவனுவான் (*1136*). பிரிந்தவர் இருவரும் இரவில் நோக்குவது ஒரே திங்களையாதலின் அதனை மறையாதிருக்குமாறு தலைவி விழைகிருள் (*1210*). பிரிந்தவர்க்கு இரவுக் காலத்தில் கடல் அவர்களை உறங்கவிடாமல் வருத்துவதாகும் (*1200*).

**காமமும் கனவும் :**

பிரிந்தவர்களுக்குக் காதலரன்றிக் காதலரது தூதொன்று கனவில்வரினும் அஃதாறுதல் அளிப்பதாம் (*1211*) நனவிற் காணுத காதலரைக் கனவிற்காண்டலினலே தலைவியின் உயிர்நிலைப்பதாம் (*1213*). கனவில் தலைவிதான் கூற விழைந்ததையெல்லாம் தலைவற்குரைக்க விழைபவளாவாள் (*1212*). நனவிற்காணும் இன்பத்தைக் காதலர்க்குக் கனவு தருவதாம் (*1214*). நனவு கனவைக் கெடுத்துவிடுகிறது, நனவிற்காணுத காதலரைக் கனவிற்காண்டலால் தலைவி எப்போதும் கனவிருக்குமாறு விழைகிருள் (*1216*). நனவில் நெஞ்சத்தளவில் இருக்கும் இன்பமானது கனவில் உண்மையாகவே கிடைப்பதாம் (*1218*).

**காமமும் ஊடலும் :**

காமத்தை இடைவிடாதெய்துவோர் அடையும் பயன்களுள் முதன்மையானது ஊடலாகும் (*1109*). தலைவன் அதனுலுறும் துன்பத்தைக் கண்டு தானின்புறும் நோக்கத்துடன் தலைவி அவனைப் புல்லாமல் புலப்பவளாகிருள் (*1301*). கலவியின்பத்திற் புலவி உணவிற்கு உப்புப்போல அளவாக வேண்டும். அது சிறிது மிகுந்தால் உணவில் அவ்வுப்பு மிகுந்ததுபோலாம் (*1302*). ஊடல் கூடலில் முடியவேண்டும், அன்றி ஊடியவர்களை உணர்த்தாது விட்டுவிடின் முன்பே நீர்பெருது வாடித் துன்புற்ற கொடியை அடியிலே அறுத்து மேலும் துன்புறுத்துவது போலாம் (*1304*). ஆற்ருமை மீதூர்ந்த காலத்துப் புலத்தலை விழையினும் அது கடந்து கூடலின்கண் சேர்த்துவிடும் (*1259*).

பனையளவாகிய காமம் நிறைந்து வருகையில் சிறிதும் ஊடுதலாகாது (*1282*). தலைவியிடத்து நிகழும் புலவி தலைவர்க்கோர் அழகினையளிப்பதாம் (*1305*). முதிர்ந்த கலாமாகிய துனியும் இளைய கலாமாகிய புலவியும் புணர்ச்சிக்கின்றியமையாதனவாம், இன்றேல் காமம் மிக முதிர்ந்து சுவைகெட்ட கனியும் மிகப் பிஞ்சாகிச் சுவையே யற்ற கருக்காயும் போலாம் (*1306*). நிழற்கண்ணிருக்கும் நீர் குளிர்ந்து இன்பந்தருமாறுபோலப் புலவி அன்புடையாரிடத் தேதான் இனிதாகும் (*1309*). காதலரிடம் தவறில்லையேனும் தலைவியூடுவதுண்டு அது கண்டு தலைவன் விரைந்து தலையளி செய்வான் (*1321*). ஊடலிற் சிறு வெறுப்புண்டாயினும் அது தலைவனதின்பத்தை மிகுவித்தலின் பெருமையுடையதாம் (*1322*). நிலமும் நீரும் கலந்தாலொத்த ஒற்றுமையுடையாரிடம் புலத்தல் தேவருலகவின்பத்தைத் தரும் (*1323*). மேலுமேலும் உண்பதினும், முன் உண்டது செறித்தலின்பமாவதுபோல மேற்புணர்தலினும் ஊடுதலின்பமாம் (*1326*). இருவருள் ஊடலிற்றோற்றவர் வென்றவராவர், அது பின் புணர்ச்சியுள் பேரின்பமெய்தலாலறிப்படும் (*1327*). கூடலிற் றோன்றும் இன்பம் ஊடலாற்றான் பெறப்படும் (*1328*). காமத்திற்கு ஊடுதலின்பம், அவ்வூடல் கூடிமுயங்குதலில் இன்பத்தையடையும் (*1330*).

**காரணமின்றியூடல் :**

பரத்தையிற் பிரிவு காரணமாகத்தலைவிக்கு ஊடல் தோன்றும் (*1311*). தலைவியதூடலைத் தீர்த்தற்குரியதோர் வழி தலைவன் தும்முதல், அப்போது தலைவிதலைவனை வாழ்க என வாழ்த்துதலால் ஊடல் தீர்வாள் (*1312*). பூச்சூடிக் கொள்ளுதல் முதலிய ஒப்பனைகளைத் தலைவன் செய்து கொள்ளும்போது அது பிறபெண்டிர் பார்த்து மகிழவே செய்கிறானெனத்தலைவி ஊடுதலுமுண்டு (*1313*). தலைவன் தலைவியைப் பாராட்டுகையிலும் ஊடல் நிகழும், யாரினும் காதல் நின்னிடத்துடையேனென்றுரைகைப் பிற பெண்டிர் அவற்குண்மையறிந்து அவள் ஊடுபவளாவாள் (*1314*). தலைவனது பிரிவு தலைவியது ஊடலுக்கொரு காரணமாகும் (*1267*). இம்மையில் நின்னைப்பிரியேன் என்றுரைக மறுமையிற் பிரிவீரோவெனப் புலப்பவளாவாள் (*1315*). பிரிந்த காலத்து

நின்னை நினைத்தேனென்றுரைக மறந்த பின்னரன்றே நினைத்த தெனப் புலப்பவளாவாள் (1316). தலைவி, தலைவன் தும்மியது கண்டு வாழ்த்தியவள் மீண்டும் வேறியாரோ பெண்டிர் நினைத்துத்தானே தும்மினன் எனப்புலப்பவ ளாவாள் (1317). தலைவன் பிரிவைப் புலப்படுத்தித் தலைவியையுணர்த்துங்காலும் பிறரிடமும் இவ்வாறு தானேயா வீரெனப் புலப்பவளாவாள் (1319). தலைவியதவயவங்களைக் கூர்ந்து தலைவன் நோக்கினும் யாருடன் ஒப்புமை நினைத்து நோக்கினீரெனத் தலைவி புலப்பவளாவாள் (1320).

காமக்குறிப்பு :

தலைவியின் கண்ணுள்ள இருநோக்குள் ஒன்று காம நோயை விளைவிப்பதும் மற்றொன்றதனைத் தீர்க்கு மருந்தாவது மாகிய குறிப்புக்களையுடையன (1091). களவாக நோக்கும் தலைவியது அருகிய நோக்கம் மெய்யுறு புணர்ச்சியின் ஒத்த பாதியளவின்றி அதனினும் பெரிதாம் (1092). நோக்கிய தலைவி தலைவன் நோக்கத்தலைகுனிதல் இருவரிடையேயும் அன்புப் பயிரை வளர்க்கும் நீராகும் (1093). தலைவன் நோக்குகையிற்றுனிறைஞ்சி அவன் நோக்காதபோது அவனை நோக்கித் தன்னுள்ளே மெல்ல நகுவாள் (1094). காதலர் சொல்லும் கடுஞ்சொல்லும் அகத்துப் பகையுடைய தன்மையின் பின்னின்பம் பயக்கும் குறிப்பினையுடையதாம் (1096). பகைவரது போன்ற வெகுளி நோக்கம் காதலர்க்குரிய குறிப்பாம் (1097).

காதலர் இருவருள் ஒருவர் கண்ணுடன் மற்றவர் கண் ஒக்குமாயின் அது புணர்ச்சிக்குறிப்பாம் (1100). பளிக்கு மணியகத்துக்கிடந்தே புறத்தே புலனுகும் நூல்போலத் தலைவியதணியின்கண் உண்டாகும் குறிப்பு தலைவனுலறியப் படும் (1273). முகையின் கண்ணுள்ள நாற்றம் புறத்துப் புலப்படாதவாறுபோலத் தலைவியது நகைமுகிழ்ப்பின் கண்ணும் ஓர் குறிப்புண்டாம் (1274). தலைவியின் கைகளில் முன்பே வளை கழலுதல் தலைவனது பிரிவினைக் குறிப்பதாம் (1277). தலைவி தன்தொடி, தோள் அடியாகியவற்றை நோக்கிய குறிப்பு தலைவன் பிரிந்தால் தொடி கழலும், தோள்மெலியும், அடிகள் அவனுடன் உடன்போக்குடன்படும்

என்பதாம் (1279). தலைவன் தலைவியை மிகவுமாற்றி அவள் மகிழும்வண்ணம் மிகுதியும் கலக்கின்ற கலவி அவன் மீண்டும் பிரியவிருக்கின்றான் என்பதனையுணர்த்துவதாம் (1276).

**காமமும் கற்பனையும்:**

தலைவி, அனிச்சம்பூவினும் மென்மையான இயல்புடையவளெனப் பாராட்டப்பெறுவாள் (1111). தலைவியது கண்கள் தாமரை, குவளை முதலிய மலர்களினும் சிறந்தனவாகக் கருதப்படும் (1112). தலைவியது மேனிதளிர் நிறமுடையதாயும், முறுவல் முத்தம் போன்றும் நாற்றம் நறியதாயும் கண் வேல்போன்றும் தோள் மூங்கில்போன்றும் இருப்பனவாம் (1113). தலைவியது முகம் மதியனையது, இரண்டன் வேற்றுமையறியாமல் விண்மீன்கள் தம்நிலையிற் கலங்குவனவாம் (1116). மதிக்கு மறுவுண்டு, மாதர் முகத்தில் அம்மறுவில்லையென்பதாம் (1117). மதி மாதர் முகம் போன்று ஒளிவிட இயலாததாம் (1118).

மாதரடிக்கு அனிச்சமலரும் நெருஞ்சிபோல்வதெனவே அவர்தம் அடிகள் அத்தனை மென்மையுடையவாம் (1120). பணிந்த மொழியினையுடையாளது எயிறூறிய நீர் பாலுடனே தேன் கலந்தது போலாம் (1121). உடம்புக்கும் உயிருக்குமுள்ள தொடர்பு தலைவிக்கும் தலைவனுக்குமுள்ள தொடர்பென்பதாம். உடலில் உயிர் இருக்குந்தனையும் அவ்வுயிர் சென்றுபுகும் உடம்பிலும் அத்தொடர்பு இருக்கும் (1122). புணருமிடத்துத் தலைவி உயிரோடு வாழ்தலைப்போலவும் நீங்குமிடத்தவ்வுயிர் உடலினின்று நீங்கிச் சாதலைப்போலவும் இன்றியமையாதவளாவாள் (1124). தலைவியின் குணங்களைத் தலைவன் நினைத்தலு மறத்தலுமின்றி நினைத்துக்கொண்டிருப்பானென்பது (1125). தலைவியை எப்போதும் காணும் விழைவுடன் தலைவன் கண்ணுள் மணியாகவே அவளைக் கொள்ள விழைவானென்பது (1123). காதலர் எப்போதும் நெஞ்சின் கண்ணேயிருப்பதால் வெம்மையான உணவினையும் தலைவி அவரைச்சுடுமென்றஞ்சி உண்பதில்லையென்பதாம் (1128). இயற்கைப் புணர்ச்சியின்கண் தலைவியது தோற்றம் மயிலையும் கண்டாரைவருத்தும் தெய்வமகளையும் ஒத்ததெனப்

பாராட்டப்பெறும் (*1081*). பெண் தன்மையுடன் கூடிய தலைவியது அமர்த்த கண்கள் கண்டாருயிரையுண்டலால் கூற்றுவனையொத்ததாகக் கூறப்படும் (*1083*). தலைவியின் கண்கள் பிணைமானது கண்களாகப் பாராட்டப்பெறும் (*1085*). நிமிர்ந்த கொங்கைகளின் மீதணிந்த ஆடை மத களிற்றின் முகத்திலிட்ட படாத்தினை யொக்குமென்பதாம் (*1087*). பகைவரும் அஞ்சுதற்கேதுவாகிய தலைவனது வலிமை தலைவியது ஒளிபொருந்திய நெற்றிமாத்திரத்திற்கும் அழிந்துவிட்டதென்பது (*1088*). தலைவிக்கு மடப்பமுடைய நோக்கமும் நாணமுமாகிய இயற்கை யணிகளே போதும் வேறு செயற்கையணிகள் வேண்டாமென்பது (*1089*).

**காமமும் பசப்பும் :**

**பசப்பு தோன்றுமிடம்** *: பசப்பு தலைவியின் மேனி மேற்படர்வதாகும் (1182). பசப்பு படர்தற்குரிய குறிக்கத் தக்க இடங்கள் தலைவியின் நெற்றியும் கண்ணுமாகும் (1240).*

**காலம் :**

*தலைவன் பிரிந்தவழித்தலைவியது ஆற்றாமையால் பசப்பு தோன்றும் (1188). தலைவனது பிரிவிற்கும் பசப் பினது தோற்றத்திற்கும் காலஇடையீடில்லை. பகலும் இரவும்போல அவன் பிரிவும் பசப்புத் தோற்றமும் ஒன்றாகவே நிகழும் (1185).*

**காரணம் :**

*தலைவன் அருள் செய்யாமை காரணமாகப் பசப்பு தோன்றும் (1232). தலைவனது முயக்கத்தில் சிறிது மெலிவு (தளர்ச்சி) ஏற்படினும் பசப்பு தோன்றும் (1186). தலைவனைத் தழுவிக்கிடந்த தலைவி சிறிது நெகிழ்ந்த வளவிலும் பசப்பு அள்ளிக்கொள்வதுபோலத் தலைவியின் மேனியில் செறிந்துவிடும் (1187). தலைவன் பிரிந்தஞான்று மேனியழகு சென்றுவிடுவதால் அவ்விடத்தே பசலை படர்வதாகும் (1183).*

**நீங்கும் வகை :**

கண்களாரும் வரைத் தலைவனைக் கண்டாலன்றித் தலைவியிடம் பசப்பு நீங்காது (1267). தலைவனது சொற்களைத் தலைவி நினைப்பினும் அவனது நற்குணங்களை யுரைப்பினும் பயனில்லை. அவன் நேரிலில்லாத வழிப் பசப்பு வந்து மூடிக்கொள்ளும் (1184). தலைவன் பிரிதலைத் தலைவியே உடம்பட்டாளாகலின் அப்பிரிவாற்றுமையாலாய பசப்பியல்பினையாரிடத்தும் சொல்லாதவளாவாள் (1181). உடம்படுத்திப் பிரிந்த தலைவன் தவறில்லாத நன்மைக் கண்ணே நிற்றலையுடையனுயின் மேனி பசப்பதுபற்றித் தலைவி வருந்துதலில்லை (1189). தலைவனது அருளின்மையை நட்டோர் தூற்றுராயின் தலைவி பசப்பே வடிவமாயினுளென்ற பெயரைப் பெறுதலையும் விரும்புவாள் (1190). தலைவன்பிரிந்து ஒருநாள் கழிந்ததாக, தலைவி அக்குறிப்பினை ஒருவாரத்திற்கு முன்பேயறிந்து பசப்புற்றதாகக் கூறுவாள். எனவே பசப்பு தலைவனுேடிருக்கையிலும் தோன்றுவதுண்டு. ஆனல் பிரிந்திருக்கையில் நீங்குவதுமட்டுமில்லை (1278). பசப்புத் துன்பம் பிரிந்த தலைவன் அருளாமை காரணமாக வரும். அது பற்றித் தலைவன் ஒன்றும் கருதுதலில்லை (1243).

# 18. குடிமை

குடிமக்கள் (உயர் குடிமக்கள்) தன்மையையே குடிமை, குடி செயல்வகை ஆகிய அதிகாரங்கள் கூறுகின்றன, அரசியலிலும் குடிமக்களைப்பற்றிப் பேசப்படுகின்றது. அரசனதங்கங்களில் ஒன்றேகுடியாகும். குடியென்பது 'நாட்டினை' எனப் பரிமேலழகர் எழுதுகிறார். அதாவது நாட்டு மக்களை என அவர் கருதுகிறார் போலும். ஒழிபியல் பகுதியிலேயே குறளில் குடிமை பற்றிப் பேசுகிறார் ஆசிரியர். ஒழிபியல் பகுதியெனப் பேசுவதனையே பண்டையோர் குடியியல் எனக்குறித்தனர். திருவள்ளுவமாலையும் அதற்காதாரம் தருகின்றது. படைகுடியெனப் பிரித்த பகுதிகளில் மற்றவைந்தனையும் பொருட்பாலில் பிரித்து ஆசிரியர் பேசுகிறார். மற்ற குடியினை இவ்வொழிபியல் எனப்படும் பகுதியில் பேசுகிறார் என்பதே பொருத்தமாம். பின் அதனை ஏன் ஒழிபியல் என வெறுத்தனரோ தெரியவில்லை. 'குடிமை, மானம், சான்றாண்மை பண்புடைமை யாகிவற்றையா ஒழிபியல் என்பது! அவை உயர் குடிமக்கட்குரிய ஒழுக்கமென்பதுதான் பொருத்தம். எனவே இவ்வியலைக் குடியியல் என்பதே சாலச்சிறந்தது.

குடிமையென்பதில் உயர்குடிப்பிறந்தாராது தன்மைகளையும் குடி செயல்வகையில் குடியுயர்த்தற்காம் முயற்சியையும் ஆசிரியர் வற்புறுத்துகிறார். குடிமக்களதியல்பு எனவும் இதனைப் பொருள் செய்யலாம். நாட்டில் ஒவ்வொரு குடிமகனுக்குமுரிய அந்நாட்டுப் பண்பின் இயல்பு என்பதாம். பரிமேலழகரும் நால்வகை வருணத்தாருக்கும் இஃது இன்றியமையாததென்கிறார் எனவே இது பொதுப் பண்பு எனப்படும். குலம், குடி என்றிரண்டினையும் ஒன்றாகவே கூறுகிறார் வள்ளுவர். குலம், குலை கொத்து என்பன ஒரு பொருட்சொற்கள். ஒரு தலைவனையுடைய குடியில் வளரும் பண்பும் பெருமையும் அத்தலைவன் மரபில் வரும் அனைவர்க்கும் அனைத்துக் குடிகட்கும் தொடர்ந்து வருகின்றன. அதுவே குடிமைத்தன்மை. தமிழ் இனம் போன்ற பெரிய இனத்தின் (குடியின்) தன்மையையும் குடிமையெனப் பேசுதற்குரியதாம்.

அரசவங்கமாதலால் குடியுயர்தற்கு அரசியலின் ஆதரவு மிகவாக வற்புறுத்தப் பெறுகின்றது. குடிமை ஒரு நந்தா விளக்கு, அஃதக்குடிமக்களை உலகமுள்ளளவும் விளங்கச் செய்யும். பண்பாடு அல்லது நாகரிகமென்பதும் அக்குடிமையின் விளைவேயாகும். இன்சொல்லும் முக்கரணத் தூய்மையும், கொடையும், முகமலர்ச்சியும் ஆகியயாவும் குடிமையின் நல்லிலக் கணங்களாம்.

குடியையுயர்த்தலில் முயற்சிக்கு முதலிடம் தருகிறார் ஆசிரியர். அம்முயற்சியுடையோர்க்குத் தெய்வமும் துணை செய்யும். அவர்க்குக் காலநேரம் என்பதில்லை. பிறர் உதவி யென்பதும் தேவையில்லை. உயிர் உடல் என்ற கவலைகளும் அவர்க்கில்லை, அவரைச் சூழ்ந்த குடியினரெல்லாம் உயரவேண்டுமென்பதே அவர் தம் வேணவா.

பகையும், பொறாமையும், சோம்பலும், நடுவு தவறுதலும் குடி மையை யழிப்பனவாம். நண்பர்க்கும் தூதுவர்க்குமுரிய நற்பண்பு களில் குடிமையும் ஒன்றாகும்.

ஒழுக்கத்திற்றவறுதல் தாழ்ந்த பிறப்பாகிவிடும் என்பது அவனை மக்களுள் மிகத் தாழ்ந்தோனாக யாவருமதிப்பர் என்பதாம். ஒழுக்கம் என்பதால் குடிமை உயிரினும் ஓம்பற்குரியது. நந்தா விளக்குப் போல்வது உயர்குடியெனில் ஒளியென்பது புகழ், எனவே அழியாப்புகழுக்குரியது என்பதாம். வாய்மையும் குடிமைக் குணம். வாய்மையுடையோர் போல உலகத்தாருள்ளத்துள் எல்லாமுளனாகக் குடிமையன் வாழ்வான். இன்சொல் முதலிய செம்பொருள் கண்டார் இயல்புகள் இவற்குரியன. [23] எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நாடு நல்லது என்பதுபோல நற்குடிமை யால் நாட்டுப் பண்பும் உயர்கிறது. உடலும் பொருளும் சுருங்கிய போதும் குடிமைக் குணம் குன்றாத சான்றாண்மை குடிமையர்க் குரியது. அடக்கம் அவர்க்குரிய சிறப்பியல்புகளுள் ஒன்று. மனத்துக்கண் மாசற்றுப் பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலராக அவர் வாழ்வர்.

இன்று உலகத்தலைவரெல்லாம் ஓயாத உழைப்பினை அடிக்கடி வற்புறுத்துகின்றனர். அன்று குடியுயர வள்ளுவர் கூறிய அறைகூவலே குடி செயல்வகை. முயற்சிமட்டும் போதாது,

மக்கட்சிறப்பாகிய அறிவும் அதனுடன் இணையவேண்டும். வீரம் என்பது போரில் வெல்வதுமட்டுமன்று, வீட்டிலும் வெற்றி (செயல் வெற்றி) யுடைமையே வீரமாம். அரசற்கு மட்டுமின்றி அமைச்சர்க்கும் குடியுயர்த்தும் கடமை கூறப்பட்டிருப்பது இக்கால அரசியலில் பொருத்தமாம்.

பாழ் செய்யும் உட்பகை நாட்டிற்காகாதென்பவர் குடிக்கும் ஆகாதென்கிறார். அதனல் குடியும் நாடென்னும் பெருங்குடியும் ஒன்றென்ற கருத்து வலிமையுடையதாம். நடுவுநிலையென்பது குடிக்கும் (அரசர் குடிக்கும்) எடுப்பாயதொரு இயல்பாகப் பேசப்படுகின்றது. குடிமையென்பதே பலரின் கூட்டமாகும். எனவே தனித்தொருவர் இருவர் பிறரிடமிருந்து விலகி அல்லது அவர்களை விலக்கிக் குடிமை செய்வது பெரிதும் குடிமைக்கழகன்றும்.

## பொருளடைவு

**நற்குடிப் பெருமை :**

உயர்குடித் தன்மையாவது ஒழுக்கமுடைமையாம், அவ்வொழுக்கத்திற்றவறுதல் தாழ்ந்த பிறப்பாகிவிடும் (*133*). குடியென்பது ஒரு நந்தா விளக்குப் போன்றதாகும், அது உலக நடையுள்ளவரையும் தன்னுட்பிறந்தவரை விளக்கி நிற்கும் (*601*). குடிப்பிறந்தவர்கள் ஒழுக்கம், வாய்மை, நாணமாகிய மூன்று குணங்களினின்றும் தவறமாட்டார்கள் (*952*). மெய்ம்மையுடைய குடிக்கு முகமலர்ச்சி, கொடை, இனியகூறல் ஆகிய மூன்றும் அங்கமாகும் (*953*). பழமையான குடிக்கட்பிறந்தவர் தம் பொருள் சுருங்கியவிடத்தும் பண்பினின்றும் நீங்கமாட்டார் (*955*). உயர்குடிப் பிறப்பென்பது பண்புடைமையின் ஓர் இயல்பாகும் (*992*). நற்குடிப்பிறந்தார்மாட்டுளதாய குற்றம் வானில் மதிக்கண்ணுள்ள மறுப்போல உயர்ந்து விளங்கும் (*957*). அரசனுக்குரிய அங்கங்களுள் குடி ஒன்ருகும் (*381*). இல்லையென்னும் இளிவரவைத்தான் சொல்லாமையும் சொன்னர்க்கு மாற்ருதீதலும் குடிப்பிறந்தாரது இயல்பாம் (*223*). குற்றமற்ற குலமுடையராய் வாழ்வோமென்பவர் பொய்ம்மையைச் சார்ந்து அமைவில்லாதன செய்யமாட்டார் (*956*). நிலத்தினியல்பை முளைகாட்டுதல்போல ஒருவனது குலத்தினது

இயல்பை அவன் வாய்ச் சொற்களே காட்டிவிடும் (959). குலமுடைமை வேண்டின் யார்க்கும் பணிவுவேண்டும் (960). கருத்தும் சொல்லும் செயலும் மாறுகாமல் ஒன்றுகிய செம்மை குடிப்பிறந்தாரிடமே யுண்டாம் (951). ஒழுக்கங்குன்றுவதற் கேதுவாகிய தொழில்களைப் பலவாகவடுக்கிய கோடி பொருளைப்பெறினும் குடிப்பிறந்தவர் செய்யமாட்டார் (954).

**குடியையுயர்த்தல் :**

தன் குடிக்குரிய வொழுக்கம் சிறப்பினைத் தருதலால் அஃதுயிரினும் மேலாகப் பாதுகாக்கப்படும் (131). குடிப் பிறந்தாராகிய சுற்றம் தன்னைச்சூழுமாறொழுகுதலே செல் வத்தைப் பெற்ற பயனுகும் (524). குடியுயர்தற்காம் கருமம் செய்கையில் அது முடியும்வரை வேறு கருமத்தைப் பாரேன் என்னும் பெருமைபோலப் பெருமை வேறில்லை (1021). முயற்சி நிறைந்த அறிவு என்னும் இரண்டினையுடைய இடையருத செயல்களால் குடியுயரும் (1022). குடியினை யுயர்த்தும் செயல்களில் முயலுமவர்க்குத் தெய்வமும் ஆடையையிறுக்குக்கொண்டு தானும் உதவி செய்யும் (1023). தம் குடிக்காம் வினைகளை விரைந்து முயல்பவர்க்கு அவை அவர் சூழவேண்டாமல் தானே முடிவெய்தும் (1024). நல்ல ஆண்மையென்பது தான் பிறந்த குடியினையாளுந் தன்மை யைத் தனதாக்கிக் கொள்ளுதலாம் (1026). போரைத் தாங்கும் வீரர்போல முயற்சியுடையாரிடமே குடியின்பார முழுவதும் தங்கும் (1027). குடிசெய்பவர்க்குப் பனி மழை யெனக் காலநியதியில்லை (1028). தன் குடியைத் துன்ப முறுமற் காப்பவனது உடம்பு முயற்சித் துன்பத்திற்கே கொள்கலமாம் (1029). குடிகளைக் காத்தலென்பது வேந்தர்க்கெல்லாம் விளக்காகும் அரசனது கடமையாம் (390); குடிகள் அரசனது செங்கோலை நோக்கி இன்புறு வனவாம் (542). குடிகளை அணைத்துச் செங்கோல் நடத்துதல் அரசனது கடமையாம் (544). குடிகளை நலியாமற் காத்துக் குற்றஞ்செய்தாரை யொறுத்தல் குற்றமன்று அரசனது தொழிலாம் (549). குடிகாத்தலென்பது அமைச்சரதியல்பு களுள் ஒன்றுகும் (632).

**குடியழிதல் :**

ஒழுக்கம் தப்புதலினால் ஒருவனது குடியழியும் (*1019*). பிறர்க்குக் கொடுப்பதன் கண் அழுக்காற்றைச் செய்வானது சுற்றமும் உண்பதற்கும் உடுப்பதற்கும் இல்லாமல் கெடும் (*166*). குடியென்னும் நந்தா விளக்கு சோம்பலென்னும் இருளடர அணைந்துபோம் (*601*). உட்பகை கொண்ட குடி செப்பும் மூடியும் போலப் பொருந்தினவாயினும் பொருத்த மில்லாததாம் (*889*); நடுவுநிலையை விட்டுப் பிறர்பொருளை விரும்புதலால் குடிகெட்டுக் குற்றம் பலவுமுண்டாம் (*171*). குடிப்பிறந்தாரிடம் மடிமை தங்கினால் அது பகைவர்க்கவரை அடிமையாக்கிவிடும் (*608*). முறை கோடி ஆராயாது செய்யுமரசனது நாட்டுக்குடிகள் இழக்கப்படுவனவாம் (*554*). பெரியாரைக் குறைய மதிப்பாராயின் இந்நிலத்து நிலை பெற்றாற்போலும் குடியினரும் மாய்ந்துவிடுவர் (*898*). ஒருவன் தனது குடிக்குரிய ஒழுக்கத்திற்றவறினால் அவன் குலம் இழிந்ததாகும் (*134*). குடியாகிய மரம் அடுத்தாரைத்தாங்கும் நல்ல ஆண்மக்கள் இல்லாதபோது இடும்பையாகிய கோடரி வெட்டிவீழ்த்த வீழ்ந்துவிடும் (*1030*).

**குடிப்பயன் :**

குடிமைக்குரிய ஒழுக்கம் மேம்பாட்டையும் புகழையும் தரும் (*137*). அன்பறாத குடிமைச் சுற்றத்தால் ஒருவன் சூழப்பட்டொழுகின் அஃதவற்குக்கிளைத்தலறாத ஆக்கத்தைத் தரும் (*522*). நற்குடிப்பிறப்பென்பது தூது உரைப்பான தியல்புகளுள் ஒன்றாகும் (*681*). நட்பினர்க்கிருக்க வேண்டிய இயல்புகளுள் குடிப்பிறப்பொன்றாகும் (*793*).

# 19. செல்வம்

செல்வம் பொருள், சொத்து, செலாவணி எனப்பல தலைப்புக் களில் அடங்கும். பொருளதிகாரம் பொருட்பால் எனத்தமிழில் பேசுவதெல்லாம் பெரிதும் பொருளின் தொடர்புடையனவே. பொருள்செயல்வகை, நன்றியில்செல்வம், ஒப்புரவு, ஈகை, நல்குரவு, இரவு, நாடு என்ற பல தலைப்புக்களில் பொருளைப்பற்றி ஆசிரியர் பேசுகிறார். வாழ்க்கையையே அகப்பொருள், புறப் பொருள் என இருவகையாகத் தமிழர் பிரித்தனர். அதாவது உலகில் எதனையும் பொருளாகப், பொருள் உடையதாகக் கண்டனர். அகவாழ்க்கைக்கும் (இல்லறத்திற்கும்) பொருள் வேண்டும். புறவாழ்க்கைக்கும் (சமூக அரசியலுக்கும்) பொருள் வேண்டும். நடுவணதெய்த இருதலையும் (ஏனையிரண்டும் எண் பொருளாக) எய்தும்; பொருள் இருப்பின் அறமும், இன்பமும் உண்டாம். அறத்தினால் வீடுபேறுகூட உண்டாகும். எனவே, இம்மை மறுமை வீடுபேறு என்றனைத்தும் பொருளினாலாகும்.

பொருட்செல்வம் அருட்செல்வம் எனச்செல்வத்தைப் பிரிப்பதோர் பிரிவு. பொருட்செல்வம் இவ்வுலக வாழ்க்கைக் குரியது; அருட்செல்வம் மறுமை வீட்டு வாழ்க்கைக்குரியது. அதாவது பொருள் உடலியல் உலகியல் வாழ்விற்கும் அருள், உள்ளம் – உயிரியல் வாழ்க்கைக்கும் உரியவெனப் பொதுவாகக் கூறலாம். அவ்வருளையும் வளர்க்கும் செவிலி பொருள் எனப் படுகிறது. எனவே பொருள் உயிரியல் – மனவியல் வாழ்வையே நோக்கமாகக் கொண்டது. மனவியலே மனிதவியலாகையால் பொருள் மனிதவியலை வளர்ப்பதாகும். இல்லறத்தார்க்குப் பொருள் உழவுவாணிபம் வினை (தொழில்) முதலியவற்றாலும் அரசர்க்குவரி, போரில்கிடைத்தன, சுரங்கங்களில் கிடைத்தன முதலியவற்றாலும் ஈண்டும். காமத்துப்பாலில் தலைவன் பொருள்வயிற்பிரியும் பிரிவே பெருங்கற்பியல் வாழ்வாக அமை கின்றது. ஈட்டிய பொருளை ஏழைகட்கீகின்றான்; உலகிற்கெல்லாம் ஒப்புரவு செய்கின்றான்; தன்னாட்டாரையும் பிறநாட்டாரையும்

போற்றுகிறுன். தன் வீட்டையும் விருந்தையும் துறவோரையும் அறவோரையும் ஓம்புகிறுன்.

பொருளீட்டுதலில் ஒரு அறத்தை நடுவுநிலைமையை அன்பொடும் அருளொடும் அதுவருதலை வற்புறுத்துகிறது வள்ளுவம். செல்வம் நிலையாததாகையாலே உள்ளபொழுதே உலகிற்குதவி புகழையும் இன்பத்தையும் ஈட்டிக்கொள்ளுமாறு சொல்கிறது குறள். பொருளை ஈயாதிறுக்கிவைப்பது மாணுப் பிறப்பென்கிறது. ஒன்று ஈவார்மேல் நிற்கும் புகழ்; பொருளை வைக்கும் இடம் பொருளில்லங்கள் (பாங்குகள்) அல்ல ஏழைகளின் வயிறே என்பது ஆசிரியர் கருத்து. பிறர் உடுப்பதற்கும் உண்பதற்கும் உதவுவதே பொருளின் குறிக்கோள். பொருளால் அன்புவளர்ந்து அனைவரும் நட்பாவர். எங்கிருப்பினும் பகையை யறுப்பது பொருள்.

பொருள் பெரும்பொருள் நெடும்பொருள்ஆகி வழிவழிச் செல்வது. பண்பு, அறிவு, மெய்ப்பொருள் என மனவியல் (உயிரியல்) பொருட்களையே பொருள் எனக்காணும்நிலை தமிழரிடமும் இந்தியரிடமும் உண்டு. அறிவுடையார் எல்லாமுடையார் என அறிவுச்செல்வத்தின் மேம்பாட்டை ஆசிரியர் குறிப்பிடுகின்றுர்.

ஆகூழ் போகூழ் என ஊழைச் செல்வச் சேர்க்கைக்கோர் காரணமாக்கினுலும் முயற்சி திருவினையாக்கும் என்கையில் முயற்சி ஊக்கம் ஆகியவற்றைச் செல்வத்திற்குரிய உண்மைக் காரணமாக்குகிறுர்.

வாழ்க்கைத்துணைநலத்தில் பெண்ணின் பெருங்கடமை வளத்தக்காளாகக் கொண்டானது வாழ்க்கையை நடத்துதல் என்கிறுர். செல்வம் ஆகாறளவிட்டிதாயினும் போகாறகலாவிடில் நன்றென்கிறுர்.

பொருட்பாலில் குடியியல் சமூகத்தின் இயல்பைப் பேசுகின்றது. நாட்டில் (சமூகத்தில்) இருக்கவேண்டாதன சில வற்றைக் கடைசியதிகாரங்களில் வற்புறுத்திப் பேசுகின்றுர். அவற்றுள் நல்குரவு, இரவு, கயமை, புல்லறிவாண்மை என்பன சில. கயமை பொருளின்மையால் பிறர்க்கடிமையாவது.

செல்வம் எனத் தமிழில் பெயரிட்டது அது செல்வம் செல்வோம் என எப்போதும் சொல்லிக்கொண்டிருப்பது போன்றதனுல் என்பர். அதாவது செல்வநிலையாமையைக் குறிப்பதென்பர். அதனைவிடச் செல்வது செலாவணியுடையது என்பதனுல் அப்பெயர் வந்ததெனில் பொருந்தும். [26] செலாவணியின்றித் தேங்கி மண்ணில் மறைந்துகிடப்பது செல்வமன்று. பொருளாக மதிக்கச்செய்வதனுற்ருன் பொருள் என்ற பெயரும் அதற்காகியிருக்கவேண்டும். செலாவணியற்றபோதும் செல்வம் ஒருவனைப் பொருளாக மதிக்கச்செய்யாது.

பொருள் செவிலியெனப்படுதலால் தாய் போல்வதாம் எனவே இவ்வுலகினை ஈன்றுபுறந்தருதல் அதன் தலைக்கடனுகும். அன்பு ஈன்ற அருட்குழவியை வளர்ப்பது பொருளாகலின் அது அன்பு வழிப்பட்ட குடும்பத்திற்கும் (அருள்வழிப்பட்ட) உலகிற்கும் ஆக்கந் தருவதாகும். அருள் தொடர்பு பேசப்படுதலின் அது இறைத் தன்மையும் இறைவனேடு தொடர்புமுடையது; [24] 'எல்லாஞ்சிவன் தந்தது', இறைவனுல் அருளப்பெற்றது, அவனுல் படைக்கப் பெற்ற உயிர்கட்கெல்லாம் உரிமையுடையது என்பது கருத்து. அரசனது செல்வம் பகையையறுப்பதென்ற முதற்கடமையை யுடையது. மற்றவர்க்கும் எதிர்த்துவரும் தீமைகளை வெல்லுவதென்பதாம். முறைதவறிய அரசனைவென்றும் அவனது நாட்டைக் கொண்டும் அரசர்கள் பொருளீட்டுதல் தவறன்ரும். ஒளியும் நன்மையும் உடையது செல்வம். அது எவ்வளவு தொகுத்தாலும் வேண்டாமெனத்தகாதது. ஆனல் [25] நல்வழியில் செலவழித்தற்கே உரியதன்றி மறைத்து வைக்கத்தக்கதன்று.

'ஆன்றபொருளை' இழிந்தவழியில் ஈட்டி, இழிந்தவழியில் செலவிடலாகாது. மனையாளும் சொல்லும் ஒருவர்க்குச் செல்வம் போல்வன. பிறன் 'பொருளாள்' என்கிருர் ஆசிரியர். (பொருள்) ஆக்கத்திற்கும் அழிவிற்கும் காரணமாதலால் சொல்லும் பொருளெனப்பட்டது. வாணிபத்தில் சொல்தான் பெரிதும் பயன்படுகிறது. பரம்பரையாகச் செல்லுதற்குரியது செல்வம்; ஒரு தலைமுறையிலேயே அழிந்துவிடுவதன்று. அரசனது படைகளும் மழையுங்கூடச் செல்வங்களாம்; உலகச் செல்வத்தையும் நாட்டுச் செல்வத்தையும் ஆக்குவன அவையே யாகலான். ஒருவனுடைய மக்கள் செல்வத்தைக் காப்பவரும் ஆக்குபவருமாதலால் அவரும் செல்வமாவர்.

கல்வி, கேள்வி, அருள், அவாவின்மை, மெய்ப்பொருள், மனப்பெருமை, அடக்கம் முதலிய பலவும் செல்வமாகக் கருதப் படுவன. அடக்கமெனில் பேராசையின்மை, களவு இலஞ்ச மின்மை ஆகியவாம். நற்பொருள் சேர்தற்கு இவையெல்லாம் ஆகாவென்பது உலகறிந்தது. கல்வி அறிவு ஆகியவற்ருல் பொருளேக்காக்கவும் ஆக்கவும் படுமாகலின் அவையும் செல்வ மெனப்படும். மெய்ப்பொருள் என்பது கடவுட்பொருள். இவ் வுலகிற்குரிய பொய்ப்பொருளாகிய செல்வத்தையருளுவதும் காப்பதும் நெறியில் செலவிடச்செய்வதும் மெய்ப்பொருளாகும். மனப்பெருமை என்பது எண்ணப்பெருமை. உயர்ந்த எண்ணங் களும் கோட்பாடுகளும் உடையவர்களுக்குச் செல்வமே தேவை யில்லை, நினேத்தது கைகூடும், எண்ணிய எண்ணியாங்கெய்து பவர் அவராவர்.

செல்வம் ஒருகாலத்தே நிலேயாத இயல்பினதாக இருந்தது. உள்நாட்டு வெளிநாட்டுப் போர்கள் கலவரங்கள் ஆகியவற்றில் புதைத்துவைத்த பொருளேவிட்டோடினர் மக்கள். சேமிப்பு (பாங்கு) வசதிகள் இல்லே. அரசியல் காப்பு இல்லே. எனினும் இப்போதுகூட அதுநிலேயில்லாததாக இருக்கும் நிலேயுமுண்டு. தீநெறியில் சென்று வீணுகச் செலவிட்டு விடுகின்றனர்; அறமென அளவுமீறிக் கொடையளித்து விடுகின்றனர். தொழில் வாணி பத்தில் நட்டம் வந்துவிடுகின்றது. எனவேதான் அதனேப் பெற்றபோதே நிலேயாக்கிக்கொள்ளவேண்டும், நிலேயானவற்றைச் செய்துவிடவேண்டும்.

முயற்சி திருவினேயாக்கும் என்பதே வள்ளுவர் பொருட் கொள்கை. பிறர் முயற்சியும் உழைப்பும் கொண்டு தொழில் அல்லது வாணிபம் செய்துவரும் பொருளால் ஒருவன் வாழ்தலே வள்ளுவர் விரும்பவில்லே. ஊக்கம் உள்ளவனிடம் ஆக்கம் வழிகேட்டுச்செல்லும். வருந்தாமல் தானேவரும் செல்வமுடைய நாடு என்பதில் ஆசிரியர் அதன் வளமிகுதியையே குறிக்கின்ருர், உழைக்காமல் உட்கார்ந்துண்ணுதலேயன்று. தீயநெறியில் சேர்க்கும் செல்வத்தைச் சமூகம் வெறுக்கின்றது. அரசாங்கம் கண்டிக்கின்றது. சில சமயங்களில் தன்மனமே தன்னேச் சுடுகின்றது. களவு, வஞ்சம், சூது, வீணுசை, வெஃகுதல், இன்னுசெயல், நடுவுநிலேயின்மை, அழுக்காறு, பழி ஆகிய வழிகளில் பொருள் ஆதலாகாது.

பொருள் ஈண்டுதலில் உலகியலை ஒப்புக்கொள்கிறார் வள்ளுவர். பொருள் ஆகும்ஊழ் உள்ளவழித்தானே பொருள் குவிகின்றது; அறிவில்லாதவர்க்கும் பொருள் உண்டாகின்றது. இழவூழ் உள்ளவழி என்னசெய்தாலும் பொருள் ஆகாதெனினும் முயற்சியை விட்டுவிடச்சொல்லவில்லை ஆசிரியர். முயற்சியளவு பயன் உண்டென்கின்றார். தனக்குச் செலவிட்டும் பிறர்க்குக் கொடுத்தும் அழியாத செல்வம் ஒருவர்க்கு வேண்டும். நன்கு ஆராய்ந்து தெரிந்த இனத்துடன் ஊதியத்தைக் கருதிப் பொருளைத் தொகுக்கவேண்டும். அருளும் செல்வமும் என்பதனால் அருளுடன் பொருட்செல்வம் ஆக்கப்படவேண்டும் என்பதாம். அருட்செல்வத்திற்கே முதலிடம் தருகிறார் ஆசிரியர்.

அடக்கம் பொருள் ஆகியவிரண்டினையும் ஒன்றாக ஆசிரியர் பேசுதலால் பொருளைக்காத்தலும் அமரருள் உய்ப்பதென்பதாம். அரணுள்வைத்துப் பொருளைக் காக்கவேண்டும்; முறையுடைய அரசின்கீழ்த்தான் பொருள் நன்கு காக்கப்படும். அதற்கெனப் பொருளை ஈயாமலும் நுகராமலும் காத்தல் என்பதுபொருளன்று. அது நடுவூருள் நச்சுமரம் பழுத்தாற்போல்வதாம். விருந்தினரைப் போற்றும் செல்வம் விரும்பத்தக்கது. பொருளை ஈயாமையால் தீயபிறவியுண்டாகும். கொடையினை இரண்டு வகையாக்குகிறார் ஆசிரியர். ஈகை ஒன்று; ஒப்புரவு மற்றொன்று. பெரும் பாலோர்க்குப்பொருந்துவது ஈகை; அரிய சிலர்க்குரியது ஒப்புரவு. தன்வருவாய், செல்வத்தளவறிந்து ஏற்பக்கொடுப்பது ஈகை. அளவின்றிக்கொடுப்பது ஒப்புரவு. இரண்டு நிலையும் நாட்டு வளர்ச்சிக்கு வேண்டும். யாவர்க்கும் நெடுங்காலம் பயன் படுமாறளிப்பதே ஒப்புரவு. தனக்கும் செலவிட்டுக் கொள்ள வேண்டும். தானும் தமரும் வருந்தப்பிறரை இன்புறுத்தும் செல்வம் பேதையின்பாற்பட்டதென்பர்.

அரசனது முறையின்மை, மக்களின் அழுக்காறு, வெகுளி (பஞ்சமா) பாதகம் முதலிய உடையோரிடம் செல்வம் நில்லாது. செல்வம் ஒருவனைச்சுற்றிய சுற்றத்தாரால் சூழச்செய்ய வேண்டும். அது புகழுக்குக் காரணமாகவேண்டும். துறக்கம் அல்லது புகழுக்காகவே உலகில் மிகப்பெரும்பான்மையான செல்வங்கள் பயன்படுகின்றன.

பொருள் அதன் நலன் ஆகியவற்றிற்கெதிரானது வறுமை. பொதுவாக மனிதனை மனிதனாக வாழவிடாது, அறிவையும்

புகழையும் அழித்துவிடும். எல்லாத்துன்பங்கட்கும் இடமாவது, தாயையும் பகைக்கச்செய்வது; தூக்கத்தையும் கெடுப்பது. தவமின்மை வறுமைக்குக்காரணம். வறிஞர் உழவு முதலிய தொழில்களால் முயற்சிசெய்து வாழ்தற்குரியவர். ஓர் அரசியலில் அரசால் கடியத்தக்க மூன்று பொருள்களில் முதலாவது உறுபசி யென்கிறார் ஆசிரியர்.

## பொருளடைவு

### செல்வமென்பது:

அரசர்க்குரிய பொருளாவன உடையார் இன்மையாலே தானேவந்துற்ற பொருளும் சுங்கமாகிய பொருளும் பகைவரிடம் திறையாகக்கொள்ளும் பொருளும் ஆகியவாம் (*756*). பொருளென்பது ஒரு நந்தாவிளக்கு போல்வதாம். அது எத்தேசத்தும் சென்று பகையென்னும் இருளை யறுக்கும் (*753*). பொருளாகிய செவிலி அன்பில் பிறக்கும் அருளாகிய குழந்தையை வளர்ப்பவளாவாள் (*757*). நீதிநூற்கல்லாரோடு பகைத்தலான் வருஞ்சிறியபொருள் அரசனால் விரும்பத்தக்க தாகும். அப்பொருள் அவற்குப் புகழைத்தரும் (*870*). பொருள் ஒண்பொருள் எனச்சிறப்பித்துக் கூறப்படுவது, அது அன்பும் அறனும் செய்யாது வந்ததாயின் பிறரால் கொள்ளப்படும் (*1009*). பொருள் நன்பொருள் என்று சிறப்பித்துச்சொல்லப்படுவது, நடுவுநிலையின்றி வெஃகி யதனால் வந்தபொருள் குடியைக்கெடச்செய்து குற்றம் பலவற்றையும் தரும் (*171*). பொருள், மனையகலமெல்லாம் நிறையக்கூடியதாகும். அது உண்ணுமல் ஈட்டிவைக்கப் படுமானால் உடையவனைச் செத்தவற்குச் சமமாகச் செய்து விடும் (*1001*).

### பொருள்வகை:

பொருள் ஆன்றபொருள் எனச்சிறப்பிக்கப்படுவது, அது தம் மனையாள் ஏவல்செய்வார்மாட்டு உளதாகாது (*909*). செல்வம் பெரியஅளவில் ஈட்டுதற்குரியது; தன்னைக்காணவருவார்க்குக் காலமரியனாய்க்கடுமுக முடைய அரசனது செல்வம் பேயாற்காணப்பட்டதுபோல யாவர்க்கும் பயன்படாது (*565*). செல்வம்போல்பவள்

ஒருவனுக்கு வாழ்க்கைத் துணைவியென்பதாம் (*141*). பொருளாக மதிக்கத்தக்கது திறனறிந்து சொல்லும் சொல்லாகும் (*644*). செல்வம் நீட்டித்திருத்தற்குரியது, கடுஞ்சொல்லும் கண்ணோட்டமின்மையும் உடைய அரசனது நெடுஞ்செல்வம் நீட்டியாமல் உடனே கெடும் (*566*). செல்வம் தொன்று தொட்டுப்பரம்பரையாக வருவது ; அது சூதாடுமிடத்தில் காலையே புகுவானிடத்தில் தங்காது (*937*). செல்வம் கேடில்லாமல் காத்தற் குரியதாகும். வழங்கத்தொலையாத செல்வம் ஒரு சிறந்த நாட்டில் இருக்கத்தக்கதாகும் (*731*). அரச செல்வங்களு ளெல்லாம் தலையாயது நான்குறுப்பானும் நிறைந்த படையாகும் (*761*). மழையென்பது உலகிற்கொரு வருவாயாகும். அது தன் பயன் குன்றினல் உழவர் ஏரான் உழுதலைச் செய்யமாட்டார் (*14.*) மக்கள் ஒருவற்குச் செல்வமெனப்படுபவர். அறிவறிந்த மக்கள் ஒருவன் பெறுதற்கரிய செல்வமாகும் (*61*).

**பண்புச்செல்வம் :**

அழிவற்ற சீரிய செல்வமாவது கல்வியாம், மற்ற மணியும் பொன்னுங்கூட உண்மையான செல்வமாகா (*400*). செவியான் வருங்கேள்விச்செல்வமே பிற செல்வங்களுளெல்லாம் தலையாயதாம் (*411*). செல்வத்து ளெல்லாம் தலையாயது மேலோரிடமுள்ள அருட் செல்வமாகும், பொருட்செல்வம் கீழாயினேர் மாட்டும் உளதாம் (*241*). அவாவின்மைபோல உயர்ந்தசெல்வம் இவ்வுலகத்துமில்லை அவ்வுலகத்துமில்லை (*363*). உலகில் அழியாத பொருள் மெய்ப்பொருள் எனப்படும். அது எப்பொருளில் எத்தன்மையுடையதாகவிருப்பினும் அறிவினல் அறியப்படுவதாம் (*355*). மனப்பெருமையே ஒருவர்க்குச் செல்வம், அது புகழைத்தரும் (*971*). தம் மக்களும் பொருளெனப்படுவர் (*63*). ஒருவர்க்குச் செல்வமெனத்தக்கது ஊக்கமுடைமையாகும் (*600*). செல்வத்துள் ஒன்று அடக்கமெனக் கருதப்படும். அதுவும் செல்வரிடத்தாயின் அது வேறெரு செல்வமாகக் கருதப் பெறும் (*125*).

**செல்வ நிலையாமை :**

செல்வம் நில்லாத இயல்பினையுடையது (331). செல்வம் பலவழிகளானும் வந்து நிறைந்து அவ்வாறே பல வழிகளானும் போய்விடும் (332). பொருளுடைமை யென்பது நில்லாமல் நீங்கிவிடும் தன்மையது (592).

**பொருளீட்டு முறை :**

பொருள் முயற்சியால் ஈட்டப்படுவதாகும். அது தகுதியுடையார்க்கு ஒப்புரவு செய்தற்பொருட்டேயாகும் (212). பொருளைக் கள்ளத்தால் கொள்ளமுயலுதலைப் பற்றி மனத்தாலும் நினைத்தலாகாது (282). பொருள் ஆக்கம் கொடுக்கின்ற ஊழினால் ஆகும் முயற்சியால் வளர்வதாகும் (371). பொருள் வஞ்சத்தால் தேடற்குரிய தன்று. அது பசிய மட்கலத்திலே நீரை முகந்துவைத்தது போலாம் (660). அதனால் விளையும் பொருள் முதலியன வினைசெய்கையில் ஒருவனால் மயக்கந்தீர எண்ணப்பட வேண்டும் (675). அருளும் அன்புங்கொண்டு வராத தாயின் அப்பொருள் போகவிடத்தக்கதாம் (755). பொருள், அன்பின்றி அதனை ஈட்டுதலே நோக்கமாக வுடைய வரைவின் மகளிரால் சேர்க்கப்படுவதாகும் (914). பொருள் இடைவிடாது சூதாடுவோரிடமிருந்து நீங்கிவிடும் (933). பொருளீட்டுவதென்பது ஆடவரியல்பு. (அது தலைமகனிடத்தில் இருப்பதாகத் தலைவி பாராட்டுவாள்) (1230). பொருள் பற்றிய வினைசை அரசனிடம் வினை செய்வார்க்காகாது (501). பிறன் பொருள் ஒருவனால் விரும்பத்தக்கதன்று, செல்வம் அத்தகைய வெஃகாமை யாற்றான் சுருங்காமலிருக்கும் (178). பிறர்பொருள், அவரது சோர்வு பார்த்து வஞ்சித்துக்கொள்ளப்பட லாகாது (285). எய்தற்கரிய பொருளென்பது தெரிந்த வினத்துடனே ஆராய்ந்து வினைசெய்வார்க்கில்லை (462). செல்வம் அறத்தினையறிந்து பிறர்பொருளை விரும்பாத அறிவுடையோனிடம் தானே வந்துசேரும் (179). செல்வம் முயற்சியினால் உண்டாகும் (616). உலகத்தியற்கை அறிவுடையராதல் பொருளுடையராதல் என இரண் டாகும், செல்வம் செய்யப்பெறுவதற்கு அறிவின் துணையும் வேண்டாம், அது ஊழினாலேயே ஆகும் (374).

பேரின்பந்தரும் செல்வமும் பிறர்க்கின்னுதவற்றைச் செய்தலால் வருதலாகாது (311). செல்வம், ஆகும் ஊழ் உற்றவழிக் காலமும் இடமும் முதலிய தீயவாயினும் அவை நல்லவாகித் துணைசெய்ய, வளரும் (375). செல்வம் நடுவுநிலையுடையானிடம் வளர்வதாகும் (112). செல்வம் நடுவுநிலைமை தவறுதலால் உண்டாகுமாறுல் உடனே ஒழியவிடத்தக்கதாம் (113). செல்வம் முதல் எனவும் அதனாலாகும் ஆக்கமெனவும் இருவகையாகும்; ஆக்கங்கருதி முதற்பொருளும் போகும் வினைகள் செய்யப்படலாகா (463). செல்வம், அழுக்காறுடையவன் கண் உண்டாகாது (135). பொருளில்லாதவர் ஒரு காலத்தே பொருளுள்ளவர் ஆதலுங்கூடும் (அருளுடையவர் அஃதற்றுல் பின் ஆதலென்பதில்லை) (248). செல்வம் அசையாத ஊக்கமுடையவனிடம் வழிகேட்டுச்செல்லும் (594). செல்வம் ஒருவரது நட்பினர் முதலிய துணை நலத்தினுல் உண்டாகும் (651). பழியுடன் வரும் செல்வம் சான்றோரது வறுமையினும் தீமை பயப்பதாம் (657). ஊதியம் என்பது லாபம், அது முதலில்லாதவர் கட்குக் கிடைத்ததில்லை, அது முதலைக்கொண்டு தேடும் மேல்வருவாயாகும் (449). பொருளுக்குரிய வினை செய்கையில் ஊதியத்தைப்பற்றி ஆராயவேண்டும் (461). செய்யும் வினையில் நட்டத்தைக்கொண்டு ஊதியம் போகுமாறு விடப்படுதல் பேதமையென்பதாம் (831). பொருளை இயற்றியபின் தொகுத்தலென்பது அரசர்க் குரியதோர் செயலாகும் (385). நாட்டிலுள்ளோர் வருந்தித் தேடவேண்டாமல் தனே வளரும் செல்வம் நாட்டிற்கிருக்கவேண்டும் (739). கெடுதலையறியாததாய்க் கெட்டவிடத்தும் அளவிற் குன்றுததாய செல்வம் நாட்டில் இருக்கவேண்டும் (736).

**பொருளைக் காத்தல்:**

பொருள் ஒருவனல் அடக்கம் காக்கப்படுதல் போலக் காக்கப்பட வேண்டும் (122). தேடியபொருளையழியாமல் வைக்குமிடம் வறியாரது பசியைப் போக்குதலேயாம் (226). பொருளையாளுதல் அதனைக் காக்கமாட்டாதார்க்கில்லை (252). அதனற்கேடுருமல் குற்றத்தைத்தடுத்தல் போல

அதற்குக்கேடுருமல் பொருள் காக்கப்படவேண்டும் (434). பொருள்கேடுவந்தவழி அரண் முதலியவிடங்களில்வைத்துக் காக்கப்படும் (741). எல்லாப்பொருளும் அரணிடத் திருக்கத்தக்கனவாகும் (746). பொருள் எல்லாச்சிறப்பும் எய்தற்குரியதென்று ஈயாமல் காக்கப்படலாகாது (1002). செல்வம் ஒருவனல் தானும் உண்ணுமல் பிறர்க்குமீயாது வைத்துக்காக்கப்படலாகாது (1006). பிறரால் விரும்பப் படாமல் தேங்கிக்கிடக்கும் செல்வம் ஊர்நடுவே நச்சுமரம் பழுத்தாற்போலாகும் (1008). காலத்தோடு பொருந்த ஒழுகினல் ஒருவனது செல்வம் அவனைவிட்டு நீங்காது (482). உடைமைக்காலத்து விருந்தினைப்போற்ருது வைத்துக்காக்கப்படும் செல்வம் வறுமைக்கொப்பாகும் (89). வைத்துக்காக்கப்படும் பொருள் மீண்டும் பிறத்தற் குரிய மயக்கத்தைத்தரும், அதனல் ஒருபொருளும் இல்லாமையே தவத்திற்கியல்பாகும் (344). முறைதவறிய அரசின்கீழ் வைத்துக்காக்கப்படும் செல்வம் வறுமையினும் இன்னுததாம் (558).

**பொருளைச்செலவிடல் :**

பொருள் அளவறிந்துகொடுக்கும் வழியாலே கொடுக்கப்படவேண்டும். அதுவே அதுவழங்கப்படுதற் குரிய நெறியாகும் (477). வருவாய்க்கேற்றபொருள் இல்லாளால் செலவிடப்பட வேண்டும் (51). செல்வத்தி னளவு தனக்குள்ள அளவைநினையாதே ஒப்புரவுசெய்யின் விரைவில்கெடும் (480). செல்வம் ஒப்புரவாளன் கண்ணே படுமாயின் அது ஊர்நடுவே பயன்படுமரம் பழுத்தாற்போல அனைவர்க்கும் எளிதிற்பயன்கொடுக்கும் (216). செல்வம் பெருந்தகையாளனிடம் உண்டாதல் அது பிணிக்கு மருந்தாகித்தேடுவார்க்கு மறையாத மரம்போலாம் (217). பொருள் தனக்கானவற்றைச்செய்து கொள்ளுதற் குரியதாகும், உலோபஞ்செய்தல் பொருளழிவிற்குக் காரணமாம் (437). பேதையிடத்தகப்பட்ட பெருஞ்செல்வம் அயலாரை உண்பித்து உற்ருரைப் பசித்திருக்கச்செய்யும் (837). பொருள்வரும் வழியளவு சிறிதாயினும் செலவாகு மளவு பெரிதாகாவிடில் தீமையில்லை (478). பொரு ளற்ருர்க்குக் கொடுக்காதவனுடைய செல்வம் மிக்க

அழகினையுடைய பெண் தமியளாய் முதிர்ந்ததுபோல யார்க்கும்பயனின்றியழியும் (1007). சீருடையசெல்வர் சிறிதுகாலவறுமையாற் கொடாதொழிதல் மேகம் வறுமை மிக்காற்போல்வதோர் இயல்பினையுடையதாம் (பின்னர் பொருளுற்றதும் உடனே கொடுப்பர்) (1010). பேரறிவாள னிடத்துச் சேர்ந்த செல்வம் ஊருணி நீரால் நிறைந்தது போல நெடிது நின்று யாவர்க்கும் வேண்டுவதைத் தப்பாதுதவும் (215).

**பொருள் அழியும் வகை :**

பொருள், முறைதவறி ஆராயாது செய்யும் அரச னிடத்தினின்றும் நீங்கிவிடும் (554). செய்யவேண்டிய வற்றைச் செய்யாதவனது செல்வம் பின்னில்லாதாகிக் கெட்டுவிடும் (437). அரசனது செல்வம் மக்கள் அல்லற் பட்டாற்ருமல் அழுதகண்ணீரால் தேய்ந்துவிடும் (555). அரசனது செல்வம் அவன் பிறர் குற்றத்தை இனத்தொடும் எண்ணுமல் சினத்தொடும் சீறினல் சுருங்கிவிடும் (568). செல்வம் அழுக்காற்றினல் அழிந்துபோகும் (168). செல்வம், வினைக்கண் முயற்சியுடையானது நட்பினை வேருக நினைப்பவனை நீங்கிவிடும் (519). செல்வம், சூதாடுவோர், கள்ளுண்போர், வரைவின்மகளிர் ஆகியோ ரிடமிருந்து நீங்கிவிடும் (920). செல்வம் இழத்தற்குரிய ஊழுற்றவழி போய்விடும் (371). மிக்க பொருளும், பெருமை மாட்சிப்பட்ட அருந்தவர் வெகுண்டபோது ஒன்றுமில்லாமல் அழிந்துவிடும் (897). ஆன்ற பொருளானது மனையாளுக்கேவல் செய்வானிடம் நில்லாது (909). அறத்தினைக் கருதாமல் வந்த பெரும்பொருள் பிறரால் கொள்ளப்படும் (1009). செல்வம் தேடியவனுல் புசிக்கப்படாமல் இருப்பின் இழக்கப்பட்டுவிடும் (228).

**பொருட்பயன் :**

அருள் அவ்வுலக இன்பத்தை யாக்குதல்போலப் பொருள் ஒருவர்க்கு இவ்வுலக யின்பத்தையெல்லாம் ஆக்கும் (247). பொருள், ஒருபொருளாக மதிக்கப் படாதாரையும் மதிக்கச்செய்வதாம் (751). பொருளென்னும் நந்தாவிளக்கம் எத்தேசத்தும் சென்று பகையென்னும்

இருளையறுக்கும் (753). பொருள் பகைவரது செருக்கினை யறுக்கும் கருவியாம் (759). ஒள்ளிய பொருட்செல்வம் உண்டாயின் அது ஏனைய அறத்தையும் காமத்தையும் எளிதாகக் கிடைக்கச் செய்துவிடும் (760). பொருள் தன்னைக்கொண்டு கள்ளையும் அதனல் மெய்யறியாமை யையும் கொள்ளுதற்குக் காரணமாகக் கூடாது (925). துறக்கமுதலிய செல்வங்களும் அறத்தினல் உண்டாகும் (31). செல்வம் பேரின்பத்தைத் தருவதாகும் (311). செல்வம் ஒருவனைச் சுற்றத்தார் சூழுமாறு செய்யவேண்டும் (524). செல்வம் ஒருவர்க்கு எல்லாரிடத்தும் சிறப்பினை யுண்டாக்கும் (752). கல்லாதாரிடம் சேர்ந்த செல்வம் கற்ருரது வறுமையினுந் துன்பம் செய்யும் (408). கைப் பொருளானது வினையை அச்சமும் வருத்தமுமின்றி முடியுமாறு செய்யும் (758). பொருள் உலகில் புகழுக்குக் காரணமாகும் (1003). கோடிக்கணக்கான பொருளும் தானுகர்வதும் பிறர்க்கீவதுமில்லையாயின் பயனற்றதாகும் (1005).

## பொருளின்மை : நல்குரவு

பொருளின்மையே துன்பங்களுளெல்லாம் மிக்க துன்பமாகும் (1041). பொருளின்மை இம்மையிலும் மறுமையிலும் இன்பந்தராது (1042). நல்குரவு பழைய குடிப்பிறப்பினையும் புகழையும் கெடுத்துவிடும் (1043). இன்மையிற் பிறந்தார் மாட்டதாயினும் இழிசொற்களை உண்டாக்குதற்காம் சோர்வினை உண்டாக்கும் (1044). நல்குரவாகிய துன்பம் மேலும் பலவகையான துன்பங்கட்கும் புகலிடமாகும் (1045). நல்குரவானது தெளியவறிந் துரைக்கும் மெய்ந்நூற்பொருளையும் பயனற்றதாக்கிவிடும் (1046). நல்குரவு ஈன்றதாயும் ஒருவனைப் பிறன்போல நோக்குமாறு செய்துவிடும் (1047). வறுமை ஒவ்வொரு நாளும் பசித்துன்பத்தையும் அச்சத்தையும் விளைவிக்கும் (1048). நல்குரவானது ஒருவனைத் தூக்கமின்றிச் செய்து விடும் (1049). நல்குரவுடையோர் துறவினை மேற்கொள்ளத் தக்கவர், இன்றேல் அவர்பிறரது உணவிற்குக் கூற்றுவனய் விடுவர் (1050). வறியவர்கள் பிறரால் பொருளீயத் தக்கவராவர் (221). நல்லவரிடம் உண்டாயவறுமை துன்பந்

தருதலில்லை (408). வறுமை சூதினால் ஒருவர்க்கேற்படுவ துண்டு (934). வறுமை இல்லையானால் அரசனது படை வெல்லுந்திறமுடையதாம் (769). பொருளற்றவர் வினைக் குரியராகத் தேறற்குரியரல்லர், பொருளின்மை அவரைப் பழிக்கஞ்சாதவராக்கிவிடும் (506). பொருள் உற்றபோது மகிழ்தற்கும் அற்றபோது வருந்துதற்கும் உரியதன்று (626). யாம் பொருளிலம் என்று சொல்லாமலும் (வந்து ஏற்பவர் இலம் எனக்கூறுமுன்பும்) பொருள் ஈயப்படவேண்டும் (223). வறுமைக்குரிய காரணம் தவஞ்செய்யாமையேயாம் (270). வறியவர்கள் யாம்வறியம் என்று சோம்பியிராமல் முயன்று உழவு முதலிய தொழில்களைச் செய்யவேண்டும் (1040). இன்மை இரந்துகொள்ளும் பொருளினால் போக்கத் தக்கதன்று (1063). இன்மையும் சால்புடையானிடம் இளிவரவுக்குக் காரணமாகாது (988). வறுமையுள் வறுமையாவது அறிவின்மையாகும் (841).

# 20. சொல்

மனிதனுக்கேயுரிய சிறப்பு சொல் எனலாம். விலங்கும், பறவையும் நினைத்தலும் செய்தலும் கூடும். மனிதன் ஒருவனே பேசவல்லவன். அதனாலேயே அவனைப் பேசும்பிராணி (Talking animal) என்பர். சொல்லாலேயே அவனுக்கு நினைவாற்றல் வளர்ந்தது. பிறர்க்குத்தான் எண்ணியதை எடுத்துச்சொல்லிய பொழுதே மனிதஅறிவும் நாகரீகமும் வளர்ந்தன. வாழ்க்கைக்குரிய இத்தனை வசதிகளும் வளர்ச்சிகளும் சொல்லால் எனில் அது பொருந்துவதேயாகும்.

ஆக்கமும் கேடும் அதனால் வருதலால் என்பதனால் மனிதனின் வளர்ச்சியும் தளர்ச்சியும் அதனாற்றான் எனத்தெரிகின்றது. வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும் – (அறம், பொருள் இன்பம் வீடு) சொல்லின் துணைவேண்டியுள்ளது. மழலைச்சொல், இன்சொல், புகழ்ச்சொல், புறச்சொல், பயனில்சொல், வாய்மைச் சொல், சான்றோர், நட்டோர், அரசர், அமைச்சர், தூதர், ஒற்றர், இல்லத்தார் ஆகியோருடைய சொற்கள், சொல்வன்மை, அவையஞ்சாமை முதலிய பொருள்களைப்பற்றிப் பேசும்போது வள்ளுவர் சொல்லைப்பற்றிச் சொல்கிறார்.

பொருளில்லாத மழலையும் இன்பம் தருகின்றது. எனவே இனிய சொல்லே இன்பம், மனத்துக்கு ஆறுதல். இன்சொல் ஒருவனைச் சான்றோனாகவும், அருளாளனாகவும், ஆக்குகின்றது. வாய்மைச்சொல் ஒருவனை உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் இருப்பவனாக (புகழுடையவனாக) ஆக்குகின்றது. பழிச்சொல் அவனை உலகில் இல்லாதவன் போலாக்கிவிடுகின்றது. பயனில் சொல் பாராட்டுவானை மக்கட்பதடி எனல் என்கிறது தமிழ் வேதம். அறம், பொருள், இன்பப்பயனையுடையது பயனுடைச் சொல். அரசர் அமைச்சர், தூதர் சொற்கள் ஒரு நாட்டினையும்; கணவன்மனைவியரதுசொற்கள் ஒருவீட்டினையும் ஆக்குவனவாகும்.

ஆசிரியரே இன்சொல்லினை அமுதமென்கிறார். இச்சொல் மக்களியாவர்க்குமுரிய அமிழ்தம். உள்ளத்தைக் குளிர்விக்கும் ஈரமுடையதாய்ச் செம்பொருள்கண்ட அருளாளரின் (சான்றோரின்) சொற்களே இன்சொற்கள். செம்பொருளைக்கண்டோர் சொல் அச்செம்பொருளைக் காண்பிக்கவும் வல்லதென்பதாம்.

சொல், (இன்) சொல்லாலேயே இன்பம்தருவது அதன் பொருளால் இன்பம்தருவது என இருவகையாகலாம். மழலைச் சொல், சான்றோர் சொல், முதலியவெல்லாம் சொல்லாலேயே இன்பம் தருவன. பயனுடைச்சொல், வாய்மைச்சொல், முதலிய பொருளாலும் இன்பம்தருவன. சிறிது கடுமையாக ஒருவன் பேசினாலும், 'ஏன் கத்துகிறாய்' என்கிறோம். கத்துதல் விலங்கின் தொழில். சொல்லுதலுக்கு 'இயம்புதல்' என்பது ஒரு பெயர். இயம் என்பது இசையோடு கூடியவாத்தியம், எனவே சொல் (பண்ணனைய) இனிமையுடையதாக வேண்டுமென்பது கருத்து. யாழ் அனைய மொழியினாள் எனப் பெண்ணைப் பாராட்டுவது இலக்கியவழக்கு. இசையைக் கேளாதபோதெல்லாம் பிறருடைய இசையனைய மொழிகளைக் கேட்டுக்கொண்டிருந்தால் உலகம் எப்பொழுதும் இசைமயமாகவிருக்கும். ஒருவன் பிறந்ததுமுதல் தாய், மனைவி, சான்றோர், நண்பர் ஆகியோரின் இன்சொற்களையே கேட்டு வளர்கிறான். ஓரிடத்தில் ஆசிரியர், இன்சொற்களைக் கனியாகவே வருணிக்கிறார். உணவினும் கனிகள் வளர்ச்சிக்கு மிக்க இன்றியமையாதனவும், சிறந்தனவுமாகும்.

இன்சொல் ஒருவர்க்கு அணியும், அறமும் இம்மையும் மறுமையுமாகும். இன்சொல் யாவரையும் நட்பாக்கி அனைத்து இன்பங்களையும் தருதலால் அது நல்குரவினை நீக்குவதென்கிறார்.

தலைவனிடத்திருந்து வரும் இன்சொல்லே பிரிந்திருக்கும் தலைவியைச்சாகாமல் வாழவைப்பது என்பதனால் கடுஞ்சொல் பலரைச்சாகவைத்துவிடும் என்பதாம். பறையொலிகேட்டுச் சாகும் அசுணமாக்கள் விளங்கியது தமிழகமாகும்.

அரசர்க்கு இன்சொல் வேண்டுமென்னும் இடத்தில் ஆசிரியர் நாட்டில் அனைவரிடத்தும் இன்சொல் வளர்தற்காம் சூழ்நிலையை அவன் உருவாக்கவேண்டும் என்பதனைக் குறிக்கிறாராகலாம். அன்றி இன்சொற் பேசுதற்குச் சட்டமியற்றவியலாது.

அறத்தின் முதன்மையான குணங்களுள் இன்சொல் ஒன்று. உயிரினும் ஓம்பப்படும் ஒழுக்கத்திற்கு அது முதன்மையாகும். தீச்சொல் பாலில் ஒருதுளி உப்பும் புளியும்போல அனைத்தையும் அழித்துவிடும். அரசனது ஆற்றலையும் அரசையும் அழிக்கக் கூடுவது கடுஞ்சொல். தீச்சொல் அனல்தன்மையுடையது; அனைத்தையும் சுட்டெரித்துவிடும். இன்சொல் என்பது நெஞ்சுடன், முகத்துடன் கலக்கவேண்டும். அதாவது நெஞ்சும் முகமும் மலரச் சொல் வெளிவரவேண்டும்.

புறங்கூறுபவன் (இன்சொல்கூருதவன்) இறத்தலேநன்று. அவன் பூமிக்குப் பாரம் என்பது திருக்குறள். புறங்கூறுதல் நண்பரையெல்லாம் பிரியப்பண்ணி அனைவரையும் பகையாக்கி விடும். பயனில் சொற்களைச் சொல்லுபவன் மக்களுட்பதர், அறிவில்லாதவன் எனப்படுகிறான். அவன் வாழ்க்கைப்பயன்களை (அறம் பொருள் இன்ப வீடுகளை) இழந்தவனாகிறான்.

சொல் எண்ணத்தையும் செயலையும் மட்டுமன்றிச் சொல்லையும் விளக்கும். வாய்மைச்சொல் ஒருவனிடம் இருப்பின் அது எல்லோரும் அவனைப்புகழச் செய்யும். பிறரைப் பழிக்கும் சொல் சோம்பேறிகளுடைய செயலெனப் பிறரைப் புகழ்தலைச் செய்யும் சொற்களை வளர்க்கிறார் ஆசிரியர். மகன் தந்தையின் புகழ்ச்சொல்லையும், மனைவி கணவனுக்குரிய புகழ்ச்சொல்லையும் வளர்க்கத்தக்கவராவர். இனத்தினால் ஒருவர்க்குப் புகழுண்டாகு மெனில் தமிழினம் போன்ற இனத்தில் பிறத்தலும், வாழ்தலுமே புகழ் என்பதாம். இறைவனைப் பற்றிய புகழ்ச் சொற்கள் ஒருவன் சொற்களைத் தூய்மையுடையனவாக்கிவிடும்.

சொற்கோட்டமில்லாச் செப்பம் என நடுவுநிலைச் சொல்லையும் ஆசிரியர் குறிப்பாக வற்புறுத்துகிறார். சொல்வன்மை அவைச் சொல் முதலியவற்றில் ஆசிரியர் சொல்லும் குறிப்புக்கள் மிகவும் நினைக்கத் தக்கனவாகும். குடும்ப (இல்லற) வியலிலும், அரசியலிலும் சொல்லாற்றல் மிகவும் தேவையாகின்றது. பிறர் எவரிடத்தும் ஒருவன் பேசும் ஒவ்வொரு சொல்லிலும் வெற்றியும் அழகுமுள்ளது. அவ்வெற்றியைப் பொறுத்தே அவன் வாழ்க்கை அமைகின்றது. தான் கற்றதனை எடுத்துச்சொல்வதே வீரம், போர் வீரமெல்லாம் பின்னர் எனத்தான் ஆசிரியர் கூறுகிறார். பெரியோரிடத்துச் சொல்லவேண்டும், கற்றோரிடத்துச் சொல்ல

வேண்டும், இழிந்தோரிடத்துச் சொல்லலாகாது. இதுவே வளர்ச்சிக்கு வழியென்பது வள்ளுவம். பேசுவதனையும் கற்றுப் பேசவேண்டும். இலக்கிய இலக்கணமறிந்து சொல்லவேண்டும். சொல் ஏதோ இயற்கைத் திறத்தால் மட்டும் வந்துவிடுவதில்லை. (வி)வாத நூல்களையும் கற்கவேண்டும். மலரினும் மெல்லிய சொற்கள் சிலரதன் செவ்வி தலைப்படுவார் என்பதும் ஆசிரியர் கருத்துப்போலும். கேட்போர் கல்வி, பருவம், உருவம், செல்வம் முதலியவற்றையும் ஆராய்ந்து சொல்லவேண்டுமென்பது மருத்துவர்க்கு ஆசிரியர் கூறும் அறிவுரைபோல உள்ளது.

சொல்லுதல் என்பது உலகோர் அவைமுன் ஒருவன் ஒரு நூலைத் திறம்பட எழுதி வெளியிடுதல், அரங்கேற்றுதல் முதலிய வற்றிற்குமொக்கும்.

அரசியல் தூதர்க்கும், அமைச்சர்க்கும், ஒற்றர்க்கும் கூடச் சொல்வன்மை மிகவேண்டும். தூதர் பெரிதும் பிறவரசரிடம் பேசற்குரியராவர். [26] கற்றோரறியாவறிவினர், கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய நெறியினராகத் தூதரும் அமைச்சரும் அமைய வேண்டும். சொல்லைச் சொல்பவற்கு உருவப் பொலிவும் வேண்டும் போலும். உயிருக்குமஞ்சாத தன்மை சொல்லாளர்க்குவேண்டும்.

சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடுண்டு. சொல்லெல்லாம் செயலாகிவிடமாட்டா. சொல்வது எளிது. செய்தல் அரிது. சொல் வெளிப்படுமுன் மனக்குறிப்பு கண்ணிலும், முகத்திலும் வெளிப்படும். அக்குறிப்பினையறிபவன் சொல்லை யறிபவனுவான். சொல்லக்கூடாத சொற்களும் உண்டு. ஒற்றர் தாமறிந்தனவற்றைப் பிறர் எவ்வகையிலும் அறியும்படிச் சொல்லலாகாது.

நிலத்தில் முளைபோல ஒருவனதுயர்வை அவன் சொல்லே காட்டிவிடும். சொல்லாற்றல் உடையவர்கள் சொல்வதெல்லாம் மந்திரம். அவர் பகை என்றும் ஆகாததாகும். சொல் என்பது பெண்ணின்பத்தில் (ஒருத்தியின்) முலைகளைப் போலாம்.

பகைவர், நட்டோர், நல்கூர்ந்தோர், ஆகியோரிடமிருந்து வரும் சொற்களின் தன்மையை நன்கு கூர்ந்து அறியவேண்டும். தோன்றும் இடத்தைப் பொறுத்துச் சொல்லின் தன்மை வேறுபடுகின்றது. காதலர் சொற்களும் அப்படித்தான். உய்த்

துணர்ந்தறியப்பட வேண்டுவனவாகும். தலைவனின் பணிமொழிகளும், அணிமொழிகளும் தலைவியின் வன்மொழிகளும் அத்தகையவேயாம்.

உள்ளத்திலும், செயலிலும், வாய்மை (உண்மை) என்பது சான்றோரால் பெரிதும் விளக்கப்பெறுமாயினும் இங்குப் பெரிதும் வள்ளுவர் சொல்வாய்மையையே கருதுகிறாரெனலாம். யாதொன்றும் தீமையிலா தசொலல் வாய்மை என்கிறார். அகத்திருள் கடியும் விளக்கு, புறத்தில் புகழ் பரப்பி, உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் ஒருவனை இருக்கச் செய்வது என்றெல்லாம் கூறுகிறார். பிறர்க்குத் தீமைசெய்யாததும், நன்மைசெய்வதும் வாய்மை எனச் சுருங்கக் கூறலாம். சான்றோர் நற்குடிப் பிறந்தோர் ஆகியோரைத் தாங்குவது வாய்மை. உலகச் சமயங்களுள் கூறப்படும் அறங்கள் எல்லாவற்றிலும் பொதுவானது, சிறந்தது வாய்மை என்ற கருத்தை ஆசிரியர் கொண்டிருக்கிறார்.

## பொருளடைவு

### மழலைச்சொல் :

தம்மக்களின் மழலைச்சொற்கள் குழல், யாழ், ஆகியவற்றின் இசையினிமையினும் மிக்க இனிமை தருவனவாகும் (66). மக்களின் சொற்கள் உரியவரின் செவிக்கின்பமாகும் (65).

### இன்சொல் :

எல்லோரிடத்தும் வழங்கும் இன்சொல் ஒருவற்குத் தலைசிறந்த அணியாகும் (95). இன்சொல்லாவது அன்போடு கலந்து வஞ்சனையற்ற அறமுணர்ந்தார் வாய்ச்சொல்லாம் (91). முகமினிமையோடு கூடிய இன்சொல் நெஞ்சுவந்தொருவர்க்குக் கொடுத்தலினும் நன்றாம் (92).

### இன்சொல் அறம் :

முகத்தான்விரும்பி இனிதாக நோக்கி மனத்துடனாகிய இன்சொற்களே அறமாகும் (93). யாவரிடத்தும் இன்பத்தை மிகுவிக்கும் இன்சொல், துன்பத்தை மிகுவிக்கும் நல்குரவினின்றும் ஒருவனை நீக்கும் (94).

பொருளால் நன்மை பயப்பதும் இனிமையாகியதுமாகிய சொல் ஒருவனுக்குப் பாவங்கள் தேய அறத்தினை வளர்க்கும் (96). பயனும் இனிய பண்பும் நீங்காத சொற்கள் நீதியையும் அறத்தையும் உண்டாக்கும் (97). பொருளாற் பிறர்க்கு நோய் செய்யாத சொற்கள் ஒருவற்கு இம்மை மறுமையாகிய இருமையினும் இன்பம்பயக்கும் (98).

**இன்சொற்பயன் :**

இன்சொல் ஒருவற்கின்பம் பயத்தலை அறியவேண்டும். அவ்வாறறிபவன் வன்சொற்களை வழங்குதல் ஆகாது (99). இன்சொற்தள் கனிகட்கொப்பாகும், இன்னாதசொற்கள் காய்கட்கு ஒப்பாகும். இனிய சொற்களைவிட்டு இன்னாத சொற்களைப் பேசுதல் கனியைவிட்டுக் காயை நுகர்வது போலாகும் (100). இன்சொல் ஈதலைச் செய்தளிக்கக்கூடிய அரசனிடம் இருக்கவேண்டிய குணமாகும் (387). நிரல்பட இனிதாகச் சொல்லப்படும் சொற்கள் உலகத்தையெல்லாம் தம்வயப்படுத்தி ஒழுகச்செய்யும் (648). பிரிந்திருக்கும் தலைவிக்குக் காதலரிடமிருந்து வரும் இன்சொல்லே அவளை உயிர்வாழச் செய்வதாம் (1198).

**இன்னாச்சொல் :**

அறவொழுக்கத்திற்கு இன்னாச்சொல் (அவா, வெகுளி, பொறாமை) முதலியன கடியப்படவேண்டும் (35). நெறி கடந்தாரது இன்னாத சொற்கள் பொறுக்கத்தக்கவாகும். அவ்வாறு பொறுப்பவர் துறத்தாரினும் தூய்மையுடைய ராவார் (159). அரசன் கொடுமையுடையவன் எனக் கூறப்படும் இன்னாதசொல் அவனது ஆயுளைக்குறைத்துச் செல்வத்தையும் கடிதினிழக்கச்செய்யும் (564).

**கடுஞ்சொல் :**

முறைவேண்டியும் குறைவேண்டியும் வந்தோரிடம் அரசன் கூறும் கடுஞ்சொல் அவனது செல்வத்தை நீளுதலின்றி அப்பொழுதே அழித்துவிடும் (566). கடுஞ் சொல்லானது அரசனது வெல்லும் ஆற்றலைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்த்துவிடும் அரமாகும் (567).

**தீச்சொல் :**

தீயசொற்கள் தம்பொருளால் பிறர்க்குறுத்தும் துன்பம் ஒன்ருயினும், பிறரிடத்துண்டாயின் அது பிற அறங்களாலுண்டான நன்மைகளையெல்லாம் கெடுத்துவிடும் (*128*). தீயசொற்கள் ஒழுக்கமுடையார் தம் வாயிலிருந்து மறந்தும் வெளிவரமாட்டாவாம் (*139*).

**சொல்லடக்கம் :**

மெய்க்கட்கிடப்பினும், மனத்தில் ஆறும் தீப்புண் போலவன்றி நாவினல் சுட்டசொல்வடு மனத்திலும் எப்போதும் ஆருது (*129*). காக்கப்படுவன எவற்றையும் காவாவிடினும் ஒருவனது நாவிலிருந்து வரும் சொற்கள் குற்றப்படாமல் காக்கப்படவேண்டும். இன்றேல் அவை துன்பத்திற்கிடமாகும் (*127*).

**புறச்சொல் :**

அறனெனப் பெயரையுங்கூடச் சொல்லாதவனுய்ப் பாவங்களைச் செய்யினும் ஒருவன் புறங்கூருமை உலகத்தாரால் அறியப்படின் அது நன்ரும் (*181*). கண்டவழிப்பொய்த்து நகுதலைச்செய்து அவனைக்காணுநவழி இகழ்ந்துரைத்தல் அறத்தை அழித்துப் பாவங்களைச்செய்தலினும் தீதாம் (*182*). ஒருவன் எதிரிலின்றிப் பின்வரும் குற்றத்தை நோக்காத சொற்கள் ஒருவனை எதிரேநின்று கண்ணேட்டமறச் சொல்லுவதினும் தீதாம் (*184*). ஒருவன் புறஞ்சொல்லுதலே அவன் அறத்தினைத் தன் மனத்தானுய்ச் சொல்லவில்லை என்பதனைப் புலப்படுத்தும் (*185*).

**புறஞ் சொற்பகை :**

இனிய சொல்லி அயலாரோடு நட்பாடாது புறங் கூறுபவர் அப்புறங் கூற்றினுலேயே தங்கேளிரையும் பிரியப் பண்ணுவர் (*187*). தமக்குற்ரூரது குற்றத்தையும், தூற்றுமியல்பினையுடையார், அயலாரைப்பற்றியாயின் மிகவும் கூறுவர் (*188*). புறங்கூறுவார் பிறர் குற்றத்தைக் காண்பது போலத் தங்குற்றத்தையும் காண்பாராயின் அவர் துன்பமடைதலில்லை (*190*). புறங் கூறுபவனது பழி பலவற்றுள்ளும் அவன் வருந்துந் திறமுடையன ஆராய்ந்து பிறரால் கூறப்படும் (*186*).

### புறங்கூறலும் வாழ்தலும் :

பிறரைப் புறங் கூறுவானது உடற்பாரத்தை உலகம் இக்கொடியது பொறுத்தலே அறமெனக் கருதிப் பொறுக்கின்றதென்பதாம் (*189*). காணுதவழி இகழ்ந்தும், கண்டவழி இனியனுகப் பொய்த்தும் உயிர்வாழ்வதைவிடச் சாதல் (பின் புறங்கூறிப் பொய்த்தலும், அதன் பாவமும், இலவாகலின்) அவனுக்கு அறநூல்கள் கூறும் ஆக்கத்தைத் தரும் (*183*).

### பயனில் சொல் :

அறிவுடையார் பலரும் வெறுக்குமாறு கூறப்படும், அறம், பொருள், இன்பம் ஆகியவற்றுள் ஒன்றும் பயவாத சொற்கள் எல்லாராலுமிகழப்படும் (*191*). பயனில் சொற்கள் வெறுக்கும் செயல்களை நட்டாரிடம் செய்தலினும் தீமை தருவனவாம் (*192*). பயனில்லாதவற்றை ஒருவன் விரித்துரைக்கும் உரை அவனை நீதியில்லாதவனெனக் காட்டும் (*193*). மிக்க பயனுடையவல்லாத சொற்கள் வீடுபேறு முதலிய அரும்பயன்களை ஆராயும்அறிவுடையரால் சொல்லத் தக்கனவல்லவாம் (*198*). பயனில் நீங்கிய சொற்கள் மறந்தும் மயக்கத்தினீங்கிய தூய அறிவினை உடையாரால் சொல்லப்படலாகாவாம் (*199*). நீர்மையுடையார் பயனில்லவற்றைச் சொல்லின் அவை விருப்பத்தையும் மதிக்கற்பாட்டையும் நீக்கிவிடும் (*195*). பயனும் பண்புமில்லாத சொற்கள் ஒருவனிடத்துள்ள நீதியையும் நற்குணங்களையும் நீக்கும் (*194*). பலகாலும் சொல்லப்படும் பயனில்லாத சொற்கள் ஒருவனை மகனென்று சொல்லாமல் பிறரால் மக்களுள் பதரென்று சொல்லுமாறு செய்துவிடும் (*196*).

### பழிச்சொல் :

அரசன் கொடியவன் என மக்களுரைக்கும் பழிச்சொல் அவனது ஆயுளைக்குறைத்துச் செல்வத்தையும் இழக்கச் செய்துவிடும் (*564*). கழறி இகழ்ந்துரைக்கும் பழிச்சொல் சோம்பலை விரும்பி நன்முயற்சி யில்லாதவர்க்குண்டாகும் (*607*). பிறரது பழியைக் கூருமையாகிய நலத்தது சால்புடைமையாகும் (*984*).

**புகழ்ச்சொல் :**

கணவனிடத்தும், தன்னிடத்தும் நன்மையமைந்த புகழ்ச்சொல் மனையாளால் நீங்காமற்காக்கத் தக்கதாம் (56). இவனைப்பெறுதற்கு இவன் தந்தை என்னேற்றானே என்று சான்றோர் கூறும்புகழ்ச்சொல்லே மகன் தந்தைக்குச் செய்யும் உதவியாகும் (70). உலகத்து ஒன்றுரைப்பார் உரைப்பனயாவும், இரப்பவர்க்கொன்று ஈவாரிடத்து நிற்கும் புகழாகும் (232). புகழ்ச்சொல்லமைந்த நீதிநூலும் ஒற்றுமாகிய இரண்டும் அரசனின் இருகண்களாம் (581). ஒருவன் இத்தன்மையன் என்று சொல்லப்படும் புகழ்ச்சொல் அவன் சேர்ந்த இனத்தினால் உண்டாகும் (453). இறைவனைப் பற்றிய மெய்ம்மை சேர்ந்த புகழ்ச்சொற்கள் ஒருவனது மயக்கத்தைப்பற்றிவரும் இருவினைகளையும் போக்கிவிடும்(5).

**நடுவுநிலைச்சொல் :**

மனத்தோடு பொருந்திய சொல் கோடுதல் இன்மையே நடுவு நிலைமையாம் (119).

**சொல்வன்மை :**

நாவின் நலமெனப்படும் சிறந்தநலம், பிறநலம் எல்லாவற்றுள்ளும் சிறந்ததாம் (641). சொல் என்பது நட்பாயவரை விடாமல் பிணிப்பதும், பகையாயினாரையும் தம்நட்பினை விரும்புமாறு செய்வதுமாம் (643). சொற்கள், தம்மின் ஒத்தவையும், மிக்கவையுமாகிய சொற்களைக்கொண்டு பிறர் வெல்லுமாறு அமைதலாகா (645). குற்றமற்ற சிலசொற்களைச் சொல்லவறியாதவர் பலவாய சொற்களைத் தொகுத்துக்கூற விரும்புவர் (649). சொல்வனவற்றைப் பிறர்விரும்புமாறு சொல்லி அவர் கூறுவனவற்றின் பயனைக் கொள்ளுதல் அமைச்சர்க்கியல்பாம் (646), கற்றநூலைப் பிறரறியும் வண்ணம் விரித்துரைக்கமாட்டாமை கொத்தில் மலர்ந்தும் மணம் பெறாத பூவினையொக்கும் (650). வளர்ச்சிக்கும் அழிவிற்கும் காரணம் சொற்களாகலின் அவற்றின்கண் சோர்வுபடுதலாகாது (642). குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், செல்வம், உருவம், பருவ முதலிய திறங்களையறிந்து சொல்லும் சொல் அறத்தினையும், பொருளினையும் தரும் (644). அவைக்

கஞ்சாமலும் மறதியின்றியும் சொல்லப்படும் சொல் ஒருவனை யாவராலும் வெல்லமுடியாதவனுக்கிவிடும் (647). காரியங்களை நிரல்படக்கோத்து இனிதாகச் சொல்லும்சொல் உலகமெல்லாம் அதனை விரைந்தேற்றுக்கொள்ளுமாறு செய்யும் (648).

**அவைச்சொல் :**

செஞ்சொல், இலக்கணைச்சொல், குறிப்புச்சொல் ஆகிய சொற்கள் மிகுதி, தாழ்வு, ஒப்பு முதலிய அவையின் தரமறிந்து சொல்லப்படவேண்டும் (711). அம்மூன்று சொற்களும், செம்பொருள் முதலாம் முப்பொருள்களையும் தரும் ; நடையினை அறிந்தவர், சொல்வழு பொருள்வழுவின்றிச்சொல்லவேண்டும் (712). அவையின் அளவையறியாது சொல்பவர், சொல்லுதலின் கூறுபாடு அறியாதவராவார், கற்றுவல்ல கலையும் அவர்க்கில்லை (713). அறிவாலொள்ளியார்முன் தாமும், தம் நூலறிவை விரித்து ஒள்ளியராதல் வேண்டும். ஒன்றுமறியாத வெள்ளைகளவைக்கண் தாமும் அவர்போல் ஒழுகவேண்டும் (714). தன்னின் மிக்காரவைக்கண் அவரின் முற்பட்டு ஒன்றனைச் சொல்லாதவடக்கம் நன்றென்ற குணங்கள் எல்லாவற்றுள்ளும் நல்லதாம் (715).

**பெரியோரவை :**

அகன்றநூற்பொருளின் உண்மைகளைக் காணவல்லாரவையில் சொல்லிழுக்குப்படுதல் துறவொழுக்கத்து நின்றவன் அதனினின்றும் நிலைதளர்ந்ததொக்கும் (716). வழுப்படாமற் சொற்களை ஆராய்வார் அவைக்கண் சொல்லுதல் கற்றூரது கல்வியை யாவர்க்கும் விளங்கித் தோன்றச்செய்யும் (717). பொருள்களைத் தாமே உணரவல்லார் அவைக்கண் ஒன்றனைச் சொல்லுதல் தாமேயும் வளரவல்ல பயிர்நின்ற பாத்தியில் மேலும் நீரைப் பாய்ச்சினாற்போலாம் (718). நல்லாரவையில் நற்பொருளைச் சொல்லவல்லவர் புல்லரிருந்த அவையில் மறந்தும் ஒன்றனைச்சொல்லலாகாது (719). தம்மினத்தர் அல்லாதார் அவையில் ஒன்றனைச்சொல்லுதல் தூய்தல்லாத முற்றத்தில் கொட்டிய அமிழ்தினையொக்கும் (720).

**அவையஞ்சாமை :**

சொல்லின் தொகை யெல்லாமறிந்த தூய்மை யுடையவர் கற்றுவல்லாரதவைக்கண் அச்சத்தான் வழுப் படாமற் சொல்லுவர் (721). கற்றோர் அவையில் தாம் சொல்வனவற்றை அவர்மனங்கொள்ளும்வகைச் சொல்பவர் கற்றுரெல்லாரினும் நன்குகற்றவரெனப் புகழ்படுவர் (722). சொல்லிலக்கண நெறியால் அளவை நூலைக்கற்று அவையின்கண் பிறர் சொல்லியதற்கு அஞ்சாது மறுமொழி கூறவேண்டும் (725). பலநூல்களைக் கற்றும் உலகிற்குப் பயன்படாதவர் நல்லாரவைக்கண் அச்சத்தால் அவர்க் கேற்பச் சொல்லமாட்டாதவராவார் (728). பகையிடை அஞ்சாது சென்று சாவவல்லார் பலர், ஆனல் அவையிடை அஞ்சாது புக்குச் சொல்லவல்லவர் சிலரேயாவார் (723). வன்கண்மையில்லாதவர்க்கு வாளினல் பயனில்லாதது போல நுண்ணியாரது அவையையஞ்சுபவர்க்கு நூலினல் பயனில்லை (726). பகைநடுவண் அதனையஞ்சும் பேடியின் கைவாளையொப்பது அவைநடுவண் அதனையஞ்சுபவன் கற்ற நூல்என்பதாம் (727). நூல்களைக்கற்றும் அவை யஞ்சுபவர் பிறர்க்குப்பயன்படாத (கல்வித்துன்பமே யெய்தலின்) கல்லாதவரினும் கடையென்று சொல்லப் படுவர் (729). அவைக்கஞ்சித் தாம்கற்றவற்றைச் சொல்ல மாட்டாதவர் உயிர்வாழ்பவராயினும் உலகோரால் எண்ணப்படாமையின் இறந்தாரோடொப்பர் (730).

**தூதுச்சொல் : தூதரியல்பு ;**

தூதுவார்த்தை சொல்வானது இலக்கணம், அன்புடைமை, உயர்குடிப்பிறப்பு, அரசர்விரும்பும் பண்புடைமை ஆகியவையாம் (681). தூதுரைப்பார்க் கின்றியமையாத குணங்கள்: அரசன்மாட்டன்பு, அறிவு, ஆராய்ந்து சொல்லும்திறன் ஆகியமூன்றுமாம் (682). வேற்றுவேந்தரிடைத் தம்மரசருக்கு வென்றிச்சொல்லைக் கூறுவான் நீதிநூலை உணர்ந்தவரிடையே அந்நூலில் எடுத்துக் கூறத்தக்க மிக்கவல்லமையுடையனுதல் வேண்டும் (683). தூதுரைக்கச் செல்பவன் இயற்கையறிவும், தோற்றப் பொலிவும் ஆராயப்பட்டகல்வியும் ஆகிய மூன்றுமுடையவ னுகவேண்டும் (684).

### சொல்முறை :

தூதுரைப்பவர் சொல்வனவற்றைத் தொகுத்துரைத்தும் வெய்யசொற்களை நீக்கி இனிய சொற்களான் மனமகிழச் சொல்லியும் நன்மை பயப்பவராகவேண்டும் (685). தூதுவர் நீதி நூல்களைக் கற்றுச் சொல்பவற்றைப் பிற அரசர்களிடம் மனங்கொளச் சொல்லி அவர் வெகுண்டபோது அதற் கஞ்சாது சொல்பவராவார் (686). தூதுவன் தன் கடமை யறிந்து உரிய காலம் பார்த்துச் சொல்லுதற்கேற்ற இடமறிந்து ஆராய்ந்துரைப்பவனுவான் (687). தூதுவர் பொருள் காமங்களால் தூய்மையும் பிறநாட்டமைச்சரது துணையும் துணிவுடைமையும் உடையராதல்வேண்டும் (688). தூதுரைப்பவன் தனக்கு வரும் ஏதத்திற்கு அஞ்சித் தாழ்வு வரும் வார்த்தைகளை `வாய் சோர்ந்தும் சொல்லாதவனுவான் (689). தூதுவன் தன் உயிர்க்கு இறுதிவருமாயினும் அதற் கஞ்சியொழியாமல் தன்னரசன் சொல்லியவாறே அவனுக்கு மிகுதியை வேற்றரசரிடம் சொல்பவனுவான் (690).

### அமைச்சரது சொல் :

அரசர்க்குச் சூழ்ச்சித் துணையாய அமைச்சரது சொற்கள் தமக்குரிய கல்வியால் நிறைந்தனவாகவேண்டும் (635). அரசன் அறிந்தாரது சொல்லையும் அழித்துத் தானும் அறியாதவனுயினும் அமைச்சர் அவர்க்கு உறுதி கூறல் கடனுகும் (638). யாம் இவ்வினையை இவ்வாற்ருற் செய்ய லாமென நிரல்படச் சொல்லுதல் யாவர்க்கும் எளியவாம் அவ்வாற்ருன் செய்தல் யாவர்க்கும் அரியவாம் (664). அரசரருகில் இருந்துகொண்டு அவர்காண ஒருவன் செவிக்கண் சொல்லுதல் தவிர்ந்தொழுகப்படவேண்டும் (694). அரசன் பேசும் யாதொரு பொருளையும் செவி கொடுத்துக் கேளாமல் அதனை அவனே சொல்லியக்கால் அமைச்சர் கேட்கவேண்டும் (695). அரசன் குறிப்பினையும், ஏற்ற காலத்தையும் அறிந்து வெறுப்பிலவும், வேண்டுவனவு மாய காரியங்களை அவன் விரும்பும்வகை சொல்லவேண்டும் (696). அரசன் விரும்பும் அளவானவற்றைச் சொல்லி எஞ்ஞான்றும் பயனிலவாயவற்றை அவர் கேட்பினும் சொல்லாமைவேண்டும் (697).

**குறிப்பறிவுரை :**

அரசன் தான் குறித்ததனைக் கூறுமலே அச்சொற்கள் அமைச்சனல் அறியப்படவேண்டும். அவன் வையத்தவர்க்கோர் அணியாவான் (701). பிறர் மனத்துக்குறித்தவதனை அவர் கூருமலே அச்சொற்கள் உணரப்படவேண்டும். அவன் உருவாலும், அறிவாலும், மனிதனுவான், அவ்வாறு உணர இயலாதவன் உருவால் மனிதனும், அறிவால் விலங்கு போல்வானும் ஆவான் (704). ஒருவனது மனத்துக் கிடந்த பகைமையையும் கேண்மையையும், அவன் கண்களே சொல்லிவிடும் (709).

**ஒற்றுச்சொல் :**

ஒற்றர் மூவருடைய சொற்கள் அரசனல் ஆராயப்பட வேண்டும். அவை தம்முள் ஒத்தனவாயின் மெய்யென்று தெளியப்படும் (589). ஒற்றரும் நீதி நூலும் அரசனின் கண்களாகக் கருதப்படும் (581). வினைசெய்வார் சுற்றம் பகைவர் ஆகிய அனைவரிடத்தும் நிகழும் நன்மை தீமைகளை அரசர்க்கு அறிந்துரைப்பவர் ஒற்றராவார் (582). ஒற்றரால் எய்தும் செய்திகளின் பயனை ஆராய்தலே அரசனது வெற்றிக்குக் காரணமாகும் (583).

**முறை :**

ஒற்றர் பிறர் ஐயுருத (வணிகர், அந்தணர்) உருவத்துடன் செல்லவேண்டும். நான்குபாயத்தாலும், பிறர் கேட்பன வற்றிற்கு ஒன்றும் வெளியிடாதவராகவேண்டும் (585). துறவிகளின் வடிவோடும் சென்று நிகழ்ச்சிகளையறிந்து பிறர் எத்துன்பஞ்செய்து கேட்கினும் சொல்லாதவராக வேண்டும் (586). பிறர் மறைந்து செய்தனவற்றைக் கேட்டறிந்து அவ்வாறறிந்தவற்றுள் ஐயமில்லாதவரே ஒற்றராவார் (587).

**ஒற்ருளுதல் :**

பலர் ஒன்றுகூடிப் பொய்யானவற்றையும் கூறக் கூடுமாதலின் ஓரொற்றன் கூறியதனை மற்றொருவனைக் கொண்டு தெளிதல் வேண்டும் (588). பிறரறிய அரசன் ஒற்றர்க்குச் சிறப்புச் செய்தலாகாது, செய்தலான் அவனுலறிந்த மறைப்பொருள் வெளிப்பட்டுப்போகும் (590).

**அரசர்க்குரிய சொல் :**

இடிக்குந் துணையாயின பெரியவர்கள் தன் செவி வெறுக்கச் சொல்லும் சொற்கள் அரசனல் பொறுக்கப்படல் வேண்டும் (389). கடுஞ்சொல் அரசனது வெல்லும் திறமையைத் தேய்க்கும் அரமாகும் (567).

**கற்ருேர்சொல் :**

கல்லாதவன் அவையில் ஒன்றனைச் சொல்ல அவாவுதல் முலையிரண்டும் இல்லாதவள் பெண்மைக்குக் காமுற்ருற் போலாம், பயனின்றி நகைப் பிற்கிடமாகும் (402). கல்லா ஒருவனது பெருமையைக் கற்றவன் அணுகிச்செய்யும் உரையாடல் மறைத்துவிடும் (405). சொல்லை ஏராகவுடைய கற்ருருடன் கொள்ளும் பகை, வில்லை ஏராகவுடைய வீரரது பகையினும் கொடியதாகும் (872). பேதைமை பயக்கும் சொற்கள் ஆய்ந்தறிந்தாரிடமிருந்து தவறியும் வெளிவர மாட்டா (417).

**சான்ருேர்சொல் :**

பிறர் பழியைச் சொல்லாமையே சால்புடைமை யென்னும் நலமாகும் (984). பிறர் தம் குறையைச் சொல்லும் அவ்வளவே சான்ருேரை அதற்குப் பயன்படுமாறு செய்துவிடும் (1078). ஒழுக்கமுடையவர் கூறும் சொற்கள் வழுக்குதல் உண்டானவிடத்துதவும் ஊன்றுகோல் போலாம் (415). துறந்தாரது நிறைந்த மொழியின் பெருமையை உலகில் அவராணையாகக் கூறிய மந்திரமொழிகளே வெளிப் படுத்திவிடும் (28).

**குலச்சொல் :**

குலத்தினியல்பை அதன்கட் பிறந்தாரது வாய்ச் சொற்கள் காட்டும். அது நிலத்தினியல்பை அதன்கண் தோன்றிய முளை காட்டுதல் போலாம் (959).

**நட்புச்சொல் :**

இயலும் கருமத்தை முடியாது வருத்துபவர் நட்பினை நட்பென்றும் சொல்லலாகாது, சொல்லாமலே வீழவிட்டு விடவேண்டும் (818). மனத்தால் பொருத்தமில்லாதவரை எவ்வகையிலும் அவர்சொற்கள் தெளிவிப்பனவாம் (825).

**பகைச்சொல் :**

பகைவர் தாழ்மையாகச் சொல்லும் சொற்கள் நன்றெனக் கொள்ளப்படமாட்டா, அவை வில் வணக்கம் போன்று தீமைகுறிப்பனவாம் (827).

**நல்கூர்ந்தார்சொல் :**

நல்கூர்ந்தார் சொல்லும் சொல் நன்குணர்ந்து சொல்லப்பட்ட மெய்ப்பொருளாயினும், மதிக்கப்பட மாட்டாது (1046). குடிப்பிறந்தார் மாட்டுண்டாகிய வறுமையினுலும் சோர்விலிருந்து இழிவான சொற்கள் உண்டாகும் (1044).

**ஏற்றல்சொல் :**

கொடுக்கக்கூடியவர் வந்து கேட்பவர்க்கில்லை என்று சொல்லியசொல் ஏற்றவர்தம் உயிரைப்போக்கிவிடும் (1070). ஏற்பவரை அவமதித்து இழிவுரை கூறுதல் பொருள் கொடுப்பவருக்காகாது (1057). இறக்கும் நிலையிலுள்ள பசுவிற்கு நீர்வேண்டி இரந்துகேட்கும் சொல்லும், ஒருவன் நாவிற்கு மிக்க இழிவைத்தரும் (1066). இரப்பவரையெல்லாம் கரப்பவரிடம் இரவாமை வேண்டுமென்று சொல்லலும் சொல்லி அவரைத் தடுத்தலும் தகுவதாகும் (1067). கொடுப்பவனிடம் இல்லையென்ற சொல் இருத்தலாகாது அது நற்குலமுடையார்க்குரிய குணமாகும் (223).

**காதற்சொல் :**

பல பொய்களைப் பேசும் கள்வனுகிய தலைவனது தாழ்ந்த மொழிகளே தலைவியது பெண்மையையழிக்கும் படைகளாம் (1258). பணிவுடைய மொழியினள் எனத்தலைவி பாராட்டப் பெறுபவளாவாள் (1121). கண்களோடு கண்கள் காமக்குறிப்பினுல் ஒக்குமாயின் பின்பு வாயாற் சொல்லும் சொற்கள் ஒரு பயனுமுடைய வல்ல (1100). கண்ணினுல் காமநோயைச் சொல்லியிரத்தல் தலைவியின் பெண்மைக்கு மேலும் ஒரு பெண்மையுடையதாகும் (1280). நொதுமலர் போலக் கடுஞ்சொல் சொன்னுராயினும் அகத்துச் செறுதலில்லாத காதலர் சொற்கள் பிற்பயத்தல், குறையுற்ருரால் விரைவில் அறியப்படும் (1096).

அன்னை வெகுண்டுரைக்கும் சொற்களே நீராகக் காமநோயை வளர்ப்பனவாம் (*1147*). தலைவன் பிரியுமுன் தலைவியிடம் நின்னிற்பிரியேன், ஆற்றேனெனத்தெளிவு சொல் கூறுவான் (*1154*). பிரிந்த காதலரிடத்திருந்துவரும் இன்சொற்கள் வருந்தியிருக்கும் தலைவியை வாழ்விப்பனவாகும் (*1198*).

**வாய்மைச்சொல் :**

மெய்ம்மை என்பது பிறிதோருயிர்க்குத் தீமை சிறிதும் பயவாத சொற்களைச் சொல்லுதலாம் (அது தீங்கு பயவாத நிகழ்ந்தது கூறுதலும், நன்மை பயக்கும் நிகழாத கூறலும் எனப்படும்) (*291*). பிறருக்குக் குற்றமற்ற நன்மை யாகுமாயின் வாய்மையாகப் பொய்மையும் கருதப்படும். நன்மை பயவாத நிகழாதது கூறுதல் தீங்குபயக்கும். நிகழ்ந்தது கூறலும் வாய்மை எனப்படலாம் (*292*). மெய்மை (ஒழுக்கம், நாணம்) முதலிய குணங்கள் உயர்குடிப் பிறந்தாரிடம் வழுவ மாட்டா (*952*). வாய்மை (அன்பு, நாண், ஒப்புரவு) கண்ணோட்டம் முதலிய ஐந்து குணங்களும் சால்பு என்னும் பாரத்தைத் தாங்கும் தூண்களாகும் (*983*). நெஞ்சறிந்து ஒருவன் வாய்மை சொல்லாமற் பொய் சொல்லு பவனாயின் அவன் நெஞ்சே சான்றாக நின்று அதன் பயனாய் துன்பத்தை யெய்துவிக்கும் (*293*). உள்ளத்திற்கேற்ப வாய்மை கூறுதல் ஒருவனை உலகத்தார் மனத்திலெல்லாம் எப்பொழுதும் நிலைக்கச்செய்யும் (*294*). மனத்தோடு பொருந்திய வாய்மை ஒருவனைத் தவமும் தானமும் ஒருங்கு செய்வாரினும் தலைமையுடையவனாக ஆக்கும் (*295*). வாய்மை ஒருவனது இம்மைக்குச் சிறந்த புகழ்க்காரணமாகும். மற்றும் அதுமெய் வருந்தாமலே எல்லா அறங்களையும் தானேதரும் (*296*). வாய்மை மனத்தூய்மையாகி மெய்யுணர்வுக்குக் காரணமாகும் (*298*). வாய்மை உள்ளத்தில் அவாவின்மை யென்ற இயல்பினையுண்டாக்கும் (*364*). வாய்மை மெய் நூல்களுள் கூறப்படும் அறங்களுக்கெல்லாம் சிறந்ததாம் (*300*). வாய்மையே புறத்திருள்கடியும் ஞாயிறு, திங்கள், தீ போன்ற விளக்குகளாகவன்றி அகத்திருள்கடியும் உண்மை யான விளக்காம் (*299*).

# 21. தீமை

தீயின் தன்மையுடையது தீமை. தீ உடலைச் சுடும். தீமை உள்ளத்தையும் சுடும். தீ ஒரு பிறப்பிலும் தீமை தொடர்ந்து பல பிறப்புக்களிலும் சுடும். துன்பமும் பாவமும் நரகமும் தருவன வெல்லாம் தீமைகளேயாம். [27] 'நன்றுடையானைத் தீயதில்லானை' யெனச் சிராப்பள்ளித் தேவாரம் இறைவனைப்பற்றிக் கூறும். துன்பத்தைத் தருவதும் துன்பத்திற்குக் காரணமாவதும் தீமையாகும். துன்பத்தையும் தீமையையும் போக்குவதே உயிரொழுக்கமாகின்றது. பஞ்சமாபாதகங்களைத் தீமையென்றல் ஒரு மரபு, பொய், கொலை, களவு, கள், காமம் என்பன அப்பாதகங்கள். வள்ளுவர் இவற்றையும் தீமைகளுள் அடக்கிப் பேசுகிறார். தீவினையச்சம், இன்னாசெய்யாமை யென்ற அதிகாரங்களிலும் தீமைகளைப்பற்றிக் கூறுகிறார்.

[28] மேனாட்டுத் தத்துவ (உண்மையியல்) நூலாசிரியர் பலரும் நன்மை (Good) தீமை (Evil) எனப் பிரித்துக்கொண்டே தத்துவக் கோட்பாடுகளை ஆராய்கின்றனர். வேற்று தேயத்தும் காலத்தும் சென்று அடுவது தீமையென உரையாசிரியர்கள் இதற்கு விளக்கங் கூறுகின்றனர். தீமை வறுமைக்கும் அறியாமைக்கும் உரியதென ஆசிரியர் கூறுகிறார்.

தீமை செய்தவனைச் சமூகம் ஒறுக்கும் அன்றி அறம் ஒறுக்கும். மனிதவறிவிற்கே பயனாவது பிறர்க்குறும் தீமைகளைத் தமக்குறுவனவாகக் கொண்டு அவற்றைக் களைதலாம். பண்புடை மக்களால் தீமை நீங்கும் என்பதில் மக்கட்பேற்றினால் என்பதனைவிட நாட்டுமக்களால் எனக்கொள்ளுதலும் பொருந்தும். பண்பின்மை (நாட்டிற்கே) தீமையாம். பொறுமையால் உலகில் தீமைகளைக் குறைக்கலாமென்பது ஆசிரியர் கருத்தாகும். தீய சொற்களையும் ஆசிரியர் தீமையாகக் கொள்ளுகிறார். மனத்திலும், சொல்லிலும் செயலிலும் தீமையின்மையே உலகில் சான்றோர் வகுத்த நெறியாகும். தீமையாயவற்றுள் நோயும் ஒன்றாக

உரை ஆசிரியரால் கொள்ளப்படுகின்றது. தீமை செய்யாமை சான்றோர்க்குரிய குணமாகும். வறுமை தீமைக்குக் காரணமாகும். எனவே வறுமையை நாட்டிலிருந்து ஒழிக்கவேண்டும். எனைத் தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாமாணசெய்யாமை என்ற குறள்தொடர் என்றும் மனத்திலிருக்கத்தக்கதாகும். தீமை செய்தவர்க்கும் நன்மை செய்வதே அறிவு, பண்பு என்பதாம். ஒரு தீமை செய்தவன் பின்பு தனக்கு எத்தனை பெரிய கொடிய தீமையைச் செய்யினும் அவ்வொரு நன்மைக்காக அத்தீமையைப் பொறுக்கவேண்டுமாம்.

தீமை ஒருவனது பண்பையே கெடுத்துவிடும். தீமை அறிவினால் நீக்கப்படவேண்டும். பிறர் குற்றம்போல் தங்குற்றத்தை முதலில் உணர்ந்து திருத்தவேண்டும். தீய சொல்லாமையும் பிறர் தீச்சொற்களைப் பொறுத்தலும் பண்பாகும். துன்பத்தையும் இன்பமாகக் கொள்ளுதல் தீமையைக் கடக்கும் வழியென்கிறார் ஆசிரியர். பொய்ம்மையும் பிறன்மனை நயத்தலும் தீமையாம். தீ நெறியில் பொருளீட்டுதலாகாது.

குற்றங்கடிதல் என்ற அதிகாரத்தில் ஆசிரியர் குற்றம் என்பதனைத் தீமையாகவே கருதுகிறார். மதம், காமம், கஞ்சத்தனம், நன்மையினீங்கிய மானம், அளவிறந்த உவகை, தன்னை மிகவுமதித்தல் முதலியவற்றைக் குற்றமாகக் கூறுகிறார். தினைத்துணைக் குற்றத்தையும் வருமுன்னர்க் காத்தலும், குணம் குற்றம் ஆகிய இரண்டையும் நாடலும் இன்றியமையாதவாம். வெளி மானத்தைக் காத்தலினும் உள் (மன) மானத்தைக் காத்தலே சிறந்ததாம்.

வஞ்சக முதலிய குற்றங்கள் உடலிலுள்ள ஐம்பூதங்களாலும் (மனத்தால்) அறிந்து நகப்படும். உள்ளொன்று வைத்துப் புற மொன்று சொல்லலும் செய்தலும் வஞ்சகமாம்.

சூது ஒருவனது காலத்தையெல்லாம் வீணாக்கி அவனைச் சோம்பேறியாகவும் வறியனாகவும் அருளில்லாதவனாகவும் ஆக்கிவிடும். அவற்கு இம்மை மறுமையென்பதில்லை. கள்வரும் வரைவின் மகளிரும் என்றுமாகார். பிறர் மறதி நோக்கி அவர் செல்வத்தைக்கொள்வர். களவும் சூதும் செல்வத்தை அளவிறந்தாவது போலாக்கிக் கெடுத்துவிடும். அஃது அறிவு அன்பு அருள் ஆகியவற்றிற்கெதிரியாம்.

அழுக்காறுள்ளவர் உயர்ந்ததுமில்லை, அஃதில்லாதவர் தாழ்ந்ததுமில்லை. அது தனக்குமட்டுமன்றிச் சூழ்ந்தவர்க்கும் உண்டி உடையில்லாதாக்கிவிடும். அழுக்காறுடையாற்கு வேறு பகையே வேண்டாம், அதுவேபோதும்.

அவா (வேண்டுதல் வேண்டாமை) இல்லாதவன் இறைவனாகும். அது நுட்பமாக ஒருவனுள்ளத்தில் புகுந்துவிடும், எனவே குறிக்கொண்டு காக்கவேண்டும். அது துன்பத்திற்கெல்லாம் இருப்பிடம். அவாவின்மை வினைக்குரிய திறன்களையளிக்கும். வெஃகுதல், அவா களவு ஆகிய இரண்டற்கும் இடைப்பட்டதாம். பிறன் பொருளைக்கொள்ள விழைதலும் திட்டமிடலும் வெஃகுதலாம். ஒருவன் செல்வம் சுருங்காமைக்குக் காரணமே வெஃகாமை என்கிறார் ஆசிரியர்.

சினம் நெருப்புப்போல்வது, ஒரு இனத்தையே அழித்துவிடும். சிறப்பாக எளியோரிடம் சினத்தலாகாது. வெகுளியின்மை உலகத்தலைமையை யுண்டாக்கும். வெகுளியுடையான் எளிதாகப் பிறரால் வெல்லப்படுவான். சினமுடையார் செத்தாரொடொப்பர். அது முகத்தில் நகையையும் அகத்தில் உவகையையும் கொன்று ஒருவனது வாழ்வையே பாழாக்கிவிடும்.

உண்பதற்காக மட்டுமன்றிப் பகையாலும் பிறவுயிர்களையும் மக்களையும் (போரிலும்) கொல்லாமையே ஆசிரியரால் கொல்லாமையதிகாரத்தில் பேசப்படுவது, கொல்லாமையே தவமாகும்.

உயிர்க்கொலை புரிவோர் அடுத்த பிறவியில் நோயும் வறுமையுமுறுவர். கொல்லாமையுடையவன் நீண்டநாள் வாழ்க்கையுடையனாவான். தன்னுயிர் நீப்பினும் தாம் பிறவுயிர்க் கொலைக்குக் காரணமாதலாகாது.

**பொருளடைவு**

**தீவினை.**

தீவினையென்னு மயக்கம் முன் தீவினையுடையாரால் அஞ்சப்படாததும் சீரியோரால் அஞ்சத்தக்கதுமாகும் (201). துன்பமே பயக்கும் தீமைகள் வேற்று தேயத்தும் காலத்தும் சென்று சுடுதலால் தீயினும் அஞ்சப்படும் (202). தீயவை

நல்குரவு காரணமாக உண்டாகும்; ஆயினும் அவை செய்யப்படலாகா, செய்யின் மேலும் வறுமையுண்டாக்கும் (205). தீமை செய்தவர்க்கும் எதிர்த்துச் செய்யாமையே அறிவினுள் சிறந்ததென்பர் (203). பிறர்க்குத் தீமைகள் மறந்தும் நினைக்கப்படலாகா, நினைப்பின் அவன் அறத்தினல் தீமை செய்யப்படுவான் (204). தனக்குத் தீமை வேண்டா மென்பவன் பிறர்க்குத் தீமை செய்தலாகாது (206). தீவினையாகிய பகை பிறவிதோறும் சென்று வருத்தும் (207). அணிமா முதலிய யோக செல்வங்களைப் பெறினும் பிறர்க்குத் தீமை செய்யப்படலாகாது (311). தீமை செய்தாரை ஒறுத்தலாவது அவர் நாணுமாறு அவர்க்கினியவற்றைச் செய்து இரண்டையும் மறந்துவிடுதலாகும் (314). பிற வுயிர்களின் துன்பத்தைத் தமக்குற்றதாகக் கருதாவிடின் அறிவினற் பயனில்லையென்பதாம் (315). பிறர்க்குத் தீமைகளை ஒரு நாளின் முற்பகலிற்செய்யின் அப் பிற்பகலிலேயே தமக்குத் தீமைகள் வரும் என்பதாம் (319). பிறர்க்குத் தீமைகளைத் தமக்கியன்றவிடத்தும் சிறிதாயினும் அவர் எளியராயினும் செய்தலாகாதென்பதாம் (317).

**தீமைநீக்கம் :**

பண்புடைய மக்கள் எழுபிறப்பும் ஒருவனைத் தீமைகள் தீண்டாதிருக்கக் காரணமாவர் (62). தீயசொற்கள் மறந்தும் ஒருவனற் சொல்லப்படலாகாவாம் (139). பிறர் குற்றம்போலத் தமது குற்றத்தையும் உணர்பவர்க்குத் தீமையில்லை (190). தீமைகள் ஒருவனது அறிவினல் நீக்கத்தக்கனவாகும் (422). பண்பின்மையே ஒரு பெருந் தீமையாகும், அது பெருஞ்செல்வத்தையும் பாலைக் கலம் கெடுத்துவிடுதல்போலக் கெடுத்துவிடும் (1000). பிறர் தீமைகளைச்சொல்லாமையே சான்ருண்மைக் குணமாகும் (984). பிறர் தமக்கு ஒரு நன்மை செய்தபின் கொன்ரு லொத்த தீமைகளைச் செய்யினும் அவ்வொரு நன்மைக்காக மற்ற தீமைகளையெல்லாம் பொறுக்க வேண்டுமென்பதாம் (109). பல சுடர்களையுடைய தீ தோய்ந்து வருத்திய தனைய தீமையைச் செய்யினும் அவர்களை வெகுளலாகா தென்பதாம் (308). துன்பமும் இன்பமாகக் கொள்ளப்பட வேண்டும், அப்படியாயின் பகைவரும் ஒருவனை விரும்புவர்

என்பதாம் (*630*). நெறிகடந்தாரது தீயசொற்களும் பொறுக்கப்படுதலே (துறவறமுடையார்க்குத்) தூய்மையாம் (*159*).

**தீமைவகை :**

தீமையில்லாமையே வாய்மைக்கிலக்கணமாகும் (*291*). தீமை பொருள்வரும் நெறிக்குரியதாகிவிடலாகா தென்பதாம் (*754*). பாவம் பிறன்மனை நயப்பவனிடம் நீங்காமல் தங்குமென்பதாம் (*146*). பசியென்பது தீமையுடைய பிணி எனப்படும் (*227*). நோயும் வறுமையுமுடையது தீ வாழ்க்கையெனப்படும் (*330*). இருள் செறிந்த நரகம் தீமையுடையதாகக் கூறப்படும் (*243*). மனம் தீமையுடையதாயின் அது வஞ்சமுடையதாயும் அஞ்சத்தக்கதாகவும் கருதப்படும் (*824*). நல்குரவு தீமையுடையதென்பதாம் (*1041*).

**சூது :**

அதனில் வென்றி கிடைப்பினும் சூது விரும்பத்தக்கதன்றென்பதாம் (*931*). சூது ஒன்றனைக் கொடுத்து நூற்றினை இழப்பிக்கும், அறமுமின்பமும் எய்தி வாழும் வாழ்க்கையை அது கெடுத்துவிடும் (*932*). இடைவிடாது சூதாடுபவனது பொருள்வருவாய் அவனைவிட்டுப்போய்ப் பகைவரிடம் தங்கிவிடும் (*933*). துன்பங்களைக் கொடுத்துப் புகழையுங் கெடுத்து வறுமைதருவதாகும் (*934*). சூதாடிப் பெருவேந்தர் பலரும் முற்காலத்து வறுமையுற்று வருந்தினரென்பதாம் (*935*). சூது மங்கலமல்லாததும் மூதேவிக்குரியதுமாகும், அது இம்மையில் வயிறூரப் பெறுமையையும் மறுமையில் நிரயத்தையும்தரும் (*936*). தொன்றுதொட்டு வந்த பண்பையும் செல்வத்தையும் கெடுத்துவிடும் (*937*). பொருளையும் அருளையும் கெடுத்துப் பொய்யை மேற்கொள்ளச் செய்து இருமையினும் துன்பத்தைச்செய்யும் (*938*). உடை செல்வம் கல்வி ஊணொளியாகிய ஐந்தனையும் சூது ஒருவனிடம் அடையாமற்செய்துவிடும் (*939*). சூது இருமைப் பயன்களை யெல்லாம் இழக்கச்செய்யும், மேலும்மேலும் தன்னிடம் காதலையுண்டாக்கும் (*940*). சூதாடுகளமும் பலகையும் அரங்கெனப்படும், அஃதின்றி வட்டாடுதலென்பதியலாது, பயன்படாது (*401*).

**களவு :**

களவு மனத்திலும் இருத்தலாகாது அதுவே பிறரால் இகழப்படாமைக்குக் காரணமாம் (281). களவு தரும் செல்வம் அளவிறந்தாவதுபோல் அழிந்துவிடும் (283). களவின்கண் மிக்க ஆசை பிற்காலத்தே நீங்காத துன்பத்தைத்தரும் (284). களவு தூய அறிவுக்குரிய தாகாமல் பொல்லா அறிவுடைமையாகும், அது நீதியுடையா ரிடம் இராதென்பதாம் (287). களவு வஞ்சத்திற்குரியதோர் குணமாகும், அஃது அறத்திற்கு மாறானதாம் (288). களவன்றி மற்றவற்றையறியாதவர் அறமல்லாதவற்றைச் செய்தழிவர் (289). களவு ஒருவர்க்குரிய வீடுபேற்றினைத் தவிர்த்துவிடும் (290). கள்வரும் வரைவின் மகளிரும் பயன் கருதும் நட்பினரும் தம்முளொப்பாவர் (813). களவு பிறர் பொருளைக்கருதி அவர் மறதியை நோக்கு வதாகும், அது அருளையும் அன்பையும் அழித்துவிடும் (285).

**அழுக்காறு :**

அழுக்காறு அறத்திற்கு மாறானதாகும் (35). அழுக்காறு ஒருவனதாக்கத்தைச் சிதைத்துவிடும் (135). அழுக்காறில்லாதவியல்பே ஒருவற்குரிய ஒழுக்க நெறியாகும் (161). அழுக்காறின்மையே ஒருவற்கு விழுமியபேறும் (162). பிறன் ஆக்கத்தைப் போற்றாதது அழுக்காறு, அஃதறத்தையும் ஆக்கத்தையும் கெடுத்துவிடும் (163). அழுக்காறு ஒருவற்குப் பகைவரின்றியும் உள்ளிருந்தே கேட்டினைத்தருவதாம் (165). அழுக்காறு ஒரு ஒப்பற்ற பாவியெனப்படும், அது செல்வத்தைக்கெடுத்துத் தீநெறியிற் செலுத்திவிடும் (168). அது திருமகளை நீக்கி ஒருவனை மூதேவிக்காட்படுத்திவிடும் (167). அழுக்காறுடையான் கண் ஆக்கம் உளதாயின் அது முற்பிறப்பின் பயத்ததாம் (169). அது ஒருவனைப் பெரியனாக்குவதில்லை அஃதில்லார் சிறியராதலுமில்லை (170). ஒருவர்க்கொருவர் ஒன்று கொடுப் பதைத்தடுத்தல் அழுக்காறாகும், அஃதவனது சுற்றத்திற்கும் உணவும் உடையுமின்றிச் செய்துவிடும் (166).

**அவா :**

அவா எவ்வுயிர்க்கும் எக்காலத்தும் பிறப்பினை யுண்டாக்கும் விதை போன்றதாகும் (361). அவாவின்மையே பிறவாமையை யுண்டாக்கும் (362). அதுவே என்றும் கீழ்ப்படாத சிறந்த செல்வமாகும் (363). அவாவின்மையே தூய்மையாகும், அது மெய்ம்மையால் உண்டாகும் (364). அவாவற்றவரே பிறவியற்றவராவர், மற்றவற்றைத் துறந்தவர் பிறவியற்றவராகார் (365). அவா அஞ்சிக்காக்கத் தக்கதாகும். அது வஞ்சனையாற்புகுந்து பிறவியை யளிப்பதாகும் (366). அவாவில்லையேல் துன்பமில்லை யென்பதாம், அது முடிவின்றித் துன்பங்களையுண்டாக்கும் (368). அது துன்பங்களுள் துன்பமாகும், அதுகெடின் இன்பம் இடையறுதுண்டாகும் (369). அஃதொருக்காலும் நிரம்பாத இயல்பினையுடையதாம். அது நீங்கின் வீடுபேறுண்டாகும் (370). அது அறத்திற்கு மாறுனதாகலின் நீக்கத்தக்கதாகும் (35). அவாவின்மையே வினைக்குரிய திறனையளிக்குமென்பதாம் (513). அவா கயவரது தன்மை யாகும் (1075). அது தவஞ்செய்யாதவர்களுக்குரியதோர் குணமாகும், அது தீமைகளையெல்லாம் செய்தற்குத் தூண்டும் (266).

குற்றமாகிய காமம் வினைக்குக் காரணமாகும் (360). களவின்கண் ஒருவற்குள்ள மிக்க அவா பயன்படுங்காலத்தே நீங்காத துன்பத்தைத்தரும் (284). கள்ளின்கண் அவா ஒருவனெய்திய ஒளியினையழித்துப் பகைவரையும் அஞ்சாமற் செய்துவிடும் (921). அவாவில்லாதவனே இறைவ னென்பதாம் (4).

**வெஃகுதல் :**

பிறர் பொருளைக்கொள்ளக் கருதுதல் நடுவின்மையாகும், அது குடியைக் கெடுத்துக் குற்றத்தைத்தரும் (171). பொருளாலாகும் பயனை விரும்பி வெஃகுதல் பழியுடைய செயல்களைத் தூண்டிவிடும் (172). வெஃகுதல் நிலையில்லாத இன்பத்திற்கே காரணமாம் (173). வறுமையை நீக்குதற்காக வெஃகுதல் புலன்களைவென்ற மெய்யுணர்வுடையார்க்குரிய தாகாது (174). பொருளைவிரும்பி அறிவொடுபடாத

செயல்களைச் செய்தல் நுண்ணிதாகப் பரந்த அறிவின் பயனன்றென்பதாம் (175). பொருளை வெஃகுதல் அருள் நெறிக்கு மாறுனதாகும் (176). வெஃகுதலினுலாகும்செல்வம் பயன்படுங்காலத்தில் நன்ருதலில்லை (177). வெஃகாமையே தன்னிடமுள்ள செல்வமும் சுருங்காமைக்குக் காரணமாம் (178). வெஃகாமை ஒருவனிடம் திருமகள் அடைதற்காம் நெறியையுண்டாக்கும் (179). ஆராயாமல் வெஃகுதல் ஒருவற்கிறுதியைப் பயக்கும் (180).

## வெகுளி :

வெகுளி அறத்திற்கு மாருனதோர் குணமாம் (35). வெகுளியென்பதன் பெயரும் இல்லாமலாகவேண்டும் அப்போது வினைப்பயன்கள் இல்லாமற்போய்விடும் (360). தன் சினம் பலிக்கக்கூடிய மெலியவர்மேற் சினமெழாமற் றடுப்பதே சினத்தைக் காத்தலாம் (301). சினம் பலிக்காத வலியாரிடம் சினத்தைச் செலுத்துதல் மிக்க தீமை பயப்பதாகும் (302). பல சுடர்களையுடைய பேரெரி தோய்ந்தாலொத்த தீமையைப் பிறர் செய்யினும் கூடுமாயின் வெகுளாமை நன்றும் (308). சினம் யாவரிடத்தும் மறக்கத் தக்கதாகும், அது தீயனவெல்லாவற்றிற்கும் காரணமாகும் (303). சினம் முகத்தில் நகையையும் அகத்தில் உவகை யையும் கொல்லும் அதனினும் பகை வேறில்லை (304). சினம் வாராமற் காக்கப்படாவிடின் தனக்குக் கடுந்துன்பங்களை யெய்துவிக்கும் (305). சினம் ஒரு நெருப்புப் போன்றதாகும், அஃதொருவரது இனத்தையே சுட்டுவிடும் (306). சினத்தைப் பொருளாகக்கொண்டவன் கெடுதல் ஒருதலை யென்பதாம் (307). சினத்தின்கண் மிக்கவர் செத்தவரோடொப்பார், அதனை வென்றவர் சாகாதவர் எனப்படுவார் (310). சின மின்மை ஒருவன் நினைத்த பேறுகளையெல்லாம் உண்டாக்கும் (309). வெகுளியாகிய குற்றங்களின்மை அரசரது செல்வ மேம்பாட்டிற்குக் காரணமாம் (431). ஆராயாதவனது சினம் பலரது பகைக்கும் காரணமாம் (866). சினமில்லாதவன் பெரிய உலகின்கண் அனைவர்க்கும் துணையாவான் (526). வெகுளி இரப்பவரிடத்து இருத்தலாகாதென்பதாம் (1060). வெகுளியுடையவன் எக்காலத்தும் யாவராலும் வெல்லுதற் கெளியவனுவான் (864). குணமென்னும் குன்றின்கண் நின்ற

முனிவரது வெகுளி நிற்பது கணமாயினும் தடுத்தற்கரியதாம் (29). சீற்றமுடைய அரசனது சினம் அவன் செல்வத்தையே அழித்துவிடும் (568). உயர்ந்த விரதங்களை யுடையாரது சினம் இந்திரனையும் பதங்கெடச் செய்துவிடும் (899). வெகுளியில்லாதவனிடத்தில் அறம் வழிதேடிவந்து தங்கு மென்பதாம் (180). பொய்க்கோபம், பிரிந்துவந்த தலைவ னிடத்துத் தலைவிக்குண்டாகும் (1246).

**கொலை :**

ஒருயிரையும் கொல்லாமையே அறவினையாம். கொலை எல்லாப் பாவங்களையும் உண்டாக்கும் (321). கொல்லாமை ஒப்புயர்வற்றதோர் அறமாகும், அது பொய்யாமையினும் சிறந்ததாம் (323). கொல்லாமையாகிய அறநெறியே மேற்கதி வீடுபேறுகட்குரிய நெறியாம் (324). கொல்லா வறத்தை மறவாதவன் துறந்தாருளெல்லாம் தலையாயவன் என்பதாம் (325). பிறவுயிரை அதனுடம்பினின்றும் நீக்கும் வினைகளை ஒருவன் தன்னுயிர்போமாயினும் செய்தலாகாது (327). கொல்லா விரதமுடையவனது வாழ்நாள்மேல் கூற்றுவனும் செல்லான் அதுவே வாழ்நாள் நீட்டித்து ஞானம் பெற்று வீடுபேறடைதலாம் (327). கொல்லுதல் துறக்க முதலிய செல்வங்கட்குரியதாயினும் வீடுபேறு கருதுவார்க்கு அது கடையாயதென்பதாம் (328). கொலைத்தொழிலை யுடைய மாந்தர் அறிவாரது நெஞ்சத்துப்புலைத் தொழிலின ராகக் கருதப்படுவர் (329). ஐவகை யுயிர்களையும் கொல்லாமல் குறிக்கொண்டுகாத்தலே நூலோருரைத்த அறங்களி லெல்லாம் சிறந்ததாம் (322). முற்பிறப்பில் உயிர்களைக் கொன்றவர்களே இப்போது நோக்கலாகா நோயுடம்பும் வறுமையுமுடைய வாழ்க்கையினராவர் (330). கொல்வினைக் குறும்பர்கள் இல்லாததே சிறந்த நாடெனப்படும் (735). போர்க்களத்தில் பகைவரால் இயற்றப்படுவதும் கொலை யெனப்படும் (1224). அரசனியற்றும் கொலைத்தொழில் கொடியர்கட் குரியதேயாகும், அது பயிரில் களையெடுப்பது போல்வதாம் (550). கொல்லா நலமே தவமெனப்படும் (984).

**குற்றங்கடிதல் :**

மதம், வெகுளி, காமம் ஆகிய குற்றங்கள் அகற்றப்பட வேண்டும் (431). பொருளை இறுக்கி வைத்தலும், நன்மை

யினீங்கிய மானமும், அளவிறந்த உவகையும் குற்றங்களாம் (*434*). மதத்தால் தன்னை மிகவுமதித்து வியவாமை வேண்டும், நன்மை பயவாவினைகளை விரும்பாமை வேண்டும் (*439*). தான் காதலித்த பொருள்களை மற்றவர் அறியாதபடி அனுபவியாமை குற்றமாம் (*440*). குற்றம் ஒருவற்கிறுதி பயப்பது, அது வாராமையே பயனாகக்கொண்டு காக்கத் தக்கதாம் (*434*). தினைத்துணை குற்றமும் பனைத்துணையாகக் கருதி நீக்கப்படவேண்டும் (*433*). குற்றம் வருமுன்னரறிந்து தடுக்கப்படவேண்டும். இன்றேல் வைக்கோலிற்பட்ட தீப்போல அஃதழித்துவிடும் (*435*). முன்பு தன் குற்றத்தைக் கண்டு கடிந்து பின் பிறர் குற்றத்தைக்காணின் யாவரிடத்தும் குற்றமில்லை (*436*). நெருங்கியவரது குற்றங்களைத் தூற்றித் திரிதல் மிகவும் குற்றமாம் (*188*). பிறரது குணங்களை மறைத்துக்குற்றங்களையே கூறித்திரிதல் சிறியோரது குணமாம் (*980*). ஒருவரது குணம் குற்றம் இரண்டையு மாராய்ந்து குற்றமிகுதியாயின் அவன் இகழத்தக்கவனாவான் (*504*). குற்றஞ்செய்தாரை யொறுத்து நாட்டில் குற்றத்தை யகற்றுதல் அரசனது தொழிலாம் (*549*). உடலை ஆடையால் மறைத்தலினும் தம்மிடம் குற்றம் வாராமல் மறைத்தலே முதன்மையென்பதாம் (*846*). குற்றம் பகைவர்க்கொருவனை எளியனாக்கிவிடும் (*868*). குற்றம் வாராமற் றடுக்கமுயல் பவனுக்கு எண்ணிலாத்துன்பங்கள் உண்டென்பதாம் (*1029*). மனதிற்குற்றமிலனாதலே ஒருவற்குயர்ந்த அறமாம் (*34*). சொல்லும் சொற்கள் குற்றமற்றனவாக வேண்டும் (*649*). மாசற்றார் பெரியோராவர், பேரின்பம் தரும் சித்து முதலிய செல்வம் பெறினும் பிறர்க்குத் தீமைசெய்யாமையே அவர்தம் கோட்பாடாகும் (*311*).

**வஞ்சனைக்குற்றம் :**

வஞ்சகமென்பது குற்றமான ஒழுக்கத்திற்கே காரண மாகும், அஃதொருவனது மனத்தாலும் உடலிலுள்ள பஞ்ச பூதங்களாலுமே அறிந்து நகைக்கப்படும் (*271*). முகத்தால் நட்பு செய்து மனத்தால் பகைப்பவர் வஞ்சகராவர் (*824*). வஞ்சனை பெருமையற்ற செயல்களுக்குக் காரணமாகும், அது நற்குலத்தார்க்குரிய குணமன்றென்பதாம் (*956*). வஞ்சனை கலவாததே இன்சொல்லெனப்படும், அவ் வஞ்சனை அறத்திற்குமாறானதாம் (*91*).

## 22. துன்பம்

தீமையின் விளைவே துன்பமாகும். தன்னாலும் பிறராலும் தெய்வத்தாலும் (இயற்கையாலும்) ஒருவற்குத் துன்பம் வரும்: எதிர்பாராமல் வரும் துன்பத்திற்குக் கூட ஊழைக் காரண மாக்குவர் அறிஞர்.

[29] இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்பர் பெரியோர். துன்பத்தை வெறுத்தலும் இன்பத்தையே விழைதலும் உயிரியல்பு. அத்துன்பம் வாராதிருக்கவும் வந்தால் நீங்கவும் ஆவன கூறுதலே அறநூல்களின் கடமை. மனிதன் செய்யும் எச்செயலிலும் நெறி பிறழ்ந்து செய்தால் துன்பம் வருகின்றது, எனவே நெறி அல்லது ஒழுக்கத் தூய்மையே துன்பமின்மைக்கு வழியாகும்.

துன்பம், உடல்துன்பம் மனத்துன்பம் என இருவகைப்படும். பெரிதும் மனத்துன்பம்பற்றியே அறிஞர் பேசுவர். துன்பத்தை உணர்தலும் உணராமையும் மதித்தலும் மதியாமையும் உண்டாதலால் ஆசிரியர் (துன்பம் உடலைப்பற்றியதாதலால்) அது பற்றி வருந்தலாகாதென்கிறார். தத்துவஞானிகள் உயிர், பற்றற்றதாதலால் துன்பம் உடற்குணம் எனக்கூறுவர். ஆனல் மனம் மாயையால் கவரப்பட்டுத் துன்பத்தை அடையுந்தோறும் அதனை வெறுக்காமல் மேலும் உயிர் வாழ்க்கையில் ஆவலுடைய தாகின்றது. இருவகைப்பற்றினலும் தீயொழுக்கத்தினலும் இடும்பைகள் வளரும். பிறர்க்குத் தீங்கு செய்யாதவர்க்குத் துன்பம் ஏற்படுதலில்லை.

துன்பமடையுந்தோறும் அதனை வெறுக்காமல் மேலும் இன்பத்தில் காதலுறுவதனற்றான் உலகில் துன்பமே இருக்கின்றது. இறைவனுணர்வுடையோர்க்குத் துன்பங்கள் மிகுதலில்லை. உட்பகை, இரத்தல், சூது இருவகைப்பற்றுக்கள் காமவெகுளி மயக்கங்கள், வாதபித்த முதலிய மூன்றும் நிலைதடுமாறல், களவு தெளிவின்மை ஆகியவற்ருல் துன்பங்கள் உறுவனவாக ஆசிரியர் வற்புறுத்துகிறார்.

அறிவும் அருளும் துன்பத்தை நீக்கும் கருவிகளாம். செயலில் உறும் துன்பங்களைப் பொறுப்பவனிடமும் சுடச்சுடரும் பொன் போல் துன்பத்தை மேலும் மேலும் ஏற்றுக்கொள்பவனிடமும் துன்பமே துன்பப்படுகின்றது.

காமத்தில் தோன்றும் துன்பம் கவலையெனப்படலாம். அஃது இன்பத்திற்குரியது அல்லது இன்பத்தையெதிர்நோக்கியது. தலைவன் தலைவியருள் ஒருவர்க்கொருவரால் நீங்குவது, பொதுவாகக் கண்ணீர் ஒருவரிடத்துள்ள துன்பத்தைக் குறிப்பதாகும்.

துன்பம் அடுக்கிவரக்கூடியது; வெள்ளம்போல்வதென அதனை ஆசிரியர் கற்பனை செய்கிறார். எவ்வகையினும் அதனை எதிர்த்துப்போரிட்டு (முயற்சியால்) வெல்வதே (வாகை) வெற்றி யெனப்படும். துன்பத்தில் துன்பமும் இன்பத்தில் இன்பமும் உணராத 'நடுநிலையே' வாழ்க்கை அல்லது துறவெனப்படும். மேலும் துன்பத்தையும் இன்பமாகவுணரும் நிலையும் வேண்டு மென்கிறார் ஆசிரியர்.

**பொருளடைவு**

**மனத்துன்பம் :**

கவலையென்பது மனத்தில் தோன்றுவதோரியல்பாம். அது இறைவனது திருவடியைச் சேர்ந்தக்கால் நீங்கும் (7). துன்பமென்பது உடலினைக் குறிப்பாகப் பற்றி வருத்துவ தாகும், ஆகவே இயல்பாகிய அது வருந்தற்குரியதொரு பொருளாகாது (623). துன்பமானது, உழக்குந்தோறும் அஃதுடையார்க்கு இன்பத்தில் காதலையுண்டாக்கும் (940). உட்பகையென்பது துன்பத்துள் மிக்க துன்பமாகக் கருதப்படும் (854). பிறர்க்குத் தீங்கு செய்யாதவரைத் துன்பங்கள் சேரமாட்டாவாம் (206). புகழோடு வாழாதவர் தமக்குத்தாமே துன்பப்படுவர் (237).

பலவகையான துன்பங்களும் வறுமையில் தோன்றும் (1045). இரத்தல் துன்பத்திற்குரியதோர் செயலாகும் (1052). உய்வில்லாத நோய் தீமை செய்தார்க்கும் தீமை செய்யின் உண்டாகும் (313). துன்பம்தீய இனத்தாருடன்

சேர்தலால் உண்டாகும் (460). துன்பம் வந்துற்ற காலத்தில் நட்பினரால் அது பகிர்ந்து கொள்ளத்தக்கதாம் (789). துன்பம் சூதாடுபவர்களுக்குரியதாகும். நரகம் என்பது துன்பம் நிறைந்த இடமாகும் (938). இடுக்கண் ஒரு குடியையே அடியோடழித்துவிடக் கூடியதாம் (1030). இடும்பைகள் பிறவிக்கியல்பாயவாகும், இருவகைப் பற்றுக்களையும் உடையவர்களை இடும்பைகள் விடாமற் பற்றிக்கொள்வனவாம் (347). இடும்பைகள் தீயொழுக்கத்தினால் உண்டாகும் (138). துன்பம் கண்ணீரினைத் தோற்றுவிக்கும், அக்கண்ணீர்த் துளிகளால் ஒருவற்குத் துன்பமுண்மை யுணரப்படும் (71).

துன்பங்கள் தவமுடையோரால் பொறுத்துக்கொள்ளப் படும், அவை அவரால் பிறர்க்கிழைக்கப் பெறுதலும் இல்லை (261). பிறவுயிர்கட்குற்ற துன்பம் அறிவுடையோரால் தமக்குற்றதாகக் கருதப்படும் (315). துன்பங்கள், ஆசை வெகுளி அறியாமை யென்னும் மூன்றும் கெட்டவிடத்து இல்லாமற்போய்விடும் (360). நடுங்கவருவதொரு துன்பம் வருமுன்னர் காப்பவர்க்கில்லை யென்பதாம் (429). சார்பாய செம்பொருளை யுணர்ந்தவர்க்குச் சாரக்கடவ துன்பங்கள் யாவும் இல்லையாகும் (359). உடல் நோய்களால் உள்ளமும் நோய்ப்படும், வாத பித்த முதலிய உடலில் அளவு தடுமாறினால் துன்பங்களுண்டாம் (941). அவலம், நன்மையைச் செய்யவேண்டுமே யென்ற நீங்காத எண்ணத்தாலும் உண்டாகும், அது கயவர்களிடம் இல்லை (1072). துன்பங்கள் தீரா இயல்புடையவாகக் கூறப்படும், ஆராயாது தெளிதலாலும் தெளிந்தவன்கண் ஐயுறுதலாலும் நீங்காத துன்பமுண்டாம் (510). துன்பம் களவின்கண் மிக்க ஆசை யுடையார்க்குரியதாம் (254).

**காமமும் துன்பமும் :**

காமப் பிரிவுக்காலத்தில் துன்பம் காதலரிடையே மிகுதியாக உண்டாகும் (1166). காமுற்றாரது துன்பம் மாலைக்காலத்தில் வளர்ந்து தோன்றுவதாம் (1223). பிரிவுற்றார்க்குரிய துன்பம் பிறரால் ஆற்றவியலாததாம், அவரது நெஞ்சத்தாலேயே அஃது ஆற்றற்குரியதாம்

(*1299*). புலவிக்காலத்தே தலைவர்க்குச் சிறிது துன்பம் உண்டாதல் கூடும், அது தலைவியால் மகிழ்தற்குரியதாம் (*1301*). காமநோய் தலைவனை மிகவும் வருத்துகையில் அவனூர்ந்து செல்லும் மடலொன்ருலேயே அது தீர்வதாம் (*1131*). காமத்துன்பம் காதலர் ஒருவர்க்கொருவர் செய்யும் புணர்ச்சிக் குறிப்புக்களால் நீங்குவதாம் (*1275*). துன்பம் ஒருவனை விரும்பாதவர் பின் சென்று நிற்கும் நிலையையும் ஏற்படுத்திவிடக்கூடும். அது பிரிந்து துன்பத்திற் குள்ளாக்கிய தலைவனைத் தலைவி நினைக்குமாறு செய்யும் (*1256*). காமத்துன்பம் தலைவியது ஒரு கண்ணுல் தோன்றி மற்றெரு கண்ணேக்கினுல் தீரக்கூடியதாம் (*1041*).

**கண்ணீர் :**

அரசனது அநீதியால் மக்கட்குக் கண்ணீரும் துன்பமும் உண்டாகும், அக்கண்ணீரே அவ்வரசனது செல்வத்தைத் தேய்க்கும் படையாம் (555). தலைவன் பிரிந்த காலத்துத் தலைவியின் கண்கள் துன்பக்கண்ணீர் வடிப்பனவாகும் (*1170*). அன்புடையாரது சாவினைக் கண்டு துன்பக்கண்ணீர் பெருகும், தமக்கு நன்மை செய்தவர் இறந்துபோக மக்கள் வருத்தமுறுவரென்பதாம் (*780*). கண்ணீர் துன்பத்தையே குறிக்கும் என்பதில்லை, பகைவரது கண்ணீர் துன்பத்தைக் குறித்தலில்லை, அது கேட்டினை உள்ளடக்கியதாம் (*828*).

**இடுக்கணழியாமை :**

துன்பம் வந்த காலத்து அதற்கெதிராக நகுதலே அதனை வெல்லுதற்குரிய வழியாம் (*621*). துன்பம் வெள்ளம்போன்று பெருகிவரக்கூடியதெனக் கூறப்படும், அது அறிவினுல் வெல்லப்படுவதாம் (*622*). பகடுபோல மருங்கொற்றியும் மூக்கூன்றியும் தாள்தவழ்ந்தும் வினையைக்கொண்டு செலுத்தக்கூடியவனை யடுத்ததுன்பம் தானே இடர்ப் பாடடையும் (*624*). துன்பம் அடுக்கிவரக்கூடியதாகக் கூறப்படும், அதற்கழியாதவனை அஃதொன்றும் செய்ய வியலாது (*625*).

**துன்பத்தில் சமநிலை :**

செல்வக்காலத்து அதனைப்பிடித்து வையாது நல்வழியிற் செலவிடுபவர் வறுமைக்காலத்தில் வருந்துதல் இல்லை (626). துன்பம் உடம்பிற்கியல்பெனக் கருதுபவரை அஃது அடைதலில்லை (628). இன்பத்துள் இன்பம் நுகராது நடுவாக இருந்தவன் துன்பகாலத்தில் துன்பமடைதலில்லை. (629). துன்பத்தையே இன்பமாகக் கருதுபவர் பகைவராலும் பாராட்டப்பெறுவர், அது மனத்திடை நிகழ்வதோர் இயல்பாகலின் மாறுபட இன்பமெனக்கருதக்கூடுமென்பதாம் (630).

**துன்பத்தை நீக்குதல் :**

துன்பங்கள் வரினும் அவை அறிவுடையாரிடம் இழிவுடைய செயல்களுக்குக் காரணமாதலாகாது (654). துன்பம், பெரியவர்களைப் போற்றுது ஒழுகுதலால் உண்டாகக் கூடும் (892). அல்லல் அருளையாள்பவர்க்கில்லை (245). இன்பதுன்பங்கள் ஊழால் விளைவனவாகலின் துன்பம் வருங்கால் அது வருந்துதற்குரியதாகாது (379). துன்பம் அவாவற்றவிடத்து இல்லாததாம் (368). தனக்கின்பம் விழையாமல் வினைமுயற்சியையே யுடையானிடம் துன்பங்கள் நிற்கமாட்டா (615). துன்பம் வருத்தவருத்த நோற்பவர்க்கு (உருக்கவுருக்க ஒளிவிடும் பொன்போல) ஞானமிகுந்து தோன்றும். துன்பம் ஞானத்திற்குத் தூண்டுதலாகு மென்பது (267). துன்பம் குறிப்பாலறிந்து நீக்குதற் குரியதாம். தன் துன்பத்தையறியாதவரிடம் தானே சென்று சொல்லற்க என்பதாம் (872). பின்னல் என்னேயென்று வருந்தற்குரிய செயல்களைச் செய்தலால் துன்பமிகுதியாகும் (655). முற்பகலில் ஒருவர் வருந்தத்தக்கவற்றைச் செய்யின் அவனை அவ்வருத்தங்கள் பிற்பகலிலேயே தவருமல் அடைந்துவிடும் (535). துன்பமாகக் கலக்கம் மேலோரால் கொள்ளப்படாமை, உடம்பு துன்பத்திற்கே இலக்காயதென்ற உணர்விலாகும் (627).

# 23. நட்பு

அன்பும் நட்பும் மனிதத்தொடர்புக்குரியன. மனிதன் மற்றொரு மனிதப்பிறவியுடன் தொடர்புகொள்ளாமல் வாழ வியலாது. தாய் தந்தை முதலிய பிறப்புத் தொடர்பாவது அவற்கிருக்கவேண்டும். அத்தொடர்பே அன்பாவது, அவ்வன்பே நண்பென்னும் நாடாச் சிறப்பினைத்தருவது. நாடாச் சிறப்பு என்பது எல்லா நலன்களுமென உரையாசிரியர் விளக்குவர்.

உயிர் காப்பான் தோழன் என்பது பழமொழி, ஒத்து உயிர் விடுவான் நண்பன் என்பதனைப் புறநானூறு முதலிய இலக்கியங் களில் காணலாம். வாழ்விலும் சாவிலும் ஒன்றாகத் தலைவன் தலைவியைப் போன்றவர் நண்பர். துணைவன் என்பதும் நண்பனையே குறிக்கும். வாழ்க்கைத்துணைவியும் ஒருவற்கு முதல் நட்பு உடையவளே.

30 ஜான்சன் போன்றவர்கள் நட்பினைச் சட்டைபோல்வதெனக் கூறுவர். பழைய சட்டையைக், கிழிந்த சட்டையைத் தூர வெறிந்து புதுச்சட்டையைக் கொள்வதுபோல நட்பினையும் புதுப் பித்துக் கொண்டேயிருக்கவேண்டுமென்பர். தீ நட்பொன்றையே அவ்வாறு விலக்கலாம் என்பது ஆசிரியர் துணிபு. நட்பின் வீடில்லை நட்பாள்பவர்க்கு என்பதே ஆசிரியர்கூறும் நட்பின் நிலைப்பாடு.

இன்பத்தில் பங்குகொள்வதுபோலத் துன்பத்திலும் பங்கு கொள்ளுதல் நட்பு என்பதால் அதன் நீங்காத் தொடர்பு புலனாகின்றது.

புணர்ச்சி (மட்டும்) அன்றி உணர்ச்சியொத்தலே நட்பு என்பதில் நட்பின் உயர்ந்ததோர் இலக்கணத்தைப் புலப்படுத்து கிறார் வள்ளுவர். உயர்ந்த பாதுகாப்பு, உயர்ந்த இன்பம் எல்லாம் நட்பால் ஆகின்றன. பொருளுதவி, உடலுதவி முதலியவற்றை நண்பனிடம் எதிர்பார்ப்பது ஒருவற்காகாதெனினும் அவற்றை

யளிப்பதனாற்றான் நட்பு வளர்கிறது, நிலைக்கிறது என்பது உண்மை. மக்கட்குயர்ந்தது நெஞ்சம். அந்நெஞ்சப் பிணிப் புடையதே நட்பு. நூல் நயம்போலும் (வளர்) பிறைமதி போலும் இன்பந்தருவதும் வளர்ச்சியுடையதும் நட்பெனக் கற்பனை செய்கிறார் ஆசிரியர்.

நட்பில் நற்குடிப் பிறப்பை மிகவும் கருதவேண்டுமென்பது வள்ளுவம். மற்றவர் பயன்கருதி நட்டுவிட்டுப் பிரிதலில் இரக்கமற்றவராவர். பழைமை அல்லது நட்புரிமை என்பது குறளில் வற்புறுத்தப்பெறும் ஒரு புதிய சிறந்த நட்பிலக்கண மாகும்.

நட்பைக் கொல்லுபவர் மனிதத் தொடர்பை மனிதவொருமைப் பாட்டைக் கொல்லுபவர். அவரே தீ நட்பு, கூடா நட்பு ஆகிய அதிகாரங்களில் பேசப்படுபவர். தொழுகையில் படையொடுக்கி அவர் நட்பையும் நண்பரையும் கொல்லுபவர். அவர் நாட்டிற் காகாத கொல்குறும்பர் வகையினர். அவர் நட்பு கனவிலும் இன்னாததாகும்.

உடம்பும் உயிரும் போல்வது நட்பு. கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் நட்பு என்பது தமிழர் கண்ட நட்பாகும். அரசனை மட்டுமன்றி அனைவரையும் தலைமையுடையராக்குவது நட்பாம். அறிவு, அறம் ஒழுக்கமுடையாரை நட்பாகக்கொள்ளவேண்டும். அப்பொழுதே தானும் அவையுடையனாகி மனிதனாகலாம். உற்றுழி யுதவலும், தீவழியுற்றழித்திருத்தலும் வல்லதே நட்பு. அறிவாலும் அறமுதலிய பிறவற்றாலும் நண்பர் தம்மினும் மிக்காராதலே சிறப்பு.

ஒத்தவுணர்ச்சி யென்பது நட்பில் வள்ளுவர் காட்டும் பொதுத் தன்மை. கோட்பாடு, அறிவு உணர்ச்சி, பழக்கவழக்கங்கள் ஆகியவையே உணர்ச்சியாகலாம். நற்குடிப் பிறப்பு என்பது நட்பிற்குரிய இன்றியமையாச் சிறப்பாக வள்ளுவரால் குறிக்கப் பெறுகின்றது. குறிப்பறிந்தொழுகல் என்பது நட்பின் சிறந்த அங்கமாகும். அது நண்பனின் மனத்தையும் தீமையையும் அறிதலாம். சிற்றினம் பேரினம் (பெரியோரினம்) என நட்பினைப் பிரிப்பது குறள். சிற்றினம் என்பது மிகவும் அஞ்சத் தக்கதாகும்.

பெரியோர் நட்பு என்றும் விடத்தகாதது, கொள்ளத்தக்கது. சிறியோர் நட்பு எவ்வகையிலும் விடத்தக்கது. சினமின்மையும்

நெஞ்சு கலந்து பழகுதலும், இன்சொல்லும் நட்பிற்கு மிகவும் இன்றியமையாதன. செல்வப் பயன் உலகில் அனைவரையும் கிளையாக, நட்பாகக் கொள்ளுதலாம். நண்பரைப்பற்றிப் புறங் கூறுமல் அகமலர நடப்பதே நட்பாகும். குணமும் குற்றமும் நாடிக் குணமிக்காரை நட்பாக்கவேண்டும். பகைமைத்தன்மை சிறிதுமின்றிப் பகையையும் நட்பாகக்கொண்டு வாழவேண்டும். பிறர்க்கியைந்த உதவிகளை யெல்லாம் செய்து நட்பினை எவ் வகையிலும் வளர்த்துக்கொள்ளும் இயல்பு வேண்டும்.

சொல்வேறு செயல்வேறு கொள்வார் ஓரிடத்து நட்பாய் நடந்தும் பிறவிடத்துப் பகைப்பார் ஆகியோர் நட்பிற்குரியவ ரல்லர். தீக்குணமுடையார் தீமையிற்பிரிவார் நட்பும் ஆகாதது. விடமர் தூர்த்தர் வேழம்பர் ஆகியோரும் நட்பாகாரென உரை யாசிரியர் விளக்குவர்.

வாள்போல் பகைவரை யஞ்சத்தேவையில்லை. ஆனல் கேள் போல் பகைவரை யஞ்சவேண்டும். வில்வணக்கம்போலப் பொருந்தாதவர் சொல்லும் தீமை செய்வதாம். அவருடன் நட்பா யொழுகவேண்டிய கட்டாயம்வரின் அவரைப்போன்றே வெளியிற் சிரித்து உள்ளத்தில் விலகியொழுகவேண்டும். உலகில் அரசாங்கப் பதவிகளில் இருப்போர் மற்ற அத்துறையலுவலர் பலருடன் இவ்வாறே யொழுகவேண்டிவரும்.

பழைமை – நட்புரிமையென்பது வள்ளுவரது (நட்பியலில்) ஓர் புதுப்படைப்பு. அது நீண்டகாலத் தொடர்பு அல்லது நட்பு என்பதன்று, இரண்டு நாள் பட்டதாயினும் நீண்டகாலத்தது போலக் கருதியொழுகும் உரிமையொழுக்கமாம். நண்பர்க் கியலாதது அவர்க்கு முடியவேண்டுவது ஆகிய செயல்களை யுணர்ந்து அவற்றை முடித்துத்தருதலே, முடித்துவிடலே அப் பழைமையாம். நட்பினர் தம்மிடம் பிழையே செய்யினும் அது பயன்பட்ட நாளாகக்கருதுவர் நன்னட்புடையோர்.

ஒருவற்குரிய பெருமை, இம்மை மறுமையின் அறிவு, வினைகளில் வெற்றியாவும் நட்பினலாகும். நூல் நயம்போலும் இன்பமுடையது பயிலுந்தொறும் பண்பாளர் தொடர்பு. சுற்றத் தாரையும் நட்புவகையிற்கொண்டு குறளில் சுற்றம் பற்றிக் கூறுவனவற்றையும் நட்பிலக்கணமாகக் கருதலாம். வினைமுயற்சி யுடையார் நன்னட்பிற்குரியராவர். கோயிலில்லாத ஊர்போல நட்பில்லாத ஊரும் குடியிருக்கத்தகாததாகத் தமிழர் கருதுவர்.

## பொருளடைவு

### நட்புச் சிறப்பு :

நட்பு செய்து கொள்ளுதற்கு மிக அரிய பொருளாகும், பகைவர் செய்யும் வினைக்கு எதிராகிய அரியகாப்பும் அதுவாகும் (781). அறத்தின் நுட்பமறிந்து தன்னின் மூத்த அறிவுடையாரது நட்பு கொள்ளுந் திறமறிந்து கொள்ளப்பட வேண்டும் (441). தெய்வத்தாலும் மக்களாலும் வந்த துன்பங்களை நீக்கிப் பின் அவை வாராமற்காக்கும் தன்மையுடையாரது நட்பு கொள்ளத்தக்கதாம் (442). அறிவு முதலிய வற்றால் தம்மினும் மிக்காரைத் தமக்குரியராகக் கொள்ளும் நட்பு வலிமையுளெல்லாம் மிக்கவலிமையாம் (444). தன்னைச் சூழ்ந்தவரைக் கண்ணாகக் கொண்டு அரசவினை நடத்தலான் அத்தகைய ஆழ்ந்தவரச நட்பு அரசனால் ஆய்ந்து கொள்ளத் தக்கதாம் (445).

அறிவொழுக்கங்களால் தகுதியுடையாரது நட்பு பகைவரால்வரும் துன்பங்களையெல்லாம் மாற்றிவிடும் (446). பாவங்களும் நீதியல்லவும் செய்யின் நெருக்கிச் சொல்லித் திருத்துவாரது நட்பு கொள்ளத்தக்கதாம், அத்தகைய நட்பில்லாதவன் பகைவரின்றியுமழிவான் (448). முதற் பொருள் வணிகர்க்கு ஊதியமளித்தல்போலத் தம்மைத் தாங்குவதொரு துணையாகிய நட்பு நிலையாந்தன்மை யளிக்கிறது (449) நட்பு என்னும், (பின்னர்) எல்லா நலன்களையும் ஆக்கவல்ல சிறப்பு அன்பிற்றோன்றும் ஆர்வ முடைமையால் உண்டாகும் (74). நட்பு, ஒரு அரசனைத் தலைமையுடையனுக்குதற்குரிய ஆறுபொருள்களில் (அங்கங்களுள்) ஒன்றாகும் (381). தலைவியுடன் தலைவற்குள்ள தொடர்பு உடம்புக்கும் உயிருக்குமுள்ள நட்பின் தன்மையதாம் (422).

### நட்பாராய்தல் :

புணர்ச்சியும் பழகுதலுமாகிய காரணங்கள் வேண்டுவதில்லை, இருவர்க்கும் ஒத்த உணர்ச்சியாலேயே நட்பாகிய உரிமையுண்டாம் (785). நட்புற்றபின் விடுதலில்லையாகலின் ஆராயாது நட்பு செய்தலினும் கேடு வேறில்லை (791).

குணம் செயல்களை ஆராய்ந்துகொள்ளப்படாத நட்பு தான் சாதற்கேதுவாகிய துன்பத்தைத் தரும் (792). ஒருவனது குணமும் குடிப்பிறப்பும் குற்றமும் குறைவற்ற சுற்றமும் அறிந்தபின் நட்புகொள்ளப்படவேண்டும் (793). உயர்ந்த குடியிற் பிறந்து தன்மாட்டுப் பழிக்கஞ்சுவாரது நட்பு சில கொடுத்தும் கொள்ளப்படவேண்டும் (794). உலக வழக்கல்லது செய்யின் வருந்தும்வகைச் சொல்லி விலக்கியும் செய்தக்கால் நெருக்கியும் நெறிப்படுத்தவல்லாரது நட்பு ஆய்ந்துகொள்ளப்படும் (795). சிறிய இனமானது பெரியோரால் அஞ்சப்படும், சிறியோரால் அது சுற்றமாக எண்ணித் துணியப்படும் (451). குறிப்பறிதலாகிய திறமுடையாருக்கு ஒருவரது நட்புத் தன்மை அவரது கண்களாலேயே அறியப்படும் (709). பொருளற்றுத் துறவியாயவிடத்தும் பழமையைக் கொண்டாடுதல் என்பது சுற்றத்தாரிடத்தே காணப்படுவதாகும் (521). ஒருவர்க்குக் கேடு வருங்காலத்து அக்கேடே நட்பினருடைய தன்மையை அளக்குங் கருவியாம் (796).

**நட்பாக்கல் :**

பெரியாரோடு நட்பினைக்கொள்ளாதொழிதல் தான் றனியனாய்ப் பலரோடும் பகைகொள்ளுதலினும் பத்துமடங்கு தீமையாம் (450). நட்பு வளர்ச்சிக்கு நெஞ்சு கலந்து பழகுதல் வேண்டும், இன்றேல் குளப்பரப்பு கரையின்றி நீர் நிறைந்ததுபோலத் தாங்குவாரின்றிக் கெடும் (523). சுற்றத்தால் தான்சூழப்படும் வகையொழுகுதலே செல்வம் பெற்ற பயனும் (524). வேண்டுவன கொடுத்தலையும் இன்சொற் சொல்லுதலையும் செய்வானாயின் அவனைத் தொடர்ந்த பல சுற்றமும் சூழ்ந்து நிற்கும் (525). கொடையுடன், வெகுளியை விரும்பாதவன் உலகில் சிறந்த கிளைஞனாவான் (526). காக்கைகள் காணும் இரையினை இனத்தையழைத்துண்ணுவதுபோலச் செல்வமும் அத்தகைய நட்பியல்பினையுடையாரிடமேயுண்டாகும் (527). தனக்கினமாயவர் தன்னிடம் உள்ளதொரு குறையினால் நீங்கின் தான் அக்குறையை நீக்கிக்கொள்ள அவர் தாமே வந்து நட்பாவர் (529). காரணமின்றித் தன்னிடமிருந்து பிரிந்துபோய்ப் பின்பு ஒரு காரணத்திற்காக வந்தவனை அக்காரணத்தைச்

செய்துவைத்து நட்பாக்கிக்கொள்ளவேண்டும் (530). அறிவுடையாரது நட்பு வளர்பிறைபோல முன் சுருங்கிப் பின் பெருகுவது; பேதையாரது நட்பு தேய்பிறைபோல முன் பெருகிப் பின் சுருங்குவதாகும் (782). நட்பு, இயைந்தன சொல்லி நகையாடுதற்கன்றும், அவர்க்கு வேண்டாத செய்கையுளதாயவழிமுற்பட்டுக் கழறுதற்கே யாம் (784). நட்பினரைப்பற்றிப் புறங்கூறுதலென்பதாகாது (188). அகமொழிய முகமட்டுமே மலருவதன்றி அன்பால் அகமு மலர நட்குமதே நட்பாகும் (786). இவர் எமக் கித் துணை யன்பினர் எனப் புனைந்து சொல்லினும் நட்பு புல்லியதாய்த் தோன்றும் (790). உலகத்தோடொத்துக் குற்றமற்றாரது நட்பினைக்கொள்ளவேண்டும் (800). சுற்றத்தார் முதலியவர்கள் அரசன் தனது ஒற்றரால் ஆராய்ந்துகொள்ளப்படுபவராவர் (584). குற்றம் செய்யாமல் தன் குடியை உயரச்செய்து வாழ்பவனுக்கு உலகமெல்லாம் சூழ்ந்து நட்பாகும் (1025). பகைவரையும் நட்புபோலக் கொண்டொழுகும் பண்புடையவன் பெருமையின்கீழே உலகம் தங்கும் (874). நட்பு செய்யாது பகைமையைச் செய்தொழுகுவாரிடமும் நட்பியல்புடன் ஒழுகவேண்டும் (998). மனையாள் விரும்பியவாறு செய்தொழுகுபவர் நட்பினரது குறையை முடிக்கமாட்டாதவராவர் (908). விருப்பமில்லாதவற்றை நட்பினரிடம் செய்தல் மிகவும் தீதாகும் (192). மகிழுமாறு சொல்லி நட்பாடலை உயர்த்தாதவர் நீங்கும்படிச் சொல்லிக் கேளிரைப் பிரித்து விடுவர் (187). நட்பினர்க்கு நல்லவற்றை விரைந்து செய்யவேண்டும், அதனினும் விரைவாகப் பகைவரைத் தன்னுடன் சேர்த்துக்கொள்ளவேண்டும் (679). நற்குடியிற் பிறந்து தனக்கு வரும் பழிக்கஞ்சுபவரது நட்பு அவர் விரும்புவதொன்றனைக் கொடுத்தும் கொள்ளப்படவேண்டும் (794). துன்பமுதலியவற்றால் கெட்டவர்க்குச் சிலபோது நட்பினரும் இல்லாதவராவர் (1293). நட்பினுள் துயர முண்டாக்குதற்குரிய செயல்களைப் புரிதலாகாது (1165). இனமாகிய காவலமைந்த துணை சினமென்னும் நெருப்பு பட்டால் அழிந்துவிடும் (306). ஒருவனுக்கு உட்பகை மிகுந்த காலத்தில் சுற்றம் வயமாகாமைக்கேதுவாகிய குற்றம் பலவும் உண்டாம் (884). ஒருவனிடம் குணமொன்று

மில்லாமல் குற்றம் பலவாயின் அவன் பகைவர்க்கு இனமில்லாதவனுவான் (868).

**தீ நட்பு :**

அறிவில்லாரது நட்பினை நீக்கிவிடலே ஒருவர்க்குப் பெரும் பேருகும் (797). துன்பம் வந்துழிக்கைவிடுவாரது நட்பினைக் கொள்ளலாகாது (798). ஒருவன் கெடுங்காலத்து விட்டு நீங்குவாரது நட்பு அவனைக் கூற்றடுங்காலத்து நினைப்பினும் உள்ளத்தைச்சுடும் (799). காதல் மிகுதியாற் பருகுவார் போன்ருராயினும் தீக்குணமுடையாரது நட்பு வளர்தலினும் தேய்தல் நன்ருகும் (811). பயனுள் வழி நட்புச்செய்து அஃதில் வழி ஒழியும் நட்பு பெறலால் ஆக்கமு மில்லை பெருமையால் கேடுமில்லை (812). அமர்வராத முன்பு தாங்கி, வந்ததும் பாகனை வீழ்த்தோடும் புரவி போல்வரது நட்பினும் தனிமை நன்ரும் (814). செய்துவைத்தாலும் அரணுகாத கீழ்மக்களது நட்பு ஒருவர்க்குண்டாதலிலும் இல்லாமை நன்று (815). விடமர் தூர்த்தர் வேழம்பர்போன்ற நகுதல் வகையர் ஆகியோரது நட்பினும் பகைவரால் பத்துக் கோடி மடங்கு நன்மையுண்டாம் (817). தம்மான் முடியுங் கருமத்தை முடியாதாக்கிச், செய்யாதாரோடு கொண்ட நட்பு சொல்லாமலே சோரவிடத்தக்கதாம் (818). வினையும் சொல்லுமொவ்வாது வேறு வேருயிருப்பாரது நட்பு நனவிலன்றிக் கனவிலும் இன்னுதது (819). மனைக்கண் இருந்துழி நட்பர்டிப்பலரோடு மன்றின்கணிருந்துழிப் பழி கூறுவாரதுநட்பு சிறியதாயினும் நெருங்கத்தகாததாகும் (820).

**பகையும் நட்பும் :**

வாய்க்குமிடம் பெறுந்துணையும் கூடியொழுகுவாரது நட்பு அவ்வாய்ப்பு கிடைத்ததும் இற்றுவிடும் (821). தமக்குற்ருர் போன்று உருதாரோடுற்ற நட்பு பெண்பாலார் மனம் போல வேறுபடும் (822). நல்ல பல நூல்களைக் கற்றும் பகைவரது நட்பு மனந்திருந்துதலில்லை (823). கண்டபொழுது முகத்தால் இனியவாகச் சிரித்து மனத்தால் இன்னுராய வஞ்சகரது நட்பு அஞ்சப்படுவதாம் (824). மனத்தாற் பொருந்தாதவரை யாதொரு கருமத்தினும் சொல்லாற்றெளிதலாகாது (825). வில்வணக்கம் தீமை குறித்தலால் பகைவரது சொல்

வணக்கமும் கொள்ளப்படாததாம் (827). பகைவர் தொழுத கையிலும் கொல்லும் படை மறைந்திருக்கும் அவர் அழுத கண்ணீரும் அத்தகையதேயாம் (828). புறத்தேமிக்க நட்பு செய்து அகத்தே தம்மையிகழ்வாரது நட்பு தாமும் அவ்வாறே யொழுகி அழியவிடத்தக்கதாகும் (829). பகைவர் தமக்கு நட்டாராய் ஒழுகும் காலம் வந்தால் தாமும் அவரோடு முகத்தால் நகுதலைச்செய்து அகத்தால் அந்நட்பை விட்டுவிட வேண்டும் (830). வாள்போல் வெளிப்பட்டு நிற்கும் பகைவரை அஞ்சாவிடினும் நட்பினர் போல மறைந்து நிற்கும் பகைவரை அஞ்சவேண்டும் (882).

**நட்புரிமை :**

நட்புரிமையாவது நண்பினர் கேளாமலும் கெடும் வகையும் செய்வனவற்றையும் அவரது பணிவச்சமின்மை யையும் சிதையாமல் ஏற்றுக்கொள்ளுதலாம் (801). நட்புரி மைக்கு இனியராதல் சான்றோரது கடமையாகும் (802). நட்டார் உரிமையாற் செய்வனவற்றைத் தாம் செய்தாற் போலவே கொள்ளாவிடத்துப் பழையதாய் வந்த நட்பினாற் பயனில்லை (803). தங்கருமத்தை நட்டார் தம்மைக் கேளாமலேயே முடித்துத்தந்தால் அறிவுடையார் அதனை விரும்புவர் (804). தாம் வெறுப்பனவற்றை நட்பினர் செய்து விட்டால் அது பேதமையென்றோ உரிமையென்றோ கருதிவிட வேண்டும் (805). நட்பின் எல்லையில் நிற்பவர் பொருட் கேடுற்றவழியும் பழமையிற்றிரியாது நின்றவரதுநட்பினை விடமாட்டார் (806). அன்புடனே பழையதாய் வந்த நட்புடையவர் தமக்கழிவாயவற்றை நட்பினர் செய்யினும் தாமவரிடம் அன்பினைவிடார் (807). நட்டார் செய்த் பிழையை மனங்கொள்ளாத நட்புரிமை உடையவர்க்கு நட்பினர் பிழை செய்த நாள் பயன்பட்ட நாளாகும் (808). உரிமையால் பழையதாய் வந்த நட்பினைவிடாதவரை உலகம் நட்பு குறித்து விரும்பும் (809). பழைய நட்டார் பிழை செய்யினும் தம் பண்பினீங்காதவர் பகைவராலும் விரும்பப் படுவர் (810).

**நட்பின் பயன் :**

இவன் இத்தன்மையனென உலகத்தால் பாராட்டப் பெறும் சொல்லை நட்பு தரும் (453). ஒருவற்குரிய விசேட

வுணர்வினை சேர்ந்த இன்பம் உண்டாக்கும் (454). மனத் தூய்மையையும் செய்வினைத் தூய்மையையும் ஒருவற்கினத் தூய்மைதருவதாகும் (455). இனத்தூய்மை யுடையார்க்கு நன்ருகாதவினையில்லை (456). மனநலத்தானுகும் மறுமையை இனநலம் வலிமை பெறச்செய்யும் (459). நல்லினத்தின் மிக்க துணையுமில்லை தீயினத்திலும் துன்பந்தருவதுமில்லை (460). நற்குணமுடையவர் தம் நட்பு பயிலுந்தோறும் நூற்பொருள்போல இன்பந்தரும் (783). அவையிடை ஆடைகுலைந்தவனுக்குதவும் கைபோல நட்பு நட்பினர்க் குற்ற இடுக்கணை விரைந்து சென்று களைவதாம் (788). நட்பினர் தீநெறியிற்செல்லுங்கால் விலக்கி நன்னெறியிற் செலுத்தி தெய்வத்தாற் கேடுவந்துழி உடனனுபவித்தலே நட்பாம் (787). ஆராய்ந்து கொண்ட நட்பினருடன் எண்ணிச்செய்தல் ஒருவற்கு எல்லா வினைகளையும் அருமை யென்பதில்லாதாக்கிவிடும் (462). நட்பினர் இல்லாத ஊரில் வாழ்தல் இன்னுதாம் (1158). எப்போதும் வினையிடத்து முயற்சியுடையானது நட்பு வேறுபாடாக நினைக்கப் படுமாயின் அது அவனிடமிருந்து திருமகளை நீக்கிவிடும் (519). தனக்கின்பத்தை விரும்பாது வினைமுயற்சியையே விரும்புவானது நட்பு கேளிரது துன்பத்தை நீக்கித்தாங்கும் தூணும் (615). நட்பு கண்ணன்னதாகப் பாராட்டப்பெறும் தலைவிக்குத் தலைவன்கண்ணன்ன கேளிர் எனப்படுவான், (1267). சிலபோது நட்புரிமையை நினைந்துவாழும்போது அந்நட்பு வன்கண்மையதாகத் தோன்றும், பிரிந்துறையும் தலைவிக்கு மாலைக்காலத்தில் தலைவனது நட்பு வன்கண்மைய தாகத்தோன்றும் (1222). துன்பம் துடைத்தவரது நட்பு எழுபிறப்புக்களிலும் ஒருவரால் நினைக்கப்படும் (107). சுற்றத்தார் இல்லத்தாரால் போற்றுதற்குரியராவர் (43).

# 24. நன்மை

முன்பாராய்ந்த தீமை, நன்மைக் கெதிரானதாகும். உலகம் நன்மையால் வளருகின்றது. நன்மையே உலகில் ஆக்குவோர் சான்றோர். 'நன்றுடையானைத் தீயதிலானை' என இறைவனைத் தேவாரம் பாராட்டுகின்றது. நல்லவன் என வாழவேண்டுபவன் மனிதன். பொறையுடைமை நன்மைகளுட் சிறந்ததாகும், எனவே அஃது இத்தலைப்பில் இணைத்தாராயப்படுகிறது. பல குணங் களையும் செயல்களையும் நன்மைகளென ஆசிரியர் ஆங்காங்கே குறிப்பிடுகின்றார். உலகத் துன்பங்கட்கெல்லாம் காரணமாவது தீமை என்பதுபோல உலகவின்பங்கட்கெல்லாம் காரணமாவது நன்மையாம். புண்ணியம், சுவர்க்கம், வீடுபேறு முதலியவை யெல்லாம் நன்மையின்பாற் பட்டனவாம். தத்துவப் பேரறிஞர் எல்லாம் தேடித்திரிவது நன்மையே ஆகும். 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்' என்றவிடத்து அறம் நன்மையாகும்.

நன்மையும் தீமையும் ஊழினால் ஆவதென ஆன்றோர் கருதினர். அறிவினால் ஊழையும் வெல்லலாம் என அவர்களே கூறினர். நடுவுநிலைமை, ஒழுக்கம், அழகு, பொருள், கல்வி, செம்பொருள், ஆண்மை முதலனைத்தும் 'நன்மை'களாகக் கருதப் பெற்றுள்ளன.

பரத்தையரும் கணவனை அடக்கும் பெண்களும் நன்மைக்கு எதிரிகளாம். புகழுடன் வாழுதல் நன்மைக்காக வாழ்தலாம். மறதி உடையாரிடம் நன்மையில்லை. பொறுத்தல் தவமாகும். பிறர் தீமையைப் பெதுறுப்பாம் அவர் உறும் தீமைக்கிரங்கி அவர்க்கு நன்மை செய்வதும் உயர்ந்த அறமாம்.

ஆக்கம் நன்மையினால் ஆகின்றது. ஆக்கம் உயிர்க்கு மிக இன்றியமையாதது. வெகுளியும் அழுக்காறுமின்றி ஊக்கமுடைய ஒருவனிடம் ஆக்கம் (மேன்மேலுயர்ச்சி) உள்ளதாம். பகையின்றி வாழ்பவரிடமும் ஆக்கம் நீடிக்குமென்பர் ஆசிரியர்.

## பொருளடைவு

**நன்மை :**

நன்மையாவன இறைவனது நல்ல திருவடிகள் என்பதாம் (2). நன்மையாவன வீட்டுலகுக்குரிய நெறிகள் என்பதாம் (222). நன்மையும் தீமையும் முறையே ஆகூழ் போகூழ் என்னும் ஊழினல் ஆவனவாம் (375). நல்லார் எனப்படுவார் அறமும் குணமும் சான்ருண்மையும் உடையர் என்பதாம் (408). நன்மையாக வேண்டுவது மனம் என்பதாம் (457). நன்மையாக வேண்டுவது நாவின் நலமாகிய சொன்னலம் என்பதாம் (641).

புன்மைத் தன்மையடையும் பொழுது நலம் புன்னலம் எனப்படும், வரைவின் மகளிரது நலம் புன்னலமெனப்படும் (914). அறிவு புகழ் முதலாம் நலங்கள் ஒருவன் தன்னைப் பற்றியே யாகும் பொழுது தன்னலம் எனப்படும். வரைவின் மகளிரால் தன்னலமும் போய்விடும் (916). நல்லனவெல்லாம் அறமெனப்படும்; அவை சான்ரேர்க்குரிய கடன்களாம் (981). நன்ருவது ஒன்று நடுவு நிலையாகும் (111). நல்லவர் எனப்படுவார் எல்லா நலன்களுக்கு முரிய மகளிரு மாவார்; (1011) நன்மையாவது அழகு என்ற பொருளாம் (407). நன்மையும் தீமையும் (அறிஞரால்) ஒரு தன்மைய வாகக் கருதப்படவேண்டும் (379). நல்லவாவன கல்வியும் நூல்களும் ஆகும் (823). நன்மையாவது ஒழுக்கமாம் (138). நன்மையாவது எல்லா நன்மைகட்குமுரிய 'பொருள்' ஆகும் (171). வினைகளுள் அறத்தின் வழி ஈட்டப் பெறுவன நல் வினையாகும் (375). நன்மையாவன அறங்கள் என்பதாம் (38). நன்மையாவன உண்மைப் பொருள்கள் என்பதாம் (1046). நன்மை ஆண்மையின்கண் உண்டென்பதாம் (1026). நன்மையுடையவர்கள் குடியுயர்த்தும் நல்ல ஆண் மக்கள் என்பதாம் (1030). நன்மையாவது தலைவன் தலைவிக்குச் செய்யும் தண்ணளியாகும் (1322);

**நன்மையையாக்கல் :**

நலம், தீமைக்கண் நாணுடைமையால் ஆவதாகும் (960). நல்ல செயல்கள் மனையாளை யஞ்சுபவனல் செய்தற்கியலாத

வையாம் (905). நன்மை மறவியுடையாரிடத்திராதென்பதாம் (534). கடலினும் பெரிதாய நன்மை எதிர்ப்பயனைக் கருதாத உதவியினுலாகும் (103). பிறர்செய்த நன்மை யொன்ருயினும் அது எக்காலத்தும் எவ்வளவு தீமைக்கெதிரிலும் நினைக்கத் தக்கதாம் (109). புகழொடு வாழாதவர் (மனிதராய்ப்) பிறவா திருத்தல் நன்ருகும் (236). நன்மைகள் அறிவினுல் ஆக்கத் தக்கவையாம் (422). நன்மைகள் சூதாடுவாரிடத்தில் இல்லை யென்பதாம் (932). நன்மையாவது மனையாளது குணநல மாட்சியாம் (60).

**நன்மையும் பொறையும்:**

தம்மை அவமதிப்பாரைப் பொறுத்தல் தலையாய அறமாகும், அது தன்னை அகழ்வாரையும் தாங்கும் நிலத்திற் கொப்பதாம் (151). பிறர் செய்த மிகையைப் பொறுப்பதுடன் அதனை மனத்துட் கொள்ளாது உடனே மறந்துவிடுதல் நன்ருகும் (152). அறிவின்மையால் பிழை செய்தவர்களைப் பொறுத்தல் வன்மையுள் வன்மையாகும் (153). கொடிய வற்றைப் பிறர் செய்யினும் அதனுல் அவர்க்குறுந் துன்பங் களுக்காக வருந்தி அவர்களுக்குத் தாமும் அறனல்லாத வற்றைச் செய்தல் ஆகாது (157). பிறர் செய்த தீமைகளைத் தமது பொறுமையான் வெல்லவேண்டும் (158).

**பொறையின் பயன்:**

பொறையுடைமை ஒருவனிடமிருந்து சால்புடைமையை நீங்காமற் காக்கும் (154). பொறுத்தவர் சான்ருேரால் பொன்போற் பரிவுடன் என்றும் நினைக்கப்படுவர் (155). பொறுமை ஒருவற்குலகம் அழியுமளவும் புகழையுண்டாக்கும் (156). பிறர் இன்னுச் சொற்களைப் பொறுப்பவர் துறந்தார் போலத் தூய்மையுடையராவர் (159). பிறர் இன்னுச் சொற்களைப் பொறுத்தல் உண்ணுமல் நோற்கும் தவசிகளின் பொறுமையினும் சிறந்ததாகும் (160).

**ஆக்கம்:**

உயிர்க்குத் தலைசிறந்த ஆக்கமாவது அறமேயாம் (31). மன்னுயிர்க்காக்கமாவது மனநலமேயாம் (457). ஆக்கம் சொல்லின்கட் சோர்வின்மையால் உண்டாவதாம் (642).

உயிர்க்குச் சிறந்த ஆக்கமாவது அடக்கமாகும் (*122*). ஆக்கம் அழுக்காறுடையானிடம் இராதென்பதாம் (*135*). கிளைத்தலறுத ஆக்கம் ஒருவற்கு விருப்பம் நீங்காத சுற்றத்திஞல் உண்டாவதாம் (*522*). ஆக்கம் ஊக்கமுடையானிடத்திலிருந்து என்றும் நீங்குதலில்லை (*593*). ஆக்கம் ஒருவற்குத் துணைநலத்திஞல் உண்டாவதாம் (*651*). ஆக்கம் பழியுடன் கூடிவருமாயின் அது மிகவும் தீயதாம் (*657*). ஆக்கம் மாறுபாட்டிற்குச் சாய்ந்தொழுகுதலால் ஒருவற் குண்டாகும் (*858*). ஆக்கம் மனையாளை விரும்பி அவள்வழி ஒழுகுவானிடம் விளக்கமுருமல் நாணத்தையே தருவதாம் (*902*). ஆக்கம் சுற்றத்தார்க்கு மறையாமல் காக்கைகளைப் போலப் பகுத்துண்போர்க்கே யுண்டாகும் (*527*). அஃது ஒருவற்கு அவரது மனவூக்கத்தினளவினதாகும் (*595*). மதமும் வெகுளியும் காமமும் இல்லாதவரதாக்கம் மேம்பாடுடையதாம் (*431*). ஆக்கம் முன்னூழ்வினையின்படியே உண்டாவதாகும், ஆக்கமுள்ள காலத்தும் நடுவுநிலை குன்றுதிருத்தலே மிக்க சிறப்புடையதாம் (*115*).

# 25. பகை

அரசியலில் பகையிருந்தே தீரும், அங்குப் பகையை ஒரு காலத்தில் விரும்பவும் வேண்டி வரலாம். ஆனல் சமூகத்தில், பொதுவாக மக்கள் கூட்டத்தில் பகை வேண்டப்படாததாகும். பகு (பிரி) என்பதன் அடியாகப் பகையென்ற சொல் தோன்றி யிருக்கலாம். அன்பு மக்களை இணைப்பதானல் பகை அவர்களைப் பிரிப்பதாகின்றது. எனவே அன்பினலாகும் எல்லா நன்மைகளையும் அழித்துவிடுவது பகை. பகையென்னும் பண்பிலதனை என்கிருர் ஆசிரியர். மக்கட் பண்பிற்கே எதிரானது பகை. அதனை விளையாட்டிற்காகவும் வேண்டலாகாது என்பது வள்ளுவம். உட்பகை, வெளிப்பகை எனப் பகை இரண்டு வகையினதாகும். வெளிப்பகையை யறிந்து காத்துக் கொள்ளலாம், உட்பகை அவ்வாறன்று. எவ்வகையிலும் பகையை (இகலை) மனத்துள் வளராமல் காப்பதே மனிதக்காப்பு. பகைவர்க்கும் அன்பு செலுத்துதலினல் அஃதாகக்கூடும். கொன்றன்ன இன்ன செயினும் அவர் செய்த ஒன்று நன்றுள்ளக் கெடும் என்னும் குறளை நினைக்கவேண்டும். பகையினல் ஒருவன் பஞ்சமாபாதகங்களுக்கும் உள்ளாகக்கூடும்.

இகலின்மை என்றும் நிலைத்த புகழையும், இகல் பெருங் கேட்டையும் வறுமையையும் விளைவிக்கும். அறிவுடையார்க்கு இகல் எதிரானதாம்.

எளியாருடன் பகை அரசரால் கொள்ளத்தக்கது. படை, அரண்பொருள் முதலியவற்றல் அஃதழிக்கத்தக்கது.

நட்பும் சுற்றமும் உள்ளவனுக்குப் பகையில்லை, அச்சம், வெகுளி, அழுக்காறு சோம்பல், நீதிநூல் ஓதாமை, குணமின்மை முதலியவுடையவன் பகைக்கெளியனவான். பகை எச்சமாக விட்டுவைத்தலாகாது. முற்ற எண்ணமலும் பகைமேற் செல்லலாகாது. ஆற்றலுடையோருடன் பகையாகாது. பகைவருடன் நட்பாகவோ, நட்புப்போலவோ பழகி அதனல் வரும் அழிவினைத்தடுத்துக் கொள்ளவேண்டும்.

பகைத்திறந்தெரிதலில் ஆசிரியர் பகையை வெல்லுந் திறங்களையெல்லாம் கூறுகிறார். தனியே யிருந்துகொண்டு பலரோடு கொள்ளும் பகை அஞ்சத்தக்கது. உற்றாரிடமேயுள்ள பகை உட்பகையாகும். அது குடியையே கெடுத்துவிடும்; எள் பிளவன்னதாயினும் அதனால் அரம்பொருதபொன் போலத் தன்னாற்றல் அழிந்துவிடும்.

## பொருளடைவு

### இகல் – மாறுபாடு :

இகலாவது பிறவுயிர்களோடு கூடாமை யென்னும் நோயை வளர்ப்பதாகும் (851). பிறர் தமக்கு வெறுப்பன செய்யினும் அவரோடு மாறுபாடு கருதித் தீமை செய்தல் ஆகாது (852). இகலில்லாமை ஒருவற் கெஞ்ஞான்றும் உளதாதற்குரிய புகழைத் தரும் (853). இகலென்பது துன்பத்துட்டுன்பமாகும், அது கெடின் இன்பத்துள் மிக்க இன்பமாகும் (854). மாறுபாட்டினை மேற்கொள்ளா தொழுகுபவர் யாவராலும் வெல்லுதற்கரியராவர் (855). இகலின் மிகுதல் ஒருவற்கு வறுமையையும் கேட்டினையும் உண்டாக்கும் (856). இகல் இன்னாத அறிவுடையார தியல்பாகும், அவர் வெற்றியுடைய நீதிப்பொருளை அறிய மாட்டார் (857). இகல் கேட்டிற்கும் இகலின்மை ஆக்கத்திற்கும் உரிய அடையாளங்களாம் (859). கேடுகள் எல்லாவற்றையும் இகல் உண்டாக்கும் (860). இகல் என்பது அரசர்க்குரியதோர் இயல்பாகக் கருதப்படும் (691). அது வெல்லப்படுவதற்குரியதோர் இயல்பாகும்; அவைக் கஞ்சாதவர் இகலின்கண் வெல்லப்படுதற்கரியராவர் (647).

### பகைமாட்சி :

தம்மின் வலியாரிடம் பகையாகாது, மெலியார்மேல் பகை விரும்பத்தக்கதாம் (861). சுற்றத்திடம் அன்பும் வலிய துணையும் தன்வலிமையும் இல்லாதவன் பகையால் வெல்லப்படுவான் (862). அஞ்சுபவனும் அறியாதவனும் பிறரோடு பொருந்தாதவனும் ஈயாதவனும் பகைக் கெளியனாவான் (863). வெகுளி நீங்காதவனும் நிறை யில்லாதவனும் எக்காலத்தும் எவ்விடத்தும் பகைக்கு

எளியனுவான் (864). நீதிநூல் ஓதாதவனும் விதித்தன வற்றைச் செய்யாதவனும், பழியைப் பாராதவனும் பகை வர்க்கு எளியவனுவான் (865). வெகுளியும் மிக்க காமமும் உடையவனது பகைவிரும்பத்தக்கதாம் (866). வினையைத் தொடங்கிய பின் ஏலாதன செய்வானது பகை சிலபொருள் கொடுத்தாயினும் கொள்ளத்தக்கதாகும் (867). குண மொன்றும் இல்லாதவனுப் பல குற்றமும் உடையவன் பகைவர்க்கு எளியனுவான் (868). அறிவில்லாது அஞ்சு வோரது பகை பகைவர்க்கு உயர்ந்த இன்பங்களைத்தரும் (869). நீதிநூல் கல்லாதவரோடு கொள்ளும் (எளிதாக வெல்லத்தக்க) பகை அழியாப் புகழைத்தருவதாம் (870). பகை பிறன் இல்லாளை விழைவானிடம் நீங்காததாம் (146). தீவினையும் பகையெனப்படும் அது எஞ்ஞான்றும் அழியாது தொடர்ந்து கெடுக்கும் (207). நகுதலையும் மகிழ்தலையும் கெடுக்கும் வெகுளியும் பகையெனக் கருதப்படும் (304). குற்றங்களும் ஒருவற்கு இறுதியைத்தரும் பகையாகும் (434). பலரோடு கொள்ளும் பகை தீமை யுடையதாம் (450). முற்ற எண்ணுமல் பிறர்மேற் செல்லுதல் பகை வளர்தற்குரிய நெறியாகும் (465). பகை எச்சமாக விடப்பட்டு வைத்தால், தீப்பொறிபோல ஒருகாலத்தில் பெரிதாகியழிக்கும் (674). ஒருவன் நெஞ்சத்துள்ள பகை அவனது கண்ணின் வழியே வெளிப்படும் (709). பகை உலகில் பலரை அஞ்சாமற்சென்று சாவுமாறு செய்வ தாகும் (723). பகை வாள் முதலிய படைகளால் அழிக்கப் படுவதாகும், ஆண்மையுடையவர்களாலேயே அஃதியலும் (727). பகைவருவதற்கு முன்பே அரண்செய்யத்தக்கதாம் (569). ஒறுக்கும் பகை ஒரு நல்ல நாட்டில் இருத்த லாகாததாம் (734). பகை அரணுள்ளவிடத்தே தன்னூக் கத்தையிழந்துவிடுவதாம் (744). பெரிய வீரர்களை எதிர்த்துக் கொண்ட வலியற்ற பலரது பகையும் நொடியில் அழிந்துவிடும் (763). பகைவர் நட்பாகுங்காலம்வரின், அவருடன் முகத்தால் நட்பினைச் செய்து அகத்தாலதனை நீங்கவேண்டும் (830). பகைவர் அண்டிவாழத்தக்கவரல்லர்; அப்பகை அடைந்தவரைத் தீமைக்குள்ளாக்கியே தீரும் (967). பகைமை என்றும் விட்டுவைக்கத்தகாததாம், விரைந்து நட்பாக்கிக் கூட்டிக் கொள்ளத்தக்கதாம் (679).

பகைமைச் சொற்கள் நட்புடையனபோல இனிதாகத் தோன்றலாம், ஆனால் அவை விரைந்துணரப்படத் தக்கனவாம் (826). பகை அருகிலேயே இருப்பது என்றேனும் தீமை பயந்தே தீரும் (639). போரில் பகை எதிர்த்து நின்று போரிட்டு வெல்லத்தக்கதாம் (771). பகைவர் அவரினுமிக்க வலிமையுடையார்க்கே அஞ்சுவர் (1088). பகை, சோம்பலையுடைய எதிரியைத் தனக்கு அடிமையாக்கிக் கொள்ளும் (608). பகைவர்விடும் கண்ணீர் இரக்கத்தினல் வந்து நன்மைசெய்வதன்று, அது தீமை குறிப்பதேயாம் (828). துன்பத்தை யெல்லாம் யின்பமாகக் கொள்பவனைப் பகைவரும் விரும்பிச் சிறப்புச் செய்வர் (630). பகை, தவத்தினுல் வெல்லப்படுவதாகும் (264). அழுக்காறு பெரும் பகைகளுள் ஒன்றென்பதாம் (165). பகைமை எதிரியினது பொருளையெல்லாம் வென்று தன்னதாக்கிக் கொள்ளும் (756). விரும்பியதைப் பிறரறியாமல் நடத்தும்போது பகைவரது திட்டங்களெல்லாம் தோல்வியுற்றுவிடும் (440). பிரிந்திருக்கும் காதலர்க்கு மாலைப்பொழுது ஒரு பகையாகக் கருதப்படும் (1224). பகை, பொருளென்னும் கூரியபடையால் அழிக்கப்படுவதாம் (759). பேதையர் நட்பினும் அறிவுடையார் பகைமை அவ்வளவு அஞ்சத்தக்கதன்று, தீமை தராதது (816).

**பகைத்திறம் :**

பகை பண்பற்றதாகும் அது விளையாட்டிற்காயினும் விரும்பத்தக்கது அன்ரும் (871). வில்லினையுடைய அரசரின் பகையினும் சொல்லினையுடைய அமைச்சர் (புலவர்) பகை மிகவும் கொடியதாம் (872). தனியே யிருந்துகொண்டு பலரோடும் கொள்ளும் பகை ஆகாததாம் (873). பகைவரையும் நட்பினராகக் கொள்ளுதல் உலகையே தன்கீழ்த் தங்கச் செய்யும் (874). துணையில்லாதவனுக்கும் பகை இரண்டிருக்குமாயின் அவற்றுள் ஒன்று துணையாகக் கொள்ளத்தக்கதாம் (875). தனக்குத் தாழ்வு வந்த காலத்தில் பகை கூட்டாமலும் நீக்காமலும் இடையே விட்டுவைக்கத் தக்கதாம் (876). பகைவரிடத்துத் தனது துன்பத்தையும் வலிவின்மையையும் ஒருவன் கூறலாகாது (877). பகைவரது களிப்பு, வினைசெய் வகையறிந்து தன்னைக்காத்தலால் கெடும்

(878). பகை, முதலிலேயே களையத்தக்கதாம், இன்றேல் அது முற்றித் தன்னையழித்துவிடும் (879). பகைவரது தலைமை யழிக்கப்படாவிட்டால் ஒருவர் அழிவிற்குள்ளாவர் (880).

**உட்பகை :**

தமரிடத்துட்பகை தோன்றினல் அது கெடுக்கும் தன்மை யுடைய நிழல்கீழ் நீர்போலக் கெடுக்கும் (881). உட்பகைவர் உற்றார் போன்றருகிருந்து அழிக்கும் பகைவராவர் (882). உட்பகை குயவனது மண்ணையறுக்குங் கருவிபோலத் தன்னையறுத்துவிடும் (883). உட்பகை அகம் திருந்தாத நிலையதாகும், அது சுற்றத்தையெல்லாம் தன்வயமாகாமற் கெடுத்துவிடும் (884). உறவு முறையாரிடமுள்ள உட்பகை ஒருவனுக்கு இறத்தலுக்குரிய குற்றங்களைத்தரும் (885). தனக்குள்ளாயினர் மாட்டே தோன்றும் பகை தன்னை யழிக்காமல் விடாது (886). உட்பகையுடையார் வெளியில் கூடியது போற்றேன்றினும் அகத்துத்தம்முள் கூடுதலில்லை (887). உட்பகையுள்ள குடி அரத்தால் தேய்ந்த பொன் போலச் சிறிது சிறிதாகத் தேய்ந்துவிடும் (888). உட்பகை எட்பிளவனைய சிறியதாயினும் கேட்டினைத் தந்தேவிடும் (889). உட்பகையுடையாருடன் கூடி வாழ்தல் ஒரு குடிலில் பாம்போடு உறைதல்போல என்றுவது கேட்டிற்கு உள்ளாகிவிடும் (890).

# 26. படை

அரசரின் அங்கங்களுள் ஒன்று. படை குடியென முதலி லேயே இதனை வைக்கிறார் ஆசிரியர். அரசற்குமட்டுமன்றி நாட்டுக்காப்பிற்கும் படை முதன்மையானது. நாட்டுக்காப்பு மிகமிக இன்றியமையாதது. வேலன்றி வென்றிதருவது – கோல் எனப் பன்னெடுங் காலமாக அறிஞர் கூறிவந்தாலும் இன்னும் படைதான் நாட்டிற்கு முதன்மையாகவிருக்கிறது. இன்றும் படைமாட்சியாலேயே நடைபெறும் நாடுகள் உலகில் பலவாகி வருகின்றன. படையென்பது யானை குதிரை என்ற நான்கையும் வேல் வாள் முதலியவற்றையும் குறிக்கும். "வேலன்றியெனப் – படைக்கலங்களையும் அறிஞர் பாராட்டிப் பேசுகின்றனர்.[31] காவியங்களில் வச்சிரம், வேல் முதலிய படைகளுக்குத் தனிக் கோயில்கள் இருந்தமை பேசப்படுகின்றது. அரண் என்றே தனி அதிகாரம் நாட்டை அடுத்துக் குறளில் பேசப்படுகின்றது. படைகளை எல்லாம் தான் காத்தலாலும் ஒருதனிப்படை போன்றே போரில் பகைவர்களை முறியடித்தலாலும் அரணும் படை போன்றதாகும்.

அஞ்சாமை படைகளின் முதற்குணமாகும். கூற்றுடன்று மேல்வரினும் அஃதஞ்சாது. வீரமும் மானமும் வழிவழியாகப் போரிட்டுவரும் திறனும் படைகளுக்குரிய பண்புகள். படைகட்கு வறுமையென்பது இருத்தலாகாது. தலைமையும் தலைமை யுடைய வீரரும் அதன் வெற்றிக்கின்றியமையாதன.

உண்மைவீரர் அரசனதும் பகைவரதுமாகிய பாராட்டுக்களைப் பெறுவர். பகைவர்க்கு கேடு வந்தபோது இரங்கும் ஊராண்மையும் வீரத்தின் பகுதியாம். புகழை விரும்பி முகத்திலும் மார்பிலும் படும் புண்களை நாளும் விரும்புதலே வீரர்தம் பண்பு. அரண் ஆறங்கங்களுள் ஒன்று. கண்டவளவில் பகைவர் தோற்றோடச் செய்வதாம். எத்தனை அரண் இருப்பினும் அச்சமுடையார்க்குக் காப்பில்லை.

படைக்கு எண்ணிக்கை மிகுதியும் வேண்டும். எனினும் சிறிதாய வழியும் ஆண்மைகுன்றுதலாகாது. தோற்றப் பொலிவும் படைக்கின்றியமையாத இயல்பாம். உயிருக்கஞ்சாமல் களிறு முதலிய பெரும் படைகளை வெல்வதே மறவர்தம் மாண்பாகும்.

அன்றைய அரணின் பல இயல்புகள் இக்காலப் பேரரண்களுக்கும் பொருந்துவனவாம். மக்கள் உடலைக் காப்பது அறிவு என்னும் அரண் என ஒரு குறிப்பைத் தருகிறார் ஆசிரியர்.

**பொருளடைவு**

**படை :**

படை அரசர்க்குரிய ஆறங்கங்களுள் முதலாவதாம் (381) காலாள் முதலிய நால்வகைப் படையினர்க்கும் கருவியாவன வேல் முதலிய படைகளாம் (253). நான்குறுப்பானும் நிறைந்து போரில் ஊறுபடுதற்கஞ்சாது வெல்லும் படை அரச செல்வத்துளெல்லாம் தலையாயதாம் (761). கூற்றுவனே வெகுண்டு மேல்வரினும் அரசனிடத்தன்பினால் மனமொத்து எதிர்நிற்கும் ஆற்றலுடையதே படையாம் (765). தறுகண்மை, மானம், முன்னோர் வழியில் செல்லுதல் அரசனது தெளிவு ஆய நான்கினையுமுடையது படையாகும் (766). மாற்றாரது போரை விலக்கும் வகுப்புக்களுடன் எதிரியின் தூசிப்படையைத் தடுத்துச் செல்வதே படையாகும் (767). வெறுப்பும் அளவிற்றேய்தலும் வறுமையுமில்லையானால் படை வெல்லக்கூடிய வலிமைபெறும் (769). தறுகண்மையும் போரிடுமாற்றலும் இல்லாவிடினும் படை தோற்றப் பொலிவுடையதாக இருக்கவேண்டும் (768). சிறிதாயவழியும் ஊறஞ்சாது தாங்கும்வன்கண்மை வழி வழியாக வரும்படைக்கல்லதில்லை (762). போரில் கெடாததாய்க் கீழறுக்கப்படாததாய்த் தொன்றுதொட்டு வருவதே படையாகும் (764). பல எலிகள் சேர்ந்து ஆர்த்தபோதும் ஒரு நாகத்தின் முன் அஞ்சியோடுதல் போலப் படையில் ஒரு தலைவன், எதிரியின் பல மறவர்கட்கு அச்சமாவான் (763).

வீரர் பலரையுடையதாயினும் படை தலைவர்களைப் பெறுவிடின் பயனில்லாததாய்விடும் (770). அரசர்க்குள்ள பகையை அழித்தற்குதவுவது படையேயாகும் (985). படைகள் (ஆயுதங்கள்) எதிரிகளைக் கொல்லவல்லனவாகும் (1228). பகைவரின் ஆண்மை முதலிய குணங்களையும் அழிக்கவல்லது படையாம் (1258) படை, எதிரி சிறிய படையுடையனுயினும் அவர்க்கியலும் இடத்தேசென்ருல் தன்வன்மையை இழந்து விடும் (498). போர்க்களத்தில் பகைவரும் அஞ்சும் தறுகண்மையுடையவராக வீரர் இருத்தல் வேண்டும் (1008).

**படை வீரம் :**

வீரத்துடன் போரிட்டு மாண்ட வீரர்கள் கல்நாட்டப் பெறுவர். சிறந்த வீரத் தலைவனை எதிர்த்து மாய்தலும் விரும்பத்தக்கதாகக் கருதப்பட்டது (771). அஞ்சித் தோற்றோடும் மறவரை எதிர்த்து வெல்லுதலினும் அஞ்சாதெதிர் நிற்கும் வீரத் தலைவனை எதிர்த்துத் தோற்றல் நன்றென்பதாம் (772). கண்ணோடாத மறமே ஆண்மையாகும், அவ்வாண்மையின் கூர்மை பகைவர்க்குக் கேடு வந்துற்றபோது அவரைக் கொல்லாது அவர்க்குபகாரம் செய்தலாம் (773). சிறந்த வீரர் களிறு முதலியவற்றை யெய்தலிலேயே பெருமைகொள்வர். அவர் வென்றபோதும் மேலும் மேலும் போர்மேல் விருப்பினராவார் (774). இமையாத கண்கள் அஞ்சாமைக்கோர் அடையாளமாகும், பகைவன் விட்ட வேலுக்கெதிரே இமைத்தலும் வீரர்க்குத் தோல்வியாகக் கருதப்படும் (775). முகத்திலும் மார்பிலும் வீரர் படும் புண் விழுப்புண் ஆகும்; அதனை நாளும் ஏற்றற்கு அதாவது நாளும் போர்செய்துகொண்டிருத்தற்கு வீரர் விரும்புவர் (776). உலகில் சூழ்ந்துநிற்கும் புகழை விரும்புதலும், அதற்காக உயிரைக் கொடுத்தலுமே வீரர்தம் இயல்பாம் (777). வீரர் போர்பெறின் அதற்காக மகிழ்ந்து கொண்டாடுவரன்றி உயிருக்காக அஞ்சமாட்டார், தம்மரசன் தடுப்பினும் அவர் வீரம் குன்றுதலில்லை (778). செய்த வஞ்சினம் தப்பாது சென்று போரிடலும் இறத்தலுமே வீரர்கடனன்றி வெற்றிபெறவேண்டுமென்பதில்லை, அவர் வெற்றியுருவிடினும் வென்ருரே யாவர் என்பதாம் (779).

தமக்குச் செய்த நன்றிகளை நினைத்துத் தம்மரசர் கண்ணீர் விடுமாறு வீரர் சாதலாகிய சாக்காடு இரந்தும் கொள்ளத் தக்கதாம் (780).

**படையும் அரணும்**

போர்மேற் செல்பவர்க்கும் பிறர்வந்து சூழ்ந்தபோது தற்காத்துக் கொள்பவர்க்கும் பொருள் முதலியவற்றைக் காத்துக்கொள்வதற்கும் அரண் உதவுவதாம் (741). அரண், நீர், வெறுநிலம், மலை, காடு, ஆகிய நான்கினையும் உடையதாம் (742). ஏணி முதலியவெய்தாத உயரமும், அகழலாகாத அடியகலமும், கல்லிட்டிகளாற் செய்த திண்மையும் அணுகுதற்கரிய பொறிகளையுமுடைய அழகுமுடையது அரணம் (743). காக்க வேண்டுமிடம் சிறிதாய் அகன்ற விடத்தையுடையதாய்ப் பகைவர் ஆக்கத்தைக் கெடுப்பதாம் (744). புறத்தாரால் கொள்ளுதற்கரியதாகிப் பலவகை உணவுகளையுமுடையதாகி அகத்திருப்போர் போர்செய்தற் கெளிய நிலையையுடையது அரண் (745). புறத்தோரால் அழிவுற்றவழி உதவிக்காக்கும் வீரர்களையுடையதாம் (746). நெருங்கிச் சூழ்ந்தும் நெகிழ்ந்தபோது ஒருமுகமாகப் பொருதும் அகத்தோரைக் கீழறுப்பித்தும் பகைவரால் பற்றற்கரியது அரணம் (747). புறத்துச்சூழ்ந்த பகைவரை உள்ளிருப்பவர் தாம்பற்றிய இடத்தைவிடாமல் நின்று வெல்லுதலே அரணம் (748). போர் தொடங்கிய அளவிலே பகைவர் கெடுமாறு அகத்தோர் செய்யும் வினைவேறுபாடுகளான் சிறந்து நிற்பது அரணம் (749). எல்லா மாட்சியுமுடையதாயினும் வினைசெய்யுமாட்சியுடையோரைப் பெறாத அரண் பயனற்றதாம் (750). அரணும் அரசனது ஆறங்கங்களுள் ஒன்றாகும் (381). அரண் மெலியவர்க்கு மட்டுமின்றி மாறுபாடுடன் கூடிய வலிமையுடையவர்க்கும் ஆக்கந்தரும் (492). அரண் அச்சமுடையவர்க்குப் பயனளித்தலில்லை (534). அரண் எதிரிகளால் அழித்தற்குரிய பொருள்களுள் ஒன்றாகக் கருதப்படும், அறிவு மக்கட்குரிய அரண் எனப்படும் (421). பொருள்களைக் காக்கும் வேலிகளாகிய காப்பு முதலியன அரண் எனத்தக்கவாம் (57).

# 27. பண்பு

பண்புடைமை முதலிய அதிகாரங்களில் ஆசிரியர் பண்பினைப் பற்றிப் பேசுகிருர். பண்படுத்துதல் என்பதிலிருந்து பண்பு என்பது வந்திருக்கவேண்டும். உள்ளத்தையும் பழக்க வழக்கங்களையும் (ஒழுக்கம்) பண்படுத்துதல் என்ருகும். பண்பாடு, நாகரிகம் என்பனவெல்லாம் ஒன்றேயாகலாம். பண்பாட்டிலிருந்து அல்லது பண்பாடே, நாகரிகமாகிறதென்னலாம். ஒரு நாட்டின் நாகரிக மென்பததுவேயாக வேண்டும். தமிழ் நாகரிகமும் இந்திய நாகரிகமும் மனத்தைப் பற்றியவென்பர். மேலைநாகரிகங்கள் பெரிதும் உடலையும் புறவளர்ச்சிகளையும் பற்றியவென சாதாரணமாகக் கூறுவர். அவற்றுட்பலவும் உள்ள வளர்ச்சியை அதாவது ஆன்மீக (உயிரியல்) வளர்ச்சியைக் குறியாகக் கொண்டுள்ளன.

குறளதிகாரங்களுள் நடுவுநிலைமையும் அடக்கமுடைமையும் இத்தலைப்பில் இணைத்து ஆராயப் பெறுகின்றன. அடக்கமென்பது ஐம்புலனடக்கமாகும். சொல் செயலடக்கங்களும் அதனில் அடங்கும். இதுவே நடுவு நிலைமையென்னலாம். இருள் சேர் இருவினைக்கும், பகைமைக்கும், நட்புக்கும் (வாணிபத்திலும் அரசியலிலும்) நடுவராகவிருத்தலே நடுவுநிலைமை, இவை தமிழ்ப் பண்பின் சிறப்பியல்புகளாம். பகையுள்ளும் பண்புள என ஆசிரியர் நடுவுநிலைமையை அழகாக வருணிக்கிருர். ஊண், உடை, கட்டிடக்கலை, இசை, ஓவியம் முதலிய கலைகள் அறிவியல் முதலியவற்றின் வளர்ச்சியையே உலகில் பெரிதும் நாகரிகம் எனக் கொண்டாடுகின்றனர். அவற்றுடன்[32] மனவியல் (ஒழுக்க) வளர்ச்சியையும் இணைத்துப் பண்பாகக் கொள்ள வேண்டுமென்பது தமிழ் வழக்காகும்.

பண்பென்பது, உலகில் எந்நாட்டனரிடத்தும் எவ்வினத்தினரிடத்தும் எளிதாகப் பழகும் தன்மையாகும். அன்புடைமை அதற்கோர் சிறந்த இயல்பாகும். உயர்குடிப் பிறந்தாரிடமும் சான்ருேரிடமும் இப்பண்பு இனிதாகக் காணப்படும். பண்பி

ஞற்றான் உலகம் நிலைத்துள்ளது, இல்லாவிடில் மண்ணோடு மண்ணாய்விடும். [83]செல்வத்திற்குரியது (Material culture) அறிவிற்குரியதெனப் (Spiritual culture) பண்பினை இருவகைப்படுத்துகிறார் ஆசிரியர். மலையனைய திண்ணிதாய்க் குணமென்னும் குன்றேறிய துறவிகளிடம் காண்பது பண்பாகும். பண்பு (ஒழுக்கம்) உயிரினும் சிறந்ததாகக்கருதப்படும். நண்பர் பண்புடையராக உலகம் பண்புடையதாகும். உலகத்தோடு ஒட்ட ஒழுகுதல் என்பதால் பண்பு அறிவுடைய வுலகத்துடன் பொருந்துவதாக வேண்டும். பலவிடங்களிலும் கூறியபடி பகைவரிடத்தும் அன்பாய் ஒழுகுதலால் உலகில் பண்பு நிலைக்கும். இறைவனுக்குரிய எண் குணங்களும் பண்பின் பிரிவுகளாம். சமயமும், பண்பும், இல் வாழ்க்கையும் அரசியலுமெல்லாம் பண்பு வளர்ச்சிக்குரிய நெறிகள். சூது பண்பினையழிக்கும் கருவியாகக் கருதப்படுவது. பஞ்சமா பாதகங்கள் பிறன்மனை நயத்தல், கயமை முதலிய பல செயல்களை ஆசிரியர் பண்பிற்கெதிராக வரிசைப் படுத்துகிறார்.

பண்பு அறத்திற்கும், நீதிக்கும் உரியதாய்ப் புகழை வளர்ப்பது. பொய்யாமை ஒரு சிறந்த பண்பாகும். திரிகரணங்களின் நேர்மையே நடுவுநிலைமையாம். அதனால் வறுமை நிறையினும் நடுவினின்றும் சான்றோர் தவறுவதில்லை.

அடக்கம் செல்வர்க்கே மற்றோர் செல்வம் தகைத்து. சொல் லடக்கம் அடக்கத்தினுள் சிறந்ததாகப்பேசப்படுகின்றது. வெகுளி யின்மை, தன் கோட்பாட்டிற்குள் தானேயடங்குதல் முதலியன அடக்கப் பண்புகளாம்.

வீட்டுநெறி கல்விநெறி வாழ்க்கைநெறியெனப் பலநெறிகள் பண்பினை வளர்க்கும் நெறிகளாக ஆசிரியர் ஆங்காங்கு எழுதிக் காட்டுகிறார்.

## பொருளடைவு

**பண்பு :**

பண்பென்பது நற்குடிக்குரியதோர் இயல்பாகும் (*955*). பண்புடைமையென்னும் நன்னெறி ஒருவற்கு யாவரிடத்தும் எளிய செவ்வியனாதலால் எய்தலாகும் (*991*). பண்புடைமை யென்பது, அன்புடைமையும் ஆன்ற குடிப்பிறத்தலுமாம்

(992). ஒருவனை நன்மக்களோடு ஒப்பாகச் செய்வது அறிவாகும். மற்ற உடலால் அவர்களுடன் ஒப்பாதல் ஒப்பாகாது (993). ஒருவனைப் பகைவனிடத்தும் பண்புள்ள வகை நடந்துகொள்ளச்செய்வதது (995). அது மக்கட் குரியதாகும், அறிவுக்குரிய பயனும் அதுவாகும் (997). அழுக்காறு என்னும் குற்றமில்லாத இயல்புதான் சிறந்த (பண்பு) ஒழுக்கநெறியெனப்படும் (161). செல்வத்தினு லாவது அறிவினாலாவது எனப்பண்பு இருவகைப்படும் (374). தீய சொற்களைத் தவறியும் சொல்லாமையே பண்புடமையாகும் (139). பகை, நொதுமல் நட்பு என்னும் மூவரிடத்தும் நடுவு நிலைகுன்றாது ஒழுகுதலே பண்பாகும் (111). பண்பென்பது மலைபோன்ற உயரமும், திண்மையும் பயனுமுடையதெனலாம். நீத்தாரெனப்படும் துறவிகள் அப்பண்பாகிய குன்றேறியவரெனப்படுவர் (29). பண்பாகிய குணநலனே சான்றோரது நலனாகும், அந்நலம் பிற எவ்வகை நலத்தினுள்ளும் இருப்பதொன்றன்று (982). விரும்பத்தக்க கண்ணோட்டமென்னும் பண்பாவது, நட்டார் நஞ்சிடக் கண்டும் அதனை மறுக்காமல் உண்ணுதலேயாம் (580).

**பண்பு வளர்ச்சி :**

ஒருவனுடன் நட்பு கொள்கையில், அவனது குணமும் (பண்பும்) குணமின்மையும் ஆராயப்பெறுதல் வேண்டும். பண்பு மிக்கதாயின் நட்பு கொள்ளவேண்டும் (504). அடைந்த நிலத்தினியல்பை, நீருறுவதுபோல் சேர்ந்த இனத்தினால் ஒருவற்குப் பண்பு அமையும் (452). வினை செய்கையில் ஒருவற்கு, நூலறிவு இருப்பினும் உலகத்துப் பண்பு அறியப்படவேண்டும் (637). ஒழுக்கம் (பண்பு) சிறப்பினைத் தருதலால், அது உயிரினும் போற்றிப் பாது காக்கப்படும் (131). அஃது எல்லா அறங்களிலும் சிறந்த துணையாகலின் பண்பு அழியாமல் போற்றி வருந்தியும் காக்கப்படவேண்டும் (132). உலகத்தோடு ஒட்ட ஒழுகும் பண்பே பலநூல்களையும் கற்கும் கல்வியின் பயனாம் (140). பொறையுடமையால், நிறையுடமையாகிய பண்பு நீங்காமல் நிற்பதாம் (154). பண்பென்பது ஒருவன்றனது சோம்பலை மடித்தொழுகுதலாம் (974). நன்மை செய்வதிலும் செய்யப் படுவாரது பண்பறியப்படவேண்டும், இன்றேலதிற்குற்ற

முண்டாம் (469). எல்லாரோடும் கலந்து மகிழ்தலே பண்பெனப்படுவது (999). பண்பு சூதாடுதலினல் அழிவ தாகும் (937). பண்பின்மை பகைவரால் ஒருவனை எளிதாக அழிக்கச்செய்துவிடும் (865). பிறருடன் கூடாமையென்பது பண்பின்மையாகும்; அப்பண்பின்மை இகலால் வளர்வதாகும் (851). நண்பரிடத்திருக்கும் பண்பின்மை வளர்தலைவிடக் குன்றுதலே இனியதாம் (811). நட்பினரிடத்திருக்கும் பண்பு நட்பு வளரவளர படிக்குந்தோறும் நூனயம்போல இனிமைபயக்கும் (783). உரிமை நட்பினரிடம் பண்பிலாதன செய்யப்படுமாயின் அவை கேட்டினைத் தரும் (700). தம்மின் மிக்க அறிவுடையாரது நட்பு பண்பினை வலியுடையதாக்கும் (444).

**பண்பின் பிரிவுகள் :**

தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், பாசங்களினீங்குதல், பேரருள், முடிவிலாற்றல், வரம்பிலின்பம் ஆகிய எண் குணங்களும் இறைவனின் பண்பாகும் (9). ஒள்ளிய கண்களை உடைய தலைவியது பண்பு தலைவனல் மறக்கப் படாததாம் (1125). அதற்குரிய பண்புடன் இல்வாழ்க்கை வாழ்தலென்பது தவத்தினும் சிறந்தது ஆகும் (47). வேந்தற்குரிய பண்பு, திண்மை, கொடை, அறிவு ஊக்கமென்னும் நான்கியல்புகளையுமுடையதாகும் (382). துறந்தவர்கள் பண்பின்கண் நிற்பவராவார் (21). அரசரைச் சேர்ந்தொழுகுவோர், மிக அகலாமலும் மிகவணுகாமலும் பழகும் பண்புடையராகவிருத்தல் வேண்டும் (694). அரசரருகிற் பழகுவோர் பிறர்செவியிற் சொல்லுதலையும் சேர்ந்து நகுதலையும் தவிர்க்கும் பண்புடையராக வேண்டும் (694). இல்வாழ்க்கைக்குரிய பண்பு ஒருவன் மனைவி முதலியோருடன் அன்புடையனாதலாகும் (45). இறைவனது குற்றமற்ற ஒழுக்கநெறி பண்புடைய நெறியெனப்படும் (6). பண்பு சொல்லின்கண்ணும் இருப்பதாகும், இனிமையும் பொருளால் நன்மையுமுடையன பண்புடைய சொற்களாம் (97). பண்பு, பழிப்பில்லாத மக்களிடத்தில் அமைவதாகும் (62). வேந்தனது பண்பு செவி பொறுக்கும்படி இடித்துரைக்கும் பெரியோர் இடித்துரைப்பனவற்றைப்

பொறுத்துக்கொள்வது (389). தூதுவரின் பண்பு நீதிநூலை யறிந்து அமைச்சரிடைத்தான் அவரினும் அந்நூலில் வல்லவனுதலாகும் (683). தூதுவரது பண்பு அன்புடைமையும் அரசர் விழையும் இயல்புகளையுடைமையுமாம் (681). வரைவின் மகளிர் பண்பில்லாதவராவர், பயனை நோக்கிப் பண்பை யுணர்த்தல் அவரதியல்பாகும் (912).

## பண்பழிவு :

பண்பு சூதினல் அழிக்கப்படும் (937). பண்பென்பது பகையென்னும் இயல்பினல் அழிக்கப்படும் (851). கூடாவொழுக்கமுடைய துறவிகளிடத்தில் பண்பு அழிந்துபோகும் (275). அவரதினத்திற்குரிய பண்பு அந்தணரது ஒழுக்கங் கெடவே கெட்டுவிடும் (134). பிறன் மனையாளை நினைத்தல் சிறந்த பண்பினை யழித்துவிடும் (148). களவில் மிக்க ஆசையுடைமை நீதிநெறிக்குரிய பண்பினை நீக்கிவிடும் (286). உயிர்க்கொலை செய்தல் பண்புடைமைக்கு மாருனது ஆகும் (326). பொய்ம்மை ஒருவனது பண்பைக் கெடுத்துவிடும் (294). கள்ளின்கண் ஆசையுடைமை பண்புடைமையாகாது (921). கல்லாததையும் கற்றதாகக் கொண்டொழுகுதல் பண்புடைமையாகாது (845). கீழ்மக்களது ஒழுக்கம் உண்டாயின் அஃது அச்சம் அல்ல தவாவிஞற்ருன் உண்டாகும் (1075). பண்புடையவர் பயனற்ற சொற்களைப் பேசுதலால் அவரது சீர் அழிதற்குரிய காரணமாய் அமைவர் (195). விரும்பியபடியெல்லாம் செய்யும் கயமைத் தன்மை பண்புடைமையை அழிக்கும் (1073). மனையாள் விரும்பியபடி செய்தொழுகுபவர் அறப்பண்பினை நீங்கியவர் ஆவார் (908). அரசன் குடிமக்கட்கு முறையல்லாதன செய்தல் பண்பற்றதாம் (551). அவா பண்பிற்கு மாருன இயல்பினை உடையதாம் (370).

## பண்பின் பயன்

இறைவனது பண்புநெறி ஒருவனை எக்காலத்தும் பிறப்பின்றி ஒருதன்மையனுய் வாழச் செய்யும் (6). பண்பு மேம்பாட்டையும் (புகழ்) பண்பின்மை பழியையும் எய்துவிக்கும் (137). பண்பு அறத்திற்கும் காரணமாகும் (138). பண்புடையார் சொற்கள் ஊன்றுகோல் போல் நின்றுதவும் (415). தக்காரினத்தனுய் ஒழுகும் பண்பு ஒருவனது

செல்வத்தின் பயனையளித்துவிடும் (446). சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகும் பண்பு ஒருவனது செல்வத்தின் பயனை யளித்துவிடும் (524). பொய்யாதொழுகும் பண்பு ஒருவனை உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் இருக்கும்படிச் செய்து விடும் (294). பகையையும் நட்பாகக் கொண்டொழுகும் பண்பு உலகினைத் தன்பெருமையுள்ளே தங்கச் செய்துவிடும் (874). பண்பினின்றும் நீங்காத சொல் நீதியினையும் அறத்தையும் தரும் (97). நீதியையும் அறத்தையும் விரும்புதலால் பயன்படுதலை யுடையாரது பண்பு உலகத்தாரால் கொண்டாடப்பெறும் (994). பண்பு உலகியலை நிலைக்கச் செய்வதாகும், இன்றேல் அது மண்ணிற்புகுந்து மறைந்துவிடும் (996). பண்பில்லாதவனது பெருஞ்செல்வம் நல்ல பால் ஏற்ற கலத்தின் குற்றத்தால் கெட்டாற்போலாகும் (100). பழமை நண்பினரிடம் பண்பினின்றும் நீக்காதவர் பகைவராலும் விரும்பப்படுவர் (810).

**நடுவுநிலையும் - பண்பும் :**

பகை. நட்பு, நொதுமல் மூவகையாரிடத்தும் முறைமையை விடாதொழகும் நடுவுநிலை என்றதோர் அறமே சிறந்தது (111). நடுவுநிலையுடையவர் நன் மக்களையுடைய ராவர், அப்பண்பற்றவர் அம்மக்களைப் பெறுதவர் (114). உள்ளத்தில் கோட்டமின்மையோடு கூடிய சொற்கோட்ட மின்மையே நடுவுநிலையாம் (119). நடுவுநிலையுடையானது செல்வம் அழியாமல் அவன் வழியினர்க்கு உதவும் (112). நடுவுநிலை தவறியதால் வரும் செல்வம் நன்மை தருவதாயினும் ஒழியவிடத்தக்கதாம் (113). கேடும் பெருக்கமும் உலகியல் பாதலின் மனத்தின்கண் கோடாமையே சான்ருண்மையும் அதற்கழகுமாம் (115). நடுவுதவறி அல்லாதவற்றைச் செய்தல் ஒருவன் கெடுவானென்பதற்கு அறிகுறியாகும் (116). நடுவு நிலையாளன் அறத்தின்கண் தங்குவான், அவனது வறுமை வறுமையாகக் கருதப்படமாட்டாது (117). தான் சமஞக நின்று பின் தன்னிடம் வைத்த பொருளை நிறுக்கும் துலாக்கோல் போல ஒருபக்கம் சாயாமையே நடுவுநிலையாம் (118). கொள்வது மிகையுங் கொடுப்பது குறைவுமாகாமல் பிறர் பொருளைத் தம் பொருள்போல்க் கருதிச் செய்தலே வாணிகமாம் (120).

**அடக்கப் பண்பு :**

பணிவு, செல்வமும் ஆக்கமும் உள்ள காலத்தே ஒருவர்க்கு வேண்டும் (*963*). பணிவு சான்றோர்க்குரியதோர் இயல்பு (*985*). அஃதொருவனது குலத்தை உயர்த்தும் (*960*). பணிவுடைமை ஒரு சிறந்த அணியாகும் (*95*). பணிவுடைய சொல் நுட்பமான கேள்வியினாலேயே யுண்டாகும் (*419*). இறைவன் தாள்களை வணங்குதல் பயனுடையதாகும் (*9*). சொல்லின்கண் பணிவு பகைவரிடத் தாயின் அது தீமை தருவதாகும் (*827*).

அடக்கமெனும் பண்பு ஒருவனைத் தேவருலகத்துய்க்கும், அடங்காமை நரகத்துய்க்கும் (*121*). அடக்கம் உறுதிப் பொருளாகக் கொண்டு காத்தற்குரியதாம், அதனினும் உயிர்க்காக்கம் வேறில்லை (*122*). அடக்கம் அறிவாவதென் றறிந்து ஏற்படுமானால் அது நல்லோரது நன்மதிப்பை யுண்டாக்கும் (*123*). இல்வாழ்க்கையிலிருந்து புலன்களை நுகர்ந்துகொண்டே அவற்றில் அடக்கம் கொள்ளுதல் மலை யுயர்ச்சியினும் மிகப் பெரிதாம் (*124*). ஒருபிறப்பில் ஒருவன் ஆமைபோல ஐம்பொறிகளை அடக்குதல் எழுபிறப் பிற்கும் ஏற்றத்தை நல்கும் (*126*). பெருமிதமின்றி அடங்குதல் என்பது எல்லோர்க்குமொப்ப நன்றாகும், அது செல்வர்க்காயின் வேறொரு செல்வமாம் (*125*). எதனையும் காவாவிடினும் நாவடக்கம் காக்கப்படவேண்டும், இன்றேல் சொல்லிழுக்கினால் வருத்தம் உண்டாகும் (*127*). நடுவுநிலை யுடையவர்கள் நன்மையும் பண்புமுடைய இன்சொற்களையே பேசுவர் (*97*). பயனற்ற சொற்களைப் பேசுதல் நீதி யின்மையாம் (*193*).

எல்லோருடனும் நகுதலாகிய நட்பு நடுவுநிலையென்னும் செல்வமாகும் (*860*). தீய சொற்களின் பயனால் பிறர்க்குத் துன்பம் ஒன்றாயினும் அது பல பிறவிகளிலும் அவனைக் கெடுத்துவிடும் (*128*). தீயினாற் சுட்டபுண் ஆறிவிடும், அடக்கமில்லாத நாவினால் சுட்டவடு என்றும் மாறாதாம் (*129*). வெகுளி தோன்றாமற் காக்கும் அடக்கமே அறத்தைத் தன்பால் இழுக்கும் வழியாகும் (*130*). தான் ஓதியுணர்ந்தும் உரைத்தும் வரும் கோட்பாடுகட்கு தான் அடங்காமை பேதமையாம் (*834*).

**பண்பு நெறி :**

மெய்வாய் முதலிய பொறிகளை வழியாகவுடைய ஐந்தவா வினையும் அறுத்த இறைவனது நெறியே மெய்யான ஒழுக்க நெறியென்பதாம் (67). மீண்டும் பிறவா நிலையையுடைய வீட்டு நெறியானது மெய்ப்பொருளை யுணர்ந்தவர்க்குரிய தாகும் (356) நெறியென்பது பொருளைப் போற்றி வழங்கு தலினும் உண்டென்பதாம் (477). அறம் என்பது ஒரு நெறி யாகும் (37). அறத்தாறு இல்வாழ்க்கைக்கும் உரிய நெறி யாகும் (46). நல்ல சமயங்களுள் ஒவ்வொன்றும்கூட ஒரு ஆறு என்று கூறப்படும் என்பதாம் (242). நெறி ஒழுக்கத் திற்கு உண்டென்பதாம், அஃதொழுக்க நெறியென்பதாம் (161). நெறி, வாழ்க்கைக்கு உண்டென்பது (932). கல்வி கற்பதில் ஒரு நெறியுண்டென்பதாம் (725). பண்பென்பது ஒரு நெறியெனப்படும் (991). பிறப்புண்டாதற்குரிய நெறி அறமென்னும் கல்லால் அடைக்கப்படும் என்பதாம் (38).

# 28. புகழ்

புகழ் என்பது பலராலும் பாராட்டப்படும் தன்மை. இம்மையுலகத்து இசை நிறுவுதலென்பது மனிதவாழ்வின் பயன், ஒரு செயற்கரும் செயல். செயற்பால தோரு மறனே ஒருவர்க் குயற் பாலதோரும் பழி என்றவிடத்து ஆசிரியர் மனித அறமே (மனிதப் பண்பே) புகழுக்குரியது என்கிருர். விலங்கினின்று முயர்ந்த மனிதன் விலங்குச் செயல்களைச் செய்கையில் பழியடைகிருன். மனிதச் செயல்களைச் செய்கையில் புகழடைகிருன். நத்தம்போற் கேடும் என்ற குறளில் மனிதன் புகழ்ச்செயல்களுக்காகத் தேய்கிருன், அழியவும் செய்கிருன் என்பதனைக் குறிப்பிடுகிருர். புகழுக்கு ஒளியென்றே பெயர். பழிக்கு இருள் என்று பெயர். ஒளியுடைய வாழ்க்கை வேண்டுபவன் புகழ்ச் செயல்களைச் செய்கிருன். இருள் வாழ்க்கைக்குப் பழிச்செயல்கள் உரியன.

மனிதச் செயல்கட்கெல்லாம் காரணம் அல்லது தூண்டுதல் செல்வமும் புகழும். போதிய செல்வமுற்ற பின் மனிதன் அறம், விறலின புகழ் ஆகியவற்றையே நாடுகிருன். [34] வீடும் வேண்டாரும் கூட இறைவனது பாராட்டுதலை ஒரு வகையில் விழைகின்றனர். இவ்வுலகில் அறஞ் செய்தோர் வலவனேவா வானவூர்தியிற் சென்று புத்தேளுலகப் பாராட்டுதலைப் பெறுகின்றனர். சான்றோர்க்கது பொய்ப்புகழாயினும் திருடனும் தன்னையே திருடர் பலர் புகழ்தலை விழைந்து நிற்கிருன்.

மனிதனுகத் தோன்றுவதானல் புகழொடு தோன்ற வேண்டும் எனத் 'தோன்றிற் புகழோடு தோன்றுக' என்ற குறளுக்குப் பரிமேலழகர் விளக்கமெழுதுகிருர்.

உலகச் செயல்களுக்செல்லாம் காரணம் செல்வம் என்பதனை விட்டுப் புகழ் என்பதாகுமாயின் உலகம் சிறந்து வளரும், வாழும். இறந்த பிறகும் இறவாநிலையை விழைவது மனிதனது ஆசை. அதனைத் தருவது புகழ். ஒருவன் இறந்ததும் அவன் செல்வம் பிறர்க்காகிவிடலாம், புகழோ அவன் பெயரைத் தொடர்ந்து விடாமல் நிற்பது.

மனிதன் காதவழியாவது புகழுடையவனுக வேண்டுமென்பது ஒரு தனிப்பாடல். சுழலும் இசையென்பது உலகமுற்றும் பரவிய புகழ்ப் பாடலாகவும் உரையாகவும் (பேச்சு – உரைநடை) வெளி வரும். ஈகை, மறம், செல்வம், கற்பு, அறம், பொறுமை, வாய்மை முதலிய குணங்களால் புகழ் வளரும். வறுமை, மறவி, இழி செயல்கள் ஆகியவற்ருல் புகழ் அழியும். நன்மக்களால் (குடி மக்களால்) புகழ் வளரும், புகழால் நாட்டில் விளைவோங்கும், மானமுடையவர் புகழுக்காக உயிரையும் கொடுப்பர். சான்ருேர் பாராட்டுவனவே புகழ்ச் செயல்கள்.

**பொருளடைவு**

**புகழ்த்தன்மை :**

புகழ் உலகத்தில் தனக்கிணையில்லாததாக ஓங்கி இறவாமல் நிற்பதாகும் (233). புகழ் நீண்ட புகழ் எனக் கூறப்படும், தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வருவது நீள்புகழ் ஆக வேண்டும் (234). புகழ் உலக முழுவதையும் சூழ்ந்ததாக வேண்டும் (777). அஃதொருவன் இறந்தபின்பும் இறவாமல் ஒழிபாக நின்று அவன் பெயரை விளக்குவதாகும் (238). அது நன்மையமைந்த சொற்களால் வெளிப்படுவதாகும் (56). இறைவன் முதலியோரது புகழ் மெய்ம்மை சேர்ந்ததெனப் பாராட்டப்பெறும் (5). புகழ் உலகமழியு மளவும் நிற்கக்கூடியதாகும் (156). புகழ் உரையும் பாட்டுமென இரண்டு வகைகளால் வெளிப்படுவதாகும் (232). மக்களாய்ப் பிறந்தால் புகழ்க்கேதுவாய குணங்களோடு பிறக்கவேண்டும் (வாழ்ந்தால் புகழோடு வாழவேண்டும் இன்றேல் வாழாமையே நன்று) (236). புகழுண்டாக வாழமாட்டாதவர் தம்மையே நொந்துகொள்வதன்றித் தம்மை யிகழ்பவரை நோகமாட்டார் (237). புகழென்னும் எச்சத்தைப் பெருவிடின் அது உலகத்தார்க்கெல்லாம் வசையாகும் (238). தம்மிடம் வசையுண்டாகாமல் வாழ்பவரே உயிர் வாழ்பவராவார், புகழுண்டாகாமல் வாழ்பவர் இறந்தவ ராவார் (240).

**புகழ்க்குரிய வழிகள் :**

பிறர்க்கீதலாலாகும் புகழே மக்களுயிர்க்குப் பயனுகும் (231). புகழ், போரில் காட்டும் வீரத்தினுல் உண்டாவதாகும்,

அவர் உயிரையும் விரும்பாமல் புகழை விரும்புவர் (777). அது, செல்வத்தினல் பெரிதும் வளரக்கூடியதாகும் (1010). நன்மையமைந்த புகழ் கணவனிடத்தும் தன்னிடத்தும் நீங்காமல் காக்கும் கற்புடையவளிடத்தில் வாழும் (56). இவனைப் பெறுதற்கு இவன் தந்தை என்னதவம் செய்தானே என்ற உலகோர் சொல்லும் புகழ்ச்சொல் மகனல் தந்தைக்காக்கி அளிக்கப்படவேண்டும் (70). புகழ் அறத்தொடு பொருந்திய செயல்களால் ஆவதாகும் (39). ஒருவனதில்லாள் புகழை விரும்புபவளாகவேண்டும் (59). உலகழியுமளவும் உள்ள புகழ் தமக்குத் தீங்குசெய்தாரைப் பொறுத்தவர்க்குண்டாகும் (156). புகழ் பொய்யாமையென்ற குணத்தினல் பெருகுவதாகும் (296). புகழ், நீதி நூல்களால் ஆக்கப்படுவதாகும் (581).

**புகழ் வளர்ச்சி:**

எல்லாப்புகழும் ஒருவற்கு இனநன்மையால் உண்டாகும் (457). புகழ் வறுமையால் அழிக்கப்படும் (1043). உயர்ந்தாரால் புகழப்பட்டவை ஒருவனல் போற்றிச் செய்யப் படவேண்டும் (538). புகழ் மறவியென்னும் தீய குணத்தினல் அழிவதாகும் (532). புகழ், தன்னை யிகழ்வார்பின் சென்று வாழும் வாழ்க்கையால் ஆதலில்லை (966). அது சூதினல் அழிக்கப்படுவதாகும் (934). புகழ் நிலைக்கவேண்டுமாயிற் தம் குடிமைக் கொவ்வாத இளிவரவுகள் செய்யப்படலாகா (962).

**புகழ்ப்பயன்:**

புகழுடம்பிற்கு ஆக்கமாகும் கேடும் புகழுடம்பு நிலைத்தற்காம் சாக்காடும் திறமையுடையவர்க்கன்றி யாகாது (235). குற்றமற்ற புகழ் மாறுபாடாகிய (இகல்) நோய் நீங்குமாயின் ஒருவற்குண்டாகும் (850).

**புகழும் பழியும்:**

நாட்டு வளப்பம் பழிப்பற்றதாக இருக்கவேண்டும் அது புகழில்லாத உடம்பைப் பொறுத்த நிலத்தில் உண்டாகாது (239). பழிப்பற்ற தன்மை புதல்வரிடத்தமையவேண்டும் (62). பழியுடைய செயல்கள், செல்வத்தால்வரும்

பயனுக்காக, நடுவன்மையை நாணுபவரால் செய்யப்படலாகா (172).

**புகழும் பழியும்:**

தம்மைப் பழிப்பவரும் பொறுத்தற்குரியராவர் (151). அரசன், தனக்கிளையவன் இனமுறையுடையவன் என்றிகழும் இகழ்ச்சி ஆகாததாம் (698). பெரியாரது ஆற்றலை இகழும் இகழ்ச்சி ஆகாது (891). இகழாமையென்பது மெய்ம்மையுடைய குலத்திலுள்ளார்க்கியல்பாகும் (953). உயர்ந்தார் புகழ்ந்தவற்றைச் செய்யாதிகழ்தல் எழுபிறப்பிற்கும் தீமை தருவதாம் (538). இகழ்ச்சி விளையாட்டிற்கேனும் ஆகாததாம் (975). தம்மை இகழ்பவர் பின் சென்று வாழும் வாழ்க்கை மிக்க துன்பத்தையே தரும் (996). ஈகையின்கண் வந்திரப்போரைப் பழித்தல் ஆகாததாம் (1059). வரைவின் மகளிரது இன்சொற்களால் இழிவுண்டாகும் (911). துன்ப முற்றபோதும் இளிவாயின துளக்கமற்ற அறிவுடையோராற் செய்யப்படமாட்டா (654). பழியுண்டாயின் மானமுடையவர் அதனை யேற்றுக்கொண்டு தம் உயிரை வைத்திருக்கமாட்டார் (970). பழிப்புடையது வறுமையுமாகும், சால்புடையவர்க்கு அதுவும் (வறுமையும்) இழிவாகாதென்பதாம் (988). பழிப்புடையதொன்று இரத்தல் என்பதாம் (1066). பழிப்பாயவற்றுள் கள்ளுண்டலும் ஒன்றாகும் (1288). இகழ்வாவனவற்றுள் ஒன்று களவு செய்தலாம் (281).

**பழி:**

பலராலும் பழிக்கப்படுவது பயனில் சொல்லுதலாகும் (191). நட்பினருள் பழிப்பென்பதிருக்குமாயின் அது நட்பினீக்கத்திற்கே காரணமாம் (829). பலராலும் இகழப்படும் இகழ்ச்சி ஒருவனது சோம்பலுடன் முயற்சியின்மையென்னும் குணத்தினால் உண்டாவதாம் (607). உருவத்திற் சிறியராயிருப்பவர் பழிக்கத்தக்கவரல்லரென்பதாம். அவர் தேர்க்கச்சாணி போல்பவராதலும் கூடும் (667). பழிப்பிற்குரியன தீவினைகள் என்பதாம் (40). மக்கள் ஒருவற்கும் பழிப்பற்றவராக வேண்டும், அவரது பண்பும் பழிப்பற்றதாக வேண்டும் (62). பழிப்பு ஒழுக்கத்திற்றவறுதலால் உண்டாகும் (137). பிறன் மனையாளை விரும்புவானிடத்தில்

பழி அழியாது நிற்கும் (*145*). பிறன் பழியைக் கூறுதல் தன் பழியைப் பிறர் கூறுதற்கிடனாகும் (*186*). உலகம் பழித்த வற்றை நீக்குதல் தவசிகட்கும் மற்ற யாவர்க்கும் வேண்டுவதாம் (*280*). பழிக்கு நாணுபவர் தினையளவு குற்றம்வரினும் அதனைப் பனையளவாகக் கருதுவர் (*433*). சான்றோர் பழிப்பன, ஈன்றதாயின் பசிகண்டபோதும் ஒருவனால் செய்யப்படலாகா (*656*). பழிநோக்காமை ஒருவனைப் பகைவர்க் கெளியனாக்கிவிடும் (*865*). தம் பழியுடன் பிறர் பழியும் நாணத்தக்கனவாகும் (*1015*). துறவறமும் பழிக்கப்படாததாயின் நன்றென்பதாம் (*49*). தலைவி தலைவனிடத்துக் காணும் பழிகள் பலவாம், அவை அவள் அவனைக் கண்டபோது தோன்றுவதில்லை யென்பதாம் (*1285*).

# 29. பெண்

பெட்பு என்பதிலிருந்து பெண் என்பது ஆகியிருக்கலாம். பெட்பு எனில் விரும்பத்தக்கது எனப் பொருளாகும். பெட்டை, பேடு, பேடை என்பன தொடர்புடைய சொற்கள். பெண் விரும்பத் தக்கவள், காமுறத்தக்கவள் என்பதாகலாம். அதுமட்டு மன்றி அன்பும் அறனும் உடைத்தாயின் என்றவிடத்து அவள் அன்பு செய்யத் தக்கவள் என்பதனைப் புலப்படுத்துகிறார் ஆசிரியர். உலகப் பெண்குலம், தாய்களாகவும் காதலிகளாகவும் காட்சியளிக்கின்றது. பெண்மையில் தாய்மையை, இறைமையைக் காண்பர் தமிழறிஞர். தமிழ்ச் சமயங்களாகிய சைவமும் வைணவமும் பெண்மைக்குச் (சக்திக்குச்) சிறப்பிடம் தந்துள்ளன. அருளே சக்தி யென்பது சைவசித்தாந்தம். பெண்ணை அறிவு, செல்வம், அழகு, ஆற்றல் முதலியவற்றிற் கெல்லாம் இருப்பிட மாகக் கண்டவை இந்தியநாடும் தமிழகமும்.

மாதர் என்றால் அழகுடையவர் என்பது பொருள். பெண்ணழகைக் கரைகடந்தும் வருணிப்பவை தமிழிலக்கியங்கள். உலகில் பாதி பெண். உலகை (ஆண் பெண்களை) ஈன்றளிப்பவள் தாய். தாயன்பு உலகில் சிறந்தது. 'ஈன்றாள் முகத்தேயும்' என்ற குறளில் அது விளங்கும். 'இல்லதென் இல்லவள் மாண்பானால்' என்பதனால் பெண் சிறந்தால் மண் (உலகு) சிறக்கும் என்பதனை ஆசிரியர் புலப்படுத்துகிறார். கற்பெனும் திண்மையால் கரை கட்டிப் பெண்மையைக் காத்தது தமிழுலகம்; தமிழ்க்காப்பியங்கள் இதற்கு நற்சான்று பகர்வனவாம். 'தென்தமிழ்ப் பாவை செய்த தவக் கொழுந்து' கற்புடைப் பெண். ஒரு மாமணியாய் உலகிற் கோங்கிய பெண்ணுக்குக் கோயிலெடுத்து வழிபட்டது தமிழகம். செல்வத்தையும் மக்களையும் போற்றி மக்களைப் புகழுடனும், செல்வத்தை அளவுடன் செலவிட்டும், வளர்த்தல் பெண்ணின் கடன். 'ஈன்று புறந்தருதல் என்றலைக் கடன்' என்பது புறநானூற்று வரி.

இல்லறத்திற்குரிய ஒழுக்கமுடைய பெண் உயர்ந்தவள். அவள் கணவனைத் தெய்வமாகக் கொள்வாள் என்பதில் வீட்டில் ஆணுக்குத் தலைமையென்பதே பொருள். சிறை காக்கும் காப்பு வேண்டாமென்பதில் பெண்ணைப் பெரிதும் உரிமையுடன் வளர்க்க வேண்டுமென்றுகின்றது. பெண்வழிச் சேறல் அதிகாரத்திலிருந்து பெண் அளவு கடந்த உரிமையை (ஆணை அடிமையாக்கும் அளவு) அறிகிறோம். காதலுக்குரிய பெண்ணிடம் உலகிலுள்ள அழகினை யெல்லாம் இன்பத்தையெல்லாம் காணமுடிகின்றது. பெண்களில் உயர்ந்தவர் தெய்வீகப் பெண்கள். திருமகள் முதலிய தெய்வப் பெண்களுடன் உயர்ந்த பெண்களை உவமித்தல் உண்டு. பிறன் மனை விழைவு மிகவாகக் கடியப்படுவது குறளில். பரத்தையுறவும் பெண்வழிச் சேறலும் மனிதனின் அறிவு, அறம், இன்ப முதலிய வெல்லாவற்றையும் அழித்து விடுகின்றன.

## பொருளடைவு

### வாழ்க்கைத்துணை :

கற்பென்னும் கலங்கா நிலைமையுடைய பெண்ணே ஒருவன் எய்தும் பொருள்களுள் சிறந்ததாகும், அவளே அற முதலிய மூன்றிற்கும் காரணமாவாள் (54). மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கை யுடையவளும் கொண்டவனது வருவாய்க்குத் தக்க வாழ்க்கையுடையவளுமே வாழ்க்கைத் துணையாவாள் (51). மனையறத்திற்குத் தக்க மாண்பு இல்லாதவளிடத்து இல்லறமிருப்பின் அவ்வில்வாழ்க்கை செல்வத்தால் எவ்வளவு மேம்பட்டதாயினும் பயனில்லை (52). இல்லாள் மாண்புடையாளானல் ஒருவனுக் கில்லாத தொன்று மில்லை, மாட்சியற்றவளானல் அவனுக்குள்ள தொன்றுமில்லை (53). தன்கணவனையே தெய்வமாகக்கருதித் தெய்வத்தையும் தொழாதவள் பெண்; அவள் சொற்படி மழைபெய்யும் (55). தன்னைக் கற்பாற் காத்துத் தன்னைக் கொண்டவனையும் பேணி இருவர்க்கு முரிய புகழையுங் காத்து அவற்றில் கடைப்பிடி யுடையவளே பெண்ணுவாள் (56). மகளிரைச் சிறையிட்டுக் காக்கும் காவலாற் பயனில்லை; அவர்தம் கற்பால் காத்துக் கொள்ளும் காப்பே சிறந்ததாகும் (57). கணவனை வழிபடுமகளிர் தேவருலகினரால் வழிபடப் பெறுவர் (58). பகைவர் முன்பு சிங்கவேறு போன்ற நடையினை

ஒருவற்குப் புகழ் விரும்பிய இல்லாளே கொண்டுவருவாள் (*59*). மனையாளது குணச்செயல்கள் ஒருவற்கு மங்கலமாகும்; அவற்றிற் கணிகலமாவன அவள்பெறும் புதல்வர்களாம் (*60*).

**பெண் :**

முலையிரண்டுமில்லாத பெண்ணது கலவியின்பம் கடை போகாததுடன் நகையும் விளைக்கும் (*402*). கற்பினைக் காத்தொழுகும் மகளிர் பெருமைக்குரியராவர் (*974*). பரத்தையர் போன்ற மகளிரது மனம் உள்ளொன்றும் வெளியொன்றுமாக எண்ணக்கூடியதாகும் (*822*). பேடி அச்சமும் மறமின்மையும் உடையளாவாள், பேடி வாளைப்பிடித்துப் போரிட்டாலும் அஃதவளச்சத்தால் இயலாததாகும் (*614*.) அஞ்சும் பேடி பிடித்த வாள் போல்வது அவையையஞ்சுபவன் பிடித்த நூல் என்பதாம் (*727*).

**காதற்பெண் :**

தலைவியாகிய பெண் அனிச்சம் பூவிலும் மென்மை யான இயல்புடையளாவள் (*1111*). பெண்ணின் கண்கள் தாமரை, குவளை முதலிய மலர்களைப் போல்வனவாகும் (*1112*). மாதர் முகம் மதிக்குவமிக்கப்படுவதாகும், மதியினும் அஃது ஒளியுடையதாகும் (*1118*). மாதர் தம் மேனி தளிரனையது, பற்கள் முத்துப்போன்றன, கண்கள் வேல் போன்றன, தோள்கள் மூங்கில் போன்றன வென்பதாம் (*1113*). மாதரடிகள் அனிச்ச மலர், அன்னத்தின் தூவி யாவற்றினும் மென்மைத்தன்மை யுடையனவாம் (*1120*). பணிந்த மொழியுடையாளது எயிறூறியநீர் பாலுடனே தேன்கலந்தது போலாம் (*1221*). தலைவி தலைவற்கு உடம்பொடு கூடிய உயிர் போல்வாள் (*1122*). மாதர் மடநோக்க முடையவர், பெண்மான் போன்ற நோக்க முடையராவர் (*1085*). மாதர் ஒளி பொருந்திய நெற்றியினையுடையராவர் (*1088*). பெண், கண்டும், கேட்டும், உண்டும், உயிர்த்தும், உற்றும் அடையும் ஐம்புலவின்பங்களுக்கும் இடமாவாள் (*1101*).

**தாய் :**

மகனைச் சான்றோனெனப் பிறர்கூறக்கேட்டதாய்தான் அவனைப் பெற்றபோதிலும் பெருமகிழ்வடைவாள் (69). அறத்தோடு இயைபில்லாத நல்குரவுடையவனைத் தாயும் பிறனாகக் கருதுவாள் (1047). பொருளாகிய செவிலி அன்பில் தோன்றிய அருளாகிய குழவியை வளர்ப்பதாம் (757). தலைவியைப்பற்றி ஊரில் எழும் அலருக்கு அன்னை சொல்லே வளர்க்கும் நீராம் (1147). தாயினது பசி எவ்வகைப் பழிச்செயல் புரிந்தாயினும் தீர்க்கப்பட வேண்டுமென்பது நீதியில்லாததாகும் (656). தாயும், கள்ளுண்டு களிக்கும் மகனைக்கண்டு துன்பமேயடைவாள் (923).

**தெய்வப்பெண் :**

திருமகள் அறத்தினையறிந்து பிறர் பொருளை விரும்பாத அறிவுடையாரிடம் திறனறிந்து அடைவாள் (179). கவர் மனமுடைய மகளிர், கள், சூது ஆகியவற்றைத் திருமகள் நீங்கிவிடுவாள் (920). எப்பொழுதும் வினையிடத்து முயற்சியுடையானது நட்பினை வேறாக நினைப்பவனைத் திருமகள் நீங்கும் (519). திருமகள் தாமரையில் உறைபளாவாள், அவள் முயற்சியின்கண் உறைபவளாவாள்; மூதேவி சோம்பலின்கண் உறைவாள் (617). மூதேவி திருமகளது தமக்கையாவள், பொருமையுடையவனைத் திருமகள் மூதேவிக்குக்காட்டிவிடுவாள் (167). முகமலர்ந்து விருந்தோம்புவானதில்லின்கண் மனமகிழ்ந்து திருமகள் உறைவாள் (84). அணங்கென்பது கண்டாரைக் காமத்தால் வருத்தும் தெய்வப்பெண்ணும், வரைவின் மகளிரது முயக்கம் அணங்கின் முயக்கம் போலாம் (918). இயற்கைப் புணர்ச்சியில், தலைவியது தோற்றம் தலைவற்கு அவளோர் அணங்கோவென்ற ஐயத்தையுண்டாக்கும் (1081). தலைவற்கெதிரே தலைவி நோக்கும் நோக்கம் தாக்கும் அணங்கு படையுடன் வந்தது போலும் என்பதாம் (1082).

**பிறன் மனையாள் :**

பிறன் மனைவி அவனுக்குப் பொருளாவாள்; அவளை விரும்பி யொழுகுதல் பேதைமையும், உலகில் அறம் பொருள்

இன்பமின்மையும் ஆகும் (141). பாவத்தின்கண் நின்ருருள் எல்லாம் பிறன் மனையாளிடம் நின்றவர், வரைவின் மகளிரிடம் செல்வாரிலும் இன்பத்தையுமிழத்தலின், பெரும் பேதைய ராவர் (142). ஐயுருதார் இல்லின்கண் செல்பவர் உயிருடையரேனும் அறமுதலிய பயன்களை யெய்தாமையின் இறந்தவரேயாவர் (143). இந்திரன்போலும் பெருமை யுடையரேனும் பிறனில்லாளை விழைபவன் பெருமையிழந்து சிறுமை அடைவான் (144). எய்தல் எளிதென்று பிறனில்லிடம் செல்பவன் அழியாப் பழியையடைவான் (145). பிறனில்லிடத் திறப்பவன் பகை, பாவம், அச்சம் பழியாகிய நான்கையும் தவருதடைவான் (146). அறவியல்போடு கூடிய இல்வாழ்க்கையுடையவன் பிறனியலாளை விழைய மாட்டான் (147). பிறன்மனையாளை நோக்காமை சான்ருண் மையும் அறமும் சீரிய வொழுக்கமுமாகும் (148). பிறனில் லாளது தோளைச்சேராதவரே உலகில் எல்லா நன்மைகட்கும் உரியராவர் (149). ஒருவன் அறத்தினை மீறிப் பாவங்களைச் செய்யினும் பிறன் மனையை விரும்பாமை அவற்கு மேம்பட்டுத் தோன்றும் (150).

**வரைவின் மகளிர் :**

வரைவின் மகளிர் அன்பிஞல் ஒருவனை விழையாமல் பொருளிஞல் விழைபவராவர், அவர் சொற்கள் பின்ஞல் இன்ஞமையைத் தரும் (911). அவர்கள் பண்பில்லாதவ ராவர், பொருட்பயனைக் கருதியன்றி அவர்தம் பண்புடைமையைச் சொல்லமாட்டார், அவர்கள் பொருந்தத் தகாதவராவர் (912). பொருள் கொடுப்பார் யாவரையும் அவர் முயங்கும் முயக்கம், கூலிக்குப் பிணமெடுப்பவர், அயல் பிணத்தை இருட்டறைக்கண்ணே தழுவியதுபோலாம் (913). அவரது நலம் புல்லியதாகும், அருட்பொருளை யாய்பவர் அந்நலத்தைப் பொருந்தமாட்டார் (914). பொருள் கொடுப்பவர்க்கெல்லாம் பொதுவாய அவரது நலத்தை இயற்கையறிவும் செயற்கையறிவும் மாட்சிமைப்பட்டவர்கள் பொருந்தமாட்டார்கள் (915). ஆடல், பாடல், அழகென்ப வற்ருல் களித்துத் தமது புல்லிய நலத்தைத் தருபவர் அம் மகளிர், தம்புகழைப் பரப்ப விரும்புவோரால் அவர் நெருங்கத் தகாதவராவர் (916). நெஞ்சில் கருதியவற்றையடைதற்

காகப் புணர்வாரதுதோள், நிறை நெஞ்சம் இல்லாதவராலேயே தோயப்படும் (*917*). உருவு, சொல் முதலியவற்றால் அவர்கள் வஞ்சிப்பவராவர், அவர் முயக்கம் காமநெறியால் உயிர் கொல்லும் அணங்கின் முயக்கமாகும் (*918*). அவர்தம் தோள்கள் குற்றமறியும் அறிவில்லாதவர் சென்றழுந்தும் நரகமாகும் (*919*). புணர்தலும் புணராமையுமாகிய இருமனமுடையாரது தொடர்பு திருவினை ஒருவனிடத்திலிருந்து நீக்கிவிடும் (*920*).

**பெண்வழிச் சேறல் :**

தம் மனையாளை விழைந்து அவள் தன்மையாராய் ஒழுகுவார் அறத்தினை யெய்தார், பொருள் செய்தலை விரும்புபவர் வேண்டாததுமதுவாகும் (*901*). ஆண்மையை விட்டு மனையாளை விழைதல் இவ்வுலகில் ஆண்கட் கெல்லாம் நாணமாகத் தனக்கும் நாணமாகும் (*902*). மனையாளை யஞ்சுபவன் மறுமைப்பயன் எய்தலில்லை, அவனது வினையாளுந் தன்மையும் ஆன்றோரால் பாராட்டப் பெறலில்லை (*904*). மனையாளிடத் தச்சம் நல்லார்க்கு நல்லன செய்தலை யஞ்சச் செய்யும் (*905*). இல்லாளின் மூங்கில்போலும் தோளை யஞ்சுபவர் அமரர் போல் இவ்வுலகத்து வாழினும் பிறரால் மதிக்கப் படாமையின் பயனில்லாதவராவர் (*906*). இல்லாளுக் கேவல் செய்பவனது ஆண்மையினும் நாணமுடைய பெண்தன்மையே மேன்மையுடையதாகும் (*907*). மனையாள் விருப்பத்திற் கொழுகுபவர் நட்பினது குறையை முடிக்க மாட்டார், அறத்தினைச் செய்யவு மாட்டார் (*908*) அறச் செயலும் பொருளும் இன்பச் செயல்களும் பெண்ணேவல் செய்பவரிடம் இல்லையாம் (*909*). பெண் விழைதல் பேதைமையுடையதாகும், கருமச் சூழ்ச்சிக்கண் சென்ற நெஞ்சமுடையார் அந்நெறியிற் செல்லுதலில்லை (*910*).

# 30. மனம்

மனத்தை மனிதனின் சூக்கும (நுண்) உடம்பு என்பது தத்துவம். அஃதொன்றே உடல் இறந்த பின்பும் அடுத்த பிறப்புக் களிலும் தொடர்வது. மனிதனை மனதன் (மனத்தையுடையவன்) மனசன் என்றே சொல்லிவிடலாம். எண்ணுந்திறன் ஒன்றிற்றான் மனிதன் சிறக்கிறான். மற்ற ஐயறிவு, நாலறிவுயிர்கள் சில வகைகளில் மனிதனைவிடத் திறமைகளில் விஞ்சிவிடுகின்றன (மன நலம் மன்னுயிர்க்காக்கம்; மாந்தர் தம் உள்ளத்தனைய துயர்வு) என்னும் குறள்.

மனமே மனிதனின் ஆன்மிக இலௌகிக வளர்ச்சிகட் கெல்லாம் காரணம். [35]மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம் என்பது பெரியோர் உரை. [36]மனமெனும் பேய்க் குரங்கு சென்றவிடத்தாற் செலவிடாது நன்றின் பாலுய்ப்பதே அறிவு, அவ்வறிவே மனிதற்கு ஆறாவது அறிவு. மனிதன் ஐம்பொறிகளாலும் அவற்றின் புலன்களாலும் ஆளப்படுகிறான். அப்பொறி புலன்கட்கு நடுவிடம் மனம். அம்மனம் தூய்மையும் வன்மையுமுடைய தானாற்றான் மனிதச் செயல்களெல்லாம் நலனுறும், மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறம் என்பர் ஆசிரியர்.

மனம் உள்ளவரை மனிதன் இருக்கிறான், அஃதில்லையானால் அவன் இறக்கிறான். எனவே மனத்தையே உயிர் என்பதும் உண்டு, மனவிளக்கமே உயிர்விளக்கமாகும். புலம் என்பது அறிவு, பெரிதும் காண்டல் கேட்டல் முதலாம் புலன்களால் வளர்தலால் அறிவுக்குப் புலன் என்றாயிற்று. புலவர் என அறிஞர்க்கும் தேவர்க்கும் அப்பெயர் வந்தது அவர் நல்லறிவுடையர் என்பதனாலாம், அப்புலன்களையெல்லாம் இயக்கி ஏற்றமுறச் செய்வது மனம். விலங்கு, பறவை முதலிய உயிர்கட்கும் நினைவாற்றலுண்டு, ஆனால் மனிதற்கு நீண்ட ஆழ்ந்த மனம் உண்டு. உயர் குணங்கட்கெல்லாம் இருப்பிடம் மனம். சில குணங்கள் இருப்பதாலும் சில குணங்கள் இல்லாமையாலும்

மனம் தூய்மையும் கேடும் உறுகின்றது. எண்ணங்களை மட்டு மன்றி மனம் உணர்ச்சிகளையுமுடையது. முகம் கண் முதலியன எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் எதிரொலிக்கும் சிறந்த உறுப்புக்களாம்.

மனம், உருவங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கக் கூடியதாகும். அவ்வுருவங்கள் எதிரில் இல்லாதபோதும் அவற்றை நினைத்து இன்புறவும் பயனடையவும் வல்லதாகும். அது நினைவையும் மறதியையும் மாறிமாறியடையும் இயல்பினது. அது பலவாகிய எண்ணத்தன்மையும் விரைவுமுடையது. கணத்தில் கோடிக்கணக்கான மைல்கட்கப்பாலும் செல்லக் கூடியது.

பொறிப்புலத்தொடர்புடைமையின் உடலும் மனமும் ஒன்றோ டொன்று ஒட்டிய தொடர்புடையன. நூல்களைக் கற்கக்கற்க மனம் வளருந்தன்மையடையும். மனம், சொல், செயல் என்ற மூன்று பிரிவினையுடையன வாழ்க்கையும் செயல்களும், அவற்றுள் மனம் அடிப்படையானதாகும்; மனம் செம்மையுறும்போதே மற்றவையும் செம்மையுறுகின்றன. அன்பினாலும் நட்பினாலும் மனம் நன்மையுறுகின்றது. உறங்குகையிலும் (கனவில்) செயல் புரிவது மனம்.

மனத்தின் தெளிந்த முடிந்த முடிபுகளே கோட்பாடுகள், குறிக்கோள்கள். அத்தகைய சித்தமுடையோர் சித்தராவர். அம்முடிபுகளே ஒருவனை உயர்ந்தவனாக ஆக்கும்.

மனம் இன்பமும் துன்பமும் அடையுந்தன்மையது. அவற்றுள் அது இன்பமேயடையும் நிலையில் இருப்பதைத்தான் வாழ்க்கையின் விளக்கமென்பர். அந்நிலையடைய ஆசிரியர் பலவிடங்களில் வழிவகுக்கிறார்.

வாழ்வின் இரண்டறங்களுள் இல்லறத்திற்குரிய காமத் திற்கும் (அன்பிற்கும்) துறவறத்திற்குரிய அருளுக்கும் மனமே நிலைக்களமாகின்றது.

மனம் பரிசவேதிக்கல் போல்வது. உணர்ச்சிகளையெல்லாம் நேரே தன்னிடம் படியப்பெற்றாலும் அஃது இன்பத்தைத் துன்ப மாகவும் துன்பத்தை இன்பமாகவும் மாற்றிக்கொள்ளும் தன்மை வாய்ந்தது. அன்புடைய மனங்கள் ஒன்றுபடுவதனாற்றான் உலகம்

ஒன்றுபடுகின்றது. மனத்தை மனிதவறிவுகொண்டு நெறிப்படுத்த வேண்டும். உரிய பொருள்கள் நேரில் இல்லாமலும் அவற்றைக் கொண்டு அனுபவியாமலும் நினைவாலேயே இன்பந்தருவது மனம். அதாவது இன்பத்தை எளிதாகக் கிடைக்கச் செய்வதென்பது. வாய்மை அன்பு முதலிய குணங்களால் மனம் தூய்மையடைவது. கோடிக்கணக்கான எண்ணங்களால் அலைபடும் இயல்புடைய மனத்தைச் சிறந்த சில (ஓரிரண்டு) எண்ணங்களில் ஒன்றுபடுத்துவதே யோகம், தவ முதலிய திறமைகளாம். மனம் அழகு பெறுவதே உடல் அழகு பெறும் வழியாம். நெஞ்சத்தைக் காப்பது உயிரைக் காப்பதாகும்.

தான் சுருங்குதற்குக் காரணமாய வினைகளாலும் மறதி, நடுநிலைகுன்றல், களவு முதலியவற்றாலும் மனம் கெடுதற்குரியதாகும். தூக்கத்தில் மனம் ஓய்வு பெறுகின்றது. நல்ல நூல்களைக் கற்றலால் மனம் வளர்ச்சியுறுகின்றது. (இறைவனாகிய) உண்மைப் பொருளைக் காண்டலில் மனம் முதலில் மிக்க துணை புரிகின்றது. தலைவன் தலைவிக்கிடையேயுள்ள மனவுணர்ச்சிகள் ஆசிரியரால் மிகவாக ஆராயப்பெறுகின்றன. உலோபம் (கருமித்தனம்) கயமை, தீநட்பு, பஞ்சமாபாதகங்கள் முதலியவற்றையுடைய மனம் தீநெறிப்பட்டதாம்.

மனையாள் வழிப்பட்டவனது மனம் மாண்புறுதலில்லை. இறைவனது தாளைச்சேர்ந்தவரது மனம் இருமையின்பங்களையும் அடையும். மக்கட்பேறு புகழ் வினை வெற்றி ஆகியவற்றுக்கும் மனம் காரணமாகும். முடிவாக நெஞ்சமே ஒருவற்குற்ற சுற்றமாகும்.

**பொருளடைவு**

**மனத்தின் இயல்பு :**

மனம் உடலினகத்தே இருப்பது, நாண முதலிய குணங்களுக்கு அஃதிருப்பிடமாகும் (*1020*). மனம் தூயதாக இருக்கத்தக்கது, வாய்மையினால் தூய்மையடைவது (*298*). மனம் அன்பிற்கிருப்பிடமாகும், அவ்வன்பில்லாத மனம் வன்னிலமாகிய பாலை போன்றதாம் (*78*). மனம் நினைக்கும் இயல்பினையுடையது (*309*). மனம் சிறுகவும் பெருகவுங் கூடியது, அவ்விரு நிலைகளையும் மனம் உரிய எண்ணங்களால்

அடையும் (798). தலைவனது உருவ முதலியவற்றிற்குத் தலைவியின் நெஞ்சம் உறைவிடமாகும், அன்புடைப் பொருள்களின் உருவங்கள் தங்குமிடம் மனமாம் (1130). உள்ளம் ஆழ்ந்துணரும் இயல்பினதாம் (357). உலகத்தாருள்ளமெல்லாம் வாய்மையுடையானது உருவமும் எண்ணமும் தங்குமிடங்களாம் (294). உள்ளம் பொருள்களின்மேற் பற்றுச் செலுத்தும் இயல்பினதாம் (438). உள்ளம் வினை செயற்குரிய கருத்துக்களுக்கும் அறிவிற்கும் இருப்பிடமாம் (677). உள்ளம், நன்மையை எண்ணுதலால் தண்மையும் தீமையை யெண்ணுதலால் வெம்மையும் அடையும் (799). உள்ளம் நெகிழும் இயல்பினையுடையது, அது நெகிழ்ந்து கரைந்துபோகவும் கூடியது (1069). உள்ளம் ஒருவனை அவனது ஏழு பிறப்பின்கண்ணும் தொடர்ந்து உயிரோடு செல்வதாம் (107). உள்ளம் நன்மையைக் காணுகையில் உவகையடையும் தன்மையது (1057). அன்புடைப்பொருளின் உருவம் உள்ளத்தில் இருப்பினும் உள்ளம் அப்பொருளை நேரே காணவிழைவதுண்டு (1249). மனம், ஒரு பொருளை நேரில் இல்லாதிருக்கவும் நினைத்துமகிழும், அதனை நேரில் காண்கையில் மகிழும் (1281). தன்னளவினும் அடங்காத மகிழ்ச்சியினை மனம் நுகரக்கூடியதாம் (1201). உள்ளம் மறத்தலும் நினைத்தலும் வல்லதாம் (1125). நெடுந் தொலைவிலுள்ள பொருள்களையும் அங்குச் செல்லாமல் மனம் தன்னுள்ளே காணவல்லதாம் (1170). அவாவிய பொருள்களின் இன்பத்தை மனம் நினைத்தலின் மூலம் தருவது, அவ்வகையில் அது உயிரை இறந்துபடாமற் காப்பதாகும், நினைவுள்ள வரையில் உயிர் இருக்கும் (1206). மனம் ஒருவன் இறக்கும்வரை நினைத்தலும் இறந்துபடுமளவு நினைத்துயிரை நீக்குதலுமுண்டு (1230). நினைவையடுத்து மறதியையும் மறதியையடுத்து நினைவையும் மனம் உடையதாகும் (1316). ஆழ்ந்து நினைத்தலும் கூர்ந்து நினைத்தலும் மனத்தினியல்பு, கூர்ந்த நோக்கத்திற்கடியாகக் கூர்ந்த நினைவு அமைதலுண்டு (1320). மனம் ஒரு பொருளையே நினைக்கவும் அதே சமயத்தில் கோடியினு மேற்பட்ட பொருள்களை நினைக்கவும் வல்லதாம் (337). மனம் நேர்மையாக இருத்தலும் வளைந்திருத்தலும் உடையதாம் (115). மனம் சொல்செயல் என்ற முக்கரணத்துள் சொல்லும்

செயலும் நெஞ்சறிந்த பின்னரே நிகழ்வனவாம் (272). செயலில் இருக்கும் நன்மை மனத்தோடு படாததாயின் அம் மனம் வன்கண்மையுடையதாம் (276). சொல் செயல்களுக்கு மனமே சான்ருகும், மீறித் தீமையாயின செய்பவரை அச்சான்ருய மனம் வருத்தும் (293). முகமாகிய கண்ணுடியுள் தோன்றுவது மனமாகும், நெஞ்சில் நிகழும் குணங்களே நெஞ்சின் நிகழ்ச்சிகளாகவே கூறுவதுண்டு (706). நெஞ்சம் குணங்களால் நிறைவுறத்தக்கதாம் (911). குறிப்பு, சொல் செயல்களாலும் வெளிப்படா நினைவுகள் நெஞ்சத்தில் மறைந்துள்ளனவாகக் கூறப்படும் (928). மனம் கவலை முதலிய உணர்ச்சிகளேயும் அடைவதாகும் (1072). நெஞ்சம் அறமெல்லாவற்றிற்கும் இருப்பிடமாம் (288). மனம், கண் முதலிய பொறிகளுக்கெல்லாம் மூலமாகும், பொறிகளின் வழியாகச் செல்லும் உணர்ச்சிகளெல்லாம் மனத்துட்சென்று தங்கும் (1112). உடலில் ஏற்பட்ட தாக்குதல்களுக்கு மனம் உள்ளாவதும் உண்டு (1128). விழிப்பில் நெஞ்சத்திருக்கும் எண்ணங்கள் கனவில் உருவம்பெற்றுச் செயலாவதுண்டு, கனவிற்கும் மனத்திற்கும் தொடர்புண்டு (1218). மனத்தி னமைப்பு உடலழகினை யாக்கவும் போக்கவும் வல்லதாகும், மகிழ்ச்சி ஆக்கும், துயரம் போக்கும் (1250). நெஞ்சம், செயலினும் முற்பட்டதும் விரைவுடையதுமாகும் (1259.) மனம் நிணத்தைத் தீயில் இட்டாற்போல உருகுந்தன்மை யுடையதாம் (1260). மனம் ஒன்றனை நினைக்கையில் மேலு மேலும் பணைத்தெழுந்து கற்பனை செய்வதாம் (1264). சொல் செயல் போலாது மனம் உற்ருர் பகைவர் என்ற எல்லையைக் கடந்து செல்வதாம் (1292). நெஞ்சம் ஒருவரை வருத்துகையில் அவரைக் கொஞ்சங் கொஞ்சமாகத் தின்னுவதுபோல வருத்தும் (1296). நெஞ்சம் உயிரின்மேற் காதலுடையதாகும், மனத்திற்கும் உயிருக்கும் தொடர்புண்டு (1298). மனம் இயற்கையாகப் பேதைமையுடையதென்று கருதப்படும் (1297). நெஞ்சமே ஒருவற்குற்ற உறவினர் போல்வது (1300). நெஞ்சமே ஒருவற்குத் துன்பமுற்ற காலத்து உற்ற துணையாகும் (1299). நெஞ்சமும் பொறிகளும் ஒருவழியே செல்லுமென்பதில்லை, நெஞ்சம் சென்ற வழிப் பொறிகள் செல்லாமலிருக்கலாம் (1244). மனம் ஒரு குணத்தைக் கொள்ளவோ மற்றென்றைத் தன்னிடமிருந்து

தள்ளவோ கூடியதாம் (1247). மனம் எண்ணவடிவாகவுள்ள பொருளைச் செயல் (காட்சி) வடிவில் காணவிழைவதாம் (1249). மனம் அறிவு புலப்பட்டுத் தோன்றுதற்கிடமாம் (454). உயர்ந்த எண்ணங்களையும் குணங்களையுமுடைய மனம் நன்மையுடையதெனப்படும் (457). எண்ணங்களாலும் குணங்களாலும் மனம் உறுதியடையக் கூடியது (661). மனம் ஒரே சமயத்தில் இரண்டு வேறுவேறு பொருள்களை எண்ணக்கூடியதாகும் (920). நெஞ்சம் முகத்தினைத் தனக்குக் கண்ணடியாகக் கொண்டதாம் (அது கடுத்ததும் உவந்ததும் முகத்தின் வழியே தெரிதலுண்டு) (706). மனம், தான் சென்ற புலத்தின்கண் செல்லவிடாமல் தீமையினீக்கி நல்லதன்கண் செல்லுமாறு அறிவினால் நடத்தப்படும் (422). அன்புடைய இருமனங்கள் ஒன்றோடொன்று பிணையக் கூடியனவாகும், அது நிலமும் நீரும் கலந்து ஒன்றுவது போலவாம் (1323).

**மனவளர்ச்சி :**

அன்பு முதலிய குணங்களையுடைய மனவளர்ச்சியும் மனிதவாழ்க்கையின் வளர்ச்சியும் தொடர்புடையனவாம் (78). வாய்மை முதலிய பண்புகளால் மனம் தூய்மை யடையும் (298). கூடாவொழுக்கம் எண்ண முதலியவற்றால் மனம் குன்றிமணியின் அகம்போல மாசுற்றுக்கருமையடையும் (277). ஊக்கமுடைய உள்ளத்தின் உயர்வே வாழ்க்கையின் உயர்ச்சியாகும் (595). உள்ளம் உயர்ந்த நினைவுகளையே நினைக்க நினைக்க வளர்ச்சியடையும் (596). சுருங்குதற்குக் காரணமாய வினைகளைச் செய்தால் மனம் குன்றிவிடும் (798). மறதியென்னும் குணத்தை நீக்கி மனம் உரிய பொருளை எப்பொழுதும் நினைத்துக் கொண்டேயிருப்பதால் விளக்கமும் வளர்ச்சியுமடையும் (1125). காதலரிடையே யேற்படும் புலவியாகிய பிணக்குகள் உள்ளம் உடைபடுதற்குரிய கருவிகளாகக் கருதப்படும் (1324). அன்புடைப் பொருளை நினைந்து நினைந்து மனம் அப்பொருளைக்காணாதபோது தானும் இல்லாததாகிய நிலையையடையும்(உயிர் மாய மனமும்மாயும்) (1230). மனம், பல நல்லநூல்களைக் கற்ற அறிவினால் வளரக் கூடியதாகலாம் (823). மனம் புலாலுண்ணல் முதலிய பழக்கங்களால் குன்றித் தன்னெறியிற் செல்லாது (253).

உட்பகை முதலிய தீக்குணங்களால் மனம் மாட்சிமைப் படுதலில்லை (884). நடுநிலை முதலிய குணங்களிற் றவறுதலால் மனவளர்ச்சி கோணுதலை யடைகின்றது (115). களவு முதலிய தீக்குணங்கள் புகாமல் மனம் பாதுகாத்தற் குரியதாம் (281). மனம் சொல் செயல் முதலியவற்றுடன் பொருந்தி ஒன்றுகும்பொழுதே நன்கு வளருகின்றது (185). அன்புடைப் பொருள்களை நினைக்க நினைக்க மனம் மேலும் மேலும் பணைத்துவளரும் (1264). மனம், இரவில் தூங்கு கையில் ஓய்வும் அமைதியும் அடையும், தூக்கமின்றி மனத்திற்கு வேலையிருப்பின் பலரது மனம் தளர்ச்சியடையும் (1252).

**மனத்தின் செயல் :**

ஒருவற்கொன்றனை ஈயும்பொழுது மனமும் அதற்குப் பொருந்தி உவகையுறவேண்டும் (92). நட்புகொள்வதில் இருவரது முகமட்டுமன்று மனமும் பொருந்தி மகிழ்வதாக வேண்டும் (786). குறிப்புணர்வானல் பிறரது குறிப்பறியப் படுகையில் அவனதுமனம் கூர்ந்து நோக்கப்படுதற்குரியதாம் (708). முகத்தால் சிரித்து ஆனல் தன்னுள் இன்னமையை யுடைய கூடா நட்புடையாரது மனம் அஞ்சத்தக்கதாம் (824). பகைவர் நட்பாகுங்காலம்வரின் முகத்தால் மட்டும் சிரித்து மனமானது தன்னிடமிருந்து அவரது நட்பினை விலக்கிவிடவேண்டும் (830). உள்ளம் அளவைகளானும் பொருந்துமாற்றானும் தெளியவாராய்ந்து முதற்பொருளை உணரவல்லதாம் (357). கற்றோர் பிறருடன் கூடும்போது அவரது மனமகிழும், அவரைவிட்டுப் பிரியும்போது அம்மனம் பிரிவை நினைத்து வருந்தும் (394). எண்ணத்தால் சிறப்பெய்தி மாட்சிமையுற்ற அமைச்சரது வினைத்திட்பத்தை அரசனது மனம் எப்போதும் நினைத்துக் கொண்டிருக்கும் (665). வினையைச் செய்யுமுறையறிவானது மனம் அவ்வினை செய்வானல் அறியப்படவேண்டும் (677). பகைவர் செய்த நன்மை ஒன்றுயினும் அதனை மனம் நினைக்கவேண்டும், (அப்பொழுதவர் செய்த கொன்றுலொத்த தீமையும் மறைந்து விடும்) (109). அவமதித்திழிவு சொல்லாது பொருள் கொடுப்பாரைக் காணும்போது இரப்பாரதுள்ளம் உள்ளே உவகையடையும் (1057). காமநுகர்ச்சியில் மனம் நினைக்க

நினைக்கத் தீராத பெருமகிழ்ச்சியை யடையும், அது கள்ளுண்டு மனம் அடையும் இன்பத்தினும் சிறந்ததாம் (1201). அன்பு உடையாருள் ஒருவரதுமனம் குணங்களை மறவாது நினைத்துக்கொண்டிருக்கும் (1170). தலைவன் நினையாதிருக்கவும் தலைவியின் மனம் அவனையே நினைத்துக் கொண்டிருக்கும் (1243). புலவிக்காலத்துத் தலைவனது வணக்கத்தாலும் பணிமொழியாலும் தலைவியதுள்ளம் இளகும் (1324). பிரிவில், மாலைக்காலத்து வருந்தியிருக்கும் தலைவியதுமனம் இறந்துபடுவதைப்போன்ற நிலையை யடையும் (1230). அன்புடையார் ஒருவரையொருவர் நினைக்கையில் நினைப்பவரது மனம் மற்றவருக்குத் தும்மலை யுண்டாக்குமென்பது நம்பிக்கை (1317). தலைவன் தலைவிய துறுப்புக்களை நோக்குகையில் அவனதுமனம் அவற்றது ஒப்பின்மை முதலியவற்றை நினைத்துக் கொண்டிருக்கும் (1320). சான்றோரது மனம் எப்போதும் நடுநிலைமை யுடையதாயிருக்கும் (115). மனம் தன்னிடத்து அழுக்கா றில்லாமல் இருத்தலையே ஒழுக்க நெறியாகக் கொள்ள வேண்டும் (161). படை கொண்டவரது மனம் எப்பொழுதும் பிறர்க்குக் கேட்டினையே நினைக்கும் (253). நற்செயல்களைச் செய்கையில் அவற்றுடன் மனம் ஒன்றுபடவேண்டும், பிறர்க் கீ தலைச் செய்கையில் மனமும் அதனில் உவகையுறவேண்டும் (842). அளவை நூல்களை யறிந்தவரதுமனம் அறத்தினை எப்போதும் விடாமற் கொண்டிருக்கவேண்டும் (288). நல்லோரதுமனம் அருள் அடைந்து தங்குதற் கிடமாயிருக்கும் (243). அன்புடைப் பொருள்களோடு ஒப்புமையுடைய பிற பொருள்களைக் காணும்போது மனம் அவற்றில் ஈடுபடும், பூக்களைக் கண்டதும் தலைவனதுமனம் அவை தலைவியின் கண்களை யொக்குமென மயங்கும் (1112). தலைவியதுமனம் தலைவனை நனவிலும் கனவிலும் நினைத்துக்கொண்டேயிருக்கும் (1218). தலைவி புலவிகருதிச் செல்ல அதற்குள் அவளது மனம் விரைந்து தலைவனோடு கலந்துவிடுவதுண்டு (1259). தலைவியது மனம் தலைவனைப் பெறுதகாலத்தும் கூட்டங்கருதி வருந்தும் பெற்றகாலத்தும் பிரிவுகருதி வருந்தும் (1295). தலைவியது மனம் அவள் பிரிவுக்காலத்துத் தனித்திருந்து தலைவனை நினைக்கையில் அவளைத் தின்னுவதுபோலும் நலிவினைச் செய்யும் (1296). காதலரது மனம் நள்ளிரவிலும்

காமநோயுற்று வருந்தும் (1252). புலவியை நீக்கவரும் தலைவனைக் கண்டால் தலைவியது மனம் பொய்யாகவேனும் அவனைக்காயுதல் செய்யும் (1246). தலைவியது நெஞ்சம் காமத்தையும் நாணத்தையும் ஒருசேரத் தாங்கிக் கொண்டிருப்பதாம் (1247). ஒருவன் வாய்மை பேசுகையில் அவனதுமனம் அதனை யறிந்ததாகவேண்டும் (295). வரைவின் மகளிரது மனம் கூடா நட்புடையாரது மனம்போல ஒருவரைவிட்டொருவரிடம் வேறுபட்டுக் கொண்டேயிருக்கும் (822). புலாலுண்பவரது மனம் கொலைக்கருவியை யுடையவரது மனம்போல என்றும் அருளைநோக்காது (253).

**தீயமனம் :**

கூடாவொழுக்கமுடைய துறவிகளதுமனம் கரவடமுடையதாகி உடம்புள்ளேயிருக்கும் ஐம்பூதங்களாலும் நகுதற்கிடமாம் (271). மனம் எக்காலத்தும் யார்க்கும் சிறிதாயினும் இன்னா செயல்களை நினைத்தலாகாது (317). நீராடித் தவவேடத்தினராய் ஒழுகுவோரது மனம் மாசுடையதாக இருத்தலாகாது (278). மனம் அழுக்காறென்னும் இயல்பில்லாததாக இருக்கவேண்டும் (161). நெஞ்சம் களவென்னும் தீயொழுக்கத்தினின்றும் காக்கப்படவேண்டும் (281). மனம் பொய்மையை என்றும் விலக்கவேண்டும், இன்றேல் பின்னர் அதுவே தன்னைத்தான் வருத்திக் கொள்ளும் (293). நிறையற்ற நெஞ்சமே வரைவின் மகளிரது தோள்களை விழையும் (917). கள்ளுண்டவரது மனம் உள்ளத்தில் மறைந்திருந்ததனையும் வெளிப்படுத்திவிடும் (928). கயவரது மனம் நன்மையை யறிவாரது மனத்தைப்போலன்றி எப்போதும் கவலையற்றிருக்கும் (1072). முகத்தால் இனியவராகச் சிரிக்கும் நட்புடையாரது மனம் இன்னுத தாயின் அஃதஞ்சப்படும் (824). தான் சிறுகுவதற்குரிய எண்ணங்களை மனம் நினைத்தலாகாது (798). பொருளை விடாமையாகிய உலோபத்தையுடைய மனம் ஒருபொருளாக மதிக்கப்படாது (438).

**மனத்தின் பயன் :**

தனக்குவமையில்லாத இறைவனது தாளைச் சேர்ந்தவரது மனம் தன்னிடமுள்ள கவலைகளையெல்லாம் நீக்கிக்கொள்ளும்

(7). ஒருவனது மனம் குற்றமில்லாததானல் அதுவே அவற்கு எல்லா அறங்களுமாம் (34). மனம் ஒருவரது இயற்கையாய புலனுணர்விற்குக் காரணமாகும் (453). மனத்தூய்மை ஒருவற்கு மக்கட்பேறு புகழ் முதலிய எச்சங்களை நன்மை யாக்கும் (456). மனநன்மை மனிதர்க்கு எல்லாச் செல் வத்தையும் கொடுக்கும் (457). மனநன்மை ஒருவற்கு மறுமையின்பத்தையுண்டாக்கும் (459). மனத்திட்பம் ஒருவன் எடுத்துக்கொண்ட செயலில் திட்பத்தையும் வெற்றி யையும் கொண்டுவரும் (661). வரைவின் மகளிரது கவர்த்த மனம் தன்னை யண்டியோரது செல்வத்தையெல்லாம் கெடுத்துவிடும் (920). பிறிதோர் உயிரின் உடலைச் சுவைபட உண்டவரது மனம் அருளை நோக்காது இழந்துவிடும் (253). உட்பகையுடையமனம் ஒருவற்குச் சுற்றத்தார் வயமாகாமைக் கேதுவாய குற்றங்கள் பலவற்றையும் தரும் (884). கோடாது நடுநிலையுடைய மனம் சான்ருேர்க்கழகாம் (115). தவவேட முடைய துறவிகளது மனம் குற்றமுடையதாயின் அது தவத்தின் பயனைக்கெடுத்துவிடும் (272). கருமச்சூழ்ச்சிக்கண் செல்லும் மனம் மனையாளை வழிபடுதலாகிய அறியாமையை யடைதலில்லை (910). அருள் சேர்ந்த நெஞ்சம் இருள் சேர்ந்த நரகத்துன்பத்தில் சேர்த்தலில்லை (243). அழுக்காறுடைய வனது மனம் ஆக்கமுறுதலில்லை (உற்றதானல் அது முன்வினைப் பயனகவே கருதப்படும்) (169). தலைவனைப் பிரிந்த தலைவியது மனம்போன்று வருத்தமுடைய மனங்கள் உடலழகையும் இழந்துவிடச்செய்யும் (1250). நெஞ்சமே ஒருவற்கு உற்றசுற்றமாகும் (1300). ஒருவனது நெஞ்சமே அவற்குத் துன்பமுற்றவழி அதனை நீக்கும் துணையாகும் (1299). நாணம் என்னும் பண்பு இல்லாத மனம் ஒருவரது உடலியக்கமாகிய வாழ்க்கையைப் பயனற்றதாக்கிவிடும் (1020). மறதியின்றிக் கருதிய பொருளையே நினைத்துக் கொண்டிருக்குமனம் நினைத்த பொருளையடைவிக்கும் (540). வெகுளியை நினையாதமனம் தான் நினைத்தபேற்றையெல்லாம் உடனேயடையும் (309). கேட்ட உபதேசப் பொருளை யாராய்ந்து முதற்பொருளையுணரும் மனம் பிறப்பினை நீக்கிவிடும் (357). துன்பமென்பது ஒருவகை மனக் கோட்பாடேயன்றி உண்மையன்றென நினைக்கும் அறிவுடை யவரது மனம் நினைக்கின், வெள்ளம் போன்ற துன்பத்தையும்

இல்லா தாக்கிவிடும் (622). பொய்யாமையுடைய மனம் ஒருவனை உலகத்தார் உள்ளத்திலெல்லாம் இருக்கச்செய்யும் (294). எண்ணத்தால் சிறப்பெய்தி மாட்சிமையுற்ற அமைச்சரது வினைத்திட்பத்தை அரசரது மனம் எப்போதும் நினைத்துக்கொண்டிருக்கும் (665). நல்லோரது மனம் உற்ற துன்பத்தை நீக்கியவரது நட்பினை ஏழேழ் பிறவியிலும் மறவாமலிருக்கும் (107). பிரிவுக்காலத்தில் தலைவியதுமனம் முன்பு தலைவனுடன்புணர்ந்த நாள் இன்பத்தை நினைப்பதனுல் வாழ்வதாகும் (1206).

**மனமும் கொள்கையும் : கொள்கை :**

குற்றமற்ற சான்ரோரது கோட்பாடு செற்றங்கொண்டு ஒருவர் தமக்கின்னுதை செய்தவிடத்தும் மீண்டு செய்தவர்க் கின்னுதவற்றைச் செய்யாமையாம் (312). மாசற்ற பெரியவர்களது கோட்பாடு பிறர்விரும்புமாறு தாம் கற்ற வற்றைச் சொல்லிப் பின் அவர் சொல்வதன் பயனைக் கொள்ளுதலாம்(646). ஆய்ந்தமைந்தஅமைச்சரது கோட்பாடு பழுதுபடு வினைகளைச் செய்யாமையும் செய்தபின் பழுதுறின் அதற்குத் தளராமையும் ஆகிய இருவழிகளையுடையதென்பர் (662). ஒருவரின் கோட்பாடுகள் உலகத்துயர்ந்தோரால் பழிக்கப்படாதனவாக இருத்தல்வேண்டும் (470).

**பயன் :**

கொள்கைகள் திட்பமுடையவாக அமையுமாயின் அவை கருதியபடியே நிறைவேறும் (666). பிழைபட்ட கோட்பாடுகள் அமைச்சரிடத்திருக்குமாஞல் அருகே யிருக்கும்பகைவர் எழுபதுகோடி பெயரிலும் தீமைப்பயப்பன வாகும் (639). உயர்ந்த கோட்பாடுகள் அத்தகைய கோட்பாடில்லாதவர் இந்திரன் முதலோராயினும் அவரை இடைமுறித் தரசினையும் அழித்துவிடும் (899). உயர்ந்த கோட்பாடுகள் பிழைபடுமாஞல் ஒருவனது குலத்தையே அவையழித்துவிடும் (1019).

# 31. மாந்தர்

அறிவுடைய மனித இனத்திற்கே வள்ளுவர் அறஞ்சொன்னாலும் மனிதர், மக்கள் என்ற தலைப்பில் மனிதவிலக்கணத்தைக் கூறவில்லை. பலவதிகாரங்களிலும் கூறியுள்ளவற்றைத் தொகுக்க வேண்டியுள்ளது. மக்கட்பேறு அல்லது புதல்வரைப் பெறுதல் என்ற வதிகாரத்தில் ஓரளவு சொல்கிறார்; தமிழ், உயிர்களை உயர் திணை அஃறிணை என அறிவுடன் பிரிக்கின்றது. அவற்றுள் உயர் திணை மக்கள்; உயர் திணை யென்மனார் மக்கட்சுட்டே, மக்கள் தாமே ஆறறிவுயிரே என்பது தொல்காப்பியம். ஊறு சுவை ஒளி நாற்றம் ஓசை என்ற ஐயறிவுகளையுடைய விலங்கு முதலிய பிறவுயிர்களை யெல்லாம் விஞ்சி[37] ஆறாவதாகிய மன அறிவினையுடையவர் மனிதர் என்பது தொல்காப்பியர் கருத்து. விலங்கொடு மக்களனையர் என்றவிடத்து ஆசிரியர் இவ்வேறுபாட்டைக் கருதுவதுடன் ஆறாவது அறிவு கல்வியினால் வளருமாற்றைக் குறிப்பிடுகிறார்.

இவ்வுலகையுணர்பவன் மனிதன். உலகும் மனிதவுணர்வு அல்லது அறிவிற்குத் துணை புரிகின்றது. மனிதனே உலகில் உயர்ந்தவுயிர். இறைவன் மனிதன் முதலிய அனைத்தையும் படைத்தாலும் அப்படைப்பை உணர்ந்து பாராட்டுபவன் மனிதன்.

மக்கள் தேவர் நரகர் என இலக்கணம் பிரித்ததுபோல மக்களை உயர்ந்தோர், நடுவர், (மக்கள்) கீழோர் எனப் பிரிக்கலாம் என்பதுபற்றி முன்பும் கூறப்பட்டது. அதற்கேற்ப இலக்கண முறைக்கிறார் ஆசிரியர். உயர்ந்தோரைத் தேவர் சான்றோர் எனவும், கீழோரைக் கயவர் எனவும் ஆசிரியர் குறிக்கிறார். கடவுளரையும் மனித வடிவிலேயே இந்திய தத்துவங்கள் படைக்கின்றன. இறைவனை அந்தணன் என்கிறார் ஆசிரியர். மற்றபடி மனிதப் பிரிவுகளாக அந்தணர் வணிகர் அரசர் முதலிய இனங்களையும் அவர் குறிப்பிடுகிறார்.

கயவன் கடைப்பட்டவன் என்பதாலோ கடைசியில் கயமையை வைக்கிருர். நீத்தார் பெருமையில் சான்றோரைத் தவசிகளைக் குறிக்கிருர்.

பண்புடைமை, மானம், பெருமை, நாணுடைமை முதலிய குணங்களை உயர்ந்தோர்க்கும் பிறர்க்கடிமையாதலைக் கயவர்க்கும் இலக்கணமாக்குகிருர் வள்ளுவர்.

மக்கட்குரிய பெருங்குணங்களைக் காத்துக்கொள்ளுதலே மானம் ஆதலால் மானம் என்ற அதிகார மட்டும் மாந்தர் என்ற இத்தலைப்பில் சிறப்பாக ஆராயப் பெறுகின்றது.

அறிவறிந்த மக்கட்பேறு, பண்புடை மக்கள் என்றவிடங்களில் மனிதனின் இலக்கணத்தைச் சுருக்கமாக வுணர்த்துகிருர் ஆசிரியர். மக்கள் வீட்டிற்கு மங்கலமெனப் படுவர். [38] குடிக்கு விளக்காகிய புதல்வர் என்பது அகநானூறு.

அறிவு மக்கட்குரிய சிறப்பியல்பாக ஆசிரியரால் குறிக்கப் பெறுகின்றது. மக்களது மழலை முதலிய இன்பங்களைக் கூறுகையில் மக்களினத்தை இளமையில் வளர்ப்பதன் இன்றியமை யாமையைக் குறிக்கிருர். தந்தையின் கடனைக் குறிக்கையிலும் அதனையே வற்புறுத்துகிருர். அறிவிலும் மேம்பட்டதாகப் பண்பைக் குறிக்கிருர் ஆசிரியர். உறுப்புக்களில் மனிதராய்த் தோன்றுவதனை அவர் வெறுக்கிருர், அவன் மரம் என்கிருர். செயலில் மனிதத்தன்மை வேண்டுமென்பது அவர் கருத்து. போலியான உயர் மனித வேடத்தை அவர் மிகவும் கண்டிக்கிருர். சாதி இன முதலியவற்ருலாகும் குழுக்களை அவர் நாட்டு வளர்ச்சிக்குப் பகையென்கிருர். பெரியோர் உலகில் பிறரால் செயற்கரிய செயல்களைச் செய்பவராவர். குடிப்பிறப்பு, கல்வி செல்வம் முதலியவற்ருல் மக்களிடை உயர்வு தாழ்வு (தருக்கு) ஏற்படுவதை ஆசிரியர் விரும்பவில்லை. பணிவும் பிறர் குற்றம் பொறுத்து அவர்க்கே நன்மை செய்தலும் அவரியல்பு. உலகில் மனிதவின்பத்தின் உச்சியையடைபவன் இந்திரன் முதலிய தேவரின்பத்தை அடைந்தவனுகக் கருதப்படுவான். மக்களுட் சிறந்து வாழ்வோன் தேவரால் வழிபடப் பெறுவான். உலகில் பிற மக்களெல்லாம் உண்டுடுக்கப் பார்த்து மகிழ்வது பெருமை, அதுகண்டு பொருமைப்படுவது கயவர் செயல். அவர்க்கும்

அறத்திற்கும் தொடர்பில்லை. மனம்போற் றிரிபவர் அவர் எனவே அவர் செயல்கள் மனிதச் செயல்களாகா. மானம் மனிதத் தன்மையை உலகில் காப்பதாகும்.

## பொருளடைவு

### மக்கள் :

வீட்டில் மனையாளது நற்குண நற்செயல்களுக்கு நன் மக்கள் அணிகலம் போல்பவராவர் (60). மக்கள் அறிதற் குரியவற்றை அறிய வேண்டியவராவர், அவர் ஒருவன் பெறும் பேறுகளுட் சிறந்தவர் (61). மக்கள் பழிக்கப்படாத நற்குணங்களையுடையராதல் வேண்டும், அவரால் ஒருவற்கு ஏழு பிறப்புக்களிலும் துன்பங்களடைய மாட்டா (62). மக்கள் ஒருவரது பொருளெனப்படுவர் (63). மக்கள தறிவுடைமை உலகில் மற்றவுயிர்கட்கெல்லாம் தம்மினும் இன்பம் பயப்பதாம் (68). தம் மக்கள் சிறுகையளாவப்பட்ட உணவு அமிழ்தத்தினும் மிக்க சுவை பயப்பதாம் (64). தம் மக்களது மெய்யைத் தீண்டுதல் உடற்கின்பமாகும். அவர் சொற்களைக் கேட்டல் செவிக்கின்பமாம் (65). தம் மக்கள் மழலைச் சொற்கள் குழல், யாழ் ஆகியவற்றின் ஓசையினும் இனிமை தருவனவாம் (66). ஒருமகன் தந்தையிடம் பெறும் நன்மை, அவனைக் கற்றூரவையில் முந்தியிருக்குமாறு தந்தை செய்தலாம் (67). மகன் தந்தைக்குச் செய்யும் உதவியாவது இவனைப் பெறுதற்கிவன் தந்தை என்ன தவஞ் செய்தானோ என்ற புகழ்ச் சொல்லை யுண்டாக்குதலாம் (70). கல்வி கேள்விகளால் நிறைந்த மகன் தாய்க்களிப்பது, அவள் தானவனைப் பெற்ற போதிலும் அடையும் பெருமகிழ்ச்சியாம் (69).

### அறிவும் மக்களும் :

கற்ற மக்கள் மனிதரோடொப்பரெனில் கல்லாதவர் விலங்குகளோடொப்பர் (410). மாந்தர் கற்குமளவிற்கு அறிவூறப்பெறுவர் (396). மக்களதறிவு அவர் சேர்ந்த இனத்தினளவாக வளரும் (452). மனிதவறிவு மனத்தினு லுண்டாகும் (453).

**பண்பும் மக்களும் :**

மக்கள், உயர் மக்களோடு உறுப்பாலன்றிப் பண்பாலொத்தபோதே உண்மையான ஒப்புடையவராவர் (993). மக்கட் பண்பில்லாதவர் அரம்போலும் அறிவு கூர்மையுடையரேனும் ஓரறிவிற்குரிய மரத்தினையொப்பர் (997). நிறைந்த மொழிகளையுடைய மாந்தரது பெருமை உலகில் அவரது மறைகளாகிய நூல்களால் வெளிப்படும் (28). நன்மக்கட்குரிய சிறப்பாவது நாணுடைமையாகும், மற்ற உணவுடை முதலியன மக்கள் யாவர்க்கும் பொதுவாம் (1012). மாந்தரதுயர்ச்சி அவரது ஊக்கத்தினளவாகும் (595). மக்கள் அறிவாவது ஊக்கமுடைமையாகும், அல்லாதவர் மரம்போல்பவராவர் (600). செய்த நன்றியைக் கொன்ற மனிதன் பாவத்தினின்றும் விடுபடுதலில்லை (110). மக்களுட்பதர்போல்பவன் பயனில்லாத சொற்களைக் கொண்டாடுபவனுவான் (196). மக்களை வடிவால் முழுவதும் ஒப்பவர் கயவர், அவர் அவ்வாறொத்தலைப்போன்ற ஒப்பு வேறொரு சாதிக்கண் காண்டலரிது (1071). மக்கள். செங்கோன் முறை தவறாத அரசனைக் கடவுளாகக் கொண்டாடுவர் (388). நிலை மக்கள் போர் மறவரும், தலைமக்கள் படைத் தலைவருமாவர், தலைமக்களில்லாமல் வெறும் நிலைமக்களால்மட்டும் பயனில்லை (770). எவ்வகையாற் றெளிந்த பின்பும் செய்யும் வினைவகையால் வேறுபாடுடைய மக்கள் உலகில் பலராவர் (514). மனத்தில் மாசுடையராய் நீரில் மூழ்கிக் காட்டி அதனில் மறைந்து வாழும் மக்கள் உலகில் பலராவர் (278). பொருளீட்டத்தையே விரும்பிப் புகழை விரும்பாத மக்கள் நிலத்திற்கே பாரமாவர் (1003). நல்ல படை மறவர் அரசனுக்கு இன்றியமையாதவர் ஆவர் (746). நல்ல ஆண்மையுடையவர் இல்லாத குடி துன்பங்களால் வருந்திக் கெடும் (1030). மக்கள் மனத்தூய்மையுடையவர்க்கு நல்லவராய் அமைவர் (456). நடுவுநிலைமையுடையவனது செல்வம் அழிவுபடாமல் மக்கட்குதவியாகும் (112). மக்களே, பெற்றவர்கள் நடுவுநிலைமையுடையவரா, இல்லாதவரா என்பதனை அறிவிப்பவராவர் (114). சாதி, சமயம் முதலிய காரணங்களால் ஒன்றுபடும் மக்கட் கூட்டம் குழுவெனப்படும், அக்குழு பலவாதல் ஒரு நல்ல நாட்டிற்கு ஆகாதாம் (735).

**பெருமக்கள் :**

பெரியவர்கள் தத்தம் கருமச் சிறப்பினுல் பெருமையடைவர் (505). பெரியவர்கள் கேள்விச் செல்வத்தினுல் உயர்ந்தவராவர் (416). அவர்கள் முயற்சியால் உயர்ந்தவராவர் (611). பிறரால் செய்தற்கரிய செயல்களைச் செய்ய வல்லவராவர் (975). ஊக்கமுடைமை ஆகிய ஒளியுடையவராவர் (971). பிறப்பினுல் மற்ற உயிர்களுடன் பெரியவர்கள் ஒப்பாராயினும் செய்யும் தொழில் வேற்றுமையாலாகிய சிறப்பியல்புகளையுடையவராவர் (972). உயர்ந்த அமளிமிசையிருப்பினும் தாழ்ந்தவனுக நிலத்திருப்பினும் செயற்கரிய செய்வாரே பெரியவர், செய்யாதவர் சிறியவரென்பதாம் (973). மகளிர் போலத் தமது நிறையைக் காத்தொழுகுபவர் பெரியராவர் (974). பெரியோர் சிறியாராலன்றிப் பெரியாரால் மதிக்கப்படுபவராவர் (166). குடிமை செல்வம் கல்விகளாலாகிய மிகுதியைப் பெறினும் பெரியோரவற்ருல் தருக்கடைதலில்லை (97). புகழுக்குரிய கேட்டினையும் புகழ் நிலைத்தற்குரிய சாக்காட்டினையும் திறமுடைய பெரியவர்களே ஆக்கிக்கொள்ள வல்லவ்ராவர் (235). பெருமை ஒழுக்கத்தினுல் உண்டாவதாம் (131). பெருமையுடையவர்கள் பகைவர்பின் சென்று வாழ நினையமாட்டார்கள் (255). பெரியவர் என்றும் பணிதலன்றித் தம்மை வியந்து புனைந்துரைத்தலில்லை, சிறியவர்கள் தருக்கித் தம்மை வியந்துரைப்பர் (978).

பெரியவர் பெருமிதமற்றவராவர் (979). பெரியவர் பிறர் மானத்தையே கூறி அவமானத்தை மறைப்பர். சிறியவர் பிறர் குற்றமே கூறி நிற்பர் (980). சான்ருேர் நற்குணங்களையெல்லாம் தமக்குக் கடனுகக் கொண்டொழுகுவர் (981). உறுப்பு முதலியவற்றின் நலத்தினும் சான்ருேர் குணநலத்தையே நலமாகக் கொள்வர் (982). சான்ருேர், அன்பு நாண், ஒப்புரவு, கண்ணேட்டம், வாய்மை என்னும் ஐங்குணங்களையும் தமது சான்ருண்மையைத் தாங்கும் தூண்களாகவுடையவராவர்(983). பிறர் குற்றங்களைச் சொல்லா நலத்தையுடையவர் சான்ருேராவர் (984). சான்ருேரது படை பணிவுடைமையாகும், அதனுல்

அவர் பகைவரையும் வெல்வர் (985). இழிந்தாரிடத்திலும் தோல்வி கொள்ளுதல் சான்றோர்க்கு உரைகல்லாகிய செயலாம் (980). தீமை செய்தவர்க்கும் இனியவை செய்தல் சான்றோரது இயல்பாம் (987). சால்பின் வலிமையுடையவர் நல்குரவாகிய இழிவிற்குரியராகார் (988). சால்பாகிய கடற்குக் கரையெனப்படுவர், ஊழிக் காலத்திலும் தம் நிலை திரியமாட்டார் (989). சான்றோர் தம் சான்றாண்மையால் உலகை நிற்கச் செய்பவராவர் இன்றேல் உலகம் அழிந்துவிடும் (990). சான்றோர் இழி செயல்களைச் செய்தற்கு நாணுபவராவர் (1011). பிறவுயிர் கட்குப் பொதுவாகிய உணவு உடை எச்சம் முதலிய வற்றாலன்றி நாணுடைமையால் சிறப்பதே பெரியோர் கடனாம் (1012). சான்றோர் நாணமுடைமையையே அணியாகக் கொள்வர், நாணற்ற பீடுநடையை பிணியாகக் கருதுவர் (1014). பிறர் பழிக்கும் தம் பழிக்கும் நாணும் சான்றோர் நாணுக்குறைவிடமாவர் (1015). நாணத்தை யன்றி அகன்ற உலகையும் சான்றோர் விரும்பமாட்டார் (1016). சான்றோர் நாண் சிதையாமைப் பொருட்டு உயிரையும் துறப்பவராவர் (1017). கேட்பாரும் கண்டாரும் நாணும் பழியைச் சான்றோர் தாம் நாணுவர், அதனால் அறம் தம்மிடமிருந்து நாணி நீங்காமற்காப்பர் (1018). நலங்களையெல்லாம் அழிக்கும் நாணின்மையைச் சான்றோர் விரும்பமாட்டார் (1019). மனத்தில் நாணில் லாதவர் மரப்பாவை நாணால் இயங்குதற்போலியங்கும் இயக்கத்தைப் பெரியோர் இசையமாட்டார் (1020).

**தேவர் :**

இந்திரன் அவாவைந்தினையும் அடக்கியவரது வலிமைக்குச்சான்றுவான், தான்சாபமேற்று அவரதாற்றலை மெய்ப்பித்தவன் என்பதாம் (25). இந்திரன் ஆட்சி மிகவும் விரும்பப்படுவதாகும், அதுவும் உயர்ந்தக் கோட்பாட்டை உடையோர் வெகுள்வாராயின் கெட்டுவிடும் (899). தேவேந்திரனது சொர்க்க இன்பம் மிகவும் இன்பமுடைய தாகும், அதுவும் விரும்பும் காதலியினது தோள்களில் துயிலும் இன்பத்திற்கிணையாகாது (1103). தேவர் வானத்து வாழ்பவராவர், இவ்வுலகில் இல்லறத்தியல்புடன்

வாழ்பவர் தேவர்க்கு ஒப்பவராவர். அவராலும் பாராட்டப் பெறுவர் (*50*). தேவர் இவ்வுலகத் தில்லறத்தோர் முதலியோரால் அவி, பூசனை முதலியவற்ருல் வழிபடப் படுபவராவர் (*43*). போரில்வென்று வாகை சூடிய வீரர் சுவர்க்கத்திற்குச் சென்றுவாழும் தேவராவர் (*906*). அடக்கம் முதலியவற்ருல் மக்களில் மேம்பட்டவர்கள் தேவருலகிற் சென்று தேவராவர் (*121*). திருமால் மூவுலகையும் ஈரடியால் அளந்தவர் (*610*). திருமகளும் மூதேவியும் தெய்வமகளிரினத்தினர், திருமகள் தாமரை யிடத்தும் முயற்சியுடையாரிடத்தும் உறைவாள், மூதேவி அழுக்காறு உடையாரிடம் உறைபவளாவள் (*67*). அணங் கென்பவள் காமத்தால் கண்டாரைத் தீண்டிவருத்தும் தேவமகளாவாள் (*1081*). கூற்றுவன் உயிர்களைக் கொள்ளுபவனுவான் (*326*). கூற்றுவன் வெல்லுதற்கரிய மிக்க ஆற்றல் படைத்தவன் (*765*). கூற்றுவனது பிடியிலிருந்து தப்புதல் அரியதாகும், தவமுடையவர்க்கு அதுவும் கைகூடும் (*264*). ஒருயிர்க்கு விதிக்கப்பட்ட காலமுடிந்ததும் கூற்றுவன் தானே வந்து அவ்வுயிர்களைக் கொள்வான் (*894*). தேவர்கள் தாம் விரும்பியதெல்லாம் அடையவும் விரும்பியபடியெல்லாம் செய்யவும் வல்லவ ராவர் (*1073*). தேவர்கள் இங்குக் கற்புடைமகளிரால் வழிபடற்குரியரல்லர், அவரால் வழிபடத்தக்க தெய்வம் (தேவன்) கணவனேயாவன் (*55*). தேவர் பிறர் மனதில் உள்ளதைக் கூருமலேயறியும் ஆற்றலுடையவர் (*702*). தேவர், குடியையுயர்த்த முயலுபவர்க்குத்தாம் முற்பட்டு உதவுவர் (*1023*). காமன் தேவருள் ஒருவன், அவன் ஆண் பெண்களிடையே காதலைவளர்த்துப் பிரிவுக் காலத்தே துன்பத்தை விளைப்பவனுவான் (*1197*). உலகில் உயர்ந்தோர் உண்டென்னும் கடவுள் வீடு பிறப்பு முதலிய வற்றை இல்லையென மறுப்பவன் அலகை போன்ற வனுவான் (*850*). பேய் நெருங்குதற்கரியதாகும், அதனுல் காக்கப்படுவதாக கருதப்படும் செல்வம் பிறர்க்குப் பயன்படாதாகும் (*565*). நித்திய பூசைகளாகிய பெருமை தேவர்கட்கு மழையில்லாவிடில் இல்லையாம் (*18*).

**மக்கட்பிரிவு :**

அந்தணர் எவ்வுயிர்க்கும் தண்ணளியுடையராய் வாழ்தலின் அவர் அறவோராவர் (30). பார்ப்பனர்க்குரியது மறை ; அவர் ஓதல் ஓதுவித்தல் முதலிய ஆறு தொழில்களை யுடையவர், அவர் அரசனல் காத்தற்குரியவராவர் (560). பார்ப்பார் குலவொழுக்கத்தில் தவறினல் அவரது குலங்கெடும் (134). வாணிகஞ் செய்வோர் கொள்வது மிகைகொளாமல் கொடுப்பது குறைகொடாமல் நடுவுடன் வாணிகஞ்செய்பவராவர் (120). அரசர் படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆகிய ஆறங்கங்களையுடைய வராவர் (381).

**கயவர் :**

கயவர் மனிதவுருவமுடையாரன்றி மக்கட் பண்பற்றவ ராவர் (1071). அறத்தைப் பற்றிய கவலை நல்லோர்க் கிருப்பதைப்போலக் கயவர்க்கிருப்பதில்லை (1072). கயவர் நியமிப்பாரின்றி விரும்பியவற்றையெல்லாம் செய்து திரிவர் (1073). கயவர் பட்டிகள் போன்று வேண்டியபடியெல்லாம் ஒழுகுபவராவர் (1074). அவர் அச்சத்தாலும் அவாவாலுமே ஆசாரமுடையராய்க் காட்டிக்கொள்வர் (1075). கேட்ட மறை பொருள்களைத் தாங்கிச் சென்று பிறரிடம் கூறும் கயவர் அறையும் பறை போன்றவராவர் (1076). அவர் துன்புறுத்துவோர்க்கன்றித்தாம் உண்டு பூசிய கையையும் தெறிக்கமாட்டார் (1077). சொல்லுதலாலன்றி கொல்லுத லாலேயே கீழ்மக்கள் பிறர்க்குப் பயன்படுவர் (1078). பிறர் நன்குண்பதையும் உடுப்பதையும் கண்டு பொறாமையுற்று அவர்மேல் வடுக் காண்பவராவார் (1079). சிறு துன்பம் வரினும் கயவர் தம்மை பிறர்க்கு விற்றுவிடுபவராவர் (1080). தனியனுய்ப் பலரோடு பகை கொள்பவன் பித்துற்றவரினும் இழிந்தவனுவான் (873). இழிந்தவர் அருட்செல்வத்திற் குரியராகார், பொருட் செல்வமுடையராதல்கூடும் (241).

**பெருமக்களும் மானமும் : மானம் :**

இழிசெயல்களைச் செய்தற்குரிய இன்றியமையாதாயினும் அதனை செய்யாமையே மானமாகும் (961). புகழ் செய்யு மிடத்தும் இழிவானவற்றைச் செய்தலாகாது (962).

தாழ்வான செயல்களைக் குன்றிமணியளவு செய்யினும் மலை போல்உயர்ந்தவரும் குன்றிவிடுவர் (965). செல்வத்துப் பணிவும்,வறுமையில் உயர்ச்சியும் வேண்டும் (963). அவமதிப்பாரிடத்துச் சென்று வாழ்தல் மானக்கேடாகும் அதுபுகழையோ சொர்க்க இன்பத்தையோ தருவதில்லை (966) பகைவர் பின்சென்று வாழ்தலினும் சாதலே சிறந்ததாம் (967). பெருமையழிய வந்தவிடத்தில் அந்த உடம்பைக் காத்துக்கொண்டிருத்தலால் பயனில்லை (968). தம்முயிர் நிலையினின்றும் தாழ்ந்தவிடத்து ஒருவன் தலையினின்றும் வீழ்ந்த மயிரின் நிலையையடைவான் (964). மயிர்த்திரளில் ஒன்று நீங்கினும் உயிர் வாழாத கவரிமானைப் போன்றவர் மானமுடையவர், அவர் தமக்கு ஒரு இழுக்குவரினும் உயிரைவிடுவர் (969). இழிவுவரின் வாழாத மானமே உலகில் புகழையும் உலகோரால் தொழுதலையுமுண்டாக்கும் (970).

# 32. வாழ்க்கை

முன்பு மாந்தர் அல்லது மக்களைப்பற்றி ஆராயப் பெற்றது. இங்கு மக்கள் வாழ்க்கையைப்பற்றி ஆராயப் பெறுகின்றது. மனம் என்பதுபற்றிக் கண்ட உண்மைகள் பல வாழ்க்கைக்கும் பொருந்தும்.

பொருள், கல்வி, மனைவி, மக்கள் மற்றவுலகம் ஆகியவற்றைக் கொண்டு மனிதன் வாழும் வாழ்க்கையே வாழ்க்கை. அதனை இல்லற வாழ்க்கை துறவற வாழ்க்கையென இரண்டாகப் பிரிக்கிறார் ஆசிரியர். இல்லறத்திற்குரியது மனைவியுடன் வாழும் காதல் வாழ்க்கை. இரண்டும் அறத்தினை அடிப்படையாகக் கொண்டன. இயல்பினால் இவ்வாழ்க்கை வாழ்பவன் புகழுடையவன் ஆகிறான். வாழ்வாங்கு வாழுமவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுகின்றான். புகழொடு தோன்றாதவர் தோன்றாமையே நன்றென்கிறார் வள்ளுவர்.

நிறைமொழி மாந்தராய் நிலத்து மறைமொழிகளைத் தந்து உலகை வழிநடத்துவோர் துறவறவாழ்க்கையர்; ஐந்தவித்தவராய் அவர்கள் இந்திரனையும் விஞ்சிவிடுகின்றனர்.

பொருளும் அருளும் இவ்விருவர்க்குமுள்ள துணைகள். பொருளில்லாவிடில் இவ்வுலகமில்லை. பொருளுடைய இல்லத்தார் துறவிகளையும் தாங்குகின்றனர். அரசு முதலியவெல்லாம் பொருள் வாழ்க்கையுள் அடங்கும். இரவுடை வாழ்க்கை வாழ்க்கையே ஆகாது. அதனால் ஒரு நாட்டின் வளர்ச்சியே குன்றிப்போகின்றது. 'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்துகெடுக உலகியற்றியான்' என்கிறார் ஆசிரியர்.

கயமை வாழ்க்கையில் மனிதன் உரிமையிழந்து அடிமைப் பட்டவனாகின்றான். ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்பதில் ஒழுக்கமென்பது வாழ்க்கை யெனவாகலாம்.

மனத்தூய்மையும் செம்மையும் செய்தலே வாழ்க்கையின் குறிக்கோள். இல்லறம், துறவறம், காதல் முதலிய எவ் வாழ்க்கைக்கும் இதுவே அடிப்படை. அதேபோன்று அன்பும் புகழும் வாழ்க்கையின் பண்பும் பயனுமாகும். அறமும் புகழு முடைய வாழ்க்கையால் ஒருவன் இம்மையும், மறுமையும் அடைகின்ருன். மனித வாழ்க்கையே அன்பு செயதற்கென்கிருர் ஆசிரியர். அவ்வன்பு பிறர்க்கென வாழ்தலே என வற்புறுத்து கின்ருர்.

புகழொடு வாழாதவர் உயிர் வாழாதவரேயாவார் என்கிருர். பிறர்க்கீதலில்தான் புகழுண்டாம். ஈயமுடியாதவிடத்து உயிரை விடுக என்கிருர். பகைவர்க்கு அடங்கிவாழும் வாழ்க்கை வெறுக்கத் தக்கதாம். பிற உயிர்களை நாம் வளர்த்தால் நம் உயிர் தாமே வளரும் என்கிருர். சுவை வீரியங்களிற் சிறந்த உணவு வாழ்க்கைக்கு வேண்டும்.

இளமை, யாக்கையாகியவற்றது நிலையாமையை யுணர்ந்து வாழவேண்டும். பெரியோரைப் பிழையாமல் துன்பம் வருமுன் அறிந்து வாழவேண்டும்.

இரண்டறங்களுள் இல்லறமே சிறந்ததென்பது வள்ளுவம். உலகில் எல்லோரையும் தாங்குவது இல்லறத்தார் கடன். வருவாய்க்கேற்ப வாழ்க்கை நடத்தும் கற்புடை மனைவி வாழ்க்கைக்கு மிக இன்றியமையாதவளாவாள். பெண்வழிச் சேறலையும் பரத்தையரையும் விட்டு இறைவன் நற்ருள்களைச் சேர்தல் பிறவிக் கடலைக் கடத்தற்குரிய வழியாம்.

தவவாழ்க்கை உலகமுழுவதிலும் அன்பு செலுத்தலும் உலகம் தவசிகளிடம் பாராட்டுடைமையும் உடையதாம்; உண்மைப் பொருள்களை உணர்வதும் இருவகைப் பற்றுக்களை அறுத்தலு மாகும். மெய்யுணர்வுடைய அவர்கள் குணக்குன்றேறியவர்களாய் இந்திரனினும் சிறப்பெய்தியவராவர். செயற்கரிய செய்யும் ஆற்றலெல்லாமுடையது தவவாழ்க்கை. மனவடக்கமில்லாத் தவசியின் கூடாவொழுக்கத்தை ஆசிரியர் மிகவும் கண்டிக்கிருர்.

மக்கள் வாழ்க்கை கல்விகேள்விகளுடன் வருவாய் அறிந்து வாழ்தலிற் சிறப்புறுவது. இரந்தூண் வாழ்க்கை மிகவும்

இழிவுடையது, முயன்றுயிர் வாழ்தலே மேன்மை. கரத்தலின்றி மனமகிழ்ந்து கொடுப்பாரிடத்தாயின் இரவுதக்கது. சமூகத்தில் இரவுவாழ்க்கை சிலபோதுகளில் ஏற்படுவதுண்டு. அப்போதிர வலர்க்கு உதவுதலே சிறந்ததென்கிறூர் ஆசிரியர்.

காதல்வாழ்வில் இருவரிடையேயும் அன்பிருக்குமானல் அவர் தம் வாழ்விலே ஒரு பெருமிதமிருக்கும். உயிரோடுடம்பிடை யுறவு போல்வது உலகின் ஆண்பெண் காதல் வாழ்க்கையுறவு. தமிழகக் காதலர் வாழ்க்கை இம்மையுடன் முடிவதின்றி மறுமையிலும் தொடர்வதாகும்.

## பொருளடைவு

### அறவாழ்க்கை :

மனதில் குற்றமற்றதே எல்லா வாழ்க்கையறமும் என்பதாம் (34), அழுக்காறு, ஆசை, கோபம், கடுஞ்சொல், ஆகிய நான்கையும் கடிந்தொழுகுதலே வாழ்க்கையாம் (35). வாழ்க்கையறமென்பது முகமலர்ச்சியுடன் இன்சொல் கூறுவானிடத்ததேயாம் (93). வாழ்க்கையானது அரசனது செங்கோலை முதலாகக் கொண்டு வளர்வதாம் (543). உயிர் வாழ்க்கை அறத்தையே சிறந்த ஆக்கமாகக் கொண்டதாம் (31). வாழ்க்கை ஒழுக்கத்தை இன்றியமையாததாக உடையதாம், (வாழ்க்கையிலும் ஒழுக்கம் சிறந்ததாகக் கருதப் படும்) (131).

### அன்பு வாழ்க்கை :

மக்களதுயிர் வாழ்க்கையானது அன்போடு பொருந்து தற்கு வந்த நெறிப்பயனும் (73). அன்பு முதலாக அதன்வழி நின்றவாழ்வே உயிருள்ள வாழ்வாம் (80). அன்புடையார் தமது வாழ்க்கை முழுவதுமே பிறர்க்குப் பயன்படுவதாகும் (72). அன்பில்லாத உயிர்வாழ்க்கை நடத்துவது வன்பாலை நிலத்தில் வற்றலாகிய மரம் தளிர்க்காதவாறுபோல, இயலாததாம் (78).

### புகழ் வாழ்க்கை :

வறியார்க்கீந்து அதன்வழிப் புகழுண்டாக வாழ்தலே வாழ்க்கையின் பயனுகும் (231). மக்களாக வாழ்ந்தால்

புகழோடு வாழவேண்டும் இன்றேல் வாழாமையே நன்றும் (236). புகழ் உண்டாக வாழமாட்டாதவர் தம்மையே நொந்து கொள்வதன்றித் தம்மை இகழ்பவரை நோகமாட்டார் என்பதாம் (237). உலகநடையினையறிந்து செய்பவனே உயிர்வாழ்பவனுவான், மற்றையவர் செத்தவராவார் (214). வறியார்க்கொன்று ஈதல் இயலாதபோது வாழ்க்கையைப் போக்கிவிடுதலே இனியதாம் (230). தமக்கோரிழிவுவந்துழி உயிர்வாழாத மானவாழ்க்கையானது உலகோரால் துதிக்கப் படும் (970). தனதொரு மயிர் நீங்கினும் உயிர்வாழாத கவரிமாவனையாரது வாழ்க்கை தானதனுல் மானமெய்தும் நிலையற்றின், தானே நீத்துவிடும் (969). இகழ்வார் பின் சென்றுவாழும் வாழ்க்கை ஆகாது, அதனினும் அவன் கெட்டான் எனக் கூறப்படுதலே நன்றும் (967). உலகிற் பரந்த புகழைவேண்டி உயிரைவேண்டாத வாழ்க்கை யுடையவர் அப்புகழையே அணியாகக் கொள்வர் (777).

### வாழ்க்கை விளக்கம் :

குடிமக்களது வாழ்க்கை அரசனது செங்கோலை நோக்கியதாகும் (542). உழுதுண்டு வாழ்பவரே வாழ்பவ ராவர் மற்றவரெல்லாம் பிறரைத் தொழுதுண்டு அவரேவல் செய்பவராவர் (1033). நிலைபேறுடைய உயிர்களின் வாழ்க்கையைப் போற்றி அருளையாள்பவர்க்குத் தன் வாழ்க்கையைப் பற்றிய அச்சம் வேண்டுவதில்லை (244). வாழ்க்கைக்கு ஆக்கமாவது ஒருவனது மன நன்மையாகும் (457). வாழ்க்கை உடம்பை நிலைக்களனுகக் கொண்டு வளர்வதாகும் (1013). சுவை வீரியங்களால் மாறுபடாத உணவையுண்டால் வாழ்க்கையதனுல் கேடின்றி விளங்கும் (945). போர் பெற்றபோது மறவர்கள் அரசன் வேண்டா மெனத் தடுப்பினும் தம் வாழ்க்கையையும் அதற்கென அழித்துக்கொள்வர் (778). ஒருயிரின் வாழ்க்கையை யழித்து அதனுல் வரும் ஊனைத் தன்னுயிர் போமாயினும் உண்ணலாகாது (258).

### வாழ்க்கை நிலையாமை :

கூற்றுவன் உயிர்களின் வாழ்க்கையைக் கெடுப்பவ னுவான், அவன் கொல்லாவிரதம் உடையாரது வாழ்நாளின்

மேற்செல்லமாட்டான் (318). வாழ்க்கையானது நாளெனப் படுவதோர் வாளினல் சிறிது சிறிதாக அறுக்கப்படுவதாம் (334). உடம்போடுயிரிடையமைந்த வாழ்க்கையானது முட்டைக்கும், அதனுள் வளர்ந்த பறவைக்குமுள்ளதுபோல நிலையாததாகும் (338). நுனிக் கொம்பேறியவன் அதன் மேலும் ஏறினலடைதல்போல ஒரு வினையில் செல்லலா மளவுஞ் சென்று, மேலும் சென்ருல் வாழ்க்கையே அழிந்து விடும் (476). ஒரு வாழ்க்கையைக் கெடுப்பதில் உள்ள அச்சத்தைக் கொண்டே ஒருவனை அரசன் வினைக்குரியனுகத் தேறவேண்டும் (501). பகைவனது தருக்கினைக் கெடுக்காத வரது வாழ்க்கை அழிந்து போவதாம் (880). பெரியாரைப் பிழைத்தொழுகுவாரது வாழ்க்கை தப்பாமலழிந்துவிடும் (896). ஒருபொழுதளவும் வாழ்க்கை நிலைப்பதென்ற உறுதியில்லாதவர் கோடியினும் மேலாக வாழ்வது பற்றி நினைத்தல் வியக்கத்தக்கது (337). கேடும், துன்பமும் வருமுன் காவாத வாழ்க்கையானது தீயின் முன்னர் வைக்கோலைப் போல அழிந்துவிடும் (435). மனப்பொருத்தம் இல்லாரோடு கூடிவாழும் வாழ்க்கை என்றும் அழியக் கூடியதாகும் (890). ஒருவன் உறங்கிய பின்னர் விழிப்பது போல்வது வாழ்க்கையாகும் உறங்குவது வாழ்க்கை நீத்த சாக்காடாகும் (339).

**இல்வாழ்க்கை :**

இல்லறம் துறவறமாகிய இரண்டனுள்ளும் இல்லற வாழ்க்கையே அறமெனச் சிறப்பிக்கப்படுவதாம் (49). இல்வாழ்க்கை அறநெறியிற் செல்லுமாயின் மற்ற துறவற வாழ்க்கையாலடையும் பயன் இல்லை (46). தன்னறத்திலும் தவருத இல்வாழ்க்கை துறவறத்தையும் அவர்தம் நெறியில் ஒழுகச்செய்வதாம் (48). அதற்குரிய இயல்போடு கூடி வாழும் இல்வாழ்க்கை வானப்பிரத்த வாழ்க்கையிலும் சிறந்ததாம் (47). துணைவி மேற்செயத்தகும் அன்பும் பகுத்துண்ணும் அறமுமுடைய இல்வாழ்க்கைக்கு அவையே பண்பும் பயனுமாம் (45). பிரமச்சரியம் வானப்பிரத்தம் சந்நியாசமாகிய மற்ற மூன்றுவகை வாழ்க்கைகளுக்கும் இல்வாழ்க்கை துணையாகும் (41). துறந்தவர் ஏழைகள் தன்பால் வந்து இறந்தவர் ஆகியவர்களின் வாழ்க்கைக்கும்

இல்வாழ்க்கை துணையாகும் (42). பிதிரர், தேவர், விருந்து, சுற்றம், தான் என்ற ஐவரிடத்தும் செய்யும் அறநெறியில் தவருததது இல்வாழ்க்கையென்பதாம் (43). பழிப்பில்லாத நற்குணமுடைய மக்களைப் பெற்ருனது வாழ்க்கை ஏழேழ் பிறப்பினும் தீமையுறுதலில்லை (62). உண்ணுமல் நோற்கும் துறவிகளினும் (தாமும் உண்டு, அவர்க்கும் கொடுப்பதுடன்) பிறரது இன்னுச் சொற்களைப் பொறுக்கும் இல்லறத்தார் சிறந்தவராவார் (160). நெறி கடந்து பிறர் உரைக்கும் இன்னுச் சொற்களைப் பொறுக்கும் இல்லறத்தார் துறந்தார்போலத் தூய்மையுடையவராவார் (159). பொருள் செய்தலில் பாவத்தையஞ்சிப் பலர்க்கும் பகுத்துண்ணல் இல்வாழ்க்கைக்குரிய கடனும் (44). வாழுமியல்பினுல் உலகில் இயலும் இல்வாழ்க்கை வானின்கண் உறையும் தெய்வ வாழ்க்கையுள் ஒன்ருக இடம் பெறும் (50). இல்வாழ்க்கைக்குத் தக்க துணையாவாள் இல்லறத்திற்குத் தக்க நற்குணச் செய்கைகளையுடையளாய் கொண்டானது வருவாய்க்குத் தக்க வாழ்க்கையுடையவளாவாள் (51). இல்லாளிடத்தில் உரிய குணச் செயல்கள் இல்லாவிடில் ஒருவனது வாழ்க்கை எத்தனை மாட்சிமையுடையதாயினும் பயனில்லை (52). மனைவியோடும் இல்லறத்திருந்து பொருளையோம்பிவாழும் இல்வாழ்க்கை விருந்தினரைப் போற்றி அவற்கு உபகாரம் செய்தற்காம் (81). வந்த விருந்தை நாளும் போற்றுவானது வாழ்க்கை நல்குரவால் வருந்திக்கெடுதலில்லை (83). குற்றமில்லாதவராய்த் தன் குடியையுயரச்செய்து வாழ்பவன் உலகத்தாரால் சுற்றமாகக் கருதிச் சூழப்படுவான் (1025). தனது குடிக்குரிய வாழ்க்கையை அன்புடையதாகச் செய்து கொள்ளலே நல்லாண்மையெனப்படும் (1026). அறவியல்போடுகூடி இல்வாழ்பவன் என்பவன் பிறனுக்குரிமை பூண்டவளது பெண்டன்மையை விரும்பாதவனுவான் (147). தம் மனையாள் ஏவல் செய்வாரது வாழ்க்கை அறச் செயலையும் பொருட் செயலையும் இன்பச் செயலையும் உடையதாகாது (909). இயற்கை மதியும் செயற்கையறிவுமுடிய இல்வாழ்க்கையுடையவர் யாவர்க்கும்பொதுவாய நலத்தினையுடைய வரைவின் மகளிரது புல்லிய நலத்தைத் தீண்டமாட்டார் (915). கணவனை வழிபடுதலைப் பெறும் வாழ்க்கை

யுடைய பெண்டிற்குத் தேவரது வானுலகம் கிடைப்பதாகும் (58). வீட்டுலகின் கண்ணும் (இவ்வுலகத்தும்) நீண்டகாலம் வாழ்பவர் மலரின் கண்ணே சென்றவனது மாட்சிமைப்பட்ட அடிகளைச் சேர்ந்தவராவார் (3). பிறப்பின்றி எக்காலத்திலும் ஒருதன்மையராய் வாழ்பவர் பொறிகளை வழியாகவுடைய ஐந்தவாவினையும் அறுத்தானது மெய்யொழுக்க நெறிக்கண் நின்றவராவார் (6). வாழ்க்கையாகிய பெரிய கடலை நீந்துபவர் இறைவனடியைச் சேர்ந்தவராவார் (10).

**தவ வாழ்க்கை :**

அழியாது பிறவிதோறும் உண்டாகும் வாழ்க்கை அவாவினைக் காரணமாக உடையதாம் (361). அவாவென்னும் துன்பத்தைவிட்டால் வாழ்க்கை இன்பத்தை இடையருமல் அடையும் (369). மாட்சியற்ற வாழ்க்கை ஒருவற்கு மெய்ப்பொருளல்லவற்றை மெய்ப்பொருளாக உணரும் மயக்கத்தில் உண்டாகும் (351). இருவகைப்பற்றும் அற்றபொழுதே உலகங்களில் கொள்ளும் எழுவகைப் பிறப்புக்களுக்குரிய வாழ்க்கை அற்றுப்போகும் (349). அறவோரது வாழ்க்கை எல்லாவுயிர்கண்மேலும் தண்ணளி பூண்டொழுகுதலாம் (30). துறவு வாழ்க்கையினது பெருமையே உலகிற்சிறந்ததென நூல்களெல்லாம் கூறும் (21). முற்பிறப்பில் தவவாழ்க்கை வாழ்ந்தவற்கே இப் பிறப்பில் தவவாழ்க்கை கிட்டும் (262). இல்வாழ்க்கை யுடையவர்கள் தவவாழ்க்கையினர்க்கு வேண்டிய உண்டி, உறையுள் மருந்து முதலியவற்றை உதவுபவராவார் (263).

இருவகைப் பற்றையும் விட்டாரது வாழ்க்கைப் பெருமையையறிதல் உலகத்துப் பிறந்திறந்தாரை எண்ணி யறியலுற்றுற்போல இயலாததாம் (22). பிறப்பு வீடென்னும் இரண்டனது கூறுபாடுகளையறிந்தாரது வாழ்க்கைப் பெருமையே உலகின்கண் உயர்ந்தது (23). அறிவென்னும் அங்குசத்தால் பொறிகளாகிய யானைகள் ஐந்தனையும் காப்பவனது வாழ்க்கை வீட்டு நிலத்துக்கோர் வித்தாகும் (24). அவாவைந்தினையும் அடக்கியவனது வாழ்க்கை வலிமைக்கு இந்திரனே சான்ருவான், இந்திரன் சாபமெய்தி ஐந்தவித்த முனிவரது வலிமையை உணர்த்தியவனுவான்

(25). மக்களுள் செய்தற்கரியவற்றைச் செய்தல் பெரியவரது வாழ்க்கையினுலாகும் (26). சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற தன்மாத்திரைகள் ஐந்தனது கூறுபாட்டை யறிவார் வாழ்க்கையின் கண்ணதே உலகமாம் (27). நிறைந்த மொழியினையுடைய துறந்தாரது வாழ்க்கைப் பெருமை, உலகில் அவராணையாகச் சொல்லிய மந்திரங்களாலேயே அறியப்படும் (28). துறவு வாழ்க்கை, மெய்யுணர்வு அவாவின்மை, முதலிய நற்குணங்களாகிய குன்றின்மீது அமைவதாகும் (29). தவவாழ்க்கையின் வடிவமென்பது தம்முயிர்க்குறும் துன்பங்களைப் பொறுத்தலும், பிறஉயிர் களிடத்துத் துன்பம் செய்யாமையுமாம் (261). தவ வாழ்க்கைக்குரிய வலிமை, பகைவரைக் கெடுத்தலும் நட்பினரையாக்கலும் வல்லதாம் (264). தவவாழ்க்கை வேண்டிய பயன்களை வேண்டியவாறேயடையக் கூடியதும் இம்மைக்கண்ணே முயலத்தக்கதுமாம் (265). தவவாழ்க்கை யைச் செய்தல் ஞானம் பெற்று வீடுபெறுதலாகிய தங்கருமத்தைச் செய்தலாம் (266). உலகத்துச் செல்வ வாழ்க்கையுண்டாதல் தவவாழ்க்கையினுலாகும் (270). நெஞ்சிற்பற்றறுமல் பற்றற்ருர் போன்று வஞ்சித்துவாழும் கூடாவொழுக்க வாழ்க்கை வன்கண்மையுடையதாம் (276). துறவுவாழ்க்கையுடையவர்கள் ஐம்புலன்களையும் மற்றும் தாம் படைத்தபொருள் முழுவதையும் உடலையும் விட்டு விடுதல்வேண்டும் (343). வாழ்க்கைக்கு மனமொழி மெய்களின் அடக்கமே ஆக்கந்தருவதாகும் (122). தன் குற்றங்களைக் கண்டுகளைதல் என்பது தவவாழ்க்கைக் கின்றியமையாததாம் (190). புறங்கூறுதலைச் செய்து உயிர் வாழ்தலென்பது துறவுவாழ்க்கைக்கு மிகவும் கேடுபயக்கும் (183). கொல்லாமையுடைய துறவு வாழ்க்கையைக் கூற்று வனும் அழித்தலென்பதியலாது (326). நோயுடலும் வறுமையு முடைய வாழ்க்கையினையுடையவர் சென்ற பிறவியில் கொல்லுதலைச் செய்தவரெனப்படுவர் (330). மனமறியமெய் சொல்பவன்வாழ்க்கை தவவாழ்க்கையிலும் தலையாயதாம் (295). நெறிகடந்தார் வாய்ச்சொற்களைப் பொறுத்த லென்பது துறவுவாழ்க்கையினும் சிறந்ததாம் (159). தவத்தாலுறும் துன்பம் வருத்த வருத்தத் தவவாழ்க்கை யுடையவர்க்கு ஞானமிகும் (267). தன்னுயிரைத்

தனக்குரித்தாய்ப் பெறும் தவவாழ்க்கையை அதுபெருத மற்றையுயிர்களெல்லாம் தொழும் (268). தவவாழ்க்கையது ஆற்றல் கூற்றுவனையும் கடக்கவல்லது (269). வஞ்ச மனமுடையவனது மறைந்தவொழுக்கமுடைய தவவாழ்க்கை அவனேடு கலந்துள்ளிருக்கும் ஐம்பூதங்களாலும் நகத் தக்கதாம் (271). குற்றத்தின் கண்ணே நெஞ்சு தாழுமாயின் வான்போலுயர்ந்த தவவேடத்தாற் பயனில்லை (272). மனத்தை வழிப்படுத்தும் வலிமையற்றவனது தவவேடம் பசு புலியின் தோலைப் போர்த்து மேய்ந்தது போலாம் (273). தவவேடத்தில் மறைந்து தவம் அல்லாதவற்றைச் செய்தல் வேட்டுவன் புதரில் மறைந்து புட்களைப் பிணித்தது போலாம் (274). பற்றற்றேம் என்பாரது மறைந்த வொழுக்கம் பின்னிரங்கும் வகையான துன்பந்தரும் (275). புறவேடத்திற் செம்மையுடையவராயினும் குன்றிமணி மூக்கினைப் போல அகத்தே இருண்டிருப்பாரும் உளரென்பதாம் (277). மனத்தில் மாசுடன் தவமுடையராக நீரில் மூழ்கிக்காட்டி அதன் கண்ணே மறைந்தொழுகுவோரும் உளரென்பதாம் (278). கூடா வொழுக்கமுள்ளவர்களை வடிவாற் கொள்ளாமல் செயலாற் கொள்ளவேண்டும் (279). உலகம் பழித்த வொழுக்கங்களை விட்டுவிடின் தலைமயிரை மழித்தலும் நீட்டலு மாகிய வேடம் வேண்டாம் (280). எவ்வெப்பொருள்களை ஒருவன் துறந்தானே அவனது வாழ்க்கையில் அவ்வப்பொருள் களால் வரும் துன்பம் இல்லை (341). துறந்த பின் உண்டாகும் இன்பங்கள் பலவாகலின் இம்மைக்கண்ணே காலம்பெறத் துறவு வாழ்க்கையை மேற்கொள்ளவேண்டும் (342). பற்றப் படும் பொருள் ஒன்றின்மையே தவத்திற்கியல்பாகும்; ஒன்றுயினுமுண்டேல் அது மீண்டும் மயக்கத்திற்கேதுவாகும் (344). பிறப்பறுக்க முயலும் துறவு வாழ்க்கைக்கு உடம்பும் மற்றியாவும் மிகையாகும் (345). யானெனதென்னும் இருவகைப்பற்று மறுத்தவன் வானேர்க்குமுயரிய வீட்டுலகத்தை யடைவான் (346). இருவகைப் பற்றினையும் பற்றி விடாதவரைத் துன்பங்கள் இறுகப்பற்றி விட மாட்டாவாம் (347). முற்றும் துறந்த வாழ்க்கையுடையார் வீட்டினைத் தலைப்பட்டவராவார், மற்றையவர் பிறப்புவலையிற் பட்டவராவர் (348). விடாது வந்த பற்று விடுதற்கு இறைவனுடைய வீட்டு நெறியைப் பற்றும் வாழ்க்கை வேண்டும் (300).

**பொருளும் வாழ்க்கையும் :**

பொருள் செய்யுங்கால் பாவத்தையஞ்சி ஈட்டுதலென்பது இல்வாழ்க்கைக்குரியதாம் (*44*). மாட்சிமையற்ற வாழ்க்கை (பொருளால் எல்லாச் சிறப்பும் உண்டென்று) ஈயாத மயக்கத்தினுல் உண்டாகும் (*1002*). வருவாயறிந்து வாழாத வாழ்க்கை உள்ளதுபோல் தோன்றிக் கெட்டுவிடும் (*479*). எல்லோரையும் ஒரு தன்மையாக நோக்காமல் அவரவர் தகுதிக் கேற்ப நோக்கினுல் அதுகருதி வாழ்பவர் உலகில் பலராவார் (*528*). மக்கள் உயிர்வாழ்க்கைக்கு எண், எழுத்து இரண்டும் கண் போல்வனவாகும் (*392*). அருமையான காலத்தைச் சூதாட்டத்திற்கழிப்போனது வாழ்க்கை செல்வத் தினையும் நற்குணங்களையும் இழக்கும் (*937*). பொருளீட்டுதலை விரும்பிப் புகழை விரும்பாதவரது வாழ்க்கை நிலத்திற்குப் பாரமாகும் (*1003*).

**இரந்தூண் வாழ்க்கை :**

பிறரிடம் இரத்தல் மிகவும் இன்னுதது அதனினும் இன்னுதது தேடிய பொருளைத் தானே தனித்துண்டலாம் (*229*). பிறரால் இரக்கப்படுபவனுக ஒருவன் இருத்தலும் இன்னுததாகும், இரந்தவர் மகிழும் வண்ணம் கொடுத்த போதே அவ்வின்னுமை தீரும் (*224*). இரத்தற்கேற் புடையாரிடம் சென்றிரத்தல் பழியில்லாததாம் (*1051*). இறந்த பொருள்கள் துன்பமுருமல் கிடைக்குமாயின் இரத்தலும் இன்பத்திற்கேதுவாகும் (*1052*). கரத்தலில்லாத நெஞ்சும் மானவறிவும் உடையாரிடம் சென்றிரத்தல் ஓரழகுடையதாம் (*1053*). கரத்தலைக் கனவினும் அறியாதாரிடத்தில் இரத்தலும் (தன் புகழ்கெடவாராமையின்) வறியார்க்குத் தானீதலேபோலாம் (*1054*). கரப்பில்லாதவர் உலகத்துண்மையாற்ருன் இரப்பவரும் உள்ளனர், இன்றேல் மானத்தால் உயிரை விட்டுவிடுவர் (*1055*). கரத்தலாகிய நோய் இல்லாதாரைக் கண்டால் அம்மகிழ்ச்சியிலேயே இரப்பவற்கு வறுமையான் வரும் துன்பமெல்லாம் உடனே யழிந்துவிடும் (*1056*). அவமதித்து இழிவு சொல்லாமல் கொடுப்பவனைக் கண்டால் இரப்பாரது மனம் மகிழ்ந்து உள்ளே உவகையடையும் (*1057*). இரப்பார் இல்லையாயின் உலகத்து உள்ளாரது வரவு செலவுகள் கொடுத்துப் புகழ்

எய்தாமையின், உயிரற்ற மரப்பாவை இயந்திரக் கயிற்றால் இயங்குவது போலாம் (1058). இரந்து கொள்பவர் இல்லாத போது கொடுப்பவர்க்கு அவர் புகழ் வெளிப்படாமையின் புகழில்லை (1059). இவன் கொடுக்கவில்லையேயென்று இரப்பவன் வெகுளலாகாது (1060). கரவாது மகிழ்ந்து கொடுக்கும் நட்பினரிடத்தும் இரவாமை இரந்து பெற்றதிற் கோடி மடங்கு நல்லதாம் (1061). உலகோர் முயன்றுயிர் வாழ்தல் அன்றி இரந்துயிர் வாழ்தலாகாது, அவ்வாறு பிரமன் படைத்தானாயின் அவனும் அலைந்து கெடத்தக்கவனென்பதாம் (1062). வறுமைத் துன்பத்தை முயன்று நீக்காமல் இரந்து நீக்கக்கருதுதல் போல வலிமைப் பாடுடையது பிறிதில்லை (1063). உணவில்லாது வறுமையுற்றவழியும் இரவாமை எல்லாவுலகும் ஒருங்கு சேர்ந்த வழியும் கொள்ளாத பெருமையுடையதாகும் (1064). முயற்சியால் வந்த நீர்போலும் அடுபுற்கையேயாயினும் அதனை யுண்டலின் இனிது வேறில்லை (1065). பசுவிற்குக் குடிநீர் வேண்டி இரத்தலும் இழிவுடையதாம் (1066). கரப்பாரிடத்தில் இரத்தலாகாதென இரப்பவரெல்லாம் வேண்டத்தக்கவராவார் (1067). இரவென்னும் சேமமற்றதோணி கரத்தலென்னும் வன்னிலத்தோடு தாக்குமாயின் பிளந்து போகும் (1068). இரத்தலின் கொடுமையை நினைத்தால் நினைப்பாரதுள்ளம் கரைந்துருகுவதாகும், கரப்பாரதுள்ளம் உருகுமளவுமன்றி யழிந்துவிடும் (1069). கரப்பார், இல்லையென்றாலும் இரப்பார் உயிர் போய்விடும், கரப்பவரதுயிர் அப்போது போகாமல் நிற்பது வியக்கத் தக்கதாகும் (1070). பிறரை இரவாதவரும் இரப்பவர்க் கொன்றீபவருமாவார் உழவரென்பதாம் (1035).

**காதல் வாழ்க்கை :**

உயிர்வாழ்தலோடொப்பது தலைவன் தலைவியுடன் கூடுதல், உயிர் (வாழ்க்கை) நீங்குவதோடொப்பது அவளைத் தலைவன் பிரிதல் என்பதாம் (1124). இம்மை வாழ்க்கையில் மட்டுமின்றி இனி மறுமை வாழ்க்கையிலும் தலைவனும் தலைவியும் பிரிதலில்லை (1315). வாழ்க்கைக்கு மழையைப் போல்வது தலைவன் தலைவிக்குச் செய்யும் தலையளியாகும் (1192). தலைவனைப் பிரிந்து தமியராய் வாழ்தல் மிகவும்

துன்பத்திற்குரியதாம் (*1160*). காதலரிடத்திருந்து வரும் இன்சொற்களைப் பெருமல் வாழ்பவரினும் வன்கண்மை யுடையார் உலகிலில்லை (*1198*). காதலர் இருவர்க்கு மிடையே காதல் இருக்குமானல் உலகில் வாழ்வோம் என்ற களிப்பு இருவர்க்குமிருக்கும் (*1193*). பிரிவின்கண் காமநோய் தலைவி உய்யமாட்டாமைக்கேதுவாகும் (*1174*). நனவிடைத் தலைவனைக் காணுத தலைவி கனவிடைக் காண்பதற்காகப் பிரிவில் உயிர்வாழ்பவளாவாள் (*1212*).

# 33. விழைவு

விழைவெனப்படுவது வேண்டுதல் அல்லது விருப்பம்; ஆர்வம், வேண்டுதல் என்றெல்லாம் ஆசிரியர் இதனை ஆளுகிறார். அவா என்ற ஆசையே வேண்டுதல் என்ற கருத்தில் சிலவிடங்களில் ஆளப்பெறும். ஆனால் வேண்டத்தக்க விழைவுகளையே அளவான விருப்பங்களையே இங்கு விழைவு என்ற தலைப்பில் ஆராய்கிறோம். வாழ்க்கைக்கின்றியமையாத விருப்பங்களே விழைவுகள். வாழ்க்கையின் எல்லா நிகழ்ச்சிகளும் விழைவினால் தூண்டப் பெறுவன. தேவையான விழைவுகள் தேவையில்லா விழைவுகள் என இது பிரிக்கப்படலாம். குறளில் விரவிக்கிடக்கும் விருப்பம் என்பதுபற்றிய கருத்துக்களை இங்குத் தொகுக்கிறோம். ஆகா விழைவுகள் (அவாவறுத்தல்) போன்ற இடங்களில் பேசப்படும்.

மாபாதகச் செயல்களை விரும்பாமையும் அறம் புகழ் ஆகியவற்றை விரும்புதலும் வேண்டுமென்பது குறள் கருத்து. இன்சொல்லையும் உலகத்தையெல்லாம் ஒன்றாகச் செய்யும் நட்பினையும் விருப்பம் ஆக்கவல்லதாம். தவத்தினாலும் வினைத் திறத்தாலும் ஒருவற்குரிய விருப்பங்கள் நிறைவேறும். விருப்பம் வாய்மையின்கண் மிக வேண்டும்; காதலிருவரிடை யிருக்கும் விருப்பம் இன்ப வாழ்விற்குக் காரணமாம்.

விருப்பு வெறுப்புக்களில் அளவாகவும் சமமாகவும் இருக்கும் நிலையே நடுவுநிலைமை யெனப்படும். இறைவனுக்கும் தவசிகட்கும் உள்ள உயர்மனநிலை அதுவேயென ஆன்றோரால் கூறப்படும். (வேண்டுதல் வேண்டாமையிலான்; இருவினையும் சேரா) என்ற விடங்களில் இச்சமநிலையே பேசப்படுவது.

### பொருளடைவு

**விழைவு :**

யாவர்மாட்டும் ஏற்படும் விருப்பம் அன்பிலிருந்து தோன்றுவது, அது யாவருடனும் நட்பென்னும் சிறப்பினை யுண்டாக்கும் (74). விருப்பமும் விருப்பமின்மையும்

இறைவனுக்குரிய குணங்களல்லவாம் (*4*). வேண்டியன வேண்டியவாறே ஒருவனது தவத்தினல் எய்தப்பெறுவன வாகும் (*265*). வேண்டியனயாவும் ஒருவனது வினை நலத்தா லுண்டாகும் (*651*). உலகிற்கெல்லாம் இன்பந்தருதலின் கல்வியிலுள்ள விருப்பம் கற்றார்க்கு மேலுமேலும் உண்டாவ தாகும் (*399*). விருப்பமென்பது அச்சத்திற்கடுத்துக் கயவரது ஆசாரத்திற்குக் காரணமாவது (*1075*). காதலரது நெஞ்சத்தில் உள்ள விருப்பம் எப்போதும் புணர்ச்சியைப் பற்றியதாகவிருக்கும் (*1310*). பெரிய அறிவுடையானது விருப்பம் எப்போதும் உலகநடையை யறிந்து செய்வதில் இருக்கும் (*215*). ஒருவனுடைய சொற்கள் கேட்டாரைப் பிணிக்கும் திறமையை விரும்பியனவாக வேண்டும் (*643*). தனது விருப்பங்கள் முழுவதும் முடியும்வரைப் பிறரறியாமல் காக்கப்படுதல் நன்றாகும் (*440*). உலகோரால் விரும்பப் படுவது பழமையாக வந்த நட்பினை விடாதவரது நட்பாகும் (*809*).

பகைவரும் விரும்புவது ஒருவனது, துன்பத்தையே இன்பமாகக் கொள்ளும் உயர்ச்சியாகும் (*630*). பொருள் ஒன்றிலேயே உள்ள விருப்பம் வரைவின்மகளிரிடத்திற் காணப்படுவதாகும் (*911*). ஒருவற்கு விருப்பம் வாய்மை யின்கண் வேண்டும், அஃதவாவின்மையையுண்டாக்கும் (*364*). விருப்பம் ஒருவற்குப் புகழின்கண் உயரவேண்டும் (*1003*). ஒருவனுக்கு விருப்பம் சான்றோரால் தான் மதிக்கப்படுதலின் கண் இருக்கவேண்டும் (*922*). விருப்பம் அறம் ஆக்கம் ஆகிய இரண்டன்கண்ணும் ஒருவற்கிருக்கவேண்டும் (*163*). நலத் தின்கண் உள்ள விருப்பம் நாணுடைமையால் கைகூடுவ தாகும் (*960*). யாவரும் விரும்பும் கண்ணோட்டத்திலுள்ள விருப்பம் பயின்றார் தமக்கு நஞ்சிடக்கண்டும் அதனை யுண்ணத்தூண்டும் (*580*). விருப்பம் புகழுடன் ஒருவற்குள்ள மானத்தைக் காத்தலில் இருக்கவேண்டும் (*962*). விழைவு என்பது காதலரிருவரிடத்தும் ஒருவர்க்கு மற்றவரிடத்தில் இருப்பதாகும் (*1108*). விருப்பம் இன்சொற்குக் காரண மாகும் (*1198*). காதலர் இருவரிடத்தும் உண்டாகும் விருப்பம் காமநுகர்ச்சியின்கண் ஒப்பற்ற இன்பத்திற்குக் காரணமாகும் (*1191*). காதலரிடத்திருக்கும் விருப்பம் இன்பமுடைய வாழ்க்கைக்குக் காரணமாகும் (*1193*).

**வேண்டாமை :**

இன்பக்காலத்தில் அவ்வின்பத்தினை விழையாமை துன்பக் காலத்தில் துன்பமுறுதலைத் தடுத்துவிடும் (*629*). மன்னர் விரும்பும் பொருள்கள் அமைச்சர் முதலோரால் விரும்பற்குரிய வல்லவாம் (*692*). விரும்பத்தகாதது மனையாளியல்பின்கண் தாழ்ந்தொழுகலாகும் (*902*). விரும்பத் தகாதவர் பகைவராவர் (*584*). விரும்பத்தகாதது சூது என்பதாம் (*931*). விரும்பத்தகாதது இரந்தும் உயிர்வாழும் வாழ்க்கையாகும் (*1961*). விரும்பத்தகாதது கள்ளின்கண் உள்ள ஆவலாகும் (*921*). விரும்பத்தகாதது களவு என்ற ஒன்றுமாகும் (*284*).

# 34. வினை

அரசவினையையே (காவலும், போர்வினையும்) வினையென்பது குறிக்குமாயினும், சமூகத்தில் மற்ற அறவினையாகிய எல்லா வினைகளையும் அது குறிக்கும். மனித வாழ்க்கையே செயல்களால் ஆவது. எண்ணமும் சொல்லுங்கூட வினையிற்சேரும். இல்லறத் துறவறவினைகட்கும் இவ்வினையியல்புகள் பொருந்தும். அறமும் புகழும் என்பன வினைக்குக் காரணமும் பயனும் ஆயவை. வினையை நல்வினை தீவினையெனப் பிரித்து அதற்குரிய ஊக்கம், மடியின்மை, இடுக்கணழியாமை முதலியவற்றை இங்கு இணைத்து ஆராய்கிறோம். மனிதனுக்குரியது அறவினை அல்லது நல்வினை. விலங்கிற்குரியது தீவினை. பிறப்பு, இன்ப துன்பம் ஆகியவற்றிற் குரிய ஊழ்வினை இதனுள் அடங்குகின்றது. வினைகள் முற்பிறப்பின் வினைப்பயனால் ஆகுமென்பது கோட்பாடாயினும் அடுத்த பிறவிக்குரியவற்றை இங்கு ஆக்கிக்கொள்ளலாம். இப் பிறப்பில் உறுவனவற்றையும், அறிவு முயற்சிகளால் ஓரளவு செம்மை செய்துகொள்ளலாம். உழவு அதிகாரமும் இத்தலைப்பில் இணைத்து ஆராயப்பெறுகின்றது.

வாழ்க்கை யென்பதே அறம். அவ்வறத்தைப் பற்றிக் கூறுவதே உலகில் ஆன்றோர்களின் சொல்லும் செயலுமாக இருந்துள்ளது. நல்வினைகள் பொதுவாக அறமெனப்படும், அதுவே இன்பமாம். இன்பத்திற்குரிய வினைகள் துணிவுடன் மனம் மொழி மெய்களால் எப்போதும் இயன்றபடியெல்லாம் செய்யப்படவேண்டும். வயதாகட்டும், செல்வம் வரட்டும் எனத் தாழ்த்தலாகாது, மனித வாழ்வு அரியது, இறக்குமுன் நல்வினைகள் விரைந்தியற்றப் பெறவேண்டும். சான்றோர் புகழும் வினைகளே நல்வினைகள். ஈன்றாள் பசி காண்பானாயினும் சான்றோர் பழிப்பனவற்றைச் செய்தலாகாது.

தீவினை பாவத்திற்கும் நரகத்திற்கும் உரியது. எழுவகைப் பிறவியிலும் அழுந்தி வருந்துதற்காம் தீவினைகளைப் பேதை ஒரே பிறவியில் செய்து கொள்வானென்பதால் பாவம் அறிவினால்

(ஞானத்தால்) போக்கிக் கொள்ளத் தக்கதாம். தன்வளர்ச்சியை விரும்பும் எவனும் பாவத்தைச் செய்யலாகாது. இன்னுசெய்த வர்க்கும் இனியவே செய்தலும், உடனே இரண்டனையும் மறந்து விடுதலும் நன்றென்பது குறள். தீமை நிழல்போலத் தன்னை என்றும் கெடுத்தே தீரும். கொலை, கோபம் முதலியன தீவினைப் பகுதிகள். வறுமை, தீமைகட்குக் காரணம். வறுமையுற்ற வழியிலும் தீவினை செய்தலாகாது.

இருள்சேர் இருவினையும் இறைவன் புகழை விரும்பினரிடம் செல்லாவாம். அறிவும், செல்வமும், செயலும் ஆகியவற்றை ஆகூழ், போகூழ் என இரண்டாகப் பிரிக்கிருர் ஆசிரியர். உலகில் (ஊழ்) இயற்கை, செல்வராதலும் அறிவுடையோராதலும் என இரண்டென வேறுபடுத்திக் காட்டப்படுகின்றது.

தவம் தன்னுயிர் வளர்தற்குரியது. கருமம் உலகில் செயற்கரும் செயல்களில் ஒன்று. ஆசையை அழித்தலும் பொறை யுடைமையும் தவத்தின் வழிகளாம். இல்லத்தார் துறவிகட்கு உணவு முதலியன தந்து போற்றுதற்குரியர். தவஞ் செய்யச் செய்ய ஞானமிகும், தவம் விரும்பியதைச் செய்து முடிக்கும் பேராற்றலைத் தருவது. தவஞ்செய்தோர் உலகில் அறிவும் செல்வமும் உடையராகின்றனர். புலன்களையும் வெகுளியையும் கூற்றுவனையும் வென்று நீண்டகாலம் வாழ்வது தவத்திறனுகும்.

மிகவுயர்ந்த கோட்பாடுகளையெல்லாம் சுருக்கித்தருவது வள்ளுவர் இயல்பு. எல்லா விருப்புக்களையும் முடித்துத்தருவது செல்வம். அதனைத் தக்க முயற்சியால் ஈட்டுவதன்றி நெறியல்லா நெறியில் சென்றீட்டலாகாது. அறிவு ஆக்கம் ஆகியனவற்றைத் தரும் வினைகளையே செய்யவேண்டும்.

அரசன் அமைச்சன் ஆகியோரது வினையே அரசவினை எனப்படும். குடிகளைக் காத்தலே அவர்தம் முதல்வினை. நூலோர் சென்ற நெறியில் செல்லுதல் அவர்தம் கடன். இடம், வலி, காலம், முதலியன அறிந்து அவர்கள் வினைசெய்யவேண்டும். தவசிகள், அமைச்சர் முதலிய பெரியோர்களை அவன் பகைத்துக் கொள்ளலாகாது.

தீவினைக்கஞ்சுதலும், அனைவரிடத்தும் அன்புடையராதலும் பகைவரிடமும் பண்பு மாருமையும் அறிவார் தொழிலாகும். இனிய

சொற்களால் அவர் உலகை நடத்துவர். மனிதப் பெருமையும், சிறுமையும் செயலிற்ருன் உள்ளது. கருமம் கெடாமல் அவர் கண்ணுேடைவல்லவராவர். அறிவும் அன்புமுடைய அவர் எச் செயலையும் செய்யும் தூதுவராவர்.

உழவுத் தொழிலில் வள்ளுவர் உலகிற் சிறந்த தொழிற் கொள்கையை உணர்த்துகிருர். பகுத்துண்டு பல்லுயிரோம்புத லாகிய பொதுவுடைமை தமிழர்க்குப் புதிதன்று. இலமென்று அசைஇ இராமல் ஒவ்வொருவரும் உழைத்துப் பிழைக்கவேண்டும். தான் நேரிற் சென்று பார்க்குமளவே ஒருவர்க்கு நிலமிருத்தல் வேண்டும். மற்றவை மிகை. தொழில் உலகையெல்லாம் தாங்கவும் தான் பிறரிடம் கேளாமல் வல்லனுகுமாறும் செய்யவேண்டும். தொழில் பிறரிடம் அடிமையாகாத உரிமையுடையதாகவேண்டும்.

தக்க இடமறிந்து வினை செய்தல் வெற்றிக்குரியதாகும். அஞ்சாமையும் அதனுடன் இணைந்துவிட்டால் வேறு துணையே வேண்டாம். அரணில்லாதபோதும் அஞ்சாமை வெல்லும்.

காலமறிதலில் காலத் தருமையும் செவ்வியும் ஆகியவெல்லாம் இங்கு அடக்கிக் கூறப்பெறுகின்றன. காலம் விரைந்து கழிந்து கொண்டேயிருக்கின்றது, அஃதறிந்து விரைந்து வினைகளை முடிக்கவேண்டும். ஆனல் குடியையுயர்த்துவோர்க்குக் காலமில்லை யென்பதில், தொடங்குங் காலம் நல்லதாக இருக்கவேண்டு மென்பதில்லையென்பதே வற்புறுத்தப்பெறுகின்றது. குடிகட்கு அரசன் எளிய செவ்வியனுகவேண்டும்.

காலந்திரியினும் சான்ருேர் நிலைதிரியார். விழுப்புண்பட்ட நாளே வீரர்க்கு நல்ல நாள் என்பதில் வினையில் இடருறல் வரவேற்கத்தக்கதென விளக்கப்பெறுகின்றது.

மறவியென்பது பெருஞ் செல்வம், பேரின்பம், பெருமிதம் எனுமிவற்ருல் ஆவது, அதனைத் தடுக்கவேண்டும். பெருக்கத்தும், சுருக்கத்தும் மறவியாகாது. நூலோர் கூறிய உறுதிப்பொருட் களையும் செய்ய நினைத்த வினைகளையும் மறத்தலாகாது. புகழையும் உறுதிப் பொருட்களையும் ஒருவன் மறத்தலாகாது.

வினையில் சோம்பல், குடியாகிய விளக்கை அணைத்துவிடும். அரச செல்வம் பெறினும் மடியாகாது. மடி ஒருவனை அடிமையாக ஆக்கிவிடும்.

செல்வத்தை ஆக்குவதும் காப்பதுமாகிய ஊக்கமே ஒருவனது உண்மைச் செல்வமாகும். ஊக்கத்துணர்ச்சியே ஒருவனது வாழ்வுயர்ச்சியாகும்.

செயற்கரிய செய்தல் முயற்சியாலாகும். அதனுல் உலகில் வண்மை நிலேபெறும். ஊழையும் புறங் காணுந்திறன் முயற்சியாலாகும். மனித முயற்சிகளிற் சிறந்தது தவஞ்செய்தலாகும்.

துன்பம் இயல்பாகலின் அதனே அறிவாலும் முயற்சியாலும் கடக்க வேண்டும்.

அச்சமுடையவர் அரணிருந்தும் வெல்லமாட்டார். தீமைக் கஞ்சுதலே உண்மையான அச்சமாகும். அச்சம் பகைவர்க் கொருவனே எளியனுக்கிவிடும்.

வினே செய்யுந்திறனேப் பற்றி ஆசிரியர் பலவதிகாரங்களிற் கூறுகின்ருர். இடமறிதல் காலமறிதல் பற்றி மேலே கூறப்பட்டது. வினேசெய்கையில் தன்வலி வினேவலி மாற்ருன்வலி முதலிய பல வகை வலிமைகளேயும் ஆராய வேண்டும். இனந்தூய்மையே வினேத்தூய்மை யென்கிருர் வள்ளுவர். தக்க இனத்தைக் கொண்டு அவரோடெண்ணி அவரை நம்பி வினேசெய்வார்க்கு முடியாதன இல்லே. தாழ்த்தாமல் எடுத்த வினேயைத் தொடர்ந்து இறுதிவரையில் எச்சம் வையாமல் செய்து முடிக்க வேண்டும். தீர ஆராய்ந்து அழிவதும் ஆவதுங் கண்டு வினே தொடங்கப்பட வேண்டும். செய்யத்தக்கவற்றைச் செய்ய வேண்டும். சொல்லுதல் யார்க்கும் எளிது, அதனேச் செய்து முடித்தலே அரிது.

ஆண்மை யென்றதோர் பொருளேப்பற்றி ஆசிரியர் பல விடங்களிற் பேசுகிருர். செயற்குரிய வலிமையே அது. திரிகரணங் களிலும், இல்லம், தவம், அரசு ஆகியவற்றிலும் அவ்வாண்மை எவ்வாறு செயல்படுகிறதென இவ்விடங்களிற் கூறுகிருர்.

மனவலிமையே (திண்மையே) வினேவலிமையாகும். புலன்களே யடக்குதலே மனவலிமையாகும்.

வாய்மையைக் காத்தல் சொல்வலிமையாகும். செயற்கரிய செய்தலே செயலாற்றலாகும். உலகில் புகழைச் செய்தலும் செயலாற்றலேயாம்.

உலகம் குடிகளாலாவது. அக்குடியை உயரச் செய்தல் இல்லாண்மை. குடிக்குள் உட்பகையிருப்பின் அவ்வாண்மையே போய்விடும். பகுத்துண்டு பல்லுயிரோம்புதல் ஓர் இல்லாண்மை யாகும்.

அரசர்க்குரிய வலிமையாவது படைவலிமையும், துணை வலிமையும், வினைவலிமையுமாகும். பொருளையாக்குதலும் அவனது வலிமையின் பாற்படும். துணையுள் அமைச்சர்துணை மிக்க இன்றி யமையாததாம். சான்றோர்பகை அரசர்க்கென்றும் தோல்வி யாகும். பகைவரை யழித்தலிலும், அடக்குதலிலும் அவர்க்கிருக்கும் திறமையைப் பொறுத்ததே அவரது வலிமையாகும்.

## பொருளடைவு

### அறவினை :

அறமாகிய நல்வினை இடைவிடாமல் இல்லறத்தில் பொருள் அளவிற் கேற்பவும், துறவறத்தில் யாக்கை நிலைக் கேற்பவும், மனம் வாக்கு காயம் ஆகிய மூவகையானும் செய்யப்பட வேண்டும் (33). அறவினையே ஒருவற்குச் செய்தற் பான்மையதாகும்; ஒழிதற் பான்மையது தீவினையாகும் (40). நல்வினைகள் பிற்காலத்தாகட்டுமென்றிராமல் நாடோறும் செய்யப்பெற வேண்டும், அஃதவனைப் பிறவியுறாமல் தடுப்பதாம் (38). அறம் இல்வாழ்க்கைக்குரிய நெறியாக வேண்டும், அங்ஙனமாயின் துறவறத்திற் சென்றடைவ தொன்றுமில்லை (46).

### நல்வினை :

நல்வினைகள் மனையாளுக் கேவல் செய்பவரால் செய்யப்பட வியலாவாம் (908). நல்வினைகள் நாக்குழறி விக்கலும் வருமுன்னே ஒருவரால் செய்யப்பட வேண்டும் (335). பொய்யாமையாகிய அறம் செய்யப்பட்டால் பிற அறங்கள் செய்ய வேண்டாவாம் (297). நல்வினைகள் இன்பம் பயப்பன, அவை, துன்பம் மிகவரினும் துணிவோடு செய்யத்தக்கனவாம் (669). பிறர்க்குக் கொடுத்தலும் இன்சொற் சொல்லுதலுமாகிய இரண்டும் ஒருவன் சுற்றத் தாரிடம் செய்யத்தக்க நல்வினைகளாம் (525).

**தீவினை :**

ஏழு பிறப்பிலும் அழுந்தி வருந்துதற்காம் நரகத்திற் குரிய தீவினைகள் பேதையினல் ஒரு பிறப்பின்கண்ணேயே செய்யப்படும் (835). தீவினை யெனப்படும் மயக்கம் தீவினையுடையோரால் அஞ்சப்படாது அஃதிலாராகிய சீரியரால் அஞ்சப்படும் (201). தீவினையாகிய பகுதி சிறியதாயினும் ஒருவன் தன்னிடத்தில் தான் காதலுடைய னுயின் பிறர் மாட்டுச் செய்யப்படலாகாது (209). தன்னுயிர் அஞ்சுவதற்கேதுவாகிய தீவினைகள் உயிர்களைப் பேணி அவற்றின்கண் அருளுடையவர்க்கில்லை (244). பிறிதோருயிரை அதனுடம்பினின்றும் நீக்குந் தொழில் தன்னுயிர் நீங்குமாயினும் ஒருவனல் செய்யப்படலாகாது (327). இன்னதவாகத் தன்னல் உரைக்கப்பட்டவை பிறரிடம் செய்தல்பற்றி நினைக்கப்படலுமாகாது (316). தான் தீமை செய்யாதபோதும் தன்மீது வெகுண்டவர்க்குத் தீமை செய்தலும் கடக்கமுடியாத துன்பத்திற்கிடமாகும் (313). முன் நன்மை செய்தவர் பின்பு கொன்றலொத்த இன்னதவற்றைச் செய்யினும் அவையெல்லாம் அவர் செய்த நன்மையொன்றனை நினைக்கினும் இல்லையாகும் (109). அறனென்பதே இல்லையென்றழித்துச் சொல்லிப் பாவங்களைச் செய்தலினும் ஒருவனைப் புறங்கூறுதல் தீயதாம் (182). இன்னதவெல்லாம் பிறர்க்கின்னதன செய்தார் மேலவாம், அதனல் தமக்கின்னதன வேண்டா மென்பவர் பிறிதோருயிர்க்கு இன்னதன செய்யார் (320). தீவினைகளைச் செய்தவர் கெடுதல் ஒருவன் நிழல் நெடிதாகப் போயும் விடாதுவந்து அவனடியில் தங்கியது போலாம் (208). மனச் செருக்கால் பிறர்செய்த தீமைகள் ஒருவனது பொறையினல் வெல்லப்பட வேண்டும் (158). தமக் கின்னதனவற்றைச் செய்தாரை யொறுத்தலாவது அவர் நாணுமாறு அவர்க்கினிய உவகைகளைச் செய்து இரண்டனையும் மறத்தல் என்பதாம் (314). நடுவுநிற்றலை யொழிந்து அல்லவற்றைச் செய்தல் ஒருவன் கெடுதற் கறிகுறியாமென அறியவேண்டும் (116). தம்மை வருத்து பவரிடமும் தீவினைகளைச் செய்யாமை அறிவெல்லாவற் றுள்ளும் தலையாயதாம் (203). இன்னத செயல்கள் யார்க்கும் எக்காலத்தும் சிறிதாயினும் ஒருவனல் செய்யப்

படாமை தலையாயதாம் (317). பிறர்க்கின்னாதவற்றைப் பகலின் முற்கூற்றில் செய்தால் தமக்கின்னாதன அப்பகலின் பிற்கூற்றில் அவர் செய்யாமற் றாமே வரும் (319). தகாத வற்றைத் தன்னிடம் பிறர் செய்யினும், அவர்க்கு அதனா லுறும் நரகத்துன்பத்திற்கு அஞ்சி தான் மீண்டு அவர்க்கு அறனல்லாதவற்றைச் செய்தலாகாது (157). தீவினைகள் ஒருவன் வறியன் என்பதற்காகச் செய்யப்படல் ஆகா, செய்யின் அவன் மேலும் வறியனாவான் (205). ஒருவர்க்கு யாம் பழையமெனக்கருதி அவர்க்குத் தகாதன செய்யு முரிமை கேடுதருவதாகும் (700). வறுமையுற்ற வழியும் சால்பில்லாதவை வசையற்ற குடிமரபோடு ஒத்து வாழ விரும்புவோரால் செய்யப்பட மாட்டா (956). தமக் கின்னாதனவற்றைச் செய்தவர்க்கும் இனியவே செய்யப்பட வேண்டும் இன்றேல் சால்பினாற் பயனில்லை (987).

**ஊழ்வினை :**

எப்பகையுடையார்க்கும் உய்வுண்டாம், வினையாகிய பகை நீங்காமல் என்றும் புக்குழிப்புகுந்து கொல்லும் (207). மயக்கத்தைப்பற்றிய நல்வினை தீவினையாகிய இருவினையும் இறைவனது மெய்ம்மையுடைய புகழை விரும்பினாரிடம் சேரமாட்டா (5). செல்வத்தை யாக்குதற்குரிய ஊழுள்ள வழிச் செயலில் காலம் இடம் கருவி முதலிய யாவும் தீயவா யிருப்பினும் அவை நல்லவாம், போகும் ஊழுள்ளவழி நல்லவும் தீயவாகும் (375). கைப்பொருள் ஆதற்குரிய ஊழினால் செயலில் முயற்சியுண்டாகும், அழிதற்குரிய ஊழினால் சோம்பல் உண்டாகும் (371). இழ வூழுற்றவிடத்து அறிவு பேதமையடையும், ஆகூழுற்ற விடத்து அறிவு விரியும் (372). பேதைப்படுக்கும் ஊழுடையான் நுண்ணிய நூல் பலவற்றையுங் கற்பினும் அவனுக்கு ஊழானாகிய பேதமை யுணர்வே ஏற்படும் (373).

ஊழானாகிய இயற்கை இரண்டாம், அவை தெள்ளிய ராதல் செல்வமுடையராதலென வேறுவேறாம், அறிவிற்காகும் ஊழ் செல்வத்திற்காம் செயலுக்குதவாது, செல்வத்திற் காமூழ் அறிவிற்குதவாது (374). ஊழல்லாத பொருட்கள் வருந்திக் காப்பினும் நில்லா, ஊழுடையவை புறத்தே

கொண்டு சொரியினும் தம்மைவிட்டுப் போகா (376). பொருள்கள் கோடியை முயன்று தொகுத்தவர்க்கும் ஊழ் வகுத்த வகையினல்லாது நுகர்தலியலாது, வறுமையால் நுகர்ச்சியில்லாதவர் ஊழ்கள் உரிய துன்பங்களைக் கொடாவிட்டால் துறக்கும் கருத்துடையராவர் (378). ஏழு பிறப்பிலும் ஆழ்ந்து வருந்துதற்குரிய வினைகள் பேதையால் ஒரு பிறப்பிலேயே தேடிக் கொள்ளப்படும் (835). நல்வினை விளையுங்கால் இன்பங்களை இயைந்தனுபவிப்பவர், தீவினை விளையுங்கால் துன்பங்களை அனுபவித்தேயாகவேண்டும் (379). ஊழ்போல் வலிவுடையன இல்லை, அதனைவிலக்குதற் பொருட்டுச் செய்யுமுபாயத்தையும் அதனின் முற்பட்டுத் தடுக்கும் (380). அலரும், தலைவன் தலைவியிடத்துக் காதலும் ஏற்படச் செய்வது ஊழ் என்பதாம் (1241).

**தவவினை :**

கேடில்லாத தவவினையானது ஆசையை அடியோடு போக்குவானுயின் அவன் விரும்பியபடியெல்லாம் வரும் (367). செவ்வியகணை கொடுமை செய்ய கோடிய யாழ் நன்மை செய்யும், ஆகவே எவரையும் (தவ) வேடத்தால் அறியாமல் அவர்தம் வினையாலறிய வேண்டும் (279). தவஞ்செய்பவர் வீடு பெறுவதற்குரிய தங்கருமத்தைச் செய்பவராவர், அல்லாதன செய்வார் ஆசையுட்பட்டுப் பயனில்லாதன செய்பவராவர் (266). மக்களுட்பிறர் செய்தற்கரியவற்றைச் செய்பவர் பெரியர் அவற்றைச் செய்யமாட்டாதவர் சிறியவர் (26). தவவேடத்தில் மறைந்து தவமல்லவற்றைச் செய்தல் வேடன் புதரில் மறைந்து புட்களைப் பிணிப்பது போலாகும் (274). பிறவுயிர்க்குத் துன்பம் செய்யாமையும் தம்முயிர்க்குறு துன்பம் பொறுத்தலும், தவத்திற்கு வடிவமாகும் (261). மறுமைக்கு வேண்டும் பயனெல்லாம் அதனல் உண்டாகலின் செய்யப்படுவதாய தவம் அறிவுடையோரால் இம்மைக்கண் முயலப்படும் (265). பயனேயன்றித் தவவினையும் உண்டாவது முற்றவமுடையார்க்கேயாகும் (262). துறந்தவர்க்கு உண்டியு மருந்தும் உறையுளும் உதவவே மற்ற இல்லறத்தாரெல்லாம் தவவினையை மேற்கொள்ளவில்லை (263). தவமானது தமக்குப் பகைவரை யழித்தலும் உவந்தவரை யியர்த்துதலுமாகிய இரண்டாற்றலும் உடையதாம் (264). தீ சுடச்சுடப் பொன்

ஒளிவிட்டு விளங்குவது போலத் தவஞ் செய்பவர்க்கு அதனலுறும் துன்பம் வருத்த வருத்தப் பாவநீங்கி ஞானமிகும் (267). தன்னுயிரைத் தவத்தால் தனக்குரித்தாகப் பெற்றவனை மற்ற மன்னுயிர்கள் எல்லாம் தொழும் (268). கூற்றத்தைக் கடத்தலும் தவவலிமையுடையார்க்குக் கைகூடும் (269). உலகத்து நோற்பார் சிலர் அவர் செல்வராவர், நோலாதவர் பலர் அவர் வறியராவர் (270).

**புகழ்வினை :**

உயர்ந்தோர் புகழ்ந்த வினைகளே கடைப்பிடித்துச் செய்யப்பட வேண்டும்; செய்யாதிகழ்ந்தவர்க்கு ஏழு பிறப்பிலும் நன்மையில்லை (538). சான்றோர் பழிக்கும் வினைகள் ஈன்றுளது பசியைக் காண்பானயினும் ஒருவனல் செய்யத்தக்கனவல்ல (656). தம் ஒளி கெடுதற்குக் காரணமாய வினைகள் மேலாகக் கடவேமென்று கருதுபவர்களால் செய்யப்படலாகா (653). புகழும் அறமும் பயவாவினைகள் என்றும் ஒருவனல் தவிரத்தக்கனவாகும் (652).

**பொருள்வினை :**

ஆக்கத்தை வேண்டி முன்பிருந்த முதலையும் இழக்க வரும் வினைகள் அறிவுடையாரால் நினைக்கப்படலாகா (463). செல்வத்தையாக்கும் வினையில் ஊழ்வயத்தான் இடம் கருவி முதலிய நல்லவாயினவும் தீயவாகும், தீயன நல்லவா மாறு முண்டு (375). பொருளை விரும்பி அறிவொடு படாத வினைகள் செய்யப்படலாகா, செய்யினது அறிவாகாது (175). பொருளையாக்குதற்குரிய வினைகள் இயற்றப்பட வேண்டும் அவை பகைவரது தருக்கினை யறுத்தற்குக் காரணமாகும் (759). அரசனுக்கு வினை செய்பவன் பொருள்வருவாயில்களை விரியச் செய்து செல்வங்களை வளர்த்து உறுமிடையூறுகளை நாடோறும் நீக்கவேண்டும் (512). முயற்சியோடு கூடிய வினைகொண்டு ஒருவன் பொருளையீட்டுதல் வேண்டும் (212).

**அரசவினை :**

பொருள் வருவழிகளையுளவாக்கலும் வந்தவற்றைத் தொகுத்தலும் தொகுத்தவற்றைக் காத்தலும் காத்தவற்றை

அறம் பொருள் இன்பங்களின் பொருட்டு விடுத்தலும் அரசனது தொழிலாகும் (385). வலிமையில்லாத அரசரும் இடமறிந்து வினைசெய்தால் வெற்றியடைவர் (493). நினைத்ததைச் செய்து முடிக்கும் ஆற்றலுடையவர்க்கு அஃதில்லார் இன்னாசெய்தல் கூற்றுவனைக் கைகாட்டி யழைப்பதுபோலாம் (894). அரிய வினையும் கருவியும் காலமும் செய்து முடித்தலுமாகிய நான்கும் மாட்சிமைப் பட்டவனே அமைச்சனாவான் (631). அமைச்சன் எண்ணிச் செய்தலும் துணிந்து சொல்லுதலும் ஆகிய வினையுடைய னாவான் (634). நூலோர் கடிந்த வினைகளைச் செய்த அமைச்சர்க்கு அவை முடிந்தாலும் பின் துன்பமேயாகும் (658). குடிகளை நலியாமற்காத்து குற்றஞ்செய்தாரை யொறுத்தல் அரசனது தொழிலாம் (549). வேந்தன் தொழில் எல்லாரிடத்தும் நிகழும் எல்லாவற்றையும் நாடோறும் ஒற்றினால் ஒற்றியறிதலாகும் (582).

அறிவார்வினை :

அறிவுடையார் தொழிலாவது அஞ்சத்தகுவதற் கஞ்சுதலாகும் (428). கற்றார் தொழில் யாவருடனும் உவக்குமாறு கூடியிருந்து அவர் நினைந்துருகுமாறு நீங்கும் அத்தன்மைத்தாகும் (394). பேதையின் தொழில் தீமைக்கு நாணாமையும் ஆராயாமையும் அன்பின்மையும் எதனையும் போற்றாமையுமாகும் (833). காரியங்களை நிரல்பட இனிதாகச் சொல்வாரைப்பெறின் உலகம் அவற்றை விரைந்தேற்றுக்கொள்ளும் (648). பிறப்பால் எவ்வுயிர்க்கும் ஒரு வேறுபாடில்லை, ஆனால் செய்தொழிலது ஏற்றச் சுருக்கத்தால் பெருமை ஒவ்வாது (972). சிறப்பு சிறியா ரிடத்துண்டாயின் அஃதவர்களை சாதலின்கட்பட்ட வினைகளில் தூண்டிவிடும் (977). நட்பினைச் செய்து பகைமை செய்தொழுகுவாரிடமும் பண்புடையராயொழுக வேண்டும் (998). வெறுக்கத்தக்கன நட்டார் செய்யினது பேதமையாலோ அன்றி உரிமையாலோ இயன்ற தெனக்கொள்ளவேண்டும் (805). விரும்புவனவற்றைக் கயவர் செய்தொழுகுதல் தேவரோடொருதன்மையுடை யதாம் (1073). மக்களெய்தும் பெருமைக்கும் சிறுமைக்கும் அவரது செய்கருமமே கட்டளைக்கல்லாகும் (505).

கண்ணோட்டமுடைய வழியும் கருமம் கெடாமற்செய்பவர்க்கு உரிமையுடையதுலகம் (578). வினையழிதலை (தீவினைக்கு) நாணுதலே நாணமாகும் (1011). முடியுங் கருமத்தை முடியாதாக்கிச் செய்தாருடன் கொண்ட கேண்மையைச் சொல்லாமலே விட்டுவிடவேண்டும் (818) தோற்றப்பொலிவும் அறிவும் கல்வியுமென மூன்றுமுடையவன் தூதுவினைக்குச் செல்லவேண்டும் (684). ஆள்வினையும் அறிவுமாகிய இரண்டன் இடையறாத செயல்களே ஒருவன் குடியையுயரச்செய்யும் (1022). பேதை ஒரு கருமத்தை மேற்கொண்டால் அதுவும் புரைபடுவதுடன் தானும் தளைபூணுவான் (836).

**உழவுத்தொழில் :**

உழுதலைச் செய்யாதவரை யெல்லாம் தாங்கும் உழவர் உலகத்திற்கு அச்சாணி போன்றவராவர் (1032). பிற தொழில்களைச் செய்து திரியும் உலகமும் முடிவில் ஏர்த்தொழிலின் பின் வருதலின் உழவே தலையாய தொழிலாகும் (1031). உழுதொழில் செய்து அதனாற்றுண்டு வாழ்பவரே வாழ்பவர், மற்றையோரெல்லாம் பிறரைத் தொழுது அதனாலுண்டு அவர்பின் செல்பவராவர் (1033). நெல்லினையுடைய உழவுத்தொழிலினர் பல வேந்தரது மண் முழுவதினையும் தம்மரசன் குடைக்கீழ் காண்பர் (1034). தம் கையால் உழுதுண்டலை விரும்புபவர் தாமிரவாமையுடன் தம்மையிரப்பவர்க்கும் ஒன்றீவர் (1035). உழுதலை யுடையார் அதனைச் செய்யாராயின் யாவரும் விழையும் உணவையும் விட்ட துறவிகளுக்கும் தம் அறத்தின்கண் நிற்கும் நிலையில்லை (1036). ஒரு பலப்புழுதி கஃசளவாகுமாறு உலர்த்திவிட்டால் நிலத்திற்குப்பிடி எருவும் தேவையில்லை (1037). பயிர்க்கு ஏர் உழுதலினும் எருப்பெய்தல் நன்று, களைகட்குப்பின் நீர் கட்டுதலினும் பாதுகாப்பு சிறந்தது (1038). தொழிலிற்குரியவன் நாடோறும் சென்று பார்த்து அடுத்தன செய்யாவிடில் நிலமானது பிரிந்த கணவனிடம் இல்லாளைப் போல ஊடிவிடும் (1039). வறியமென்று சொல்லித் தொழில் செய்யாது மடிந்திருப்பாரைக் கண்டால் நிலமென்னும் நல்லாள் தன்னுள்ளே இகழ்ந்து சிரிப்பாள் (1040).

**காதல் வினை :**

காதலர் நெஞ்சத்தை யாமத்திலும் தொழில் கொள்வது கண்ணோட்டமற்ற காமமென்ற ஒன்றாகும் (1252). காதலர் ஒருவர்க்கொருவர் விரும்பாதவற்றையே செய்கின்றனர் எனினும் அவர் கண்கள் ஒருவரையொருவர் காணவே விழைவனவாகும் (1283).

**வினை : இடனறிதல் :**

மிகுந்த வலிமையுடையவர்க்கும் அரணாகிய இடம் பல ஆக்கங்களையும் தரும் (492). இடமறிந்து வினை செய்பவர்க்கு அஞ்சாமை யொன்றைத்தவிர வேறு படைத்துணையே வேண்டாம் (497). தக்க இடமானது வலிமையற்றவர்க்கும் வெற்றியைத்தரும் (493). இடமறிந்து செய்தலால் பகைவரது சூழ்ச்சிகளெல்லாம் கெட்டுவிடும் (494). சிறுபடை யுடையவனும் தக்கவிடத்தில் பெரும்படை யுடையானையும் வென்றுவிடுவான் (498). தக்க அரண் பாதுகாப்பில்லாதவ ராயினும் தமக்குரிய இடத்திலாயின் அவர் எத்தகைய வலிய பகைவரையும் வென்றுவிடுவர் (499). முதலை நீரில் வெல்லும் நிலத்திலாயின் அதனைப் பிறவெல்லும், தக்கவிடத்தில் வினை செய்தாற்றான் எவரும் வெல்வர் (495). தேர் கடலிலும் நாவாய் நிலத்திலும் ஓடா, வினைசெய்தற்குரிய இடம் வேண்டும் ( 496 ). களர்நிலத்திலாயின் யானையையும் நரி வெல்லும் தக்கவிடத்தில் மெலியவரும் வலியவரைவெல்வர் (500).

**காலமறிதல் :**

வினையை உரிய காலத்திற்செய்யின் அது உலக முழுவதையும் தந்துவிடக்கூடும் (485). நோய் தீர்க்கையில் நோயுடையானது அளவுடன் தக்க காலமும் கால நிலையும் அறியப்படவேண்டும் (949). பருவத்தோடு பொருந்தவொழுகுதல் செல்வத்தை நீங்காமற் காப்பதாகிய கயிறாகும் (482). தாழ்ந்த குடியையுயர்த்த முயலுவோர்க்குக் காலமென ஒன்று கருதப்படலாகாது (1028). செய்யா தடங்கியிருக்குங்காலத்து அடங்கியும் விரைந்துசெய்ய வேண்டுங்காலத்துச் செய்தும் வினையை முடிக்கவேண்டும் (490). யாவர் மாட்டும் ஒழுகுதலில் கைக்கொள்ளும் எளிய

செவ்வியே பண்புடைமையெனப்படும் (991). எளிய செவ்வி குடிகளின் குறைகளையாராயும் மன்னவர்க்கிருக்கவேண்டும். (548). காம ஒழுக்கத்தில் செவ்வியறியப்படவேண்டும், அதற்குரிய செவ்வி நீடித்தல் அருமையாகும் (1289). கணப்பொழுதும் முனிவர்களது வெகுளி தடுத்தற்கரியதாம் (29). நாள் என்பது காலத்தின் ஒரு கூறுபாடாகும்; நாட்கள் அறமுதலியன செய்தலால் பயன்படுவனவாகக் கழிய வேண்டும் (38). ஒவ்வொரு நாளும், உயிர் உடலோடுவாழும் காலப் பகுதியைத் தேய்த்துக்கொண்டே செல்வதாம் (334). வீரர் விழுப்புண்பட்ட நாள் பயன்பட்டநாளாகும் (776). நட்பினர் உரிமையால் பிழையாயின செய்யின் அது நன்னாளாகும் (808). காலம் விரைந்து கழிவது போன்றும் மெல்லச் செல்வது போன்றும் காணப்படும் (1169). காதலர்க்கு மாலை வருத்தமும் மயக்கமும் தருவதாகும் (1227). யாமம் என்பது காதலர் உறங்காது விழித்திருக்கும் காலமாகும் (1167). காலந்திரியினும் சான்றோர் சான்றாண்மை குன்றமாட்டார் (989).

**மறவியின்மை :**

வினைசெய்யுங்கால் பெருஞ்செல்வம் பேரின்பம் பெருமிதம் என்றிவற்றான் வருங்களிப்பில் உண்டாகும் மறவி அளவிறந்த வெகுளியினும் தீதாகும் (531). ஒருவனது புகழை அவனது மறவி கெடுக்கும் (532). அச்சமுடையார்க்கு அரணால் பயனில்லாதவாறுபோல மறவியுடையார்க்குச் செல்வத்தால் பயனில்லை (534). துன்பங்களை முன்னறிந்து காவாது மறந்தவன் பின்னாலதனை நினைந்திரங்க நேரிடும் (535). வினைசெய்வார் தஞ் சுற்ற முதலியவரிடத்தும் பெருகிய காலத்தும் சுருங்கிய காலத்திலும் மறவியில்லாமை வாய்க்குமாயின் அதனை யொப்பது பிறிதில்லை (536). நீதி நூலுடையார் புகழ்ந்து கூறியவற்றைச் செய்யாது மறந்தவர்க்கு எழுமையிலும் நன்மையில்லை (538). செய்ய நினைத்ததனையே மறவாமல் மீண்டும் நினைக்கக் கூடுமானால் அதனை நினைத்தவாறே அடைதலாகும் (540). அறத்தினை மறத்தலினும் கேடுதருவது வேறில்லை (32). மறவியென்பது கெடுந்தன்மையுடையார் விரும்பியேறும் மரக்கலமாகும்(605).

அறிவொழுக்கங்களில் குற்றமற்றூரது நட்பினை மறத்தலாகாது (106). ஒருவன் செய்த நன்மையை மறப்பதும் தீமையை மறவாமையும் அறமல்லாததாம் (108). பிறர்செய்த குற்றத்தைப் பொறுத்தல் நல்லது, அதனினும் நல்லது அப் பிழையை அப்பொழுதே மறந்துவிடுவது (152). மறந்தும் பிறர்க்குக் கேடுபயக்கும் வினைகளை எண்ணுமை வேண்டும் (204). யாவரிடத்தும் வெகுளி செய்தலை மறந்துவிட வேண்டும் (303). அரசனது காப்பில்லாவிட்டால் அந்தணர் நூல்களை மறத்தல் போன்ற மறவிகள் உண்டாகின்றன (560). தலைவியின் குணங்களைத் தலைவன் மறத்தலையறியானெனவே நினைத்தலையுமறியான் (1125). பிரிவின்கண் தலைவனையே நினைந்து கொண்டிருக்கும் தலைவி நாணத்தையும் மறந்து விடுபவளாவாள் (1297). தலைவனுடன் புணர்ச்சி கொள்ளும் தலைவி மறவியுடையளாவாள், ஊடுதலை நினைக்குமவள் அதனை மறந்து கூடுதலின்கண் செல்பவளாவாள் (1287). மறந்தும் பொருளற்ற சொற்களை அறிவுடையார் கூறமாட்டார் (199). உறுதிப் பொருளைச் செய்தலை ஒருவன் மறத்தலாகாது அருளைத் தவிர்ந்து கொடுமை செய்தொழுகுவோர் அப் பொருளை மறந்தவராவர் (246). களவினையுடையவர் பிறர் பொருளைக் கொள்ளுதற்கு அவர்தம் மறவியைப் பார்ப்பவராவர் (285.) மறவியின்மையாகிய கருவியால் ஒருவன் வினை செய்யின் அவற்கரியவென்ருகாதன இல்லை (537). புல்லியார் அவையின்கண் மறந்தும் ஒன்றினைச் சொல்லலாகாது (719). இருவர்மாட்டும் நன்மையமைந்த புகழ் நீங்காமற் காத்தலின் மறவியின்மையே வாழ்க்கைத் துணைவியின் கடமையாகும் (56).

**மடியின்மை :**

சோம்பலென்னும் மாசானது குடியென்னும் நந்தா விளக்கினை யழித்துவிடும் (601). மடி பேதைகட்குரியதாகும், அதனைக் கொண்டொழுகுதல் குடியினைத் தன்னிலும் முன்னதாக அழித்துவிடும் (603). மடி, கெடுநீர்மையுடையார் விரும்பியேறும் மரக்கலமாகும் (605). அரசசெல்வம்பெறினும் மடியுடையார் பெரும் பயனடைதலில்லை (606). மடியை விரும்பி மாட்சிமைப்பட்ட முயற்சியில்லாதவர் நட்டாரால் இடிக்கப்பட்டு இகழுஞ்சொல்லைக் கேட்பர் (607). மடிமை

பகைவர்க்கொருவனை அடிமையாக்கிவிடும் (610). சோம்பல் மூதேவியுறைதற்குரிய இடமாகும் (617). மடி செய்யாமை அரசர்க்கு நீங்காமலிருக்கவேண்டும் (383). ஆராய்ந்து துணிந்தவினை மடியின்கண் தங்குமாயின் குற்றமுடைய தாகும் (671).

**ஊக்கம் :**

ஊக்கமே ஒருவற்கு உண்மையான செல்வமாகும், அஃது அழியாச் செல்வமாகும் (591). ஊக்கமுடையவர் உள்ள ஆக்கத்தை அழிப்பினும் அதற்கெனக்கவலாது மீண்டும் தேடிக்கொள்ளுதற்குரியராவர் (593). அசையாத ஊக்கமுடையவனிடம் ஆக்கம் வழிதேடிச் செல்லும் (594). நீரினளவாகப் பூக்கள் உயர்தல்போல ஊக்கத்தினளவாக ஒருவற்குயர்ச்சியுண்டாகும் (595). உயர்ந்த பொருளில் ஊக்கஞ்செலுத்தி முதலில் தோற்பினும் அவ்வூக்கம் இறுதியில் வெற்றியளிப்பதாகும் (596). ஊக்க முடையவர் சிதைவுற்றவிடத்துத் தளராமல் போர்க்களிறு போலத் தம் ஊக்கத்தை மேலுஞ்செய்வர் (597). வண்மை யென்னுமதிப்பு உலகத்தில் ஊக்கத்தினால் உண்டாகும் (598). யானை புலிக்கஞ்சுதல்போல ஊக்கமுடையவர்க்கு எவ்வளவு வலிமையுடையவரும் அஞ்சுவர் (599). ஊக்கமே ஒருவற் கறிவாகும், ஊக்கமில்லாதவர் அறிவற்ற மரமாவர் (600). ஊக்கம் குறையாமையென்பது அரசர்க்கியல்பாகும் (382). ஊக்கஞ்செய்வதற்களவுண்டு, அளவுமீறி ஊக்கினால் செயலே கெட்டுவிடும் (473). புலி பின்வாங்கிப் பாய்வதைப்போல ஊக்கமுடையவன் ஒடுங்கிப் பின்னர் வினையை முடிக்கு மாற்றல் உடையவனாவான் (486). ஊக்கத்திற்குரிய இடமுண்டு, சிறுபடையுடையவனது இருப்பிடம் சென்று தாக்கினால் பெரும்படையும் அழிந்துபோகும் (498). அரண் முதலிய பாதுகாப்பு ஊக்கத்தையழித்துவிடும் (744). ஆக்கம் வேண்டி முதலையும் இழக்கவரும் வினைகளில் ஊக்கம் செலுத்தலாகாது (463). மாறுபாட்டிற்கெதிராதுசாய்ந் தொழுகுபவரை வெல்லக்கருதும் ஊக்கம் அழிந்துவிடும் (855). படைகொண்டார் நெஞ்சமும் ஒன்றன் உடல் சுவையை யுண்பவர் மனமும் நன்மையின்கண் ஊக்கஞ்செலுத்துத லில்லை (253).

**முயற்சி :**

முயற்சி அரிய வினைகளையெல்லாம் முடிக்கவல்லதாம் (611). குறையாக விடுபட்ட வினைக்கண் முயற்சியின்றி யிருப்பாரை உலகம் விட்டுவிடும் (612). முயற்சியில்லாவிடில் எல்லார்க்கும் உபகாரஞ்செய்தலென்பதியலாது (613). முயற்சியில்லாவிடில் எல்லார்க்கும் உபகாரம், பேடிகை வாள் போலஇயலாததாகும்(614). முயற்சியுடையவன் தனக்கின்பம் விழையாது வினையையே விரும்புபவனுய்த் தன் சுற்றத்தார் துன்பங்களையெல்லாம் நீக்கித் தாங்குபவனுவான் (615). முயற்சி செல்வத்தினை வளர்க்கும், முயற்சியின்மை வறுமை யைத்தரும் (616). முயற்சியுடையவனிடத்தில் திருமகள் உறைபவளாவாள் (617). ஊழில்லாவிடிற் குறையில்லை, ஒருவற்கு முயற்சியின்மையே பழியாகும் (618). ஊழில்லா விடினும் முயற்சி தன் மெய்வருத்தத்திற்குரிய பயனையாவது தரும் (619). தாழ்வறமுயலுந்திறமுடையவர் ஊழினையும் புறங்காண்பர் ; (620). துறவினை முயலும் வானப்பிரத்தர் முதலிய யாவரும் முயல்வாரெனப்படுவர் (47). இவ்வுலகில் ஒருவனல் முயலத்தக்கது வேண்டியவற்றை வேண்டியவாறே தரும்தவம் என்பதாம் (265). முயற்சி பொருளீட்டுதற்கண் ஒருவற்கு வேண்டுவதாகும் (212). முயற்சியால் வந்த பொருள்களை நுகர்தலே மிகச்சிறந்த இன்பமாகும் (1065). முயற்சி அமைச்சர்க்கு வேண்டுவதோரியல்பாகும் (632). ஆள்வினையென்ற முயற்சி குடியையுயர்த்துவதாகும் (1022). தாழாத முயற்சியுடையவர்க்கு எடுத்த வினைகள் சூழாமல் தாமே முடிவெய்தும் (1024).

**இடுக்கணழியாமை :**

வினையால் தனக்கு இடுக்கண் வருங்கால் அதற்கு அழியாமல் நகுவதே அதனை வெல்லுதற்கான வழியாகும் (621). வெள்ளம்போல் வரும் இடும்பையும் அறிவுடையவன் தன்னுள்ளத்தே நினைத்த வளவில்கெடும் (622). உற்ற விடங்களிலெல்லாம் துன்பத்தைப் பொறுத்து வினையைச் செலுத்தவல்ல எருதுபோல்பவன் தன்னையுற்ற இடும்பைக்கே இடும்பை தருபவனுவான் (624). துன்பம் அடுக்கிவரினும் அதற்கழியாதவன் வந்த துன்பத்திற்கே துன்பம் தருவான் (625). இடும்பை உடலுக்கு இயல்பாகும், மேலோரதனை

இடும்பையாகக்கொள்ளமாட்டார் (627). வினையால் இடும்பையுறுதல் இயல்பென்ற உணர்வு வேண்டும், அஃது இன்பத்தை விழையாது, துன்பமுறுதலும் இல்லை (628). துன்பத்தையே இன்பமாகக்கொண்டால் அது பகைவரையும் தன்னை மதிக்கச் செய்யும் (630).

**அச்சமின்மை :**

அச்சமுடையவர் வலிய அரணுக்குள் இருப்பினும் வெல்லமாட்டார் (534). கடல் அச்சம் பொருந்தியதாகக் கூறப்படும் (149). நாட்டிலுள்ளாரது அச்சம் அமைச்சரால் சந்து செய்து கொண்டேனும் நீக்கத்தக்கதாம் (680). யார்க்கும் அச்சம் கள்ளின்கட் காதலுடையாரிடம் ஏற்படாது (921). பகைவர்க்கும் களவியல் தலைவனது வலிமையின் முன் அச்சம் ஏற்படும் (1088). அச்சமென்பது கயவரதொழுக்கமாகும் (1075). அச்சம் பழிபடு செயலின் கண் ஒருவர்க்கு வேண்டும், அதுவும் பழியாய நெறியில் பொருள் தேடுதலின் கண் உண்டாகவேண்டும் (44). தீய செயல்கள் தீயினும் கொடியவென அஞ்சப்படும் (202). அவாவினை அஞ்சுதலே துறவறத்திற்கழகாகும் (366). அஞ்சத்தகுவதற்கஞ்சுதல் அறிவுடையாரது செயலாம் (428). அஞ்சாமையே வினையின்கண் உற்ற துணையாகும், அதனினும் வேறு துணை வேண்டுவதில்லை (497).

அஞ்சாமையென்பது அரசர்க்குரியதோர் சிறப்பியல் பாகும் (382). அஞ்சாமை படைக்குரிய இயல்பாகும், அது கூற்றுவனே வெகுண்டுவரினும் அஞ்சாததாம் (765). அச்சம் ஒருவனை விரைவில் பகைவர்க் கெளியனாக்கிவிடும் (863). அச்சம் அவையில் ஒன்றனைக் கூறுபவரிடம் இருத்தலாகாது (725). அச்சமுடையான் பேடியெனப் படுவான், அவைக்கஞ்சுபவன் கற்ற நூல் பேடிகை வாள் போலாகும் (727). அவைக்கஞ்சும் அச்சம் ஒருவனைக் கல்லாதவரினும் கடையனாக்கிவிடும் (729). படையினது அச்சமின்மை அதனை அரச செல்வங்களுள் எல்லாம் தலைமையாக்கும் (761). அச்சமில்லாதவர் உயிருக்கும் அஞ்சமாட்டார்கள் (778). அச்சமுடையவர் அரணை யடைந்து தம்மைக் காத்துக்கொள்வர் (741). அச்சமின்மை

ஒற்றர்க் கிருக்கவேண்டியதோரியல்பாகும் (585). அஞ்சத் தக்கவர் நட்பினர் போன்ற உட்பகைவர், அஞ்சத்தகா தவர் வாள் போன்ற வெளிப்படையான பகைவரென்பதாம் (882). அச்சம் பெரியவர்க்குச் சிற்றினத்தாரிடம் இருப்பதாகும் (451). பிறப்பு நின்ற நிலை துறவிகளால் அஞ்சப்படுவதாகும் (325). கொலை செய்தல் அஞ்சத்தக்க தொரு செயலாகும் (325). அச்சம் பிறன் மனையாளை நயப்பவனிடத்திருந்து எப்பொழுதும் நீங்காது (146). அச்சம் மனையாளது அழகு ஆட்சி முதலியவற்றின்முன் ஒருவற்கிருத்தலாகாது, அவன் நல்லவர்க்கு நல்லவற்றைச் செய்வதற்கும் அஞ்சுவான் (905). அஞ்சற்க எனத் தலைவியைத் தேற்றித் தலைவன் பிரிதல் இயல்பாகும் (1149). பிரிவு காதலரிருவர்க்கும், சிறப்பாகத் தலைவிக்கு அச்சத்தைத் தருவதாகும், தலைவன் புணர்ந்திருக்கையிலும் தலைவிக்கேற்படும் அச்சம் அவன் பிரிவானே எனக் கருதியதனாலாகும் (1152).

**வினைசெய்திறம் :**

செய்வினைத் தூய்மை ஒருவற்கு இனந்தூயனதற் பற்றுக்கோடாக உண்டாகும் (455). கருதிய வினையது வலியும் அதனைமுடிக்கும் தனது வலியும் மாற்றானது வலியும் இருவர்க்குந் துணையாயினர் வலியும் ஆய்ந்து வினைசெய்ய வேண்டும் (471). அது முடியுமிடங் கண்டாலல்லது யாதொரு வினையும் தொடங்கப்படலும் இகழப்படுதலுமாகாது (491). அதனல் அழியும் பொருளும் ஆகும் பொருளும் தன்படையும் மாற்றான்படையும் தனக்காங்காலமும் அவர்க்காங்காலமும் தான்வல்ல வினையும் அவர் வல்ல வினையும் தான்வெல்லு மிடமும் அவர் வெல்லுமிடமும் ஆகியவற்றை யெண்ணியபின் வினை செய்யப்பட வேண்டும் (675). வினைசெய்பவன் கோடா திருக்க உலகம் கோடாதாகலின் அரசன் அவனை நாடோறும் ஆராயவேண்டும் (520). வினையிடத் தெப்போதும் முயற்சி யுடையானது நட்பு வேறுபாடாக நினைக்கப்படலாகாது, அவ்வாறாயின் அவனைத் திருமகள் நீங்கிவிடுவாள் (519). இவ்வினைக்குரியவன் இவனென ஆய்ந்தபிறகு அவனை அவ்வினைக்குரியவனாக ஆக்கிவிடவேண்டும் (518). வினை செய்வானதிலக்கணத்தையும் வினையியல்பையும் முடியுங்

காலத்தையுமாராய்ந்து அவனிடம் வினை ஒப்படைக்கப்பட வேண்டும் (516). எவ்வகையால் ஆய்ந்து தெளிந்த பின்பும் செய்யும் வினையால் (கட்டியங்காரனைப்போல) மனம் வேறுபடும் மாந்தர் உலகில் பலராவர் (514). வினை செய்வாரும் அரசரதொற்றரால் ஆராய்தற்குரியராவர் (584). வினையைத் தொடர்ந்து முயலவேண்டும், வினையைக் குறையாக விட்டவரை உலகம் விட்டுவிடும் (612). கேளிரது துன்பத்தை நீக்கித்தாங்கும் தூண் போன்றவன் வினை முயற்சியையே விரும்பித் தனக்கின்பத்தை விரும்பாதவனுவான் (615). வினைசெய்தலில் திண்மையாவது அதனைச் செய்பவனது மனத் திண்மையேயாகும் (665). எண்ணத்தால் சிறப்பெய்தி மாட்சியுற்ற அமைச்சரது வினைத்திட்பம் அரசனது நிலையையுயர்த்தி அவனால் நன்கு மதிக்கப்படும் (675). வினை பகையென இரண்டின் ஒழிபும் தீயின் ஒழிபு போலப் பின்னர் கெடுப்பனவாகும் (674). காலந்தாழ்த்துச் செய்யும் வினையைத் தாழ்த்திச் செய்யவேண்டும், தாழ்க்கலாகாததைத் தாழாது செய்யவேண்டும் (672). கருவி முதலிய திட்பம் பெறினும் வினைக்கண் திண்மையை விரும்பாதாரை உலகம் விரும்பாது (670). இன்பந்தரும் வினைகள் முதலில் துன்பமிகவரினும் துணிந்து செய்யப்படுதல்வேண்டும் (669). மனந்தெளிந்து செய்வதாகத் துணிந்த வினைக்கண் பின்னசைதலின்றி நீடித்தலையொழித்துச் செய்யவேண்டும் (668). வினைசெய்பவனது முறைமையாவது அவ்வினையின் உளப்பாடறிவானது உள்ளத்தையுணர்ந்து கொள்ளுதலாகும் (677). ஒருவினையால் மற்றொரு வினையை முடித்துக் கொள்வது ஒரு மதயானையால் மற்றொரு யானையைப் பிணிப்பது போலாம் (678). வினைக்கண் மாட்சியில்லாதார் மாட்டு உரிய மாட்சியெல்லாமிருப்பினும் அரணாற் பயனில்லை (750). வினைக்கண் நல்லகாப்பாவது நட்புப் போல வேறொன்றுமில்லை (781). வினைதொடங்குதற்குக் கையிற் பொருள் வேண்டும், அவ்வாறு தொடங்குவது குன்றின் மேலிருந்து கீழே நடக்கும் யானைப் போரைக் காண்பது போலாகும், அச்சமும் வருத்தமு மின்றி வினை முடியுமென்பதாம் (758). உபாயமறிந்து துன்பம் பொறுத்து செய்து முடிப்பானிடமல்லது அன்புடையவனென்பதற்காக ஒருவனிடம் வினை விடப்படலாகாது (515). கருமமும் முடிக்கு

முபாயமும் எண்ணியபின் தொடங்க வேண்டும், தொடங்கிய பின் எண்ணுவ மென்பது குற்றமாகும் (467). தொடங்கிய கருமம் முடியாமையின் வேறுகருமத்தைத் தொடங்கமாட்டே னென்னும் முயற்சி–பெருமைப் போல்வது வேறில்லை (1021). செய்யத்தக்கன அல்லா தவற்றைச் செய்தலாலும் செய்யத் தக்கவற்றைச் செய்யாமையானும் கேடுண்டாகும் (466). செய்தற்கரிய வினைகளைப் பெறற்கரிய காலம் வந்தால் அப்போதே செய்து முடிக்க வேண்டும் (489). பின் இரக்கப் படுதற்காம் வினைகளைச் செய்தலாகாது செய்யின் மீண்டும் அவை போல்வனவற்றைச் செய்தலாகாது (655). செய்யப் படும் வினை முன்பெல்லாம் புலப்படாமல் முடிவில் புலப்படுமாறு செய்யப்பட வேண்டும், இன்றேல் இடையில் புலப்பட்டுத் துன்பந்தரும் (663). வினையைச் சொன்னது போலச் செய்துமுடித்தல் அரிதாகும், சொல்லுதல் யாவர்க்கும் எளிதாகும் (664). வினைமுடிதற்காம் முயற்சியும் வரும் இடையூறும் முடிந்தாலுறுபயனும் ஆராய்ந்து செய்ய வேண்டும் (676). வினை மறவாமை யென்னும் கருவியால் எண்ணிச் செய்யப்படுமாயின் செய்தற்கு அரியதொன்றில்லை (537). அன்பே பற்றுக்கோடாக வினைக்குரியனாக ஒருவனைத் தெளிதலாகாது (507).

**வலியறிதலும் வினையும் :**

**ஆற்றல், வலிமை, மனவலிமை:** மனவலிமையே ஒருவன் வினை செய்தலிலுள்ள வலிமையாகும் மற்றவெல்லாம் திட்பமாகா (661). பேராண்மை யென்பது அஞ்சாமையே யாகும் (773). புலன்களிற் செல்கின்ற அவாவைந்தினையும் அடக்குவது ஆற்றலாகும் (25). ஒருவற்கு வலிமையாவது ஊக்கமுடைமையாகும் (600). அசையாத கற்பென்பது பெண்களுக்குரியதொரு வலிமையாகும் (54). சான்றாண்மை யென்பது மக்கட்குரியதோர் வலிமையாகும் (988). எண்ணிய எண்ணம் திட்பமுடையதாகலின் அவன் எண்ணியதனை எண்ணியபடியே அடைவான் (666).

**சொல்லாற்றல் :**

அரசன் தானுணராமலும் சொல்வதைக் கேளாமலும் இருப்பினும் உறுதிப்பொருள்கள் அமைச்சனல் சொல்லப்

படவேண்டும் (638). தம்மரசற்குறுதி பயக்கும் சொற்களை வேற்று வேந்தரிடைச் சொல்பவனே தூதனுவான் (690). வாய்மையைத் தவருமல் ஒருவன் காத்தலே எல்லா வாற்றல்களிலும் சிறந்ததாகும் (297). நல்லாரவைக் கேற்பச் சொல்லுதலென்பது ஓராற்றலாகும், அவனை மாறுபாட்டின்கண் வெல்லுதல் யார்க்குமரிதாகும் (647).

**செயல் வலிமை :**

போர்க்களத்தில் தலைவனது செயலாற்றல் யாவரும் அஞ்சத்தக்கதாகும் (1088). மாறுபாட்டுடன் கூடிய செயல் வலிமையும் அரனெடு பொருந்தினல் மிக்க ஆக்கத்தைத் தரும் (492). செய்யும் வினையது வலியும் செய்யும் தனது வலியும், பகைவரது வலியும் துணையாயினர் வலியும் ஆராய்ந்தபின் செயலில் இறங்கவேண்டும் (471). வினை செய்கையில் முதலில் தம்வலி அளந்தறியப்படல் வேண்டும், இன்றேல் வினை தொடங்கியபின் அஃதிடையில் முறிந்துபோகும் (473). வினைகடைசியில் புலப்படுமாறு செய்தலே ஆண்மை யெனப்படும் (663). பேராண்மையை நிறுத்த வேண்டுபவர் செல்வ மிகுதியினும் இழிந்தவற்றைச் செய்தலாகாது (962). பெருமையுடையவரது ஆற்றலாவது மற்றவரால் ஆற்றுதற்கரிய செயல்களைச் செய்து முடித்தலாம் (975). உலகில் பொன்ருது நிற்கும் புகழைச் செய்தலென்பது ஒரு ஆற்றலாகும் (234). வலிமையையே விரும்புவதென்பது தலைவனுக்கு (ஆண்மகனுக்கு) இருக்க வேண்டியதொரு இயல்பாகும் (1263). திறமையில்லாதவர் முறையாக எண்ணியும் தம்மால் முடியாதவற்றையே செய்து கொண்டிருப்பர் (640).

**இல்லாண்மை :**

பிறந்த குடியை ஆண்மையுடையதாக்கிக் கொள்ளுதலே நல்லாண்மையெனப்படும் (1026). பிறன் மனையாளை விரும்பி நோக்காமையே பேராண்மையாகும், அதுவே அறனும் சிறந்த ஒழுக்கமுமாம் (148). மனையாளுக்கேவல் செய்தொழுகும் ஆண்மையினும் நாணமுடைய பெண்மையே பெருமையுடையதாகும் (907). தலைவனைக் காணுத காலத்துத் தலைவியதாற்றல் போய்

விட்டது போன்ற நிலையுறுகின்றது (1133). தலைவியின் நல்லாண்மையென்னும் புணை காமமென்னும் வெள்ளத்தில் ஈர்த்துச்செல்லப்படுவதாம் (1134). பிறர்க்குற்ற பசியைப் போக்குதல் என்பது ஓராற்றல், அது பசியேயில்லாம லாக்கும் தவத்தாற்றலினும் சிறந்ததாம் (225). உட்பகை யுற்ற குடியினது வலிமை அரத்தாற் பொரப்பட்ட பொன்போற் றேய்ந்துவிடும் (888).

**தவவலிமை :**

தவவலியற்றவன் தவக்கோலம் கொண்டு கூடா வொழுக்கத்தனுதல் எருது புலித்தோலைப் போர்த்து மேய்ந்தாற்போலுமாம் (273). புலன்களுக்குரிய அவா வைந்தனையும் அடக்கியவனது ஆற்றல் உயர்ந்ததாகும், அதனதாற்றல் சாபம் அருள் என இருவகைப்படும் (25). வெகுளியையடக்கிக் கற்றடங்குதலென்பது ஆற்றலாகும் (130). உயிர் முதலியவற்றை அளத்தலென்ற ஆற்ற லுடையவர் களவாகிய இருண்டவறிவினையுடையராகார் (287). தவவலிமையுடையவர்க்குக் கூற்றுவனையும் வெல்லும் திறமுண்டாகும் (269). தம்மின் மெலியார்மேல் வெகுண்டெழுமிடத்துத் தம்மினும் வலியார்முன் தம் நிலைமையை நினைக்கவேண்டும் (250).

**அரசாண்மை :**

அரசர் தம் மகிழ்ச்சிக்கண் வலிமையுறுகின்றனர், அவ்வலிமை மறவியினல் கெட்டுவிடும் (539). மாறு பாட்டுடன் கூடிய அரசரது வலிமையும் அரணைக் கொண்டால் மேலும் பெருமையடையும் (492). அரசர் தம்மினும் வலியாரைப் பகைத்தலாகாது, மெலியாரைப் பகையாதிருத்தலும் ஆகாது (861). பொருள் வருவழிகளை யுளவாக்கலும் வந்த பொருளைத் தொகுத்தலும் அதனைக் காத்தலும் காத்தவற்றை வகுத்துச் செல விடுதலும் அரசனது ஆற்றலின்பாற்படும் (385). எடுத்துக் கொண்டதனை முடிக்கக்கூடிய அமைச்சர் முதலியோரது ஆற்றல் அரசனல் இகழப்படலாகாது (891). தவமுதலிய ஆற்றலுடையவர்க்கு அஃதில்லாதார் இன்னுசெய்தல் கூற்றுவனைக் கைகாட்டியழைப்பது போலாம் (894).

பகைவர்க்குத் துணைவரைப் பிரித்தலும் தம்பாலாரைப் பேணிக் கொள்ளுதலும் தம்மிடத்திற் பிரிந்தவரைப் பொருத்திக்கொள்ளுதலும் ஆகிய வல்லமை அமைச்சர்க் குரியதாம் (633). மாட்சிமைப்பட்ட அமைச்சரது வினைத் திட்டமானது அரசர்க்குப் பலபேறுகளை உளவாக்கலின் அவனால் என்றும் மதிக்கப்படுவதாகும் (665). திண்மை யென்பது அரணுக்கிருக்கவேண்டிய அமைதிகளுள் ஒன்றாம் (743). கூற்றுவனே வெகுண்டெதிர்வரினும் நெஞ்சொத்தெதிர்க்கவல்ல ஆற்றல் படைக்குவேண்டும் (765). வலிமையில்லாதவரும் இடமறிந்து வினைசெய்தால் வெற்றிபெறுவர் (493). ஊழ்போல்மிக்க வலிமை யுடையது வேறில்லை, அதனை விலக்குதற்குரிய உபாயத்தைச் சூழினும் அதனையுமுற்பட்டு அழிக்கு மாற்றல் அதற்குண்டு (380). மிகுதியாக மயிற்பீலி ஏற்றின் சகடமும் அச்சு முறியுமதுபோலப் பகைவர் மெலியராயினும் அவர்பலர் தொக்கவழி அவரது வலிமை தன்னையழித்து விடும் (475). செல்லலாமளவுஞ்சென்று அரசன் பகைவர் மேன் மேலும் செல்வனாயின் அவன்வினைமுடியாது உயிர் முடிந்துவிடும் (476). தன் வலியளவறியாமல் தன்னை வியந்து அயல்வேந்தருடன் பகைத்தவரசன் விரைந்து கெடுவான் (474). தமக்கியலும் வினைக்கு வேண்டிய வலிமை முதலில் அறியப்படவேண்டும், பின்பதனில் மனமொழி மெய்களை ஈடுபடுத்திச் செல்லின் முடியாத வினைகளில்லை (472). படை, அரண், நட்பு முதலிய திட்பங்களிருப்பினும் அரசர்க்கு வினைத்திட்பம் மிகவும் இன்றியமையாததாகும் (670). பெருந்தேர்க்கச்சாணி சிறியதாயினும் வலிமையிற்பெரியது, அதுபோல உருவு சிறுமையுடையோரும் வினைவலிமை மிக்குடையராதற் கூடும் (667).

இரண்டாம் பகுதி

# பிற பொருள் அகராதி

# அணி : அணிகலன்

**அணி :**

அணிகள் உடலுக்கழகும் பெருமையும் தருவனவாம். பணிவுடைமை முதலிய குணங்களும் அணியிலும் சிறந்தனவாகக் கருதப்படும் (95).

அணிபோல்வதாய மற்றொரு குணம் நெஞ்சத்து நடுவு நிலைமையாம் (115).

கண்ணிற்கு அணிகலம் போல்வது கண்ணோட்டமாம் (575).

மடமும் நாணமுமாகிய இயற்கையழகுகளே உண்மையான அணிகலன்களாம். இவற்றையுடைய மகளிர்க்குப் பிறவணிகளை யணிதல் அழகாகாதென்பது (1089).

**தொடி :**

பிரிவு முதலிய துன்ப காலத்தில் தலைவி உடல் மெலிகையில் வளை முதலிய அணிகள் கழன்று வீழ்வனவாகும் (1234).

**கழல் :**

கழல் ஆண்கள் (வீரர்) காலில் அணிவதாகும்; அது வீரத்திற்கும் வெற்றிக்கும் அடையாளமாம், புகழை விரும்பாதவர் கழலை அணிதல் வெறும் அழகுக்கே யென்பதாம் (777).

**வளை :**

வளை பெண்கள் முன்கையில் அணிவதாகும், அது தலைவனது பிரிவுக்காலத்துண்டாகும் மெலிவினால் கையினின்றும் நெகிழ்வதாம் (1157).

**பொன் :**

பொன் அணி செய்தற்குரியது; மதிப்புடையதாகக் கருதப் படுவது; மனத்திலும் காப்பான இடங்களிலும் வைத்துக் காக்கப் படுவது; பொறுமையுடையவர் போற்றப்படுதற்கிது உவமை (155).

பொன் ஒளியுடையதாம்; அது உருக்க உருக்க ஒளி மிகுவதாம், துன்பம் வருத்த வருத்த நோற்பதற்கிது உவமையாம் (*267*).

பொன்னால் அணிகளைச் செய்தபின் பொற்கொல்லர் அதனை அழகு செய்தற்கும் ஒழுங்கு செய்தற்கும் அரத்தால் அராவுவரென்பதாம்; அப்போதது சிறிது எடை குறையும்; மேலுமேலும் தேய்க்கும் உருண்டைப்பொன் அடியோடு மறைந்துவிடும், உட்பகையுற்ற குடி இவ்வாறழியும் (*888*).

**முத்து:**

முத்து மணிவகையுள் ஒன்று; அணிகட்குதவுவது; மகளிரது முறுவலுக்குவமையாவது (*1113*).

**கவிகை:**

கவிகையென்பது குடை, இங்கு அரசனது பூச்சக்கரக்குடையாகும், அது அரசனது மக்களையெல்லாம் தன் கீழ் வைத்து அருள் நிழலளித்துக் காப்பதாகக் கருதப்படும் (*389*).

பல அரசரது குடைகளையும் கவித்துக்காக்கும் பெருங்குடையெனப்படத்தக்கது உழவரது நெல் வளப்பமாகிய குடையென்பதாம் (*1034*).

# இசையும் கூத்தும்

**பண்ணும் பாடலும் :**

பண் பாடற்றெழிலோடு பொருந்த வேண்டும், (பாடற்றெழில் வார்தல் முதலியவெட்டும் பண்ணல் முதலிய வெட்டும் எடுத்தல் முதலிய ஐந்தும் வண்ணம் எழுபத்தாறும் ஆகியவையாம்), கண்ணோட்டம் இல்லாத கண் பயனுடையதன்று (573).

**குழலும் யாழும் :**

குழலோசையும் யாழோசையும் மிகவும் இனிமையுடையவாகும்; குழந்தைகளின் மழலைச் சொற்கு அவை உவமையாகும் (66). யாழ் கோட்டால் விளைந்தது; செயலாற் செவ்வியதாகும், ஒருவனை வினையாலன்றி உருவத்தால் தெளிதலாகாது (279).

**ஆயனும் குழலும் :**

ஆயன் குழலிசைக் குரியனுவான்; ஆயனது குழலோசை மாலைக் காலத்தில் பிரிந்த காதலரை வருத்துவதாகும் (1228).

**கூத்து :**

கூத்து மன்றங்களில் நடைபெறும்; அதனைப்பார்ப்போர் பலவழியாகவும் வருவர்; முடிந்ததும் வந்தவாறே பல வழியாகவும் சென்றுவிடுவர். வந்து நிலையாது போகும் செல்வத்திற்கிது எடுத்துக்காட்டு (332).

**பறை :**

பறை குணில் கொண்டடிக்கப்படும்; செய்திகளை ஊரார் பலர்க்கும் அறிவிப்பதற்கது உதவும், அவ்வாறே கேட்ட மறையைப் பிறர்க்குச் சென்றுரைப்பர் கயவர் (1076). பறை சாவிற்கும் ஒலிப்பதாகும் (1115). காதலர் கண் பறை போன்று உள்ளத்தைப் பலர்க்கும் அறிவிப்பதாகும் (1180).

**மரப்பாவை :**

பாவைக் கூத்தென்பது மரப்பாவை முதலியவைகளைக் கயிறுகளைக் கொண்டு இயக்கி நடத்தும் ஒருவகைக் கூத்தாகும், இது நாணமில்லாதவர் வெறும் நடமாட்ட அளவில் உயிர் வாழ்வதற்கு உவமையாம் (1020).

# இடப்பொருள்கள்

**நாடும் ஊரும் :**

சாந்துணையும் கற்பவனுக்குச் செல்லும் எந்த நாடும், எந்த ஊரும் சொந்த நாடும் ஊருமாம் (397).

**தேயம் :**

எத்தேசத்தும் சென்று பொருளென்னும் நந்தாவிளக்கு தனக்கு வரும் பகையிருளைக்கடியும் (753).

**ஊர் :**

ஊர் தனக்கிடையே (மன்றங்களையும்) பழ மரங்களையும் நிழல் மரங்களையும் உடையதாயிருத்தலுண்டு; சிலபோதுகளில் நச்சுமரங்களும் அங்கு முளைத்துவிடும் (1008). ஊர் தன்னிடையே ஊரார் நீருண்ணும் குளங்களையுடையதாகும் ஒப்புரவுக்கும் அன்மைக்கும் இவை உவமையாம் (215). ஊர் இனமுடைய மக்களைத் தன்னகத்தே வாழுமாறு கொண்டதாம் (1158).

**மன்றமும் மனையும் : வீடு**

தீ நட்பினர் மனைக்கணிருந்துழி நட்பாடுவர் மன்றின் கண் பழிப்பர் (820). காமம் மறைத்தலைக் கடத்தலாகும் போது பரவிச் செல்லுமிடம் ஊர்ப்பொதுமன்றமாம் (1254).

**அவை : கோட்டி :**

கூத்தாடு மன்றத்திற்கும் அவை என்ற பெயருண் டென்பதாம் (332). நல்லோர் கூடி உறுதிப் பொருளைப் பற்றியாராயும் இடமும் அவையெனப்படும் (729).

**இல் :**

இல்வாழ்க்கைக்குரிய இடம் இல்லமாகும், அஃது இல்லறமாகிய அறத்திற்குரியதாம் (49).

**வழி :**

வழியென்பது ஓரிடத்திற் சென்று சேர்தற்குதவுவதாம்; அறியாதவர்க்கு, வழி கேட்டுக் கொண்டு செல்லுதற்குரியதாம். ஆக்கம் ஊக்கமுடையானிடம் வழிகேட்டடையுமென்பதற்குக் கூறப்பட்டுள்ளது (*594*). வாயில், வீட்டுக்குள் செல்லுதற் குரிய வழியாகும்; (அவர்களுக்குப் பொறிகளே வழியாவன வென்பதாம்) (*6*).

**பள்ளி; குடங்கர் :**

பள்ளி உறங்குதற்குரிய அமளியாகும், தூய்மையற்ற காலுடன் அதனில் செல்லுதலாகாது (*840*).

குடங்கர் என்பது குடில். பாம்புறையும் வீடு, குடியிருப்பதற்குதவாததாம் (*890*). வேலி, வீடுகளையும் நிலங்களையும் சுற்றியமைந்து பாதுகாப்பதாம்; மேலாயவர் நாணத்தையே வேலியாகக் கருதுவர் என்பதாம் (*1016*).

# உடை : ஆடை

**பயன் :**

உடை, மாந்தர் யாவரும் இன்றியமையாததாகக் கொண்டு அணிவதாகும்; உணவைப்போன்று அதுவும் மாந்தர்க்கெல்லாம் பொதுவானதாம், இவையன்றி நாணுடைமையே சிறப்பென்றவிடத்து இது கூறப்படும். (1012). உடை, உடலை மறைப்பதற்காக அணிவதாகும்; அது கட்டியதினின்றும் தளர்ந்தால் நாணத்தையும் அவமானத்தையும் உணரச்செய்வதாம். நட்பு, தளர்ச்சிக்கண் உதவவேண்டுமென்பதற்கிது கூறப்படும் (788). உடலில் காமத்திற்கிடமாய முலை முதலிய உறுப்புக்களை மறைப்பது உடையாகும், யானையின் முகத்திலிட்டு அழகுபடுத்துவது ‘முகபடாம்’ என்னும் ஆடையாகும், இன்றேலவை பெருந் துன்பஞ்செய்யும் (1087). ஒருவினை செய்கையில் ஆடையை மடித்து இறுக்கிக் கட்டிக்கொள்ளுதல் இயல்பாம், குடியை யுயர்த்துவோர்க்குத் தெய்வமும் உதவும் என்ற இடத்து இது கூறப்படும் (1023).

**உடையும் அழுக்காறும் :**

ஒருவர் பிறர்க்குக் கொடுத்தலின்கண் அழுக்காற்றைச் செய்வானும் அவன் சுற்றமும் உடுக்க உடையுமின்றி அழிவரென்பதாம் (166). பிறர் நன்றாக உடையணியக் காணின் கீழ்மக்கள் அவர்மேற் பொறாமையுற்றுக் குற்றங் காண்பர் (1079).

**உடையும் சூதும் :**

சூதாடுவோருக்கு உடுக்க உடையும் இல்லாதாகிவிடும் (939).

## உறுப்புக்கள்

**பொறிவாயில் :**

*மெய் வாய் கண் மூக்கு செவியாயவற்றின் புலன்களாய கட்புலனாகிய தன்மாத்திரைகளின் கூறுபாட்டினையறிவான் கண்ணதே உலகமென்பதாம் (27).*

**வாய் :**

*வாய் பணிவு முதலிய தன்மைகளையுடைய சொற்கள் தோன்றுமிடமாகும் (419). அறத்தினையுணர்ந்தாரது வாய் இன்சொல்லுக்கிடமாம் (91).*

**கண் :**

*கண் மக்களது கல்விக்கு உவமையாகக் கூறப்படும் (393). வலிமை, இன்பம் முதலிய இயல்புகள் கண்ணின் மூலம் புலப்படலால் கண்ணோடு அவை சேர்த்துப் பேசப்படும் (775). மாதர் கண்கள் அமர் செய்யுந்தன்மையும் மருட்சியு முடையவாம் (1084). காதலரது கண்கள் ஒன்றையொன்று நோக்கிப் பொருந்துவனவாம் (1100). கண்காணும் காட்சியால் உண்டாகும் இன்பம் சிறந்ததாகும், அவ் வின்பத்தை மாதரிடத்துக் கண் அடைவதாம் (1101).*

**கண்ணோக்கு :**

*நோக்கு பிறர் குறிப்பறிதலின்கண் அவர்தம் குறிப்புக்களை நோக்குதலில் பயன்படுவதென்பதாம் (701). முகந்திரிந்த கடுப்பு நோக்கமும் வெறுத்த நோக்கமும் பிறர்க்குத் துன்பம் விளைவிக்கும் (90). நோக்கம் இனிதாயின் முகமும் இனிதாகும்; அந்நிலை பிறர்க்கின்பத்தை அளிக்கும் (93). பிறர் இல்லாதபோது அவரை நினைத்துப் பக்கத்திற் பார்த்தல் ஒரு நோக்கமாம் (189). காதலரது நோக்கு ஒருவரது நோக்கினை மற்றொன்று நாடுவதாம் (1082).*

நோக்கம் இசைவினைக் குறித்தலுண்டு; காதலரது நோக்கம் இரண்டுமொப்பின் அது புணர்ச்சியிசைவைக் குறிப்பதாம் (*1100*). ஒருவர் பாராதபோது மற்றவர்பார்க்கும் காதற் பார்வை களவு நோக்கெனப்படும் (*1092*). நெஞ்சிற்குகந்த பொருள் 'கண்ணில் இருப்பது' எனக்கருதிப் பாராட்டப் பெறும் (*1127*). கண் காமநோய்க்குச் சிறந்தகாரணமாம் (*1175*). கண் உள்ளத்திருக்கும் மறைகளைப் பறைபோன்று வெளிப்படுத்திவிடுவதாம் (*1180*). கண்ணுக்குக் கூற்றமும் பெண்மானும் உவமையாகக் கூறப்படும் (*1085*). பிரிவுக் காலத்துப் பசப்பு நிறங்கொள்ளும் தலைவியது உறுப்புக்களுள் கண்ணும் ஒன்றும்; கண் மழைக்கண் என்று பாராட்டப் பெறும் (*1239*). கண் தனது குறிப்பினால் பிறரிடத்தொரு பொருளை இரப்பதுண்டு (*1280*). காதல் கண்களுள் ஒன்று நோய் செய்யவும் ஒன்று அதற்கு மருந்தாகவும் கூடிய தெனப்படும் (*1091*). ஒரு கண்ணைச் சுருக்கினாற்போலப் பார்க்கும் பார்வை காமுற்றார்க்குரியதாம் (*1095*). அயலார் போலப் பார்க்கும் பொது நோக்கும் காதலரிடத்தே யிருப்பதாம் (*1099*). மனத்தோடு கலந்து ஒரு பொருளையே உற்று நோக்கும் பார்வையுங் காதலரிடத்துண்டென்பதாம் (*1320*). நோக்கம் பிறர்க்கின்பமும் துன்பமும் செய்யக் கூடியதென்பதாம்; தலைவியின் ஒரு நோக் கின்பமும் மற்றது துன்பமும் செய்வதென்பதாம் (*1091*). மாதர் தம் நோக்கிற்கு மானோக்குவமையாகும் (*1085*). கண் களவுத் தன்மை யுடையது; அதன் சிறு நோக்கம் காமவின்பத்திற்குரியதாம் (*1092*). கண் அழகைக்கண்டு மகிழ்தற்குரியதாம் (*1272*). கண், செய்யும் செயலிற் செல்லுவதன்றிச் செய்யும் கருவிகளின்மேற்செல்லுதலில்லை (*1285*). உண்பதுபோற் காணுந்தன்மை கண்ணுக்குண்டு; பலரது கண்கள் கூடி ஒரு பொருளைக் காணுதலுண்டு (*1311*). அன்புடையவர் ஒருவரையொருவர் இழக்கையில் இழந்தவரதுகண் நீர்விடும் (*780*). கண் வஞ்சகமாயும் கண்ணீர்விடும்; அது கேடு தருவதாம்; யானையின் கண்களுக்குப் படாமிட்டுமறைத்த லுண்டு (*1087*). அரிய உறவுடையவர்களைக் கண்போன்றவர் எனக்கூறுதலுண்டு (*1061*). பிறர் உள்ளத்திருப்பதனைக் குறிப்புக்களால் அறியவல்லது கண்ணும் (*705*). பிறரது குணங்களை மதித்தறியவல்லது கண்ணாகும் (*710*). வறுமையில்

கண் உறங்குதலை இழந்துவிடும் (*1049*). கண், கண்ணோட்ட மென்னும் இன்றியமையாத இயல்பினைக் கொள்ளத் தக்கதாம் (*573*).

**நா :**

நா பேசுவதற்குதவும் கருவியாகும், சுடுசொற்களும் இன்சொற்களும் ஆகிய சொற்கள் தோன்றுவதற்குக் காரணமாவதாம் (*129*).

**வாய் :**

சுவை ஓசை முதலாகிய தன் மாத்திரைகளது கூறுபாடு நீத்தாரால் அறியப்படவேண்டும்; அவ்வாறறிந்தவனது அறிவின் கண்ணதே உலகம் என்பதாம் (*27*). சுவைப் புலனின்பம் காமுற்ற மகளிரிடத்துக் காணத்தக்கதாம் (*1101*).

**மூக்கு :**

குன்றி மணியின் மூக்கு கருமையுடையதாகும்; மூக்கில் கரிபூசிக் கொள்ளுதல் என்பது ஒரு வழக்கு (*277*).

**செவி :**

செவிகள் தம் மக்களது மழலை மொழிகளைக் கேட்டு மகிழ்வனவாம் (*65*). செவி கேட்டலால் அடையும் கேள்வி, செவிச் செல்வமெனப்படும், அது செல்வங்களுளெல்லாம் சிறந்தது (*411*). செவி கேள்வியால் துளைக்கப்படுவதாம் (*418*). கடுஞ்சொற்களைக் கேட்கையில் செவி பொறுததாகும் (*389*). கூட்டங்களில் ஒருவர் காதில் மற்றவர் மெல்லச் சொல்வதென்பது ஆகாததாம் (*694*). பிரிந்த தலைவியது செவிகள் காதலரைப் பற்றிய எச்சொல்லையும் கேட்க விரும்பும் (*1199*).

**முகம் :**

முகம் நெஞ்சத்தின் கண்ணடியாகும்; அங்கு நிகழ்வதனை அப்படியே வெளிப்படுத்தும் (*706*). ஒருவற்கு ஒன்றைக் கொடுத்தலிலும் முகமலர்ச்சி இன்றியமையாததாகும்; அதுவே அறமுமாம் (*92*). நெஞ்சன்றி முகத்தோடு முகம் மகிழ்வது நட்பாகாது (*786*). அகத்தில் நட்பின்றி முகத்தால் நட்பு

கொள்ளுதலுமுண்டு; பகைவர் நட்பாக வருங்காலத்துச் செய்யத்தக்கததுவேயாம் (830). மாதர் முகத்தில் மதியில் இருப்பது போல மறுவிருப்பதில்லை (1117). ஒருவரிடத் தொன்றை வேண்டிச் செல்பவர்கள் அவர் முகத்தை நோக்கி நிற்றலியல்பாம் (708). நற்செயல் புரிபவர் பெரியவர்கள் முகத்தின்முன் விழித்தலும், தீச் செயல் புரிபவர் விழியாமையும் இயல்பாகும்; கள்ளுண்பவன் தாய் முகத்திற்கு முன்பும் இன்னுதவனுவான் (923).

**தலை :**

மக்களது தலை எண்குணங்களையுடைய இறைவனது திருவடிகளை வணங்குதற்கேயுரியதாம் (9). தலையினின்றும் மயிரை நீக்கிவிடுதலுண்டு; நிலையிலிருந்து தாழ்ந்தவர்க்கு அம்மயிரை உவமையாக்குவர் (964).

**நெற்றி :**

பெண்களின் நுதல் ஒளியுடையதாகக் கூறப்படும்; அது காமத்தைத் தூண்டுவதில் மிகவும் வன்மையுடையதாம் (1088). மாதரின் நுதலும் தலைவனின் பிரிவில் பசப்புறுவதுண்டென்பது (1238). நுதல், புணர்ச்சிக்காலத்தில் வியர்வை விடுவதாம் (1328).

**தோள் :**

பிறன் மனையாளது தோள்கள் விரும்பத்தக்கன வல்லவாம் (149). மனையாளது மூங்கில் போலும் தோள்களை அஞ்சுவார் ஆண்மையிலர் (906). மகளிரது தோள்கள் மெல்லியனவாம் (919). தோள்கள் அமிழ்தம் போன்றனவாகப் பாராட்டப்பெறும் (1106). புணர்ச்சியிலும் மகிழ்ச்சியிலும் தோள்கள் பூரிக்கும் (1233). தோள்கள் இயற்கையழகுடையவாம் (1234). காதலர் ஒருவர் மற்றவர்மேல் உறங்கும்பொழுது அதற்குத் தோள் இடமாகும் (1103). காதலிக்கப்பட்டபோது அவ்வப் பொருள்களைப்போலத் தோள்கள் இன்பஞ் செய்வனவாம் (1105). பிரிவுக்காலத்தும் துன்பக்காலத்தும் தோள்கள் வாடுதலுண்டு (1218). தோள் மேல் அணிகளைப் பூண்பதுண்டு; துன்பக்காலத்துத் தோள் வாடும்போது அவ்வணிகள் அங்கிருந்தும் நெகிழும் (1262).

**நுசுப்பு : இடை :**

மாதரிடை மிகவும் மென்மையும் நுண்மையுமுடையதாகக் கூறப்படும், அனிச்சம்பூவின் சுமைக்கும் அது முறிந்துவிடுமென்பதாம் (*1115*).

**முலை :**

இள நங்கையர் முலைகள் நிமிர்ந்திருக்கும்; அவை ஆடையால் மூடப்படாவிடன் வருத்துமென்பதாம் (*1087*). முலைகள் காமவின்பத்திற்கு மிகவும் இன்றியமையாதவை; அவை யின்றேல் சுவையுமில்லை; நகையும் விளைக்குமென்பதாம் (*402*).

**கால் :**

சதுப்பு நிலத்தில் நடக்கையில் கால்கள் சிக்கிக் கொள்ளும்; அதனின்றும் வெளியேறுதல் மிகவும் முயற்சியாகும்; களிற்றையும் (களரின் கண் சிக்கிக் கொண்டால்) நரி வெல்லும் என்பதால் உரிய இடமறிந்து வினைசெய்தாலேயே வெற்றியுண்டாம் (*496*). தூய்மைப் படுத்தப்படாத கால்கள் பள்ளியுள் வைக்கப்படலாகா (*840*). இறைவன் திருவடிகள் நன்மையுடையனவாய் வீடுபேற்றைத் தருவனவாம் (*2*). இறைவன் தாள்கள் மனக்கவலையை மாற்றுவனவாம் (*7*). இறைவன் திருவடிகள் மாட்சிமையுடையவாகும் (*3*). இறைவன் திருவடிகள் பிறவிக் கடலை நீந்தும் புணையாம் (*10*). காக்கவேண்டுமென வேண்டுபவர் காலைப் பற்றிக் கொள்ளுதலும் காலைச் சுற்றி நிற்றலும் இயல்பாம்; மன்னவனது அடிகளைக் குடிகள் தழுவி நிற்பர் (*544*). சிங்கத்தின் நடைபோன்ற பெருமிதநடை ஒருவற்குப் பாராட்டத்தக்கதாகும்; அது புகழை விரும்பிய இல்லாளையுடையவரிடம் அமைவதாம் (*59*). நாணுடைமை முதலிய குணங்களை உடையோரிடமே அந்நடை அமையக்கூடியதாகும்; இன்றேலது துன்பத்தைத் தரும் (*1014*). சொல்லிற்கும் நடை உண்டென்று அறிஞர் கற்பனை செய்வதுண்டு (*712*). மாதரடிகள் மிகவும் மென்மையானவை; அனிச்சம் பூவும் அன்னத்தின் தூவியும் அவற்றிற்கு நெருஞ்சிப்பழம் போல்வனவாம் (*1120*).

**என்பு (எலும்பு) :**

*எலும்பு உடலிற்கோர் சிறந்த உறுப்பாம்; புழு முதலியன எலும்பில்லாத உயிர்களாம், என்பில்லாதவற்றை வெயில் காய்தல் போல அன்பில்லாதவரை அறம் காயும் (77). எலும்பு உடற்கட்டிற்கே இன்றியமையாததாம், அது போயின் உடலே போய்விடும்; அன்புடையவர் எலும்பையே (உடலையே) பிறர்க்கீவர் (72).*

**தோல் :**

*தோல், எலும்பு முதலிவற்ருலான உடலைமேற் போர்த்திருப்பதாகும் (80).*

**கை :**

*காப்பாக வைக்கவேண்டிய பொருளைக் கையில் வைத்திருத்தல் வழக்கம்; பொருளைக் கைப்பொருளென்பர் (178). ஆடைகளை அணிகையில் கை உதவும்; ஆடை நெகிழ்கையில் அது தன்னையறியாமலே சென்றதனைக்கட்டிக் கொள்ளும் (788). புணர்ச்சியில் தழுவும்போது இரு கைகளாலும் கட்டித் தழுவுதலுண்டு; பின் கைகளை நெகிழ்த்தலுண்டு (1238). பிறருக்கொன்றை ஈகையில் கையினல் அப்பொருளையீதலுண்டு (1077). உழவர் கைத்தொழில் செய்யாதிருத்தலால் துறவிகட்கும் உணவின்றியாகிவிடும் (1036). ஒரு பொருளைக் கொடுக்கையிலும் அதற்கெதிராக மற்ருென்றைப் பெறுகையிலும் கை பயன்படுதலால் அது கைம்மாறெனப்படும் (1183). பிறரைத் தாக்குகையில் கையினல் அறைதலென்பது ஒரு வழக்கம் (260). கை, வாளைப்பிடித்துப் போர் செய்ய உதவுவதாம் (614).*

**கொடிறு : கன்னம்**

*கயவரது கன்னம் உடைபட்டாலன்றி ஒருவற்கு ஒன்றீயமாட்டார் (1077).*

**மயிர் :**

*தலையினின்றும் நீங்கிய மயிர் போற்றப்படாததாய் இகழ்ச்சிக்கும் உள்ளாவதாம்; மானமழிந்தவரது நிலைக்கு இது உவமையாம் (964). கவரிமானினது மயிர்த்திரளி*

விருந்து ஒரு மயிர் வீழினும் அது இறந்துவிடும்; மானமிழந்து நற்குடிப் பிறந்தோர் உயிர்வாழமாட்டார் (969).

**மார்பு :**

தலைவனது மார்பு காதலுற்ற பெண்களின் காட்சிக்கு இனிமை தருவதாம் (1311). காதலரது மார்பு தழுவுதல் முதலிய செயல்களால் கள்ளனைய இன்பந்தருவதாம் (1288).

**பல் :**

பெண்களின் பற்கள் வெண்மையாகவும் இனிய நீரூறுவனவாகவும் இருக்குமென்பதாம் (1121).

**மறைவுறுப்புக்கள் :**

ஆடை முதலியவற்றால் மறைக்கத்தக்கது உடலின் மறைவுறுப்புக்களன்று, மனத்திலுள்ள குற்றங்களே யென்பதாம் (846).

**வயிறு :**

சூதாடுபவரது வயிறு என்றும் நிறையப்பெறாமல் பசியையும் மறக்கும்; அவர் உணவின்றி வறுமையால் துன்பமடைவர் (936). கேள்விச் செல்வ முடையவர்களது வயிறு மிகுதியாகப் பசிக்கவோ மிகவான உணவினை விரும்பவோ செய்யாது; அவர்கள் கேட்டலை விட்டபொழுது அதுவும் மேலும் கேட்டற்குரிய வலிமைக்காகச் சிறிது உணவினை மேற்கொள்ளும் (412).

## ஊர்திகள் :

**தேர் :**

தேர் பெரிய உருவமுடையதும் வலிய சக்கரங்களை யுடையதுமாகும், அது நிலத்திலன்றி நீரில் ஓடுதலில்லை இடமறிந்து வினை செய்க வென்பதற்கிது உவமை (496). தேர் அச்சாணியென்ற சிறப்பான மிகச் சிறிய உறுப்பினை யுடையதாகும், அவ்வாணியிலேயே சக்கரங்கள் கோக்கப் பட்டுச் சுழலும். அஃதில்லாவிடில் தேர் ஓடாது; உருவிற் சிறியோரும் பெருவினைகளை முடிப்பர் (667).

**சாகாடு : (வண்டி)**

சாகாடென்பது வண்டி, அது பொருள் பாரமிகுதியாக ஏற்றப்பெறின் அச்சு முறிந்து வீழ்ந்துவிடும்; மெலியாரும் பலர் ஒன்றுபடின் வலிமிக்கவராவர் (475).

**நாவாய் :**

மரக்கலம் நீரில் செல்வதன்றி நிலத்திற் செல்லாது, இடமறிந்து வினை செய்யவேண்டும் (496). கடலிற் செல்பவர்களால் மிகவும் விரும்பப்படுவது மரக்கலம், அது கடலிற் புயல் முதலியவற்றால் கவிழ்ந்தழிவதுமுண்டு, மறவி, துயில் முதலியன கெடுந்தன்மையோர் ஏறும் மரக்கலம் எனக் கூறப்படும் (605).

**புணை : தெப்பம்**

புணை என்பது நீரைக்கடத்தற்குரிய தெப்பமாகும், அதனைப் பெருநீர் கட்டுமீறி அடித்துச் சென்றுவிடுதலுமுண்டு: காமம் நாணத்தை அடித்துச் செல்லும் என்பதற்காகக் கூறப்படும் (1134).

**சிவிகை :**

சிவிகை நிலவழியைக் கடத்தற்குதவுவது; அதனில் அமர்ந்து செல்வோரும் அதனைச் சுமந்து செல்வோரும் என இருவகையர் மக்கள், அமர்ந்து செல்வோர் அறம் செய்த வராயும் சிறந்தவராயும் சுமந்து செல்வோர் அறஞ்செய்யாத வராயும் கருதப்படுதலுண்டு (*37*).

தோணி பாறையில் தாக்கினல் பக்குவிட்டு உடைந்து விடும்; இரப்போர் கரப்போர் முன் சென்ருல் மனமுடைவர் (*1068*).

# கோள்கள் : திங்கள் முதலியன

**வெயில் : சூரியன்**

*சூரியன் வெய்யிலையுடையது, அது தனது வெம்மையால் என்பில்லாத புழு முதலியவற்றைத் தாக்கக்கூடியது, இது போல அன்பில்லாத உயிர்களை அறக்கடவுள் காயும் (77).*

**திங்கள் :**

*திங்கள் நிறையுந் தன்மையும் தேயுந்தன்மையும் உடையதாகும், அறிவுடையார் நட்பு வளர்வதற்கும் பேதைகள் நட்பு தேய்வதற்கும் இஃது உவமையாம் (782). மதி மறைதலையும் தோன்றுதலையும் உடையதாகும், பிரிந்த காதலர் இருவராலும் பார்க்கப்பட்டு ஒருவரையொருவர் நினைத்தற்குக் காரணமாயிருத்தலால் அஃது அவர்களால் பாராட்டப் பெறுவதாம் (1210). மதி தன்கண் கருமை நிறக் களங்கமுடையதாகும், மாதர் முகமதி மறுவற்ற தென்பதைக் கூறுதற்காக இது காட்டப்பட்டது (957).*

**பாம்பும் (இராகும்) திங்களும் :**

*(பௌர்ணமியில் திங்கட் கிரகணத்தன்று) திங்கள், இராகு என்ற பாம்பினால் விழுங்கப்படுவதாகக் கருதப்படும். அன்று அந்நிலை உலகினர் யாவராலும் அறியப்படும், அலர் ஊராலெல்லாம் அறியப்படுவதற்குவமையாக இது கூறப் படும் (1146).*

# நிறங்கள்

**கருமை :**

குன்றிமணியின் மூக்கில் கருமை நிறம் இருக்கும். குற்றத்தின் நிறம் கருமையெனக் கற்பனை செய்வதுண்டு (277).

**கருமையும் இருளும் :**

நரகம் கருநிறமுடையதாகக் கூறப்படும் (243). துன்பம் கருமையெனக் கூறப்படும் (352). அறியாமை கருமையுடைய தெனக் கருதப்படும். பகைமை, கரு நிறம் போல்வதெனக் கருதப்படும் (675).

**செம்மை :**

செம்மை திருமகளுக்குரிய நிறமாகக் கூறப்படும் (167). செவ்விய தன்மை எதுவும் செம்மை நிறத்திற்குரியதாகக் கருதப்படும் (358).

**பசுமை :**

இளமையும் ஈரமும் பசுமை நிறமுடையனவாகக் கூறப் படுதலுண்டு (660).

**வெண்மை :**

அறிவின்மை வெண்மையுடையதெனக் கருதப்படும்; ஒன்றுமில்லாததே வெண்மையாம் (844).

# பறவைகள்

பறவை, முட்டையிலிருந்து வெளிவந்ததும் அதனை விட்டுப் பறந்து போய்விடும், உடம்பிற்கும் உயிருக்குமுள்ள நட்பு இத்தகையதாம் (338). பறவைகள், வேடர்களால் புதர்களில் மறைந்து பிணிக்கப்படும், தவவேடத்தில் மறைந்து கூடா வொழுக்கம் புரிவோர்க்கிது உவமையாகும் (274).

**அன்னம் :**

அன்னத்தின் இறகுகள் மிகவும் மென்மையானவை; அவை மாதரடிக்குவமையாகக் கருதப்படும் (1120).

**மயில் :**

மயில், மகளிரது சாயலுக்குவமையாகக் கூறப்படும்; அது பொழில்களில் உறையும் (1081). மயிற்பீலிகள் மிகவும் இலேசானவை; அவையும் அளவுகடந்து ஏறுமானல் வண்டியினச்சை முறித்துவிடும், பலர் சேர்ந்தால் மெலியாரும் வலிபெறுவர் என்பதற்கிது கூறப்பட்டது (475).

**கொக்கு :**

கொக்குப்போலக் காலம் வருமளவும் வினை செய்தலில் ஒடுங்கியும் காலமுற்றதும் (அது குத்துமாறுபோல) விரைந்து செய்துமுடித்தலும் வேண்டும் (490).

**காக்கை :**

காக்கைகள் கிடைக்கும் உணவை மறையாமல் இனத்தையெல்லாம் அழைத்து உண்ணும், அவ்வாறு சுற்றத்தைத் தழுவவேண்டும் (527). காக்கை பகலாயின் கூகையையும் வென்றுவிடும்; (உரிய காலத்திற்செய்யின் எளியவர் வலியரையும் வெல்வர்) (481).

**கூகை :**

பகலில் காக்கைக்குத் தோற்கும் (481).

## பூதங்கள்

மண் நீர் தீ வளி வான் ஆகியவை (271).

**மண் :**

மண் மர முதலியன விளைதற்கிடமாயிருப்பதாம் (576). மண், அழிதற்குரிய பொருள்கள் தன்னிடம் புகுந்தாலவற்றை அழித்து விடுவதாம் (996). மண், பாவைகள் செய்தற்குதவு வதாம் (407). பசிய களிமண் கலமாகச் செய்யப்பட்டு அதனில் நீரூற்றினல் கரைந்து போகும் (660). களிமண் குயவனது திகிரியிலிருக்கும்போது அவனது அறுக்குங் கருவியால் அறுக்கப்படும், இது உட்பகைவர் சமயம் வாய்க்கும்போது தீங்கிழைப்பர் என்பதற் குவமையாம் (883)

**மணல் :**

தோண்டத் தோண்ட அவ்வளவும் நீருறும்; கற்குந் தோறும் அறிவூறும் (396).

**நிலம் :**

நிலமும் நீரும் கலக்கும்பொழுது அவை பிரிக்கமுடியாத படி ஒன்றுபட்டு விடுவனவாம், காதலர் மனவொற்றுமைக்கிது வுவமை (1323). நிலம் தன்னுடன் கலந்த நீரைத் தன்னிற மாகவும் தன்சுவையாகவும் ஆக்கிவிடுவதாம், ஒருவன் இனத் தியல்பாக மாறிவிடுவான் (452). நிலம் பயிர்கள் வளர்வதற் கிடமாம்; அது பலவகையான வளமையுடையது. குலத்தை வாய்ச்சொல் காட்டும் என்பதற்குவமை (959). நிலம் தன்னை அகழ்பவரையும் தாங்கும் பொறுமையுடையதாகக் கருதப் படுவது (151). நிலம் மக்கள் யாக்கையைத் தாங்குவதாகும்; புகழில்லாத உடம்பினைத் தாங்கும் நிலம் விளைவு குன்றும் (239). நிலம் தன்னிடம் அறைந்தவனது கையை வலிக்கச் செய்யும் (307). நிலம் கடுங்கோலரசனைத் தனக்கோர் சுமை யாகக் கொள்வதாம் (570). குணங்களால் நிறைந்தவர் தம்

தன்மை குன்றின் நிலம் தன் சுமையைத் தாங்காது (990). நிலம், நாளும் கவனித்துப் பயிர் செய்யாத விடத்து ஊடிப் பயன் குன்றிப் போகும் (1039). நிலம் ஒரு பெண்ணாக உரு வகிக்கப்படும், வறியேம் எனச் சோம்பி யிருப்பாரைக் கண்டால் அவள் இகழ்வாள் (1040).

**உலகம் :**

மண் மிகவும் பெரியதும் பரப்புடையதுமாம், இது காலத்திநற் செய்த நன்றியின் அளவிற்குவமை (102). உலகு தனக்கின்றியமையாததாக நீரினையுடையதாம் (20). உலகம் (மண்) அழியக்கூடிய நிலையாத இயல்பினையுடைய தாம் (233). மண் முதலிய பூதங்கள் இறைவனைத் தமக்கு முதலாக வுடையனவாம் (1).

**குன்று : சிறுமலை :**

குன்று பெருமைக்கும் உயரத்திற்கும் அடையாளமாகக் கூறப்படுவதாம், குன்றேறி நிற்றலென்பது ஒரு பெருமை யாகும், குணத்தாலுயர்ந்த துறவிகட்கிது வுவமையாம் (29). குன்று பேரளவினதாம்; அது குறைந்து சிறிதாதலென்ப தில்லை; பழி சிறிதாயினும் செய்யின் பெரியோர் தாழ்ந்து விடுவர் (965). தொலைவிட்ட பொருள்களைக் காண்பதற்குக் குன்றின் மேல் நின்று காண்பதுண்டு, அச்சமின்றி (யானைப் போர் முதலியவற்றைக்) காண்பதற்கும் குன்றின்மேல் நிற்பதுண்டென்பதாம், பொருளுடையவன் அச்சமின்றி வினைமுடித்தற்கிது வுவமையாம் (758).

**புழுதி :**

காய்ந்தமண் புழுதியெனப்படும், பயிரிடும் நிலத்துமண் நன்கு காயவிடப்படவேண்டும் (1037).

**சுதை :**

சுண்ணம்பு வெண்மை நிறத்ததாம், கல்லாரவைக்கண் அறிவிலார்போல நடந்துகொள்க என்பதற்குவமை (714).

**மழை :**

மழை இடையறாது நின்று உலகவுயிர்களை நிலைபெறச் செய்து வருகின்றது; ஆகலின் அது அமிழ்தமெனப்படும் (11).

உலகில் உணவுகளை யெல்லாம் விளைத்துத் தருதலுடன் தானும் நீராய் உணவாவது மழையாம் (12). விரிந்த நீர் சூழ்ந்ததுலகம்; அங்குப் பசி உயிர்களை வருத்தாமல் செய்வது மழையாம் (13). மழை, உழவரது ஏர்த்தொழிலுக்கு வளர்ச்சி தருவதாம் (14). மிகுதியாகப் பெய்து கெடுப்பதும் கெட்டவர்களை மீண்டும் கைதூக்கி விடுவதும் மழையாம் (15). மழை புல் முதலிய ஓரறிவுயிர்களையும் தோன்றச் செய்வதாம் (16). கடலில் முத்து, மீன் முதலியன தன் வளங்குன்றாமல் இருக்கச் செய்வது மழையாம் (17). மேகம் தன்னைக் குறைத்துக் கொண்டு மழைபொழிகின்றது (17). உலகில் விழாக்களும் தேவ பூசனைகளும் நடத்தற்கு மழையே காரணமாம் (18). தானம் தவமிரண்டிற்கும் மழை காரணமாம் (19). உலகில் நீர் இடையறாதொழுகும் ஒழுக்கத்திற்கும் அறவொழுக்கத்திற்குங்கூட மழை காரணமாம் (20). மழை பெய்யாவிடில் வேந்தன் அருளில்லாத நாடுபோல உலகம் துன்புறும் (557). மழை உலகினரால் நோக்கி விழையப்படுவதாம் (542). முறை தவறிச் செய்யும் அரசனது நாட்டில் பருவமழை குன்றிப்போகும் (559). வாழ்வார்க்கு மழை மிகவும் இன்றியமையாததாம், இது காதலரது அளிக்கு உவமையாம் (1192). மழை தெய்வத்தைத் தொழாமல் கணவனையே தொழும் மகளிர் பெய்யெனச் சொல்ல அவ்வாறே பெய்யும் (55). மழை கண்ணுக்கு உவமையாகக் கூறப்படும், யாவர்க்கும் அருள் புரிதலின் மழை அருளுடையதாகும் (1239). மழை நூலியல் பினால் முறைசெய்யும் அரசனது நாட்டகத்ததாம் (545). மழை கைம்மாறு வேண்டாமல் உலகிற்கு ஒப்புரவு செய்வதாம் (211). மழை சிலகாலம் பெய்யாமல் வறண்டாலும் மீண்டும் உடன்பெய்து வளங்கொடுக்கும் (1010).

**கடல்** :

கடல் இரவில் தனித்திருக்கும் காதலர்க்குக் காமத்தை மிகுத்து வருத்தம் செய்வதாகும் (1200). கடல் மிகப் பெரியதாகும்: பயன் கருதாது செய்த உதவிப் பயனுக்கது உவமையாகும் (103). தொடர்ச்சியான அலைகளையுடையதாகிக் கரைகாணாதது கடலாகும், பிறவிப் பெருங்கடலெனக் கூறப்பட்டுள்ளது (10). ஒருபொருளின் மிகுதிக்குக் கடல் உவமையாகும்; காமத்திற்கும் இன்பத்திற்கும் அஃதுவமையாதலுண்டு

(1137). கடல்நீர் மிகுந்த அச்சமுடையதாகும் (149). அறமாகிய கடல் இறைவற்கிருப்பிடமாகக் கருதப்படும்; கடல் தெப்ப முதலியவற்றின் துணைகொண்டு கடக்கப் படும் (8).

**நீர் :**

நீர், முதலை முதலிய வாழ்தற்கிடமாம்; அவற்றிற்குத் தன்னிடத்திருக்கும்வரை நீர்மிக்க வலிமையைத் தரும் (495). ஆறு முதலியவற்றில் நீர் மிகக்கூடிய வேகத்துடன் செல்வ தாகும், அது நீந்தி மகிழ்தற்குரிய இடமாகும், நீர் பெருகி வரும்போது கரை தெரியாமல் பரவிவிடும் (1134). நீர் தன்னிடம் நீந்துவோரை அடித்துச் செல்லும் விரை வுடையதாம் (1287).

நீர் ஊருணி முதலியவற்றில் நிறைந்து ஊரார்க்குண்ண உதவுவதாம். இது பேரறிவாளனது ஒப்புரவிற்குவமை (215). நீர் தான் வீழ்ந்த நிலத்தின் இயல்புக்கேற்ப நிறம் சுவையாகியவற்றை அடையும் (452). நீர் கரையுற்ற குளங்களில் வீணாகாமல் தேங்கிநிற்கும்; கரையில்லாவிடில் வீணாகிப்போய்விடும். சுற்றத்தோடு கலவாத வாழ்க்கைக் கெடுத்துக்காட்டு (523). குளிப்பவர் நீரினடியில் மூழ்கிக் குளிப்பர்; அவர்களை விளக்குக்கொண்டு கண்டுபிடிக்க முடியாது; கள்ளுண்டவனைக் காரணங்கூறித் திருத்த முடியாது (928). நீர் நிழலின் கண்ணதாயின் அது இனிய தாகும்; அதுவும் நோய் செய்யுமாயின் இன்னாததாம் (881). நீர் பிறரிடம் இரத்தற்கும் கொடுத்தற்கெளிதும் ஆவதாம்; அந்நீரும் இரந்து கேட்கத் தக்கதன்றென்பது (1066). ஊற்றுநீர் இறைக்க இறைக்க ஊறுவதாகும் (1161). குளம் முதலியவற்றில் நீர் மிகுதியாக ஆக அதனளவிற் கேற்ப அங்குள்ள மலர்களும் உயரும்; ஊக்கத்தளவு ஒருவனதுயர்வுமுண்டாம் (595). விரைந்தோடும் வெள்ளத்தில் நீந்துபவர்கள் முடிவில் கரையைக் காண்பதற்கு விழைவ ரென்பதாம் (1167).

**தீ :**

தீ, ஒரு சிறு பொறியாக விடப்பட்டு வைத்தாலும் பெருகித்தன்னைச் சூழ்ந்த இடத்தையெல்லாம் அழித்துவிடும்

(674). தீ, குளிர்காலத்தில் வெம்மைக்காகக் காய்தற்குதவும்; அகலாமலும் மிகவணுகாமலும் அது காயப்படும் (691). தீ, சுட்டால் புண்ணுண்டாகும், அது ஆறிப்போவதேயாம், சுடு சொல் சொல்லுதலும் தீயாற் சுட்டது போன்று கருதப்படும் (129). தீ நெருங்ினல் சுடும், விலகினல் தண்ணென்றிருக்கும், ஆனல் காமமும் தீயாகக் கருதப்படுவதுண்டு, அது இவ்வியல்புகட்கு எதிரானதென்பதாம் (1104). காணுதை பொருள்களைத் தீயைக்கொண்டு காணல் வழக்கென்பதாம், பொருள்கள் தீயொளியில் தெளிவாகத்தெரியும் (929). தீ, ஊன் மாமிசம் முதலியவற்றைச் சுடுதற்குதவும்; நிணத்தை அது உருகச் செய்துவிடும், புணர்ச்சிவிரும்பிய காதலரது மனநிலைக்குவமை (1260). நெருப்பு தன்னை நெருங்கிய வர்களைச் சுட்டுக்கொல்வதாகும்; சினமுடையார் இனமழியும் (306). நெருப்பு தன்னை யண்டியவர்களைத் தூங்கவிடாததாம், வறுமையில் தூக்கமில்லை என்பதற்காகக் கூறப்பட்டது (1049). மாலைக்காலம் காதலர்க்கு வருத்தஞ் செய்தலில் நெருப்புப்போல்வது எனக் கற்பனை செய்யப்படும் (1228). எரி சுட்டால் பின்னர் பிழைப்பதென்பது அரியதாகும் (896). எரிபட்ட வைக்கோற்போர் அடியோடழிந்துபோகும், வருமுன்னர் காவாதான் வாழ்க்கையழியும் (435). தீ நெய்யினல் சுடர்விட்டெரிவதாகும், தீயை ஒருக்கால் அணைத்தலுண்டு, அவ்வணைத்தலை நெய்யைவிட்டு யாரும் செய்தலில்லை (1148). தீ பல கொழுந்துகளை விட்டெரித லுண்டு, அப்போததிற்பட்டவர்கள் மிக்க துன்பமடைவ ரென்பதாம், தொகுதியான துன்பங்களைச் செய்வாரையும் பொறுத்தல் வேண்டும் (308). தீ சுடக்கூடியதாகும், அச்சூடு புண்ணையுண்டாக்கக்கூடியது, தீச்சொற்களால் உண்டாகும் வடு ஆறுதெனக் கூறப்பட்டது (129). வெம்மையுண்டாகும்படி எண்ணங்கள் மனத்தினைத் தாக்குவதனையும் சுடுவதாகக் கூறப்படும், பொய்ம்மையுடையவன் மனமே அவனைச்சுடும் (293).

### ஒளி : விளக்கு :

ஒளி பொன்னினிடத்திருப்பதாகும், உருக்கவுருக்கப் பொன்னின் ஒளி மேலும் மிகுவதாகும்; துன்பம் சுடச்சுட நோற்பவர்க்கு ஞானமிகும் (267). விளக்கு ஒளி

யெனப்படும், விளக்கொளி மற்ற பொருள்களையெல்லாம் விளங்கச் செய்வதாம் (*390*). விளக்கு இருளைக்கடிவதாம், இது வாய்மை விளக்கு என்பதற்குவமை (*299*). விளக்கின் சுடர் கரியாகிய மாசு பற்ற அணைந்துபோய்விடும், சோம்பலால் குடியழியும் என்பதற்கெடுத்துக்காட்டு (*601*). ஒளி தோன்றியவுடன் இருளையோட்டிவிடும்; புணர்ச்சி நீங்கியதும் பசப்பு தோன்றும் (*1186*).

**வளி: வாதம் :**

உடல்நலத்திற்கின்றியமையாதது, மிகுந்தால் நோய் செய்தலாகிய பித்தம், வாதம், சிலேத்துமம் ஆகிய மூன்றனுள் வாதமே வளியாகும் (*941*).

**வளி : காற்று :**

காதலர்புணரும் புணர்ச்சியில் காற்று அவரதுடல்களின் இடையில் அறுத்துச் செல்லவியலாது (*1108*).

**வான் :**

வான் மிகவுயர்ந்ததாகக் கூறப்படும், இது தவசிகள் தோற்றவுயர்வுக்குவமையாம் (*272*).

# மரவினம்

### மரவினப்பொருள்கள் :

பழந்தரு மரங்கள் பயன்மரங்களாம்; அவை ஊர்க்குப் பொதுவானவிடத்திலிருந்தால் அனைவர்க்கும் பயன்படும்; பயன்மரம் நயனுடையான் செல்வத்திற்குவமையாம்; எல்லார்க்கும் எளிதில் பயன் தருவது பயன்மரம் (216). பல மரங்கள் தம் உறுப்புக்களால் மருந்துக்குப் பயன்படுகின்றன, அவை கோடற்கரிய விடங்களிலும், மறைந்தும், காலத்தால் வேறுபட்டும் இல்லாவிடின் பயனாகும்; அது தன் குறை நோக்காது எல்லார் வருத்தத்தையும் தீர்க்கும்; நயனுடையானது செல்வமும் அவ்வாறேயாகும் (217). பாலையிலும் வன்னிலத்திலும் இருக்கும் மரங்கள் வற்றிவிடுதலுண்டு; (இலையுதிர்க்கும் நிலையில் அவை அக்காட்சியளிக்கும். மீண்டும் அவை தளிர்த்தலுண்டு). பெரிதும் வன்னிலத்தில் வற்றிய மரங்கள் தளிர்த்தலில்லை, அன்பில்லாதவனது உயிர் வாழ்க்கைக்கிது எடுத்துக்காட்டு (78). மரம் மக்கட்குரிய விசேட அறிவில்லாததாகும்; மக்கட் பண்பில்லாதவர்க்கு அஃது உவமையாகும் (997). மரம் மண்ணோடு பொருந்தி இயங்காததாகும்; கண்ணோடாதவர்க்கு அம்மரம் உவமையாகும் (576). மரம் மக்கட்குரிய காரிய முயற்சியும் நல்லறிவுமில்லாததாகும்; அது தேவகோட்டம், நாவாய் முதலிய சமைப்பதற்குதவும், ஊக்கமில்லாதவர்க்கு அஃதுவமையாம் (600). மரம் கயிற்றினல் இயக்கப்படும் பாவைகள் செய்வதற்குதவியாகும், இரப்பவரைப் பெருத உலக்வியக்கத்திற்கிது உவமையாம் (1058).

### கோடும் கொம்பும் :

கிளையென்பது மரத்தின் உறுப்பாகும்; நுனிக்கொம்பு மரத்தின் உச்சியில் இருப்பது, உச்சிக்குமேல் ஏறினவன் சாவதுபோலச் செல்லுமளவிற்கு மேல் வினைமேற் சென்றால்

கேடேயாகும் (476). மரக் கொம்பானது ஒருகாலேக் கொரு கால் மேன்மேலும் வளர்ந்து பணைத்தெழுவதாகும், பிரிந்த தலேவனே நினைந்திருக்கும் தலேவியது மனவளர்ச்சிக்கிது உவமை (1264).

**பனே :**

பனே விதையும் மரமும் விதையுள்ளும் மரங்களுக்குள்ளும் பெரியனவாகக் கருதப்படும், அஃதொரு அளவாகவும் கருதப்படும் (104).

**கரும்பு :**

கரும்பு நசுக்கினல் சாறு தருவதாகும், கீழோர் நசுக்கினற்ருன் பயன்படுவர் (1078).

**வேய் : மூங்கில் :**

மகளிரது தோள்களுக்கு மூங்கில் உவமையாம் (1113).

**தினே :**

மரவினத்துள், தினேப்பயிர் ஒரு செடியாகும்; அதன் விதை பனேபோன்று ஒரு அளவுக்காகக் குறிக்கப்படும்; சிறிய அளவுக்கு அது உவமையாம். நன்றி சிறிதாயினும், சிறிதளவாயினும் பாராட்டப்படவேண்டும் என்றவிடத்து இது காட்டப்பட்டது (104).

**குன்றிமணி :**

தினேபோன்று குன்றிமணி விதையும் ஒரு சிறிய அளவுக்குக் குறிக்கப்படுவதாகும். மானமழிய வருஞ் செயல் குன்றியளவும் ஆகாதென்பதற்கு இது கூறப்பட்டது (965). குன்றிமணி வெளியெல்லாம் செம்மையும் மூக்கில் கருமையும் உடையதாகும், புறத்தில் செம்மையும் அகத்தில் தீமையு முடையார் உலகில் உண்டென்பது இதனல் காட்டப் பட்டது (277).

**எள் :**

எள் விதையும், அதன் பிளந்த பாதியும் சிறிய அளவிற் குவமையாகக் கூறப்படும், உட்பகை அச்சிறிதளவும் கூடாது (889).

**பைங்கூழ் :**

உணவிற்குரிய நெல் முதலியவற்றின் பசிய செடிகள் பைங்கூழெனப்படும்; அவை, களையெடுத்தால் நன்கு வளர்வனவாம், கொடியவர்களை அரசன் ஒறுத்தலுக்கிது உவமையாம் (*550*). உணவுக்குரிய பயிர்களும் பொருள்களும் கூழெனப்படும், அவை அரசற்குரிய ஆறங்கங்களுள் ஒன்றெனக் கருதப்படும் (*554*).

**பசும்புல் :**

புல் ஒருவகைக் களையும் ஆவினங்களுக்கு உணவுமாகும்; அது எளிதில் வளரக்கூடியது; அதுவும் மழையில்லாவிடில் வளராது (*16*). புல்லரிசியால் செய்த உணவு புல்லுணவெனப்படும், அது பெரிதும் நீரோடு கலந்த கஞ்சியாக உண்ணப்படும், தன் முயற்சியால் வந்தது புற்கையாயினும் நன்றென்பதற்கு இது கூறப்பட்டது (*1065*).

**வித்து :**

விதையானது நிலத்தில் இடப்பட்டு விளைவதாகும்; மரஞ் செடிகளின் பிற்காலப் பயனுக்குக் காரணமதுவேயாம் (*85*). விதை கனியில் இருக்கும்; விதையில்லாத கனிகளாயின் உண்பதற்கு மிக விருப்பமுடையதாகும் (காமம் விதையில்லாத கனியாகக் கூறப்படும்) (*1119*).

**வைத்தூறு :**

வைக்கோல் போராகப் போடப்படும்; அதுவிரைவில் தீப்பற்றக் கூடியதாகும், குற்றம் வருமுன்பு காவாதவனது வாழ்க்கை அழிதற்குவமையாக இது கூறப்படும் (*435*).

**பதடி :**

நெல் முதலியவற்றின் மேல் உமிக்குப் பதர் என்று பெயர் ; அவை பயனற்ற பொருட்களுக்குவமையாகும் (*196*).

**களை :**

களை பயிரில் வளரும், அதனை யழிக்கக்கூடிய வேறு செடியாகும், பயிர் வளர அது களையத்தக்கதாகும். அவ்வாறே கொடியவர்களை அரசன் ஒறுத்தலாகும் (*550*).

**புதல் :**

செடிகள் அடர்ந்து வளர்ந்திருக்குமிடம் புதலெனப்படும்; அது வேடர் மறைந்து கொள்ளுதற்குத் தக்க இடமாகும், தவவேடத்தில் மறைந்து கூடாவொழுக்கம் புரிவோரைக் கூறுமிடத்திது உவமையாம் (274). முள்மரம் ஒரு களை யெனப்படும்; அது சிறிதாக விருக்கும்போதே களைந்தெறியத் தக்கதாகும்; முதிர்ந்தால் அதன் முட்கள் முற்றிக் களைவோர் கையைக் குத்திவிடும்: பகை முதலிலேயே களையப்பட வேண்டும் (879). நெருஞ்சி ஒரு களைமுட்செடி; அதன்காய் முற்றினல் மிதித்தவர் கால்களை மிகவும் வருத்தும் (1120).

**பூக்கள் :**

கொழுந்து விடுதலென்பது மரம் வளர்வதற்குரிய அடையாளமாகும்; வற்றியமரம் தளிர்த்தலில்லை; அன்பில்லா வாழ்க்கைபற்றிக் கூறுமிடத்து உவமையாம் (78). பூக்கள் — அரும்பு போது மலர் என்ற முப்பருவங்களை உடையன. காலையில் அரும்பாகும்; கடும் பகலில் போதாகும்; மாலையில் மலராகும்; காமநோய் மலராக உருவகிக்கப்படும் (1227). விரியாது குவிந்த மலர் முகை, மொக்குள் எனப்படும்; அது தன்னுள்ளே மணத்தையுடையதாகும், அதுபோலத் தலைவியின் நகைப்பில் புணர்ச்சிக் குறிப்புண்டு (1274). நீர்ப்பூ, கொடிப்பூ, கோட்டுப்பூ என்ற வகையுள் இது மரக் கொம்புகளில் பூப்பதாகும். தலைவிக்குத் தலைவனல் அணியப்படும் பூக்களுள் ஒன்று (1313). நீர்ப்பூக்கள் (தாமரை முதலிய) நீரின் அளவாக உயர்ந்து விளங்கும், மக்களது ஊக்கத்தளவுயர்வு (595). கொத்துக்களில் பூத்தும் மணமில்லாத மலர்களும் உண்டு, கற்றதனைப் பிறர்க் குரைக்காதவர்க்கிது உவமையாம் (650). மலர்கள் மிக மெல்லியவாகக் கருதப்படும், காமத்தின் மென்மைக்கு அவை உவமையாம் (1289). தளிர் மென்மையுடையது அது தலைவியது மேனியது மென்மைக்கு உவமையாகுமென்பதாம் (1113). மலர்கள் இறைவனதுறையுளுள் ஒன்ருகக் கருதப்படும் (3). மலர் காதலர்க்கு மையலை மிகுவிப்பதாம் (1112).

**குவளை :**

*குவளை முதலிய மலர்கள் மாதர் கண்களுக்கு உவமையாக் கூறப்படும் (1114).*

**தாமரை :**

*தாமரை திருமகட்குறைவிடமாகக் கூறப்படும் (617). தாமரை திருமால், இந்திரன் மாதர் முதலோர் கண்களுக்கு உவமையாம் (1103).*

**அனிச்சம் :**

*அனிச்சமலர் மலர்க்குள்ளேயே மிகவும் மென்மையான தாகும்; மாதரது மென்மைக்கது உவமையாம் (1111). அனிச்சம்பூ மிகவும் இலேசானது (1115). அது மோந்ததும் வாடிவிடும், முகம் வேறுபட்டு நோக்க விருந்து வாடு மென்பதற்கிது உவமையாகும் (90). அனிச்சம்பூ மாதரடியின் மென்மைக்குவமையாகக் கருதக்கூடியது (1120).*

**காயும் கனியும் :**

*மரத்தில் பழுத்த பழங்களே பறிக்கப்படும்; காய்கள் பறிக்கத்தக்கனவல்ல: அதுபோல இனிய சொற்களிருக்க இன்னுதவற்றைக் கூறலாகாது (100). கருக்காயென்பது சற்றிளைமைத்தாகியது, உண்ணத்தகாத தென்பதாம், காய் முற்றிக் கனியாகும், கனியென்பது நன்கு முதிர்ந்துண்ணத் தக்கதாகும்: துனியும் புலவியுமில்லாத காமத்திற்கிது உவமையாம் (1306). கனியிலுள்ள கொட்டைகள் நீக்கத் தக்கனவாம்; பின்பவை மிகவும் விரும்பத்தக்கதாகும், காமம் விதையற்ற பழமாகக் கூறப்படும் (1191).*

**வள்ளி : கொடி :**

*கொடி அடியிலே அறுக்கப்பட்டால் அத்துடன் பட்டுப் போகும், நீர் பெருவிடில் கொடி வாடிவிடும், ஊடியவர்களை உணர்த்திக் கூடாவிடில் ஏற்படும் நிலைக்கிது உவமையாம் (1304).*

# விலங்கினம்

**புலி :**

பெருடம்பும் கூரிய கொம்புமுடைய யானையையும், ஊக்கமுடைய புலி வென்றுவிடும்: ஊக்கமுடையாரிடம் யாவரும் தோற்பர் (599).

புலியின் தோல் மக்கள் உடலின்மேல் போர்த்துக் கொள்ளப்படுவதாகும்; அத்தோலை எருது போர்த்துக் கொண்டு மேய்ந்தாற்போல்வது கூடாவொழுக்கமுடைய துறவியது செயலாகும் (273).

**ஏறு : ( சிங்கம் )**

ஆண் சிங்கம் ( யானை; எருது ) பெருமிதமான நடையையுடையதாகும்; புகழ் புரிந்த மனையாளையுடையானது நடைக்கிது உவமையாம் 59.

சிங்கம் விலங்குகளுக்குள் தலைமையுடையது; படைகுடி முதலிய ஆறங்கங்களையுமுடைய அரசனது தலைமைக்கிது கூறப்படும் (389).

**யானை ; நரி :**

ஒரு யானையைக்கொண்டு மற்றொரு யானையைப் பிடித்தலென்பது வழக்கு, ஆண் யானையைக்கொண்டு பெண் யானையைப் பிடிப்பர், தொடங்கிய வினையால் மற்ற போர் வினையை முடித்தற்கிது கூறப்படும் 678.

கிடாய்ச் சண்டைபோல யானை யிரண்டனைவிட்டுச் சண்டை பார்த்தலும் உண்டு; அதனைக் காண்போர் அச்சமும் வருத்தமுமின்றி அருகுள்ள குன்றின்மேலேறிப் பார்ப்பர்: செல்வம் உடையவர் வினைகளை எளிதில் முடிப்பர் (678).

பேருடம்புடையதாகலின் யானை (அதுவும் வெள்ளிடையில் நிற்பின்) வேலினால் எய்தற்கெளிதாகும்: சிறந்த வீரரை எதிர்த்துத் தோற்பினும் குறையில்லை 772.

யானை முகத்தில் படாம் அணிதலுண்டு, அழகுக்காகவும் பிறரை வருத்தாதிருக்கவும் அஃதணியப்படும், மாதர் முலை மேலிடும் ஆடைக்கிது உவமையாம் (1087).

இடமறிந்து போரிடின் நரிகளாலும் சேற்று நிலத்தகப்பட்ட (வேல்களையுடைய ஆட்களைக் கோத்த கொம்புகளையுடைய) யானைகளும் வெல்லப்படும்: இடமறிந்து செய்யாவிடில் வலியவரும் மெலியவரிடம் தோற்பர் 500.

அம்பாற் புண்பட்டவிடத்தும் யானையானது தன தூக்கத்தால் பெருமையை நிலைநிறுத்தும்: ஊக்கமுடையவர் தளர்ச்சியுற்றவிடத்தும் நின்று எடுத்த வினையை முடிப்பர் (597).

பகடு: எருது.

எருது இடுக்கணழியாமல் செயலை முடிக்கக்கூடியதாகும் மருங்கொற்றியும், மூக்கூன்றியும் தாள் தவழ்ந்தும் சுமையை இழுத்துச் செல்லும்: இடுக்கணழியாமல் வினைசெய்வார்க்கு உவமை (624).

ஆ: பசு.

பால் முதலிய பயன்களையுடையதாகும்; அரச காவலில்லாவிடின் அதுவும் குன்றிவிடுமென்பதாம். கொடுங்கோன்மையின் விளைவிற்கிது எடுத்துக்காட்டப்படும் (560).

ஆவிற்கு ஒன்று அளித்தல் அறமாகக் கருதப்படும்; ஆயினும் ஆவிற்கு நீர் வேண்டி இரத்தலைச் செய்தலும் இழிவாகும் (1066).

மா: குதிரை

குதிரைகள் போரிடுதற்குப் பழக்கப்படும்; அவ்வாறு பழகாத குதிரைகள் மீதுள்ள வீரர்களைப் போரில் விட்டோடும்: கேட்டின்கண் கைவிடும் தீ நட்பிற்கிது எடுத்துக்காட்டப்படும் (814).

**கவரிமா : மான்**

*கவரிமான் தன் உடல்மீதுள்ள மயிரொன்று உதிர்ந்து விடினும் மானந்தாங்காதுயிர்விடும், மானமழிந்தவிடத்துச் சான்ரேர் உயிர்விடுவர் (969)*

**தகர் : ஆடு**

*ஆட்டுக்கிடாய்கள் கேளிக்கைச் சண்டைக்குப் பழக்கப் படும்; அவையே இரண்டு போரிடுகையிலும், அவை ஒன்றையொன்று தாக்குமுன் பின்வாங்கிப் பின்புதாக்கும். ஊக்கமுடையவன் செயலில் சிறிது பின்வாங்கிப்பின் வினை முடிப்பான் (486).*

**ஊர்வன : நாகமும் எலியும்**

*எலியும் நாகமும் பகைகள், எலி மெலியது; நாகம் மூச்சு விட்டவளவிலே எலிகள் திரண்டிருந்தாலும் வெருண்டோடும். சிறந்த வீரன் ஒருவன்முன் பெரும் படையும் நில்லாதென்பது (763).*

*பாம்பு வீட்டினுள் விட்டு வைக்கப்பட்டால் இடச்சிறுமை யாலும் பயிற்சியாலும் ஒருநாள் அதனல் தீண்டப்படுதல் உறுதியாகும்: உட்பகையாருடன் பழகுதலின் கேட்டிற்கிது உவமையாக்கப்படும் (890).*

*திங்களை விழுங்கும் இராகு கேதுக்கள் பாம்பு வடிவ முடைவதாகக் கருதப்படும் (1146).*

**என்பிலது : புழு**

*என்பில்லாதது புழு, அது கதிரவனது வெம்மையில் காய்ந்து இறந்துவிடும்; அன்பில்லாத உயிர்களை அறக்கடவுள் காயும் (77).*

**நீர்வாழ்வன : ஆமை**

*ஆமை தனது கால்கள், தலை ஆகிய ஐந்தனையும் ஓட்டிற்குள்ளடக்கிக் கொள்ளவல்லதாம்: ஐம்புலன்களையும் அடக்குதற்கிது உவமையாம் (495).*

**விலங்கு :**

*விலங்கு கல்லாதவர்க்குவமையாகக் கூறப்படும்; கற்றவர் மக்கள் என்ருல் கல்லாதவர் விலங்குகட்கொப்பாவர் (410).*

## மேற்கோள் எண்களும் விளக்கமும்

1. *Aristotle : Politics : Monarchy; Tyranny; Aristocracy; Oligarchy ; Democracy (Ochlocracy) "Elements of Political Science. Stephen Leacock"*

2. சிவஞான சித்தியார் – சுபக்கம் 'அருளது சத்தியாகும் அரன் தனக், கருணையின்றித் தெருள் சிவமில்லை, சிவமின்றிச் சக்தியில்லை – 2.

3. பரிபாடல் 5–80 : அருளும் அன்புமன்றிப் பொருளும் போகமும் அல்ல.

4. *Eight fold path (Atthangika magga) as follows:*
*1) Right views 2) Right resolve 3) Right speech 4) Right conduct 5) Right livelihood 6) Right effort 7) Right mindfulness 8) Right concentration–History of India – I Part R. Sathianatha Iyer.*

5. *Kural – which erects authority on moral foundations Ibid. pp. 193.*

6. வாளாலறுத்துச் சுடினும் மருத்துவன்பால் மீளாத காதல் நோயாளன் – பெருமாள் திருமொழி 5–4.

7. திருவாசகம் – திருத்தெள்ளேணம் – 1

8. தொல் – எழுத்து : மொழிமரபு. 46 'இறைவன் இயங்கு திணைக்கண்ணும் நிலைத்திணைக்கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு போல, அகரமும் உயிர்க்கண்ணும் தனி மெய்க்கண்ணும் கலந்து நிற்குமென்பது

9. கீதை – *VI–18 : When the disciplined mind is stablised in the self alone liberated from all desires he is said to be harmonised (in yoga)*

*Having become one with Brahman and being tranquil in sprit he neither grieves nor desires.*

*– Translated by Dr. S. Radhakrishnan.*

10. அப்பர் : திருப்பாதிரிப்புலியூர் திருவிருத்தம் 95–1, 'தோன்றுத்துணையாய் இருந்தனன் தன்னடியோங்களுக்கே'

11. திருவாசகம் : கோயில் திருப்பதிகம் 1.

12. அப்பர் : 312–1

13. திருமந்திரம் : 704

14. *Darwin : Origin of Species; The descent of man.*

15. சித்தியார் : பரபக்கம் : 18–மெய்தரு தூலங்கெட்டுச் சூக்க மாய் மேவுமென்னில்.

16. சித்தியார்: பரபக்கம்: 38 'நிகழ் பூதமும் ஓரின் வேறுணர்வா யெழா அவை பூதமாகி உதித்திடும், தேரின் நூறடை காய்செறிந்தவை பூதமாகி உதித்திடும்'

17. திருவாசகம் பிடித்த பத்து 9.

18. திருமந்திரம் – 704.

19. சிவஞானபோதம் 2 – இரு வினையில் போக்கு வரவு புரிய ஆணையின் நீக்கமின்றி நிற்குமன்றே.

20. அருட்பா : இராமலிங்கர் : 'உலகெலாம்' – மெய்ப்பொருள் விளக்கம்'

21. பரிபாடல் : 8 : 9–11 உரை.

'அமரரும் அவுணரும் நின்னைக் காண்டல் காரணமாக மண்மிசை வந்து உரையும் இடமாக நின்றது. ஆதலாற் பரங்குன்று அவர் பழைய இடமாகிய இமயக் குன்றத்தை யொக்கும்'

19 : 10–11 'இவ்வுலகத்து அறத்தைப் பெரிதாகச் செய்து அதன் பயன் நுகர வேண்டித் தேவருலகத்துச் செல்வாரைப் போல...

'நக்க சாரணர் நாகர் வாழ்மலை' – மணிமேகலை 16–15.

22. திருவாய்மொழி – 2–5 அற்றது பற்றெனில் உற்றது வீடு,

23. புறநானூறு – 187 'எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே'

24. பட்டினத்தார் திருவேகம்பமாலை – 7

25. *Its real value depends on tte moral sign attached to it Ruskin.*

26. *Ruskin : unto the last : veins of wealth –*

*' Thus the circulation of wealth in a nation resembles that of the blood in the natural body.*

26. பக்கம் *161* – திருமுருகாற்றுப்படை *131*

27. சம்பந்தர் சிராப்பள்ளி தேவாரம் – *98–1*

28. *Spinoza: Eihics; Theory of Good and evil by Rashdall*

29. அப்பர் : *312–1*

30. *Boswell's life of Jhonson.*

31. சிலப்பதிகாரம் *5–142* வச்சிரக் கோட்டத்து முரசம்.

32–33. *' Indian Civilisation and Culture. M. K. Gandhi.*

*What is that modern civilization ?*
*It is the worship of the material.*

34. பெரியபுராணம் : திருக்கூட்டச் சிறப்பு *8* : கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி, வீடும் வேண்டா விறலின் விளங்கினர்.

35. சிவவாக்கியர் பாடல் *188*

' மனத்தகத் தழுக்கறுத மவுனஞான யோகியர்
வனத்தகத் திருக்கிலும் மனத்தகத் தழுக்கறுர்

36. அருட்பா தத்துவ வெற்றி – *2*

37. தொல். மரபியல். *588* மக்கடாமே ஆறறிவுயிரே

38. அகநானூறு – முல்லை *184*.

—o—